ஸ்ரீகிருஷ்ணாயநம:.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித

ஸ்ரீமத்கீதாபாஷ்யம்.

இஃது

முசுர்பாக்கம்-கிடாம்பி

உ-வே-ரங்காசாரியரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

திருவெண்காரணை

பிரஸந்ந-விஜயராகவாசாரியரால்

சென்னை

பத்தி-ராமாநுஜலுநாயுடவர்கள்குமாரர்

ப. வெங்கடநாராயணசுவாமிநாயுடவர்களது

ஸ்ரீநிகேதனமுத்திராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ஜய௵ ஆவணி௴

Registered Copy-right.

http://acharya.org

ஸ்ரீ:.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

விஞ்ஞாபனம்.

காருணிகனான ஸர்வேச்வரன் இவ்விருள்தருமாஞாலத்தில் ஸ்ரீக்ருஷ்ணபகவானாய் வந்தவதரித்து, அர்ச்சுநனை யுத்தத்திற் புகச்செய்வதென்கிற வியாஜத்தாலே பரமரஹஸ்யார்த்தங்களைப் பிரதிபாதிக்கின்ற ஸ்ரீபகவத்கீதையென்னும் மோக்ஷசாஸ்திரத்தை லோகோஜ்ஜீவநார்த்தமாகப் பிரவர்த்திப்பித்தருளினான். உலகத்தில் அதன் உண்மைப்பொருளைக் கண்டறியமாட்டாத (ராஜஸ தாமஸப்பிரகிருதிகளான) பலபெயர்கள் தந்தாமுடைய இச்சைக்குத் தக்கபடி பலவிதமாகப் பொருள்செய்துகொண்டு அநர்த்தப்படுவதைக்கண்டு ஸஹிக்கமாட்டாமல் ஸாக்ஷாத் சேஷாவதாரமான ஸ்ரீபகவத்ராமாநுஜயதீந்திரர் தம்முடைய பரமகிருபையால் அதற்கொருபாஷ்யமிட்டருளினார். அந்த பாஷ்யமும் ஸம்ஸ்கிருதமாயிருப்பதுபற்றி, இக்காலத்தில் கீதார்த்தத்தை யுள்ளபடியே அறிய வாசைப்பட்ட வெகுபெயர்கள் தங்களுக்கு ஸம்ஸ்கிருதபாஷாஜ்ஞாநமில்லாமையாலே அதைக்கைவிட்டு, பாஷாந்தரங்களிலிருக்கும் ஏனைய வியாக்கியான மொழிபெயர்ப்புகளைப்படித்து தத்துவங்களையெல்லாம் மாறாக நினைத்து அநர்த்தப்படுகிறார்கள். ஆகையால் அவ்வித அநர்த்தத்தைப் பரிஹரிப்பதற்காக இந்த பாஷ்யத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரஞ்செய்யவேண்டுமென்று அனேகம் ஆஸ்திகசிகாமணிகள் நியமிக்க, அந்த நியமனத்தைக் கைக்கொண்டு அல்பஜ்ஞனா வடியேன் அதை மொழிபெயர்க்கத் துணிந்தேன். ஸர்வஜ்ஞரான ஸ்ரீபாஷ்யகாரரின் திருவுள்ளத்தை யறிந்தெழுதும்படியான சக்திலேசமுமில்லாத நாயினே னிப்படி துணிந்ததைப்பார்க்க வடியேனுக்கே லஜ்ஜையும் பயமுமுண்டாகின்றன. ஆயினும் திண்ணை முதலிய உயர்ந்த ஸ்தானங்களில் நிற்கவைத்த குழந்தைகள், திண்ணைக்கருகில் தம் தாய்தந்தையர்கள் நிற்கக் கண்டார்களாகில் 'இவர்கள் நம்மைத்தாங்குவார்கள்' எனகிற நம்பிக்கையால் துணிந்து கீழே குதித்துவிடுவதுபோல கீதாசாரியனும் கீதாபாஷ்யகாரருமான விராமாநுசர்களிருவரும் நம்மைக் கைவிடார்களென்று நம்பிப் பிரவர்த்தித்தேனாகையால், அவர்கள் இதில் சிறிதும் குறைவு வரச் சகியார்களென்று சாதுக்கள் துணிவதோடு பிரகிருதிபரவசனான வடியேனால் சிறிது பிழைகள் கண்டாலும் பொருத்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

[illegible] ।
[illegible] ॥

பூ. கி. ர.

http://acharya.org

௬-வது அத்தியாயத்தில் - யோகாப்பியாஸத்தின் விதியும், யோகிகள் நால்வகையென்பதும், யோகஸாதநமும், அதன் ஸித்தியும், அதில் பகவத்தி யாநரூபமான யோகமே சிறந்ததென்பதுங் கூறப்படும்.

௭-வது அத்தியாயத்தில் - ஸ்ரீகிருஷ்ணபகவான் தமது யதார்த்தத்தையும், பிரகிருதியால் மறைக்கப்பட்டிருக்கின்றமையால் பிராணிகள் தம் யாதார்த்தியத்தை யறியார்களென்பதையும், சரணாகதியையும், பக்தாளின் உட்பிரிவையும், ஞாநியே சிறந்தவனென்பதையும் அருளிச்செய்கிறார்.

௮-வது அத்தியாயத்தில் - ஐசுவரியத்தைக்கோரியவரும் ஆத்மப்பிராப்தியைக் கோரியவரும் பகவத் சரணாபேக்ஷையுடையாரும் அறிந்து பற்ற வேண்டிய விஷயங்களின் பேதங்கள் சொல்லப்படும்.

௯-வது அத்தியாயத்தில் - தமது மாஹாத்மியமும், தாம் மனுஷியனாயிருக்கச்செய்தே தமக்குண்டான பரத்வமும், மஹாத்மாக்களுக்குண்டான விசேஷமும், பக்தியோகமுஞ் சொல்லப்படும்.

௧௦-வது அத்தியாயத்தில் - தமது கல்யாணகுணங்களுக்கு எல்லையில்லையென்றும், எல்லாம் தம்மாதீனமென்றும், அறிவதனால் பக்தியுண்டாகி விருத்தியாமென்பதை விஸ்தாரமாய் அருளிச்செய்கிறார்.

௧௧-வது அத்தியாயத்தில் - பகவத்ஸ்வரூபத்தை அர்ச்சுநன் உள்ளபடியே ஸாக்ஷாத்கரித்தபடியும், பகவத்ஸாக்ஷாத்காரமும் தத்பிராப்தியும் பக்தியினால்மாத்திரங் கிடைக்குமென்பதும் சொல்லுகிறது.

௧௨-வது அத்தியாயத்தில் - பக்தியோகம் விரைவில் ஸித்திக்குமென்பதும், அதைக் கைப்பற்று முபாயங்களும், அதை யநுஷ்டிக்கச் சக்தியற்றவன் ஆத்மநிஷ்டையிலிருக்கவேண்டுமென்பதும், ஆத்மநிஷ்டையின் பிரகாரங்களும், பக்தியுள்ளவர்களே எம்பெருமானுக்கு மிகவும் இஷ்டர்களென்பதும் சொல்லப்படும்.

௧௩-வது அத்தியாயத்தில் - தேகத்தின் ஸ்வரூபமும், ஆத்மப்பிராப்திக்கு ஹேதுவும், ஆத்மஸ்வரூபசோதநமும், பந்தத்துக்குக்காரணமும், அதின் விவேகமும் சொல்லப்படும்.

௧௪-வது அத்தியாத்தில் - குணங்கள் புருஷனைக் கட்டுப்படுத்துகிற விதமும், அவைகளே கர்த்தாவென்பதும், அக்குணங்களை யொழிக்கவேண்டுமென்பதும், கதி மூன்றுக்கும் தாமே காரணமென்பதும் சொல்லப்படும்.

௧௫-வது அத்தியாயத்தில் - அசேதநத்தோடு கலந்த ஜீவனையும் சுத்தனை முக்தனையுங்காட்டில், புருஷோத்தமன் (உலகங்களை) வியாபித்தும் தரித்தும் ஆண்டும் போருகையாலே அந்நியனென்கிறது.

௧௬-வது அத்தியாயத்தில் - தத்வாநுஷ்டாநமும் தத்வவிஜ்ஞாநமும் திடப்படுவதற்காகத் தேவாசுரர்களின் விபாகத்தை யருளிச்செய்துகொண்டே சாஸ்திரத்துக்கு வசப்பட்டிருக்கவேண்டுமென்பதை யருளிச்செய்தார்.

௧௭-வது அத்தியாயத்தில்-சாஸ்திரத்தில் விதிக்கப்படாததெல்லாம் அசுரரைச்சேர்ந்ததென்றும், சாஸ்திரத்தில் ஸித்தமானதும் குணத்துக்குத்தக

http://acharya.org

கபடி வெவ்வேறென்றும், சாஸ்திரஸித்தமானவைகளுக்கு மூன்றுலக்ஷணமுண்டென்று மருளப்பட்டது.

கடைசி அத்தியாயத்தில்-எம்பெருமானிடத்தில் கர்திருத்வாநுஸந்தானமும், ஸத்துவகுணத்தை அவசியம் கைப்பற்றவேண்டுமென்பதும், இவனுடைய கர்மம் பரிணமிக்கும்படியும் சாஸ்திரத்தின் ஸாரார்த்தமும் சொல்லப்பட்டது.

கர்மயோகமாவது—தபஸ், தீர்த்தயாத்திரை, தானம், யக்ஞம் முதலியவைகளை யநுட்டிப்பது. ஞானயோகமாவது—அந்தஃகரணத்தை ஜெயித்து பரிசுத்த ஆத்மஸ்வரூபத்தில்தானே நிற்கை. பக்தியோகமாவது—பரனுக்கென்றே அற்றுத்தீர்ந்த பிரீதியோடு தியானாதிகளிலிருக்கை. இம்மூன்று யோகங்களும் ஒன்றோடொன்று ஸம்பந்தப்பட்டவைகள். பரனுடைய ஆராதனரூபங்களான நித்தியநைமித்திககர்மங்களும் அப்படியே. இம்மூன்றும் யோகத்துவாரா ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்கு ஸாதகமாகின்றன. ஸகல கர்மங்களையுமொழித்தவன், ஆத்மவஸ்துவானது பரனுக்குசேஷப்பட்டதென்பதையறிந்து, பரமபுருஷனிடத்தில் பக்தியைப்பண்ணி, அதைக்கொண்டே பரமபதத்தையடைவான். ஐசுவரியத்தை யபேக்ஷித்து பக்தியோகம் அநுஷ்டிக்கப்படுமாகில் அது அதைப் பரிபூர்ணமாகச் சாதித்துக்கொடுக்கும். ஆத்மாவை யபேக்ஷிக்கும்பக்ஷத்தில் இம்மூன்றுங்கூடி ஆத்மாவின் கேவல்லியத்தைச் சாதிக்கும். இவ்வதிகாரிகள் மூவருக்கும் பகவானிடத்தில் ஐகாந்தியம் ஸமானம். பகவத்பிராப்திபரியந்தம் பரமபுருஷனையே கோரியிருந்தானாகில் இறுதியில் பரமபுருஷனையேயடைவான். பரமைகாந்தியான ஞானியானவன், தனது ஜீவனம் பரமாத்மாதீனமாய், அவனைக்கூடினால் சுகமும் பிரிந்தால் துக்கமுமாய், அவனையே சிந்தித்தல் அவன் விஷயமான அப்பியாஸயோகத்தை யநுட்டித்தல் அவன் திருநாமங்களை ஜபித்தல் அவனை வந்தித்தல் துதித்தல் குணகீர்த்தனம் செய்தல் இவைகளைக்கொண்டு ஆத்மாவைத்தரித்து, பிராணன் மனது புத்தி இந்திரியம் கிரியை எல்லாவற்றையும் அவனதீனமாக்கி, தனக்கென்று வகுத்த கருமம் முதல் பக்திபரியந்தமான வெல்லாவற்றையும் அவனுக்கு முகோல்லாஸமாம்படி செய்கிறோமென்று கர்திருத்வாபிமானமின்றிக்கே செய்து, அவைகளில் உபாயபுத்தியைவிட்டு, தனது உஜ்ஜீவனவிஷயத்தில் "நாமென்ன செய்யப்போகிறோ" மென்கிற பய லேசமுமின்றிக்கே "அதற்கு உபாயம் அவனே"யென்று பரமபுருஷனிடத்தில் உபாயபுத்தியைப்பண்ணி "உனக்கே நாளுட்செய்யவேண்டு" மென்று அவனுடைய தாஸ்யமே போக்கியமாயிருந்து கடைசியில் அவன் திருவடித்தாமரைகளை யடைவன்; என்கிற இவ்விஷயத்தை கீதாசாஸ்திரம் முக்கியமாய் பிரதிபாதிக்கிறதென்று கீதார்த்தம் ஸங்கிரகிக்கப்பட்டது.

ஸ்ரீமத்கீதார்த்தஸங்கிரஹம்

ஸம்பூர்ணம்.

http://acharya.org

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஸ்ரீமத்கீதாபாஷ்ய காலக்ஷேபாரம்பத்தில்

தங்கள் தங்கள் ஸம்பிரதாயாநுஸாரமாக

குருபரம்பரையை அநுஸந்தித்துப் பிறகு அநுஸந்திக்கவேண்டிய

சுலோகங்கள்.

ஸத்ர்யஜ்ஞாய க்ருபாவேந ஸம்ஹிதாஸாரதேந வ|
உபப்ரும்ஹிதவேதாய நமோ வ்யாஸாய விஷ்ணவே||
ஸாரஶ்யஜந்மநஸ்ஸார்த்தௌ காவந்நுமீதாம்ருதந்துஹௌ|
லோகத்ரயோபகாராய தஸ்மை க்ருஷ்ணாத்மநே நம:||
ப்ரபந்நபாரிஜாதாய தோத்ரவேத்ரைகபாணயே|
ஜ்ஞாநமுத்ராய க்ருஷ்ணாய கீதாம்ருததுஹே நம:|| [வசந:।
காகஸ்ய நிஶ்வஸிதந்தாத்ருஶ: பரிகல்பிதாஜ்ஞதப்பஹி: ப்பஹு-
ஜாதகாமஶ்ரூஹீதவேத்ரோத்ரோத்ராதஸஹ்ருத்ஸந்நியிதாதநாதம்
கஶ்ரேக்ருஷ்ணாகமாவிசாரணஞ்ஜாநாநைநகேநதிஷ்டு [ஶௌரி:||
வஸ்ஸாதாயஸம்ஸ்ப்ருஶ்யயாஸஜ்ஞாஷாசக்ஷுஷாவெக்ஷணா:|
ஸவேத்யேதாத்ரம்காஸாஸிஜேக்ஷிணேஜ்ஞாநமுத்ர:||
ஶாபிஹ்ராணோயஶ்யிவஸநு பாதாந்நஸ்ஸ தவேஷ:||
க்ருஷ்ணம் கமலபத்ராக்ஷம் புண்யஶ்ரவணகீர்த்தநம்|
வாஸுதேவம் ஜகத்யோநிம் நௌமி நாராயணம் ஹரிம்||
க்ருஷ்ணாய யாதவேந்த்ராய ஜ்ஞாநமுத்ராய யோகிநே|
நாதாய ருக்மிணீஶாய நமோ வேதாந்தவேதிநே||

http://acharya.org

ஸ்ரீ:



ஸ்ரியை நம:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித

ஸ்ரீமத்கீதாபாஷ்யம்.

தனியன்.

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே | அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ: ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே ||

ஸ்ரீகீதார்த்தஸங்க்ரஹஶ்லோக:.

யத்பதாம்போருஹத்யாநவித்வஸ்தாஶேஷகல்மஷ: |
வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமி தம் ||

மஹா ப்ரவேசம்.

ஸ்ரீயஃபதியாய்; (ஸகல ஹேயங்களுக்கு மெதிர்த்தட்டாயும் கல்யாணை காஸ்பதமாயும் தேசகாலாதிகளாலே அளவிடவொண்ணாததாயும் ஞாநா நந்தமாயு மிருந்துள்ள) திவ்ய ஆத்ம ஸ்வரூபத்தை உடையனாய்; (ஸ்வ பாவஸித்தங்களாயும் அளவிலா வதிசய முடையனவாயு மிருக்கிற ஞாநம், பலம், ஐசுவரியம், வீரியம், சக்தி, தேஜஸ்ஸூமுதலான) எண்ணிறந்த கல்வி யாணகுணகணங்களுக்கு மஹாஸமுத்திரமாய்; (தனக்கு ஸம்மதமாய் தகுந்த தாய் ஏகரூபமாய் சிந்தைக்கெட்டாததாய் திவ்யமாய் அத்புதமாய் நித்யமாய் குற்றமற்றதாய் நிரதிசயமாய் பிரகாசம், ஸௌந்தர்யம், லாவண்யம், யௌவ நம் தொடக்கமான அநந்தகுணங்களுக்கும் நிதியாயிருக்கிற) திவ்யமங்கள விக்ரஹத்தையுடையனாய்; (தனக்குசிதங்களும் நாநாவிதங்களும் விசித்திரங் களும் அநந்தஆச்சரியங்களும் நித்யநிரவத்யங்களுமான) அபரிமித திவ்யாப ரணங்களுடையனாய்; (தனக்குத்தக்கவையாய் எண்ணிறந்தவையாய் எண்ண

http://acharya.org

ற்கரியசக்தியுற்றவையாய் நித்யநிரவத்ய நிரதிசய கல்லியாணங்களாயுள்ள) திவ்ய ஆயுதங்கள் தரித்தவனாய்; (தனக்கு ஸம்மதையும் தகுந்தவளும்: நித்யநிரவத்யங்களான ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி, ஐசுவரியம், சீலம்முதலியவையாய் அபார அதிசயங்களாய் எண்ணற்றவைகளான கல்லியாணகுணங்கள்பொருந்தியவளுமான) பெரியபிராட்டியாருக்கு மணாளனாய்:(தன் ஸங்கல்பத்தைப் பின்செல்லுகிற ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திபேதங்களையுடையராய் ஸகல அவஸ்த்தைகளிலும் அடிமைசெய்வதிலுண்டான ருசியே சரீரமெடுத்தாப்போலிருப்பவராய் நித்யநிரவத்ய நிரதிசயங்களான ஞாநம், க்ரியை, ஐசுவரியம், தொடங்கிய அநந்த குணகணங்கள் பொருந்தியவராயுள்ள அபரிமிதரான) நித்யஸூரிகளாலே எப்போதும் ஆராதிக்கப்பட்ட திவ்யமான சரணாரவிந்தங்களையுடையனாய்; மநோவாக்குக்களால் அளவிடப்போகாத ஸ்வரூபஸ்வபாவமுற்றவனாய்; (தனக்குத்தக்கவையும் நானாவிதங்களும் விசித்திரங்களும் அநந்தங்களுமான) போக்யம், போகோபகரணம், போகஸ்தாநம் இவைகளால் நிறைந்ததாய் அநந்த ஆச்சரியமாய் அநந்த மஹாவிபவமாய் அநந்த பரிமாணமாய் நித்யமாய் நிரவத்யமாய் அக்ஷரமென்றும் பரமாகாசமென்றுஞ் சொல்லப்படுமதான) ஸ்ரீவைகுண்டத்தைக் கலவியிருக்கையாகவுடையனாய்; (நாநாவிதங்களும் விசித்திரங்களுமான போக்கியபதார்த்தங்களாலும் போக்தாக்களாலும் நிறைந்த) ஸகல லோகங்களையும் படைப்பதும் காப்பதும் அழிப்பதுமான திருவிளையாட்டையுடையனாய்; புருஷோத்தமனாயிருக்கிற பரப்ரம்மமான ஸ்ரீமந்நாராயணன்-ப்ரம்மா தொடங்கி ஸ்தாவராந்தமான ஸகலலோகங்களையும் ஸ்ருஷ்டித்து, (தனக்கு அஸாதாரணமான ரூபத்துடனிருந்து தான் பிரம்மாதி தேவமனுஷ்யர்களுடையத் தியாநம் ஆராதநம் முதலியவற்றிற்கு விஷயமாகாமலிருந்தானாகிலும், தன்து அபாரமான கருணையாலும் ஸௌசீல்யமென்கிற குணவிசேஷத்தாலும் அன்பினாலும் ஔதாரியத்தாலும் தன்னுடைய அஸாதாரண திவ்யமங்கள விக்ரஹத்தையே தன் ஸ்வபாவம் மாறாதபடி தேவாதி ஸஜாதீயமாக்கி அந்தந்த லோகங்களில் அவதரித்தவதரித்து, அவ்வவர்களால் ஆராதிக்கப்பட்டு, அவரவர் இஷ்டத்துக்குத்தக்கபடி தருமம், அர்த்தம், காமம், மோக்ஷமென்கிற பலங்களைக் கொடுத்துக்கொண்டு, பூமிபாரத்தைத் தீர்க்கையென்கிற வியாஜத்தாலே நம்போன்றவரும் ஆசிரயிக்கும்படி திருவவதரித்து, பூமியில் ஸகல ஜனங்களுடைய நேத்திரங்களுக்கும் விஷயமாய், எத்தனையேனும் அறிவுடையோர்க்கும் அறிவிலாதார்க்கும் வாசியற யாவருடைய மனதையும் கண்களையும் அபஹரிக்கின்ற திவ்யசேஷ்டிதங்களைச் செய்துகொண்டு, பூதனை, சகடம், யமளார்ச்சுநர், அரிஷ்டன், பிரலம்பன், தேநுகன், காளியன், கேசி, குவலயாபீடம், சாணூரன், முஷ்டிகன், கௌஸலன், கம்ஸன் முதலானோரை ஸம்ஹரித்து, பரமமான தயை ஸௌஹார்தம் இவற்றை யுட்கொண்ட தன் கடாக்ஷாமிருதத்தாலும் வசநாமிருதத்தாலும் ஜகத்தை வளர்த்துக்கொண்டு, நிரதிசயமான ஸௌந்தரியம் ஸௌசீல்யம் முதலிய குணங்களைப் பிரகாசப்படுத்துவதால் அக்ரூரர், மாலாகாரர் முதலானோரைப் பரமபாகவதர்களாகச் செய்து, பாண்டுபுத்திரனை யுத்தத்தில் புகச்செய்வதென்கிற வியாஜத்தாலே (பரமபுருஷார்த்தமான மோக்ஷத்துக்கு ஸாதநமாக வேதாந்தத்தில் சொல்லப்பட்டதும் ஞாநயோக கர்மயோகங்களை அங்கமாயுடையதும் தன் விஷயமுமான) பக்தியோகத்தை அவதரிப்பித்தருளினான்.

http://acharya.org

ஸ்ரீ:.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீமத்கீதாபாஷ்யம்,

முதல் அத்யாயம்.

அவதாரிகை.

ஸ்ரிய:பதியான ஸர்வேசுவரன், பரமகாருணிகனுகையாலே பூமியின் பாரத்தைத் தீர்க்கவேண்டுமென்கிற வியாஜத்தாலே, நம்போன்ற ஸம்ஸாரிகளும் கண்டுபற்றி உய்யுமாறு ஸகல மநுஷ்ய நயநங்களுக்கும் விஷயமாய் பூமியில் அவதரித்து, கம்ஸன் முதலிய ஸகலமான அசுரப்படைகளையும் நிரஸித்து, அக்குரூரர் மாலாகாரர் முதலானோரை ஸௌந்தர்யம் ஸௌசீல்யந் தொடக்கமான தன் கல்யாணகுணங்களில் ஈடுபடுத்தி, அவர்களைப் பரம பாகவதர்களாகச்செய்து, அர்ச்சுனனை யுத்தம் செய்யும்படி உத்ஸாஹப்படுத்துவதென்கிற வியாஜத்தாலே (மோக்ஷஸாதநமாக வேதாந்தத்தில் சொல்லப்பட்டதும் கருமயோக ஞாநயோகங்களை அங்கமாய் உடையதுமான) பக்தி யோகத்தை லோகோஜ்ஜீவநார்த்தமாக வெளியிட்டருளினன். அதில் பாண்டவாளும் கௌரவாளும் யுத்தம் செய்யவாரம்பிக்க, தான் ஸகல ஈசுவரர்களுக்கும் ஈசுவரனுயிருக்கச்செய்தேயும் லோகோபகாரமாக மநுஷ்யனுய் அவதரித்த பகவானுன அந்த புருஷோத்தமன் - ஆஸ்ரிதாளிடத்திலுண்டான வாத்ஸல்யத்துக்கு வசப்பட்டவனுகையாலே, தேராளனுயிருந்த அர்ச்சுனனுக்குத் தன்னைத் தேரோட்டியாக அமைத்துக்கொண்டு ஸகலமான ஜநங்களுக்கும் ஸேவைஸாதித்தருளினன். இந்தவிஷயம் தெரிந்திருக்கச்செய்தேயும் உட்கண் வெளிக்கண் என்கிற இரண்டுங்கெட்ட முழுக்குருடனுகிய திருதராஷ்டிரன், துரியோதனன் ஜயித்தானென்று கேட்கவேண்டுமென்கிற அவாவினுல் ஸஞ்சயனைக்கேட்கிறுன்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌧𑍃𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌉𑌵𑌾𑌚|| 𑌧𑌰𑍍𑌮𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌕𑍁𑌰𑍁𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌸𑌮𑌵𑍇
𑌤𑌾𑌯𑍁𑌯𑍁𑌤𑍍𑌸𑌵𑌃 | 𑌮𑌾𑌮𑌕𑌾𑌃𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌶𑍍𑌚𑍈𑌵𑌕𑌿𑌮𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌸𑌞𑍍𑌜𑌯|| ௧||

(௧) அஹோ ஸஞ்சய! நம் குமாரர்களான துரியோதனுதிகளும் பாண்டவாளும், தருமக்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்தில் யுத்தம்செய்வதாகக் கூடினுர்களே, பிறகு என்னநடந்தது? அதைச் சிறிது சொல்லிக்காண் என்றுன்.

(அவதாரிகை.) அதைக்கேட்டு ஸஞ்சயன் உத்தரம் சொல்லுகிறுன்.

𑌸𑌞𑍍𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 || 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌤𑍁𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑍀𑌕𑌂𑌵𑍍𑌯𑍂𑌢𑌂𑌦𑍁𑌰𑍍𑌯𑍋
𑌧𑌨𑌸𑍍𑌤𑌦𑌾 | 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑍁𑌪𑌸𑌙𑍍𑌗𑌮𑍍𑌯𑌰𑌾𑌜𑌾𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 || ௨ || 𑌪
𑌶𑍍𑌯𑍈𑌤𑌾𑌂𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌹𑌤𑍀𑌂𑌚𑌮𑍂𑌮𑍍|𑌵𑍍𑌯𑍂𑌢𑌾𑌂

http://acharya.org

த்ருபதபுத்ரேண தவ ஶிஷ்யேண தீமதா || ௩ || அத்ர ஶூரா மஹேஷ்வாஸா பீமார்ஜுநஸமா யுதி | யுயுதாநோ விராடஶ்ச த்ருபதஶ்ச மஹாரத: || ௪ || த்ருஷ்டகேதுஶ்சேகிதாந: காஶிராஜஶ்ச வீர்யவாந் | புருஜித் குந்திபோஜஶ்ச ஶைப்யஶ்ச நரபுங்கவ: || ௫ || யுதாமந்யுஶ்ச விக்ராந்த உத்தமௌஜாஶ்ச வீர்யவாந் | ஸௌபத்ரோ த்ரௌபதேயாஶ்ச ஸர்வ ஏவ மஹாரதா: || ௬ || அஸ்மாகம் து விஶிஷ்டா யே தாந் நிபோத த்விஜோத்தம | நாயகா மம ஸைந்யஸ்ய ஸம்ஜ்ஞார்த்தம் தாந் ப்ரவீமி தே || ௭ || பவாந் பீஷ்மஶ்ச கர்ணஶ்ச க்ருபஶ்ச ஸமிதிஞ்ஜய: | அஶ்வத்தாமா விகர்ணஶ்ச ஸௌமதத்திஸ் ததைவ ச || ௮ || அந்யே ச பஹவ: ஶூரா மதர்த்தே த்யக்தஜீவிதா: | நாநாஶஸ்த்ரப்ரஹரணா: ஸர்வே யுத்தவிஶாரதா: || ௯ || அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம் | பர்யாப்தம் த்விதமேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம் || ௧௦ || அயநேஷு ச ஸர்வேஷு யதாபாகமவஸ்திதா: | பீஷ்மமேவாபிரக்ஷந்து பவந்த: ஸர்வ ஏவ ஹி || ௧௧ || தஸ்ய ஸஞ்ஜநயந் ஹர்ஷம் குருவ்ருத்த: பிதாமஹ: | ஸிம்ஹநாதம் விநத்யோச்சை: ஶங்கம் தத்மௌ ப்ரதாபவாந் || ௧௨ || தத: ஶங்காஶ்ச பேர்யஶ்ச பணவாநககோமுகா: | ஸஹஸைவாப்யஹந்யந்த ஸ ஶப்தஸ்துமுலோऽபவத் || ௧௩ || தத: ஶ்வேதைர்ஹயைர்யுக்தே மஹதி ஸ்யந்தநே ஸ்திதௌ | மாதவ: பாண்டவஶ்சைவ திவ்யௌ ஶங்கௌ ப்ரதத்மது: || ௧௪ || பாஞ்சஜந்யம் ஹ்ருஷீகேஶோ தேவதத்தம் தநஞ்ஜய: | பௌண்ட்ரம் தத்மௌ மஹாஶங்கம் பீமகர்மா வ்ருகோதர: || ௧௫ || அநந்தவிஜயம் ராஜா குந்தீபுத்ரோ யுதிஷ்டிர: | நகுல: ஸஹதேவஶ்ச ஸுகோஷமணிபுஷ்பகௌ || ௧௬ || காஶ்யஶ்ச பரமேஷ்வாஸ: ஶிகண்டீ ச மஹாரத: | த்ருஷ்டத்யும்நோ விராடஶ்ச ஸாத்யகிஶ்சாபராஜித: || ௧௭ || த்ருபதோ த்ரௌபதேயாஶ்ச ஸர்வஶ: ப்ருதிவீபதே | ஸௌபத்ரஶ்ச மஹாபாஹு: ஶங்காந் தத்மு: ப்ருதக் ப்ருதக் || ௧௮ || ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத் | நபஶ்ச ப்ருதிவீம் சைவ துமுலோ வ்யநுநாதயந் || ௧௯ ||

(௨-௧௧) அஹோ ராஜந்! துரியோதனன், தன் சேனைக்குப் பீஷ்மரும் பாண்டவசேனைக்கு பீமனும் ரக்ஷகர்களாயிருக்கின்றமை கண்டு, தன்னை ஜயிக்கும்படி பாண்டவாளுக்குப் பலம்போந்திருக்கின்றமையையும் அவர்களை ஜயிக்கும்படி தனக்கு பலம் போதாமையையுந் தன் ஆசாரியனிடம் சொல்லி, உள்ளுள சலங்காநின்றான். இப்படி அவன் அயரப்படுவதை பீஷ்மர் பார்த்து அவனை ஸந்தோஷிப்பிக்க வேண்டுமென்று ஸிம்மநாதமும் சங்கத்மாநமும்

http://acharya.org

செய்து ஜயபேரியும் அறைவித்தார். பிறகு அந்த கோஷத்தைக்கேட்டு ஸர்வலோகநாதனாகிய பார்த்தஸாரதியும் ரதியான பாண்டுகுமாரனும், மூவுலகங்களையும் ஜயிப்பதற்கு ஸாதநமாய மஹத்தாயிருக்கிற திருத்தேரில் இருந்தபடியே பாஞ்சஜந்யம் தேவதத்தமென்கிற திவ்யமான திருச்சங்கங்களையெடுத்து மூவுலகும் நடுங்கும்படி 'பம்பம்'என்று ஊதலுற்றார்கள். பிறகு தருமன் பீமன் முதலானோரும் தந்தாமுடைய சங்கங்களையெடுத்தூத த்வனி உத்கோஷிக்க, அந்தக் கோஷமானது துரியோதனாதிகளான உம்புத்திரர்களெல்லாருடைய உள்ளத்தையும் பிளக்க, அவர்களும் இன்றோடே நம் பலம் ஒழிந்துவிட்டதென்று தீர்மானித்தார்கள்.

அத வ்யவஸ்திதாந் த்ருஷ்ட்வா தார்த்தராஷ்ட்ராந் கபித்வஜ꞉ | ப்ரவ்ருத்தே ஶஸ்த்ரஸம்பாதே தநுருத்யம்ய பாண்டவ꞉ ||௨௦|| ஹ்ருஷீகேஶம் ததா வாக்யமிதமாஹ மஹீபதே | ஸேநயோருபயோர்மத்யே ரதம் ஸ்தாபய மேऽச்யுத || ௨௧ || யாவதேதாந்நிரீக்ஷேऽஹம் யோத்துகாமாநவஸ்திதாந் | கைர்மயா ஸஹ யோத்தவ்யமஸ்மிந் ரணஸமுத்யமே ||௨௨|| யோத்ஸ்யமாநாநவேக்ஷேऽஹம் ய ஏதேऽத்ர ஸமாகதா꞉ | தார்த்தராஷ்ட்ரஸ்ய துர்புத்தேர்யுத்தே ப்ரியசிகீர்ஷவ꞉ ||௨௩||

ஸஞ்ஜய உவாச || ஏவமுக்தோ ஹ்ருஷீகேஶோ குடாகேஶேந பாரத | ஸேநயோருபயோர்மத்யே ஸ்தாபயித்வா ரதோத்தமம் ||௨௪|| பீஷ்மத்ரோணப்ரமுகத꞉ ஸர்வேஷாம் ச மஹீக்ஷிதாம் | உவாச பார்த்த பஶ்யைதாந் ஸமவேதாந் குரூநிதி ||௨௫||

(௨௦ - ௨௫) அநந்தரம் யுத்தம் செய்வதாய் நின்ற துரியோதனாதிகளைப் பார்த்து, இலங்கையைக்கொளுத்திய வாநரத்தைக் கொடியாகக்கொண்ட பாண்டுகுமாரன்; ஞாநம், சக்தி, பலம், ஐசுவரியம், வீர்யம், தேஜஸ் இவற்றிற்கு நிதியாய, ஸங்கல்பமாத்திரத்தால் ஜகத்தினுடைய உத்பத்தி ஸ்திதி லயங்களைச்செய்பவனாய், எந்தப்பிராணியாகிலும் அவற்றின் அந்தஃகரண பஹிஃகரணங்களைத் தான் நினைத்தபடி யாளவல்லனாய் (ஆச்ரிதவத்ஸலனாகையாலே) இவனுக்கு ஸாரதியாயெழுந்தருளியிருக்கிற கண்ணனைப்பார்த்து யுத்தஞ்செய்யவந்தவரை உள்ளபடியே கண்டறிவதற்கு உசிதமானவிடத்தில் இரதத்தைக்கொண்டு நிறுத்தும்படி ஆக்ஞை செய்தான். அவனும் அந்தக்ஷணமே, பீஷ்மர் துரோணர் முதலானோரும் மற்றுமுண்டான ஸகல ராஜாக்களும் பார்த்திருக்கச்செய்தே திருத்தேரை அவன் குறித்தவிடத்திற்கொண்டு நிறுத்தி, துரியோதனாதிகளின் சேனையின் வளம் இத்தன்மையதென்றும் அருளிச்செய்தார்.

தத்ராபஶ்யத் ஸ்திதாந் பார்த்த꞉ பித்ரூநத பிதாமஹாந் | ஆசார்யாந்மாதுலாந்ப்ராத்ரூந் புத்ராந்பௌத்ராந் ஸகீம்ஸ்ததா ||௨௬|| ஶ்வஶுராந் ஸுஹ்ருதஶ்சைவ ஸேநயோருபயோரபி | தாந்ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய꞉ ஸர்வாந் பந்தூநவஸ்திதாந் ||

http://acharya.org

௨௭॥ க்ருபயா பரயாவிஷ்டோ விஷீதந்நிதமப்ரவீத்॥ அர்ஜுந உவாச॥ த்ருஷ்ட்வேமம் ஸ்வஜநம் க்ருஷ்ண யுயுத்ஸும் ஸமுபஸ்திதம்॥௨௮॥ ஸீதந்தி மம காத்ராணி முகம் ச பரிஶுஷ்யதி। வேபதுஶ்ச ஶரீரே மே ரோமஹர்ஷஶ்ச ஜாயதே ॥௨௯॥ காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக்சைவ பரிதஹ்யதே। ந ச ஶக்நோம்யவஸ்தாதும் ப்ரமதீவ ச மே மந: ॥௩௦॥ நிமித்தாநி ச பஶ்யாமி விபரீதாநி கேஶவ। ந ச ஶ்ரேயோऽநுபஶ்யாமி ஹத்வா ஸ்வஜநமாஹவே ॥ ௩௧ ॥ ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகாநி ச। கிம் நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகைர்ஜீவிதேந வா॥௩௨॥ யேஷாமர்தே காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகா: ஸுகாநி ச। த இமேऽவஸ்திதா யுத்தே ப்ராணாம்ஸ்த்யக்த்வா தநாநி ச ॥௩௩॥ ஆசார்யா: பிதர: புத்ராஸ்ததைவ ச பிதாமஹா:। மாதுலா: ஶ்வஶுரா: பௌத்ரா: ஶ்யாலா: ஸம்பந்திநஸ்ததா ॥ ௩௪ ॥ ஏதாந்ந ஹந்துமிச்சாமி க்நதோऽபி மதுஸூதந। அபி த்ரைலோக்யராஜ்யஸ்ய ஹேதோ: கிம் நு மஹீக்ருதே॥௩௫॥ நிஹத்ய தார்தராஷ்ட்ராந்ந: கா ப்ரீதி: ஸ்யாஜ்ஜநார்தந। பாபமேவாஶ்ரயேதஸ்மாந் ஹத்வைதாநாததாயிந: ॥௩௬॥ தஸ்மாந்நார்ஹா வயம் ஹந்தும் தார்தராஷ்ட்ராந் ஸ்வபாந்தவாந்। ஸ்வஜநம் ஹி கதம் ஹத்வா ஸுகிந: ஸ்யாம மாதவ ॥ ௩௭ ॥ யத்யப்யேதே ந பஶ்யந்தி லோபோபஹதசேதஸ: ॥ குலக்ஷயக்ருதம் தோஷம் மித்ரத்ரோஹே ச பாதகம் ॥ ௩௮ ॥ கதம் ந ஜ்ஞேயமஸ்மாபி: பாபாதஸ்மாந்நிவர்திதும்। குலக்ஷயக்ருதம் தோஷம் ப்ரபஶ்யத்பிர்ஜநார்தந ॥ ௩௯ ॥ குலக்ஷயே ப்ரணஶ்யந்தி குலதர்மா: ஸநாதநா: । தர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்நமதர்மோऽபிபவத்யுத ॥௪௦॥ அதர்மாபிபவாத் க்ருஷ்ண ப்ரதுஷ்யந்தி குலஸ்த்ரிய: । ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர: ॥௪௧॥ ஸங்கரோ நரகாயைவ குலக்நாநாம் குலஸ்ய ச । பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்தபிண்டோதகக்ரியா: ॥௪௨॥ தோஷைரேதை: குலக்நாநாம் வர்ணஸங்கரகாரகை: । உத்ஸாத்யந்தே ஜாதிதர்மா: குலதர்மாஶ்ச ஶாஶ்வதா: ॥௪௩॥ உத்ஸந்நகுலதர்மாணாம் மநுஷ்யாணாம் ஜநார்தந। நரகே நியதம் வாஸோ பவதீத்யநுஶுஶ்ரும ॥ ௪௪ ॥ அஹோ பத மஹத்பாபம் கர்தும் வ்யவஸிதா வயம் । யத்ராஜ்யஸுகலோபேந ஹந்தும் ஸ்வஜநமுத்யதா: ॥ ௪௫ ॥ யதி மாமப்ரதீகாரமஶஸ்த்ரம் ஶஸ்த்ரபாணய: । தார்தராஷ்ட்ரா ரணே ஹந்யுஸ்தந்மே க்ஷேமதரம்

http://acharya.org

பவேத்॥சசு॥ ஸஞ்ஜய உவாச॥ ஏவமுக்த்வாऽர்ஜுந: ஸங்க்யே ரதோபஸ்த உபாவிஶத் | விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஶோகஸம்விக்நமாநஸ: ॥

(சசு-சஎ) அபாரகாருணிகனும் தீர்க்கபந்துவும் பரமதார்மிகனும் உதாரமநஸ்கனுமான பார்த்தன், அரக்குமாளிகையில் தீவைத்தது முதலாகப் பலகாலும் சாகவழிதேடிய மஹாபயங்கரர்களான உம்மவர்களால், கூடப்பிறந்தவருந் தானுமாய் வஞ்சிக்கப்பட்டிருந்தானுகிலும், ''இனி பரமபுருஷனுடைய ஸஹாயத்தால் உம்மவர்களைக் கொல்லப்போகிறோமென்கிற நிச்சயமுண்டாகையாலே அவர்களைப்பார்த்து மனங்கசிந்து, ஐயோ! இவர்களைக் கொல்லவேண்டுமே! என்று பந்துஸ்னேகத்தாலும் பரமதயையினுலும் அதர்மபயத்தாலும் சரீரங் குன்றியவனுய், இவர்களுடன் நான் யுத்தம் செய்வதற்கிசையமாட்டேனென்று சொல்லி பந்துக்களைப் பிரிவதிலுண்டான சோகத்தால் மனம் நொந்து அம்பையும் வில்லையும் விட்டெறிந்து திருத்தேர்த்தட்டில் சாய்ந்துவிட்டான்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசிதமான ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்

முதல் அத்யாயம் - முடிந்தது.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

இரண்டாவது அத்யாயம்.

ஸஞ்ஜய உவாச ॥ தம் ததா க்ருபயாவிஷ்டமஶ்ருபூர்ணாகுலேக்ஷணம் | விஷீதந்தமிதம் வாக்யமுவாச மதுஸூதந: ॥க॥ ஸ்ரீபகவாநுவாச॥ குதஸ்த்வா கஶ்மலமிதம் விஷமே ஸமுபஸ்திதம் | அநார்யஜுஷ்டமஸ்வர்க்யமகீர்திகரமர்ஜுந ॥ உ ॥ க்லைப்யம் மா ஸ்ம கம: பார்த நைதத்த்வய்யுபபத்யதே| க்ஷுத்ரம் ஹ்ருதயதௌர்பல்யம் த்யக்த்வோத்திஷ்ட பரந்தப॥ஙு॥

(க - ஙு) இவ்வாறு அர்ச்சுனன் சோகவியாகுலனுயிருக்க, எம்பெருமான் அதைக் கடாக்ஷித்தருளி 'அர்ச்சுன! இதேது? பரலோகவிரோதியும் அபகீர்த்தியை விளைப்பதும் மிகவும் இழிவானதுமான இந்த சோகம், தெரியாதவர்களைப்போல் உனக்கெங்கேயிருந்துண்டாயிற்று? யாருக்காகச் சோகிக்கிறுயென்று அதட்டி, தைரியமா யெழுந்திருந்து யுத்தம் செய்யடா பேதையே' என்று திடம் சொல்லியும் அர்ச்சுனன் ஸ்நேஹகாருண்யாதிகளுக்கு வசப்பட்டிருந்தமையால் அது தனக்கு அத்யந்தம் ஹிதமென்று தெரிந்துக்கொள்ளாமல் பின்வருமாறு சொல்லத்தொடங்கினுன்.

அர்ஜுந உவாச॥கதம் பீஷ்மமஹம் ஸங்க்யே த்ரோணம் ச மதுஸூதந | இஷுபி: ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹாவரிஸூதந॥ச ॥ குரூநஹத்வா ஹி மஹாநுபாவாந் ஶ்ரேயோ போக்தும்

http://acharya.org

பைக்ஷ்யமபீஹ லோகே | ஹத்வார்த்தகாமாம்ஸ்து குரூநிஹைவ புஞ்ஜீய போகாந் ருதிரப்ரதிக்தாந் || ௫ || நசைதத்வித்ம: கதரந்நோ கரீயோ யத்வா ஜயேம யதி வா நோ ஜயேயு: | யாநேவ ஹத்வா ந ஜிஜீவிஷாமஸ்தேऽவஸ்திதா: ப்ரமுகே தார்த்தராஷ்ட்ரா: || ௬ || கார்ப்பண்யதோஷோபஹதஸ்வபாவ: ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா: | யச்ச்ரேய: ஸ்யாந்நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே ஶிஷ்யஸ்தேऽஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம் || ௭ || ந ஹி ப்ரபஶ்யாமி மமாபநுத்யாத் யச்சோகமுச்சோஷணமிந்த்ரியாணாம் | அவாப்ய பூமாவஸபத்நம்ருத்தம் ராஜ்யம் ஸுராணாமபி சாதிபத்யம் || ௮ || ஸஞ்ஜய உவாச || ஏவமுக்த்வா ஹ்ருஷீகேஶம் குடாகேஶ: பரந்தப: | ந யோத்ஸ்ய இதி கோவிந்தமுக்த்வா தூஷ்ணீம் பபூவ ஹ || ௯ ||

(௫-௯) ஓ மதுஸூதந! நான் வெகுமதிக்கும்படி ஆசார்ய ஸ்தாநத்தை நிர்வஹித்திருப்பவரும் போகத்தில் மிகவும் பற்றுடையவருமான இந்த பீஷ்மத் துரோணுதிகளைக்கொன்று, அவர்கள் அநுபவித்துவந்த அந்தபோகத்தை அவர்களிருந்த ஆஸனத்திலிருந்து நானெப்படி அநுபவிக்கத் துணிவேன்? ஆனால் 'யுத்தம்செய்வதாக ஆரம்பித்துப் பிறகு கைவாங்கிநின்றால் அவர்கள் உங்களை மேல்விழுந்து அடிப்பார்களே' என்பீரோ? அது எனக்கு ஸம்மதமே; அதர்மமாக அவர்களைக் கொன்று ஜயம்பெறுவதைப்பார்க்கத் தர்மாதர்மந் தெரியாத அவர்களால் நாம் ஜயிக்கப்படுவதே மேலென்று எனக்குத் தோன்றுகிறது. இல்லையாகில், தேவரீருடைய சிஷ்யனுகிய அடியேனுக்கு எது க்ஷேமமோ எது தருமமோ அதைத் தேவரீரே அருளிச்செய்ய வேண்டுமென்று மிகவும் தீநனுய் கண்ணனுடைய சரணாரவிந்தங்களைப் பிடித்துக்கொண்டான். [அப்பொழுது எம்பெருமானும்; 'இவன் ஸ்நேஹகாருண்யங்களுக்கு வசப்பட்டிருக்கின்றமையால, க்ஷத்ரியனுக்குப் பரமதர்மமான யுத்தத்தை அதர்மமென்று பிரமித்துத் தனக்குத் தருமம் தெரியவேண்டுமென்று சரணுகதி பண்ணினுன்; இவனுக்கு ஆத்மஸ்வரூபத்தின் வாஸ்தவம் இன்னதென்பதும், பலத்தில் அபேக்ஷையின்றி யுத்தம் செய்வது க்ஷத்திரியருக்கு முக்திஸாதநமென்பதும், தெரியாதவரையில் இந்த மோஹம் தீரமாட்டாதாகையால் அதைத் தெரியச் சொல்லவேண்டுமென்று திருவுள்ளம் பற்றி, இந்த * அத்யாத்மசாஸ்த்ரத்தை அவதரிப்பித்தருளினுன். இவ்வர்த்தத்தை "அஸ்தாநஸ்நேஹகாருண்யதர்மாதர்மதியாகுலம் | பார்த்தம் ப்ரபந்நமுத்திஶ்ய ஶாஸ்த்ராவதரணம் க்ருதம் ||" என்று ஆளவந்தாரு மருளிச்செய்தார்.]

தமுவாச ஹ்ருஷீகேஶ: ப்ரஹஸந்நிவ பாரத |
ஸேநயோருபயோர்மத்யே விஷீதந்தமிதம் வச: ||

(௰) இப்படி தேஹ ஆத்மாக்களின் உண்மை தெரியாமல் சோகித்திருக்கச்செய்தே அது தெரிந்தவர்பேசும் பேச்சான தருமவார்த்தையைப் பேசுகிறவனும், யுத்தம்செய்வதாகப் புறப்பட்டுத் திடீரென்று இரண்டுசேனைக்

* அத்யாத்மசாஸ்த்ரம் - ஆத்மவிஷயகமான (மோக்ஷ) சாஸ்த்ரம்.

http://acharya.org

கும் நடுவில் யுத்தத்தினின்றும் கைவாங்கித் திகைத்து நிற்பவனுமான அந்த அர்ச்சுநனைப்பார்த்து பரமபுருஷன்கொஞ்சம்சிரித்து,வேடிக்கைப்பேசுவது போல ஆத்மபரமாத்மாக்களின் உண்மையையும் அதை அடைவதற்குபாயங்களான கருமயோக, ஞாநயோக, பக்தியோகங்களையு மறிவிக்கின்ற [நத்வே வாஹம் தொடங்கி ஸஹம்ஸ்வா ஸவஷ்வாவெஹ்ரோக்ஷயிஷ்ரதி ஶாஸ்த்ரஃ என்று மளவான இவ்வார்த்தையை அருளிச்செய்தார்.

ஸ்ரீபகவாநுவாச || அஶோச்யாநந்வஶோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ஶ்ச பாஷஸே | கதாஸூநகதாஸூம்ஶ்ச நாநுஶோசந்தி பண்டிதா:|| கக||

(கக) அர்ச்சுந! இவர்களைக் கொல்வதாவென்று தேஹாத்மாக்களின் ஸ்வரூபஞாநமில்லாதவன்போல, சோகமுற வேண்டாதவிஷயத்தில் சோகிக்கிருய்; அன்றியும் 'இவர்களைக்கொன்றுவிட்டால் பித்ருக்களுக்குப் பிண்டோதகக்ரியை யில்லாமற் போய்விடுமே' என்பது முதலாக அந்த விவேகம் உண்டானவர் பேச்சாகவும் பேசுகிருய்;இதென்ன? ஒன்றுக்கொன்று பொருந்தவில்லையே; தெரிந்தவர்கள் சோகிக்கமாட்டார்களே; ஏனெனில்:—ஆத்மவஸ்து நித்யமானதுபற்றி அதற்கு ஜந்மமுமில்லை மரணமுமில்லையாகையால் அதுவிஷயத்தில் சோகிக்கவேண்டாம்; அசேதநமான சரீரத்துக்கு எப்போதும் பரிணமிப்பதே ஸ்வபாவமாகையால் அதற்குமரணம் நேரிடுவதைப்பற்றியும் சோகிக்கவேண்டாம். ஆனபின்பு நீ இப்படி சோகப்படுவதைப்பார்த்தால் தேஹத்தின் ஸ்வபாவமும், அதற்குஅவ்வருகான ஆத்மஸ்வபாவமும்,அதை அடையும் உபாயமான யுத்தமுதலிய தருமமும் ஒன்றும் அறியாய் போலும்.

[இந்த யுத்தத்தைப் பலனில் அபேக்ஷையின்றிச்செய்தால் அதனல் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தைப் பிரத்தியக்ஷமாய்க்காணலாம். ஆத்மாவோ பிறப்பதனு லிருக்கிருனென்றும் இறப்பதனு லில்லாமற்போகிருனென்று மில்லை; அவனுக்கு ஜநநமரண மிரண்டுங் கிடையாது. ஆகையால் அவன் விஷயத்தில் சோகிக்கக் காரணமில்லை. தேஹமோ க்ஷணந்தோறும் விகாரப்படுவதே ஸ்வபாவமாகையால் அதற்கு உத்பத்தியும் நாசமும் ஸ்வபாவமானதுபற்றி அதற்காகவும் விசனப்படவேண்டாம் என்று திருவுள்ளம்.]

(அ-கை.) முதலில் ஆத்மஸ்வபாவத்தைச் சொல்லுகிறேன் கேள்:

நத்வேவாஹம்ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா:|
நசைவநபவிஷ்யாம: ஸர்வேவயமத:பரம்|| கஉ||

(கஉ) அநாதியாய் வருகிற இந்தகாலத்தில் இதுவரையில் நான் இல்லாத நாளில்லை; நீ இல்லாத நாளில்லை; இந்த ராஜாக்களில்லாத நாளுமில்லை: இனியும் அப்படிதான் நாமொருவரும் இராமற்போகிற நாளுமில்லை: எல்லோரும் எந்நாளும் இருப்பவர்தான்: இதனல் - ஸர்வேசுவரனை நான் (பரமாத்மா) எப்படி நித்யனென்பதில் ஸந்தேஹமில்லையோ அப்படியேதான் ஜீவர்களான நீங்களும் நித்யர்களென்பதில் ஸந்தேஹமில்லையென்று தெரிந்துக்கொள். [நித்யன் - எக்காலத்திலு மிருப்பவன்.]

http://acharya.org

[இங்கே அக்ஞாநத்தாலே மயங்கிக்கிடந்த அர்ச்சுநனுக்கு அந்த அக்ஞாநம் தீருகைக்காக யதார்த்தமான ஆத்மாவினுடைய நித்யத்வத்தை உபதேசிக்கிற ஸமயத்தில், 'நான், நீ, இவர்கள்' என்று பிரித்தருளிச்செய்ததைப்பார்த்தால், ஸர்வேசுவரனுக்கும் ஆத்மாக்களுக்கு முண்டான ❁ பரஸ்பர பேதமும், ஆத்மாக்களுக்குள் ஒருவருக்கொருவர் உண்டான பேதமும் ஸத்யமேயொழிய கற்பித மல்லவென்று எம்பெருமானே அருளிச்செய்ததாகத் தெரியவருகிறது. இங்கே அத்வைதிகள், சொல்லுகிறது - இந்த பேதம் ⊕ உபாதிவசத்தால் வந்ததாகையால் ⚘ தத்வமாகமாட்டாதென்பர்கள்; அது ஸரியன்று. ஏனெனில்! அப்படி பேதம் தத்வமாகாதபக்ஷத்தில், அதைத் தத்வோபதேசஸமயத்தில் உபதேசிக்கக்கூடுமோ? அப்படி உபதேசித்தமையாலேயே இது தத்வமென்பதில் ஸந்தேஹமில்லை. மேலும் இப்படியே * வேதமுஞ் சொல்லுகிறது.

இதற்குமேலும் அந்த அத்வைதிகள் பரமபுருஷன் அக்ஞாநத்தால் காணப்படும் பேதத்தைக்கண்டு அதை உபதேசித்தானென்பர்களாகில் அதுவும் கூடாது. பரமார்த்தத்தைக் காணவல்ல பரமபுருஷனுக்கு (நிர்விசேஷ கூடஸ்த நித்ய சைதந்யமான) ஆத்மாவினுடைய யதார்த்த ஸாக்ஷாத்காரமுண்டானகையாலே அக்ஞாநமும் அதின் காரியமும் ஒழிந்தபடியால் அக்ஞாநகாரியமான பேததர்சநமும், அதைப்பற்றிய உபதேசாதி வ்யவஹாரமுமெப்படி கூடும்?

இனி-பரமபுருஷன் பாதிதாநுவர்த்தியான பேதக்ஞாநத்தாலே சொல்லுகிறுர்; ○ பாதிதாநுவர்த்தியாவது - கானலைப்பார்த்து முதலில் நீரென்று பிரமித்த ஒருவனுக்கு 'இது நீரல்ல கானலே' யென்று தெளிவுபிறந்த பின்பும் அது நீர்போலவே தோற்றப்படுவதாம்; அதுபோல் ஈசுவரனுக்கு $ அத்வைதக்ஞாநம் உண்டானபின்பும் (பாதிதாநுவர்த்திரூபமான)பேதக்ஞாநம் சிறிதுகாலம் நடையாடுகிறது; ஆனுல் அது, வெந்த வஸ்திரம்போல அத்வைதக்ஞாநத்தாலே பாதிக்கப்பட்டமையால் பந்தஹேதுவாக மாட்டாது என்று சொல்லக்கூடும்; அதுவுஞ் சேராது. ஏனெனில்! ஒருவனுக்கு இது கானலேயென்கிற தெளிவு பிறந்தபின், அது நீர்போல் தோற்றுமாகிலும் அவனுக்கு இது நீரல்லவென்கிற நிச்சயமுண்டானபின்பு, அதை அவன் ஸ்நாநபாநாதி

❁ பரஸ்பரபேதமாவது - (நான், நீ என்கிற) வேறுபாடு.

⊕ உபாதிவசத்தால் வருகையாவது - மாயையின் ஸம்பந்தத்தால் தோற்றுகை.

⚘ தத்வம் - உண்மை.

* நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந். நித்யரான பலசேதநர்களுக்கு யாதொரு நித்யசேதநனுண்டு, அவ னிஷ்டங்களை யளிக்கிறுனென்று இதன்பொருள்.

○ பாதிக்கப்பட்டும் அநுவர்த்திக்கிறபடியால் (அதாவது அழிவுற்றும் தொடருகிறபடியால்) பாதிதாநுவர்த்தியென்கிறது.

$ அத்வைதக்ஞாநமாவது - (ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறல்ல) ஒன்றுதான் என்கிற அபேதக்ஞாநம்.

http://acharya.org

களுக்காகக் கொண்டுவர யத்தநப்படுவனோ? இல்லை. அதுபோல் இங்கும், அத்வைதக்ஞாநத்தாலே பாதிக்கப்பட்ட பேதக்ஞாநம் ஈசுவரனுக்கும் அநுவர்த்திப்பதாகச் சொன்னாலும், இந்தபேதம் பொய்யென்கிற நிச்சயம் அவருக்குண்டானபிறகு உபதேசம் முதலியவற்றில் ப்ரவர்த்திப்பரோ? ப்ரவர்த்திக்கமாட்டார். மேலும் ஈசுவரனுக்கு பாதிதாநுவர்த்தியென்பதே சொல்லத்தகாது. ஏனென்றால் - முதலில் அக்ஞாநியாயிருந்து (சாஸ்திரஞாநத்தாலே) தெளிவு பிறந்தவனுக்கன்றோ பாதிதாநுவர்த்தியாவது? ஈசுவரனை யெக்காலத்திலாவது அக்ஞாநியா யிருந்ததாகச் சொல்லப்போமோ? சொன்னால் ஸர்வக்ஞனாகச்சொல்லுகிற § ச்ருதி ஸ்ம்ருதிகள் விரோதிக்கமாட்டாவோ? மேலும் இங்கே அவர்களை ஒன்று கேழ்க்கிறோம். அதாவது:—பரமபுருஷனாகட்டும், இப்பொழுதுள்ள குருக்கள்தானாகட்டும், இவர்களுக்கு அத்வைத ஆத்மஸ்வரூப நிச்சயம் உண்டன்றோ? (அதாவது நானொருவனே ஸத்யம், மற்றதெல்லாம் பொய் என்கிற நிச்சயம் உண்டல்லவா?) அதுண்டானபின்பு இவர்களுக்கு (பேதஞாநந் தொடர்ந்தாலும்,) இவ்வித நிச்சயத்தை இவர்கள் யாருக்கு உபதேசிக்கிறார்களோ சொல்லவேண்டும். ப்ரதிபிம்பம்போல் காணப்படுகிற அர்ச்சுநாதிகளுக்குத் தானென்றாலோ, ஐயோ! அநுன்மத்தனாகிய (அதாவது விவேகியான) புருஷன் எவனாகிலும், மணி கத்தி கண்ணாடி முதலிய நிர்மலவஸ்துக்களில் தன்னுடைய ப்ரதிபிம்பங்கள் காணப்பட்டால் அவைகளைப்பார்த்து (அவை தன்னைக்காட்டிலும் வேறல்லவென்று தெரிந்திருக்க) அவற்றோடு ஒருஸங்கதியைச் சொல்லுவனோ? பித்தனன்றோ சொல்லுவன்? இது கிடக்கட்டும்; முதலில் அவர்கள் இங்கே பாதிதாநுவர்த்தியே சொல்லத்தகாது. ஏனெனில்! பாதகமான அத்விதீய ஆத்மக்ஞாநத்தாலே (அதாவது ஜீவனும் ப்ரம்மமும் ஒன்றுதானென்கிற ஐக்யஞாநத்தாலே) பேதக்ஞாநத்தின் அநாதிகாரணமான (பாவரூப) அக்ஞாநம் நசித்துப்போனபடியால், காரண மில்லாமையாலே காரியமுமில்லை; அதாவது பாவரூப அக்ஞாந மில்லாமையாலே பேதக்ஞாநரூபமான பாதிதாநுவர்த்தியுமில்லை; ஆகையால் பாதிதாநுவர்த்தியே சொல்லத்தகாது. ஆனால் ஒருவனுக்கு ஒருகாலத்தில் இருள் முதலிய தோஷத்தாலே ஒரு சந்திரன் இரண்டு சந்திரன்போல் காணப்பட்டு, பிறகு ஆப்தனாகிய மற்றொருவன் வார்த்தையினால் இது ஒன்றுதானென்கிற நிச்சயம் பிறந்தாலும், இரண்டென்கிற தோற்றம் தொடர்ந்தே வருகிறதன்றோ? அப்படிதா னிங்கும் அத்வைதக்ஞாநமுண்டானபோதிலும் பேதக்ஞாநந் தொடருகிறதென்றால், அங்கே இரண்டென்கிற தோற்றத்துக்குக் காரணமுண்டு; இருள் முதலிய காரணம் ஒன்றென்கிற எண்ணத்தாலே அழியமாட்டாதன்றோ? ஆகையால் காரணமுள்ளவரையில் காரியம் || தொடரக்கூடும்; (அதாவது அங்கே பாதிதாநுவர்த்தி

---

§ ச்ருதி:|| யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்|| ச்ருதி|| பராஸ்ய சக்திர்விவிதைவ ச்ரூயதே| ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச || ஸ்ம்ருதி: || வேதாஹம் ஸமதீதாநி வர்த்தமாநாநி சார்ஜுந | பவிஷ்யாணி ச பூதாநி மாம் து வேத ந கச்சந.

|| தொடர்ந்தாலும் ப்ரபலப் ப்ரமாணமான ஆப்த வாக்யத்தாலே பாதிக்கப்பட்டமையால் அது பயன்படமாட்டாது.

http://acharya.org

யென்பது யுக்தம்.) இங்கோ காரணமில்லை; ஏனெனில்! பேதக்ஞாநமும் அதி ன் விஷயமும் அதின்காரணமும் உண்மையல்லாமையால் அவை உண்மை யான அத்வைதக்ஞாநமுண்டானபோதே நசித்துவிட்டதாகக் கொள்ளவே ண்டியதாகையால் எவ்விதத்திலும் பாதிதாநுவர்த்தியென்பதே கூடாது.

ஆகையாலே ஸர்வேச்வரனுக்கும் இப்போதுள்ள குருபரம்பரைக்கும் தத்வக்ஞாநமுண்டாகில், பேததரிசநமும் அத்தால் வரும் உபதேசாதிகளுங் கூடாது; பேததரிசநமேயுண்டாகில், அக்ஞாநமும் அதின்காரணமு முண்டா யிருக்கையாலே அக்ஞாநிகளான இவர்கள் உபதேசிப்பதென்பது சிறிதும் சேராது.

அன்றியும், ஆத்மா ஒருவனே பரமார்த்தமென்று குருவுக்குண்டான நிச்சயத்தாலேயே, பிரம்மத்துக்குண்டான அக்ஞாநமும் (அந்த அக்ஞாநத் தால் வரும்) பிரபஞ்சமும் நசித்தபடியால் சிஷ்யனுக்கு உபதேசிப்பதில் பய னில்லை; [அதாவது - உபதேசத்துக்குப் பயன், அத்வைதஞாநம் பிறந்து அத் தால் அக்ஞாநமும் அத்தால்வரும் பிரபஞ்சமும் ஒழிந்துபோகை; அவை குருவுக்குண்டான நிச்சயத்தாலேயே ஒழிந்துபோனபடியால் இனி யெந்த பயனைப்பற்றி உபதேசிப்பதென்பதாம்?]

இதற்குமேல், ஆசாரியனும் அவன் ஞாநமும் கற்பிதமாகையால் பேத ஞாநத்தை யொழிக்கமாட்டாதென்றால் அப்பொழுது அந்த நியாயத்தைக் கொண்டே சிஷ்யனும்அவன் ஞாநமும் கற்பிதமென்று கொள்ளவேண்டுமா கையால் அதுவும் பேதஞாநத்தைப் போக்கமாட்டாது. கற்பிதமானாலும் முந் திய பேதக்ஞாநத்துக்கு விரோதமாயிருக்கையாலே போக்கலா மென்றால், அது ஆசாரிய ஞாநத்துக்கே யுண்டாகையால் அதுவே போக்கலாமாகை யால், எவ்விதத்திலும் உபதேசம் வ்யர்த்தமேயாம். இப்படிப்பட்ட [அஸங் கதமான அவர்கள் வாதத்தை யிவ்வளவு நிரஸித்தது போதும்.]

தேஹிநோऽஸ்மிந்யதா தேஹே கௌமாரம்யௌவநம்ஜரா।
ததா தேஹாந்தரப்ராப்திர் தீரஸ்தத்ர ந முஹ்யதி॥கந॥

(கந) ஒருவனுக்குத் தன் தேகத்தில் பால்யஸ்திதி நீங்கி யௌவநம் முதலிய ஸ்திதிகள் வந்ததாகில் (தான் ஸ்திரமென்கிற எண்ணமுண்டாகை யாலே) அவனெப்படி தானழிந்துபோனதாக நினைத்து விசனப்படுவதில் லையோ அப்படி, புத்திசாலியான புருஷன், தனக்கு வேறுதேகம் வந்தா லும் (ஆத்மா சாசுவதந்தானென்கிற திடமுள்ளவனாய்) அதுவிஷயத்தில் சிறிதும் சோகிக்கமாட்டான்.

[இதனால் இங்கே ஏற்பட்டது என்னவெனில்:—நித்யரான ஆத்மாக் கள் தாம் முன்செய்தவினைக்கு வசப்பட்டிருக்கையாலே அந்தந்த கருமவி னைக்கேற்ற சரீரங்களையெடுத்து, அவைகளைக்கொண்டே தம் வருணாசிரமங் களுக்கு உசிதமான (யுத்தம் முதலிய) கருமங்களைப் பலனில் அபேக்ஷையில் லாமலே செய்துவரவேண்டும்; அப்படி செய்யும்பொழுது தம்மாலும் ஒழி க்கப்போகாமல் (சப்தம்முதலிய விஷயங்களால்)வரும் சீதம் உஷ்ணம் முத லிய சுகதுக்கங்களைத் தாம் அநுஷ்டிக்கிற கருமம் முடிகிறவரையில் பொறு த்தே தீரவேண்டுமென்பதாம். இவ்வர்த்தத்தை உடனே அருளிச்செய்கிறார்.]

http://acharya.org

மாத்ராஸ்பர்ஶாஸ்து கௌந்தேய ஶீதோஷ்ணஸுகது:கதா:|
ஆகமாபாயிநோ(அ)நித்யாஸ்தாம்ஸ்திதிக்ஷஸ்வ பாரத|| ௧௪||

(௧௪) ஹே குந்திபுத்திர! (சப்தம் பரிசம் ரூபம் ரஸம் கந்தமென்கிற) குணங்களும், அவற்றுக்கிடமான (ஆகாசம் காற்று நெருப்பு நீர் நிலம் என்கிற) பஞ்சபூதங்களும், (செவி வாய் கண் மூக்கு உடல் என்கிற) ஐம்புலன்களின்வழியே (வெப்பம் குளிர்ச்சி மெதுவு கடிநம்முதலிய) சுகதுக்கங்களைத் தருகின்றன. அவை கருமாதீநமாய் வருமவைகளாகையாலே கருமம் நாசமடைந்தபோதே நசித்துப்போம். ஆகையால் சாஸ்திரத்தில்வகுத்த கருமயோகத்தை அநுஷ்டிக்கிறவளவில் தைரியமாய் அவைகளைப் பொறுப்பாயாக.

யம் ஹி ந வ்யதயந்த்யேதே புருஷம் புருஷர்ஷப|
ஸமது:கஸுகம் தீரம் ஸோ(அ)ம்ருதத்வாய கல்பதே|| ௧௫||

(௧௫) எதற்காகப் பொறுக்கவேண்டுமென்றால்-உலகத்தில் எந்த புருஷன், (தன்னால் ஒழிக்கப்போகாமல் வருகின்ற) துக்கத்தைத் தைரியத்தினால் சுகம்போல் ஸஹித்துத் தன் வருணத்துக்கடுத்த மோக்ஷஸாதநமான (யுத்தமுதலிய) கருமங்களைச் செய்துகொண்டுவருகிறானோ, அவனொருவன் மோக்ஷத்தை ஸாதிக்கமாட்டுவனே யல்லது, துக்கத்தைப் பொறுக்கமாட்டாத உன்னைப்போலொத்தவனல்ல. [இதனால்; ஆத்மா நித்தியனாகையால் நீ இவ்வளவும் செய்யத்தக்கதென்று தாத்பர்யம்.]

(அ-கை.) ஆத்மா நித்யனென்றும், தேஹத்துக்கு நசிப்பது ஸ்வபாவமென்றும், சொன்னானன்றோ முன்பு? அதையே தக்கயுக்திகளைக்கொண்டு ஸாதிக்கத் தொடங்குகிறான்.

⊕ நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸத:|
உபயோரபி த்ருஷ்டோ(அ)ந்தஸ்த்வநயோஸ்தத்வதர்ஶிபி:|| ௧௬||

(௧௬) அஸத்தான சரீரத்துக்கு * ஸத்பாவம் கிடையாது. ஸத்தான ஆத்மாவுக்கு † அஸத்பாவங்கிடையாது; இவ்விரண்டுக்கும் இதுதான் ஸ்வரூபமென்று தத்வந்தெரிந்த பெரியோர்கள் நிஷ்கர்ஷம்பண்ணினார்கள். [அதாவது-ஸத் என்றால் நாசமுறாததன்மையது; அஸத் என்றால் நசிக்குந்தன்மையது; இப்படியானால் (சேதநமான)ஆத்மஸ்வரூபம் ஸத்தாகையாலே நாசம

⊕ இந்த சுலோகம் ஸத்காரியவாத பரமென்று சிலர் பிரமித்தார்கள். அது அஸங்கதம். ஏனெனில் தேஹாத்மஸ்வபாவந்தெரியாமல் மயங்கிக்கிடந்தவனுக்கு அம்மயக்கந் தெளிவதற்காகச் சொல்லுகிற இந்தப்ரகரணத்தில் நசிக்குந்தன்மையதான சரீரத்தினுடையவும் நசியாததன்மையதான ஆத்மாவினுடையவும் ஸ்வபாவத்தைப் பற்றியன்றோ சொல்லவேண்டும்? அப்படியேதான் கதாஸூநகதாஸூம்ஶ்ச என்று முதலில் பிரஸ்தாவிக்கப்பட்டது; அநந்தரமும் அவிநாஶி து தத்வித்தி என்றும் அந்தவந்த இமே தேஹா: என்றும் உபபாதிக்கப்பட்டது. ஆகையால் இங்கே சொன்னதுதான் அர்த்தம்

* ஸத்பாவம் - நிலைமை. † அஸத்பாவம் - நிலையாமை.

http://acharya.org

ற்றது; (அசேதநமான)தேஹஸ்வரூபம்அஸத்தாகையாலே நாசமுற்றது: என்று நிச்சயிக்கப்பட்டதென்று தாத்பர்யம். இப்படியே பராசரபகவானும் - "तस्मान्न विज्ञानमृतेऽस्ति किंचित्क्वचित्कदाचिद्द्विज वस्तुजातम्। ज्ञानं यथा सत्यमसत्यमन्यत्॥ என்றும், अनाशी परमार्थश्च प्राज्ञैरभ्युपगम्यते। तत्तु नाशि न संदेहो नाशिद्रव्योपपादितम्॥ यत्तु कालान्तरेणापि नान्यसंज्ञामुपैति वै। परिणामादिसंभूतां तद्वस्तु नृप तच्च किम्॥" என்றும் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் அருளிச்செய்தார்.

अविनाशि तु तद्विद्धि येन सर्वमिदं ततम्।
विनाशमव्ययस्यास्य न कश्चित्कर्तुमर्हति॥ கஎ॥

(கஎ) பிரபஞ்சத்திலுள்ள அசேதநங்களெல்லாம் (அதாவது அறிவில்லாதவஸ்துக்களெல்லாம்) சேதநமான எந்த வஸ்துவினால் வ்யாபிக்கப்பட்டுளதோ அதுதான் ஆத்மா ; அது நாசமற்றதென்றறி: அவ்யயமான இதற்கு நாசஞ்செய்ய ஒன்றுக்கும் திறமில்லை. [ஆத்மா நாசமற்றதென்று எப்படி அறிவதென்றால் - லோகத்தில் அக்நி வாயுமுதலிய வஸ்துக்கள், ஒரு வஸ்துவை நாசப்படுத்தும்பொழுது அதைமுழுதும் வ்யாபித்தே நாசப்படுத்தக்காண்கிறோமாகையாலே, நாசமடைகிறவஸ்து வ்யாபிக்கப்பட்டும் நாசப்படுத்துகிறவஸ்து அதை வ்யாபித்துக்கொண்டும் இருக்கவேண்டும். இப்படியானபின்பு, ஆத்மா அதிஸூக்ஷ்மமாய் ஸகல வஸ்துவையும் வ்யாபித்துக்கொண்டிருக்கையாலே அதை (அத்தால் வியாபிக்கப்பட்டு ஸ்தூலமாயிருக்கிற) எந்த வஸ்துதான் நாசப்படுத்தும் ? ஆகையால் இனிஅதை நித்யமென்னக் குறையுண்டோ?.]

(அ-கை.) தேஹங்களுக்கோ நசிப்பதே ஸ்வபாவமென்கிறார்.

अन्तवन्त इमे देहा नित्यस्योक्ताः शरीरिणः।
अनाशिनोऽप्रमेयस्य तस्माद्युध्यस्व भारत॥ கஅ॥

(கஅ) நித்யனான ஆத்மாவுக்கு (கருமப்பயனை அநுபவிப்பதற்காகப் பஞ்சபூதங்களின் சேர்க்கையினால் ஏர்ப்பட்டிருக்கிற) இந்த தேகங்கள் (வெவ்வேறு வடிவாயிருக்கின்றமையால் பல உருப்புகளுடன் கூடிப் பருத்திருப்பவைகளென்று தெரிகிறது. ஆனதுபற்றியே இவை ○ சாஸ்திரத்தில் சொன்னபடி கருமம் நசித்தபோது தாமும் நசித்துப்போம். (பல உருப்புகள்கூடிப் பருத்திருக்கும் பானை முதலியவை நசிக்கக்காண்கிறோமல்லவா?) ஆத்மாவோ எந்த தேஹத்திலும் 'நான் இதை அறிகிறேன், நான் இதை அறிகிறேனென்று' அறிபவனாகவே தோற்றுகிறபடியால் ஒரேவடிவா யிருக்கிறானென்று தெரிகிறது. ஆனதுபற்றி தேஹத்தைப்போல் இடத்துக்குத்தக்கபடி வெவ்வேறு விதமாய்த் தோற்றாமையாலே பல வுருப்புகளுடன் கூடியவனல்ல; ஆனதினால் இவனுக்கு நாசமில்லை. இப்படி, ஆத்மா நித்யனாகையாலும் தேஹம் அநித்யமாகையாலும் (இரண்டுக்கும் சோகிக்க விடமில்லையென்று

○ वासांसि जीर्णानि यथा இத்யாதி சாஸ்திரத்தில் சொன்னபடி.

http://acharya.org

திடனுற்று, கத்தி வெட்டு முதலிய (ஒழிக்கப்போகாமல் வரும்) கொடும் பரிசங்களைத் தனக்கு நேரிட்டாலும் பிறருக்கு நேரிட்டாலும் பொறுத்து, பலனை உத்தேசிக்காமல் (மோக்ஷார்த்தமாக) யுத்தமென்கிற கருமத்தைச் செய்.

ய ஏநம் வேத்தி ஹந்தாரம் யஶ்சைநம் மந்யதே ஹதம்।
உபௌ தௌ ந விஜாநீதோ நாயம் ஹந்தி ந ஹந்யதே॥ ௧௯॥

(௧௯) லோகத்தில் ஆத்மாவைக் கொல்லும்படியான வஸ்து ஏதேனும் ஒன்று இருப்பதாக நினைப்பவனும் சரிதான், ஆத்மாவைக் கொல்லப்படுவதாக நினைப்பவனும் சரிதான், இருவரும் தெரியாதவர்களே; கீழ்ச்சொல்லிய காரணங்களால் ஆத்மா நித்யனாகையாலே அவனைக் கொல்லும்படியான தொன்றுமில்லை. ஆனதுபற்றியே அவன், கொல்லப்படுமவனுமல்லன். [ஆனால் கொலையாவது என்னவெனின், ஜீவனையும் தேஹத்தையும் பிரிக்கைதான். அப்படியாகில் ஒரு ஜீவனையும் கொல்லலாகாதென்றும், பிராமணனைக் கொல்லலாகாதென்றும் இன்னுமிப்படி § சாஸ்த்ரம் சொல்லுகிறதேயென்றால், அங்கும் கொலையாவது - ஜீவனையும் தேஹத்தையும் பிரித்துவிடுகைதான். ஆனால் அதைச் செய்யவேண்டாமென்று விலக்குவானேனென்றால்- சாஸ்திரத்தில் சொல்லாதபடி வீணிலே ஹிம்ஸைசெய்யலாகாதென்று தெளிகைக்காக.

ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந் நாயம் பூத்வா பவிதா வா ந பூய꞉।
அஜோ நித்ய꞉ ஶாஶ்வதோऽயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே॥ ௨௦॥

(௨௦) (ஜநநம் மரணம் முதலியவை சரீரந்தோறும் உண்டேயாகிலும் அவை ஆத்மாவில் ஸம்பந்திக்கமாட்டா.) ஆத்மாவுக்குப் பிறப்புமில்லை, இறப்புமில்லை; ஆகையால் பிறந்தானென்பது மில்லை. பிறக்கிறானென்பது மில்லை. (ஒரு கல்பத்தின் ஆதியில்பிரம்மாதிகள் பிறந்து அந்தகல்பத்தின் முடிவில் நசிப்பதாகச் சாஸ்திரஞ் சொல்வதும் தேஹத்துக்கேயன்றி ஆத்மாவுக்கல்லவாகையால்) பிறக்கப்போகிறானென்பது மில்லை: இவன் நித்யன்: எப்போதும் புதிதாயிருப்பவன்: பிரகிருதியைப்போலே விகாரமடைபவனல்லன். [ஆகையால் சரீரம் நசித்தபோது இவ்வாத்மாவுக்கும் நாசம் உண்டாய்விட்டதாகப் பிரமித்து, நீபயப்படவேண்டாம்.]

வேதாவிநாஶிநம் நித்யம் ய ஏநமஜமவ்யயம்।
கதம் ஸ புருஷ꞉ பார்த கம் காதயதி ஹந்தி கம்॥ ௨௧॥

(௨௧) இப்படி உத்பத்தி விநாசங்கள் அற்று, ஒன்றாலும் நாசப்படுத்தக் கூடாமையாலே, ஆத்மா நித்யனென்று யாவனொருவன் அறிகிறானோ அவன், (தேவர் மனிதர் திர்யக்குத் தாவரம் என்கிற நால்வகையான ஜீவர்களிலும்) யாரைத்தான் எப்படி கொல்லுவன்? யாரைக்கொண்டுதான் யாரைக்கொல்லுவிப்பன்? [என்றால், 'இவர்களைக் கொல்லுகிறேனென்றும் கொல்

§ ஶ்ரு॥ ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி॥ ப்ராஹ்மணோ ந ஹந்தவ்ய꞉॥

லுவிக்கிறேனென்றும்' நினைத்து துயரப்படுவதெல்லாம் ஆத்மாவின் உண்மையான நிலைதெரியாமையாலென்று தாத்பர்யம்.]

(அ-கை.) மரணமென்பது, ஜீவன் சரீரத்தைவிட்டுப் போகைதானென்றும் அதினால் ஆத்மாவுக்கு ஒரு கேடுமில்லையென்றும் நாம் நினைத்திருந்தாலும், ரமணீயமாய் போகத்துக்கு ஸாதகமாயிருக்கிற சரீரம் நசிக்கும் போது ஐயோ! இது போகிறதே என்கிற துக்கம் உண்டாகாமற்போமோவென்றால் சொல்லுகிறார்.

வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய நவாநி க்ருஹ்ணாதி நரோபராணி। ததா ஶரீராணி விஹாய ஜீர்ணாந்யந்யாநி ஸம்யாதி நவாநி தேஹீ॥ ௨௨॥

(௨௨) (யுத்தத்தில் இறப்பவருக்கு அதிவிலக்ஷணமான சரீரம் கிடைப்பதாகச் சாஸ்திரம் சொல்லுகையாலே) பழையதான வஸ்திரத்தைக் களைந்தெறிந்து புதியவஸ்திரத்தை அணிந்துக்கொள்ளுவாரைப்போலே, பழகிப்போன சரீரத்தைவிட்டுப் புதிய சரீரத்தை அடைவதில், (உனக்கு) பினனும் ஸந்தோஷ முண்டாக வேண்டுமேயல்லது துக்கமுண்டாவதற்குச் சிறிதும் இடமில்லை.

(அ-கை.) ஆத்மாவுக்கு நாசமில்லையென்று முற்கூறிய அர்த்தத்தையே திடப்படுத்துகிறார்.

நைநம் சிந்தந்தி ஶஸ்த்ராணி நைநம் தஹதி பாவக:। ந சைநம் க்லேதயந்த்யாபோ ந ஶோஷயதி மாருத:॥ ௨௩॥ அச்சேத்யோயமதாஹ்யோயமக்லேத்யோஶோஷ்ய ஏவ ச। நித்ய: ஸர்வகத: ஸ்தாணுரசலோயம் ஸநாதந:॥ ௨௪॥

(௨௩-௨௪) ஆயுதம் அக்கினி தண்ணீர் காற்று இவைகள், வெட்டல் கொளுத்தல் நனைததல் உலர்த்தல் முதலிய எவ்விதத்துன்பத்தையும் இவ்வாத்மாவுக்குச் செய்யக்கூடியவையல்ல. ஏனெனில்! இது ஸகலவஸ்துக்களிலும் அதி ஸூக்ஷ்மமாய் அவைகளையெல்லாம் வியாபித்துககொண்டிருக்கிறது. (வெட்டல் கொளுத்தல் முதலிய எவ்வித வியாபாரமும் வியாபித்தே செய்யவேண்டுகையாலே, எல்லாவற்றையும் வியாபித்திருக்கிற ஸர்வவியாபகமான இதை வியாபித்து இதற்கு அழிவு தேடும்படியான வஸது லோகத்தில் ஒன்றுமில்லை. ஆகையால் ஆத்மா நித்யமாய் அசைவற்றதாய் புராதநமாயிருக்கிறதென்று தெரிநதுக்கொள்.

அவ்யக்தோயமசிந்த்யோயமவிகார்யோயமுச்யதே। தஸ்மாதேவம் விதித்வைநம் நாநுஶோசிதுமர்ஹஸி॥ ௨௫॥

(௨௫) ஆத்மாவானவன் வெட்டல் முதலிய காரியங்களுக்கு வசப்பட்டவனல்லனென்பதற்கு ஓர் அடையாளம் சொல்லுகிறேன் கேள்:—அவற்றுக்கு வசப்பட்டிருக்கிற கடம் (பாண்டம்) படம் (வஸ்த்ரம்) முதலிய பதார்த்தங்களை (கண்முதலிய) எந்தப் பிரமாணங்களைக்கொண்டு நாம கண்டறிகி

http://acharya.org

றோமோ அவைகளால் இவன் அறியப்படுகிறானா? இல்லை. ஆதலால் * அவ்யக்தனான இவன் வெட்டல் முதலியவைகளுக்கு வசப்பட்ட எந்த பதார்த்தத்தோடும் சேர்ந்தவனல்லன். இப்படி விஜாதீயனா யிருக்கையாலே இவனை அவற்றின் ஸ்வபாவத்தோடு கூடியவனாக நினைக்கப்போகாது: ஆனதுபற்றியே விகாரத்துக்கும் ஏலாதவன். இப்படிப்பட்ட ஆத்மாவின் விஷயத்தில் நீ சோகிப்பது சிறிதும தகாது.

அத²சைநம் நித்யஜாதம் நித்யம்வா மந்யஸே ம்ருதம்|
ததா²பி த்வம் மஹாபா³ஹோ நைநம் ஶோசிதுமர்ஹஸி||உசு||

(உசு) இல்லையென்று "ஆத்மாவென்கிறது (நித்யமாயப் பிறப்பதும் இறப்பதுமாயிருகிற) இந்த தேஹத்தைத்தான்; இதைக்காட்டிலும் வேறொன்றையுமல்ல" வென்று நீ நினைத்திருந்தாயாகிலும், ஒரு நிலையாயிராமல் விகாரப்படுவதே ஸ்வபாவமாயிருக்கிற இந்த தேஹத்துக்கு உத்பத்திவிநாசங்கள், எவ்விதத்திலும் ஒழியமாட்டாதாகையாலே அதுவிஷயத்தில் சோகித்துத்தான்பயனென்ன?

ஜாதஸ்ய ஹி த்⁴ருவோ ம்ருத்யு: த்⁴ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச|
தஸ்மாத³பரிஹார்யேர்தே² ந த்வம் ஶோசிதுமர்ஹஸி|| உஎ||

(உஎ) உத்பத்தியான பதார்த்தத்துக்கு நாசம் எப்படி ஸித்தமோ, அப்படி நாசமான பதார்த்தத்துக்கு உத்பத்தியும்ஸித்தம். [அதெப்படியென்றால்: லோகத்தில் எதுவும் இருக்கிறவஸ்து உண்டாகிறதே யல்லது இல்லாதவஸ்து ஒன்றும் உண்டாகக்காணோம். திருஷ்டாந்தம்—நூல்முதலியவை (இருகிற வஸ்துக்களே) உண்டையும் பாவுமா யோடியிருக்குமாகில் அவற்றைப் பார்த்து, துணிமுதலானவைகள் உண்டானதாகச் சொல்லுகிறோம். அதுவே யல்லது வேறில்லை. ஆகையால் இருக்கிற வஸ்துவினுடைய விகாரங்கள்தான் உத்பத்திவிநாசங்களாவது. அதில் உத்பத்தியென்கிற விகாரத்துக்கு விரோதமான விகாரத்தை நாசமென்கிறது. மண்ணென்கிற வஸ்துவுக்குப் பிண்டமாதல், குடமாதல், கபாலமாதல், பொடியாதல் முதலிய முற்கூறிய உற்பத்தி விநாசரூபமான விகாரங்கள் வந்தே தீருகின்றனவல்லவா? இப்படிதான் விகாரப்படும் வஸ்துவுக்கெல்லாம் விகாரப்படுவதென்பது ஸித்தமான விஷயம்; ஒருபோதும் ஒழியாது. அதில் முன் விகாரத்திலிருக்கிற வஸ்துவுக்கு, பின் விகாரம் வந்ததாகில் அதை நாசமென்றும், மறுபடியும் முன் விகாரமே வந்ததாகில் அதை உத்பத்தியென்றுஞ் சொல்லுகிறோமே; இதுதான் விசேஷம்.] இப்படி உத்பத்தி விநாசங்களென்கிற விகாரபரம்பரையானது (சரீரம் முதலிய) விகாரமடையும் வஸ்துவுக்கெல்லாம் வந்தே தீருமென்று தெரிந்தபின்பு அதுவிஷயத்தில் ஏன் சோகிக்கிறாய்?

அவ்யக்தாதீ³நி பூ⁴தாநி வ்யக்தமத்⁴யாநி பா⁴ரத|
அவ்யக்தநித⁴நாந்யேவ தத்ர கா பரிதே³வநா|| உஅ||

(உஅ) (பானைமுதலிய திரவியங்கள் நசித்துவிட்டதென்றால் எவ்வளவு துக்கமுண்டாகுமோ, அவ்வளவுங்கூட சரீரம் நசித்தால் கிடையாது, ஏனெ

* அவ்யக்தனான=புலன்களுக்குப் புலப்படாத.

http://acharya.org

னில்! 'முதலில் மண்ணாயிருந்து இடையில் பானையாய் உருவப்பட்ட வஸ்து, மீண்டும் மண்ணாய்ப்போயிற்றே' என்று ஒருநிலையிலிருந்தது அதற்கு விரோதமான வேறொரு நிலையை அடைவதை நாம்நேரில் பார்க்கிறபடியால் அதைப்பற்றியாகிலும் சிறிதுசோகிக்கவிடமுண்டு) சரீரமோ, முதலில் இந்தவிதம் உண்டாயிற்றென்றும் இறந்தபொழுது இந்தவிதம் இறந்ததென்றுந் தெரிகிறதில்லை. இப்படி தெரியாமல் உண்டானது தெரியாமற் போச்சுதென்று இருக்கவேண்டியதான இந்த சரீரத்தின் அழிவைப்பற்றி சோகிக்க என்ன காரணமுண்டு?

(அ-கை.) இவ்வளவாக, சரீரமே ஆத்மாவென்று நினைத்தாலும் சோகிக்க நிமித்தமில்லையென்றுஅருளிச்செய்து, சரீரத்தைக்காட்டிலும்வேறுபட்டிருக்கிற ஆத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடியே அறிவது துர்லபமென்கிறார்.

ஆஶ்சர்யவத் பஶ்யதி கஶ்சிதேநம் ஆஶ்சர்யவத்வததி ததைவ சாந்ய: |
ஆஶ்சர்யவச்சைநமந்ய: ஶ்ருணோதி ஶ்ருத்வாப்யேநம் வேத ந சைவ கஶ்சித் || உகூ ||

(உகூ) லோகத்திலுள்ள ஸகல வஸ்துக்களிலும் வேறுபட்டு ஆச்சரியமாயிருக்கிற ஆத்மாவென்னும் வஸ்துவைப் பார்ப்பவனாவது, பார்த்துச் சொல்பவனாவது, சொன்னாலுங் கேட்பவனாவது, கேட்டாலும் நிச்சயங் கொள்ளுமவனாவது கிடையாது. அநந்தமான ஜீவராசிக்குள், தவத்தின் பெருமையால் பாவங்களை யொழித்தவன் எவனோ ஒருவனிருந்தாலிருக்கலாம். அதிலும் அதை உள்ளபடியே அறியுமவனோ மிகவும் துர்லபம்.

தேஹீ நித்யமவத்யோऽயம் தேஹே ஸர்வஸ்ய பாரத |
தஸ்மாத் ஸர்வாணி பூதாநி ந த்வம் ஶோசிதுமர்ஹஸி || ஙo ||

(ஙo) அர்ச்சுந! இந்த பீஷ்மாதிகளுக்காகமாத்திரம் உன்னைச் சோகிக்கவேண்டாமென்று சொல்லுகிறேனில்லை; பின்னை, தேவர் முதலான எந்தப் பிராணிவிஷயத்திலும் நீ சோகிக்கவேண்டாம். சரீரம் நானாவிதமாயிருந்தாலும், விகாரப்படுகையென்கிற ஸ்வபாவம் எல்லாவற்றிற்கும் ஒன்றேயாகையால் எந்த சரீரமும் நசிப்பதே; ஆனால் அதிலுள்ள எந்த ஆத்மாவுக்கும் நாசமென்பது கிடையாது.

ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய ந விகம்பிதுமர்ஹஸி |
தர்ம்யாத்தி யுத்தாச்ச்ரேயோऽந்யத் க்ஷத்ரியஸ்ய ந வித்யதே || ஙக ||

(ஙக) மேலும், யுத்தமென்பது பிராணிஹிம்ஸையாயிருந்தாலும், க்ஷத்ரியனுக்கு அநுஷ்டிக்கவேண்டிய கர்மங்களுக்குள், (நியாயமாய் கிடைத்த) யுத்தத்தைக்காட்டிலும் o சிரேஷ்டமான கர்மம் வேறொன்றுமில்லாமையா

---

o ஶௌர்யம் தேஜோ த்ருதிர்தாக்ஷ்யம் யுத்தே சாப்யபலாயநம் | தாநமீஶ்வரபாவஶ்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம் || என்று சௌரியம், தேஜஸ்ஸு, தைரியம், ஸாமர்த்தியம், யுத்தத்தினின்று மோடாமை, தாநம், ஈசுவரத்தன்மை இவையெல்லாம் க்ஷத்திரியனுக்கு ஸ்வபாவமான கருமங்களென்று மேலே சொல்லப் போகிறார.

http://acharya.org

லே, அதை (அக்நீஷோமீயாதி யாகம்போலே) மனம் சலியாமல் செய்யக் கடவாய். [அக்நீஷோமீயாதி யாகங்களில் $ பசுவை ஹிம்ஸித்தால் அதற்கு அந்தப்பசுரூபமான சரீரம் போய் திவ்யமான சரீரமும் சுவர்க்காதிபோக மும் கிடைப்பதாகச் ‡ சாஸ்த்ரம் சொல்லுகையாலே, (நோயைத் தீர்ப்பதற் காக வைத்தியன் செய்யும் உபத்திரவமே ரக்ஷிப்பாகுவதுபோல்) அந்த பசு ஹிம்ஸையானது ரக்ஷிப்பாமேதவிர வேறில்லை. அப்படியே யுத்தத்தில் மறி ப்பவருக்கும், விலக்ஷணமான சரீரமும் ஸ்வர்க்காதிபோகமும் கிடைக்கிற தாகையாலே, யுத்தத்தில் பிராணிஹிம்ஸை செய்வதும் க்ஷத்ரியருக்கு (யா காதிகள்போலே) தருமமாவதுபற்றி அவசியம் செய்யத்தக்கதாம்.]

யத்ருச்சயா சோபபந்நம் ஸ்வர்க்கத்வாரமபாவ்ருதம்|
ஸுகிந: க்ஷத்ரியா: பார்த்த லபந்தே யுத்தமீத்ருசம்|| ௩௨||

(௩௨) பார்த்த! ஒப்பில்லாத சுகமாயிருக்கும் ஸ்வர்க்கத்தில் புகுவதற்குத் தாராளமான வழிபோல், யத்தனமின்றிக் கிடைத்திருக்கிற இந்த யுத்தம் எல்லாருக்கும் கிடைக்கத்தக்கதோ? ஈடில்லாத சுகத்தை அநு பவிக்கும்படியான புண்ணியகருமஞ்செய்த க்ஷத்திரியருக்கன்றோ கிடை க்கும்?

அத சேத்த்வமிமம் தர்ம்யம் ஸங்க்ராமம் ந கரிஷ்யஸி|
தத: ஸ்வதர்மம் கீர்த்திம் ச ஹித்வா பாபமவாப்ஸ்யஸி||௩௩||

(௩௩) க்ஷத்ரியனுக்குத் தருமமாகச் சொல்லப்பட்ட இந்த யுத்தத் தை அஞானத்தாலே செய்யாதொழிவாயாகில், ஆரம்பித்த கருமத்தைச் செ ய்யாமையாலே ஈடில்லாத சுகமும் கீர்த்தியுமிழந்து ஒப்பில்லாத பாவத்து க்கும் ஆளாகுவாய்.

அகீர்த்திம் சாபி பூதாநி கதயிஷ்யந்தி தேவ்யயாம்|
ஸம்பாவிதஸ்ய சாகீர்த்தி: மரணாததிரிச்யதே|| ௩௪||

(௩௪) அதுமாத்திரமில்லை. அர்ச்சுநன் யுத்தம் செய்யத் தொடங்கி, கையில் திறமையில்லாமல் நடுவில் ஓடிப்போய்விட்டானென்று ஒன்றுக்கு முதவாதப்பிராணியும் ஏசும்படி எக்காலத்திலும் எத்தேசத்திலும் அழியாத அபகீர்த்தி விளைந்துவிடும். ஆனாலதிலென்ன குறையென்பாயோ? ஸகல யோக்யதையு முண்டாயிருக்கும்பொழுது விபரீதமான அபகீர்த்தியைப்ப டைத்து உயிருடன் வாழ்வதைவிடப் பிராணனை விடுவது மிகவும் உத்தமம்.

(அ-கை.) கிருஷ்ண! பந்துக்களிடத்தில் பாசத்தாலும் கருணையாலும் யுத்தத்தினின்றும் நீங்குகிறேனேயல்லதுவேறில்லையே; அப்படியிருக்க, சூர

$ பசுவென்றால் - யாகத்தில் ஹிம்ஸை பண்ணப்படும் ஆடுமுதலியது.

‡ நவா உ ஏதந்ம்ரியஸே நரிஷ்யஸி தேவாம் இதேஷி பதிபி: ஸுகேபி:| யத்ர யந்தி ஸுக்ருதோ நாபி துஷ்க்ருத: தத்ர த்வா தேவ: ஸவிதா ததாது என்று ஸ்ருதி.

http://acharya.org

னுனெனக்கு அபகீர்த்தி ஏனுண்டாகுமென்கிற சங்கைக்கு உத்தரம் அருளிச்செய்கிருர்.

𑌭𑌯𑌾𑌦𑍍𑌰𑌣𑌾𑌦𑍁𑌪𑌰𑌤𑌂 𑌮𑌂𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌮𑌹𑌾𑌰𑌥𑌾𑌃।
𑌯𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌤𑍍𑌵𑌂 𑌬𑌹𑍁𑌮𑌤𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑌾𑌸𑍍𑌯𑌸𑌿 𑌲𑌾𑌘𑌵𑌮𑍍॥ ௩௫ ॥

(௩௫) சூரனுன சத்துரு, பயத்தாலல்லது (பந்து ஸ்நேகம் முதலிய) மற்றெந்த காரணத்தாலும் யுத்தத்தினின்றும் ஓடமாட்டானென்பது லோகப்பிரஸித்தம். ஆகையால் உன்னைச் சூரனென்றும் வைரியென்றும்இதுவரையில் மதித்திருந்த கர்ணன், துரியோதனன் முதலிய மஹாரதர்கள், நீ இப்பொழுது பயந்தோடியதாக நினைப்பர்களேயல்லது வேறில்லை.

𑌅𑌵𑌾𑌚𑍍𑌯𑌵𑌾𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 𑌬𑌹𑍂𑌨𑍍𑌵𑌦𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌵𑌾𑌹𑌿𑌤𑌾𑌃।
𑌨𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌵 𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌤𑌤𑍋 𑌦𑍁𑌃𑌖𑌤𑌰𑌂 𑌨𑍁 𑌕𑌿𑌮𑍍॥ ௩௬ ॥

(௩௬) மேலும், 'இந்த அர்ச்சுநன் இதராளிடத்தில்போலச் சூரர்களான நம்முன்னே ஒருக்ஷணந்தான் நிற்பதற்கு வல்லவனோ' வென்று சத்துருக்களான இந்த துரியோதனுதிகள் உன் வீரியத்தை நிந்திப்பதோடு பின்னும் சொல்லத்தகாத சில சொற்களையும் பிதற்றப்போகிருர்கள்; அப்பொழுது இந்த வார்த்தையைக் கேட்டுக்கொண்டு "நாம் ஏன் பிராணனோடிருக்கிறோம்,, என்று நீயே விசனப்படப்போகிருய் இனி அதைக்காட்டிலும் துக்கமும் உண்டோ?

(அ-கை.) ஆகையால், சூரனுக்கு எதிரிகளைக் கொன்றாலும், அவரால் தான் கொல்லப்பட்டாலும் இரண்டும் நன்மைதானென்கிருர்.

𑌹𑌤𑍋 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌜𑌿𑌤𑍍𑌵𑌾 𑌵𑌾 𑌭𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 𑌮𑌹𑍀𑌮𑍍।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌕𑍃𑌤𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃॥ ௩௭ ॥

(௩௭) தருமயுத்தத்தில் பகைவரால் கொல்லப்பட்டால் பரலோகத்தில் உத்தமமான க்ஷேமம் உண்டாகிறது; அவர்களையே ஜயித்துவிட்டால் இந்தலோகத்தில் நிஷ்கண்டகமாக ராஜ்யசுகம் கிடைக்கிறது; ஆகையால் 'பலனில் அபேக்ஷையில்லாமல் யுத்தம்செய்தால் அது மோக்ஷஸாதநமாம்' என்கிற நிச்சயத்தோடு சடக்கென வெழுந்திரு; உத்தமஸந்ததியான குந்தியின்வயிற்றில் பிறந்த உனக்கு இதுதான் தகுதி.

(அ-கை.) மோக்ஷத்தில் இச்சையுடையவன் யுத்தம் செய்யவேண்டிய முறையை அருளிச்செய்கிருர்.

𑌸𑍁𑌖𑌦𑍁𑌃𑌖𑍇 𑌸𑌮𑍇 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌲𑌾𑌭𑌾𑌲𑌾𑌭𑍌 𑌜𑌯𑌾𑌜𑌯𑍌।
𑌤𑌤𑍋 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌯𑍁𑌜𑍍𑌯𑌸𑍍𑌵 𑌨𑍈𑌵𑌂 𑌪𑌾𑌪𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿॥ ௩௮ ॥

(௩௮) இப்படி ஆத்மாவானது தேஹஸ்வபாவத்தோடு சேராமல்வேறுபட்டு நித்தியமாயிருப்பது என்றறிந்து, யுத்தத்தில் உன்னால் ஒழிக்கப்போகாமல் (பாணமுதலியவற்ருல்) வருகிற சுகதுக்கங்களிலும் லாப அலாபங்களிலும் ஜய அபஜயங்களிலும் மனம் சலியாமல், சுவர்க்கம் முதலியபலங்களில் நசையின்றிக் கேவலம் இது நாம் செய்யவேண்டிய கடமையென்று

http://acharya.org

யுத்தத்தை ஆரம்பித்துச்செய்வாயாகில், ஸம்ஸாரமென்கிற கட்டுக்கடங்காமல் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தை அடைந்து வாழுவாய்.

(அ-கை.) இப்படி ஆத்மாவின் யதார்த்த ஞானத்தை உபதேசித்து, அத்துடன்கூடி மோக்ஷஸாதகமாகிற கர்மயோகத்தைச் சொல்லத் தொடங்குகிறார்.

ஏஷா தே(அ)பிஹிதா ஸாங்க்யே புத்திர்யோகே* த்விமாம் ஶ்ருணு।
புத்த்யா யுக்தோ யயா பார்த்த கர்மபந்தம் ப்ரஹாஸ்யஸி॥ ௩௯॥

(௩௯) அஹோ பார்த்த! இவ்வளவாக (நத்வேவாஹம் முதல் தஸ்மாத்ஸர்வாணி பூதானி ந த்வம் ஶோசிதுமர்ஹஸி என்கிறவரையில்) அவசியம் அறியவேண்டியதான ஆத்மஸ்வரூபத்தை, உள்ளபடியே அறியும் விஷயத்தில் உனக்கு வேண்டிய புத்தி சொல்லப்பட்டது. இனி மோக்ஷத்திற்கு ஸாதகமான கர்மானுஷ்டானத்துக்கு எந்த புத்தியோகம் வேணுமோ அதுவிஷயத்தில் சொல்லவேண்டிய புத்தி சொல்லுகிறேன், இதைக்கேட்டுத் தரித்தாயாகில் பிறகு உனக்கு கருமத்தால் வந்த பிணை நீங்கிவிட்டதென்றறி.

(அ-கை.) சொல்லப்போகிற புத்தியுடன் கூடிச்செய்யுங் கருமத்தின் மஹிமை சொல்லுகிறார்.

நேஹாபிக்ரமநாஶோ(அ)ஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே।
ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்॥ ௪௦॥

(௪௦) இந்த கருமயோகமானது, ஆரம்பித்து நடுவில் விடப்பட்டாலும் அத்தால் ✝ இது பயன்படாமறபோவதில்லை, வேறுவிதமான கெடுதியை யுண்டாக்குவதுமில்லை. சிறிதுபாகம் அநுஷ்டிக்கப்பட்டாலும் இது மஹத்தான ஸம்ஸாரபயத்தினின்றும் காப்பாற்றும். [இதரமான (லௌகிக வைதிக) கருமங்கள் இடையில் பங்கப்பட்டதாகில் பலிப்பதுமில்லை, விரோதமான பலத்தையும் உண்டாக்கும். இதற்கு அவ்விரண்டு மில்லையெனறு தாத்பரியம்.]

(அ-கை.) காம்ய கர்மவிஷயமான புத்தியைக்காட்டிலும் மோக்ஷஸாதகமானகர்மத்திறகுவேண்டிய புத்தியின் விசேஷத்தைஅருளிச்செய்கிறார்.

வ்யவஸாயாத்மிகா புத்திரேகேஹ குருநந்தன।
பஹுஶாகா ஹ்யநந்தாஶ்ச புத்தயோ(அ)வ்யவஸாயிநாம்॥ ௪௧॥

---

* இந்த யோக சப்தம், ஆத்மஸ்வரூபததின் உண்மையான ஞானத்தோடு கூடிக்கொண்டு மோக்ஷஸாதநமாகிற கருமத்துக்கு வேண்டியதாக இனி சொல்லப்போகிறதான புத்தியோகத்தையே சொல்லுகிறது. ௰-௰ ததாமி புத்தியோகம் தம் என்று இனிசொல்லப்போகிறானன்றோ?

✝ இவ்வர்த்தம் பார்த்த நைவேஹ நாமுத்ர விநாஶஸ்தஸ்ய வித்யதே என்று மேலே விவரிக்கப்படுகிறது.

http://acharya.org

(சக) அஹோ குருநந்தந! மோக்ஷார்த்தி செய்யவேண்டிய சாஸ்த்ரோக்தமான ஸகலகர்மங்களுக்கும்வேண்டியது (வியவஸாயரூபமான) † புத்தி ஒன்றுதான். வியவஸாயமாவது நிச்சயம். காமியார்த்திசெய்யுங்கருமங்களுக்கோ (வியவஸாயமென்கிற நிச்சயமல்லாததான) ‡ புத்தி பலவாயிருக்கும். அதேனென்னில்:—முதலிற்சொன்ன மோக்ஷார்த்தியானவன் மோக்ஷமென்கிற ஓரேபலத்தைநாடியவனுகையாலும், (சாஸ்திரமும் அந்த ஒருபலத்தைக்குறித்தே ஸகல கருமங்களையும் விதிப்பதுபற்றி) சாஸ்திரார்த்தம் ஒன்றுகையாலும் (*) ஒன்றேயாம். இந்த காமார்த்திக்கோ, புத்திரன், பசு அன்னம் என்று பலம் பலவாயிருக்கையாலே புத்தியும் பலவாயிருக்கும். அதிலும் தர்சபூர்ண மாஸாதி கருமங்கள், (ஒருபலத்துக்காக விதிக்கப்பட்டவையாயினும் அவற்றுள் ஆயுஸ்முதலிய அவாந்தரபலங்களையும் அபேக்ஷிக்க வேண்டுகையாலே அதற்குத்தக்கபடி) ஒவ்வொன்றும் பல கிளைகளுடன் கூடியதாயிருக்கும். [ஆக இதனால் நித்யநைமித்திககருமங்களில் பிரதாநமாயும் அப்பிரதாநமாயும் கூறப்படுகிற எல்லா பலங்களிலும் ஆசையற்று, மோக்ஷமொன்றையே உத்தேசித்து ஸகல கருமங்களையும் அநுஷ்டிக்கவேண்டுமென்றும், தன் வருணத்துக்குவகுத்த காமியகருமங்களையும் அப்படியே நித்ய நைமித்திக கருமங்களோடு ஒன்றுபடுத்திச் சக்திக்குத்தக்கபடி அநுஷ்டிக்க வேண்டுமென்று மாயிற்று.]

(அ-கை.) காம்யகர்மாதிகாரிகளை நிந்திக்கிறார்.

𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌿𑌤𑌾𑌂 𑌵𑌾𑌚𑌂 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 |
𑌵𑍇𑌦𑌵𑌾𑌦𑌰𑌤𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 || ௪௨ ||
𑌕𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌪𑌰𑌾 𑌜𑌨𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌪𑍍𑌰𑌦𑌾𑌮𑍍 |
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌬𑌹𑍁𑌲𑌾𑌂 𑌭𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌗𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 || ௪௩ ||
𑌭𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑌯𑌾𑌪𑌹𑍃𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 |
𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌮𑌾𑌧𑍌 𑌨 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 || ௪௪ ||

---

† இதுவும் ஆத்மாவினுடைய யதார்த்தக்ஞாநத்தோடு அதாவது-'ஆத்மா, தேஹாதிவிலக்ஷணன் நித்யன்' இத்யாதியான முற்கூறிய ஞாநத்தோடு கூடியிருக்கவேண்டும்.

‡ இதற்கு ஆத்மாவின் யதார்த்தக்ஞாநம் வேண்டுவதில்லை; கேவலம் தேஹத்தைக்காட்டிலும் வேறான ஆத்மா உண்டு' என்கிற அறிவுமாத்திரம், போதும்; அவ்வளவுமாத்திரத்தில் சுவர்க்கம்முதலிய பலனைக்கோருகையும், அதின் ஸாதநத்தை அநுஷ்டிக்கையும், அந்த பலத்தை அநுபவிக்கையும் விரோதமின்றி ஸம்பவிக்கலாமிறே?

(*) என்போலென்னில்:—ஆக்நேயம் முதலிய ஆறுயாகங்களும், (பிரயாஜம் அநுயாஜம்முதலியஅங்கஸஹிதமாய் ஸ்வர்க்கமென்கிற ஓரேபலத்துக்கு ஸாதநமானமைகொண்டு) சாஸ்திரார்த்த மொன்றுகையால் எப்படி தத்விஷயமான புத்தியும் ஒன்றாயிற்றே! அப்படியே யிங்கு மோக்ஷமென்கிற ஓரேபலத்தை உத்தேசித்தமைகொண்டு சாஸ்திரார்த்த மொன்றுகையால் ஸகல கர்மங்களுக்கும் வேண்டிய புத்தியும் ஒன்றேயாம்.

http://acharya.org

(௪உ-௪௩-௪௪)சுவர்க்காதிபோகங்களில் மிக்க வாஸையுடையராய், அந்த சுவர்க்காதிகளைக்காட்டிலும் வேறு புருஷார்த்தம் கிடையாதென்று வாதிக்கின்ற சில அறிவீனர்கள், வேதத்தில் மேலெழப் பார்க்கும்பொழுது ரமணீயமாய்த்தோற்றுகிற ஸ்வர்காதிபலங்களைச்சொல்லும் சில வாக்கியங்களைப் பற்றிக்கொண்டு, அவை போகைசுவரியங்களைப்பற்றிச் சொல்லுமவையென்றும், தத்வஞானமில்லாமலே கேவலம் கிரியாவிசேஷங்களை மாத்திரம் அதிகமாயுடையனவென்றும்,சுவர்க்காதி பலங்களைக்கொடுத்து முடிவில் புநர்ஜந்ம கரும மென்கிற பலத்தைத் தருமவையென்றும்; இப்படி அந்த போகத்திலுண்டான ஆசையினால் வீண்வாதம் செய்கிறார்கள். போகைசுவரியங்களைச்சொல்லும் அந்த வாக்கியத்தால் அவர்களுடைய ஞானம் அபஹரிக்கப்பட்டமையால், அவர்மனதில் ஒருபொழுதும் முற்கூறிய விவசாயரூப நிச்சயம் உண்டாகவேமாட்டாது. ஆகையால் அவர்களைப்போல் மோக்ஷார்த்தியானவன் ஒருபொழுதும் காம்யகருமங்களில் சிறிதும் மனம் வைக்கலாகாது.

(அ-கை.) மேற்சொல்லியபடி புநர்ஜந்மாதிகளைக்கொடுக்கின்ற அற்ப பலத்துக்குஸாதகமாகக் காம்யகருமங்களும் சில உண்டென்று வேதத்தில் சொல்லுகிறதாகத் தெரிகிறபடியால், ஜீவன் உஜ்ஜீவிக்கிற விஷயத்தில் ஆயிரம் மாதாபிதாக்களுக்கு அதிகமாக நன்மைசெய்வதான வேதம், அவைகளை ஏன் சொல்லுகிறது? அப்படி வேதம் விதித்தபின்பு அக்கருமங்களைத்தான் எப்படி த்யாஜ்யமாகச் சொல்லலாமென்னில் சொல்லுகிறார்.

த்ரைகுண்யவிஷயா வேதா நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந।
நிர்த்வந்த்வோ நித்யஸத்த்வஸ்தோ நிர்யோகக்ஷேம ஆத்மவாந்॥ ௪௫॥
யாவாநர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே।
தாவாந்ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:॥௪௬॥

(௪௫-௪௬) ஸாத்விகர்-ராஜஸர்-தாமஸர் என்கிற மூன்றுவிதமான புருஷர்கள் உலகத்திலுளர்; அவரவர் குணத்துக்குத்தக்கபடி இதமாக ஸ்வர்க்க முதலிய இந்த அற்பபலன்களை வேதம் தெரிவிக்கிறது. அப்படி தெரிவிக்காமற்போனால் இவர்கள் ரஜோகுண தமோகுணங்களுக்கு வசப்பட்டவராகையாலே ஸாத்விகமான மோக்ஷபலத்தைக் கண்ணெடுத்தும் பாராமல், தங்களுக்கிஷ்டமான ஸ்வர்க்காதிபலத்திற்கு உபாயம் இதில் ஏதேனும் உண்டோவென்று பார்த்து இதில் காணுவிடில் அந்தபோகத்தில் உண்டான ஊற்றத்தினால் உபாயமாகாதவைகளையெல்லாம் உபாயமாகப்பற்றி அழிந்துபோவர்கள். ஆனதுபற்றியே வேதம் த்ரிகுணவிஷயமாயுள்ளது. நீயோ அதில் கட்டுப்படாமல் இப்பொழுது நீ இருக்கிற ஸத்வகுணத்தையே வளர்த்துவந்து ஸம்ஸாரஸ்வபாவத்தில் தட்டாமலிருக்கக்கடவாய்; எப்படியெனில்-ஆத்மப்ராப்திக்கு உபாய மெதுவோ அதற்குப் புறம்பாகவருமதையும் வந்திருப்பதையும் விட்டு, கேவலம் ஆத்மஸ்வரூபத்தை மாத்திரம் தேடுவதில் முயன்றவனாயிரு; இப்படியிருக்கிற உனக்கு ரஜஸ்ஸு,தமஸ்ஸு என்கிற குணங்கள் கெட்டு ஸத்வம் ஒன்றே தலையெடுத்திருக்கும்; வேதத்தில் எல்லாம் சொல்லியிருந்ததேயாகிலும் யாவும் யாவருக்கும் வேண்டியதில்லை; ஸகலருக்கும்

http://acharya.org

உபயோகமான ஒருகுளத்தில் தாகமெடுத்தவனுக்குத் தண்ணீர் ஒன்றுமாத்திரம் வேண்டுமோ மற்றதும் வேண்டுமோ? அதுபோல மோக்ஷகாமனுக்கு மோக்ஷ உபாயத்தைத் தவிர மற்றொன்றும் வேண்டுவதில்லை.

(அ-கை.) ஆகையால் ஸாத்விகனான மோக்ஷார்த்திக்கு இவ்வளவுதான் வேண்டியதென்கிறார்.

𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇 𑌮𑌾 𑌫𑌲𑍇𑌷𑍁 𑌕𑌦𑌾𑌚𑌨 ॥
𑌮𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌹𑍇𑌤𑍁𑌰𑍍𑌭𑍂𑌰𑍍𑌮𑌾 𑌤𑍇 𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ॥ ௪௭ ॥

(௪௭) ஏதேனும் ஒருபலத்தைத் தருவதாய்ச் சொல்லப்படுகிற (நித்ய நைமித்திக காம்ய) கருமங்களைச்செய்வதில்மாத்திரம் உனக்கு அதிகாரமேயல்லது அந்த பலத்தைக்கோருவதிலில்லை. ஏனெனில்! பலத்தில் ஆசையுண்டாகில் அது ஸம்ஸாரத்தை உண்டாக்கும்; ஆசையில்லையாகில் அது எனது ஆராதநத்தில் சேருமாதலால் மோக்ஷத்தை உண்டாக்கும். கருமத்திலும் அதின்பலத்திலும் ‘நான் செய்தே’னென்கிற (கர்த்ருத்வ) புத்தியும் கூடாது. ஆனால் (யுத்தம் செய்யமாட்டேனென்று நீ இப்பொழுதுசொன்னது போல) கருமத்தைமாத்திரம்ஒருபொழுதும் கைவிடலாகாது.

(அ-கை.) இதையே பிரகாசப்படுத்துகிறார்.

𑌯𑍋𑌗𑌸𑍍𑌥𑌃 𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍋𑌃 𑌸𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑌤𑍍𑌵𑌂 𑌯𑍋𑌗 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௪௮ ॥

(௪௮) இராஜ்யம், பந்து முதலியவற்றில் பற்றையொழித்து யோக நிஷ்டனாய், அதாவது-யுத்தாதிகளில் ஜயம் முதலியது கிடைத்தாலுங் கிடையாவிட்டாலும் அதனால் மனம் சலியாமல் ஒரேமனதாயிருந்து யுத்தாதிகருமங்களைச் செய்யக்கடவாய். (இங்கே யோகமாவது - ஸித்தி அஸித்திகளிரண்டிலும் மனந்தாழாமை.)

(அ-கை.) ஏனிப்படி இதைப் பலகாலும் அருளிச்செய்கிறதென்றால்,

𑌦𑍂𑌰𑍇𑌣 𑌹𑍍𑌯𑌵𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ।
𑌬𑍁𑌦𑍍𑌧𑍌 𑌶𑌰𑌣𑌮𑌨𑍍𑌵𑌿𑌚𑍍𑌛 𑌕𑍃𑌪𑌣𑌾𑌃 𑌫𑌲𑌹𑍇𑌤𑌵𑌃 ॥ ௪௯ ॥

(௪௯) மேற்சொன்ன † புத்தியோகத்துடன் கூடிச்செய்கிற கருமத்தைத்தவிர மற்ற கர்மமெல்லாம் மிகவும் இழிவானது; ஏனெனில்! இது பரம கல்யாணமான மோக்ஷத்தைத்தருமது: மற்றது நித்தியதுக்கமான ஸம்ஸாரத்தை. ஆகையால் மேற்சொன்ன புத்தியை விடாமலிரு. பலனில் ஸங்கத்தோடு கருமம் செய்பவர்கள் ஸம்ஸாரத்தில் கட்டுண்பர்கள்.

𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌜𑌹𑌾𑌤𑍀𑌹 𑌉𑌭𑍇 𑌸𑍁𑌕𑍃𑌤𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍋𑌗𑌾𑌯 𑌯𑍁𑌜𑍍𑌯𑌸𑍍𑌵 𑌯𑍋𑌗𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌕𑍌𑌶𑌲𑌮𑍍 ॥ ௫௦ ॥

(௫௦) புத்தியோகத்துடன் கூடியவனே கர்மத்தைச் செய்தவனைக் கொண்டு, அநாதிகாலமாய் அளவில்லாமல் ஸம்பாதித்த ஸம்ஸாரஹேதுவா

† பிரதானபலத்திலும் இடையிலுண்டாகும்பலமான ஸித்தி அஸித்திகளிலும் மனம் வையாமையாகிற புத்தியோகத்துடன்.

http://acharya.org

ன புண்ணியபாபங்க ளிரண்டையும் ஒழிக்கிறான். ஆகையால் நாம் சொன்ன புத்தியோகத்தையடைய ஸித்தப்படு. கருமஞ்செய்வதில் இதுதான் விசேஷஸாமர்த்தியம். [மஹாஸமர்த்தனாலே ஸாதிக்கத்தக்கதென்று பொருள்.]

கர்மஜம் பு3த்3தி4யுக்தா ஹி ப2லம் த்யக்த்வா மநீஷிண:|
ஜந்மப3ந்த4விநிர்முக்தா: பத3ம் க3ச்ச2ந்த்யநாமயம்|| ௫௧||

(௫௧) புத்தியோகத்தோடு கூடியவர்கள் பலாபேக்ஷையின்றிக் கருமத்தைமாத்திரம் செய்துவந்து, அதனால் ஜந்மமென்கிற கட்டைவிட்டுநீங்கி ஆரோக்கியமான பதத்தை (மோக்ஷத்தை) அடைகிறார்கள். இது ஸகல உபநிஷத்துகளிலும் பிரஸித்தம்.

யதா3 தே மோஹகலிலம் பு3த்3தி4ர்வ்யதிதரிஷ்யதி|
ததா3 க3ந்தாஸி நிர்வேத3ம் ஶ்ரோதவ்யஸ்ய ஶ்ருதஸ்ய ச|| ௫௨||

(௫௨) நாம் கீழ்ச்சொன்னபடி கருமத்தில் நின்று பாபங்களைத் தொலைத்து, உன்புத்தியானது அற்பபலங்களில் கால்தாழப் பண்ணும் மோஹமென்னுங் கலக்கத்தை எப்போகடக்குமோ அப்பொழுது, நாம் முன்னே தியாஜ்யமாகச்சொன்னதும் இனிசொல்லப்போகிறதுமான பலம் முதலியவற்றில் உனக்கே வைராக்யம் உண்டாகும்.

(அ-கை) ஆத்மாவை உள்ளபடி அறிந்து, மோக்ஷத்தைத் தவிர மற்றதை நாடாமையாகிற புத்திவிசேஷத்துடன் கூடிக் கருமத்தை அநுஷ்டித்தால் யோகம் ஸித்திக்கு மென்கிறார். [யோகம் - ஆத்மதரிசநம்.]

ஶ்ருதிவிப்ரதிபந்நா தே யதா3 ஸ்தா2ஸ்யதி நிஶ்சலா|
ஸமாதா4வசலா பு3த்3தி4ஸ்ததா3 யோக3மவாப்ஸ்யஸி|| ௫௩||

(௫௩) அர்ச்சுந! நம்மிடத்தில் கேட்டபின்பு, ஆத்மாவானது ஸகல பதார்த்தங்களிலும் வேறாய் நித்ய நிரதிசய ஸூக்ஷ்மமாய் இருக்கிறதென்று தெளிந்து (எப்பொழுதும் ஒரே ரீதியாயிருக்கிற) உன்புத்தியானது, (பற்றின்றிச்செய்த கருமாநுஷ்டாநத்தால் நிர்மலமான) மனதில் எப்பொழுது நிலைக்குமோ அப்பொழுதுதான் யோகத்தை அடைவாய். [என்றால் சாஸ்திரத்தால் பிறந்தஆத்மஞாநத்துடன்செய்யுங் கருமயோகமானது (ஸ்திதப்பிரக்ஞதை என்கிற) ஞாநநிஷ்டையை உண்டாக்கும்; அது (யோகமென்னும்) ஆத்மதர்சநத்தை உண்டாக்குமென்றதாயிற்று.]

(அ-கை.) இவ்வாறு கண்ணன் அருளிச்செய்ய அர்ச்சுநன், கர்மயோகத்தால் ஸாதிக்கவேண்டியதாயும் யோகத்துக்கு ஸாதகமாயுமிருக்கிற ஸ்திதப்பிரக்ஞதை என்னும் ஞானநிஷ்டையின் ஸ்வரூபத்தையும், அந்த நிஷ்டையுள்ளவன் செய்யும் அநுஷ்டாநத்தின்விதத்தையுங் கேட்கிறான்.

அர்ஜுந உவாச|| ஸ்தி2தப்ரஜ்ஞஸ்ய கா பா4ஷா ஸமாதி4ஸ்த2ஸ்ய கேஶவ|
ஸ்தி2ததீ4: கிம் ப்ரபா4ஷேத கிமாஸீத வ்ரஜேத கிம்|| ௫௪||

(௫௪) கிருஷ்ண! ஸ்திதப்பிரக்ஞனுடைய ஸ்வரூபமெப்படிப்பட்டது? ஸமாதிநிஷ்டனான அவன் பேசுவதென்ன? நடப்பதெப்படி? எவ்வித்த் ஆஸநத்திலிருப்பான்? அதை அருளிச்செய்யவேண்டும்.

ந

http://acharya.org

(அ-கை) வருத்தியை (அதாவது நடவடிக்கையைச்) சொன்னபோதே ஸ்வரூபமும் சொன்னதாகுமென்று வருத்தியை அருளிச்செய்கிறார்.

ஸ்ரீபகவாநுவாச॥ ப்ரஜஹாதி யதா காமாந் ஸர்வாந் பார்த மநோகதாந்। ஆத்மந்யேவாத்மநா துஷ்ட: ஸ்திதப்ரஜ்ஞஸ்ததோச்யதே॥ருரு॥

(ருரு) கேளாய் பார்த்தனே! ஆத்மா ஒன்றையே பற்றிக்கொண்டு ஸந்துஷ்டனாய், அதனால் அதற்குப் புறம்பாயுள்ள ஸகலமான காமங்களையும் எப்பொழுது வாஸனையோடே விடுகிறானோ, அப்பொழுது இவனை ஸ்திதப்ரக்ஞனென்கிறது இதுதான் ஞாநநிஷ்டையின் எல்லையான நான்காம் அவஸ்தை. [அவஸ்தை=நிலைமை.]

(அ-கை) இப்படி ஞாநநிஷ்டையின் நான்காம் அவஸ்தையை அருளிச்செய்து, அதற்கு முந்திய § மூன்றும் அவஸ்தையை இதில் அருளிச்செய்கிறார்.

து:கேஷ்வநுத்விக்நமநா: ஸுகேஷு விகதஸ்ப்ருஹ:।
வீதராகபயக்ரோத: ஸ்திததீர்முநிருச்யதே॥ருசு॥

(ருசு) (தனக்குப் பிரியமானதொன்று தவறியபோதல் முதலிய) துக்க ஹேதுக்களுண்டானபோது துக்கிக்காமலும் சுகஹேதுவான அவை நேர்ந்தபோது அவற்றிலாசைவையாமலும் † ராகம், * பயம், ‡ கோபம் இவைகளற்று ஆத்மாவைச் சிந்தித்துக்கொண்டேயிருப்பவன், ஸ்திதப்ரக்ஞன் என்னப்படுவான் [இந்த அவஸ்தை நான்காம் அவஸ்தையோடு ஒத்திருந்தாலும் நெருப்பிலபூத்த நீறுபோல இதில் விஷய வாஸனை மாத்திரமிருக்கும், இதுவுமில்லை அதில் என்பது விசேஷம்.]

(அ-கை) அதற்கும் முந்திய $ இரண்டாவது அவஸ்தையை அருளிச்செய்கிறார்.

ய: ஸர்வத்ராநபிஸ்நேஹஸ் தத்தத்ப்ராப்ய ஸுபாஸுபம்।
நாபிநந்ததி ந த்வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா॥ருஎ॥

(ருஎ) தனக்குப்பிரியமானது எது கிடைத்தாலும் அதில் அதிக ஸ்நேகம்வையாமல், சுப அசுபங்களை யடைந்தபோது ஸந்தோஷமும் துயரமுமில்லாமலிருப்பான் யாவன், அவன் ஸ்திதப்ரக்ஞனாகிறான்

§ மூன்றும் அவஸ்த்தை - இதற்கு ஏகேந்திரியாவஸ்தையென்று பெயர்.

† ராகம்=தான் அடையாத வஸ்துவிலுண்டான ஆசை

* பயமாவது=பிரியமானது தவறுகைக்கும், அப்பிரியமானது நேருகைக்கும் ஹேதுவைக்காண்பதால் வரும் துக்கம்.

‡ கோபமாவது=பிறருக்கு துக்கம் உண்டாக்குவதற்காகத் தன்மனதில் உண்டாகும் விகாரம்.

$ இதற்கு வ்யதிரேகாவஸ்தை யென்று பெயர்.

http://acharya.org

(அ-கை) அதற்கு முந்திய § முதல் அவஸ்தையை சொல்லுகிறது.

𑌯𑌦𑌾 𑌸𑌂𑌹𑌰𑌤𑍇 𑌚𑌾𑌯𑌂 𑌕𑍂𑌰𑍍𑌮𑍋𑌽𑌙𑍍𑌗𑌾𑌨𑍀𑌵 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥ ௫௮ ॥

(௫௮) இந்திரியங்கள் விஷயங்களைத்தேடி யோடும்பொழுது அவைகளைப் போகவொட்டாமல் (ஆமையானது தன் அவயவத்தை யிழுத்துக்கொள்ளுவதுபோல்) இழுத்து, மனதை ஆத்மாவில் ஸ்தாபிக்கிறான் யாவன், அவனும் ஸ்திதப்பிரக்ஞனாவான், [இந்நான்கு நிலைகளிலும் முந்திய நிலைக்குப் பிந்தியநிலை, காரணமென்றறிக]

(அ-கை.) இப்பொழுது ஞானநிஷ்டையை அடைவது துர்லபமென்றும், அதை அடைவதற்கு உபாயம் ஏதென்றும் அருளிச்செய்கிறார்.

𑌵𑌿𑌷𑌯𑌾 𑌵𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌨𑌿𑌰𑌾𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌿𑌨𑌃 ।
𑌰𑌸𑌵𑌰𑍍𑌜𑌂 𑌰𑌸𑍋𑌽𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥ ௫௯ ॥

(௫௯) இந்திரியங்களுக்கு ஆஹாரம் * சப்தாதிவிஷயங்கள், அந்தஆஹாரத்தை அவற்றிற்குக்கொடாமல் யாவனொருவன் பட்டினிபோடுகிறானோ அவனை அவ்விஷயங்கள் அணுகமாட்டா, ஆனால் அவற்றில்மாத்திரம் அவனுக்கு ருசி இருக்கும். அதுவும் (விஷயங்களைக்காட்டிலும் உத்கிருஷ்டனாய் அதிகசுகரூபனாயிருக்கிற) ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்ததால் அடியற்றுப்போம்.

𑌯𑌤𑌤𑍋 𑌹𑍍𑌯𑌪𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀𑌨𑌿 𑌹𑌰𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌭𑌂 𑌮𑌨𑌃 ॥ ௬0 ॥

(௬0) ஆத்மதரிசநமின்றி விஷயங்களில் ஆசைபற்றாது, அந்த ஆசையொழியாமல் ஆத்மதரிசநத்துக்கு யத்தநம்செய்தால் அவன் எத்தனைவித்துவானாகிலும் இந்திரியங்கள் பலமுள்ளவையாகையால் அவன் மனதை மேல்விழுந்து அபஹரித்துவிடும் [இப்படி இந்திரியஜயமும், ஆத்மதரிசநமும் "இதுண்டானால் அதுண்டாகும், அதுண்டானால் இதுண்டாகும் என்று" ஒன்றுக்கொன்று காரியமாயும் காரணமாயுமிருப்பதுபற்றி ஞானநிஷ்டைகிடைப்பது அரிது]

𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌯𑍁𑌕𑍍𑌤 𑌆𑌸𑍀𑌤 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃 ।
𑌵𑌶𑍇 𑌹𑌿 𑌯𑌸𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾 ॥ ௬௧ ॥

(௬௧) ஆனதுபற்றி விஷயத்தில் ஆசையினால் பாய்கின்ற இந்திரியங்களை அடக்கி (மனதுக்கு) க்ஷேமஸ்தானமான என்னிடத்தில் மனதை நிறுத்தி ஒரேமனதாயிருக்கக்கடவன் [மனது, என்வழியில்திரும்பினபொழுதே ஸகலபாபமும் தொலைகின்றமையால் விஷயத்தில் நசையற்று நிர்மலமாய

---

§ இதற்கு யதமாநஅவஸ்தையென்று பெயர்

* சப்தாதி விஷயங்களாவன - சப்தம், ரூபம், ரஸம், கந்தம், பரிசம், முதலியன.

http://acharya.org

விடுவதோடு இந்திரியங்களையும் தனக்கு வசப்படுத்திக் கொள்ளுகிறது. *]
இந்திரியங்கள வசமானால் (ஆத்மதரிசனத்துக்குப்) போதுமான வல்லமை மனதிலுண்டாகின்றமையால் ஆத்மஸாக்ஷாத்காரம் ஸித்தம்.

𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑍋 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌪𑍁𑌂𑌸𑌃 𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌤𑍇𑌷𑍂𑌪𑌜𑌾𑌯𑌤𑍇 |
𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍𑌸𑌞𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌕𑌾𑌮𑌃 𑌕𑌾𑌮𑌾𑌤𑍍𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇 ||௬௨||

𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌸𑌂𑌮𑍋𑌹𑌃 𑌸𑌂𑌮𑍋𑌹𑌾𑌤𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑌃 |
𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌭𑍍𑌰𑌂𑌶𑌾𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌶𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿 ||௬௩||

(௬௨-௬௩) விஷயத்தில் ஆசை அறுமனும் எனனிடத்தில மனதை நிறுத்தாமலுமிருக்கிற ஒருவன் இந்திரியங்களை அடக்கிவைத்தானாகிலும், அவனுக்கு அநாதியான பாபவாஸனை உண்டாகையாலே, விஷயசிந்தை ஒருக்காலும் அவனால்ஒழிக்கப்போகாது; அப்படி விஷயத்தில்சிந்தையுள்ளவனுக்கு ஸங்கமானதுமென்மேலும் விருத்தியாகிறது. அதினால் † காமம் விளைகின்றது; அதுகோபத்தை உண்டாக்கும்; எப்படியென்றால்:—ஆசைப்பட்டதுகிட்டாவிடில் கிட்டநிற்பவர்களைப்பார்த்து அவரால் தன் இஷ்டம் கெட்டுப்போனதாக நினைத்துக் கோபிக்கிறான். கோபத்தால் இது செய்யலாகும், இது செய்யலாகாதென்று தெரியாததான மோஹம் விளைகிறது. அதனால் தனக்குத் தோன்றியபடியெல்லாம் செய்கிறான். பிறகு இந்திரிய ஜயத்துக்கு முயற்சி செய்தோமென்பதையே மறந்துவிடுகிறான். மறப்புண்டானால் ஆத்மஞானத்துக்காக இவன்கொண்டிருந்தபுத்தி நசித்துப்போகிறது. புத்திநாசத்தாலே மீண்டும் ஸம்ஸாரத்தில் மூழ்கிக் கெட்டுப்போகிறான்.

𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑍈𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌶𑍍𑌚𑌰𑌨𑍍 |
𑌆𑌤𑍍𑌮𑌵𑌶𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑌿𑌧𑍇𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ||௬௪||

(௬௪) கீழ்ச்சொன்னபடியே மனதுக்கு சுபஸ்த்தாநமாயிருக்கிற ஸர்வேசுவரனான என்னிடத்தில் மனதை நிறுத்தியவன், ஸகலபாபங்களையும் தொலைக்கின்றமையால் ராகத்துவேஷங்களற்று இந்திரியங்கள் தனக்கு வசப்பட்டிருக்கிறபடியால் விஷயங்களைக் கணிசியாமலிருந்துகொண்டு சித்தஸ்வாதீனம்பொருந்தி நிர்மலாந்தஃகரணனாகிறான்.

𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑌾𑌂 𑌹𑌾𑌨𑌿𑌰𑌸𑍍𑌯𑍋𑌪𑌜𑌾𑌯𑌤𑍇 |
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌚𑍇𑌤𑌸𑍋 𑌹𑍍𑌯𑌾𑌶𑍁 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌪𑌰𑍍𑌯𑌵𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇 ||௬௫||

(௬௫) இந்த புருஷனுக்கு (ஆத்மக்ஞாநவிரோதியான) தோஷங்களெல்லாம் நீங்கி மனம் தெளிவுற்றதாகில் (ஆத்மஞாநம் நிலைக்கின்றமையால்) பிரகிருதிஸம்பந்தத்தால் வரும் துயரங்களெல்லாம் தன்னடையே நசிக்கின்றன.

---

* இவ்வர்த்தம் 𑌯𑌥𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌤𑌶𑌿𑌖𑌃 𑌕𑌕𑍍𑌷𑌂 𑌦𑌹𑌤𑌿 𑌸𑌾𑌨𑌿𑌲𑌃 | 𑌤𑌥𑌾 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 என்று சொல்லப்பட்டது.

† காமம் - ஆசைப்பட்டதை அநுபவிக்காமல் தீராத ஆசை.

http://acharya.org

நாஸ்தி புத்திரயுக்தஸ்ய ந சாயுக்தஸ்ய பாவநா।
ந சாபாவயத: ஶாந்திரஶாந்தஸ்ய குத: ஸுகம்॥௬௬॥

(௬௬) என்னிடத்தில் மனதை நிறுத்தாமல், தானே இந்திரியங்களை ஜயிப்பதாயிழிந்தவனுக்கு ஒருக்காலும் விலக்ஷணமான ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஸித்திக்கமாட்டாது. ஆனதுபற்றியே * ஆத்மபாவனையும் ஸம்பவிக்க இடமில்லை. ஆத்மபாவனை யில்லாவிடில் விஷயத்தில் நசையறுவதில்லை, அதில்லாதவனுக்கு நித்தியமானசுக மெப்படி கிடைக்கும்?

(அ-கை.) முன் சொன்னபடி இந்திரிய ஜயம்பண்ணாதவனுக்கு வரும் அநர்த்தத்தை மீண்டும் அருளிச்செய்கிறார்.

இந்த்ரியாணாம் ஹி சரதாம் யந்மநோऽநுவிதீயதே।
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர்நாவமிவாம்பஸி॥௬௭॥

(௬௭) விஷயங்களைத் தேடியோடும் இந்திரியங்களின்வழியே மனதைச் செலுத்துவானாகில் அம்மனதானது, ஆத்மாவை நாடியிருக்கின்ற புத்திவிசேஷத்தை இழுத்து, ஜலத்திற்செல்லும் ஓடத்தை எதிர்காற்றானது பலாத்காரமாய் அடித்துக்கொண்டோடுவதுபோல சப்தாதிவிஷயங்களில் மூட்டிவிடும்.

தஸ்மாத்யஸ்ய மஹாபாஹோ நிக்ருஹீதாநி ஸர்வஶ:।
இந்த்ரியாணீந்த்ரியார்தேப்யஸ்தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா॥௬௮॥

(௬௮) ஆகையால் கீழ்ச்சொன்னபடியே சுபஸ்தாநமான என்னிடத்தில் யாவனொருவன் மனதை நிறுத்தி இந்திரியங்களை விஷயத்திற்செல்லவொட்டாமல் சுத்தமாய் அடக்குகிறானோ, அவனுக்குத்தான் ஆத்மாவினிடத்தில் பிரக்ஞையானது நிலைத்திருக்கும்.

(அ-கை.) இப்படி இந்திரிய ஜயம்பெற்று மனந் தெளிந்தவனுக்கு உண்டாகும் ஸித்தியை அருளிச்செய்கிறார்.

யா நிஶா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ।
யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிஶா பஶ்யதோ முநே:॥௬௯॥

(௬௯) ஸகலப் பிராணிகளுக்கும் இரவாயிருக்கின்ற (அதாவது பிரகாசிக்காத) ஆத்மவிஷயமானபுத்தியில், இந்திரியங்களைஜயித்து உள்ளந்தெளிந்திருப்பவன் விழித்துக் கொண்டிருக்கிறான்; என்றால் எந்தவேளையும் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கிறான். அப்படியே ஸகலப்பிராணிகளுக்கும் பிரகாசமாயிருக்கின்ற சப்தாதி விஷயகமான புத்தியானது (ஆத்மஸாக்ஷாத்காரம் பண்ணுகிற) அம்முனிக்கு இரவுபோலிருக்கிறது (அதாவது பிரகாசிக்கிறதில்லை.)

* ஆத்மபாவனை-எந்தவேளையும் ஆத்மஸ்வரூபத்தையே நாடியிருத்தல்.

http://acharya.org

𑌆𑌪𑍂𑌰𑍍𑌯𑌮𑌾𑌣𑌮𑌚𑌲𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌮𑌾𑌪𑌃𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿𑌯𑌦𑍍𑌵𑌤𑍍।
𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌕𑌾𑌮𑌾𑌯𑌂𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿𑌨𑌕𑌾𑌮𑌕𑌾𑌮𑍀॥

(௭௦) தனக்குத்தானே நிறைந்து ஏகரூபமாயிருக்கிற ஸமுத்திரத்தில் ஆற்றுநீர் முதலியவை போய்விழுந்தாலும் விழாவிட்டாலும் அதினால் அந்த ஸமுத்திரமானது எப்படி சிறுத்தல் பெருத்தல் முதலிய விகாரத்தை அடைவதில்லையோ, அப்படிபோல இந்திரியங்களுக்கு சப்தாதிவிஷயங்கள் கிடைத்தாலும் கிடையாவிட்டாலும் அதைக்கணிசியாமல் யாவனொருவன் ஆத்மஸாக்ஷாத்காரத்தினால் திருப்தனாயிருக்கிறானோ, அவனுக்குத்தான் சாந்தியுண்டு; மற்றப்படிசப்தாதிகளில் சாபல்யமுள்ளவனுக்குக்கிடையாது.

𑌵𑌿𑌹𑌾𑌯𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌮𑌾𑌂𑌶𑍍𑌚𑌰𑌤𑌿𑌨𑌿𑌸𑍍𑌸𑍍𑌪𑍃𑌹𑌃।
𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋𑌨𑌿𑌰𑌹𑌂𑌕𑌾𑌰𑌃 𑌸𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿॥௭௧॥

(௭௧) யாவனொருவன் சப்தாதி விஷயங்களை யெல்லாம் துறந்து நசையற்று எனது என்கிற புத்தியும், தேஹமே ஆத்மாவென்கிற ப்ராந்தியும் விட்டிருக்கிறானோ, அவன் ஆத்மஸாக்ஷாத்காரத்தாலே சாந்தியடைகிறான்.

𑌏𑌷𑌾𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑍈𑌨𑌾𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌵𑌿𑌮𑍁𑌹𑍍𑌯𑌤𑌿।
𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇𑌽𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿॥௭௨॥

(௭௨) அர்ச்சுந! ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை யறிந்து அத்துடன் பலத்தில் அபேக்ஷையின்றிச் செய்யவேண்டியதாக இப்பொழுது நாம் சொன்ன கர்மநிஷ்டையானது, ஞாநயோகமென்கிற ஸ்திதப்பிரக்ஞதைக்குச் சாதநமாயுள்ளது; இது ப்ரம்மத்தை அடைவிக்குமது; புருஷன் அந்திமகாலத்தில் இந்த நிலையிலிருந்தானாகில் ஆநந்தமயமான ஆத்மாவை அடைகிறான். [ஆகஇப்படி ஆத்மாவின் உண்மையையும், அவ்வாத்மாவை அடைவதற்கு ஸாதநமான யுத்தமென்னுங் கருமத்தையும் அறியாது, சரீரமே ஆத்மாவென்றுபிரமித்து அதினால் யுத்தத்தினின்றுங்கையொழிந்த அர்ச்சுநனுக்குக் கண்ணன் அந்தப்பிரமம் தீருகைக்காக நித்திய ஆத்மவிஷயமான ஸாங்கியபுத்தியும், அந்த புத்தியுடன் கூடியதாய் ஸ்திதப்பிரக்ஞதையென்னும் ஞாநநிஷ்டைக்கு ஸாதகமாய் கர்மயோகத்துக்கு வேண்டியதாயிருக்கிற புத்தியும் இரண்டாவது அத்தியாயத்தில் அருளிச்செய்தார். இதை 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌸𑌙𑍍𑌗𑌕𑌰𑍍𑌮𑍇𑌹𑌾 𑌗𑍋𑌚𑌰𑌾𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑌧𑍀𑌃 । 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌧𑍀𑌲𑌕𑍍𑌷𑌾𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌤𑌨𑍍𑌮𑍋𑌹𑌶𑌾𑌨𑍍𑌤𑌯𑍇 என்று ஸ்ரீஆளவந்தாரும் அருளிச்செய்தார்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
இரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

http://acharya.org

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

மூன்றாவது அத்யாயம்.

அவதாரிகை,

இதுவரையில், மோக்ஷகாமர்களுக்குப் பலமாக வேதாந்தத்திற்சொல்லப்பட்ட * பரப்பிரம்மமான புருஷோத்தமனை அடைதற்குத்தகுந்த உபாயம் ο பக்தியோகமென்று அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அதற்கு அங்கமான (ய ஆத்மா அபஹதபாப்மா இத்யாதி ♀ பிரஜாபதி வாக்கியத்திற் சொன்

* இங்கே, "அவித்யாதிகளான ஸகல தோஷங்களையும் வாஸனையோடே ஒழித்து, அபார அதிசயமாய் அளவிறந்தவையாயுள்ள ஸகல கல்யாண குணங்கள் பொருந்திய" என்று சேர்த்துக்கொள்வது.

ο இங்கே "வேதநம், உபாஸநம், தியாநம் என்கிற சப்தங்களாலே சொல்லப்பட்டதும், பல தசையிலுங்கூட பிராப்யப்பிராபக பூதனை அவன் திருவடிகளில்மாத்திரம் பண்ணத்தக்கதுமான" என்று சேர்த்துக்கொள்வது.

♀ பிரஜாபதிவாக்யத்திலோ! யஸ்தமாத்மாநமநுவித்ய விஜாநாதி என்றுப்ராப்தாவான ஜீவாத்மாவின் தர்சநமானது, தஹரவாக்யத்தில் சொன்னபரவித்தைக்கு சேஷப்பட்டதென்று சொல்லி; ஜாகரிதம், ஸ்வப்நம், ஸுஷுப்தி இவைகளைக்கடந்த அந்த ஜீவஸ்வரூபமானது சரீரவிலக்ஷணமென்றுபிரதிபாதித்து; ஏவமேவைஷ ஸம்ப்ரஸாதோஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே என்று ஜீவன் சரீரத்தினின்றும் வெளிப்பட்டுப் பரஞ்சோதியான பரமபுருஷனையடைந்து தனது நிஜரூபத்தோடு விளங்குகிறானென்று தஹரவித்தைக்குப் பலன்சொல்லி முடிக்கப்பட்டது. அப்படியே இங்கும் அத்யாத்மயோகாதிகமேந தேவம் மத்வா தீரோ ஹர்ஷஶோகௌ ஜஹாதி இத்யாதிகளில் தேவம் மத்வா என்று தேவனை யறியவேண்டியதாக விதிக்கப்படும் பரவித்தைக்கு அங்கமாக அத்யாத்மயோகாதிகமேந என்றுஜீவாத்மஞானத்தையும் விதித்து, ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித் இத்யாதியால் ஜீவாத்மஸ்வரூபம்ஜநநமரண ரஹிதமென்று சோதித்து; அணோரணீயாந் என்று ஆரம்பித்து மஹாந்தம் விபுமாத்மாநம் மத்வா தீரோ ந ஶோசதி॥ நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந| யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் இத்யாதிகளால் பரஸ்வரூபத்தையும் அவனை உபாஸிக்குந்தன்மையையும் அவ்வுபாஸநமும் பக்திரூபமாயிருக்க வேண்டுமென்பதையும் பிரதிபாதித்து விஜ்ஞாநஸாரதிர்யஸ்து மந:ப்ரக்ரஹவாந் நர: | ஸோऽத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம் என்று பரவித்தைக்குப் பலம் விஷ்ணுவினுடைய பரமபதமென்று சொல்லி முடிக்கப்பட்டது.

http://acharya.org

ன) ஜீவாத்ம ஸாக்ஷாத்காரம் * கர்மயோகத்தால் ஸமபாதிக்கத்தக்க ஞாந யோகத்தாலே ஸாதிக்கத்தக்கதென்று அருளிச்செய்தார். இதற்குமேல் நான்கு அத்யாயங்களால் அந்த ஜீவஸாக்ஷாத்காரத்தையும், அதற்கு உபாயத்தையும் விவரித்தருளுகிறார்.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ‖ 𑌜𑍍𑌯𑌾𑌯𑌸𑍀 𑌚𑍇𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑍇 𑌮𑌤𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 । 𑌤𑌤𑍍𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌘𑍋𑌰𑍇 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑌸𑌿 𑌕𑍇𑌶𑌵 ‖ ௧ ‖
𑌵𑍍𑌯𑌾𑌮𑌿𑌶𑍍𑌰𑍇𑌣𑍇𑌵 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌮𑍋𑌹𑌯𑌸𑍀𑌵 𑌮𑍇 ।
𑌤𑌦𑍇𑌕𑌂 𑌵𑌦 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌯𑍇𑌨 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌹𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌮𑍍 ‖ ௨ ‖

(௧-௨) அர்ச்சுனன் சொல்வது—ஓ ஜநார்த்தந! இதுவரையில் தேவரீர் அருளிச் செய்ததில், ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்கு ஞாநநிஷ்ட்டைதான் நேரான ஸாதநமென்றும், கருமநிஷ்ட்டையோ அந்த ஞாநநிஷ்ட்டையை உண்டாக்கித் தருமென்றும், அந்த ஞாநநிஷ்ட்டையும் ஸகலமான இந்திரிய வியாபாரங்களையும் ஒழித்தே பெறவேண்டியதென்றும் ஏர்ப்பட்டது; இதனால் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்கும் விஷயத்தில் கருமநிஷ்டையைக் காட்டிலும் ஞாநநிஷ்ட்டையே சிறந்ததென்று தேவர் திருவுள்ளமாகத் தெரியவருகிறது. இப்படியாகில் அடியேனுக்கு ஆத்மஸாக்ஷாத்காரம் ஸித்திக்கவேண்டுமானால் இந்திரியவியாபாரத்தை யொழித்துப பெறவேண்டியதான ஞாநயோகத்தைச் செய்யும்படி நியமிக்கலாயிருக்க அது செய்யாது அதற்குவிரோதமாய் இந்திரியவியாபாரரூபமான கருமயோகத்தைச் செய்யும்படி நியமித்தீரே! இதைப்பார்த்தால் ஒன்றுக்கொன்று விரோதமான வாக்கியங்களைச்சொல்லி அடியேனைக் கலங்கச்செய்வதுபோல் காண்கிறது. ஆகையால் அடியேனுடைய க்ஷேமத்தைக்கோறி அடியேன் செய்யவேண்டியதை நிச்சயித்துக் கொள்ளும்படி ஒருவாக்கியமாக அருளிச்செய்யவேணடும்.

(அ-கை.) அதற்குக் கண்ணன் அருளிச்செய்கிறார்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ‖ 𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌪𑍁𑌰𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑌯𑌾𑌨𑌘 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍇𑌨 𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ‖ ௩ ‖

(௩) அர்ச்சுந! நாம் முன்னே சொன்னதைச் செவ்வையாயறிந்திலை. உலகத்தில் ஜநங்களுக்கு யோக்கியதை பலவிதமாயிருக்கையால் அவரவர் யோக்கியதைக்குத் தக்கபடி ஞாநநிஷ்ட்டையென்றும் கருமநிஷ்டையென்றும் இரண்டுவகை உண்டென்று சொன்னோம்: அதாவது விஷயத்தில் வியாகுலமான புத்திகளான யோகிகளுக்குக் கருமயோகத்தில் அதிகாரமென்றும் ஆத்மாவையேநாடுகிற புத்தியுடன்கூடிய ஸாங்கியருக்கு ஞாநயோகத்தில் அதிகாரமென்றும் பிரித்துச்சொன்னோம்; அதுவேயல்லது சிறிதும் விரோதமாய்ச் சொன்னோமில்லை. [மோக்ஷார்த்தியான வென்னை நேரே ஞாநயோக

* இங்கே-ஆத்ம யாதாத்ம்ய ஞாநபூர்வகமாய் பலாபேக்ஷையின்றிச் செய்த என்று கூட்டிக்கொள்ளவும்.

http://acharya.org

த்தில நியமிக்கலாயிருக்கக் கருமத்தில் பிரவேசிக்கச் செய்வேனென்றால் லோகத்தில் மோக்ஷகாமருக்கெல்லாம் உடனே ஞானயோகத்தில் அதிகாரம் வருமா? வரமாட்டாது பலாபேக்ஷையின்றிக் கேவலம் எம்பெருமானுடைய ஆராதநரூபமாகக் கருமத்தை அநுஷ்டித்து ᵖ அதனால மனக்கலக்கமற்று இந்திரியவியாகூலந் தொலைந்த பின்புதான ஞானநிஷ்டைக்கு யோக்யதையுண்டாம் ஆசையாலே கருமத்தைச் செய்யும்படி நியமித்தோமித்தனை யென்று திருவுள்ளம்]

(அ-கை) லோகத்தில எல்லாருக்கும மோக்ஷத்தில இச்சை பிறந்த போதே ஞானயோகம செய்யும்படியான நிலையுண்டாவது அரிதெனகிறார.

நகர்மணாமநாரம்பாந்நைஷ்கர்ம்யம் புருஷோऽஶ்நுதே|
நசஸந்ந்யஸநாதேவ ஸித்திம் ஸமதிகச்சதி||௪||

(௪) (பரமபுருஷனுடைய ஆராதநரூபமாகச் சாஸ்திரங்களில் சொல்லப்படுங்) கருமங்களைச் செய்யத்தொடங்காமலிருப்பதினாலாவது தொடங்கி நடுவில விட்டுவிடுவதினாலாவது ஞானநிஷ்டை ஸித்திக்குமென்று நினைக்கவேண்டாம், பலாபேக்ஷையற்ற கருமங்களால எம்பெருமானை ஆராதிக்காமல அதனால் அநாதிகாலமாய ஸம்பாதித்த பாபங்களைத் தொலையாதவருக்கு,இந்திரிய வியாகூலமற்றுப் பெறவேண்டிய ஆத்மநிஷ்டை கிடைப்பது அரிது

(அ-கை) இதைத்தான தக்கநியாயங்களைக்கொண்டு நிரூபிக்கிறார்:

நஹி கஶ்சித்க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்|
கார்யதே ஹ்யவஶ꞉ கர்ம ஸர்வ꞉ ப்ரக்ருதிஜைர்குணை꞉||௫||

(௫) லோகத்தில் ஒருவனும் ஒருக்காலும ஒருகாரியமும் செய்யாமலிருக்கமாட்டான். அப்படியிருப்பதாக ஒருவன தான்ஒழிந்திருந்தானாகிலும, பிருகிருதியில உண்டாய் இவனுடைய பூர்வ கர்மாநுஸாரமாக விருத்தியடைந்த ஸத்வம,ரஜஸ்ஸு,தமஸ்ஸு என்கிற மூன்றுகுணங்களும் இவனையுமறியாமல இவனுக்கு உசிதமான சிலகாரியங்களிலமூட்டிவிடும [ஆகையால் முன் சொன்ன கருமயோகத்தால் பழைய பாபங்களைத் தொலைத்து ஸத்வாதிகுணங்களை வசப்படுத்தி நிர்மலமான அந்தஃகரணத்தாலே ஞானயோகம் ஸம்பாதிக்கத்தக்கது]

(அ-கை.) அப்படியில்லாமல ஞானயோகத்தில் இழிந்தால அநர்த்தம் விளையுமென்கிறார.

கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மநஸா ஸ்மரந்|
இந்த்ரியார்தாந்விமூடாத்மா மித்யாசார꞉ ஸ உச்யதே||௬||

ᵖ காமாநுஷ்டாநம, பரமபுருஷாராதநரூபமென்று யதஃ ப்ரவ்ருத்திர்பூதாநாம் யேந ஸர்வமிதம் ததம்| ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ꞉ என்று மேலே அருளிச்செய்யப்போகிறார்.

http://acharya.org

(௬) பாபந் தொலையாமையாலே அந்தஃகரண பஹிஃகரணங்கள்வசப்படாமலிருக்கிற ஒருவன் ஆத்மஞாநத்தை ஸம்பாதிக்க விழிந்தானாகில், அவன் சப்தாதிவிஷயங்களில் ஆசையுற்றவனாகையால் ஆத்மாவைத்தேடி மனம் செல்லாமல் விஷயத்தையே நினைத்துக்கொண்டிருப்பான். அப்படி ஒன்று செய்யக்கோலி ஒன்று செய்கின்ற அவன் பொய்யேசெய்பவனாகையால் அதனால் அநர்த்தப்படுவான்.

𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌮𑌨𑌸𑌾 𑌨𑌿𑌯𑌮𑍍𑌯𑌾𑌰𑌭𑌤𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨।
𑌕𑌰𑍍𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌮𑌸𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇॥௭॥

(௭) யாவனொருவன், தான் முன்பு பழகியிருக்கிற கருமங்கள்போலே சாஸ்திரோக்தமான கருமங்களும் சிலவாகையால் அவைகளில், (ஆத்மதரிசநத்திலூன்றிய மனதைக்கொண்டு) இந்திரியங்களைச் செலுத்தி அவைகளைப்பற்றின்றிச் செய்யத்தொடங்குகிறானோ அவனுக்கு யாதொரு பிரமாதமும் நேரிடமாட்டாதாகையால் அவன் முன்சொன்ன ஞாநநிஷ்டனைப்பார்க்கச் சிறந்தவனாவான்.

𑌨𑌿𑌯𑌤𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌜𑍍𑌯𑌾𑌯𑍋 𑌹𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌣𑌃।
𑌶𑌰𑍀𑌰𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌚 𑌤𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌸𑌿𑌧𑍍𑌯𑍇𑌦𑌕𑌰𑍍𑌮𑌣𑌃॥௮॥

(௮) அநாதிவாஸனையாலே பிரகிருதியில் அகப்பட்ட புருஷனுக்குக் கருமஞ்செய்வது ஸ்வபாவமாய் பழகிப்போனபடியால் அது செய்வதற்குச் சுகமாயும் பிரமாதத்தைத் தராததாயுமிருக்கிறது. ஞாநநிஷ்டையோ பழக்கமில்லாமையால் செய்வதற்குக் கஷ்டமாயும் அநர்த்தஹேதுவாயுமிருக்கிறது. இப்படி கர்மம்செய்வதற்கு சுகமாயிருக்கையாலும் (இதைச்செய்யும்பொழுது ஆத்மாவின் உண்மையான நிலையையறிந்து ஆத்மா கர்த்தாவல்லனென்று நினைக்கவேண்டுகையாலே) ஞாநயோகம் இதற்குட்படுகையாலும் இது ஞாநயோகத்தைக் காட்டிலும் சிறப்புற்றது. [ஆனால் ஞாநநிஷ்ட்டையை விசேஷமாகச் சொல்வதெதினாலென்றால்:—அது தகுந்த அதிகாரமுள்ளவன் விஷயம்.] மேலும் ஸகல கருமங்களையும் விட்டுக் கேவலம் ஞாநநிஷ்டையில் இழிந்தவனுக்கு முதலில் அந்த நிஷ்டைக்கு வேண்டிய சரீரதாரணமே ஸித்திக்கமாட்டாது. [ஏனெனில்:—நியாயார்ஜிதமான திரவியங்கொண்டு செய்த ⊙ யக்ஞசேஷத்தாலே ✠ சரீரத்தைக் காப்பாற்றவேண்டுமென்று ஏற்பட்

⊕ மூலத்தில் '𑌕𑌰𑍍𑌮' சப்தம் இங்கே ஞாநநிஷ்டையைச் சொல்லுகிறது, '𑌨𑍈𑌷𑍍𑌕𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌽𑌶𑍍𑌨𑍁𑌤𑍇' என்றுதொடங்குகையாலே.

⊙ 𑌆𑌹𑌾𑌰𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 என்று ஆஹாரம் சுத்தமானால் ஸத்வம் சுத்தியாம்; அதினால் சலியாத சிந்தையுண்டாமென்று வேதம் சொல்லுகையாலும் அந்த சிந்தை ஞாநயோகத்துக்கு உபகாரகமாகையாலும் யக்ஞசேஷங்கொண்டே சரீரத்தைத் தாங்கவேண்டுமென்றறிக. இவ்வர்த்தத்தை 'தேகஸ்வம்' இத்யாதியில் மேலே அருளிச்செய்யப்போகிறார்.

✠ சரீரமானது ஸாதநம் தலைக்கூடுகிறவரையில் இருந்தே தீரவேண்டுமெனறறிக.

http://acharya.org

டமினப்பு கருமமின்றி யஜ்ஞம் செய்வதெப்படி?] [ஆக ஞானநிஷ்டனுக்கும் சரீரமுள்ளவரையில் நித்திய நைமித்திக கருமங்கள் செய்வது ஆவசியகமாகையாலும், கருமயோகத்திலும் ஆத்மஞானம் உட்பட்டமையாலும், பிராகிருதபுருஷனுக்குக் கருமம்செய்வது சுலபமாயும் பரமாத்தத்தையுண்டுபண்ணுந்தாயுமிருக்கையாலும் ஞானநிஷ்டாதிகாரிக்குக்கூடக் கருமயோகமே சிறப்புற்றது. ஆகையால் நீ கருமயோகத்தையே செய்யென்று திருவுள்ளம்.]

(அ-கை) இப்படியானால் திரவியந்தேடல்முதலிய கருமங்கள் (அஹங்காரம் மமகாரம் முதலிய) இந்திரியவியாகூலத்தை யுண்டாக்குமாகையால் புருஷனுக்குக் கருமவாஸனைபிறந்து அதனால் ஸம்ஸாரபந்தம் உண்டாகாதோ? என்ன அருளிச்செய்கிறார்.

யஜ்ஞார்த்தாத் கர்மணோऽந்யத்ர லோகோऽயம் கர்மபந்தந:|
தத³ர்த்த²ம் கர்ம கௌந்தேய முக்தஸங்க³: ஸமாசர||௯||

(௯) சாஸ்திரத்தில்சொன்ன யாகாதிகருமங்களுக்காகத் திரவியந்தேடுதல் முதலிய கருமங்களைவிட்டுத் தன்ப்ரயோஜனத்துக்காகச் செய்யுங் கருமமெல்லாம் (பந்தமென்கிற) ஸம்ஸாரத்துக்குக் காரணமாம். ஆகையால் யக்ஞத்துக்காகத் திரவியஸம்பாதநம் முதலிய கருமங்களைச் செய்யும்பொழுது அதில் பற்றின்றிச்செய் [பற்றின்றிச்செய்யும் யக்ஞாதிகளுக்காகக் கருமஞ்செய்துவந்தால் அந்த யக்ஞாதிகளால் எம்பெருமான் ஆராதிக்கப்பட்டவராய் அநாதிகாலமாய் இவனைப் பற்றிக்கிடந்த கருமவாஸனையைத் தொலைத்து வியாகுலமற்ற ஆத்மதரிசநத்தைப் பண்ணிக் கொடுக்கிறாரென்று திருவுள்ளம்.]

(அ-கை.) எந்த புருஷார்த்தத்தை ஸாதிக்க முயன்றவரும் யக்ஞசேஷத்தாலேயே சரீரத்தைத்தரிக்கவேண்டும்; மற்றப்படி தரித்தால் தோஷமுண்டென்கிறார்.

ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி:|
அநேந ப்ரஸவிஷ்யத்⁴வமேஷ வோऽஸ்த்விஷ்டகாமதுக்||௧௦||

(௧௦) ஸகலப் பிரஜைகளுக்கும் பதியான ஸ்ரீமந்நாராயணன் சிருஷ்டிகாலத்தில், அநாதிகாலமாயத்தொடர்ந்த அசேதநஸம்பந்தத்தாலே பரவசர்களாய் நாமரூபங்களையிழந்து தனக்குள் லயித்து ஒருபுருஷார்த்தத்தையும் அடைவதற்கு யோக்கியமில்லாதவராய் அசேதநம்போலக்கிடந்தப் பிரஜைகளைக் கடாக்ஷித்து, பரமதயாளுவாகையாலே அவர்கள் உய்வதற்காகத் தன் ஆராதநரூபமான யக்ஞத்தைச் செய்யும்படி யக்ஞங்களோடுகூடவே அவர்க

* இங்கே ப்ரஜாபதி சப்தமானது நிருபாதிகமாயக்கொண்டு ஸர்வேச்வரனும் விச்வத்துக்கு சிருஷ்டிகர்த்தாவாய் விச்வாத்மாவாயெழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணனையே சொல்லக் கடவது, பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் என்று நிருபாதிகப்பிரஜாபதி ஸ்ரீமந்நாராயணனென்றல்லவோ வேதஞ்சொல்லுகிறது?

http://acharya.org

ளையும் ஸ்ருஷ்டித்து, "இந்த யஜ்ஞத்தைக்கொண்டே நீங்கள் முன்னுக்கு வரக்கடவீர், இதுதான் உங்களுக்கு மோக்ஷத்தையும் மற்றும் பலன்களையும் கொடுப்பது" என்று திருவாய்மலர்ந்தருளினான்.

(அ-கை) அதெப்படியென்றால் —

𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌭𑌾𑌵𑌯𑌤𑌾𑌨𑍇𑌨 𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑍁 𑌵𑌃 ।
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌯𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑌰𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌥 ॥கக॥

(கக) தேவதாராதநரூபமான இந்த யஜ்ஞத்தாலே, எனக்கு || சரீரபூதர்களாய் என் ரூபமாயிருக்கிற தேவர்களை ஆராதனம் செய்யுங்கள், அப்படி ஆராதிக்கப்பட்ட அவர்கள், தம் ஆராதனத்துக்கு வேண்டிய அன்னபானாதிகளைத் தந்து உங்களைப் போஷிப்பார்கள். இப்படி ஒருவருக்கொருவர் பாவித்துக்கொண்டு மோக்ஷமென்கிற பரமபுருஷார்த்தத்தை அடையுங்கள்.

𑌇𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌹𑌿 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑌾𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌭𑌾𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌤𑍈𑌰𑍍𑌦𑌤𑍍𑌤𑌾𑌨𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑍈𑌭𑍍𑌯𑍋 𑌯𑍋 𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌤𑍇 𑌸𑍍𑌤𑍇𑌨 𑌏𑌵 𑌸𑌃 ॥

(கஉ) யஜ்ஞத்தால் ஆராதிக்கப்பட்ட அந்த தேவர்கள் உங்களுக்கிஷ்டமான போகங்களை மென்மேலும் கொடுத்துவருவார்கள். அவர்கள் தம் ஆராதனத்துக்கென்று தந்தவைகளை அவர்களுக்குக்கொடாமல் எவன் புஜிக்கிறானோ அவன் திருடனாவான். [திருடாவது — பிறருடைய ப்ரயோஜனத்துக்காக ஏற்பட்ட வஸ்துவில் தன்னுடையதென்கிற புத்தியைச்செய்து அதினால் தன் ஆத்மாவைப் போஷித்துக்கொள்ளுவதுதானே? இதனால் இவனுக்கு பரமபுருஷார்த்தம் கிடையாமற்போவதுமாத்திரமன்று, நரகமும் ஸம்பவிக்குமென்று அபிப்ராயம்.]

(அ-கை) அதையே விவரிக்கிறார்.

𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌶𑌿𑌨𑌃 𑌸𑌨𑍍𑌤𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑍈𑌃 ।
𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌤𑍇 𑌤𑍍𑌵𑌘𑌂 𑌪𑌾𑌪𑌾 𑌯𑍇 𑌪𑌚𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 ॥கங॥

(கங) இந்திராதிகளுக்கு அந்தராத்மாவாய் எழுந்தருளியிருக்கிற பரமபுருஷனை ஆராதிக்கவேண்டுமென்று த்ரவ்யங்களைத் தேடிச்சமைத்து அவற்றைக்கொண்டு அப்படிப்பட்ட பரமபுருஷனை ஆராதித்து அதில் மிகுதியைப்புசித்து சரீரத்தைக் காப்பாற்றுகிறார் யாவர், அவர்கள்தான் அநாதிகாலமாய் ஸம்பாதிக்கப்பட்டவைகளாய் ஆத்மாவினுடைய யதார்த்தஞானத்துக்கு விரோதிகளாயிருக்கிற ஸகல பாபங்களினின்றும் விடுபடுவார்கள்; எவர்களால் அப்படிப்பட்ட பரமபுருஷ ஆராதனத்துக்கென்று வருத்த த்ரவ்யங்களைத் தமக்கென்று ஸம்பாதித்து அதைச் சமைத்துண்பார்களோ, அந்த பாபிகள் பாபத்தையே உண்கிறார்கள். அதாவது — ஆத்மஞானத்தில் கண்ணையாமல் நரகத்துக்கென்றே சமைத்துண்கிறார்கள்.

|| 𑌸𑌹𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍁𑌰𑍋𑌵𑌾𑌚 என்று ஸகலமான யஜ்ஞங்களுக்கும் எம்பெருமானே போக்தாவென்று மேலே அருளிச் செய்கிறார். [illegible] தேவதைகளைச் சரீரமென்கிறது

http://acharya.org

(அ-கை.) திரும்பவும் லோகரீதியாகவுமாம், சாஸ்திரரீதியாகவுமாம், யாவும் யக்ஞத்தாலுண்டானதென்பதை யெடுத்துக்காட்டி, யக்ஞத்தை அநுஸரிப்பது அவசியமென்றும் அதைச் செய்யாமற்போனால் தோஷமுண்டென்றும் அருளிச்செய்கிறார்.

𑌅𑌨𑍍𑌨𑌾𑌦𑍍𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾𑌦𑌨𑍍𑌨𑌸𑌂𑌭𑌵𑌃।
𑌯𑌜𑍍𑌞𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑍋 𑌯𑌜𑍍𑌞𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃॥௧௪॥
𑌕𑌰𑍍𑌮 ψ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌕𑍍𑌷𑌰𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌮𑍍।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌯𑌜𑍍𑌞𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍॥௧௫॥
𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌂 𑌚𑌕𑍍𑌰𑌂 𑌨𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑍀𑌹 𑌯𑌃।
𑌅𑌘𑌾𑌯𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑌾𑌮𑍋 𑌮𑍋𑌘𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌸 𑌜𑍀𑌵𑌤𑌿॥௧௬॥

(௧௪-௧௫-௧௬) ஸகல பூதங்களும் அன்னத்தாலுண்டாகிறதென்பதும், அந்த அன்னம் வருஷத்தாலுண்டாகிறதென்பதும் எல்லாருக்கும் பிரத்யக்ஷம். அந்தவர்ஷம் யக்ஞத்தாலுண்டாகிறதென்று (𑌅𑌗𑍍𑌨𑍌 𑌪𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌾𑌹𑍁𑌤𑌿𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌮𑍁𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍇। 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 இத்யாதியான) சாஸ்திரம் சொல்லுகிறது. அந்த யக்ஞம் (புருஷவியாபாரரூபமான கருமத்தாலுண்டாகிறது; அந்தகருமம் (பிரகிருதியின் பரிணாமமான) சரீரத்தாலுண்டாகிறது, அந்த சரீரமோ ஜீவனாலே: அதெப்படியெனில் - அந்நபாநாதிகளால் திருப்தியடைந்த ஜீவாத்மாவோடு கூடியிருந்தால் மாத்திரந்தான் சரீரம் கருமம் செய்யக்கூடும். ஆகவிதனால் எந்தசரீரமும் யக்ஞத்தால்தான் நிலைக்கிறதென்றதாயிற்று. இப்படி ஜீவனுடன்கூடிய சரீரத்துக்கு அன்னமும் அன்னத்துக்கு வருஷமும்வருஷத்துக்குயக்ஞமும் யக்ஞத்துக்கு(கர்த்தாவின்வியாபாரமான) கருமமும், கருமத்துக்கு (ஜீவனுடன்கூடிய) சரீரமும் சரீரத்துக்குத் திரும்பவும் அன்னமுமென்று ஒன்றுக் கொன்று காரியமாயும் காரணமாயும் பரமபுருஷனால் ஏற்படுத்தப்பட்ட இந்தசக்கிரத்தை, (ஞானயோகாதிகாரியோ கருமயோகாதிகாரியோ) யாவனொருவன் நடத்துகிறானில்லையோ அதாவது யக்ஞசேஷத்தாலே தேஹத்தைத் தரிக்கிறதில்லையோ அவன் தன்வாழ்நாளையெல்லாம் பாவத்துக்கே ஒப்புவிக்கிறான். ஆனதுகொண்டே அவன்புலன்களுக்குத் திருப்திசெய்பவனேயல்லது ஆத்மாவுக்கல்ல, அவன் சரீரத்தையும் மனதையும் கெட்ட அன்னத்தாலே வளர்த்தமையால் ரஜஸ்ஸு தமஸ்ஸு என்கிற இரண்டுகுணங்களுந் தலையெடுத்து ஆத்மதரிசனத்தில் கண்வையாமல் விஷயபோகத்தில் மண்டுகிறான். ஆகையால் அவன் ஞானயோகாதிகளில் முயற்சிசெய்பவனாயினும் அது நிஷ்பலமாகையாலே வீணுக்கே ஜீவிக்கிறான்.

ψ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮சப்தம் பிரகிருதியின் விகாரரூபமான சரீரத்தைச் சொல்லக்கடவது. 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌮𑌨𑍍𑌨𑌂 𑌚 𑌜𑌾𑌯𑌤𑍇 என்று 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 சப்தத்தாலே பிரகிருதியை நிர்த்தேசிக்கையாலும்; 𑌮𑌮 𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌮𑌹𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 என்று மேலே சொல்லப்போகிறபடியாலும் சரீரவாசகம்.

http://acharya.org

(அ-கை.) ஸாதநமில்லாமலே ஆத்மதரிசநம்கிடைத்தவனுக்கோ இந்த வர்ணாச்ரமகருமம் வேண்டாமென்கிறார்.

யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாதாத்மத்ருப்தஶ்ச மாநவ:|
ஆத்மந்யேவ ச ஸந்துஷ்டஸ்தஸ்ய கார்யம் ந வித்யதே||௧௭||
நைவ தஸ்ய க்ருதேநார்தோ நாக்ருதேநேஹ கஶ்சந|
ந சாஸ்ய ஸர்வபூதேஷு கஶ்சிதர்தவ்யபாஶ்ரய:||௧௮||

தஸ்மாதஸக்த: ஸததம் கார்யம் கர்ம ஸமாசர|
அஸக்தோ ஹ்யாசரந் கர்ம பரமாப்நோதி பூருஷ:||௧௯||

(௧௭-௧௮-௧௯) ஞாநயோக கருமயோகங்களிரண்டையும் அபேக்ஷிக்காமல் தனக்குத்தானே ஆத்மதரிசநம்பண்ணுகிறான் யாவனொருவன் அவன் இதரமான அந்நபாநாதிகளாலல்லாமல் ஆத்மாவினாலேயே திருப்தனாயும், உத்யாநம், மாலை, சந்தனம், பாட்டு, வாத்தியம், நர்த்தநம் முதலியவற்றிலின்றி, கேவலம் ஆத்மாவில் ஸந்தோஷமுற்றவனாய், $ தாரகம் △ போஷகம் ψ போக்கியம் எல்லாம் ஆத்மாவேயாயிருப்பவனாகையால் அவனுக்குச் செய்யவேண்டுங் கருமம் ஒன்றுமில்லை. (ஆத்மதரிசநமென்கிற) பலம் கைபுகுந்தவனாகையாலே செய்வதால் பயனுமில்லை; செய்யாமையால் தோஷமுமில்லை. ஏற்கனவே ஆத்மஸந்துஷ்டனாய் எல்லாவஸ்துக்களையும் உபேக்ஷித்திருப்பவனாகையால் பிரகிருதியின் விகாரங்களான ஆகாசமுதலிய பூதங்களினாலாவது அவற்றின் காரியங்களினாலாவது அவனுக்கு என்னப் பிரயோஜநம்? ஸாதநம்செய்வதெல்லாம் அவற்றில் உபேக்ஷையுண்டாகைக்காகத்தானே? இவனுக்கோ அது உண்டாய்விட்டது. இனி இவன் கருமம்செய்வதேன்? ஆக, தனக்குத்தானே ஆத்மதரிசநம்பண்ணவனுக்கு ஸாதநத்தில் பிரவர்த்திக்க வேண்டாமையாலும், பிரவர்த்தித்தவனுக்கு இந்தகர்மயோகம் சுலபமாயும் அநர்த்தஞ்செய்யாததாயும் ஆத்மஞாநத்தை யுட்கொண்டதாயு மிருக்கின்றமையாலும், ஞாநயோகிக்கும் இதில் சிறிது செய்யவேண்டுகையாலும் கருமயோகமே ஆத்மதரிசநத்துக்குச் சிறந்தது. ஆகையால் அர்ஜுந! பற்றின்றிக் கருமஞ் செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன் பலஸித்தியாமளவும் கருமத்தையேசெய்.

கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:|

(ககூ) ஞாநயோக அதிகாரிக்கும் கருமமே சிறந்திருக்கையால்தான ஞாநிகளில் தலைவரான ஜநகாதிராஜருஷிகளும் கருமயோகத்தாலேயே ஸித்திபெற்றார்கள்.

(அ-கை.) இவ்வாறு-மோக்ஷார்த்தியானவன் ஞாநயோகத்துக்குத்தகாதவனாகையாலே கருமயோகமே செய்யத்தக்கதென்று அருளிச்செய்து, ஞாநயோகத்துக்குத் தகுந்தவனுக்கும் கருமயோகமே சிறந்ததென்பதை காரணத்தோடு அருளிச்செய்கிறார்.

லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பஶ்யந் கர்துமர்ஹஸி||௨௦||

$ தாரகம் - தரிக்கசெய்யும் அன்னமுதலியன.

△ போஷகம் - பருக்கச்செய்யும் பால்முதலியன.

ψ போக்யம் - சுகத்தைத்தரும் தாம்பூலமுதலியன.

http://acharya.org

யத்யதாசரதி ஶ்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜந:|
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்தத³நுவர்ததே||௨௧||

(௨0-௨௧) அர்ச்சுந! நீ லோகத்தாருடைய க்ஷேமத்தைப்பார்த்தா லும் கருமமே செய்யத்தகுந்தவனாகிறாய். ஏனெனில் ஸகலசாஸ்திரங்களை யும் அறிந்து அப்படியே அநுஷ்டித்து பிரஸித்தனான ஒருபுருஷன், (எந்தப் பிரமாணங்கொண்டு எந்த அங்கத்தோடு) எதைச்செய்கிறானோ அது தன்னை யே ‡ முழுதுந் தெரிந்துக்கொள்ளாத ஜநமும் அப்படியே அநுஷ்டிக்கும். ஆகையால் லோகரக்ஷணத்துக்காக அந்த சிரேஷ்டனுங்கூட தன்வருணாசிர மங்களுக்கு உசிதமான ஸகலகருமங்களையும் அநுஷ்டிக்கக்கடவன். இல்லா விடில் லோகநாசத்தாலுண்டானபாபம் இவனை ஞாநயோகத்தினின்றுங்கூட நழுவப்பண்ணும்.

ந மே பார்தா²ஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந|
நாநவாப்தமவாப்தவ்யம் வர்த ஏவ ச கர்மணி||௨௨||

(௨௨) ஸர்வேசுவரனாய் நினைத்ததெல்லா மடைந்து ஸகலமுந் தெரிந்தவனாய் நினைத்தது செய்யவல்லவனாய், தேவனாகவும் மனிதனாகவும் இன்னும் பலவிதமான சரீரங்களுமெடுத்து மூன்றுலோகத்திலும் இஷ்டப்ப டி திரிபவனாயிருக்கிற எனக்குச் சிறிதும் கருமம் செய்யவேண்டுவதில்லை; ஏ னெனில்-வேறு ஒருவிதத்தாலும் அடையப்படாமல் கருமத்தாலேயே அடை யவேண்டும்படியானது எனக்கேதாகிலும் உண்டாகிலன்றோ செய்யவேண்டு வது? அதில்லை. அப்படியிருக்க, நானுங்கூட லோகரக்ஷணத்துக்காகக் கரு மத்தையே அநுஷ்டிக்கிறேன் பார்.

யதி³ ஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்³ரித:|
மம வர்த்மாநுவர்தந்தே மநுஷ்யா: பார்த² ஸர்வஶ:||௨௩||

உத்ஸீதே³யுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேத³ஹம்|
ஸங்கரஸ்ய ச கர்தா ஸ்யாமுபஹந்யாமிமா: ப்ரஜா:||௨௪||

(௨௩-௨௪) ‡ ஸர்வேசுவரனாய் ஸத்தியஸங்கல்பனாய் ஸங்கல்பமாத்திர த்தாலே ஜகத்தினது உத்பத்தி ஸ்திதி லயங்களை லீலையாகச்செய்பவனாயிருக்

---

‡ முழுதுந் தெரிந்துகொள்ளாத-சாஸ்திரார்த்தங்களில் ஏகதேசந் தெரிந்துகொண்ட.

‡ முன் சுலோகம், மூன்றுலோகத்திலுமென் றருளிச்செய்கையால் ஏ.— ஸ்தாவதாரபரம்; இதுவோ மநுஷ்யர்கள் என்கையாலே கிருஷ்ணாவதாரத் தைமாத்திரம் பொறுத்தது என்று 'அஹம்' என்கிற நிர்த்தேசம் ஈசுவரஸ்வ பாவத்தைவிடாத கிருஷ்ணாவதார ஸாதாரணமென்று வியாக்கியானித்தது.

http://acharya.org

கிற நான், லோகோபகாரமாக என் இச்சையாலே மனுஷ்யனாய் அவதரித்தேனாகிலும் சிஷ்டஜநங்களிற்றலைவரான வசுதேவர் திருமாளிகையில் அவதரித்தமையால் அந்த குலத்துக்கேற்ற கருமங்களைச் சோம்பலில்லாமல் எப்போதும் நான் செய்யாதொழிவேனேயாகில் “சிஷ்டஜநங்களிற்றலைவராய் வசுதேவர் (மைந்தனான) கண்ணன் போனவழியே நமக்கும் வழியாகக்கடவது” என்று நினைத்து ஸகலமுந்தெரிந்துகொள்ளாத சில சிஷ்டர்கள் அதையே அநுஸரிப்பார்கள். அப்பொழுது அவர்கள் தாம் செய்யவேண்டிய கருமங்களைச் செய்யாமையாலே ஆத்மாவை அடையாதவர்களாய் நரகத்துக்கும் ஆளாக நிற்பார்கள். நானே சாஸ்திரோக்தமான ஆசாரத்தைப் பரிபாலிக்காமையால் ஸகலமான சிஷ்டகுலங்களுக்கும் § ஸங்கரத்தைச்செய்து இந்தப்பிராணிகளையெல்லாம் அழித்தவனாவேன். ஆகையால் நீயும் இப்படியே சிஷ்டஜநசிகாமணியான பாண்டுவின் புத்திரனாய் தருமன் தம்பியாய் அர்ச்சுநனென்று பிரஸித்தனாயிருந்துகொண்டு ஞாநநிஷ்டையில் இழிவாயாகில், (மோக்ஷத்தைமாத்திரம் ஆசைப்பட்டவர்களாய் சாஸ்திரார்த்தத்தை முழுதும் தெரிந்துகொள்ளாத) சிலசிஷ்டர்கள் உனது ஆசாரத்தையே அநுஸரித்துத் தமக்கேற்ற கருமத்தில் நில்லாமல் நசித்துப்போவர்கள். ஆகையால் பிரஸித்தனுங்கூட கருமமே செய்யக்கடவன்.

𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍋 𑌯𑌥𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑌕𑍍𑌤𑌶𑍍𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌰𑍍𑌲𑍋𑌕𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥ ௨௫ ॥

𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌂 𑌜𑌨𑌯𑍇𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌜𑍋𑌷𑌯𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰𑌨𑍍 ॥ ௨௬ ॥

(௨௫-௨௬) (ஆத்மவிஷயத்தில் ஸகலமுந் தெரியாதவர்களாய் கருமத்தில் விடப்போகாத ஸம்பந்தமுள்ளவர்களான) கருமாதிகாரிகள், அந்த ஆத்மாப்பியாஸரூபமான ஞாநயோகத்தில் பிரவேசிப்பது தம்மாலாகாதென்று தங்களுக்குப் பழக்கமான கருமயோகத்தில் எப்படி இழிகிறார்களோ, அப்படியே (ஆத்மவிஷயத்தில் முழுதுந் தெரிந்தவனாய் கருமத்தில் பற்றற்று ஞாநயோகத்துக்கு யோக்கியனாய் பெயர் பெற்றிருக்கிற) சிஷ்டனுங்கூட தனது ஆசாரத்தால் சிஷ்டஜநங்களுக்குத் தருமநிச்சயம் பண்ணிக்கொடுக்கையாகிற லோகரக்ஷணத்துக்காகக் கருமயோகத்தையே செய்யக்கடவன். அதுவேயன்றி ஆத்மவிஷயத்தில் ஸகலமுந் தெரியாதவனாகிய கருமயோகாதிகாரிக்கோ ஞாநயோகாதிகாரிக்கோ எவனுக்கும், கருமத்தைக்காட்டிலும் ஞாநமென்று வேறு ஓர் உபாயமுண்டென்கிற புத்தியைச் சிறிதும் உண்டுபண்ணக்கடவனல்லன, பின்னை என்செய்வதென்றால்-ஞாநயோகாபேக்ஷயின்றிக்கே கருமயோகமே ஆத்மஸாக்ஷாத்காரத்துக்கு ஸாதநமென்கிற புத்தியோடு கூடிக் கருமத்தையே செய்துவந்து முழுதுந்தெரிந்துகொள்ளாதவர்களுக்கு ஸகலகருமங்களிலும் பிரீதியை உண்டுபண்ணக்கடவன்.

---

§ ஸங்கரம் (வர்ணாசிரமாசாரங்களின்) கலப்பு.

http://acharya.org

(அ-கை.) கருமயோகத்தை அநுஷ்டிப்பதில் தெரிந்தவனுக்கும் தெரியாதவனுக்குமுண்டான வாசியைக்காட்டாநின்றுகொண்டு, கருமயோகத்துக்குவேண்டியதான "நான் பண்ணவில்லை" யென்று நினைக்குந் தன்மையை அருளிச்செய்கிறார்.

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌾𑌨𑌿 𑌗𑍁𑌣𑍈𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ।
𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑌰𑍍𑌤𑌾𑌹𑌮𑌿𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 ॥௨௭॥
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍𑌤𑍁 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌯𑍋𑌃 ।
𑌗𑍁𑌣𑌾 𑌗𑍁𑌣𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌸𑌜𑍍𑌜𑌤𑍇 ॥௨௮॥

(௨௭-௨௮) * அஹங்காரத்தால் ஆத்மஞானத்தை யிழந்தமூடன், பிரகிருதியின் குணங்களானஸத்வம்,ரஜஸ்ஸு,தமஸ்ஸுக்களால் செய்யப்பட்டகருமங்களைத்தான்செய்ததாகநினைக்கிறான். குணங்களின் வகுப்பையும் அவற்றின் காரியங்களின் வகுப்பையும் நன்கறிந்தவனோ குணங்கள் தந்தங்காரியங்களைச்செய்கின்றன வென்று தெரிந்தவனாகையால் அதில் நான்செய்தேனென்கிற பற்றைவைக்கமாட்டான்.

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌗𑍁𑌣𑌸𑌮𑍍𑌮𑍂𑌢𑌾𑌃 𑌸𑌜𑍍𑌜𑌨𑍍𑌤𑍇 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ।
𑌤𑌾𑌨𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌦𑍋 𑌮𑌨𑍍𑌦𑌾𑌨𑍍 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌨𑍍𑌨 𑌵𑌿𑌚𑌾𑌲𑌯𑍇𑌤𑍍 ॥௨௯॥

(௨௯) ஸகலமுந் தெரிந்துகொள்ளாமல் கொஞ்சந் தெரிந்துக்கொண்டு ஆத்மதரிசநத்துக்காகப் பிரயத்நப்படுமவர்கள்,பிரகிருதியோடு சேர்ந்திருப்பவராதல்பற்றி, அதின் குணத்தாலே ஆத்மாவினது உண்மைநிலைதெரியாமல்மூடர்களாய் குணக்கிரியைகளிலே நோக்கமுள்ளவர்களாய் அதைக்காட்டிலும்வேறான ஆத்மாவைச் சிறிதும்நினையார்கள். ஆகையால்இவர்கள்ஞாநயோகத்துக்குத் தக்கவர்களல்ல; கருமயோகத்திலேயே இவர்களுக்கதிகாரம்.இப்படி செவ்வையாய்த் தெரிந்துகொள்ளாத இம்மூடர்களை, செவ்வையாய்த்தெரிந்தவன் தன்னுடைய ஞாநயோகத்தி லிருப்பைக்காட்டிமயக்கக்கடவனல்லன். ஏனெனில் இவர்கள் மந்தர்களாகையால் (சிரேஷ்டஜநங்களினாசாரத்தைப்பார்த்து அநுஷ்டிப்பவராதல் பற்றி) சிரேஷ்டனான இவனைப்போலவே தாங்களும் கருமத்தைக்கைவிடுவர்கள். ஆகையால் இவனுங்கூடகருமயோகத்திலிருந்தபடியே ஆத்மாவின் உண்மையைநிரூபித்து "நாம்செய்கிறோமில்லை"யென்று மதித்து ஆத்மஸாக்ஷாத்காரத்துக்குக் கருமயோகந்தான் தலையானஉபாயமென்றறுதியிட்டு, முழுதுந் தெரிந்துகொள்ளாத அவர்களுக்குப்பிரீதிசெய்யக்கடவன். [இதனால் பிரகிருதிக்கவ்வருகான ஆத்மஸ்வபாவத்தை நன்கறிவதனால் கர்த்ருத்வத்தைக் குணங்களிலேறிட்டுக் கருமத்தைஅநுஷ்டிக்க வேண்டுமென்றதாயிற்று. இங்கே அசேதநமானகுணங்களில்கர்த்ருத்வத்தையேறிடுகையாவது ஆத்மாவுக்கு ஸ்வபாவத்தாலே கர்த்ருத்

* அஹங்காரமாவது - அஹம் (நான்) என்பதற்கு அர்த்தமல்லாத பிரகிருதியில் அஹம் என்கிற அபிமாநத்தைச்செய்வது.

http://acharya.org

வமில்லாம லிருக்கச்செய்தே குணஸம்பந்தத்தாலே கர்த்தாவாகத் தோற்றுகிறதென்று நினைக்கை.]

(அ-கை.) இப்பொழுது, ஆத்மாக்கள் பரமபுருஷனுக்குச் சரீரமாயிருப்பது பற்றி அவனுக்கு சேஷப்பட்டிருக்கின்றமையை நினைத்து, குணத்தால்வரும் கர்த்ருத்வத்தை (ஸர்வ ஆத்மபூதனான) பரமபுருஷனிடத்தில் ஏறிட்டுக் கருமம் செய்யவேண்டுமென் றருளிச்செய்கிறார்.

𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌚𑌤𑍇𑌸𑌾 ।
𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌯𑍁𑌧𑍍𑌯𑌸𑍍𑌵 𑌵𑌿𑌗𑌤𑌜𑍍𑌵𑌰𑌃 ॥ ௩௦ ॥

(௩௦) அர்ச்சுந! ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே அறிந்து ஸகல கருமங்களையும் நம்மிடத்தில்வைத்து பலத்தில் ஆசையின்றி என்னுடையதென்கிற வெண்ணத்தையுமொழித்து வருத்தமில்லாமல் யுத்தம்செய்.

என்றால்:—"இந்த ஆத்மாவானது ஸர்வேசுவரனான பரமபுருஷனுக்குச் சரீரமாய் அவன் ஏவிக்காரியங்கொள்ளும்படி அவனுக்கு அதீநமாயிருக்கையாலே ஸகல கருமங்களும் ஸர்வபூதாந்தராத்மாவான அவனாலே செய்யப்படுகின்றன" * என்று அநுஸந்தித்து, (அவைகள் கேவலம் பரமபுருஷனான நம்முடைய ஆராதநரூபமாயிருக்கையாலே) அவைகளின் பலத்தில் ஆசையையும் எனதென்கிற எண்ணத்தையு மொழித்து மனவருத்தமில்லா தாராளமாய் யுத்தமுதலிய கருமங்களைச்செய். அதாவது:—¶ ஸ வரன் தன் ஆராதநத்துக்காகத் தன்ஆத்மாக்களைக்கொண்டு தன் உபக களாலே தன்கருமங்களைச் செய்வித்துக்கொள்ளுகிறானென்று நினைத்து ருமங்களில் எனதென்கிற புத்தியைவிட்டு, "அநாதிகாலமாய் நம்மைப்பற்றிக்கிடக்கிற பழையபாபங்களுக்கு நாமென்செய்வோம்" என்கிற பயத்தையுமொழித்து, "கருமத்தால்ஆராதிக்கப்பட்ட பரமபுருஷனே நம்மை ஸம்ஸாரத்தினின்றும் விடுவிப்ப"னென்கிற உறுதியோடு சுகமாகக் கருமயோகத்தையே செய்யென்று திருவுள்ளம்.

---

*இவ்வர்த்தம் பல ஶ்ருதிஸ்ம்ருதிகளில் பிரஸித்தம்: எங்ஙனேயென்னில்- 𑌅𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 - 𑌅𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍇𑌤𑌮𑍍-𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌵𑍇𑌦 𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌸 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃 இத்யாதி ஶ்ருதிகள், எம்பெருமானை பிரவர்த்திப்பிக்கு மவனாகவும் ஜீவனை அவனால் பிரவர்த்திப்பிக்கப்படுமவனாகவும் சொல்லுகின்றன. 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 இத்யாதி ஸ்ம்ருதிகளும், அப்படியே. 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚𑌾𑌹𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑍋𑌹𑌨𑌞𑍍𑌚- 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑍍𑌦𑍇𑌶𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 । 𑌭𑍍𑌰𑌾𑌮𑌯𑌨𑍍 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍂𑌢𑌾𑌨𑌿 𑌮𑌾𑌯𑌯𑌾 என்று மேலும் அருளிச்செய்யப்போகிறார்.

¶ பரமபுருஷனுடைய ஸர்வேசுவரத்வமும் ஸர்வசேஷித்வமும் 𑌤𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌤𑌂 𑌦𑍈𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌮𑌞𑍍𑌚 𑌦𑍈𑌵𑌤𑌂-𑌪𑌤𑌿𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯-𑌪𑌤𑌿𑌂 𑌪𑌤𑍀𑌨𑌾𑌂 இத்யாதி ஶ்ருதி ஸித்தம்.

http://acharya.org

(அ-கை.) இதுதான் உபநிஷத்துக்களில் திரண்ட ஸாரமான பொருளென்கிறார்.

𑌯𑍇 𑌮𑍇 𑌮𑌤𑌮𑌿𑌦𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌃 |
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑍋𑌽𑌨𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑍇𑌽𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 || ௩௧ ||

(௩௧) சாஸ்திரத்தை அநுஷ்டிக்கத்தக்கவரில் யாவர்கள், இதுதான் சாஸ்திரார்த்தமென்று நாம் நிஷ்கர்ஷித்தபடி இவ்வர்த்தத்தை இப்படியே அநுஷ்டிக்கிறார்களோ, அநுஷ்டிக்காவிட்டாலும் யாவர்கள் இதில் சிரத்தையோடிருக்கிறார்களோ, சிரத்தையில்லாவிடினும் யாவர் இதில் அசூயை கொள்ளாமலிருக்கிறார்களோ, அதாவது இதில் தோஷத்தை ஏறிடாமலிருக்கிறார்களோ, இவர்கள் யாவரும் அநாதிகாலமாய் பற்றிக்கிடக்கிற (ஸம்ஸாரஹேதுவான) ஸகல கர்மங்களினின்றும் விடுபடுவார்கள். [அநுஷ்டிப்பவர்விடுபடுவது யுக்தம்; மற்றவரும் விடுபடுவார்களென்பது எப்படியெனில் - அநுஷ்டியாவிடினும் இதில் சிரத்தை பண்ணுவதினாலும் அசூயை கொள்ளாமையினாலும் அவர்களுக்கு ஸகல பாபங்களுந் தொலைகின்றன; அதனால் நாளடைவிலே இந்த அர்த்தத்தை அநுஷ்டித்து அப்புறம் விடுபடுவார்களென்று திருவுள்ளம்.]

(அ-கை.) எம்பெருமானுக்குத்திருவுள்ளமான உபநிஷத்தின் அர்த்தத்தை அநுஷ்டியாதவருக்கும் அதைப்பேணாதவருக்கும் அதில் அசூயை கொண்டவருக்கும் வரும் கெடுதி சொல்லுகிறது.

𑌯𑍇 𑌤𑍍𑌵𑍇𑌤𑌦𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌨𑍍𑌤𑍋 𑌨𑌾𑌨𑍁𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍 |
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌮𑍂𑌢𑌾𑌂𑌸𑍍𑌤𑌾𑌨𑍍 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑌷𑍍𑌟𑌾𑌨𑌚𑍇𑌤𑌸𑌃 || ௩௨ ||

(௩௨) "இந்த ஆத்மவஸ்துவெல்லாம் எனக்குச் சரீரமாயிருக்கையாலே என்னைப்பற்றியதாய் எனக்கு சேஷப்பட்டதாய் நான் ஏவினால் பிரவிருத்திக்குந் தன்மையதாயிருக்கிறது" என்கிற என் ஸித்தாந்தப்படி அநுஷ்டியாதவர்களும், இதில் சிரத்தைபண்ணாதவர்களும், இதில் அசூயை கொண்டவர்களும் ஒன்றிலும் ஒன்றுந்தெரியாத பெரும் மூடர்களாய்க் கெட்டுப்போவர்கள். [மனதுக்குக் காரியம் வஸ்துவை உள்ளபடி அறிகை;இவர்கள்மனதுக்கோ அதில்லை; அதில்லாமையாலே விபரீதஞானமுண்டாய்க் கெட்டுப்போகிறார்களென்று தாத்பரியம்.]

(அ-கை.) ஆக விப்படி "பிரகிருதியி லகப்பட்டவனைக் கர்த்தாவென்று நினைப்பது, அந்தப் பிரகிருதி குணங்களின் ஸம்பந்தத்தாலன்றி வேறில்லையென்றும் ஆனால்அந்தகர்த்ருத்வம் பரமபுருஷாதீநமென்றும் அநுஸந்தித்து, கருமயோகத்துக்குத் தக்கவனாகிலும் ஞானயோகத்துக்குத் தக்கவனாகிலும் இருவரும்கருமயோகமே செய்யக்கடவர்கள். பிரஸித்தனோ மிகுதியும்அதையே செய்யவேண்டியது" என்றருளிச்செய்து, இனி இந்த அத்தியாயத்தின் மீதியாலே ஞானயோகம் செய்வது கஷ்டமென்றும் பிரமாதத்தை உண்டாக்குமென்றும் அருளிச்செய்கிறார்.

http://acharya.org

ஸத்ருஶம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர்ஜ்ஞாநவாநபி |
ப்ரக்ருதிம் யாந்தி பூதாநி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி ||௩௩||

(௩௩) பிரகிருதிக்குப்புறம்பான ஆத்மவஸ்துவைத்தான் எப்போதும் அநுஸந்திக்கவேண்டுமென்று சொல்லுகிற சாஸ்திரஞாநமுள்ளவனும், தன்னைத்தொடர்ந்த பிரகிருதியினது பழைய வாஸனையின்படி சப்தாதி விஷயங்களிலேயே பயிற்சிசெய்கிறான். ஏனெனில்-அசேதநத்தோடு கலசின ஜந்துக்கள் அநாதி வாஸனையைத் தொடராமலிருக்குமோ? அவைகளை சாஸ்திரக்ஞன் கட்டுப்படுத்தினமட்டில் இவன் செய்யும் கட்டு என்பயனுடைத்தாம்?

(அ-கை.) பிராணிகள் பிரகிருதியைத் தொடரும் வகை சொல்லுகிறது.

இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ | ௩௩-௨.

(௩௩-௨) காது முதலியஞாநேந்திரியத்துக்குசப்தம்முதலியவற்றிலும் வாக்கு முதலிய கருமேந்திரியத்துக்கு வசநம் முதலியவற்றிலும் அநுபவிக்கவேண்டுமென்கிற ஆசையான்து பழைய வாஸனையின் வலிமையால் ஒழிக்கப்போகாதபடி வந்து சேருகிறது; அந்த ஆசை நிறைவேறுவதற்குஏதேனும் விரோதம் வருமாகில், அதனிடத்தில் அமோகமான குரோதம் விளைகிறது. [இவ்விரண்டும்; அதாவது-காமம் குரோதமென்கிற விரண்டும், ஞாநயோகத்திலிழிந்து ஸகல இந்திரியங்களையு மடக்கியவனையும் தாம் வசப்படுத்தி, பலாத்காரமாய் தங்காரியங்களோடு கொண்டுசேர்க்கின்றன. பின்பு இவன் ஆத்மஸ்வரூபத்தை நாடாமல் நசித்துப்போகிறான்.$]

தயோர்ந வஶமாகச்சேத் தௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ ||௩௪||

(௩௪) புருஷனால் ஜயிக்கக்கூடாத சத்துருக்கள் காமமென்னும் குரோதமென்னு மிரண்டுண்டாகையாலே வீணிலே ஞாநயோகத்திலிழிந்து அவற்றிற்கு வசப்படக்கடவனல்லன்.

ஶ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத் ஸ்வநுஷ்டிதாத் |
ஸ்வதர்மே நிதநம் ஶ்ரேய: பரதர்மோ பயாவஹ: ||௩௫||

(௩௫) பிரகிருதியிலகப்பட்ட புருஷன் தனக்கேலாத ஞாநயோகத்தைச் சிறிதுகாலம் குறைவற அநுஷ்டித்துவந்து இடையில் விட்டு விட்டு அதனால் பிரமாதத்தைவிளைவித்துக்கொள்வதைப்பார்க்கிலும், தனக்கு அடுத்ததாய் சுகமாய் செய்யக்கூடியதான கருமயோகத்தைச்செய்துவந்து அதில் ஸித்திபெறுமற்போனாலுங்கூடமிக நலமாம். அதெப்படியென்றால்:—ஞாநயோகத்துக்கு விரோதியான பாவமொன்று மில்லாமையாலே மறுஜந்மத்திலாவது இந்திரியவியாகூலமற்றுச் செய்யும்படி ஸம்பவிக்குமன்றோ? ஆகையால் தன்தர்மமானகருமத்தைவிட்டுப் பிறர்தர்மமான ஞாநத்தைமேற்கொள்வதெப்போதும் அநர்த்தந்தான்.

$ [ ] இதற்குள்ளகப்பட்ட விஷயம் - பூர்வ சுலோகத்தோடு இந்த சுலோகத்தை ஒன்றுபடுத்துவதால் ஏர்ப்பட்ட தாத்பரியம்.

http://acharya.org

(அ-கை.) அர்ச்சுநன் பிரசிநம்பண்ணுகிறான்.

அர்ஜுந உவாச || அத² கேந ப்ரயுக்தோऽயம் பாபம் சரதி பூருஷ꞉ | அநிச்ச²ந்நபி வார்ஷ்ணேய ப³லாதி³வ நியோஜித꞉ || ௩௬ ||

(௩௬) ஞாநயோகத்திலிழியுமவன் "நான் விஷயாநுபவத்தில் இழியக்கடவேனல்லேன்" என்கிற உறுதியோடிருக்கச்செய்தே அவனை வலிவில் இழுத்து விஷயங்களை அநுபவிக்கும்படி செய்வது யாது? என்று கேட்டான்.

ஸ்ரீப⁴க³வாநுவாச || காம ஏஷ க்ரோத⁴ ஏஷ ரஜோகு³ணஸமுத்³ப⁴வ꞉ | மஹாஸ²நோ மஹாபாப்மா வித்³த்⁴யேநமிஹ வைரிணம் ||௩௭||

(௩௭) அதற்குக் கண்ணன் திருவாய் மலர்ந்தருளியது - அர்ச்சுந! தோன்றுவதுந்திரிவதுமாயிருக்கிறப் பிரகிருதியோடு சேர்ந்திருக்கிறவனாயில் புருஷன் ஞாநயோகத்தை ஆரம்பித்தானாகில் ரஜோகுணத்தின் காரியமாய் பழைய வாஸனையாலுண்டான காமமென்னும் பகையானது, இவனைச் சப்தாதிவிஷயங்களில் ஏவாமல் விடாது. அப்போது இவனுக்கு அபேக்ஷை நிறைவேறுமற் போமாகில், அதற்கு விரோதிகளாய்த் தோன்றும் பிராணிகளிடத்தில் (அந்த காமமே) கோபமாகத்திரிந்து, ஹிம்ஸைமுதலான கொடுஞ்செயலையுஞ்செய்யும்படி செய்கிறது. ஆகையால் ஞாநயோகத்துக்குஇதுவே விரோதியென்றறி.

தூ⁴மேநாவ்ரியதே வஹ்நிர்யதா²த³ர்ஸோ² மலேந ச|
யதோ²ல்பே³நாவ்ருதோ க³ர்ப⁴ஸ்ததா² தேநேத³மாவ்ருதம்||௩௮||

(௩௮) அக்னியைப் புகையும் கண்ணாடியை அழுக்கும் கர்பபத்தைக் கருப்பையும் மூடிக்கொள்வதுபோல இந்தப் பிராணி ஸமூஹத்தைக் காமமானது மூடிக்கொண்டிருக்கிறது.

(அ-கை.) அது மூடும்படியை அருளிச்செய்கிறார்.

ஆவ்ருதம் ஜ்ஞாநமேதேந ஜ்ஞாநிநோ நித்யவைரிணா|
காமரூபேண கௌந்தேய து³ஷ்பூரேணாநலேந ச||௩௯||

(௩௯) ஞாநஸ்வபாவனான இந்த ஜந்துவின் ஆத்மஞாநத்தை, (விஷயமோஹத்தைச்செய்யும் நித்திய சத்துருவான) காமமானது, எட்டாதவஸ்துவிலெல்லாம் ஆசையை விளைவித்து, அவை கிடைத்தாலும் போதுமென்கிற திருப்தியை உண்டுபண்ணமல் மூடிவிடுகிறது.

(அ-கை.) எவ்வித உபகரணங்கள் கொண்டு மூடுகிறதென்றால் அருளிச்செய்கிறார்.

இந்த்³ரியாணி மநோ பு³த்³தி⁴ரஸ்யாதி⁴ஷ்டா²நமுச்யதே|
ஏதைர்விமோஹயத்யேஷ ஜ்ஞாநமாவ்ருத்ய தே³ஹிநம்|| ௪௦||

http://acharya.org

(௪0) காமமானது, இந்திரியம் மனது புத்தி இவைகளோடு ஆத்மாவில் இருந்துகொண்டு, (விஷயமென்றுல்கொண்டாட்டமான) அவைகளைக் கொண்டே பிரகிருதியோடு கலசிய ஞாநஸ்வரூபனுன இந்த ஜீவனை மூடி, நானுவிதமாய்மோஹிக்கச்செய்கிறது. அதனுல் ஆத்மஞாநத்தில் கண் வைக்கவொட்டாமல் விஷயத்தில் திருப்பிவிடுகிறது.

தஸ்மாத்த்வமிந்த்ரியாண்யாதௌ நியம்ய பரதர்ஷப|
பாப்மாநம் ப்ரஜஹி ஹ்யேநம் ஜ்ஞாநவிஜ்ஞாநநாஶநம்||௪௧||

(௪௧) இந்திரிய வியாபாரங்களையெல்லா மொழித்துச் செய்யவேண்டியதான ஞாநயோகத்தில் இழிந்தவனுக்கு, இந்தக் காமமென்னும் சத்துருவானது விஷயத்தில் உண்டான ஊற்றத்தாலே ஆத்மஞாநத்தை விரோதிக்கின்றமையால், (பிரகிருதியுடன் கலசி இந்திரிய வியாபாரங்களிற் பழகிய) நீ, மோக்ஷோபாயந் தேடத்தொடங்கும்போதே (இந்திரியவியாபாரரூபமான) கருமத்திலிழிந்து, (ஆத்மஸ்வரூபஞாநத்தையும் அதின் விவேகத்தையும் போக்கடிக்கின்ற) நாசமான பாசத்தை ஒழிக்கப்பார்.

(அ-கை.) ஞாநவிரோதிகளுக்குள் இதுதான் பிரதாநமென்கிருர்.

இந்த்ரியாணி பராண்யாஹுரிந்த்ரியேப்ய: பரம் மந:|
மநஸஸ்து பரா புத்திர்யோ புத்தே: பரதஸ்து ஸ:||௪௨||

(௪௨) இந்திரியங்கள் விஷயத்தைத் தேடப்புக்கால், ஆத்மாவின் விஷயத்தில் ஞாநம் பிறவாதாகையாலே ஞாநவிரோதிகளில் முக்கியம் இந்திரியங்கள்: அவை அடங்கினுலும் மனது விஷயத்தைத் தேடுமாகில் அந்த ஞாநம் உண்டாகமாட்டாதாகையாலே அவற்றிலும் மனது முக்கியம்: அம்மனது அடங்கினுலும் புத்தியானது, விபரீதமாகஎண்ணத்தொடங்குமாகில்அது உண்டாகமாட்டாதாகையால் அதிலும் புத்தி முக்கியமாம்: இவையெல்லாம் அடங்கினுலும் (வாஸனையாலுண்டான இச்சையென்கிற) காமம்இருந்தாகில்,அதுவே அவ்விந்திரியம் முதலானவைகளைத் தன்வசமாக்கி ஞாநமுண்டாகாதபடி செய்துவிடும். ஆகையா லிதுவே யெல்லாவற்றிலும்சீரியது.

ஏவம் புத்தே: பரம் புத்த்வா ஸம்ஸ்தப்யாத்மாநமாத்மநா|
ஜஹி ஶத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம்||௪௩||

(௪௩) ஓ மஹாபாகுவே! ஞாநவிரோதிகளுக்குள் புத்தியைக்காட்டிலும் காமமானது மேலானதென்றுேர்ந்து அந்த புத்தியைக்கொண்டு மனதைக் கருமயோகத்தில் நிறுத்தி, காமமென்னும் இக்கொடும்பகையை வெல்லப்பார்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

http://acharya.org

ஸ்ரீ:.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

நான்காவது அத்யாயம்

அவதாரிகை,

மூன்றுவது அத்தியாயத்தில் பிரகிருதியோடு கலசிய புருஷனுக்கு, மோக்ஷாபிலாஷையுண்டானாலும் உடனே ஞாநயோகத்தில் இழியப்போகா தாகையாலே கருமயோகமே செய்யததக்கதென்றும், ஞாநயோகததில் அதிகாரமுள்ளவனுக்கும் (நான் செய்யவில்லையென்கிற வெண்ணத்துடனே) கருமயோகம் செய்வதே மேலானதென்றும்; அதில் விசேஷமாய்ஞாநாநுஷ்டாநங்களால் பிரஸித்தனுக்கோ மிகுதியும் அதுவே செய்யத்தக்கதென்றும் தகுந்த காரணத்தோடு அருளிச்செய்து, நான்காவதில் - கருமயோகமானது லோகரக்ஷணத்துக்காக இந்த மந்வந்தரத்தின் ஆதியிலே தம்மால் அருளிச்செய்யப்பட்டமையால் கருமத்தை அவசியம் செய்யவேண்டுமென்று திடப்படுத்தி; இந்த கருமயோகமும் ஞாநத்தை உட்கொண்டமையால் இதுவே ஞாநயோகரூபந்தானென்று மருளிச்செய்து கருமயோகததின் ஸ்வரூபம், அதின் பேதம், அதில் ஞாநபாகத்துக்குப் பிராதாநயம், இவைகளையெல்லாம் அருளிச்செய்கிறூர். * பிரஸங்கமாய் எம்பெருமானுடைய அவதாரரஹஸ்யமும் சொல்லப்படுகிறது.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥ 𑌇𑌮𑌂𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍇𑌯𑍋𑌗𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨
𑌹𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍। 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌮𑌨𑌵𑍇𑌪𑍍𑌰𑌾𑌹 𑌮𑌨𑍁𑌰𑌿𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥௧॥
𑌏𑌵𑌂𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌿𑌮𑌂𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑍋𑌵𑌿𑌦𑍁𑌃।
𑌸𑌕𑌾𑌲𑍇𑌨𑍇𑌹𑌮𑌹𑌤𑌾 𑌯𑍋𑌗𑍋𑌨𑌷𑍍𑌟𑌃𑌪𑌰𑌨𑍍𑌤𑌪॥௨॥
𑌸𑌏𑌵𑌾𑌯𑌂𑌮𑌯𑌾𑌤𑍇𑌦𑍍𑌯 𑌯𑍋𑌗𑌃𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃।
𑌭𑌕𑍍𑌤𑍋𑌸𑌿𑌮𑍇𑌸𑌖𑌾𑌚𑍇𑌤𑌿 𑌰𑌹𑌸𑍍𑌯𑌂𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍॥௩॥

(௧-௨-௩) அர்ச்சுந! இப்பொழுது நம்மால் சொல்லப்பட்ட இந்த யோகமானது கேவலம் உன்னை யுத்தத்தில் புகவிடுவதறகாகச் சொன்னதாக நினையாதே கொள். மநவநதரத்தின் ஆதியில், ஸகலலோகமுங் கடைத்தேற நிமித்தம் மோக்ஷஸாதநமாக இதை நாம் விவஸ்வானுககுச் சொன்னோம்; அவர் மநுவுக்கும் அவர் இக்ஷ்வாகுவுக்கும் சொல்ல இப்படி பரம்பரையாய் வந்தது; இதை ராஜருஷிகளெல்லா மறிவார்கள். கேட்பவரின புத்திக்குறைவினால் வெகுகாலத்துககுமுன் இது நஷ்டப்பிராயமாய்விட்டது. அதையே இபபொழுது சிறிதும் பிசகாதபடி, (நமக்குத் தோழனாய் நமமிடத்தில் மிகுதியும் பக்தியுடன் நம்மையே சரணாகப்பற்றிய) உனக்கு விஸ்தா

* பிரஸங்கமாவது - ஒன்றினமீதொனருப் வரும் பேசசு.

http://acharya.org

ரமாகச்சொன்னோம். இது, வேதாந்த ரஹஸ்ய ஞானமாகையால் நம்மாலல்லது மற்றொருவராலும் சொல்லுந் திறத்ததன்று.

(அ-கை.) இதனிடையில் எம்பெருமானுடைய அவதாரத்தின் உண்மையை அறிவதற்காக அர்ச்சுநன் பிரசிநம் பண்ணுகிறான்.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥ 𑌅𑌪𑌰𑌂 𑌭𑌵𑌤𑍋 𑌜𑌨𑍍𑌮 𑌪𑌰𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑌃 ।
𑌕𑌥𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 ॥௪॥

(௪) கிருஷ்ண! காலஸங்கியையைப்பார்த்தால் அடியேன் பிறந்த (ஸம) காலத்தில்தான் தேவரீரும் அவதரித்ததாகத் தெரிகிறது; விவஸ்வானுடைய பிறப்போ இருபத்தெட்டு சதுர்யுகமானதாகத் தெரிகிறது; இப்படியிருக்க, ஆதியில் விவஸ்வானுக்குத் தேவரீர் அருளிச்செய்ததாகச் சொன்னால் அதை யெங்ஙனம் நம்புவது? [மஹான்கள் ஜந்மாந்தரவிருத்தாந்தம் அறிந்து சொல்லக்கூடுமாகையாலும், கண்ணன் மஹானென்றும் ஸர்வேசுவரனென்றும் அர்ச்சுநனுக்குத்தெரியுமாகையாலும் ¶ கண்ணன் வார்த்தையில் விரோதமில்லையென்று தெரிந்திருக்கச்செய்தே, அர்ச்சுநன் தெரியாதவன்போல் கேட்பதைப்பார்த்தால் (நிகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதானனாய் ஸார்வஜ்ஞ ஸத்தியஸங்கல்பாதிகளுடையனான) பரமபுருஷனுக்கு, (கருமாதீனரான தேவமனுஷியாளோடொத்திருக்கு) மிந்த ஜந்மம் என்ன இந்திரஜாலம்போல் மாயமா? இல்லையென்று ஸத்யமா? ஸத்யமானால் ஜந்மத்தின் பிரகாரமென்ன? திருமேனி என்ன ஸ்வரூபம்? எப்பொழுது ஜந்மம்? எதற்காக வெடுத்ததென்கிற சங்கையைப் பரிஹரிப்பதற்காகக் கேட்டதாய்த் தெரியவருகிறது.]

(அ-கை.) இப்படி வினவிய அர்ச்சுனனைப்பார்த்து கண்ணன் அருளிச்செய்கிறார்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥ 𑌬𑌹𑍂𑌨𑌿 𑌮𑍇 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌨𑌿 𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌤𑌵
𑌚𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 । 𑌤𑌾𑌨𑍍𑌯𑌹𑌂 𑌵𑍇𑌦 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ॥௫॥

(௫) அர்ச்சுந! எனக்கும் பல ஜந்மங்கள் கழிந்தன, உனக்கு மப்படியே; ஆனால் அவை யாவும் எனக்குத்தெரியும் உனக்குத் தெரியாது. [இங்கெ உனக்கும் என்று அர்ச்சுனன் ஜந்மத்தைத் திருஷ்டாந்தமாகச் சொல்லுகையாலே எம்பெருமானுடைய அவதாரம் ஸத்யமென்றதாயிற்று.]

(அ-கை.) அவதாரத்தின்படியும், திருமேனியின் உண்மையும், திருவவதாரத்துக்குக் காரணமும் அருளிச்செய்கிறார்.

𑌅𑌜𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍𑌨𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍 ।
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌸𑌮𑍍𑌭𑌵𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌾𑌯𑌯𑌾 ॥௬॥

¶ அர்ச்சுனன் 𑌪𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌂𑌧𑌾𑌮 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰ாதியாக மேலே சொல்லப்போகிறபடியாலும், 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌏𑌵 𑌹𑌿 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 இத்யாதியாக பீஷ்மாதிகள் ராஜசூயயாகாதிகளில் சொல்லக்கேட்டானாகையாலும் தெரியும்.

http://acharya.org

(௬) பிறப்பில்லாமை, அழிவில்லாமை, ஸர்வேசுவரத்வமென்கிற பரமேசுவரன் தன்மைகளிலொன்றும் விடாமல் * ஸ்வஸ்வரூபத்துடனே என இச்சையினால் அவதரிக்கிறேனெ; அதாவது - ஸமஸ்தகல்யாண குணாத்மகனாயிருக்கையாகிற ஸர்வேசுவர ஸ்வபாவத்தைவிடாமல் என ஸ்வரூபத்தையே என் ஸங்கல்பத்தால் தேவாதிருபமாகச்செய்துக்கொண்டு அவதரிக்கிறேனென்றபடி. இவர்த்தம் (அஜாயமாநோ ப³ஹுதா⁴ விஜாயதே) என்று சுருதியும் சொல்லுகிறது.

[இப்படி அர்த்தம் சொல்லாதபோது ப³ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந | தாந்யஹம் வேத³ஸர்வாணி ததா³த்மாநம் ஸ்ருஜாம்யஹம் || ஜந்மகர்ம ச மே தி³வ்யமேவம் யோ வேத்தி தத்த்வத: என்கிற முன்பின்னோடு விரோதிக்கும்.] மாயா வயுநம் ஜ்ஞாநம் என்று நிகண்டுக்காரர் சொல்லியபடி, மூலத்தில மாயா சப்தம் ஸங்கல்பரூபமான ஜ்ஞாநபரம். மாயயா ஸததம் வேத்தி ப்ராணிநாஞ்ச ஶுபா⁴ஶுப⁴ம் என்று முன்னோர்களும் மாயாசப்தத்தாலே ஜ்ஞாநத்தைச்சொன்னார்கள். அப்படியே பிரகிருதியென்பது இங்கே ஸ்வபாவபரம்.

(அ-கை.) அவதாரகாலத்தை அருளிச்செய்கிறார்.

யதா³யதா³ ஹி த⁴ர்மஸ்ய க்³லாநிர்ப⁴வதி பா⁴ரத|
அப்⁴யுத்தா²நமத⁴ர்மஸ்ய ததா³த்மாநம் ஸ்ருஜாம்யஹம்||௭||

(௭) நாம் அவதரிப்பதற்கு ஒருகால நியமமில்லை; வேதத்திற் சொன்ன வருண ஆசிரம ஆசாரங்களுக்கு வாட்டமுண்டாய் எப்பொழுதெப்பொழுது அதர்மத்துக்குக் கிளர்ச்சியுண்டாகுமோ, அப்பொழுதப்பொழுது முற்கூறியபடியே நாம் அவதரிக்கிறோம்.

பரித்ராணாய ஸாதூ⁴நாம் விநாஶாய ச து³ஷ்க்ருதாம்|
த⁴ர்மஸம்ஸ்தா²பநார்தா²ய ஸம்ப⁴வாமி யுகே³ யுகே³||௮||

(அ) அவதரிப்பதற்குப் பிரயோஜநம் அருளிச் செயகிறார். ஸாதுக்களை ரக்ஷிக்கவும, துஷ்கர்மாக்களை நாசம்செய்யவும், தருமததை ஸ்தாபிக்கவும் யுகந்தோறும் அவதரிக்கிறேன் [என்று சப்தார்த்தம்.]

ஸாதுக்களாவார் கீழ்ச்சொன்ன லக்ஷணமுள்ள ஸ்ரீவைஷ்ணவசிகாமணிகள்: அவர்கள் நம்மை ஆஸ்ரயிக்கப்பிரவர்த்திதது, (நமது நாம கர்ம ஸ்வரூபங்கள் வாக்குக்கும் மனதுக்கு மெட்டாமையாலே நம்மைக்கண்டாலல்லது தமக்கு ஆத்மயாத்ரை நடவாமல், ஒருக்ஷணத்தை ஆயிரங்கற்பமாக நினைத்

---

* ஸ்வஸ்வரூபமோக்ஷிதப்ரவணமுகே²ஷ்வஸ்தா²வஸாந: || க்ஷயஜே ஸ்ராஜஸ்த²வாரகே || பணஷோட³ஶஸாஹித்யேஹிரண்யஸ்த²வாரேஷ: || தத்³விதீயம் வாரேஷோநாஸ்ய: ச்ருஷிதா ஹிரண்ய:|| ஸர்வேந்த்³ரியேஷ்வஜஜ்ஞேவிச்ருஷ்டவாரேஷாயி || ஹாரவேஸ்த்வஸ்க்தவ ஷ்ருகாஸ்ஜ்ஞா|| ஸர்வக்ருத்ரா ஸர்வகாஸ்ஸர்வம் தஸ்ஸர்வரஸ: ஹாரஜதம்வாஸ: என்று சுருதியில் பிரஸித்தம்.

http://acharya.org

தவர்களாய் உருமாய்ந்துப்போவர்கள் என்று நமது ஸ்வரூபம், சேஷ்டிதம், கடாக்ஷம், ஸம்பாஷணம் முதலியவைகளைத் தந்து அவர்களை ரக்ஷிப்பதற்காகவும்; அப்படியில்லாமல் கெட்ட நடையில் இருப்பாரை யழிப்பதற்காகவும், நமது ஆராதநரூபமான வைதிகத்தருமம் க்ஷீணமாய்ப்போனால் அதை (ஆராத்யனை) நம் ஸ்வரூபத்தைக்காட்டி ஸ்தாபிப்பதற்காகவும், தேவமனுஷ்யாதிரூபமாய் யுகந்தோறும் அவதரிக்கிறோம். [கிருதயுகமென்றும் த்ரேதாயுகமென்றும் இப்படி யுகவிசேஷ நியமமுமில்லை] [என்று பாஷியம்.]

ജന്മ കൎമ്മ ച മേ ദിവ്യമേവം യോ വേത്തി തത്ത്വതഃ।
ത്യക്ത്വാ ദേഹം പുനൎജ്ജന്മ നൈതി മാമേതി സോഽൎജ്ജുന॥ ௯॥

(௯) திவ்யமான என் ஜந்மத்தையும் கர்மத்தையும் உள்ளபடியே எவன் அறிகிறானோ, அர்ச்சுந! அவன் தேஹத்தைவிட்டு என்னை அடைகிறான்; மீண்டும் வருகிறதில்லை [என்று சப்தார்த்தம்.] இதற்கு பாஷியம்:—

(இப்படி) கர்மாதீநமாய், (ஹேயத்ரிகுணரூபப்) பிரகிருதி ஸம்பந்தரூபமாயிருக்கிற ஜந்மமில்லாதவனாய், ஸர்வேசுவரத்வம் ஸர்வஜ்ஞத்வம் ஸத்யஸங்கல்பத்வந் தொடக்கமான ஸமஸ்த கல்யாண குணாத்மகனாயிருக்கிற நம்முடைய ஸ்வரூபமும் சேஷ்டையும் அப்ராக்ருதமாய் நமக்கே அஸாதாரணமாயிருக்கிறதென்றும், ஸாதுக்களை ரக்ஷிப்பதும் பிராணிகள் நம்மை ஆச்ரயிப்பதுமே அதற்குப்பிரயோஜந மென்றும், உள்ளபடியே எவன் அறிகிறானோ, அவன் அப்பொழுதுண்டான தேஹத்தைவிட்டவுடன் மறுபடியும் ஜந்மமெடுக்காமல் நம்மையே யடைகிறான். நம்முடைய திவ்யமான ஜந்மசேஷ்டிதங்களை உள்ளபடியே அறிந்தமையால், நம்மை ஆச்ரயிக்கவொட்டாமல் விரோதிக்கிற ஸகலபாபங்களும் நசித்து இந்த ஜந்மத்திலேயே முன் சொன்னபடி நம்மை ஆச்ரயித்து நம்மையே விரும்பி நம்மையே நினைத்திருந்து நம்மையே அடைகிறான். [என்று பாஷ்யம்.]

(அ-கை.) அதையே அருளிச்செய்கிறார்.

വീതരാഗഭയക്രോധാ മന്മയാ മാമുപാശ്രിതാഃ।
ബഹവോ ജ്ഞാനതപസാ പൂതാ മദ്ഭാവമാഗതാഃ ௧௦॥

(௧௦) ராகம், பயம், குரோதம் இவற்றையொழித்து நம்மை ஆச்ரயித்து நாமே கதியாயிருந்த வெகுபேர்கள் நமது ஜந்மகர்மங்களை யுள்ளபடியே அறிவதென்கிற பெருந்தவத்தால் பரிசுத்தர்களாய் நமது ஸ்வபாவத்தையடைந்தார்கள். இப்படியே * வேதமும் சொல்லுகிறது.

യേ യഥാ മാം പ്രപദ്യന്തേ താംസ്തഥൈവ ഭജാമ്യഹം।
മമ വൎത്മാനുവൎത്തന്തേ മനുഷ്യാഃ പാൎത്ഥ സൎവ്വശഃ॥௧௧॥

(௧௧) என்னை எவர்களெப்படி ஆச்ரயிக்கிறார்களோ, அவர்களை நான் அப்படியே அடைகிறேன்; ஸகலமநுஷ்யர்களும் என் மார்க்கத்தையே அநுஸரிக்கிறார்கள். [என்று சப்தார்த்தம்.] இதற்கு பாஷியம்:—

* തസ്യ ധീരാഃ പരിജാനന്തി യോനിം. புத்திமான்களுக்குள் சிறந்தவர்களே அவனுடைய ஜந்மப்பிரகாரத்தை அறிகின்றார்களென்றர்த்தம்.

http://acharya.org

நம்மை ஆஸ்ரயிக்கவேண்டு மென்கிற அபேக்ஷையுள்ளவர்களை நாம் கேவலம் தேவ மநுஷ்யாதி ரூபமாய் மாத்திரம் அவதரித்துப் பரிபாலிக்கிறேனில்லை. பின்னை நம்மை அடையக்கோரி எவர்கள் எந்தப்பிரகாரம் தம் அபேக்ஷைக்குத்தக்கபடி நம்மைநினைத்து ஆஸ்ரயிக்கிறார்களோ, அவர்களுக்கு அவரிஷ்டப்படி நம் தரிசநம் கொடுக்கிறோம். இவ்விஷயத்தில் அதிகமாய்ச் சொல்லுவதென்ன? ஸகலமநுஷ்யர்களும் நம்மை அநுஸரிக்கவேண்டுமென்றே விரும்பியவர்களாய், யோகிகளுடைய வாக்குக்கும் மனதுக்கு மெட்டாத நமது ஸ்வபாவமெல்லாவற்றையும் தமது கண் முதலிய கரணங்களாலே தாம் அபேக்ஷித்தபடியெல்லாம் அநுபவித்து மீண்டும் நம்மைத் தொடர்ந்து நாமிட்ட வழக்காயிருக்கிறார்கள்.

(அ-கை.) இப்படி பிரஸங்கமாய்ச் சொல்லிவந்த விஷயத்தை முடித்து, பிரகிருதம் கருமயோகத்துக்கே ஞானாகாரமுண்டென்று அருளிச்செய்வதற்காக, அப்படிப்பட்ட கர்மயோகாதிகாரி கிடைப்பது அரிதென்கிறார்.

காங்க்ஷந்த: கர்மணாம் ஸித்திம் யஜந்த இஹ தேவதா: |
க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா ||௧௨||

(௧௨) கர்மஸித்தியை அபேக்ஷித்து இந்த தேவதைகளைமாத்திரம் ஆராதிக்கிறார்கள்; காரணம்:—* மநுஷ்யலோகத்தில் உடனே கருமஸித்தி யுண்டாகிறது. [என்று சப்தார்த்தம்.] இதற்கு பாஷியம்:—

லௌகிக புருஷர்கள் யாவருமே அநாதிகாலமாய்த்தொடர்ந்த பாவங்கள் தொலையாமையாலே விவேகமற்றவர்களாய் தங்களுக்கு உடனே பலம் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு, மோக்ஷவிரோதியான புத்திரன் பசு அன்னம்முதலிய பலன்களுக்காக ஸகல கர்மங்களையும் இந்திராதிதேவதைகளின் ஆராதநார்த்தமாகமாத்திரஞ் செய்கிறார்கள். அதுவேயல்லது ஒருவனுகிலும் ஸம்ஸாரத்தை வெறுத்து மோக்ஷகாமனுய முன் சொன்ன கருமயோகத்தைப் பலத்தில் அபேக்ஷையின்றி, (இந்திராதிதேவதைகளுக்கு ஆத்மாவாய் ஸகல யக்ஞங்களுக்கும் போக்தாவான) நமக்கு ஆராதனமாகச் செய்பவனில்லை.

(அ-கை.) கீழ்ச்சொன்ன கர்மயோகத்தை ஆரம்பிக்கவொட்டாமல் தடைசெய்கிற பாபம் நசிக்கும் வழி அருளிச்செய்கிறார்.

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குணகர்மவிபாகஶ: |
தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்த்யகர்த்தாரமவ்யயம் ||௧௩||

(௧௩) குணகர்மங்களின் பிரிவின்படி என்னால் நான்குவர்ணம் சிருஷ்டிக்கப்பட்டது; நான் அதற்குக் கர்த்தாவாயிருக்கச்செய்தேயும் கர்த்தாவல்லேனென்று நிர்விகாரனான என்னையறி [என்று சப்தார்த்தம்.] பாஷியம்:—

---

* மநுஷ்யலோகசப்தம் ஸ்வர்க்காதிகளையுங் காட்டக்கடவது.

நான்குவர்ணங்களுடன்கூடிப் பிரம்மாதி ஸ்தம்பபர்யந்தமான ஸகல லோகமும், ஸத்வம்முதலியகுணங்களின் பிரிவுக்குத்தக்கபடியும், அதுக்கேற்ற சமம் முதலிய கருமங்களின் பிரிவுக்குத்தக்கபடியும் பிரித்து என்னால் * ஸ்ருஷ்டிக்கப்பட்டது. என்னாலேயே ரக்ஷிக்கப்படுகிறது. என்னாலேயே ஸம்ஹரிக்கப்படுகிறது. இப்படி விசித்திரமான இந்த ஸ்ருஷ்டி முதலியவற்றிற்கு நான் கர்த்தாவாயிருந்தாலும் கர்த்தாவல்லேனென்றுமறி. [இந்த அம்சம் மேல் சுலோகத்தில் விவரிக்கப்படும்.]

(அ-கை.) எப்படியென்றால் அருளிச்செய்கிறார்.

ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்மபலே ஸ்ப்ருஹா|

(கச) என்னைக் கர்மம் ஸம்பந்திக்கமாட்டாது; எனக்குக் கர்மபலத்தில அபேக்ஷையில்லை [என்று சப்தார்த்தம்.] இதற்கு பாஷியம்:—

விசித்திரமான இந்த ஸ்ருஷ்டி முதலிய வியாபாரங்களில் நமக்கு யாதொரு ஸம்பந்தமு மில்லை; (அதாவது - தேவர்களென்றும் மனிதர்களென்றும் பலவிதமாகப் படைக்கப்பட்டுள்ள இந்த விசித்திரமெல்லாம் நம்மால் வருமதல்ல; அர்ச்சுந! அந்தந்த ப்ராணிகளின் புண்ணியபாபங்களுக்குத்தக்கபடி உண்டாகின்றன. ஆனதுபற்றியே நாம் சிருஷ்டிகர்த்தாவா யிருக்கச்செய்தேயும் நம்மைக் கர்த்தாவல்லவென்கிறது. மேலும் சிருஷ்டிக்கப்படும் பிராணிகள், சிருஷ்டியில் தங்களுக்குக் கிடைத்த சரீரம்முதலியவைகளைக் கொண்டு, (பலாபேக்ஷைக்கு ஹேதுவான தம் கர்மத்துக்குத்தக்கபடி) நமது சிருஷ்டியிலகப்பட்ட போக்யபதார்த்தங்களை அநுபவிக்கிறபடியால, சிருஷ்டிமுதலிய வியாபாரங்களாலுண்டாகும் பலத்தி லபேக்ஷையும் அவர்களுக்கேயல்லது நமக்கில்லை. [இப்படியே ○ ஸூத்திரகாரரும் சொன்னார். ஸ்ரீபராசரபகவானும் அப்படியே $.]

இதி மாம் யோ(அ)பிஜாநாதி கர்மபிர் ந ஸ பத்யதே ||கச||

(கச) இவ்வாறு சிருஷ்டிமுதலிய வியாபாரங்களுக்கு நாம்கர்த்தாவாயிருக்கச்செய்தேயும் கர்த்தாவல்லோமென்பதையும், அப்படியே சிருஷ்டி

* ஸ்ருஷ்டியென்றது - ரக்ஷணாதிகளுக்கும் உபலக்ஷணம்.

○ ஸூ|| வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் என்று.

$ நிமித்தமாத்ரமேவாஸௌ ஸ்ருஜ்யாநாம் ஸர்க்ககர்மணி | ப்ரதாநகாரணீபூதா யதோவை ஸ்ருஜ்யசக்தய: || நிமித்தமாத்ரம் முக்த்வைகம் நாந்யத்கிஞ்சிதபேக்ஷ்யதே | நீயதே தபதாம் ஸ்ரேஷ்ட ஸ்வசக்த்யா வஸ்து வஸ்துதாம் || சிருஷ்டிக்கப்படுகிற ஜீவர்களின் சிருஷ்டிக்குமாத்திரம் இந்த பரமபுருஷன் நிமித்தமேதவிர தேவாதிரூபமான விசித்திரத்துக்கெல்லாம் சிருஷ்டிக்கப்படும் ஜீவர்களின் பிராசீந கருமசக்திதான் பிரதானகாரணம்; ஆகையால் இந்தஜீவராசியானது நிமித்தத்துக்குமாத்திரம் எம்பெருமானை அபேக்ஷித்துத் தனது பிராசீந கர்மவாஸனையின்படி தேவாதிபேதத்தை யடைகிறதென்று பொருள்.

http://acharya.org

முதலிய வியாபாரங்களால் வரும் பலத்தில் நமக்குச் சிறிதும் ஸம்பந்தமில்லையென்பதையும் எவனறிகிறானோ! அவனைக் (காமயோகத்தி லிழியவொட்டாமற்றடுக்கிற) பலாபேக்ஷை முதலிய எவ்விதத் தொல்வினையும் கட்டுப்படுத்தமாட்டாது.

𑌏𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌰𑌪𑌿 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌃 |
𑌕𑍁𑌰𑍁 𑌕𑌰𑍍𑌮𑍈𑌵 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌰𑌂 𑌕𑍃𑌤𑌮𑍍 ||கரு||

(கரு) இப்படி நமது ஸ்வரூபம் ஸ்வபாவம் முதலியவற்றை யறிந்து அதனால் ஸகல பாபங்களையும் போக்கடித்து, பூர்வீகமோக்ஷார்த்திகள் பலரும் கர்மத்தையே அநுஷ்டித்தார்கள். ஆகையால் நீயும் அப்படியே இப்பொழுது நாம் சொன்னபடி நம்மை அறிந்து அதனால் பாவமற்றவனாய் விவஸ்வான் மநு முதலான பூர்வீகர்களால் செய்யப்பட்டதாயும் அக்காலத்திலேயே நம்மால உபதேசிக்கப்பட்டதாயும் புராதநமாயுமுள்ள கர்மயோகத்தை நாம்சொல்லுகிறபடியே அநுஷ்டிக்கக்கடவாய்.

(அ-கை.) இப்போது தாம் அருளிச்செய்கிறபடி கர்மத்தைக்கண்டறிவது மிக துர்லபமென்கிறார்.

𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌿𑌮𑌕𑌰𑍍𑌮𑍇𑌤𑌿 𑌕𑌵𑌯𑍋𑌽𑌪𑍍𑌯𑌤𑍍𑌰 𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌃 |
𑌤𑌤𑍍𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇𑌽𑌶𑍁𑌭𑌾𑌤𑍍 ||கசு||

(கசு) மோக்ஷத்தைக்கோரியவன் செய்யவேண்டிய கர்மம் இன்னவிதமென்றும் அதற்குள்பட்ட (ஆத்மயதார்த்த) ஞானம் இன்னவிதமென்றுந் தெரியாமல் மஹத்தான வித்வான்களும் மயங்கிக்கிடந்தார்கள். (ஞானத்தையுட்கொண்டதான) அப்படிப்பட்ட கருமத்தை இப்பொழுது நாமுனக்கு உபதேசிக்கிறோம். அதைக்கேட்டறிந்து அப்படியே அநுஷ்டித்தாயாகில் ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுவாய். [அறிவதற்குப் பயன் அநுஷ்டாநமென்று திருவுள்ளம்.]

(அ-கை.) இதை அறிவது துர்லபமென்கிற தெதினாலென்றால் சொல்லுகிறார்.

𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌹𑍍𑌯𑌪𑌿 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌚 𑌵𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 |
𑌅𑌕𑌰𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌗𑌹𑌨𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌗𑌤𑌿𑌃 ||கஎ||

(கஎ) * கர்மம் ○ விகர்மம் ‡ அகாமம் என்னு மிவற்றுள் ஒவ்வொன்றிலும் சிறிது விஷயம் அறியவேண்டியதுண்டாகையாலே மோக்ஷகாமன் செய்யுங் கர்மத்தின் வழியைக்கண்டறிவது மிகவும் துர்லபம்.[இதில் விகர்மத்தி

* காமமாவது - மோக்ஷத்துக்கு ஸாதநமாகச்செய்யும் வியாபாரம்.

○ விகர்மமாவது-வெவ்வேறுவிதமான காமம்; அதாவது - நித்யமென்றும் நைமித்திகமென்றும் காம்யமென்றும் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட காமங்களும்; அதற்கு வேண்டுந் திரவியத்தை ஸம்பாதித்தல் முதலிய கர்மங்களும். ‡ அகர்மமாவது - ஞானம்.

http://acharya.org

ல் அறியவேண்டிய அம்சமென்னவெனில்-நித்யம் நைமித்திகம், காம்யம் திரவ்யார்ஜநம் முதலிய அந்தந்த கர்மங்களுக்குத்தக்கபடி பலன் வெவ்வேறு விதமாயிருந்தாலும் அவைகளில் மனம்வையாமல் இவைகளுக்கெல்லாம் பலன் மோக்ஷமொன்றுதானென்று சாஸ்திரப்பொருளை ஒன்றுபடுத்தி நினைக்கை. இவ்விஷயம் 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍇𑌕𑌾 என்கிற விடத்தில் சொல்லப்பட்டபடியால் இங்கே விவரிக்கிறேனில்லை.]

(அ-கை.) கர்மத்திலும் (அகர்மமென்கிற) ஞாநத்திலும் அறியவேண்டுமதை யருளிச்செய்கிறார்.

𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑍇𑌦𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌚 𑌕𑌰𑍍𑌮 𑌯𑌃 |
𑌸 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌸 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 ||௧௮||

(௧௮) அர்ச்சுந! கர்மத்தில் ஞாநத்தையும் ஞாநத்தில் கர்மத்தையும் பார்க்கவேண்டும். (அதாவது-செய்யுங் கர்மத்துக்கு ஆத்மஸ்வரூபத்தின் வாஸ்தவஞாநம் வேண்டுகையாலே அந்த கர்மத்தையே ஞாநமாகவும்; அந்த ஞாநமுங் கர்மத்துக்குட்பட்டிருக்கையாலே அதையே கர்மமாகவும் * அறியவேண்டுமென்பதாம்.) இப்படி எவன் அறிகிறானோ புத்திமானாகிய அவன்தான் மனிதருக்குள் மோக்ஷத்துக்கேற்றவன்; அவன் ஸகல சாஸ்திரார்த்தங்களும் அநுஷ்டித்தவனாகிறான்.

(அ-கை.) பிரத்யக்ஷத்தில் இவன் செய்வது கர்மமாயிருக்க, அதை ஞாநமாக எப்படி நினைக்கத்தகுமென்றால் அருளிச்செய்கிறார்.

𑌯𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌃 𑌕𑌾𑌮𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 |
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌂 𑌤𑌮𑌾𑌹𑍁𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌂 𑌬𑍁𑌧𑌾𑌃 ||௧௯||

(௧௯) எந்த மோக்ஷார்த்திக்கானால் தான் செய்யும் 0 ஸகல கர்மங்களும் பலாபேக்ஷயற்றதாயும் (நான் செய்கிறேனென்கிற) ‡ ஸங்கல்பமில்லாததாயு மிருக்குமோ அவன் கர்மம் செய்யும்பொழுதெல்லாம் (பிரகிருதியைக்காட்டிலும் வேறுபட்ட) ஆத்மஞாநத்துடனே செய்கிறபடியால் அவனைத் தத்துவமறிந்த பெரியோர்கள் ஆத்மஞாநமென்னுந் தீயினால் ஸகல பாபங்களையுந் தஹித்துவிட்ட மஹாபண்டிதனாகச் சொல்லுகிறார்கள். ஆனபின்

---

* ஆத்மஸ்வரூபத்தின் வாஸ்தவஞாநத்தோடு கர்மம் செய்துவந்தால் அவ்விரண்டையும் அறிந்தவனாகிறானென்றறிக.

0 ஸகல கருமங்கள் அதாவது - நித்யமென்றும் நைமித்திகமென்றும் சொல்லப்பட்ட வைதிக கர்மங்களும், திரிவியந்தேடல் முதலிய லௌகிககர்மங்களுமாம்.

‡ ஸங்கல்பமாவது - பிரகிருதியோடும் அதன் குணங்களோடுந் தன்னை ஒன்றுபடுத்தி நினைக்கை; அதாவது - கர்மஞ்செய்யும்பொழுது பிரகிருதியின் குணத்தால்வந்த கர்த்ருத்வத்தைத் தானேற்றுக்கொண்டு "நான் செய்தேனென்று" நினைக்கை.

http://acharya.org

பு இவன் செய்யுங் கர்மங்களையெல்லாம் ஞானரூபமாக நினைப்பதற்கு ஆகாசமுண்டோ?

(அ-கை.) இதையே விவரிக்கிறார்.

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌾𑌸𑌙𑍍𑌗𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍃𑌪𑍍𑌤𑍋 𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌃।
𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍋𑌤𑌿 𑌸𑌃॥௨௦॥

(௨௦) கர்மபலத்தில் பற்றை ஒழித்து, நித்யமான தன் ஆத்மாவில் தானே திருப்தியடைந்தவனாய் (அசாசுவதமானப் பிரகிருதியில் "இது ஆதாரமென்கிற" நினைவையாமல் எவன் கர்மஞ்செய்கிறானோ, அவன் காமத்தைச் சிரத்தையுடன்செய்ய விழிந்தானாகிலும் சிறிதும் கர்மஞ்செய்தவனாகச் சொலலப்படான். [என்றால் - கர்மமென்கிற வியாஜத்தாலே ஞானத்தையே செய்கிறானென்று பொருள்.]

(அ-கை.) மறுபடியும் கர்மத்துக்கு ஞானரூபத்வமுண்டென்பதையே தெளிவிக்கிறார்.

𑌨𑌿𑌰𑌾𑌶𑍀𑌰𑍍𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌰𑍍𑌵𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃।
𑌶𑌾𑌰𑍀𑌰𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍॥௨௧॥

(௨௧) பலத்தில் அபேக்ஷையில்லாமல் சித்தத்தையும் மனதையுமடக்கி ஆத்மா ஒன்றையே நம்பியவனாய் பிரகிருதியிலும் அதைச்சேர்ந்த வஸ்துக்களிலும் எனதென்கிற அபிமானத்தை ஒழித்தவன், வாழ்நாளுள்ளளவும் கேவலம் சரீரஸம்பந்தமான கர்மத்தையே செய்துவந்தபோதிலும் அதனால் கர்மபலமான ஸம்ஸாரத்தை ஒருக்காலும் அடையமாட்டான், [ஞானநிஷ்டையில் இழியாமல் இவ்வித கர்மநிஷ்டையிலிருந்தபடியே ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை யடைகிறானென்று பொருள்.]

𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌾𑌲𑌾𑌭𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑍋 𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌾𑌤𑍀𑌤𑍋 𑌵𑌿𑌮𑌤𑍍𑌸𑌰𑌃।
𑌸𑌮𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑍌 𑌚 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌪𑌿 𑌨 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇॥௨௨॥

(௨௨) புருஷன் தன்சரீரத்தைத் தரிப்பதற்கு உபயோகமாய் ஏதேனும் சிறிது தானாகவே நேர்ந்ததாகில் அவற்றைப்பெற்று திருப்தியடைந்து ஸாதநம் முடிகிறவரையில் நேரிடும் சீதம் உஷ்ணம்முதலியவைகளைப் பொறுத்து, அப்படி நேரிடுகின்ற அநிஷ்டங்களுக்கெல்லாங் காரணம் தன்னுடைய பாவமென்கிற வெண்ணத்தினால் பிறரிடத்தில் மாச்சரியங்கொள்ளாமல், யுத்தமுதலிய கர்மங்களில் ஜயம்முதலிய ஸித்தி உண்டானாலும் உண்டாகாவிட்டாலும் அதில மனந்தாழாமலிருந்தானாகில், அவன் ஞானநிஷ்டையின்றி கேவலம் கர்மத்தையே செய்துவநதபோதிலும் அதினால் ஸம்ஸாரத்தில் கட்டுப்படமாட்டான்.

𑌗𑌤𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌚𑍇𑌤𑌸𑌃।
𑌯𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌚𑌰𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌲𑍀𑌯𑌤𑍇॥௨௩॥

http://acharya.org

(௨௩) ஆத்மஞானத்தில் மனமூன்றி அதனால் இதர ஸம்பந்தங்களற்று பிரகிருதிப் பிராகிருதங்களினின்று விடுபட்டவனாய் கீழ்ச்சொன்ன யாகாதி கர்மங்களை நிறைவேற்றுவதற்கென்றே இருக்கும் புருஷனுக்கு, ஸம்ஸார ஹேதுவான கர்மம் முழுதும் நசித்துப்போகிறது.

(அ-கை.) பிரகிருதிக்குப் புறம்பான ஆத்மஸ்வரூபத்தை நினைப்பதனால் கர்மம் ஞானரூபமாகிறதென்றார் கீழ்; இங்கு, ஸகல கர்மமும் பரப்ரம்மமான பரமபுருஷ ஸ்வரூபமென்று நினைப்பதனால் ஞானரூபமாகுமென்கிறார்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌰𑍍𑌪𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌹𑌵𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑍌 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾 𑌹𑍁𑌤𑌮𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌤𑍇𑌨 𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌰𑍍𑌮𑌸𑌮𑌾𑌧𑌿𑌨𑌾 ॥௨௪॥

(௨௪) "ப்ரம்மமயமான (* ஸ்ருக்முதலிய) கருவிகளோடுகூடிய ப்ரம்மமயமான $ ஹவிஸ்ஸானது ப்ரம்மஸ்வரூபமான அக்நியில் ப்ரம்மரூபனாகிய கர்த்தாவால் ஹோமம் செய்யப்பட்டது" என்று ஸகல கர்மமும் ப்ரம்மஸ்வரூபமென்று எவன் நினைக்கிறானோ அவனால் † ப்ரம்மமான ஆத்மாவே அடையத்தக்கதாகும். [என்றால் - மோக்ஷத்தை விரும்பியவன் செய்யுங் கர்மமெல்லாம் பரப்ரம்மமேயென்கிற எண்ணத்தோடுகூடி செய்யப்படுமாதலால் அதுதானே ஞானரூபமாய்க்கொண்டு, ஞானநிஷ்டையை யெதிர்பாராமலே ஆத்மஸாக்ஷாத்காரத்தை யுண்டுபண்ணிக் கொடுக்குமென்று பொருள்.]

(அ-கை.) இப்படி கர்மமே ஞானரூபமாகிறதென்றருளிச்செய்து, இப்பொழுது அந்த கர்மத்தின் உட்பிரிவுகளை யருளிச்செய்கிறார்.

𑌦𑍈𑌵𑌮𑍇𑌵𑌾𑌪𑌰𑍇 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।

(௨௫அ) சில கர்மயோகிகள் தேவதார்ச்சநரூபமான யக்ஞத்தையே அநுஷ்டிக்கிறார்கள்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌗𑍍𑌨𑌾𑌵𑌪𑌰𑍇 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨𑍈𑌵𑍋𑌪𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 ॥௨௫॥

(௨௫) சிலர் ப்ரம்மஸ்வரூபமான அக்நியில் யக்ஞத்துக்கு ஸாதநமாயிருக்கிற $ ஹவிஸ் ஸ்ருக் முதலியவைகளைக்கொண்டு ஹோமம்செய்துவருகிறார்கள். [என்றால் - யாகத்தையும் அதைச் சேர்ந்தவைகளையும் ப்ரம்மஸ்வரூபமாக நினைத்து ஹோமம் செய்வதே தொழிலாயிருக்கிறார்கள் என்றர்த்தம்.]

𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍍𑌯𑌨𑍍𑌯𑍇 𑌸𑌂𑌯𑌮𑌾𑌗𑍍𑌨𑌿𑌷𑍁 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑌿 ।

---

* ஸ்ருக் என்பது - ஹவிஸ்முதலியவற்றை அக்கினியில் சேர்ப்பதற்கு ஸாதகமாயிருப்பதோர் கருவி. இது ப்ரம்மத்தா லுண்டாக்கப்பட்டதுபற்றி இதை யிங்கே ப்ரம்மமயமென்கிறது.

$ ஹவிஸ் என்பது - தேவதாராதநத்துக்கென்று அக்நியில் ஹோமம் பண்ணப்பட்ட வஸ்துவிசேஷம்.

† ப்ரம்மத்துக்கு ஆத்மா சரீரமாயிருப்பதுபற்றி அதை ப்ரம்மமென்கிறது.

http://acharya.org

(௨௫½) பின்னும் சிலர் செவிமுதலான இந்திரியங்களைப் புறம்போக வொட்டாமல் தகைவதில் முயற்சிசெய்கிறார்கள்.

ஶப்தாதீந்விஷயாநந்ய இந்த்ரியாக்நிஷு ஜுஹ்வதி ||௨௬||

(௨௬) மற்றும் சிலர் இந்திரியங்களைச் சப்தாதிவிஷயங்களில் மண்ட வொட்டாமற் றகைகிறார்கள்.

ஸர்வாணீந்த்ரியகர்மாணி ப்ராணகர்மாணி சாபரே |
ஆத்மஸம்யமயோகாக்நௌ ஜுஹ்வதி ஜ்ஞாநதீபிதே ||௨௭||

(௨௭) ஞானத்தால் ஜ்வலிப்பதாய் மனதை அடக்குவதான யோகமென்னும் அக்நியில், இந்திரிய வியாபாரங்களையும் பிராணவியாபாரங்களையும் சிலர் ஹோமஞ்செய்கிறார்கள். [அதாவது மனதை இந்திரியங்களோடும் பிராணனோடும் சேரவொட்டாமல் தகைவதில் முயல்கின்றார்களென்று பொருள்.]

த்ரவ்யயஜ்ஞாஸ்தபோயஜ்ஞா யோகயஜ்ஞாஸ்ததாபரே |
ஸ்வாத்யாயஜ்ஞாநயஜ்ஞாஶ்ச யதய: ஸம்ஶிதவ்ரதா: ||௨௮||

(௨௮) விடாமுயற்சி செய்பவரும் த்ருடஸங்கல்பமுள்ளவருமான சில கர்மயோகிகள் நியாயமாய் ஸம்பாதித்த திரவியத்தைக்கொண்டு தேவதார்ச்சநம் செய்வதிலும், சிலர் தானஞ்செய்வதிலும், சிலர் யாகஞ்செய்வதிலும், சிலர் ஹோமஞ்செய்வதிலுமாக யத்நம் செய்கிறார்கள். இந்நால்வகையோருக்கும் திரவிய யக்ஞஞ்செய்பவர்களென்று பெயர்; சிலர் கிருச்சிரம் சாந்திராயணம் உபவாஸம் முதலிய தபோயக்ஞம் செய்கிறார்கள்; பின்னுஞ் சிலர் புண்ணியதீர்த்த ஸ்நாநமும் புண்யக்ஷேத்ரவாஸமுஞ் செய்கிறார்கள்; சிலர் வேதாப்யாஸத்தில் நிஷ்டராயிருக்கிறார்கள்; சிலர் அதின் அர்த்தஞானத்தில் ஊக்கமாயிருக்கிறார்கள்.

அபாநே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேऽபாநம் ததாபரே |
ப்ராணாபாநகதீ ருத்த்வா ப்ராணாயாமபராயணா: ||௨௯||
அபரே நியதாஹாரா: ப்ராணாந்ப்ராணேஷு ஜுஹ்வதி |

(௨௯-௨௯½) பிராணாயாமஞ்செய்வதில் சிலர் நிஷ்டைபண்ணுகிறார்கள். இவர்கள் பூரகரென்றும் ரேசகரென்றும் கும்பகரென்றும் மூவர். அபாநத்தில் பிராணனை ஹோமஞ்செய்யுமவர் பூரகர். பிராணனில் அபாநத்தை ஹோமம் செய்பவர் ரேசகர்: அவ்விரண்டையும் செல்லவொட்டாமல் தடுத்துப் பிராணனைப் பிராணனில்தானே அடக்குமவர்கள் கும்பகர்: ஆகிய இம்மூவரும் ஆகாரநியமத்தோடு கூடியவர்கள்.

ஸர்வேऽப்யேதே யஜ்ஞவிதோ யஜ்ஞக்ஷபிதகல்மஷா: ||௩௦||
யஜ்ஞஶிஷ்டாம்ருதபுஜோ யாந்தி ப்ரஹ்ம ஸநாதநம் |

(௩௦-௩௦½) (திரவ்ய யக்ஞம்முதல் பிராணாயாமம் வரையிலுள்ள கீழ்ச்சொன்ன கர்மயோகங்களின் உட்பிரிவுகளில் தங்கள் தங்களுக்கிஷ்ட

அ

http://acharya.org

மானவைகளை அநுஷ்டிக்கின்ற) இவர்கள்யாவரும் (ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா) என்று கீழேசொல்லப்பட்ட) மஹாயக்ஞம் முதலான யக்ஞங்களை யநுஷ்டிப்பவர்கள். ஆனதுபற்றியே இவர்கள் ஸகல பாபங்களையு மொழித்தவர்களாய் யக்ஞசேஷமான அமிருதத்தால் சரீரத்தைக் காப்பாற்றிவந்து சாசுவதமான ப்ரம்மத்தை அடைகிறார்கள். [யக்ஞசேஷத்துக்கு அமிருதமென்றுபெயர்.]

நாயம் லோகோஸ்த்யயஜ்ஞஸ்ய குதோந்ய: குருஸத்தம ||௩௧||

(௩௧) கீழ்ச்சொன்னவர்களைப்போல் மஹாயக்ஞம் முதலிய நித்ய நைமித்திக கர்மங்கள் செய்யாதவனுக்கு இந்த லோகமே கிடைக்கமாட்டாது. அதாவது இந்த லோகஸம்பந்தமான அரம் பொருள் இன்பம் என்கிற மூன்று புருஷார்த்தங்களுங் கிடைக்கமாட்டா. அல்பங்களான இவையே கிடையாவிட்டால் மோக்ஷமென்னுங் கனமான புருஷார்த்தமெங்ஙனங் கிடைக்கும்?

ஏவம் பஹுவிதா யஜ்ஞா விததா ப்ரஹ்மணோ முகே |
கர்மஜாந் வித்தி தாந்ஸர்வாந் ஏவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே || ௩௨ ||

(௩௨) ஆக விப்படி ஆத்மப்ராப்திக்கு ஸாதகமான கர்மயோகங்கள் பலவாயிருக்கின்றன. இவைகளெல்லாம் தினந்தோறும் அநுஷ்டிக்கவேண்டியதான (நித்யநைமித்திக) கர்மங்களைச்செய்வதால் ஸித்திக்குமவைகள். இவைகளைக் கீழ்ச்சொல்லியபடி யநுஷ்டித்தாயாகில் மோக்ஷத்தையடைவாய்.

(அ-கை.) கர்மம் ஞானத்தை யுட்கொண்டிருக்கையாலே அதுவே ஞானரூபமாகிறதென்றாரன்றோ கீழ்? (ஞானத்தை யுட்கொண்ட) அக்கர்மத்தில் ஞானாம்சந்தான் பிரதானமென்கிறாரிங்கு.

ஸ்ரேயாந் த்ரவ்யமயாத்யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப |
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞாநே பரிஸமாப்யதே ||௩௩||

(௩௩) சத்துருக்களை அழிக்கவல்லனாகிய ஓ அர்ச்சுந! கர்மம் ✱ (திரவியத்தாலும் ஞானத்தாலும் ஸாதிக்கவேண்டுகையால் இரண்டம்சமாயன்றோ இருக்கிறது?) அதில் திரவியமயமான அம்சத்தைக்காட்டிலும் ஞானமயமான அம்சந்தான் சிறந்தது. ஏனெனில் - ஸகல கர்மங்களும் மற்றவையும் முடிவில் ஞானத்தைக்கொண்டல்லவோ முடிகின்றன. [அதாவது - எந்த ஸாதநத்தை யநுஷ்டித்தும் பெறவேண்டியது ஆத்மஸாக்ஷாத்காரம். அது கர்மஞ்செய்யத்தொடங்கின நாள்முதல் அப்பியஸிக்கப்பட்டுவந்து கடைசியில் அதுவே ஸாக்ஷாத்காரஞானமாய் பழுக்கிறது; இப்படியான பின்பு கர்மத்தில் திரவியாம்சத்தைப்பார்க்க ஞானாமிசம் சிறந்ததென்னக்குறையில்லையிறே.]

தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஸ்நேந ஸேவயா |
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்வதர்ஸிந: ||௩௪||

✱ திரவியமென்றால் - தட்டுமுட்டு முதலிய வெல்லாப்பொருளுக்கும் பெயர்.

http://acharya.org

(௩௪) அர்ச்சுந! நீ கர்மயோகத்தைச் செய்ய விழிந்து அப்பொழுதைக்கப்பொழுது * ஞாநிகளிடஞ்சென்று, அவர்களைத் தண்டன் ஸமர்ப்பித்து அவர்களுக்குத் தகுந்த பணிவிடைசெய்து உன் உள்ளத்தின் பரிபாகத்துக்குத்தக்கபடி நாம் சொன்ன † ஆத்மஞாநத்தை அவர்களிடங் கேட்பாயாகில், அவர்கள் (ஞாநந் தெரியவேண்டுமென்று பலகாலும் பல்படியுங் கேட்கின்ற) உன் நினைவறிந்து உனக்கு அந்த ஞாநத்தைத் தெளிவாயுபதேசிப்பார்கள்.

(அ-கை.) ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே பார்க்கின்ற ஸாக்ஷாத்கார ஞாநத்தின் லக்ஷணம் இத்தன்மையதென்கிருர்.

யஜ்ஜ்ஞாத்வா ந புநர்மோஹமேவம் யாஸ்யஸி பாண்டவ।
யேந பூதாந்யஶேஷேண த்ரக்ஷ்யஸ்யாத்மந்யதோ மயி ॥௩௫॥

(௩௫) ஓ பாண்டவ! அந்த ஆத்மஞாநத்தை யறிந்தாயாகில் மறுபடியும் இப்படி மோகத்தை அடையமாட்டாய். [அதாவது - தேஹமே ஆத்மாவென்று பிரமித்தல், அத்தால் எனதென்கிற மமதை கொள்ளுதல் முதலியவைகளுக்குக் காரணமான மோஹத்தை அடையமாட்டாய்.] மேலும் அதனுல் தேவனொன்றும் மனிதனொன்றும் இன்னு மிப்படி பலவிதமாயுள்ள ஸகலப் பிராணிகளையும் உன் ஆத்மாவிலேயே பார்ப்பாய். [அதாவது- $ ஸ்தாலீபுலாக நியாயமாய் ஸகலப் பிராணிகளும் நம்மைப்போலவேதான் பிரகிருதிக்குப் புறம்பாய் ஞாநமே ஸ்வரூபமாய் ¶ ஒரேமாதிரியா யிருக்குமென்றறிவாய்] அநந்தரம் நம்மிடத்திலும் அப்படியே பார்ப்பாய். [அதாவது - அப்படி உன்னைப்போ லிருப்பதாக நீ யறிந்த அவ்வாத்மாக்களெல்லாம் ஸர்வேசுவரனை என்னைப்போலவு மிருப்பதாகவும் § அறிவாய்.]

[ஆக இதனுல் பிரகிருதிக்குப் புறம்பான ஆத்மஸ்வரூபமானது ஒன்றைப்போ லொன்ருயிருப்பதுந்தவிர ஸர்வேசுவரனுக்கு ஸமமாகவு மிருக்குமென்றதாயிற்று.]

---

* இங்கே ஞாநிகளாவார் - ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஸித்தித்தவர்கள்.

† நாம் சொன்ன - அதாவது அவிநாஶி து தத்வித்தி என்பதுமுதல் ஏஷா தே(அ)பிஹிதா என்று மளவாக நாம் சொன்னவென்றபடி.

$ ஸ்தாலீபுலாக நியாயமாயென்றது - ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றைப் பதம் பார்ப்பதுபோலென்றபடி.

¶ பிரகிருதியைக்காட்டிலும் வேறுபட்ட ஆத்மஸ்வரூப மெல்லாம் ஸமமென்கிறவிஷயம் நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம தஸ்மாத் ப்ரஹ்மணி தே ஸ்திதா: என்றுமேலே சொல்லுகிருர்.

§ நாமரூபங்களற்ற முக்தஸ்வரூபமான ஆத்மாவானது பரமாத்மாவோ டொத்திருக்குமென்கிறவிஷயம் இதம் ஜ்ஞாநமுபாஶ்ரித்ய மம ஸாதர்ம்யமாகதா: என்று மேலே சொல்லப்போகிருர். அப்படியே ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி இத்யாதியாகச் சுருதிகளுஞ் சொல்லுகின்றன.

http://acharya.org

𑌅𑌪𑌿 𑌚𑍇𑌦𑌸𑌿 𑌪𑌾𑌪𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃।
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌲𑌵𑍇𑌨𑍈𑌵 𑌵𑍃𑌜𑌿𑌨𑌂 𑌸𑌨𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿॥௩௬॥

(௩௬) அர்ச்சுந! நீ பாவஞ்செய்தா ரெல்லாரிலும் மிக்க பாவியாயிருந்தாலும் நெடுங்காலமாய் ஸம்பாதித்த அந்த பாவக்கடலை ஆத்ம ஸாக்ஷாத்காரமென்னும் ஓடத்தாலே தாண்டிவிடுவாய்.

𑌯𑌥𑍈𑌧𑌾𑌂𑌸𑌿 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌭𑌸𑍍𑌮𑌸𑌾𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌤𑌥𑌾॥௩௭॥

(௩௭) நன்றாய்ப்பற்றியெரியும் நெருப்பானது விறகுகளைச் சாம்பலாக்குவதுபோல் ஆத்மஞானமென்னுந் தீயானது தொன்றுதொட்டுத் தொடர்ந்துவருந் தீவினைகளைப் பொசுக்கிச் சாம்பலாக்குகின்றது.

𑌨 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌸𑌦𑍃𑌶𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑌿𑌹 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇।
𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌯𑌂 𑌯𑍋𑌗𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌃 𑌕𑌾𑌲𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿॥௩௮॥

(௩௮) லோகத்தில் ஆத்மாவைப்போல் பரிசுத்தமான வஸ்து ஒன்றுங் கிடையாதன்றோ? [ஆகையால்தான் அவ்வாத்மஞானமானது ஸகல பாவங்களையும் நாசஞ்செய்கிறது.] அப்படிப்பட்ட ஞானத்தைப் பெறவேண்டுமாகில் நாம் சொன்னபடி கர்மயோகத்தை யநுஷ்டித்து ஸித்திபெற்றால் அதை வருத்தமின்றி உன் ஆத்மாவில்தானே நாளடைவில் பெறுவாய்.

(அ-கை.) அதையே தெளிவாய் அருளிச்செய்கிறார்.

𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌁𑌲𑍍𑌲𑌭𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑌃 𑌸𑌂𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑌰𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌚𑌿𑌰𑍇𑌣𑌾𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿॥௩௯॥

(௩௯) இப்படி உபதேசத்தால் ஞானத்தைப்பெற்று அந்த ஞானம் விருத்தியடையும் விஷயத்தில் மிகவும் சிரத்தையோடு கூடியவனாய் ஒரே மனதாயிருந்து, இந்திரியங்களை மற்ற விஷயங்களில் செல்லவொட்டாமல் அடக்கினால், வெகு சீக்கிரத்தில் முன் சொன்ன பரிபக்குவமான ஞானத்தையடைந்து அதனால் மேலான ஆநந்தத்தையு மடையலாகும்.

𑌅𑌜𑍍𑌞𑌶𑍍𑌚𑌾𑌶𑍍𑌰𑌦𑍍𑌦𑌧𑌾𑌨𑌶𑍍𑌚 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿।
𑌨𑌾𑌯𑌂 𑌲𑍋𑌕𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌪𑌰𑍋 𑌨 𑌸𑍁𑌖𑌂 𑌸𑌂𑌶𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃॥௪௰॥

(௪௰) இப்படி உபதேசத்தாலே ஞானத்தைப் பெறாமலும் பெற்றாலும் அதை விருத்திசெய்வதில் முயற்சிசெய்யாமலு மிருப்பவன் மனதில் ஸம்சயமுற்றவனாய்க் கெட்டுப்போகிறான். அப்படி ஸந்தேஹிப்பவனுக்கு இந்த லோகமுமில்லை, பரலோகமுமில்லை. அதாவது இவ்வுலகஸம்பந்தமான தர்மம், அர்த்தம், காமமென்கிற மூன்றும் பரலோகமான மோக்ஷமுமற்றுச் சிறிது சுகமும் அடையாமற்போகிறான்.

[புருஷார்த்தங்களெல்லாம் சாஸ்திரோக்தமான கர்மத்தால் ஸித்திக்கவேண்டுகையாலும், அந்த கர்மம் ஸித்திக்கும்போது தேஹத்தைக்காட்டி

http://acharya.org

லும் வேறான ஆத்மஸ்வரூப நிச்சயம் வேண்டுகையாலும், அதில்லாதவனுக்கு ஒருபுருஷார்த்தமும் கிடைக்கமாட்டாதென்று திருவுள்ளம்.]

யோகஸந்ந்யஸ்தகர்மாணம் ஜ்ஞாநஸஞ்சிந்நஸம்ஶயம்|
ஆத்மவந்தம் ந கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய||௪௧||

(௪௧) இப்படி உபதேசிக்கப்பட்ட யோகத்தாலே கர்மத்தை விட்டு (அதாவது செய்யுங் கர்மத்தை ஞாநாகாரமாக நினைத்து,) அப்படியே உபதேசத்தால் பெற்ற ஆத்மஞாநத்தைக்கொண்டு ஸகல ஸம்சயங்களையு மொழித்து, கேட்ட அர்த்தத்தில் திடமான மனதுடன் கூடியிருப்பவனை ஸம்ஸாரத்துக்கு வேர்முதலான பழைய கர்மங்களில் யாதொன்றுங் கட்டுப்படுத்தமாட்டாது.

தஸ்மாதஜ்ஞாநஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞாநாஸிநாத்மந:|
சித்த்வைநம் ஸம்ஶயம் யோகமாதிஷ்டோத்திஷ்ட பாரத||௪௨||

(௪௨) ஆகையால் அர்ச்சுந! அக்ஞாநத்தால் உன் மனதிலுண்டான (ஆத்மவிஷயமான) ஸந்தேஹத்தை நாமுபதேசித்த ஆத்மஞாநமென்னுங் கத்தியாலறுத்து நம்மால் உபதேசிக்கப்பட்ட கர்மயோகத்தைச் செய்வாயெழுந்திரு.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
நான்காவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:.
ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஐந்தாவது அத்யாயம்

அவதாரிகை.

நான்காம் அத்தியாயத்தில் கர்மயோகத்தின் ஞாநத்தன்மையும் அதன்உட்பிரிவும் அதில் ஞாநபாகந்தான் பிரதாநமென்பதும் சொல்லப்பட்டது. கர்மயோகம் ஞாநத்தை யுட்கொண்டிருக்கையாலும், செய்வதற்கு எளிதாயிருக்கையாலும் பிரமாதத்தை உண்டுபண்ணுமையாலும், பயன் ஸித்திக்கும்பொழுது மற்றொன்றை அபேக்ஷிக்காமையாலும் ஞாநயோகாதிகாரிக்குக்கூட கர்மயோகமே செய்யவடுக்குமென்கிற விஷயமோ, மூன்றாவது அத்தியாயத்தில்தானே அருளிச்செய்யப்பட்டது. இப்பொழுது கர்மயோகம் ஞாநயோகத்தைப்பார்க்க ஆத்மப்பிராப்திக்குச் சுருக்கான உபாயமென்றும், அதைச்செய்யும்பொழுது அதில் தனக்குக் கர்த்ருத்வம் இல்லையென்று நினைக்கவேண்டுமென்றுஞ் சொல்லி அதற்குக் காரணமான ஞாநமும் சோதிக்கப்படுகிறது.

http://acharya.org

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥ 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣 𑌪𑍁𑌨𑌰𑍍𑌯𑍋𑌗𑌂 𑌚
𑌶𑌂𑌸𑌸𑌿 । 𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯 𑌏𑌤𑌯𑍋𑌰𑍇𑌕𑌂 𑌤𑌨𑍍𑌮𑍇 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 ॥

(க) அர்ச்சுநன் சொல்லுவது:—வாரீர் கிருஷ்ணா! கர்மத்தை விட்டே பற்றவேண்டியதான ஞாநயோகத்தைச் செய்யும்படி முதலில் அருளிச்செய்து மீண்டும் கர்மத்தையே செய்யும்படியாய் அருளிச்செய்தீர். [அதாவது மோக்ஷத்தை விரும்பியவன் கர்மத்தைச்செய்து அதினால் மனதிலுண்டான கல்மஷத்தையெல்லாமொழித்துப் பிறகு ஞாநயோகத்தாலே ஆத்மாவை ஸாக்ஷாத்காரம் பண்ணக் கடவனென்று முதலில் சொல்லி, பிறகு மூன்று நான்கு அத்தியாயங்களில் ஞாநயோகஞ்செய்யத் தகுந்தவனுக்குக்கூட கர்மநிஷ்டையே சிறந்ததாகுமென்றும், அது ஞாநநிஷ்டையை எதிர்பாராமல் தானே ஆத்மப்பிராப்தியை ஸாதிக்குமென்றும் கர்மயோகத்தை அதிகமாய்ப் புகழ்ந்துபேசினீர்.] ஆகையால் அந்த ஞாநயோக கர்மயோகங்களில் எது சீக்கிரமாயும் எளிதாயும் ஆத்மப் பிராப்தியைச் சாதிக்குமென்று தேவரீர் நிச்சயித்திருக்கிறதோ அதை அருளிச்செய்யவேண்டும்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥ 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌶𑍍𑌚 𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸
𑌕𑌰𑌾𑌵𑍁𑌭𑍌 । 𑌤𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌮𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑍋 𑌵𑌿𑌶𑌿
𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௨ ॥

(உ) அதற்குப் பகவான் அருளிச்செய்கிறது:—அர்ச்சுந! ஸந்யாஸமென்று சொல்லப்படும் ஞாநயோகமும், கர்மயோகமும் இரண்டும் மோக்ஷத்தையளிப்பவைகளே; ஆனாலும் அதில் ஞாநயோகத்தைக் காட்டிலும் கர்மயோகமே சிறப்புற்றது.

(அ-கை.) ஏனென்றால் அருளிச்செய்கிறார்.

𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑍀 𑌯𑍋 𑌨 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌨 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿 ।
𑌨𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑍋 𑌹𑌿 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌸𑍁𑌖𑌂 𑌬𑌨𑍍𑌧𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௩ ॥

(௩) கர்மயோகத்தைச் செய்பவன் அதற்குட்பட்ட ஆத்ம அநுபவத்தாலே திருப்தியடைந்து அதற்குப் புறம்பானதொன்றையும் விரும்பாமலும் அப்படியே ஒன்றையும் பகைக்காமலும் இன்பதுன்பங்களைப் பொறுத்திருக்கிறபடியால் அவனை நித்தியஸந்யாஸியான ஞாநயோகியென்று அறியத்தக்கது. ஏனெனில் - (அவன் எளிதில் இயற்றக்கூடிய கர்மத்தைச்செய்தபடியே) சுகமாய் ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுகிறான்.

(அ-கை.) ஞாநயோக கர்மயோகங்களிரண்டும் ஆத்மஸாக்ஷாத்காரத்தைச் சாதிக்கும் விஷயத்தில் ஒன்றை யொன்று எதிர்பார்க்கமாட்டாது என்பதை விளக்குகிறார்.

𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌯𑍋𑌗𑍌 𑌪𑍃𑌥𑌗𑍍𑌬𑌾𑌲𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌨 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 ।
𑌏𑌕𑌮𑌪𑍍𑌯𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑍁𑌭𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 𑌫𑌲𑌮𑍍 ॥ ௪ ॥

(௪) ஞாநயோக கர்மயோகங்களிரண்டும் வெவ்வேறென்று, தெரியாதவர்கள் சொல்லுவார்களே யல்லது நன்றாய்த் தெரிந்தவர் சொல்லமா

ட்டார்கள். [அதாவது-"கர்மயோகம்ஞாநயோகத்தை மாத்திரம் ஸாதிக்கும்; ஆத்மஸாக்ஷாத்காரத்தை ஸாதிக்கமாட்டாது. ஞாநயோகமொன்றுதான ஆத்மஸாக்ஷாத்காரத்தைச் சம்பாதிப்பது; ஆகையால இரண்டுக்கும் பலம் வெவ்வேருயிருக்கையால இரண்டும் வெவ்வேறு" என்று சொல்லுமவர்கள் நன்ருய்த் தெரிந்தவர்களல்லவென்று பொருள்.] ஏனெனில்-இரண்டுக்கும் ஆத்மதரிசநமொன்றே பயனுகையால் எதை யநுஷ்டித்தாலும் அந்த பயனையே யடைகிருன்.

(அ-கை.) இதையே விவரிக்கிருர்.

யத்ஸாங்க்யை꞉ ப்ராப்யதே ஸ்தாநம் தத்யோகைரபி கம்யதே|
ஏகம் ஸாங்க்யம் ச யோகம் ச ய꞉ பஶ்யதி ஸ பஶ்யதி||௫||

(ரு) ஞாநயோகிகளால் எந்தபலம் அடையப்படுமோ அதுவேதான் கர்மநிஷ்டர்களாலும் அடையப்படும், இப்படி பலம் ஒன்ருகையால் ஞாநயோக கர்மயோகங்களிரண்டும் ஒன்றுதானென்று எவன் பார்க்கிருனே அவனே பண்டிதன்.

(அ-கை.) இவற்றுள் இவ்வளவுதான் விசேஷமென்கிருர்.

ஸந்ந்யாஸஸ்து மஹாபாஹோ து꞉கமாப்துமயோகத꞉|
யோகயுக்தோ முநிர்ப்ரஹ்ம நசிரேணாதிகச்சதி||௬||

(௬) ஞாநயோகமானது கர்மயோகத்தோடு ஸம்பந்தப்படாமல் ஸித்திப்பது வருத்தம்; கர்மயோகியோ எப்போதும் தனக்குத்தானே ஆத்மாவைச் சிந்தித்துக்கொண் டிருப்பவனுகையால் சுகமாகக் கர்மயோகத்தைச் சாதித்து அற்பகாலத்தில் ஆத்மாவை அடைகிருன். [ஞாநயோகத்தை மிகவும் வருத்தப்பட்டு ஸாதிக்கவேண்டுகையாலே வெகுகாலஞ் சென்றபின்பு ஆத்மாவை யடையவேண்டும். இதுதான்விசேஷமென்று அபிப்பிராயம்.]

யோகயுக்தோ விஶுத்தாத்மா விஜிதாத்மா ஜிதேந்த்ரிய꞉|
ஸர்வபூதாத்மபூதாத்மா குர்வந்நபி நலிப்யதே||௭||

(எ) கர்மயோகஞ் செய்பவன் பரமபுருஷனுடைய ஆராதநமாக சாஸ்திரத்திற் சொல்லப்படுங்கர்மங்களைச் செய்தபடியே அதனுல் மனந்தெளிந்து, (தனக்குப் பழக்கமான காமத்தில் இழிந்தமையால்) மனதையும் இந்திரியங்களையும் வருத்தமின்றிஜயித்து, "தேவர் மனிதர் என்று விதவியாஸமாயிருப்பதெல்லாம் பிரகிருதியின் விகாரம், ஆத்மாவானது எந்தசரீரத்திலும் ஒரேவடிவமாய் ஞாநஸ்வரூபமாய் ஸமமாயிருக்கிறது" என்று ஆத்மஸ்வரூபத்தின் உண்மையை எந்தவேளையுஞ் சிந்தித்திருக்கிருனுதலால் அவன் கர்மத்தைச்செய்து வந்தபோதிலும் தேஹமே ஆத்மாவென்கிற எண்ணத்தால் கட்டுப்படான் [ஆகையால் வெகு சீக்கிரத்தில் ஆத்மாவை யடைவானென்று தாத்பர்யம்.]

http://acharya.org

(அ-கை.) செய்வதற்கு எளிதாயும் விரைவில் பலனைத்தருவதாயு மிருப்பதுபற்றி கர்மயோகஞ் சிறந்திருக்கையால் அதற்கு வேண்டுமவற்றைச் சொல்லுகிறேன்கேள்.

𑌨𑍈𑌵 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍋𑌮𑍀𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌨𑍍𑌯𑍇𑌤 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍।
𑌪𑌶𑍍𑌯𑌞𑍍𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌸𑍍𑌪𑍃𑌶𑌞𑍍𑌜𑌿𑌘𑍍𑌰𑌨𑍍𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌸𑍍𑌵𑌪𑌞𑍍𑌶𑍍𑌵𑌸𑌨𑍍॥௮॥
𑌪𑍍𑌰𑌲𑌪𑌨𑍍𑌵𑌿𑌸𑍃𑌜𑌨𑍍𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌨𑍁𑌨𑍍𑌮𑌿𑌷𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌷𑌨𑍍𑌨𑌪𑌿।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤 𑌇𑌤𑌿 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍॥௯॥

(௮-௯) ஆத்மஸ்வரூபத்தின் உண்மைதெரிந்தவன், "செவிமுதலிய ஞானேந்திரியங்களும் வாய்முதலிய கர்மேந்திரியங்களும் பிராணனும் தந்தம் விஷயங்களில் செல்லுகின்றனவேயல்லது நான் சிறிதும் செய்யவில்லை" என்று நினைத்திருப்பன் [அதாவது-ஞானமேஸ்வபாவமான எனக்கு (நான் செய்தேனென்கிற) எண்ணமானது இந்திரியாதிகளின் ஸம்பந்தத்தால் வந்ததேயல்லது என் ஸ்வரூபத்தால் வந்ததல்லவென்று நினைத்திருப்பன் என்று தாத்பரியம்.]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌾𑌧𑌾𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌃।
𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌸 𑌪𑌾𑌪𑍇𑌨 𑌪𑌦𑍍𑌮𑌪𑌤𑍍𑌰𑌮𑌿𑌵𑌾𑌮𑍍𑌭𑌸𑌾॥௧௦॥

(௧௦) யாவனொருவன் கர்த்ருத்வத்தைப் பிரகிருதியில் வைத்து (அதாவது இந்திரிய வியாபாரங்களெல்லாம் கர்மாதீனமென்று கர்மபலத்தில் ஸம்பந்தப்படாமல் "நான் சிறிதுஞ் செய்கிறேனில்லை" என்று நினைத்தவனாய்) கர்மங்களைச்செய்து வருகிறானோ, அவன் பிரகிருதியோடு கலந்திருந்தானாகிலும் பந்தத்துக்குக் காரணமான பாவத்தால் கட்டுப்படான். அதென்போலென்னில் - தாமரையிலையானது ஜலத்திலிருக்கச்செய்தே அதில் ஒட்டாததுபோ லென்றறியவும்.

𑌕𑌾𑌯𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌕𑍇𑌵𑌲𑍈𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍈𑌰𑌪𑌿।
𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑍇॥௧௧॥

(௧௧) யோகிகளாயிருப்பார் அநாதிகாலமாய் ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிக் கிடக்கிற கருமப்பிணை தீருகைக்காகச் சரீரம் மனது புத்தி இந்திரியம் இவைகளைக்கொண்டு கர்மயோகத்தைப் பலாபேக்ஷையின்றிச் செய்துவருகிறார்கள்.

𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨𑍈𑌷𑍍𑌠𑌿𑌕𑍀𑌮𑍍।
𑌅𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌾𑌮𑌕𑌾𑌰𑍇𑌣 𑌫𑌲𑍇 𑌸𑌕𑍍𑌤𑍋 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇॥௧௨॥

(௧௨) இதரமான பலங்களில் சபலிக்காமல் ஆத்மா ஒன்றையே நாடிக் கேவலம் ஆத்மசுத்திக்காகக் கர்மஞ்செய்யுமவன் ஆத்மாநுபவ மென்னும் ஸ்திரமான சுகத்தை யடைவான். அப்படி ஆத்மாவைப் பார்க்கவேண்டுமென்கிற எண்ணமில்லாமல் பலனில் அபேக்ஷையோடு கர்மஞ்செய்யுமவன் அக்

http://acharya.org

கர்மத்தால் கட்டுப்பட்டு நித்திய ஸம்ஸாரியாவான். [ஆக விதனுல் புருஷன், தான் செய்யுங் கர்மங்களெல்லாம் இந்திரியரூபமாய் விகாரப்பட்டிருக்கிற பிரகிருதியைச் சேர்ந்ததென்று நினைத்தவனுய் ஆத்மாவைப் பிணியினின்று விடுவிக்கைக்காகப் பலாபேக்ஷையின்றிக் கர்மத்தையே செய்யக்கடவனென்றதாயிற்று.]

(அ-கை.) அநந்தரம் தேகரூபமாய் விகாரப்பட்டிருக்கும் பிரகிருதியில் கர்த்ருத்வத்தை வைக்கும்படி சொல்லுகிறது.

ஸவ-நுகஊ-ணிஉநஸா ஸ-நு்ஸ்ஹாஸெஸஸுவஂவஶீ|
நவஉாரெவ-ரெஜெஷீ ௳நவகுவ-நகாரயநு||கூ||

(கூ) "ஆத்மாவுக்கு நான் செய்தேனென்கிற கர்த்ருத்வமானது சுபாவத்தாலுண்டானதல்ல; பழையகர்மமடியாகவந்த சரீர ஸம்பந்தத்தால் வந்தது" என்கிற மனதோடு புருஷன் தான்செய்யுங் கர்மங்களையெல்லாம் நவத்துவாரபட்டணமான சரீரத்தில்வைத்து, தேஹத்தில் தானிருப்பதற்கு வேண்டும் பிரயத்தினங்களைச்செய்யாமலும் அத்தேஹத்தைக்கொண்டு செய்விக்காமலும் சுதந்திரனுய் சுகமாயிருக்கக் கடவன்.

(அ-கை.) ஆத்மாவுக்கு ஸ்வதஸ்ஸித்தமான ரூபம் இன்னதென்கிருர்,

நகத-ுஸ்வஂநகஊ-ணி ஹொகஸ்ஸுஜதிவு-ஹஃ|
நகஊ-ஹஸஂயொ஗ஂ ஸஹாவஸுவு-வத-௳தெ||கச||

(கச) தேவர் விலங்கு மனிதர் தாவரமென்று பிரகிருதியின் ஸம்பந்தத்தால் பலவகையாயுள்ள இந்தப்பிராணிகளுக்கு, கர்மஞ்செய்யுந் திறமையும், கர்மமும், அக்கர்மப்பயனில் ஸம்பந்தமும் ஆத்மாவால் வந்ததல்ல; ஆத்மாசுதந்திரனுய் கர்மத்துக்கு வசப்படாமலிருக்கிருன். ஆனுல் யாருண்டாக்குகின்றுரென்ருல் ஸ்வபாவம் அப்படி பிரவர்த்திக்கிறது. [என்ருல் அநாதிகாலமாய்த் தொடர்ந்த தொல்வினைப்பயனுகிய (பிரகிருதியின்) சேர்க்கையினுல் 'நான்தேவன் நான்மனிதன்' என்று பிரகிருதியையே ஆத்மாவாகநினைத்துப் பிரமிப்பதால் வரும்வாஸனை உண்டுபண்ணுகிறதென்று தாத்பரியம்.]

நாஉதெகஸ்ஸிஷாவஂ நசெவஸுக்ஷதஂவிஹுஃ|
அஜ்ஞாநெநாவுதஂஜ்ஞாநஂ தெநமுஹ்ஸ்ஷிஜநவஃ||கரு||

(கரு) புருஷன் தனக்கு உறவினராக மதிக்கப்பட்ட புத்திராதிகளுக்கு ஒரு நன்மை செய்யவேண்டுமென்று அவர்களுடைய பாவத்தைப்போக்கவாவது, தனக்குப் பகையாக மதிக்கப்பட்ட ஒருவனுடைய புண்ணியத்தை யழிக்கவாவது செய்பவனல்லன். [ஏனெனில் - இவன் ஒரு இடத்தில் இது என்னுடையதென்று நிலையாயிருப்பவனுகில் இவனுக்கு உறவென்றும் பகையென்றும் ஏற்படும். இவனே எங்குமிருப்பவனுகையால் தேவர் மனிதர் முதலிய எந்த சரீரங்களிலும் நிலையாயிருப்பவனல்ல.] ஆனுல் இவனுக்

http://acharya.org

கு இந்த விபரீதவாஸனை ஏன் உண்டாயிற்றென்றால் - (ஞானவிரோதியான) பழைய கர்மமானது தன் பயனைப் புசிப்பிக்கவேண்டுமென்று இவனுடைய ஞானத்தை மறைக்க, அதனால் தேவாதி சரீரங்களில் சேர்க்கையும் அதனால் 'நான் தேவன் நான் மனிதன்' என்கிற மலைப்புமுண்டாய், அதனால் அதேரீதியான மலைப்புக்குக் காரணமான வாஸனையும் அதற்கேற்ற கர்மவாஸனையும் அதனால் (ஒன்றுகிடக்க ஒன்றாய் தேஹமே ஆத்மாவென்கிற) மோஹமும் கர்மஞ்செய்யுந் திறமையுங் கூடுகிறது.

(அ-கை.) ஸகலமான அக்ஞானத்தையும் ஞானமென்னும் மோடத்தாலே கடக்கிறானென்றும் ஞானத்தீயானது ஸகல கர்மங்களையும் சாம்பலாகச்செய்யுமென்றும் ஞானத்தைப்போல் பரிசுத்தமானது உலகத்தில் வேறொன்றுங் கிடையாதென்றும் முன்பு சொன்னானன்றோ? அதற்கு இப்போது ஸமயமாயிருக்கையால் அதை இவ்விடத்தில் கொண்டு கூட்டுகிறார்.

ஜ்ஞாநேந து தத³ஜ்ஞாநம் யேஷாம் நாஶிதமாத்மந:|
தேஷாமாதி³த்யவஜ்ஜ்ஞாநம் ப்ரகாஶயதி தத்பரம்||௧௬||

(௧௬) முற்கூறிய லக்ஷணமான ஆத்மகோடிகளுக்குள் எவர்களானால் ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே உபதேசிக்கப்பெற்று (அதை நாடோறும் அப்பியாஸம் செய்துவந்து) அதனால் மிகவும் பொலிவுபெற்ற பரிசுத்த ஞானத்தாலே, அதற்கு விரோதியும் ஊழ்வினையின் பயனுமான அக்ஞானத்தை நாசப்படுத்துகிறார்களோ அவர்களுக்கு, தங்களுடைய ஸ்வாபாவிகஞானமானது மென்மேலும் விருத்தியடைந்து சூரியனைப்போல் விளங்கி ஸகலபதார்த்தங்களையும் பிரகாசப்படுத்துகிறது. (அதாவது ஸர்வக்ஞராகிறார்கள்.)

[இங்கே 'அவர்களுக்கு' என்று அக்ஞானமொழிந்தவர்கள் பலருண்டாயிருப்பதாகச் சொல்லுகையாலே நசைவாஹம்ஜாது நாஸம் என்கிறவிடத்தில்ஊஹிக்கப்பட்ட ஆத்மாக்களின் பன்மை, இங்கு நன்கு விளக்கப்பட்டது. ஆனால் அவ்விடத்தில் சொன்னதுபோலவே இந்தபன்மையும் உபாதியால்வந்ததுதானென்றாலோ அதுகூடாது. ஏனெனில்-அக்ஞானம் ஒழிந்தவர்களுக்கு உபாதியின்மணந்தானேது? மேலும் இங்கே இன்னொருவிசேஷம், அதாவது:— அவர்களுடைய ஞானம் ஆதித்தியனைப்போலென்று சூரியனை திருஷ்டாந்தமாகச்சொல்லுகையாலே, ஞானம் ஆத்மஸ்வரூபத்தைச் சேர்ந்ததர்மமென்றும், ஒளியும் ஒளிக்கிடமான சூரியனும்போல் ஞானமும் ஞானத்துக்கிடமான ஆத்மாவும் தர்ம தர்மிகளென்றும் சொன்னதாயிற்று. ஆனதுபற்றியே ஸம்ஸாரதசையில் ஞானத்துக்கு மறைவும் மோக்ஷதசையில் மலர்ச்சியும் கூடும்.]

தத்³பு³த்³த⁴யஸ்ததா³த்மாநஸ்தந்நிஷ்டா²ஸ்தத்பராயணா:|
க³ச்ச²ந்த்யபுநராவ்ருத்திம் ஜ்ஞாநநிர்தூ⁴தகல்மஷா:||௧௭||

(௧௭) அவ்வித ஆத்மதரிசனத்தில் திடமான உத்தேசங்கொண்டவர்கள் மனதில் எந்தவேளையும் அதே நினைவாயிருந்து அதையே நன்கு பழகி இனி இதற்குமேல் வேறு பிரயோஜனமில்லையென்று நினைத்தவர்களாய், தாம்

http://acharya.org

அப்பியஸிக்கின்ற அந்த ஞானத்தைக்கொண்டே ஸகல பாபங்களையும் போக்கடித்து மறுபடியுந் திரும்பாத தசையான ஆத்மஸ்வரூபமாத்திரத்தில் நிற்கிறார்கள்.

வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி|
ஶுநி சைவ ஶ்வபாகே ச பண்டிதாஸ்ஸமதர்ஶிந:||கஅ||

(கஅ) அப்படிப்பட்ட பண்டிதர்கள், "இவன் படித்து விநயத்தோடு கூடியவன், இவன் பிராம்மணன், இது பசு, இது யானை, இது நாய், இவன் நீசன்" என்று ஒன்றை உயர்ந்ததாகவும் ஒன்றைத் தாழ்ந்ததாகவும் பாராமல் எங்கும் ஆத்மவஸ்துவானது ஒரே ரீதியாய் ஞானவடிவமாயிருக்கிறதென்று எல்லாவற்றையும் ஸமமாய்ப் பார்க்கிறார்கள்.

இஹைவ தைர்ஜித: ஸர்கோ யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மந:|
நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம தஸ்மாத் ப்ரஹ்மணி தே ஸ்திதா:||ககூ||

(ககூ) இப்படி ஸகல வஸ்துக்களிலும் ஆத்மா ஞானவடிவமாய் ஒரே ரீதியாயிருக்கிறதென்று பார்ப்பவர்கள் ஆத்மப்பிராப்திக்காகச் சாதநம் செய்யும்பொழுதே ஸம்ஸாரத்தை ஜயித்தவர்களாவார். எப்படியெனில்-ஸம்ஸார ஜயமாவதென்ன? ப்ரம்மமெனகிற ஆத்மாவில் நிலைத்தல்; அதாவது-பிரகிருதிக்கு அவ்வருகாய் எங்கும் ஏகரூபமாயிருக்கிற ஆத்மாவில் மனதை ஸ்தாபிக்கை: அது இவர்களுக்கு உண்டாய்விட்டதன்றோ? ஆனபின்பு இவர்கள் ஸம்ஸாரத்தை ஜயித்தார்களென்னக் குறையுண்டோ? [ஆத்மவஸ்துவெல்லாம் ஞானமே வடிவாய் ஸமமாயிருக்குமென்று நினைத்திருப்பவர்கள் முக்தர்களேயென்று தாத்பரியம்.]

(அ-கை.) எப்படியிருந்தால் கர்மயோகிக்கு அந்த ஸமபுத்தியுண்டாகுமோ அதை உபதேசிக்கிறார்.

ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்ய சாப்ரியம்|
ஸ்திரபுத்திரஸம்மூடோ ப்ரஹ்மவித் ப்ரஹ்மணி ஸ்தித:||உ0||

(உ0) புருஷன் எந்த சரீரத்திலிருக்கும்பொழுது(இவனுக்குப் பழைய கர்மத்தின்படி)எது இஷ்டமாயும் எது அநிஷ்டமாயுமிருக்குமோ, அவைகளில் ஸந்தோஷம் வெறுப்பு இரண்டுமற்று இருக்கக்கடவன் - அதெப்படியிருக்கலாகுமென்றால் - ஆத்மா ஸ்திரனென்றும் சரீரம் அஸ்திரமென்றும் அறிந்து அதனால் தேஹமே ஆத்மாவென்கிற மயக்கத்தைத் தீர்த்தாலிருக்கலாம். அதெப்படி மயக்கத்தைத் தீர்க்கலாமென்றால் - ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே உபதேசிக்கப்பெற்று அதையே பழகிக்கொண்டிருந்தால் தீர்க்கலாம்.

[என்றால் தத்வந்தெரிந்தவர் செய்த உபதேசத்தால் ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியறிந்து அதையே பழகிவந்து அதனால் தேஹமே ஆத்மாவென்கிற அபிமானத்தைவிட்டு ஸ்திரமான ஆத்மாவைத் தரிசிப்பதாலுண்டாகும் பிரீதியால், அஸ்திரமான பிரகிருதியால் வரும் இஷ்டாநிஷ்டங்களில் ஸந்தோஷமாவது வெறுப்பாவது அடையக்கடவனல்லனென்று தாத்பரியம்.]

http://acharya.org

𑌬𑌾𑌹𑍍𑌯𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍇𑌷𑍍𑌵𑌸𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌯𑌤𑍍𑌸𑍁𑌖𑌮𑍍|
𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍁𑌖𑌮𑌕𑍍𑌷𑌯𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇||உக||

(உக) இப்படி ஆத்மாவைக்காட்டிலும் புறம்பான விஷயங்களில் ப றில்லாமல் ஆத்மாவில்மாத்திரம் சுகத்தை யடையுமவன் பிரகிருதியோடு யிற்சியைவிட்டுப் பிரம்மத்தில் அப்பியாஸஞ்செய்பவனாய் ப்ரம்மாநுப மென்னும் சாசுவதமான சுகத்தை அடைகிறான்.

(அ-கை.) பிரகிருதியால் வரும் போகத்தை எளிதில் விடலாமென்கிற

𑌯𑍇 𑌹𑌿 𑌸𑌂𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌜𑌾 𑌭𑍋𑌗𑌾 𑌦𑍁𑌃𑌖𑌯𑍋𑌨𑌯 𑌏𑌵 𑌤𑍇|
𑌆𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌵𑌨𑍍𑌤𑌃 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌨 𑌤𑍇𑌷𑍁 𑌰𑌮𑌤𑍇 𑌬𑍁𑌧𑌃||உஉ||

(உஉ) விஷயங்களாலும் இந்திரியங்களாலுமுண்டாகும் போகம் து: கத்தைத்தருவதும் ஆதியந்தமுள்ளதுமென்று தெரிந்துகொண்டவன் அதி ல் சுகபுத்தியைப் பண்ணமாட்டான்.

𑌶𑌕𑍍𑌨𑍋𑌤𑍀𑌹𑍈𑌵 𑌯𑌃 𑌸𑍋𑌢𑍁𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌶𑌰𑍀𑌰𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍|
𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌦𑍍𑌭𑌵𑌂 𑌵𑍇𑌗𑌂 𑌸 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌸𑍁𑌖𑍀 𑌨𑌰𑌃||உங||

(உங) யாவனொருவன் சரீரம் விடுவதற்கு முன்பு ஸாதநத்தை யநுஷ்டிக்கும்பொழுதே ஆத்மாநுபவத்திலுண்டான பிரீதியால், காமக்குரோத ங்களின் வேகத்தை ஜயிக்கிறானோ, அவன்தான் ஆத்மாநுபவத்துக்கு யோக்கியனாய் சரீரம் விட்டபின்பு அவ்வநுபவத்தை யடைந்து சுகிப்பான்.

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃𑌸𑍁𑌖𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍇𑌵 𑌯𑌃|
𑌸 𑌯𑍋𑌗𑍀 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑍋𑌽𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿||உச||

(உச) யாவனொருவன் புறம்புண்டான அநுபவத்தையெல்லாம் விட்டு உள்ளுக்குள்ளே சுகமடைந்தவனாய் ஆத்மாவே பூங்காவனமாய் அதாவது ஆத்மகுணங்களே இனியவிஷயமாய் எப்போதும் ஆத்மஞாநியாகவே யிருக்கிறானோ அந்த யோகியே ஆத்மாநுபவமென்னும் சுகத்தை யடைவான்.

𑌲𑌭𑌨𑍍𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍃𑌷𑌯𑌃 𑌕𑍍𑌷𑍀𑌣𑌕𑌲𑍍𑌮𑌷𑌾𑌃|
𑌛𑌿𑌨𑍍𑌨𑌦𑍍𑌵𑍈𑌧𑌾 𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑌿𑌤𑍇 𑌰𑌤𑌾𑌃||உரு||

(உரு) சீதோஷ்ணாதிகளால் விடுபட்டவராய் ஆத்மாவில் தானே மனம் வைத்துத் தங்களைப்போலவே ஸர்வப்பிராணிகளும் கடைத்தேறவேண்டுமென்கிற சிரத்தையுடையவர்களாய் ஆத்மாவைத் தரிசிப்பவராயிருக்கிறார்கள் யாவர், அவர்கள் ஆத்மப்பிராப்திக்கு விரோதமான ஸகல பாபங்களையுந் தொலைத்து பிரம்மாநந்தத்தை யடைவார்கள்.

(அ-கை.) கீழ்ச்சொன்ன குணமுடையவர் எளிதில் ப்ரம்மத்தை அடைவர்களென்கிறார்.

𑌕𑌾𑌮𑌕𑍍𑌰𑍋𑌧𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌤𑍀𑌨𑌾𑌂 𑌯𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍|
𑌅𑌭𑌿𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌂 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍||உசா||

http://acharya.org

(௨௬) காமக்ரோதங்களற்று யத்நஶீலராய் மனதை ஜயித்திருப்பவருக்குப் பிரம்மாநந்தம் எங்கே வேண்டுமானாலும் கைம்மேல் கிடைக்கும்.

(அ-கை.) இப்படி சொல்லிய கர்மயோகத்தை அதற்கிலக்கான யோகத்துடன் கூட்டித் தலைக்கட்டுகிறார்.

ஸ்பர்ஶாந்க்ருத்வா பஹிர்பாஹ்யாம்ஶ்சக்ஷுஶ்சைவாந்தரே ப்ருவோ: | ப்ராணாபாநௌ ஸமௌ க்ருத்வா நாஸாப்யந்தரசாரிணௌ ||

யதேந்த்ரியமநோபுத்திர்முநிர்மோக்ஷபராயண: |
விகதேச்சாபயக்ரோதோ ய: ஸதா முக்த ஏவ ஸ: ||௨௮||

(௨௭-௨௮) புறம்புண்டான பற்றுக்களையெல்லாம் ஒழித்து யோகத்துக்கு யோக்கியமான ஆஸனத்தில் நேராகவிருந்து கண்களிரண்டையும் புருவத்தின் நடுவில் மூக்கு நுனியில் வைத்து, மூக்குக்குள்ளோடும் பிராண அபாநங்களை அதாவது உள்மூச்சு வெளிமூச்சுகளைச் சமமாகச்செய்து, இந்திரியம் மனம் புத்தி இவைகளை ஆத்மாவைத்தவிர மற்றொன்றிலும் போகவொட்டாமல் மடக்கி, காமம் குரோதம் பயம் இவையற்று, மோக்ஷமே கதியென்றெண்ணி ஆத்மதரிசநமே காரியமாய் எவனிருக்கிறானோ அவன் ஸித்தியுண்டாவதற்கு முன்னமுங்கூட முக்தனென்னப்படுவான்.

(அ-கை.) நித்திய நைமித்திக கர்மங்களைச் செய்யவேண்டியதாய் யோகத்தை முடிவாய்க்கொண்ட இக்காமயோகத்தை யெளிதில் அடையுமவகை சொல்லுகிறது.

போக்தாரம்யஜ்ஞதபஸாம் ஸர்வலோகமஹேஶ்வரம் |
ஸுஹ்ருதம்ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வாமாம்ஶாந்திம்ருச்சதி || ௨௯ ||

(௨௯) யக்ஞம் தவம் இவைகளைப் புசிப்பவனாய், தமீஶ்வராணாம்பரமம்மஹேஶ்வரம் என்கிறபடியே ஸகல லோகேசுவரருக்கும்மஹேசுவரனாய்ஸர்வப்பிராணிகளுக்கு மினியனாயிருக்கும் நம்மையறிந்தவன், கர்மயோகம் நமக்குஆராதநமென்கிற நினைவினால் அதில் சுகமாயிழிந்து அநுஷ்டிப்பான்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஆறாவது அத்யாயம்.

அவதாரிகை.

இதுவரையில் கர்மயோகத்தை ஸாங்கமாக விதித்து, இப்பொழுது ஞாநயோக கர்மயோகங்களால் ஸாதிக்கவேண்டியதான (ஆத்ம ஸாக்ஷாத்காரரூப) யோகாப்பியாஸம் செய்யும் பிரகாரத்தை விதிக்கிறார். அதில் காம

http://acharya.org

யோகம் மற்றொன்றை யெதிர்பாராமல் தானே ஆத்மப்ராப்தியை ஸாதிக்கிறதென்பதைத் திடப்படுத்துவதற்காக, அதை ஞாநரூபமாகவும் யோகத்தைக்கொண்டு முடிவதாகவும் அநுபாஷிக்கிறார்.

श्रीभगवानुवाच॥ अनाश्रितः कर्मफलं कार्यं कर्म करोति यः।
स सन्न्यासी च योगी च न निरग्निर्न चाक्रियः॥௧॥

(௧) கர்மத்துக்குப்பயனாக ஸ்வர்கம் முதலியவைகளை விரும்பாமல் (அவசியம் அநுஷ்டிக்கவேண்டியதான) அதை "எல்லாவிதத்தாலும் நமக்கன்பனாகிய பரமபுருஷனுக்கு இந்த கர்மம் ஆராதநமாகக்கடவது; இத்தால் அடையவேண்டும் பயன் எனக்குச் சிறிதுமில்லை" என்று எவன் செய்கிறானோ அவன்தான் ஸந்யாஸியும், யோகியும். [அதாவது - ஆத்மதரிசநத்துக்கு ஸாதகங்களான ஞாநகர்மங்களிரண்டையுஞ் செய்தவனென்று தாத்பர்யம்.] அதுவேயல்லது அக்நிகாரியஞ் செய்யாமலும் மற்றுங் கர்மங்களைச் செய்யாமலும் கேவலம் ஞாநத்தில்மாத்திர மிருப்பவனல்ல. [அப்படிசெய்யாம லிருப்பவனுக்கு ஞாநநிஷ்டை யொன்றுதானுண்டு; கர்மநிஷ்டனுக்கோ அவ்விரண்டு முண்டென்று தாத்பர்யம்.]

(அ-கை.) இந்த கர்மயோகத்தில்தானே ஞாநமும் உண்டென்கிறார்.

यं सन्न्यासमिति प्राहुर्योगं तं विद्धि पाण्डव।
न ह्यसन्न्यस्तसङ्कल्पो योगी भवति कश्चन॥௨॥

(௨) அர்ச்சுந! பெரியோர்கள் எதையானால் ஸந்யாஸமென்கிறார்களோ அதாவது (ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே யறிவதான) ஞாநமென்கிறார்களோ அதுதான் கர்மயோகமென்றறி. எப்படியெனில் - ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடி யறிந்து அதனால் (முன் பிரகிருதியைப்பார்த்து இதுதான் ஆத்மாவென்று) தான் கொண்டிருந்த அபிமாநத்தை விடாதவன் கீழ்ச்சொன்ன கர்மயோகிகளில் எவனாகிலும் ஒருவனுண்டா? यस्य सर्वे समारम्भाः कामसङ्कल्पवर्जिताः என்று ஸங்கல்பத்தை விட்டவனே கர்மயோகியாவானென்றன்றோ கீழ்ச்சொன்னது?

(அ-கை.) கர்மயோகந்தான் பிரமாதமில்லாமல் யோகத்தைச் சாதிக்குமென்கிறார்.

आरुरुक्षोर्मुनेर्योगं कर्म कारणमुच्यते।
योगारूढस्य तस्यैव शमः कारणमुच्यते॥௩॥

(௩) புருஷன் ஆத்மதரிசநமென்னும் யோகத்தைச்செய்ய விரும்புவானாகில் அவனுக்குக் கர்மம் ஸாதகமாமென்றும், யோகம் நிலைத்தபிறகே (கர்மநிவ்ருத்தியான) ஞாநம் ஸாதகமாமென்றும் சொல்லப்படுகிறது. [இதனால் ஆத்மதரிசநமென்னும் மோக்ஷமுண்டாமளவும் கர்மயோகமே செய்யத்தக்கதென்று தாத்பர்யம்.]

(அ-கை.) புருஷனுக்கு எப்பொழுது யோகம் நிலைக்குமென்னில் சொல்லுகிறார்.

यदा हि नेन्द्रियार्थेषु न कर्मस्वनुषज्जते।
सर्वसङ्कल्पसन्न्यासी योगारूढस्तदोच्यते॥௪॥

http://acharya.org

(௪) இந்த யோகியானவன் எப்பொழுது ஆத்மாநுபவஞ் செய்வதே ஸ்வபாவமாய் விஷயங்களிலும் விஷயாதீனமாய வரும வியாபாரங்களிலும ஸம்பந்தத்தை யொழித்துக்கொள்ளுகிறானோ, அப்பொழுதுதான (ஸகல ஸங்கல்பத்தையு மொழிதத) இவனுக்கு யோகம் நிலைத்ததாகச சொல்லக்கூடும். [யோகஞ்செய்ய வாரம்பித்தவனுக்கு ஆரம்பத்திலேயே விஷயத்தில வைராக்யமுண்டாக மாட்டாதாகையால அதுணடாவதற்குச் செய்யும் அப்பியாஸரூபமான கர்மயோகமே யோக ஸாதநமாகையால யோகஸித்தியை விரும்பியவன் அதையே செய்யக்கடவன்]

(அ-கை.) அதையே அருளிசசெயகிறார.

உத்தரேதாத்மநாத்மாநம் நாத்மாநமவஸாதயேத்|
ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்துராத்மைவ ரிபுராத்மந:||௫||

(௫) மனதை விஷயத்தில பறக்கவொட்டாமல் தடுத்து அதைக்கொண்டு ஆத்மாவைக கடைத்தேறச செய்யவேண்டுமே யல்லது, கணடதையுந் தேடியோடும்படியான மனதைக்கண்டபடியேவிட்டு ஆத்மாவைக் கெடுக்கலாகாது. ஏனெனில்- ஆத்மாவுக்குப் பந்துவும் மனந்தான் பகையும மனந்தான.

பந்துராத்மாத்மநஸ்தஸ்ய யேநாத்மைவாத்மநா ஜித:|
அநாத்மநஸ்து ஶத்ருத்வே வர்தேதாத்மைவ ஶத்ருவத்||௬||

(௬) எந்த புருஷன் தனக்குத்தானே மனதை விஷயங்களிற் செல்லவொட்டாமல் ஜயிக்கிறானோ, அவனுக்கு அம்மனமே பந்துவாகிறது. அப்படி ஜயிக்காவிடில் அதுவே இவனுக்குப பகையாய் இவனை நரகதியடையவொட்டாமற் கெடுக்கிறது. [இவ்வர்த்தத்தை "மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:| பந்தாய விஷயாஸங்கி மோக்ஷே நிர்விஷயம் மந:" என்று பராசரபகவானுஞ்சொன்னார்.]

(அ-கை.) யோகாரம்பஞ் செய்யத்தக்க நிலை சொல்லுகிறது.

ஜிதாத்மந: ப்ரஶாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித:|
ஶீதோஷ்ணஸுகது:கேஷு ததா மாநாவமாநயோ:||௭||

(௭) வெப்பம குளிர்ச்சி சுகம் துக்கம் மாநம் அவமாநம் இவைகளில மனஞ்சலியாமலிருந்தால அவன மனதில ஆத்மஸ்வரூபம மிகவும நிலைத்திருக்கும்.

ஜ்ஞாநவிஜ்ஞாநத்ருப்தாத்மா கூடஸ்தோ விஜிதேந்த்ரிய:|
யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந:||௮||

(௮) ஆத்மஸ்வரூபத்தை ஸாதாரணமா யறிவதனாலும், பிரகிருதியைக்காட்டிலும் வேறுபட்டிருக்கிறதென்று அதையே விசேஷமாயறிவதனாலும் திருப்தனாய், தேவர் மனிதர் என்று விதம்விதமான நிலைகளிலும ஞாநமே வடிவாயிருக்கின்ற ஆத்மாவில நின்றவனாய், இந்திரிய ஜயமபண்ணி

http://acharya.org

பொன்னேயும் புழுதியையும் ஸமமாகவெண்ணியிருக்கும் கர்மயோகிதான் ஆத்மதரிசநமென்னும் ஞாநயோகத்துக்குத் தக்கவனுவான்.

ஸுஹ்ருந்மித்ரார்யுதாஸீந மத்யஸ்த த்வேஷ்ய பந்துஷு|
ஸாதுஷ்வபி ச பாபேஷு ஸமபுத்திர்விசிஷ்யதே||கூ||

(கூ) 1 ஸுஹிருத்துக்கள், 2 மித்திரர்கள், 3 அரிகள், 4 உதாஸீநர்கள், 5 மத்தியஸ்தர்கள், 6 த்வேஷிகள், 7 பந்துக்கள், 8 ஸாதுக்கள், பாவமே தொழிலாயிருப்பவர்கள் இவர்களிடத்தில் ஸமமாயிருப்பவன் (அதாவது-ஆத்மா ஒன்றே பயனுய் பகைவரால் விரோதமும் நண்பர்களால் பிரயோஜநமும் இல்லாமையால் யாவரையும் ஸமமாக நினைப்பவன்) யோகாப்பியாஸஞ் செய்யத்தக்கவனுவான்.

யோகீ யுஞ்ஜீத ஸததமாத்மாநம் ரஹஸி ஸ்தித:|
ஏகாகீ யதசித்தாத்மா நிராசீரபரிக்ரஹ:||கο||

(கο) கீழ்ச்சொன்ன கர்மயோகியானவன், தினந்தோறும் யோகஞ் செய்யுங்காலத்தில் ஜநங்களில்லாமல் நிச்சப்தமாயிருக்கிற விடத்தில் தனியாயிருந்து சித்தத்தையும் மனதையுமடக்கி ஆத்மாவைத் தவிர மற்றவைகளில் அபேக்ஷையற்று ஒன்றிலும் எனதென்கிற எண்ணம்வையாமல் ஆத்மாவைத் தன்னைத்தான் பார்க்கும்படியான நிலையில் வைக்கக்கடவன்.

சுசௌ தேசே ப்ரதிஷ்டாப்ய ஸ்திரமாஸநமாத்மந:|
நாத்யுச்ச்ரிதம் நாதிநீசம் சைலாஜிநகுசோத்தரம்||கக||

தத்ரைகாக்ரம் மந: க்ருத்வா யதசித்தேந்த்ரியக்ரிய:|
உபவிச்யாஸநே யுஞ்ஜ்யாத் யோகமாத்மவிசுத்தயே||கஉ||

(கக-கஉ.) அசுத்த புருஷர்களாலும் அசுத்த வஸ்துக்களாலும் தீண்டப்படாத பரிசுத்த ஸ்தாநத்தில், கட்டைமுதலியவற்றுல் செய்ததாய் அதிக உயரமும் அதிக தாழ்வுமில்லாமல் ஸமமாயிருக்கிற ஓர் ஆஸநத்தில் தர்ப்பை மான்தோல் வஸ்திரம் இவைகளை ஒன்றின்மீ தொன்ருய்ப்பரப்பி அதில் சார்ந்து உட்கார்ந்துகொண்டு, மனதை ஒரு நிலையாகச்செய்து இந்திரிய மநோவியாபாரங்களைச் சுத்தமாயடக்கி, தான் இந்தப் பிரகிருதியினின்றும் விடுபடுகைக்காக ஆத்ம ஸாக்ஷாத்காரம்பண்ணக்கடவன்.

---

1 ஸமான வயதாயில்லாமலிருக்கச்செய்தே தனக்கு இதத்தைக் கோருமவர்கள். 2 ஸமான வயதாயிருக்கையால் தனக்கு இதத்தைக் கோருமவர்கள். 3 இவனிடத்தில் ஒரு காரணத்தைக்கண்டு இவனுக்கு அநர்த்தந்தேடுமவர்கள். 4 உறவு பகை இரண்டுக்கும் காரணமில்லாமையால் உறவு கொள்ளாமலும் பகைக்காமலு மிருப்பவர்கள். 5 ஸ்வபாவமாகவே உறவாடாமலும் பகைக்காமலுமிருப்பவர். 6 ஸ்வபாவமாகவே பகைப்பவர். 7 ஸ்வபாவமாகவே இதம் செய்பவர். 8 தர்மசீலர்கள்.

http://acharya.org

ஸமம் காயஶிரோக்ரீவம் தாரயந்நசலம் ஸ்திர꞉।
ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திஶஶ்சாநவலோகயந்॥௧௩॥
ப்ரஶாந்தாத்மா விகதபீர்ப்ரஹ்மசாரிவ்ரதே ஸ்தித꞉।
மந꞉ ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர꞉॥௧௪॥

(௧௩-௧௪.) உடல் தலை கழுத்து இவைகளை அசையாமல் † சாய்ந்தாற்போல் ஸமமாய் நிறுத்தி திசைகளைப்பாராமல் தன்மூக்கு நுனியைப்பார்த்துக்கொண்டே அடங்கிய மனதோடு பயமின்றிப் * பிரம்மசரிய வ்ரதத்தில் இருந்தவனாய் மனதை நம்மிடத்தில் நிறுத்திவைத்து இடைவிடாமல் நம்மையே சிந்தித்திருக்கக்கடவன்.

யுஞ்ஜந்நேவம் ஸதாத்மாநம் யோகீ நியதமாநஸ꞉।
ஶாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்தாமதிகச்சதி॥௧௫॥

(௧௫.) இப்படி மனதுக்கு க்ஷேமஸ்தானமான நம்மிடத்தில் இடைவிடாமல் மனதை நிறுத்தியவன் நம் ஸம்பந்தத்தால் பரிசுத்தமாய் அசையாமலிருக்கும் அம்மனதைக்கொண்டு நம்மிடத்திலுண்டான மேலான ஆநந்தத்தை யடைகிறான்.

(அ-கை.) இப்படி ஆத்ம யோகஞ்செய்ய ஆரம்பித்தவன் மனந்தெளிவதற்காக சுப ஸ்தானமான பகவானிடத்தில் மனதை நிறுத்தவேண்டுமென்பதை யருளிச்செய்து யோகத்துக்கு உபகரணமான மற்றவைகளையும் அருளிச்செய்கிறார்.

நாத்யஶ்நதஸ்து யோகோऽஸ்தி ந சைகாந்தமநஶ்நத꞉।
ந சாதிஸ்வப்நஶீலஸ்ய ஜாக்ரதோ நைவ சார்ஜுந॥௧௬॥
யுக்தாஹாரவிஹாரஸ்ய யுக்தசேஷ்டஸ்ய கர்மஸு।
யுக்தஸ்வப்நாவபோதஸ்ய யோகோ பவதி து꞉கஹா॥௧௭॥

(௧௬-௧௭.) அதிகமாயுண்பதும் முதலே உண்ணாமலிருப்பதும் அளவற்ற காரியஞ்செய்வதும் காரியமே செய்யாமலிருப்பதும் அப்படியே அதிகமாயுறங்குவதும் உறங்காமலே யிருப்பதும் அதிக ஆயாஸப்படுவதும் சிறிதும் ஆயாஸப்படாம லிருப்பதும் இவையெல்லாம் யோகத்துக்கு விரோதிகள். இவ்வொன்றும் மிதமாயிருப்பவனுக்குத் தான் துக்கநிவர்த்தகமான யோகம் ஸித்திக்கும்.

யதா விநியதம் சித்தமாத்மந்யேவாவதிஷ்டதே।
நி꞉ஸ்ப்ருஹ꞉ ஸர்வகாமேப்யோ யுக்த இத்யுச்யதே ததா॥௧௮॥

---

† சாய்ந்துக் கொள்ளாமற்போனால் நடுவில் பின்பக்கத்தைத் தரிப்பதற்காகப் பிரயத்தனஞ் செய்வதனால் ஸமாதி நிலைகுலையுமென்று அதற்காகச் சாய்ந்தாற்போலென்கிறது.

* பிரம்மசரியவிரதமானது - பிரம்மமென்கிற ஆத்மாவையே சிந்தித்திருக்கும் நிலை.

http://acharya.org

(௧௮.) மனது ஆத்மாவில்தானே விசேஷமாய் நிலைத்து எப்பொழுது அசையாமலிருக்குமோ அப்பொழுதுதான் ஸகலகாமங்களிலும் ஆசையற்று யோகத்துக்குத் தக்கவனுவான்.

𑌯𑌥𑌾 𑌦𑍀𑌪𑍋 𑌨𑌿𑌵𑌾𑌤𑌸𑍍𑌥𑍋 𑌨𑍇𑌙𑍍𑌗𑌤𑍇 𑌸𑍋𑌪𑌮𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 |
𑌯𑍋𑌗𑌿𑌨𑍋 𑌯𑌤𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑍁𑌞𑍍𑌜𑌤𑍋 𑌯𑍋𑌗𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ||௧௯||

(௧௯.) மனோவியாபாரமற்று ஆத்மயோகம் செய்பவனுடைய ஆத்மாவுக்கு, காற்றில்லாவிடத்தில் அசையாமல் விளங்கும் விளக்கைச் சமமாய் கூறப்படும். [காற்றில்லாமையால் அசையாமல் காந்தியோடு விளங்கும் விளக்குபோல் ஆத்மாவானது ஸகல வியாபாரங்களையுமொழித்த மனதுடன் கூடினமையால் அசையாமல் ஞாநமென்னும் காந்தியோடுகூடி விளங்குமென்று தாத்பரியம்.]

𑌯𑌤𑍍𑌰𑍋𑌪𑌰𑌮𑌤𑍇 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌂 𑌯𑍋𑌗𑌸𑍇𑌵𑌯𑌾 |
𑌯𑌤𑍍𑌰 𑌚𑍈𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌤𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 ||௨௦||
𑌸𑍁𑌖𑌮𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌕𑌂 𑌯𑌤𑍍𑌤𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 |
𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌯𑌤𑍍𑌰 𑌨 𑌚𑍈𑌵𑌾𑌯𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌶𑍍𑌚𑌲𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 ||௨௧||
𑌯𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌚𑌾𑌪𑌰𑌂 𑌲𑌾𑌭𑌂 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌨𑌾𑌧𑌿𑌕𑌂 𑌤𑌤𑌃 |
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌨 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌗𑍁𑌰𑍁𑌣𑌾𑌪𑌿 𑌵𑌿𑌚𑌾𑌲𑍍𑌯𑌤𑍇 ||௨௨||
𑌤𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍁𑌃𑌖𑌸𑌂𑌯𑍋𑌗𑌵𑌿𑌯𑍋𑌗𑌂 𑌯𑍋𑌗𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌮𑍍 |
𑌸 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇𑌨 𑌯𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌯𑍋𑌗𑍋𑌽𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌣𑍍𑌣𑌚𑍇𑌤𑌸𑌾 ||௨௩||

(௨௦-௨௧-௨௨-௨௩.) யோக ஸித்திக்காகத் தகையப்பட்ட மனதானது எந்த யோகத்தில் சுகப்படுமோ, எந்த யோகத்தில் ஆத்மாவைப் பார்ப்பதினுல் அதில்தானே அதிகமாய் ஸந்தோஷிக்கிருனே, இந்திரியங்களா லறியப்படாமல் கேவலம் ஆத்மாவினுலும் புத்தியினுலும் அறியக்கூடிய வின்பத்தையெந்தயோகத்தில்பெற்று அதனுல் மற்றவிஷயங்களில் சபலிக்கமாட்டானே, எந்த யோகம்செய்பவன் யோகத்தைவிட்டு நீங்கிய பின்பும் மற்ருென்றை யபேக்ஷிக்காமல் அந்த யோகத்தையே விசேஷமாய் நினைப்பனே, எந்த யோகம் ஸித்தித்தவன் அந்த யோகத்தைவிட்டு நீங்கியபின்பும் (குணமுள்ள புத்திரன் இறத்தல் முதலியவற்ருலுண்டாகும்) பெருந்துயரங்களுக்கும் சலிக்கமாட்டானே) அப்படிப்பட்ட யோகம் இதுவென்று யோகம்செய்ய வாரம்பித்தபொழுதே நிச்சயித்து மனக்கலக்கமற்று செய்யக்கடவன்.

𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑌶𑍇𑌷𑌤𑌃 |
𑌮𑌨𑌸𑍈𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌵𑌿𑌨𑌿𑌯𑌮𑍍𑌯 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃 ||௨௪||
𑌶𑌨𑍈𑌃 𑌶𑌨𑍈𑌰𑍁𑌪𑌰𑌮𑍇𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌧𑍃𑌤𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌯𑌾 |
𑌆𑌤𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌂 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑌪𑌿 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ||௨௫||

http://acharya.org

(௨௪-௨௫.) பெண்டு பிள்ளை வீடுவாசல் முதலியவற்றில் தனக்குண்டான கோரிக்கையை, (அவர்களுக்கும் தனக்கும் ஸம்பந்தமில்லையென்கிற வெண்ணத்தைக்கொண்டு) ஒழித்து, சீதம் உஷ்ணம் முதலியவற்றாலுண்டாகும் விருப்பையும், வெறுப்பையுந்தொலைத்து, புலன்களையெங்கும்செல்லவொட்டாமல் தடுத்து மெள்ளமெள்ள விவேகத்தைக்கொண்டு மனதை ஆத்மாவில் நிறுத்தி, மற்றொன்றையும் நினையாமலிருக்கக்கடவன்.

யதோ யதோ நிஶ்சரதி மநஶ்சஞ்சலமஸ்திரம்।
ததஸ்ததோ நியம்யைதத் ஆத்மந்யேவ வஶம் நயேத்॥௨௬॥

(௨௬.) சஞ்சல ஸ்வபாவமான மனது ஆத்மாவில் நிலையாமல் எந்தெந்த விஷயத்தைத் தேடியோடுமோ, அதை அவ்வவற்றில் செல்லவொட்டாமல் வலுவிலிழுத்து ஆத்மாவில் தானே நிறுத்தி 'இது அதிக சுகமாயிருக்கிறது' என்கிற உத்தேசத்தோடு ஸ்வாதீனம் செய்யக்கடவன்.

ப்ரஶாந்தமநஸம் ஹ்யேநம் யோகிநம் ஸுகமுத்தமம்।
உபைதி ஶாந்தரஜஸம் ப்ரஹ்மபூதமகல்மஷம்॥௨௭॥

(௨௭.) மனதை ஆத்மாவில் அசையாமல் நிறுத்தி அதனால் ஸகல பாபங்களையுந்தொலைத்து ரஜோகுணத்தையுமொழித்து ஸ்வஸ்வரூபத்தில் நிற்கு மிந்த யோகிக்கு ஆத்மாநுபவமென்னும் உத்தம சுகம் கிடைக்கும்.

யுஞ்ஜந்நேவம் ஸதாத்மாநம் யோகீ விகதகல்மஷ:।
ஸுகேந ப்ரஹ்மஸம்ஸ்பர்ஶம் அத்யந்தம் ஸுகமஶ்நுதே॥௨௮॥

(௨௮.) இப்படி ஆத்மயோகத்திலிருப்பவன் தொல்வினையாவுமொழித்து அதனால் ஈறிலின்பமான பிரம்மாநுபவத்தை எளிதில் அடைகிறான்.

(அ-கை.) யோகம் பக்குவமாம்போது அதனுடைய நான்குவிதமான நிலைமைகளையும் அருளிச்செய்கிறார்.

ஸர்வபூதஸ்தமாத்மாநம் ஸர்வபூதாநி சாத்மநி।
ஈக்ஷதே யோகயுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்ஶந:॥௨௯॥

(௨௯) யோகஞ் செய்யுமவன் தன்னை மற்ற பூதங்களிலும் எங்கும் * ஸமமாய்ப்பார்க்கிறான். அதாவது-ஆத்மாக்களெல்லாம் பிரகிருதிக்கவ்வருகாய் ஞானமே வடிவாய் தன்னைப்போலவே யிருப்பதாக நினைக்கிறான். [ஏகரூபமாயிருக்கிற ஆத்மாக்களில் ஒன்றைப் பார்த்தபோதே மற்றவைகளையும் பார்த்தவனாகிறானென்று தாத்பரியம்.]

---

* ஸர்வத்ர ஸமதர்ஶந: என்றும், நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம என்றும் சொல்லுகையாலும், யோயம் யோகஸ்த்வயா ப்ரோக்த: ஸாம்யேந என்று அநுவதிக்கையாலும் பிரகிருதிக்கவ்வருகாய் ஞானாகாரமாயிருக்கையாகிற ஆத்மாக்களின் ஸாம்யமே இங்கு சொல்லப்படுகிறது.

http://acharya.org

𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚 𑌮𑌯𑌿 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿|
𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸 𑌚 𑌮𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿||௩௰||

(௩௰) முந்திய நிலையைக்காட்டிலும் பக்குவமான நிலையை (அதாவது என்னோடு ஸாம்மியத்தை) எவன் அடைகிறானோ அவன் ஆத்மாக்களையெல்லாம் என்னிடத்திலும், என்னை ஸகல ஆத்மாக்களிலும் பார்க்கிறான். (அதாவது-புண்யபாபங்களற்று ஸ்வஸ்வரூபமாயிருக்கும் ஆத்மாக்களெல்லாம் 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 என்கிறபடியே பரமபுருஷனை என்னைப்போலிருப்பதாகப் பார்க்கிறான். [ஸ்வஸ்வரூபமாத்திரனை அவன் பரமபுருஷனுக்கு ஸமனாயிருக்கையாலே தன்னைப்போன்ற மற்ற ஆத்மாக்களும் அப்படிதானிருக்குமென்று பார்க்கிறானென்று தாத்பரியம்.] அப்படி தன்னை என்னைப்போல் பார்க்குமவனுக்கு அந்த ஸாம்யத்தைவிட்டு நான் காணாமற்போவதில்லை. அவனும் அப்படி (எனக்கு ஸமமாகக்) காணாமற்போவதில்லை.

(அ-கை.) அதற்கும் முதிர்ந்த நிலை சொல்லுகிறது.

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌭𑌜𑌤𑍍𑌯𑍇𑌕𑌤𑍍𑌵𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌃|
𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍋𑌽𑌪𑌿 𑌸 𑌯𑍋𑌗𑍀 𑌮𑌯𑌿 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇||௩௧||

(௩௧) தேவர் மனிதர் என்று பிரகிருதியால் வரும் பேதத்தைவிட்டு, சுருங்காத ஞானமே வடிவான ஆத்மாவிலொன்றியவனாய் யாவனொருவன் ஸர்வபூதங்களிலுமுள்ள நம்மை யோகநிலையில் திடமாய் ஸேவிக்கிறானோ, யோகமில்லாத நிலையிலுங்கூட அவன் தன் ஆத்மாவையும் மற்றப் பிராணிகளையும் பார்த்துக்கொண்டிருந்தும் நம்மிடத்திலேயே யிருக்கிறான். [என்றால் - தன்னிடத்திலும் பிறரிடத்திலும் நமது ஸாம்யத்தையே பார்க்கிறான் என்று தாத்பரியம்.]

(அ-கை.) இதற்கும் முதிர்ந்த முடிவான நிலை சொல்லுகிறது.

𑌆𑌤𑍍𑌮𑍌𑌪𑌮𑍍𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑍋𑌽𑌰𑍍𑌜𑌨|
𑌸𑍁𑌖𑌂 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸 𑌯𑍋𑌗𑍀 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌤𑌃||௩௨||

(௩௨.) ஆத்மாக்களெல்லாம் சுருங்காத ஞானமே வடிவமாய் ஸமமாயிருக்கையால் (புத்திரன் பிறத்தல் இறத்தல் முதலியவைகளாலுண்டாகும்) இன்பதுன்பங்களோடு ஒரு ஆத்மாவுக்கும் ஸம்பந்தமில்லையென்று பார்த்து, அதனால் தன்னிடத்திலும் பிறரிடத்திலும் சுகதுக்கங்களைச் சமமாய்ப் பார்ப்பவன் அதாவது பிறருடைய புத்திரஜந்ம மரணாதிகளுக்குச் சமமாகத் தன் புத்திரஜந்ம மரணாதிகளையும் பார்ப்பவன் யோகத்தின் முடிவான நிலைமையிலிருப்பவனாவான்.

(அ-கை.) அர்ச்சுநன் சொல்லுவது.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 || 𑌯𑍋𑌽𑌯𑌂 𑌯𑍋𑌗𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌸𑌾𑌮𑍍𑌯𑍇𑌨 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨|
𑌏𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌚𑌞𑍍𑌚𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌮𑍍

http://acharya.org

चञ्चलं हि मनः कृष्ण प्रमाथि बलवद्दृढम् ।
तस्याहं निग्रहं मन्ये वायोरिव सुदुष्करम् ॥ ௩௪ ॥

(௩௩-௩௪.) ஸ்வாமி! தேவர் மனிதர் என்கிற பேதத்தை நெடுங்காலமாய்ப் பார்த்துவந்தவனை, யிப்பொழுது "ஆத்மாக்கள் ஞானஸ்வரூபராய்" ஒருவர்க்கொருவர் ஸமமாயிருக்கிறார்களென்று நினைக்கும்படியாகச் சொன்னால் அதெப்படி நினைக்கக்கூடும். ஆகையால் நீர் சொன்ன இந்த யோகம் நிலைக்குமென்று எனக்குத் தோன்றவில்லை; ஏனெனில்.—சலிப்பதே ஸ்வபாவமான மனதை பழக்கமானவிஷயத்தில் நிறுத்தும்பொழுதே அது ஒன்றை நினைக்கும்போது மற்றொன்றில் பாய்கிறது, அப்படியிருக்க, பழக்கமில்லாத ஆத்மாவில் இம்மனதை ஸ்தாபிக்கிறதென்றால் எதிர்காற்றை விசிறிகொண்டு தடுப்பதுபோல் மிகவும் வருத்தமாமென்று நினைக்கிறேன். [ஆகையால் மனதையடக்கும் உபாயஞ் சொல்லவேண்டுமென்று கருத்து.]

(அ-கை.) அதற்கு எம்பெருமான் அருளிச்செய்கிறார்.

श्रीभगवानुवाच ॥ असंशयं महाबाहो मनो दुर्निग्रहं चलम् । अभ्यासेन तु कौन्तेय वैराग्येण च गृह्यते ॥ ௩௫ ॥

असंयतात्मना योगो दुष्प्राप इति मे मतिः ।
वश्यात्मना तु यतता शक्योऽवाप्तुमुपायतः ॥ ௩௬ ॥

(௩௫-௩௬.) பெருந்தோள் மன்னா! சஞ்சல ஸ்வபாவமான மனதை அடக்குவதென்பது வருத்தமே! ஆயினும் ஆத்மா குணஸ்வரூபமாயிருக்கிறதென்று பழகுவதால் அதில் அன்பும், இதரவிஷயங்கள் தோஷரூபமாயிருக்கின்றனவென்று அறிகையால் அவைகளில் வெறுப்புமுண்டாய் நாளடைவில் மனதை யெப்படியாவது கட்டிப்பிடிக்கவேண்டும். மனதை ஜயிக்காவிடில் யோகம் ஸித்திப்பது மிகவும் துர்லபம். உபாயத்தாலே மனதை ஸ்வாதீனஞ் செய்தவனுக்கோ, அதாவது-நாம் முன்சொன்னபடி நமது ஆராதநரூபமான கர்மயோகத்தாலே மனதை ஜயித்தவனுக்கோ (எல்லாவற்றையும் ஸமமாய்ப்பார்க்கையாகிற) யோகம் ஸித்திப்பது மிகசுலபம்.

(அ-கை.) அநந்தரம் "न ह्यसंन्यस्तसङ्कल्पः" இத்யாதிகளில் கேட்ட யோகமாஹாத்மியத்தையே * உள்ளபடி கேட்கவேண்டுமென்று அர்ச்சுநன்பிரச்நம் பண்ணுகிறான்.

* அங்கே கர்மயோகத்தின் மஹிமையன்றோ சொல்லப்பட்டதென்றால், அது யோகத்துக்கு அங்குரமான ஞானத்தையுட்கொண்டதாயும் யோகத்தைக்கொண்டு முடிவதாயும் சொல்லப்பட்டமையால் அங்கும் யோகமே சொல்லப்பட்டது; என்றால் யோகத்துக்கு அங்கமான கர்மயோக மாஹாத்ம்யஞ் சொன்னபோதே அங்கியான யோகமும் சொன்னதாமென்று அபிப்பிராயம்.

http://acharya.org

அர்ஜுந உவாச॥ அயதிஶ்ஶ்ரத்தயோபேதோ யோகாச்சலிதமா
நஸ꞉| அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காம் கதிம் க்ருஷ்ண கச்சதி॥௩௭॥

கச்சிந்நோபயவிப்ரஷ்டஶ்சிந்நாப்ரமிவ நஶ்யதி|
அப்ரதிஷ்டோ மஹாபாஹோ விமூடோ ப்ரஹ்மண꞉ பதி॥ ௩௮॥

ஏதந்மே ஸம்ஶயம் க்ருஷ்ண சேத்துமர்ஹஸ்யஶேஷத꞉|
த்வதந்ய꞉ ஸம்ஶயஸ்யாஸ்ய சேத்தா ந ஹ்யுபபத்யதே॥ ௩௯॥

(௩௭-௩௮-௩௯) அர்ச்சுநன் சொல்லுவது:—மிகவும் ஊற்றத்துடன் யோகஞ்செய்ய விழைந்த ஒருவன், தான் திடமான அப்பியாஸம செய்யமாட்டாமல அதனால் யோக ஸித்தியடையாமல் யோகத்தினின்றும் நழுவினால் அவன் அதனால் என்ன கதியடைகிறான்? ஒருபெரிய மேகத்தினின்றுந் துண்டுபட்ட ஒரு சிறுமேகமானது மற்றொரு பெருமேகத்தையுமடையாமல் நடுவில் அழிந்துபோவதுபோல், ¶ காமமார்க்கமும் கெட்டு பிரம்மமார்க்கமுங்கெட்டு அழிந்து போகிறானா! இல்லையென்று ஏதாகிலும் இவனுக்கு க்ஷேமமுண்டா? இந்த ஸம்சயத்தை நன்றாய்ப் போக்கியருளவேண்டும். ஸ்வயம் ப்ரத்யக்ஷமாய் ஏககாலத்தில் எல்லாவற்றையு மெப்போதுங் காண வல்லராகிய தேவரீரைத் தவிர மற்றொருவராலும் இந்த ஸம்சயம் போக்கக்கூடியதல்ல.

(அ-கை.) அதற்குக் கண்ணன் அருளிச்செய்வது.

ஸ்ரீபகவாநுவாச॥ பார்த்த நைவேஹ நாமுத்ர விநாஶஸ்தஸ்ய வித்யதே| ந ஹி கல்யாணக்ருத்கஶ்சித் துர்கதிம் தாத கச்சதி॥௪௦॥

(௪௦) ஊற்றத்தோடு யோகத்திலிழிந்தவனை அதினின்று நழுவினால் அவனுக்கு இஹபரங்களிரண்டிலும் அழிவில்லை. அதாவது-பிரகிருதியைச்சேர்ந்த ஸ்வர்க்காதிபோகத்திலும் ப்ரம்மாநுபவத்திலும் (கோரியதைப்பெறாமல் போவதும் அநிஷ்டத்தை யடைவதுமான) நாசமுண்டாகமாட்டாது. மிகவும் மங்களகரமான யோகத்தைச் செய்பவனுக்கு முக்காலத்திலுங் கேடுவரமாட்டாதன்றோ?

(அ-கை.) ஆனால் இவன் என்னகதியடைகிறான்? என்றால் அருளிச்செய்கிறார்.

ப்ராப்ய புண்யக்ருதாம் லோகாநுஷித்வா ஶாஶ்வதீ꞉ ஸமா꞉ |
ஶுசீநாம் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோऽபிஜாயதே॥ ௪௧॥

¶ இவன் (கர்மத்தைப் பலாபேக்ஷையுடன் செய்யாமையால் அது ஸ்வர்க்காதிபலன்களை ஸாதிக்கமாட்டாதாகையால்) அதிலும் ஆதாரமற்று, (தான் ஆரம்பித்தப் பிரம்மமார்க்க மான யோகந் தலைக்கட்டாமையால் இதிலும் ஆதாரமற்றுப்) போகிறான்.

http://acharya.org

(௪௧) யோகத்தினின்றும் நழுவியபோது எவ்விதபோகத்தில் ஆசையினால் நழுவினனோ இவன் சரீராந்தத்தில் மஹா புண்ணியசாலிகளடையும்படியான லோகங்களையடைந்து அவ்வித போகங்களை யோகமஹிமையினாலே அநுபவித்தவனாய், அந்தபோகத்தில் ஆசையறுமளவும் வெகுகாலம் அங்கிருந்து ஆசையற்று, பின்பு பரிசுத்தர்களாயும் ஸ்ரீமான்களாயும் யோகஞ்செய்யத் தக்கவராயுமுள்ள மஹாத்மாக்களின் கிருஹத்தில் அந்த யோக மஹிமையைக்கொண்டே வந்து பிறக்கிறான்.

அதவா யோகிநாமேவ குலே பவதி தீமதாம்|
ஏதத்தி துர்லபதரம் லோகே ஜந்ம யதீத்ருஶம்||௪௨||

(௪௨) யோகந் தலைக்கூடுகிறஸமயத்தில நழுவிப்போனனாகில் அவன், தாமும் யோகஞ் செய்து பிறருக்கும் உபதேசிக்கத் தக்கவர்களான மஹான்களின் குலத்தில்வந்து பிறக்கிறான். இப்படி யோகஞ்செய்யத் தக்கவர்களுடையவும் யோகிகளுடையவும் குலத்தில்வந்து பிறப்பதென்பது லோகத்தில் ஸாதாரணமாய் எல்லாருக்கும் கிடைப்பதன்று; கேவலம் யோகமஹிமையினால்பெறத்தகுந்தது.

தத்ர தம் புத்திஸம்யோகம் லபதே பௌர்வதேஹிகம்|
யததே ச ததோ பூய: ஸம்ஸித்தௌ குருநந்தந||௪௩||
பூர்வாப்யாஸேந தேநைவ ஹ்ரியதே ஹ்யவஶோபி ஸ:

(௪௩-௪௪) இவன் அந்த மறுஜந்மத்திலும், முன்ஜந்மத்தில் பழகிய யோகபுத்தியையே யடைந்து தூங்கியெழுந்தவன்போல் மறுபடியும் அந்த யோக ஸித்தியைக்குறித்தே எப்படியானால் இடையூறு நேரிடாதோ அப்படி யத்தநம்செய்கிறான். இவன் முன்செய்த அப்பியாஸமானது இவனை மறுபடியும் அந்த மார்க்கத்திலேயே இழுக்கிறது. இப்படி இந்த யோகத்தின மகிமை எங்கும் பிரஸித்தமன்றோ?

ஜிஜ்ஞாஸுரபி யோகஸ்ய ஶப்தப்ரஹ்மாதிவர்ததே||௪௪||

(௪௪) யோகஞ்செய்யத் தொடங்காமல் யோகமார்க்கத்தை யறிய விரும்பியவன் அதினின்று மனஞ்சலித்தானாகில் அவனும் அப்படியே மறுபடியும் அந்த யோகவிசாரத்தையே செய்யததொடங்கி கர்மயோகமடியாக யோகத்தை யநுஷ்டித்து அதனால் சப்தப்பிரமத்தை (அதாவது - பிரகிருதியைக்) கடக்கிறான். [அதாவது பிரகிருதியினின்றும்விடுபட்டு தேவன் மனிதன் என்பதுமுதலான சப்தங்களைக்கொண்டு சொல்லப்போகாமல் ஞானாநந்த ஸ்வரூபனான ஆத்மாவை யடைகிறானென்று பொருள்]

ப்ரயத்நாத்யதமாநஸ்து யோகீ ஸம்ஶுத்தகில்பிஷ:|
அநேகஜந்மஸம்ஸித்த: ததோ யாதி பராம் கதிம்||௪௫||

(௪௫) யோகத்தின் மஹிமை யிவ்வண்ணமாயிருக்கையால் அநேக ஜந்மங்களாய் புண்ணியத்தை யேராளமாகச்செய்து அதனால் பாவங்களைத்

http://acharya.org

தொலைத்து யோகஞ்செய்ய விழிந்தவன் அந்த யோகத்தினின்றும் நழுவிய போதிலும் மறுபடியும் நற்கதியேயடைகிறான்.

(அ-கை.) உயாந்த புருஷார்த்தத்தைக் கோரியவனாகையால் யோகியானவன் யாவரினும் பெரியனென்கிறார்.

𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌭𑍍𑌯𑍋𑌧𑌿𑌕𑍋 𑌯𑍋𑌗𑍀 𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌭𑍍𑌯𑍋𑌪𑌿 𑌮𑌤𑍋𑌧𑌿𑌕𑌃 |
𑌕𑌰𑍍𑌮𑌿𑌭𑍍𑌯𑌶𑍍𑌚𑌾𑌧𑌿𑌕𑍋 𑌯𑍋𑌗𑍀 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍋𑌗𑍀 𑌭𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 ||௪௬||

(௪௬) கேவலந் தவங்களால் எந்த புருஷார்த்தங்களை யடையலாகுமோ ஆத்மஞாநந் தவிர மற்ற ஞாநங்களாலெவைகளை யடையலாகுமோ கேவலம் அசுவமேதம்முதலிய கர்மங்களால் எவையடையப்படுமோ அவை யெல்லாவற்றிலும் சிறந்த புருஷார்ததததை யோகம் ஸாதிக்குமாகையால் இந்த யோகி அவர்கள் யாவரினும்பெரியவன். ஆகையால் அர்ச்சுந! நீ யோகியாகும் வழியைபபார்.

(அ-கை.) இதுவரையில் பரவித்தைக்கு அங்கமான பிரஜாபதிவாக்கியத்தில் சொன்ன ஜீவாத்மதரிசநம் சொல்லப்பட்டது. இனி பரவித்தையைச்சொல்லுகிறார். [பரவித்தை பகவத் உபாஸநம்.]

𑌯𑍋𑌗𑌿𑌨𑌾𑌮𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑌦𑍍𑌗𑌤𑍇𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 |
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌾𑌨𑍍𑌭𑌜𑌤𑍇 𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌸 𑌮𑍇 𑌯𑍁𑌕𑍍𑌤𑌤𑌮𑍋 𑌮𑌤𑌃 ||௪௭||

(௪௭) அகச்செயல் புறச்செயல்களுக்கு ஆதாரமாயுள்ள மனது நம்மையே நாடியிருக்கையாலே பரமபுருஷனான நம்மைவிட்டால் ஒரு க்ஷணங்கூட ஆத்மாவைத் தரிக்கமாட்டாத ஸ்வபாவனாய் நம்மை யடையவேண்டுமென்று துரிதப்பட்டு எவன் நம்மை ஸேவிக்கிறானோ அவன கீழ்ச்சொன்ன யோகிகளிலும் மற்றும் தவசிமுதலானோர் யாவரினும் மிகவும் மேலானவன என்று ஸர்வக்ஞனான நாம் நினைக்கிறோம். [மேருவுக்கும் கடுகுக்கும் உண்டான வித்தியாஸமபோல் இந்த பிரம்ம உபாஸகனுக்கும் மற்ற யோகி தவசி முதலானோருக்குமுண்டான வித்தியாஸம்; ஆனால் கடுகுக்குள் ஒன்றுக்கொன்று சிறிதுபெரிதென்கிற வித்தியாஸம்போல் ஜீவஸாக்ஷாத்காரம் பண்ணிய யோகிக்கும் மற்ற தவசிமுதலானோருக்கும் வித்தியாஸமென்றறிக.] அதென்ன? (ஜீவஸாக்ஷாத்காரம்பண்ணும்) யோகிக்கும் பிரம்மநிஷ்டனுக்கும் அவ்வளவு தாரதம்யம் எங்கன முண்டாவதென்னில்:—விசித்திரமாய் எண்ணிறந்த போக்கிய பதார்த்தங்களும போக்தாக்களின் கூட்டங்களும் போகத்துக்குவேண்டும் கருவிகளும் அதற்கேற்ற ஸ்தானங்களும் நிறைந்த இவ்வெல்லா உலகங்களுக்கும் உத்பத்தி ஸ்திதி லயம் என்கிற மூன்று நிலைமையையும் விளையாட்டாய்ச் செய்பவனாய், ஒரு தோஷத்தாலும் தட்டுப்படாமல் எல்லையும் ஈடுமற்ற ஞாநம்பலம் ஐசுவரியம்வீரியம் சக்தி தேஜஸ்ஸுமுதலிய எண்ணிறந்த கல்யாணகுணங்களுக்கு நிதியாய், நமக்கு ஸம்மதமாய் நமக்குத்தக்கதாய் ஏகரூபமாய் சிந்தைக்கெட்டாததாய் திவ்யமாய் அற்புதமாய் நித்தியமாய் குற்றமற்றதாய் நிரதிசயமாய் பிரகாசம் ஸௌந்தரி

http://acharya.org

யம் பரிமளம் ஸௌகுமாரியம் லாவண்யம் யௌவநம் முதலிய அநந்த குணங்களுக்குமிடமான திவ்யமங்கள விக்கிரகத்தையுடையவனாய், வாக்குக்கும் மனதிறகுமெட்டாதஸ்வரூபஸ்வபாவங்களுடையனாயிருக்கச்செய்தே, அபாரமானகருணை, ஸௌசீல்யம், வாத்ஸல்யம், ஔதாரியம் இவைகளுக்கு ஸமுத்திரமாயும் ஒருவிசேஷமுங் காணாமலே எல்லாப்பிராணிகளுக்கும் புகலிடமாயுமிருக்கையாலும் அடுத்தவரின் துயரத்தை யொழிப்பதறகாக ஆஸ்ரித வாத்ஸல்விய ஸாகரமாய், ஸகலமனுஷ்யருக்கும் நேத்திரவிஷயமாய், தன் ஸ்வபாவத்தைவிடாமலே வசுதேவர் திருமாளிகையில் வந்தவதரித்து ஈடில்லாதகாந்தியால் ஸகல லோகத்தையும் பிரகாசப்படுத்திவளர்த்துக்கொண்டிருககிற நம்மையே உபாஸிக்கு மிந்தப் பிரம்மநிஷ்டனுக்கும், கேவலம் பிரகிருதிக்குப் புறம்பாய் ஞாநாகாரனாயிருக்கும்ஜீவஸ்வரூபத்தை உபாஸிக்கிற யோகிக்கும் ஒப்புச்சொல்ல சிறிதாகிலும் இடமுண்டோ? ஆகையால் அவன் எல்லாரிலும் மிகுதியும் சீரியவனென்று நம் ஸித்தாந்தம்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

ஆறாவது அத்யாயம் முற்றிறறு.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஏழாவது அத்யாயம்.

அவதாரிகை.

இப்படி பரமபலனாய் . பரப்பிரம்மமாய் நித்தியனாய் குற்றமற்றவனாய் எல்லாவுலகங்களுக்கும் முக்கியகாரணனாய் யாவுமறிந்தவனாய் எப்பொருட்குமுயிராய் நினைத்ததைத் தப்பாமல் செய்யவல்லனாய் மஹத்தான ஐசுவரியவானாயிருக்கும் ஸ்ரீமந்நாராயணனைக் கிட்டுகைக்கு உபாயம், அவனை உபாஸிப்பதுதானென்றருளிச்செய்வாராய், அதற்கு ஆதமஞாநத்தோடுகூடிக் கர்மத்தைச்செய்து பெறவேண்டிய ஜீவாத்மதரிசநம் அங்கமாயிருக்கையாலே அதையருளிச்செய்தார். இப்பொழுது நடுவிலுள்ள இந்த ஆறு அத்தியாயங்களால் பரப்பிரம்மமான பரமபுருஷஸ்வரூபத்தையும் அவனை உபாஸிப்பதான ‡ பக்தியையும் அருளிச்செய்கிறார். †

---

† இவ்வர்த்தத்தை "மத்யமே பகவத்தத்த்வயாதாத்ம்யாவாப்திஸித்தயே | ஜ்ஞாநகர்மாபிநிர்வர்த்யோ பக்தியோக: ப்ரகீர்த்தித:" என்று தொடங்கி "ஸ்வயாதாத்ம்யம் ப்ரக்ருத்யாஸ்ய திரோதிஶ்ஶரணாகதி: | பக்தபேத: ப்ரபுத்தஸ்ய ஶ்ரைஷ்ட்யம் ஸப்தம உச்யதே" என்று மேலே சுருக்கி யருளிச்செய்கிறார்.

‡ எம்பெருமானை உபாஸிக்கும்போது அவ்வுபாஸநமென்னும் ஞாநம் பக்தியாய்த் திரிந்தால் மாத்திரந்தான் பரமபுருஷனை யடையலாமென்கிற

http://acharya.org

அதில் இந்த ஏழாவது அத்யாயத்தில (உபாஸ்யனான) பரமபுருஷ ஸ்வரூபத்தின் உண்மையும் அது பிரகிருதியால் மறைக்கபபட்டிருக்குந்தன்மையும் அம்மறைவு நீங்குகைக்காக எம்பெருமானிடத்தில்பண்ணும் பிரபத்தியும் உபாஸிப்பவர்களின் உட்பிரிவும் அதில் ஞாநிகளுக்குண்டான சிறப்பும் சொல்லப்படுகிறது.

. ஸ்ரீ பகவாநுவாச|| மய்யாஸக்தமநா: பார்த்த யோகம் யுஞ்ஜந் மதாச்ரய:| அஸம்சயம் ஸமக்ரம் மாம் யதா ஜ்ஞாஸ்யஸி தச்ச்ருணு|| க||

(க) அர்ச்சுந! நீ நமது ஸ்வரூபம் குணம் சேஷ்டை! விபூதி இவைகளைப் பிரியும்படி நேரிட்டால் அந்த க்ஷணமே நம்மிடத்தில் விருப்பத்தால் நீர்ப்பண்டம்போல் உருகிப்போம்படியான மனதைக்கொண்டு நம்மையே நாடியவனாய்,(அப்படியே நம்பிரிவில் தரிக்கமாட்டாமல்) நம்மையே ஆதாரமாக நம்பியவனாய் யோகஞ்செய்யத் துவக்கி, (அந்த யோகத்துக்கிலக்கான நம்மை ஸம்சயமில்லாமல் முழுதும் எப்படியானால் அறிவதியோ (அவ்வித ஞாநத்தை யுனக்கு உபதேசிக்கிறோம்) அதை ஸாவதாநமாகக் கேட்பாயாக.

விஷயம் வேதாந்தவாக்கியஸித்தம. எங்ஙனேயென்னில:—"க. அவனையறிந்தால் தான்மிருத்யுவைக்கடக்கலாம்"என்றும்,"௨. அவனை இப்படிஅறிபவன் இங்கே அழிவிலலாதவனாகிறான்"என்றும்,இன்னுமிப்படி வேதாந்தவாக்கியங்களில் சொல்லும் அறிவானது, "௩. பரமாத்மாவைக் காணவேண்டுமாகில் தியாநஞ் செய்யவேண்டும்" என்றும், "௪. ஆத்மாவையே பிரத்தியக்ஷமாயக் கண்டு உபாஸிக்கக்கடவன்"என்றும்,"௫. ஸத்வம் சுத்தமானால இடைவிடாத சிந்தை யுணடாம், சிந்தையுண்டாகில் எல்லா முடிச்சுசளும் அவிழ்நது போம்" என்றும்"௬. அநத பரமாத்மாவைக் கண்டவுடனே உள்ளத்திலுண்டான முடிச்சு அவிழ்ந்துபோகிறது; ஸகலஸம்சயங்களும் அற்றுப்போகின்றன ; இவனுடைய கர்மங்களெல்லாம் அழிந்துபோகின்றன " என்று மிவைமுதலிய வாக்கியங்களோடு ஒருபொருட்படுகையாலே இடைவிடாத சிந்தையாயும் பிரத்யக்ஷம்போன்றதாயு மிருக்கவேண்டுமென்றும் அது தியாநம் உபாஸநம் முதலிய சப்தங்களால் கூறப்படுமென்றும் தெரியவருகிறது.

மறுபடியும் "எ. இந்த பரமாத்மா மநநத்தினலாவது தியாநத்தினலாவது பலகாலுங்கேட்பதினலாவது அடையக்கூடியவனல்ல; இந்தபரமாத்மா எவனையானல் வரிக்கிறானே அவனல்மாத்திரம் தானடையப்பட்டு தன் ஸ்வரூபத்தை அவனுக்குப் பிரகாசிப்பிக்கிறான்" என்று சிறப்பித்துச் சொல்லுகையாலே 'உபாஸநம்' என்னுஞ்சொல்லுக்குப் பொருள், பரமபுருஷன்

க. தமேவம் விதித்வாऽதிம்ருத்யுமேதி|| ௨. தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி|| ௩. ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ... நிதித்யாஸிதவ்ய:|| ௪. ஆத்மாநமேவ லோகமுபாஸீத||௫. ஸத்வசுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி: ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீநாம் விப்ரமோக்ஷ:|| ௬. பித்யதே ஹ்ருதயக்ரந்திச்சித்யந்தே ஸர்வஸம்சயா:| க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே|| எ. நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந| யமேவைஷ வ்ருணு—

http://acharya.org

ஜ்ஞாநம் தே(அ)ஹம் ஸவிஜ்ஞாநமிதம் வக்ஷ்யாம்யஶேஷத꞉|
யஜ்ஜ்ஞாத்வா நேஹ பூ⁴யோ(அ)ந்யஜ்ஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே||௨||

(௨) அர்ச்சுன! ஞாநத்தை விஜ்ஞாநஸஹிதமா யுபதேசிக்கிறேம் [ஞாநமாவது பகவத் ஸ்வரூபஞாநம், விஜ்ஞாநமாவது அதைப்பிரித்தறியும் ஞாநம்; அதாவது:—ஸர்வேசுவரனுகியநாம் ஈசுமான வெல்லாப்பொருளுக்கும் எதிராய் அளவிலாவதிசயமும் எண்ணற்கரிய கல்லியாணகுணங்களும் அநந்தமான விபூதியும் உடைத்தாயிருக்கையால சேதநாசேதநங்களெல்லாவற்றிலும் வேறுபட்டிருக்கிறேமென்பதை யறியும்படியான ஞாநம்; இவைகளை யுபதேசிக்கிறேமென்றபடி.] அதிகவார்த்தையென்ன? இதைக்கேட்டாயாகில் பிறகு நம்விஷயமாய்க் கேட்கும்படியான அம்சம் சிறிதும் கிடைக்கமாட்டாது.

(அ-கை.) இப்பொழுது தாம் உபதேசிக்கப்போகிற ஞாநம் எளிதில் கிடைப்பதல்லவென்கிருர்.

மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித்³யததி ஸித்³த⁴யே|
யததாமபி ஸித்³தா⁴நாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்த்வத꞉||௩||

(௩) சாஸ்திராப்பியாஸத்துக்கு யோக்கியமான மநுஷ்ய ஜாதிக்குள் எவனே ஒருவந்தான் நம்மைத்தெரிந்து நமமிடத்தில் ஸித்தியையபேக்ஷித்து யத்தநம்செய்பவன். அதிலும் எவனே ஒருவந்தான் நம்மை உள்ளபடியே அறிபவன். [ஸஹஸ்ராத்ஸு ...ஸ்" என்றும், ராதேஷ்வேதநகஸ்ந

இவனை வரிப்பதற்குக் காரணமாய் இவன் செய்யும் இடைவிடாத சிந்தையானது, சிந்திக்கப்படும் பகவானைப்போல் இனியதாயிருக்கையென்று நிச்சயிக்கப்படுகிறது. இனி பக்தியாவதென்ன இதுதானே? "அ. ஸ்நேகத்தோடு இடைவிடாமல் சிந்திப்பதுதான் பக்தியென்னப்படும்" என்றன்றே சொல்லப்படுகிறது?

இப்படி ஸமந்வயம்பண்ணுல் மாத்திரந்தான் "௯. அவனை இப்படியறிபவன் இங்கே அழிவற்றவனுகிருன்! கதிக்கு அதைவிட வேறுவழியில்லை" என்றும் "௰. நான் வேதங்களாலாவது தவத்தாலாவது தாநத்தாலாவதுயாகத்தாலாவது அர்ச்சுந! நீ இப்பொழுது பார்த்ததுபோல் பார்க்கக்கூடியவனல்ல; ௧௧. மற்றப்படி யென்னையே விஷயீகரித்த பக்தியொன்றினுல் மாத்திரந்தான் என்னை உள்ளபடி யறியவாவது பார்க்கவாவது அடையவாவதுகூடும்; நான் இப்படிப்பட்டவன்" என்னும்வாக்கியங்களுக்கு ஏகார்த்தத்வம்ஸித்திக்கும்.

தைலதா⁴ராவத³விச்சி²ந்நஸ்ம்ருதிஸந்தாநரூபா ... ஸ்ம்ருதா॥
அ. ஸ்நேஹபூர்வமநுத்⁴யாநம் ப⁴க்திரித்யபி⁴தீ⁴யதே॥௯. தமேவம் வித்³வாநம்ருத இஹ ப⁴வதி | நாந்ய꞉ பந்தா² அயநாய வித்³யதே॥ ௰. நாஹம் வேதை³ர்ந தபஸா ந தா³நேந ந சேஜ்யயா| ஶக்ய ஏவம்விதோ⁴ த்³ரஷ்டும் த்³ருஷ்டவாநஸி மாம் யதா²॥ ௧௧. ப⁴க்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோ⁴(அ)ர்ஜுந | ஜ்ஞாதும் த்³ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப॥

http://acharya.org

னென்றும் மேலே சொல்லப்போகிறபடியால் உள்ளபடியே அறிபவன் ஒருவ னுமில்லையென்று தாத்பரியம்.]

𑌭𑍂𑌮𑌿𑌰𑌾𑌪𑍋𑌽𑌨𑌲𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌖𑌂 𑌮𑌨𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍇𑌵 𑌚।
𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰 𑌇𑌤𑍀𑌯𑌂 𑌮𑍇 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑌷𑍍𑌟𑌧𑌾॥௪॥

(௪) இந்தப் * பிரகிருதியானது கெந்தம்முதலான குணங்கள்பொருந்திய பிருதிவி,அப்பு,தேயு,வாயு, ஆகாயமென்று பஞ்சபூதங்களென்றும் மனம் முதலிய இந்திரியங்களென்றும் மஹத்தென்றும் அஹங்காரமென்றும் இப்படி யெட்டுவகையாய்ப் பிரிக்கப்பட்டு நமக்கு ஆதீனமா யிருக்கிறதென்றறி.

𑌅𑌪𑌰𑍇𑌯𑌮𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍇 𑌪𑌰𑌾𑌮𑍍।
𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌾𑌂 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌯𑌯𑍇𑌦𑌂 𑌧𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌜𑌗𑌤𑍍॥௫॥

(௫) அர்ச்சுந! நமக்கு இரண்டுப் பிருகிருதிகளுண்டு; அதில் கீழ்ச் சொன்ன பிரகிருதி மிகவும் இழிவானது. இதைக்காட்டிலும் வேறான ஜீவனென்னும் மற்றொருப் பிரகிருதியானது(இதைப்புசிப்பதாகையால்)இதைக் காட்டிலும் சிறந்ததாய் ஞாநவடிவமாயிருக்கின்றது. இது தான் அசேதநமான இவ்வுலகங்களெல்லாவற்றையும் தரிக்கின்றது.

𑌏𑌤𑌦𑍍𑌯𑍋𑌨𑍀𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍀𑌤𑍍𑌯𑍁𑌪𑌧𑌾𑌰𑌯।
𑌅𑌹𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 𑌪𑍍𑌰𑌲𑌯𑌸𑍍𑌤𑌥𑌾॥௬॥

(௬) சேதநமாயும் அசேதநமாயும் நமக்கு சேஷப்பட்டதாயுமிருக்கு மிவ்விருவகைப் பிரகிருதியினின்றுந் தான், பிரமன்தொடங்கித் தாவரமிறு ய்ஏற்றமுந்தாழ்வுமாய் சித்தும் அசித்துமாயுள்ள இந்தப்பூதங்கள்யாவும் உண்டாகின்றன. நமது பிரகிருதியால் உண்டானது பற்றி இவையாவும் நம்முடையவைகளே; ஆகவிப்படிஸகலலோகங்களுக்கும் பிரகிருதிகள் காரணமாயிருப்பதுபோல் அப்பிரகிருதிகளுக்கு நாமகாரணமாய் சேஷியாயிருக்கையால எலலாவுலசங்களுக்கும் நாமே $ காரணமென்றும் நாமே நாசகமென்றும் நாமே சேஷியென்றுமறி.

---

* பிரகிருதியென்றால் புசிக்கும் பண்டங்களாகவும் புசிப்புக்குவேண்டுங்கருவிகளாகவும் புசிக்கத்தக்கவிடங்களாகவும் விசித்திரமாய் எண்ணிறந்தவைகளாயுள்ள இவ்வுலகத்தின் முதற்காரணம்.

$ சேதநா சேதநங்களின் தொகையான பிரகிருதி புருஷாளுக்கு, பரம்புருஷன் காரணமென்றுமிடம் ஶ்ருதி ஸ்மிருதிஸித்தம். எங்ஙனேயென்னில்:- ஶ்ரு॥ 𑌮𑌹𑌾𑌨𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍇 𑌲𑍀𑌯𑌤𑍇 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌕𑍍𑌷𑌰𑍇 𑌲𑍀𑌯𑌤𑍇। 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌮𑌸𑌿 𑌲𑍀𑌯𑌤𑍇 𑌤𑌮𑌃 𑌪𑌰𑍇 𑌦𑍇𑌵 𑌏𑌕𑍀𑌭𑌵𑌤𑌿॥ 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑍋 𑌹𑌿 𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑍇 𑌰𑍂𑌪𑍇 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌶𑍍𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰॥ ஸ்ம்ரு॥ 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌯𑌾 𑌮𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑍀। 𑌪𑍁𑌰𑍁𑌷𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑍁𑌭𑌾𑌵𑍇𑌤𑍌 𑌲𑍀𑌯𑍇𑌤𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿। 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌾𑌧𑌾𑌰𑌃 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌃। 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑌾𑌮𑌾 𑌸 𑌵𑍇𑌦𑍇𑌷𑍁 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌚 𑌗𑍀𑌯𑌤𑍇 இவைமுதலியன.

http://acharya.org

மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய|கூ௬|

(கூ௬) நாம் ஸர்வகாரணமானப் பிரகிருதிகளிரண்டுக்குங் காரணமாயிருக்கையாலும், ஸகலஅசேதநத்துக்கும் சேஷியான சேதநனுக்கும் சேஷியாயிருக்கையாலும், எப்படி பராத்பரமாயிருக்கிறோமோ அப்படியே ஞானம் சக்தி பலம்முதலியவைகளாலும் நாமே பராத்பரம். ஞானத்தாலாவது பலத்தாலாவது மற்றெவ்விதத்தாலும் நமக்கு மேற்பட்டதத்வம் ஒன்றுங் கிடைக்கமாட்டாது.

மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ||எ||

(எ) சேதநாசேதநரூபமான இவ்வஸ்துக்களெல்லாம் காரியமான நிலையிலும் காரணமானநிலையிலும் எப்போதும் நமக்குச் சரீரமாய், ஒருநூலில் கோக்கப்பட்ட (முத்துமுதலிய) ரத்தினங்கள்போல் அந்தராத்மாவாய் நிற்கும் நம்மிடத்தில் கோக்கப்பட்டிருக்கின்றன.

(அ-கை.) ஆகையால் ஸகலமும் (1) அந்தராத்மாவான எம்பெருமானுக்குச்சரீரமாய் (2) பிரகாரமாயிருக்கையால் அவனே ஸர்வபிரகாரமாகவும்இருக்கிறனென்றும் ஆனதுபற்றியே உலகத்தில் வழங்கும் எல்லாசப்தங்களும் அவனையே சொல்லுகின்றனவென்றும் அநதந்த சப்தங்களைக் கொண்டுபரமாத்மாவைக்குறிக்கிறார்.

ரஸோऽஹமப்ஸு கௌந்தேய ப்ரபாஸ்மி சசிஸூர்யயோ:|
ப்ரணவ: ஸர்வவேதேஷு சப்த: கே பௌருஷம் ந்ருஷு||அ||
புண்யோ கந்த: ப்ருதிவ்யாம் ச தேஜஸ்சாஸ்மி விபாவஸௌ|
ஜீவநம் ஸர்வபூதேஷு தபஸ்சாஸ்மி தபஸ்விஷு||கூ||
பீஜம் மாம் ஸர்வபூதாநாம் வித்தி பார்த்த ஸநாதநம்|
புத்திர்புத்திமதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம்||க0||
பலம் பலவதாம் சாஹம் காமராகவிவர்ஜிதம்|
தர்மாவிருத்தோ பூதேஷு காமோऽஸ்மி பரதர்ஷப||கக||

(அ-கூ-க0-கக) ஓ! பரதகுலத்தரசே! ஜலத்தில் ரஸமாயும் சூரியசந்திராளில் காந்தியாயும் வேதங்களில் பிரணவமாயும் ஆகாயத்தில் சத்தமாயும் பிராணிகளில் ஆண்மையாயும் புவியில் நல்லமணமாயும் தீயில் சுடரா

---

(1) ஜகத்தும் பிரம்மமும்முறையேசரீரமும்ஆத்மாவுமாயிருக்குமென்கிற விஷயம் யஸ்ய ப்ருதிவீ சரீரம்...யஸ்யாத்மா சரீரம் ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: என்கிற அந்தரியாமிப் பிராம்மணஙகளில் பிரஸித்தம்.

(2) பிரகாரமாயிருக்கையாவது - குடம்முதலியவற்றைவிட்டுக் குடத்தன்மைமுதலியவை பிரிக்கப்படாததுபோல் பரமாத்மாவைவிட்டு பிரகிருதியும் ஜீவனும் பிரிக்கப்படாமலிருக்கை.

http://acharya.org

யும் ஸகலபூதங்களிலும் ஜீவனமாயும் தவசிகளில் தவமாயும் ஸர்வபூதங்களுக்கும் அழியாத வேர்முதலாயும் புத்திமான்களுக்குள் புத்திமானும் பராக்கிரமமுள்ளவைகளுள் பராக்கிரமமாயும் பலமுள்ளவைகளுள் ஆசாபாசங்களற்ற பலமாயும் பிராணிகளுள் தருமத்துக்கு விரோதமில்லாத ஆசையாயுமிருக்கிறேன் [என்றால்:—இப்படி பலவாறுயுள்ள பதார்த்தங்கள் யாவும் நம்மிடத்தினின்றுமுண்டாய்நமக்குச்சேஷப்பட்டுநமக்குச்சரீரமாய் நம்மிடத்திலேயே யிருக்கின்றன. ஆகையால் அவ்வவ்விதமாக நாமே யிருக்கிறேமென்று பொருள்.]

(அ-கை.) பிரித்துப் பிரித்தென்னசொல்வது?

ये चैव सात्त्विका भावा राजसास्तामसाश्च ये।
मत्त एवेति तान्विद्धि न त्वहं तेषु ते मयि॥கஉ॥

(கஉ) ஸாமான்னியமாய் லோகத்தில்சரீரங்களாகவும் இந்திரியங்களாகவும் மற்றும்போக்கியவஸ்துக்களாகவும் போகத்துக்குரிய கருவிகளாகவுமிருக்கின்ற வெல்லாப்பொருள்களும் என்னிடத்திலிருந்துண்டாய் எனக்குச்சரீரங்களாய் என்னிடத்தில் நிலைபெற்றிருக்கின்றன. நம்நிலையோ அவைகளால்ஒருக்காலும்வருவதல்ல [என்றால்சரீரஸ்திதி ஆத்மாதீநமானாலும் ஆத்மஸ்திதிக்குச்சரீரத்தாலும் சிறிது உபகாரமுண்டு உலகத்தில்; நமக்கோ இந்தபதார்த்தங்களெல்லாம் சரீரமாயிருந்தாலும் இவைகளால் சிறிதும்உபகாரமில்லை கேவலம் லீலைதான் இதற்குப பிரயோஜநமென்று திருவுள்ளம்.]

त्रिभिर्गुणमयैर्भावैरेभिः सर्वमिदं जगत्।
मोहितं नाभिजानाति मामेभ्यः परमव्ययम्॥கங॥

(கங) [இப்படிசேதநா சேதநமாய் நமக்கு ஆதீனப்பட்டுள்ள இவ்வுலகங்களெல்லாம் அந்தந்தகாலத்தில் நம்மிடத்திலிருந்துண்டாய் நம்மிடத்தில் லயமடைந்து நம்மிடத்தில்தானே நிலைக்கப்பெற்று நமக்குச்சரீரமாய் நம் ஸ்வரூபமாயிருக்கையால், காரணமான நிலையிலும் காரியமன நிலையிலும் ஸர்வத்தையும்நாமே சரீரமாகத்தரித்து ஸர்வப்பிரகாரமாகவுமிராநின்றோம். இப்படி காரணமாயும் சோதியாயுமிருக்கிற நாம் ஞாநம்முதலிய அளவிறந்த கல்லியாண குணங்களாலும் சிறப்புற்று மேன்மையாய் விளங்குகிறோம். அந்தகுணத்தாலாவது நம்மைக்காட்டிலும் சிறந்தவஸ்து உலகத்தில் ஒன்றுங் கிடைக்கமாட்டாது.]இப்படிப்பட்ட நாம் ஸத்வரஜஸ்தமோ குணங்களின்விகாரமாயுள்ள ஸகலபதார்த்தங்களிலும் சிறந்து நமக்கே உரியவைகளான கல்லியாண குணங்களாலும் அவ்வவைகளின் இனிமையாலும் எப்பொழுதும் ஏகரூபனாய் மிகவும் சிறந்திருக்கிறோமென்பதை இவ்வுலகமானது அறிகிறதில்லை. ஏனெனில்:—குணவிகாரங்களாய் ஈனங்களாய் க்ஷணந்தோறும் அழிவனவாய் பூர்வ கர்மாநுஸாரமாகச் சரீரங்களாயும் இந்திரியங்களாயும் புசிக்கும்பண்டங்களாயுந் திரிந்துள்ள பதார்த்தங்களால் மயக்கப்பட்டமையால் அறிகிறதில்லை.

http://acharya.org

(அ-கை.) ஸ்வாமி! உலகத்தி லின்பந்தரு மெய்பொருளுக்கு மேலாய், அந்தமில்பேரின்ப வடிவமாய், எந்நாளும் ஒரே ரூபமாயெழுந்தருளியிருக்கிற தேவரீரைவிட்டு, பிராணிகள் மிகவும் இழிவுற்றகுணங்களின் விகாரமாய் அசாசுவதமாயுள்ள பண்டங்களை யநுபவிக்க விரும்புகிறார்களே இதற்கென்னகாரணம்! என்றால் அருளிச்செய்கிறார்.

𑌦𑍈𑌵𑍀 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀 𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾|

(௧௪) ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸுஎன்கிறமுக்குணங்களின் விகாரமான இந்த என் * பிரகிருதியென்னும் மாயையானது என்னுடைய லீலைக்காக என்னாலேயே ஏர்ப்படுத்தப்பட்டதாகையால் இதைக்கடப்பதற்கு ஒருவராலுமாகாது.

(அ-கை.) ஆனால் அதைக்கடக்கும் வழிதானெனது! என்றால் அருளிச்செய்கிறார்.

𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇||௧௪||

(௧௪) ஸத்யஸங்கல்பனும் பெருங்கருணை வள்ளலாய் எல்லாவுலகத்தையும் சிறிதும் கைம்முதலைக்கோராமல் காப்பவனாகிய நம்மையே எவர்கள் சரணாகப்பற்றுவார்களோ, அவர்களதான குணவிகாரமானஇம்மாயையைக்கடந்து நம்மை உபாஸிப்பார்கள்.

(அ-கை.) ஆகில் அப்படிப்பட்ட சரணாகதியை எல்லாரும் ஏன் அநுஷ்டிக்கிற தில்லை! என்றால் அருளிச்செய்கிறார்.

𑌨 𑌮𑌾𑌂 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌨𑍋 𑌮𑍂𑌢𑌾𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌃|
𑌮𑌾𑌯𑌯𑌾𑌪𑌹𑍃𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾 𑌆𑌸𑍁𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃||௧௫||

* ஆசுராஸ்திரம் ராக்ஷஸாஸ்திரம் முதலியவைபோல் விசித்திரமான செயல்களைச்செய்கையாலேஇந்தப்பிரகிருதியைமாயையென்கிறது. எப்படியெனில் 𑌤𑌤𑍋 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚𑌕𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍| 𑌆𑌜𑌗𑌾𑌮 𑌸𑌮𑌾𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑌂 𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌮𑌾𑌲𑌿 𑌸𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍| 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌯𑌾𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌤𑌚𑍍𑌛𑌮𑍍𑌬𑌰𑌸𑍍𑌯𑌾𑌶𑍁𑌗𑌾𑌮𑌿𑌨𑌾 | 𑌬𑌾𑌲𑌸𑍍𑌯 𑌰𑌕𑍍𑌷𑌤𑌾 𑌦𑍇𑌹𑌮𑍇𑌕𑍈𑌕𑌶𑍍𑌯𑍇𑌨 𑌸𑍂𑌦𑌿𑌤𑌮𑍍|| இத்யாதியிலும் சொல்லப்பட்டபடியால் மாயை என்பது பொய்யான விஷயத்தை சொல்வதல்ல. இந்திரஜாலவித்தை முதலிய விடங்களில்கூட பொய்யான விஷயத்தை யுட்கொண்ட மெய்யறிவை யுண்டுபண்ணும்படியான சில மந்திரம் ஔஷதம் முதலியவை யுண்டாகையாலே அங்கும் மாயாவியென்று வழங்குகிறார்கள். எங்கும் ஒரு சொல்லுக்கு ஒரேவிதமாய் பொருளுரைப்பது யுக்தமாகையாலே இந்திரஜால வித்தையிலும் மாயையென்கிறது மந்திரம் ஔஷதம் முதலியவைகளைத்தான். அங்கே பொய்யான விஷயத்தை மாயையென்பதெதினாலென்றால் மஞ்சத்திலிருப்பவர் பேசக்கண்டு மஞ்சம்பேசுகிறதென்று வழங்குவதுபோல் மாயையென்று சொல்லப்பட்ட மந்திரம் ஔஷதம் முதலியவைகளின் காரியத்தைக்கண்டு மாயையென்று வழங்குகிறது.

http://acharya.org

(கரு) அர்ச்சுந! பிராணிகளில் புண்ணியம் செய்தார் சிலர், பாவஞ் செய்தார் சிலர். அப்படி பாவஞ்செய்தவர்களில் சிலர் 2.மூடர், சிலர் 3. நராதமர்; சிலர்4. மாயையால் அறிவிழந்தவர்; சிலர் 5. அசுரத்தன்மையடைந்தவர்; இந்நால்வரும் நம்மைச் சரணடையார்கள். இவர்கள் முதலிலிருந்துஒருவனைப்பார்க்க ஒருவர் மஹாபாபிகள்.

சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந|
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப||கசு||

(கசு) புண்ணியஞ் செய்தவர்களோ! நம்மையே சரணடைந்து நம்மையே ஸேவிக்கிறார்கள். இவர்களும் அப்படியே 6. ஆர்த்தனென்றும் 7.ஜிக்ஞாஸுவென்றும் 8. அர்த்தார்த்தி யென்றும் 9. ஞாநி யென்றும் நாலுவகைப்பட்டு தங்கள் தங்கள் புண்ணியச் சிறப்புக்குத் தக்கபடி முதலிலிருந்து ஒருவனைப்பார்க்க ஒருவர் அதிக சுகிருதஞ்செய்தவர்கள்.

தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர்விசிஷ்யதே|
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:||கள||

(கள) இவர்களில் ஞாநிதான் மிகுதியுஞ்சிறந்தவன். ஏனெனில்:—அவன் நம்மையடையவேண்டுமென்று நம்மையே எப்போதும் நாடியவனாய் மற்றொன்றிலும் பற்றின்றி விசேஷமாய் நம்மிடத்தில் மாத்திரம் பக்தியுடையவனாயிருக்கிறான். (மற்றவர்களோ தமது இஷ்டம் ஸித்திக்குமளவும் மாத்திரம் நம்மை நாடியிருந்து நம்மையும் தாம்கோரிய பலத்தையும் விரும்பியிரு

அதுபோல் இங்கும் குணமயமானப் பிரகிருதியென்னும் மாயையானது பரமார்த்தமேயல்லது பொய்யல்ல; இது பரமபுருஷனுடைய ஆதீனம் என்று மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந் மாயிநம் து மஹேச்வரம் இத்யாதிகளில் சொல்லப்படுகிறது. இதற்குக் காரியம் பகவத்ஸ்வரூபத்தை மறைத்துத் தன் ஸ்வரூபத்தை யினியதாகத் தோற்றுவிக்கை. ஆகையால் எம்பெருமானுடைய பரமார்த்தமான மாயையால் மோஹிக்கப்பட்டுள்ள இஜ்ஜகமெல்லாம் அறிலின்பவெள்ளமான பகவத்ஸ்வரூபத்தை யறியமாட்டாது.

2. எல்லாப்பொருளும் எம்பெருமானுக்கு ஆட்பட்டிருக்க அதைத்தனக்காட்பட்டதாக நினைப்பவர்கள் 3. ஸாமான்யமாய் பகவத்ஸ்வரூபம் அறியப்பட்டாலும் அவ்வழியில் திரும்பமாட்டாதவர்கள் 4. ஈசுவரனும் அவனுக்கு ஐசுவரியமு முண்டாயிருப்பதாகத் தெளிவுபிறந்தாலும் அதை வஞ்சகமான யுக்திகளைக்கொண்டு போக்கிக்கொண்டவர்கள் 5. ஈசுவரனும் அவன் விபூதிகளும் (யுக்திகளைக்கொண்டும் இல்லை செய்யப்போகாமல்) திடமாய் ஏற்பட்டாலும் அவற்றைக் கேட்டபோதே பகைப்பவர்கள் 6. இழந்துபோன செல்வத்தை மீண்டும் அடையவிரும்பியவன்; 7. செல்வமில்லாமையால் புதிதாய் அடையக்கோரியவன்; 8 பிரகிருதிக்குப்புறம்பான ஆத்மாவை யடையக்கோரியவன்; 9. உத ஸ்வதந்த்ராம் ப்ரக்ருதிம் விஹாயைவ என்று சொன்னபடியே ஆத்மஸ்வரூபம் எம்பெருமானுக்கே சேஷப்பட்டிருக்குந்தன்மையது"

http://acharya.org

க்கிறார்கள். ஆகையால் இவர்களைப்பார்க்க அவனேசிறந்தவன். ஏனெனில்:—அவன் நம்மை யடையவேண்டியவனாகையால் எப்பொழுதுமநம்மோடு அவனுக்குச்சேர்க்கையுண்டு; இவர்களுக்கோபயன் கைப்படுமளவுந்தான். அப்படியே ஆவன் நம்மைத்தவிர மற்றொன்றை விரும்பான். இவர்களோ நம்மையும் விரும்பி தமக்கென்று ஒருபயனையும் விரும்புவார்கள். ஆகையால்இவர்களைப்பார்க்க அவனே சிறந்தவன். மேலும் நாம் ஞாநிக்கு மிகவும் இனியனாகிறோம். அதாவது-இனிமைக்கு இவ்வளவென்கிற இறுதியில்லாமையால்அவனுக்கு நாமினியனாமிடம் இவ்வளவுதானென்று ஸர்வக்ஞனானநம்மாலும்சொல்லப்போகாதபடி (ஞாநிகளிற்றலைவரான *. பிரஹ்லாதாழ்வாருக்குப்போலே) இனியனாகிறோம். அப்படியே அந்த ஞாநியும் நமக்கு இனியனாகிறான்.

உதாராஸ்ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்।
ஆஸ்திதஸ்ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம்॥ கஅ॥

(கஅ) இவர்களெல்லாரும் மஹா உதாரர்கள். [அதாவது-நம்மிடத்திலிருந்து யாவர்களானால் சிறிதாயினுங்கொள்ளுகிறார்களோ அவர்களைநாம் நமக்குஎல்லாச்செல்வத்தையும் வழங்கிய பெருங்கொடையாளிகளாக நினைக்கிறோம்.] ஞாநியோ! நம்ஸ்வரூபத்தைத் தரிக்கின்ற ஆத்மாவென்றே நம்முடைய ஸித்தாந்தம். அதெதினாலென்றால்:—அவன் நம்மைவிட்டுப்பிரிந்தால் தரிக்கமாட்டாததுபோல் நாமும் அவனைப் பிரிந்தால் தரிக்கமாட்டோம்; ஆகையால் அவன் நமக்கு ஆத்மாவே.

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்மாம் ப்ரபத்யதே।
வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:॥ கக॥

(கக) "இப்படி எம்பெருமானுக்கு ஆட்பட்டிருக்கையே ஆத்மாவுக்குஸ்வரூபம்" என்கிற ஞானவானாய் நம்மைச்சரணப்புகுவதென்கிற விஷயம் ஸாமான்னியமாய் சில ஜந்மங்களிற்செய்த புண்ணியவசததால் வருவதல்ல;கேவலம் புண்ணிய ஜந்மங்களெத்தனையோ எடுத்த பிறகுதான் "நான் †வாஸுதேவனுக்கே ஆட்பட்டவன், எனது ஸ்வரூபம் ஸ்திதிபிரவிருத்தியென்கிற அறிவுடையனாய் அவ்வாத்மவஸ்துவோடு நில்லாமல் எம்பெருமானைப்பெற வாசைப்பட்டு அவனையே பெரும்பேறாக நினைத்திருப்பவன்.

* ஸர்வாஸு த்ருஷ்ட்யர்த்த க்ருத்ஷேபி ப்ரஹ்லாதோ நாஹோ ஹர்ஷமவஸ்த்:|
நவிஷஸாத்மனாஸஜ்ஜதஸ்ஸலாஸ்த்ராஹாதஸம்ஸ்தித்: என்று பிரஹ்லாதாழ்வான் கண்ணனிடத்தில் பற்றிய மனதாயிருக்கையாலே மஹாஸர்ப்பங்களால் கடிக்கப்பட்டிருக்கச்செய்தேயும் அவ்வெம்பெருமானை நினைப்பதால் மிகவும் ஸந்துஷ்ட ஹிருதயராய் தம்சரீரம் இன்னபடி யிருக்கின்றதென்று அறிந்தாரில்லை.

† விஷ்யோர்ஹிஜ்ஞானிநாத்யமர்த்ஜ என்றும் ஆஸ்திதஸ்ஸஹி யுக்தாத்மாமாமேவாநுத்தமாம் கதிம் என்றும் தொடங்கின படியால் வாஸுதேவஸ்ஸர்வம் என்றதற்கு இதுவேபொருள். ஞாநவானென்பதும்இங

http://acharya.org

ல்லாம் அவனுடைய ஆதீனம்" என்கிற நினைவுபிறந்து "நான் அடையவேண்டு ம்பயனும் அப்பயனை யடைவிக்குமுபாயமும் மற்றும் நான் கோரியவெல்லா ம் அந்த வாஸுதேவனே" என்று நம்மை உபாஸிப்பன். அப்படிப்பட்ட பெ ருந் தன்மையோடுகூடிய புருஷன் கிடைப்பது லோகத்தில் மிகவும் அரிது.

(அ-கை.) அந்த ஞாநியின் அருமையைப்பற்றியே உபபாதிக்கிறார்.

காமைஸ்தைஸ்தைர்ஹ்ருதஜ்ஞாநா: ப்ரபத்யந்தேऽந்யதேவதா: ।
தம் தம் நியமமாஸ்தாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா ॥௨௰॥

(௨௰) உலகத்திலுள்ள புருஷர்கள் யாவருமே தங்களுக்கு ஸ்வபாவமான பாபவாஸனைக்குத் தக்கபடி எப்போதும் சப்தாதிவிஷயங்களில் ஆசை கொண்டு, அப்படி தாம் ஆசைப்பட்டவைகளைப் பெறவேண்டி கேவலம் (நம்மையொழிந்த) இந்திராதி தேவர்களையடுத்து, அத்தேவர்களுக்குப் பிரீதிகரமான சிலநியமங்களை யநுட்டித்து அவர்களை யர்ச்சிக்கிறார்கள்.

யோ யோ யாம் யாம் தநும் பக்த: ஶ்ரத்தயார்சிதுமிச்சதி ।
தஸ்ய தஸ்யாசலாம் ஶ்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ॥௨௧॥

(௨௧) அப்படி அவர்கள் அர்ச்சிக்குந் தேவர்களெல்லாம் நமக்குச் சரீரமென்று (*-சாஸ்திரஞ்சொல்லுகிற விஷயம் தெரியாமல்) எந்த எந்த பக்தன் (நம்சரீரமான) எந்த எந்த தேவதையைச் சிரத்தையோடு அர்ச்சிக்க விரும்புகிறானோ (அவன் நம்மையறியாமற்போனாலும் உள்ளபடியே நம்சரீரத்தைத்தானே யர்ச்சிக்கிறானென்று நாம்நினைப்பிட்டு) அவனவனுக்கு அவ்வவ்விதமான சிரத்தையைத் திடப்படுத்துகிறோம்.

ஸ தயா ஶ்ரத்தயா யுக்தஸ்தஸ்யாராதநமீஹதே ।
லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் ॥௨௨॥

கே சொன்னவனைத்தான்; முன்சொன்ன ஞாநியுமிவந்தான். பூமிராப என்று தொடங்கி அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா । அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம் । ஜீவபூதாம் என்றுமவளாக, சேதநம் அசேதநம் என்று இருவகையானப்பிரகிருதிகளும் பரம புருஷனுக்கு சேஷப்பட்டிருக்கின்றன வென்று சொல்லப்பட்ட தன்றோ? மேலும் அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா । மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய என்றுதொடங்கி யே சைவ ஸாத்த்விகா பாவா ராஜஸாஸ்தாமஸாஶ்ச யே மத்த ஏவேதி தாந் வித்தி ந த்வஹம் தேஷு தே மயி என்று காரியமாயுங் காரணமாயு மிருவகைப்பட்ட பிரகிருதிகளின் ஸ்வரூபமும் ஸ்திதியும் பிரவிருத்தியும் பரமபுருஷாதீனமென்றும் பரமபுருஷன் ஸர்வவிதத்தாலும் ஸர்வஸ்மாத் பரனென்றும்சொல்லப்பட்டது. ஆகையால் அவனையே யிங்கே ஞாநியென்கிறது.

* ஶ்ரு॥ ய ஆத்மநி திஷ்டந்நாத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா ஶரீரம் முதலியன.

http://acharya.org

(௨௨) இப்படி நம்மாலருளப்பட்ட (நிர்விக்னமான) சிரத்தையைக் கொண்டே, அந்த இந்திராதி தேவதையின் ஆராதநத்தைச் செய்து (நம்சரீரமான) அத்தேவதையினிடத்தில் தான்கோரியபயனை நம்மாலளிக்கப்பெற்று அநுபவிக்கிறான். [ஆராதிக்கும்பொழுது இந்திராதிகள் நமக்குச் சரீரமென்கிற விஷயத்தை அவன் அறியாமற்போனாலும், உள்ளபடியே அது நம்மாராதனமாகையால் அவன் கோரிக்கையை நாம் நிறைவேற்றுகிறோம்.]

𑌅𑌨𑍍𑌤𑌵𑌤𑍍𑌤𑍁 𑌫𑌲𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌦𑍍𑌭𑌵𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌮𑍇𑌧𑌸𑌾𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌦𑍇𑌵𑌯𑌜𑍋 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌮𑌪𑌿 ॥௨௩॥

(௨௩) ஆனால் இந்திராதிகளை யாராதிக்கும் அவ்வற்பமதிகளுக்குக் கிடைக்கும் அந்தப் பயனெல்லாம் அற்பமாயும் முடிவுள்ளதாயுமிருக்கும். ஏனெனில்.—இந்திராதி தேவர்கள் அநுபவிக்கும் போகங்களெல்லாம் இவ்வளவென்றும் இத்தனை காலமென்றும் வரையறையுற்றவையாகையால் அவ்விந்திராதிதேவர்கள் போகம்நசித்து நழுவும்பொழுது (அவர்களை யாராதிக்கும்) இவர்களும் நழுவுவர்கள். நம்பக்தர்களோ அநேககர்மங்களை நம்மாராதநமாக நினைத்து அற்பபலங்களில் பற்றில்லாமல் நமக்கினிமை செய்வதே பயனாய் நம்மையடைந்து மீண்டுந் திரும்பாமலிருக்கிறார்கள். [𑌮𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 𑌤𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 என்று மேலே அருளிச்செய்யப்போகிறானன்றோ?]

(அ-கை.) மற்றவர்களோ பிராணிகளெல்லாம் சுகமாய் நம்மை ஆச்ரயிக்கவேண்டுமென்று நாம் மனுஷ்யாதிகளிடத்தில் வந்தவதரித்தால் அதைப் பயன்படவொட்டாமற் செய்கிறார்களென்கிறார்.

𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌪𑌨𑍍𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌮𑌬𑍁𑌦𑍍𑌧𑌯𑌃 ।
𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌮𑌮𑌾𑌵𑍍𑌯𑌯𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ॥௨௪॥

(௨௪) நாம் ஸர்வகர்மங்களாலும் ஆராதிக்கப் படுமவனாய் ஸர்வேச்வரனாய் வாக்குக்கும் மனதுக்குமெட்டாத ஸ்வரூப ஸ்வபாவமுடையனாயிருக்கச்செய்தேயும், கரைகடந்த கருணையாலும் அடியார்களிடத்திலுண்டான வன்பினாலும் யாவரும் நம்மைக்கண்டு பற்றவேண்டுமென்று நம் ஸ்வபாவத்தைவிடாமலே வசுதேவர்மைந்தனாய் வந்தவதரித்தோம். இப்படிவிகாரமில்லாத நம்பரத்துவத்தை யறியாமல், நாம் இதற்கு முன்பு தோன்றாமல் மறைந்திருந்து இப்பொழுதுதான் கர்மவசத்தால் ஒரு ராஜகுமாரனாய்ப்பிறந்து தோன்றியதாய் இம்மூடர்கள் நினைத்துவிடுகிறார்கள். ஆனது பற்றியே நம்மை ஆச்ரயிப்பதுமில்லை, நம்மை யாராதிப்பதுமில்லை.

(அ-கை.) அப்படியாகில் தேவரீர் ஏன் அப்படி யாவர்க்கும் விளங்குவதில்லையென்றால் சொல்லுகிறார்.

𑌨𑌾𑌹𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌮𑌾𑌯𑌾𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌃 ।
𑌮𑍂𑌢𑍋𑌽𑌯𑌂 𑌨𑌾𑌭𑌿𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌲𑍋𑌕𑍋 𑌮𑌾𑌮𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥௨௫॥

(௨௫) (ஜீவர்களுக்கேற்ற மானிடத்தன்மை முதலியவற்றை யடைந்திருக்கையென்கிற)மாயையால் நாம் மறைக்கப்பட்டமையால் யாவர்க்கும்

http://acharya.org

பிரகாசிக்கிறதில்லை. நாமிப்படி மனுஷ்யாதிகளிடத்தில்வந்து பிறந்தமாத்தி ரத்தில் இந்த மூடஜநம் நம்மை ஸாதாரணமாய் நினைத்துவிடுகின்றதே யல் லது, இந்திரனவாயுஇவர்களின செயலையும் சூரியன் அக்கினி இவாளுடைய தேஜஸ்ஸையும்கடந்து உத்பத்தி விநாசங்களற்று எல்லா வுலகங்களுக்கும் முக்கியகாரணனாய் ஸர்வேசுவரனாயிருக்கிற நாம், பிராணிகளெல்லாம் ஆஶ்ர யிப்பதற்காக மனுஷ்யாதிரூபமாய் வந்தவதரித்தோமென்றறிகிறதில்லை.

வேதாஹம் ஸமதீதாநி வர்த்தமாநாநி சார்ஜுந |
பவிஷ்யாணி ச பூதாநி மாம் து வேத ந கஶ்சந ||௨௬||

(௨௬) இதுவரையில் கடந்ததும் இப்பொழுது நிகழ்வதும் இனி வரு வதுமான ஸகலப்பிராணிகளையும் நாம அறிவோம்; நமமை மாத்திரம் ஒருவ னும்,அறிவதில்லை. [அதாவது நம் சிந்தைக்கெட்டியப் பிராணிகளிலொருவ னாகிலும் பரமபுருஷநதான் இப்படி யாவருந் தன்னை ஆஶ்ரயிக்கும்படி வசு தேவன் மைந்தனாய் அவதரித்திருக்கிறான்,, என்று அறிபவனில்லை.] ஆகை யால் ஞாநியைக்கிடைப்பது மிகவரிது.

(அ.கை.) அதெப்படி யென்றால் அருளிச்செயகிறார்.

இச்சாத்வேஷஸமுத்தேந த்வந்த்வமோஹேந பாரத |
ஸர்வபூதாநி ஸம்மோஹம் ஸர்கே யாந்தி பரந்தப ||௨௭||

(௨௭) விருப்பம் வெறுப்பு என்கிற விரண்டாலுமுண்டான சீதம் உ ஷ்ணம் முதலிய துவந்தவமெனகிற மோஹத்தாலே ஸகலப் பிராணிகளும் பிறக்குமபொழுதே மயங்கிப்போகின்றன. [என்றால்-குணவிகாரமான ஸு கம் துக்கம் என்கிற துவந்த்வங்களில் எந்தெந்த விஷயத்தில் பிராணிகள் பூர்வஜநமங்களில் விருப்பமும் வெறுப்பும் பாராட்டிவந்தார்களோ, மறுபடி யும் அந்தந்த துவந் துவங்களே விரும்பப்பட்டவைகளாயும் வெறுக்கப்பட்ட வைகளாயுமிருநதுகொண்டு ஜநநகாலத்தில்தானே ஸகல ப்பிராணிகளையும் மயங்கச்செய்கின்றன; இதனால் நம்மை அடைந்தபோது சுகித்தும் நம்மைப் பிரிந்தபோது துக்கிததும் இருக்கவேண்டியவைகளானப் பிராணிகள்,அவை களில்தானே விருப்பத்தையும் வெறுப்பையும் பாராட்டுகின்றன. ஞாநியோ நம்மைக்கிட்டியபோது இன்பமும், பிரிந்தபோது துன்பமுமே ஸ்வபாவமா யிருப்பன்; அப்படிப்பட்ட ஸ்வபாவத்தோடுகூடிய ஞானியாக ஒருப்பிரா ணியாவது உண்டாகிறதில்லை என்றபடி.]

யேஷாம் த்வந்தகதம் பாபம் ஜநாநாம் புண்யகர்மணாம் |
தே த்வந்த்வமோஹநிர்முக்தா பஜந்தே மாம் த்ருடவ்ரதா: ||௨௮||

(௨௮) எவர்களானால் பலபிறப்பும்பிறந்து அவைகளில் அளவிறந்த புண்ணியங்களைத்திரட்டி அதனால்(விருப்பத்திற்கும் வெறுப்புக்கும் காரண மாயும் நம்மை நினைக்க வொட்டாமல் விரோதிப்பதாயும் அநாதிகாலமாய்த் தொடர்ந்ததாயு மிருக்கும்) பாவத்தை யொழிக்கிறாகளோ, அவர்கள் முன்

http://acharya.org

சொன்ன புண்ணியத்தின் வாசிக்ருத்தக்கபடி நம்மைச்சரணமடைந்து குண விகாரமான மோஹத்தினின்றும் விடுபட்டவர்களாய் ஜரை மரணம் இவை களை ஒழிக்கவும் பேரின்பத்தை அடையவும் நம்மைக்கிட்டவுமாக முயன்ற வர்களாய், திடமான ஸங்கற்பத்தோடு நம்மையே உபாஸிக்கிறார்கள்.

(அ-கை) அதில் எம்பெருமானைச் சேவிப்பவர்களான இம்மூவர்களு க்கும் அவசியம் அறியவேண்டிய விஷயமும் அவசியம் கைப்பற்றவேண்டிய விஷயமும் இன்னதென்கிறார்.

ஜராமரணமோக்ஷாய மாமாஶ்ரித்ய யதந்தி யே।
தே ப்ரஹ்ம தத்விது: க்ருத்ஸ்நமத்யாத்மம் கர்ம சாகிலம்॥௨௯॥

(௨௯*) ஜராமரணங்களை யொழித்துப் பிரகிருதிக்குப் புறம்பான ஆத்மாவைக் காணவேண்டி எவர்கள் நம்மை ஆஸ்ரயித்து யத்தநம் செய்கிறார்களோ, அவர்கள் அந்தப் பிரம்மத்தையும் அத்யாத்மத்தையும் கர்மங்களையும் சிறிதும் விடாமல் நன்றாய் அறியவேண்டும்.

ஸாதிபூதாதிதைவம் மாம் ஸாதியஜ்ஞம் ச யே விது:।
ப்ரயாணகாலேऽபி ச மாம் தே விதுர்யுக்தசேதஸ:॥௩௦॥

(௩௦*) நம்மை அதிபூதமாகவும் அதிதைவமாகவும் அதியக்ஞமாகவும் எவர்கள் அறிகிறார்களோ அவர்கள், சரீரத்தைவிட்டுப் போகுங்காலத்திலும் தங்கோரிக்கைக்குத் தக்கபடி நம்மையே நினைக்கிறார்கள். (இம்மூவருக்கும் நித்ய நைமித்திக கர்மங்களான மஹாயக்ஞாதிகள், செய்யவேண்டுங் கடமை யாயிருக்கின்றன. [ஞாநிகளிருவர் ஐசுவரியகாமன் ஒருவன் ஆகமூவர்]

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
ஏழாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

எட்டாவது அத்தியாயம்.

அவதாரிகை.

ஏழாவது அத்யாயத்தில் யாவரும் உபாஸிக்கவேண்டிய பரப்பிரம்ம மான வாஸுதேவன் சேதநாசேதநங்களுக்கெல்லாம் பதியென்றும், காரணமென்றும், ஆதாரனென்றும், எல்லாப்பொருளும் சரீரமாயிருக்கையாலே ஸர்வப்பிரகாரமாகவு மிருக்கின்ற அவன் எல்லாசப்தங்களுக்கும் பொருளெ

(௨௯-* ௩௦) இந்த சுலோகங்களில் சொல்லுகிற விஷயம் எட்டாவது.அத்தியாயத்தில் விவரிக்கப்படும்.

http://acharya.org

னறும்,யாவரையும் ஆள்பவனென்றும், ஸகலகல்யாண குணங்களாலும் அவனே மேன்மைப்பட்டிருக்கிறனென்றும்,ஸத்வரஜஸ்தமோ மயங்களான தேஹமாயு மிந்திரியமாயும் மற்றும் புசிக்கும்பண்டங்களாயுமிருக்கிற சப்தாதி விஷயங்களால் அவன் மறைக்கப் பட்டிருக்கிறனென்றும், மிகுந்தபுண்ணிய வசத்தால் கிடைத்த பகவதசரணாகதியாலே அம்மறைவு நீக்கப்படுமென்றும், புண்ணியத்தின் வாசிக்குத்தக்கபடி இவன் பண்ணும் சரணாகதியின் சிறப்பால் ஐசுவரியம், கைவல்யம்,பகவத்ப்ராப்தி என்று பயன் வேறுபடுகையாலே அதற்குத்தக்கபடி பக்தர்களும் வேறுபட்டிருப்பார்களென்றும்எம்பெருமானை அடையக்கோரியவன் எப்பொழுதும் அவனையே நம்பி அவனிடத்தில் விசேஷபக்தியைப்பண்ணி எம்பெருமானுக்கு மிகவு மினியனாயிருக்கையாலே அவன் யாவரிலும் சிறந்தவனென்றும், அப்படிப்பட்டவன் கிடைப்பது அரிதென்றும் அருளிச்செய்து, இம்மூவர்களும் அறியவேண்டு மவற்றையும் கைப்பற்றவேண்டுமவற்றையும் அருளிச்செய்தார்.

அப்படி யறியவேண்டியதாயும் அடைய வேண்டியதாயும் பிரஸ்தாவிக்கப்பட்டவைகளையே இந்த எட்டாவது அத்தியாயத்தில் விவரிக்கிறார்.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ॥ 𑌕𑌿𑌂 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌕𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌂 𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤
𑌮 । 𑌅𑌧𑌿𑌭𑍂𑌤𑌂 𑌚 𑌕𑌿𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌧𑌿𑌦𑍈𑌵𑌂 𑌕𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௧ ॥
𑌅𑌧𑌿𑌯𑌜𑍍𑌞𑌃 𑌕𑌥𑌂 𑌕𑍋𑌽𑌤𑍍𑌰 𑌦𑍇𑌹𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 ।
𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌕𑌥𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑍋𑌽𑌸𑌿 𑌨𑌿𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 ॥ ௨ ॥

(௧-௨) அர்ச்சுநன் கேட்கிறான். ஜராமரணங்களை யொழிப்பதற்காக வெம்பெருமானையாச்ரயித்து யத்நஞ்செய்யும் மோக்ஷார்த்திகளுக்கு,அவசியம் அறியவேண்டிய விஷயமானப் பிரம்மமாவதென்ன? அத்தியாத்மமாவதென்ன? கர்மமாவதென்ன? இவைகளை அருளிச்செய்யவேண்டும். மேலும் ஐசுவரியத்தைக் கோரியவர்களுக்கு அறியவேண்டிய விஷயமான அதிபூதமாவதென்ன? அதிதைவமாவ தென்ன? இவர்கள் மூவரும் அறியவேண்டியதான அதியக்ஞமாவதென்ன? அந்த அதியக்ஞத்தின் தன்மையெப்படிப்பட்டது? இவர்கள் சரீரத்தைவிட்டுப்போகுங்காலத்தில் சலியாமனத்தராய் தேவரீரை நினைப்பதெப்படி? இவைகளையும் அருளிச்செய்யவேண்டும் என்று கேட்டான்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥ 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌮𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮
𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 । 𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑍋𑌦𑍍𑌭𑌵𑌕𑌰𑍋 𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑌃 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌃 ॥ ௩ ॥

(௩) அதற்குப் பகவான் அருளிச்செய்கிறார். அர்ச்சுந! பிரம்மமாவது $ பரமாக்ஷரம். அதாவது.—பிரகிருதியினின்றும் விடுபட்ட ஆத்மஸ்வரூப

$ 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌕𑍍𑌷𑌰𑍇 𑌲𑍀𑌯𑌤𑍇 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌤𑌮𑌸𑌿 𑌲𑍀𑌯𑌤𑍇 இத்யாதிஶ்ருதிகளிற சொன்னபடி அக்ஷரமென்று ஜீவஸமுதாயத்தைச் சொல்லுகையாலே பரமாக்ஷரமென்று பிரகிருதியினின்று விடுபட்ட ஆத்மஸ்வரூபத்தைச் சொல்லுகிறது.

http://acharya.org

ம். அத்யாத்மமாவது:—பஞ்சாக்நிவித்தையில் அறியவேண்டியதாகச் சொல்லப்பட்டதும் ஆத்மாவோடு ஸம்பந்திப்பதுமான பூதஸூக்ஷ்மமும் அதின் வாஸனை முதலானதும். [ஆகவிவ்விரண்டிலும் ஒன்றைப் பற்றவேண்டியதாயும் ஒன்றை விடவேண்டியதாயும் மோக்ஷார்த்தியானவன் அவசியம் அறியவேண்டும்.] கர்மமாவது:—மானிடத்தன்மை முதலியவைகளுக்குக் காரணமாய், சாஸ்திரத்தில் சொன்னபடி ஸ்திரீகளுடன் புணர்ந்து வீரியத்தை விடுகை. [மோக்ஷார்த்தி இதையும் வெறுக்கவேண்டியதாயும் ஒழிக்கவேண்டியதாயும் அறியவேண்டும்.] [ஒழிக்கவேண்டுமென்கிற விஷயத்தை யஹிஜுகுப்ஸந்தி என்று உடனே சொல்லப்போகிறார்.]

அதிபூதம் க்ஷரோ பாவ: புருஷஶ்சாதிதைவதம்।
அதியஜ்ஞோऽஹமேவாத்ர தேஹே தேஹப்ருதாம்வர ॥ ௪ ॥

(௪) ஓ மானிடச்சிங்கமே! ஐசுவரியார்த்திகள் அறியவேண்டியதாகச் சொன்ன அதிபூதமாவது:—க்ஷரபாவம், அதாவது:—ஆகாசம் முதலிய பூதங்களில் ஓர் விகாரமாய் வேறுபட்டுத்தோற்றும் சப்தம் பரிசம் முதலிய குணங்களும் அவைகளின் ஆதாரங்களும். [இதை யறிவதாவது - ஐசுவரியார்த்திகள் இவைகளைத் தங்கள் பேறாக நினைக்கவேண்டுமென்பது.] அதிதைவமாவது:—தைவத்தின் மீதிருப்பது, அதாவது:—இந்திரன் பிரமன் முதலிய வெல்லாத்தேவர்களுக்கும் மேலாயிருப்பது;என்றால் இந்திரன் முதலானோர் அநுபவிக்கு மவைகளைக்காட்டிலும் விலக்ஷணமான சப்தாதிவிஷயங்களை யநுபவிக்கும் புருஷனென்றபடி. [அதை யறிவதாவது:—அப்படிப்பட்ட போகங்களைப்புசிப்பவராகத் தம்மை ஐசுவரியார்த்திகள் நினைக்கவேண்டும்.] அதியக்ஞமாவது:— யக்ஞங்களால் ஆராதிக்கப் படுகிற நான்தான். [இந்த என்னை யறிவதாவது:—என் சரீரமான இந்த இந்திராதிகளுக்கு அந்தராத்மாவாயிருக்கும் என்னையே யக்ஞங்களால் ஆராதிப்பதாக இம்மூவரும் மஹாயக்ஞம் முதலான நித்யநைமித்திககர்மங்களை யநுஷ்டிக்கும்பொழுதெல்லாம் நினைக்கவேண்டுமென்றபடி.]

அந்தகாலே ச மாமேவ ஸ்மரந்முக்த்வா களேபரம்।
ய: ப்ரயாதி ஸ மத்பாவம் யாதி நாஸ்த்யத்ர ஸம்ஶய: ॥ ௫ ॥

(௫) அர்ச்சுந! இப்போ நாம்சொல்லப்போகிறவிஷயம் இம்மூன்றுபேருக்கும்வேண்டியதுதான்.அந்திமகாலத்திலும்நம்மையேநினைத்துக்கொண்டு சரீரத்தைவிட்டு எவன்போகிறானோஅவன்நம் ஸ்வபாவத்தை யடைகிறான். அதாவது:—அப்பொழுது நம்மை யெப்படி நினைத்திருக்கிறானோ அப்படிப்பட்ட ஸ்வபாவத்தையடைகிறான்.[ஆதிபரதன் முதலானோர் அந்திமகாலத்தில் நினைத்திருந்தபடி மிருகங்களுக்கு ஸமானமான வடிவத்தை யடைந்தாற்போலென்றபடி.]

(அ-கை.) அந்திமகாலத்தில் நினைக்கும் நினைவுக்கு, நினைத்த விஷயத்தைப்போன்ற நிலையை நினைப்பவனுக்குக் கொடுக்கை ஸ்வபாவம் என்கிற விஷயத்தைத் தெளிவாயருளிச்செய்கிறார்.

http://acharya.org

𑌯𑌂 𑌯𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌭𑌾𑌵𑌂 𑌤𑍍𑌯𑌜𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ।
𑌤𑌂 𑌤𑌮𑍇𑌵𑍈𑌤𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌸𑌦𑌾 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌭𑌾𑌵𑌿𑌤𑌃 ॥ ௬ ॥

(௬) அந்திமகாலத்தில் எவ்வித ஸ்வபாவத்தை நினைத்துக் கொண்டு சரீரத்தைவிடுகிறானோ அவ்விதஸ்வபாவத்தை மறித்தபின்பு அடைகிறான். அந்த நினைவோ முன்பு இவன் கோரிய விஷயமாய்த்தானிருக்கும்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌕𑌾𑌲𑍇𑌷𑍁 𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰 𑌯𑍁𑌧𑍍𑌯 𑌚 ।
𑌮𑌯𑍍𑌯𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ ௭ ॥

(௭) புருஷன் முன்பு தான் எந்த விஷயத்தில் பழகியிருக்கிறானோ அந்த விஷயமாகவே அந்திமகாலத்தில் நினைவு உண்டாகுமாகையால் எப்போதும் நீ பிரயாணமாமளவும் தினந்தோறும் நம்மைவிடாமல் நினை. நாடோறும் நம் நினைவையுண்டாக்குவதான யுத்தம் முதலிய வர்ணாசிரமாசாரத்தைச்சேர்ந்த சாஸ்திரோக்தமான நித்தியநைமித்திக கர்மங்களைச்செய். இப்படிப்பட்ட உபாயத்தாலே மனதையும் புத்தியையும் நம்மிடத்தில்வைத்து அந்திமகாலத்திலும் நம்மையே நினைத்திருந்து உன் இஷ்டப்பிரகாரம் நம்மையடைவாய்; இதில் ஸம்சயமில்லை.

(அ-கை.) இப்படி தம்மை யடையவேண்டுமானால் அந்திமகாலத்தில் நினைக்கவேண்டுமென்று ஸாதாரணமாய் அருளிச்செய்து, அதற்காகமுற்கூறியமூன்றுபேரும் வேறுவேறுவிதமாய் உபாஸிக்க வேண்டுமென்பதை யருளிச்செய்யத் தொடங்குகிறார். அதில் ஐசுவரியார்த்திகள் உபாஸிக்கவேண்டும் பிரகாரத்தையும் அவ்வுபாஸநத்துக்குத்தக்கபடி அந்திமகாலத்தில் சிந்திக்க வேண்டும் பிரகாரத்தையு மருளிச்செய்கிறார்.

𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌚𑍇𑌤𑌸𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑌗𑌾𑌮𑌿𑌨𑌾 ।
𑌪𑌰𑌮𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 ॥ ௮ ॥

(௮) தினந்தோறும் § அப்பியாஸத்தோடும் யோகத்தோடும் கூடியிருக்கையாலே மனது மற்றொன்றையும் நாடாமல் அந்திம காலத்தில் திவ்யபரமபுருஷனை நம்மை இனி சொல்லப்போகிறபடி நினைத்திருந்தால் நம்மையே யடையலாம். [என்றால் ஆதிபரதன் மிருகத்தன்மையை யடைந்தாற்போல் ஐசுவரியத்தையடைந்தவனாய் நம்மோடு ஸமானமாவானென்றபடி.]

𑌕𑌵𑌿𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌮𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌂𑌸𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑍇𑌦𑍍𑌯𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌾𑌤𑌾𑌰𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍂𑌪𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ॥ ௯ ॥

𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑌕𑌾𑌲𑍇 𑌮𑌨𑌸𑌾𑌚𑌲𑍇𑌨 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌯𑍋𑌗𑌬𑌲𑍇𑌨 𑌚𑍈𑌵 । 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌾𑌵𑍇𑌶𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌸 𑌤𑌂 𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍 ॥ ௧௦ ॥

§ அப்பியாஸமாவது - நித்ய நைமித்திக கர்மங்களுக்கு விரோதமில்லாத ஸகல காலங்களிலும் உபாஸ்யவிஷயத்தை நினைத்துக்கொண்டிருப்பது. யோகமாவது - நாடோறும் யோகஞ்செய்யவேண்டுங் காலத்தில்மாத்திரம் கீழ்ச்சொன்னபடி அநுஷ்டிக்கும் உபாஸநம்.

http://acharya.org

(கூ-க0) ஸர்வக்ஞனாய் அநாதிகாலமாயுள்ளவனாய் உலகத்தை யாள்பவனாய் அணுவான ஜீவனைக்காட்டிலும் சிறியனாய் எல்லாவற்றையும் தரிப்பவனாய் யாவையும் படைப்பவனாய் ஒன்றோடும் சேராத ஸ்வரூபனாய் பிரகிருதிக் கவ்வருகாயும் தனக்கே யானதாயுமிருக்கிற திருமேனியோடு கூடியவனாயிருக்கும் அந்த திவ்யபுருஷனை நாடோறும் பயில்கின்ற பக்தியுடன் கூடிய யோகபலத்தாலே (நன்றாய்த்திருந்தி சலியாமலிருக்கிற) மனதைக்கொண்டு எவன் பிரயாணகாலத்தில் புருவங்களுக்கு நடுவில் பிராணனை வைத்து அங்கே பகவானை இடைவிடாமல் சிந்திக்கிறானோ, அவன் அந்த பகவானையே யடைவான்; [என்றால் - அந்த பகவானுக்கு ஸமமான ஐசுவரியத்தை யடைகிறானென்றபடி.]

(அ-கை.) அநந்தரம் கைவல்லியத்தைக் கோரியவன் நினைக்கவேண்டும்படி சொல்லுகிறது.

𑌯𑌦𑌕𑍍𑌷𑌰𑌂𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍋𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿𑌯𑌦𑍍𑌯𑌤𑌯𑍋𑌵𑍀𑌤𑌰𑌾𑌗𑌾𑌃 । 𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍋𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍇𑌪𑌦𑌂𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑍇𑌣𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 ॥

(கக) வைதிகர்கள் எதையானால் அக்ஷரமென்று (அதாவது-பருக்காமை முதலிய குணங்களுடன் கூடியதாக) சொல்லுகிறார்களோ, வைராக்கியமுடையரான யதிகள் எந்தஅக்ஷரத்தைப் பிரவேசிக்கிறார்களோ,எதை யடையக் கோரியவர்கள் பிரம்மசரிய விரதத்தை யனுட்டிக்கிறார்களோ, அந்த ஸ்தாநத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறோம். [ஸகல வேதாந்தங்களாலும் அறிய வேண்டியதான அக்ஷரமென்னும் நம் ஸ்வரூபத்தை (அதாவது ஜீவனை) எப்படி உபாஸிக்கவேண்டுமோ அதைச் சுருக்கமாய் சொல்லுகிறோமென்றபடி.]

𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿𑌸𑌂𑌯𑌮𑍍𑌯 𑌮𑌨𑍋𑌹𑍃𑌦𑌿𑌨𑌿𑌰𑍁𑌧𑍍𑌯𑌚 ।
𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍍𑌯𑌾𑌧𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌯𑍋𑌗𑌧𑌾𑌰𑌣𑌾𑌮𑍍 ॥
𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌕𑌾𑌕𑍍𑌷𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑌨𑍍𑌮𑌾𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌨𑍍 ।
𑌯𑌃𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑌿𑌤𑍍𑌯𑌜𑌨𑍍𑌦𑍇𑌹𑌂 𑌸𑌯𑌾𑌤𑌿𑌪𑌰𑌮𑌾𑌂𑌗𑌤𑌿𑌮𑍍 ॥கங॥

(கஉ-கங) ஞானத்துக்கு வழியான செவிமுதலிய வெல்லாப்புலன்களையும் தம்வியாபாரங்களினின்று நிவ்ருத்திசெய்து, இருதயகமலத்தில் உறைகின்ற அக்ஷரமென்னும் நம்மிடத்தில் மனதை நிறுத்தி, யோகமென்னுந் தாரணையை யடைந்தவனாய் நம்மிடத்தில்தானே சலியாமல் நிலைத்து, நமக்கு வாசகமான "ஓம்" என்னு மோர் அக்ஷரப்பிரம்மத்தை உச்சரித்துக்கொண்டு அதற்குப் பொருளான நம்மைச் சிந்தித்துக்கொண்டு தன்பிராணனை உச்சித்தலையில் வைத்து சரீரத்தை விட்டவனாய் எவன்போகிறானோ, அவன் பரமகதியை அடைகிறான்; [அதாவது:—பிரகிருதிக்குப் புறம்பாய் நமக்கு ஸமமாய் மீண்டும் திரும்பவேண்டாத ஜீவாத்மஸ்வரூபத்தை யடைகிறான். 𑌯𑌃𑌸𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁𑌭𑍂𑌤𑍇𑌷𑍁𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁𑌨𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 । 𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌰𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌮𑌾𑌹𑍁𑌃𑌪𑌰𑌮𑌾𑌂𑌗𑌤𑌿𑌮𑍍 என்று அக்ஷரஸ்வரூபத்தைப் பரமகதியென்று உடனே அருளிச்செய்யப்போகிறார்.]

http://acharya.org

(அ-கை.) இவ்வாறு ஐசுவரியார்த்தியும் கைவல்யார்த்தியும தாம் அடையவேண்டிய பயனுக்குத் தக்கபடி எம்பெருமானை உபாஸிக்கவேண்டும் பிரகாரத்தை யருளிச்செய்தார். இனி மோக்ஷார்த்தியான ஞானியானவன் பகவானை உபாஸிக்கவேண்டும் பிரகாரத்தை யருளிச்செய்கிறார்.

𑌅𑌨𑌨𑍍𑌯𑌚𑍇𑌤𑌾𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌸𑍍𑌮𑌰𑌤𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑌃।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌹𑌂 𑌸𑍁𑌲𑌭𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨𑌿𑌤𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃॥௧௪॥

(௧௪) ஆரம்பித்த நாள்முதல் நித்தியமாய் எப்போதும் மற்றொன்றையும்நாடாமல் நம்மையே எவன் சிந்திக்கிறானோ (என்றால் நாம் அவனுக்கு மிகவும் இனியோமாகையாலே நம்மை நினைத்தாலொழிய தன்னைத் தரிக்கமாட்டாதவனாய் கேவலம் இன்பமயமான நம்சிந்தையை யெவன்செய்கிறானோ) அந்த நித்தியயோகிக்கு நாம் எளிதில் கிடைக்கிறோம். [அதாவது - எளிதில் அடையக்கூடிய நம் ஸாவமான ஐசுவரியாதிகளையல்ல நாம் கொடுப்பது; மற்றப்படி கேவலம் அருமைப் பெரும்பேறான நாமேஎளிதில் கிடைக்கிறோம். என்றால்-அவன் பிரிவை ஸஹிக்கமாட்டாமல் நாமே அவனை வரித்து நம்மையடைவதற்கேற்ற பக்குவமான உபாஸநஞானத்தையுமளித்து அதன் விரோதியையுமொழித்து நம்மிடத்தில் இனிமையான புத்தியையும் உண்டுபண்ணுகிறோமென்றபடி. 𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌃 என்று சுருதியில் சொல்லுகிறதன்றோ? 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌤𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌭𑌜𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍। 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇॥ என்றும், 𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌰𑍍𑌥𑌮𑌹𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌂 𑌤𑌮𑌃। 𑌨𑌾𑌶𑌯𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍇𑌨 𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑌾 என்றும் மேலும் சொல்லப்போகிறார்.]

(அ-கை.) இதற்குமேல் அத்தியாயத்தின் மீதியாலே ஞானிக்கும் கைவல்யார்த்திக்கும் திரும்புதலில்லையென்றும் ஐசுவரியார்த்திக்குத் திரும்புதலுண்டென்றும் அருளிச்செய்கிறார்.

𑌮𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌦𑍁𑌃𑌖𑌾𑌲𑌯𑌮𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌮𑍍।
𑌨𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌾𑌃॥௧௫॥

(௧௫) நம்மைக் கிட்டியவர்கள் மறுபடியும் எல்லாத் துயரங்களுக்கு மிருப்பிடமான இந்த அசாசுவதமாயிருக்கிற ஜந்மத்தை யடைவதில்லை. ஏனென்றால்-இவர்கள் பெரியமனதோடு நம்ஸ்வரூபத்தை உள்ளபடியே யறிந்து (மிகுதியும் நம்மையே விரும்பியிருக்கையாலே நம்மைப்பிரிந்தால் தரிக்கமாட்டாதவர்களாய் நம்மைப்பற்றிக் கிடக்கிற மனதோடு நம்மையே ஆதாரமாக நம்பி) உபாஸ்யனான நம்மையே பெரும்பேறாக வடைகின்றார்கள்.

(அ-கை.) ஐசுவரியத்தை யடைந்தவர், திரும்புவதற்கும் பகவானை யடைந்தவர் திரும்பாமைக்குங் காரணம் இங்கே சொல்லப்படுகிறது.

𑌆𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍁𑌵𑌨𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌃 𑌪𑍁𑌨𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨।
𑌮𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 𑌤𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍁𑌨𑌰𑍍𑌜𑌨𑍍𑌮 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇॥௧௬॥

http://acharya.org

(கசு) பிரம்மாண்டத்தில் பிரம்மலோகபரியந்தமாயுள்ள போகைசுவ ரிய ஸ்தானமான ஸகல லோகங்களும் திரும்புதலோடு கூடியவைகள். ஆகை யால் ஐசுவரிய கதியையடைந்தவருக்குப் பேறுன அந்த ஸ்தாநங்கள் நசிக் கும்போதுஅவர்களுக்கும் நாசமுண்டாகாமற்போகாது.(ஸர்வக்ஞனும் ஸத்ய ஸங்கல்பனும் ஸகல ஜகத்துக்கும் உத்பத்தி ஸ்திதிலயங்களைச் செய்பவனும் பமகாருணிகனும் எப்பொழுதும் ஒரே ரூபனுயிருக்கிற) நம்மை யடைந்தவர் களுக்கோ நாசமென்கிற வார்த்தையே யில்லாமையால் மறு ஜந்மங்கிடைக் மாட்டாது.

(அ-கை.) பிரம்மலோக பரியந்தமான லோகங்களுக்கும் அவற்றுக் குட்பட்டவைகளுக்கும் எம்பெருமானுல் ஏர்ப்படுத்தப்பட்ட உத்பத்தி விநா சகாலங்களின் ஏர்ப்பாட்டை யருளிச்செய்கிறுர்.

ஸஹஸ்ரயுகபர்யந்தமஹர்யத்ப்ரஹ்மணோ விது:|
ராத்ரிம்யுகஸஹஸ்ராந்தாம் தேஹோராத்ரவிதோஜநா:||
அவ்யக்தாத்வ்யக்தய:ஸர்வா: ப்ரபவந்த்யஹராகமே|
ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்தஸம்ஜ்ஞகே||கஅ||
பூதக்ராம:ஸஏவாயம் பூத்வா பூத்வா ப்ரலீயதே|
ராத்ர்யாகமேऽவச:பார்த ப்ரபவத்யஹராகமே||ககூ||

(கஎ-கஅ-ககூ) மானிடர் முதல் பிரமனளவாகவுள்ளப் பிராணிகளுக்கு நம்மாலேர்ப்படுத்தப்பட்ட“பகல்இரவு”என்கிற ஏர்ப்பாட்டையறிந்தவர்கள், ஆயிரம் சதுர்யுகத்தைப் பிரமனுக்கு ஒருபகலென்பர்கள். அப்படியேராத்தி ரியும். அதில் பிரமனுக்குப் பகல்வரும்போது மூவுலகத்துக்குட்பட்ட(சரீரம் இந்திரியம் மற்றும் போக்கியவஸ்துக்கள் போகஸ்த்தாநங்கள் ஆகிய)இவ் விய க்தங்களெல்லாம் அவ்வியக்தமென்கிற பிரமன்சரீரத்திலிருந்துண்டாகின்ற ன. இரவாகும்பொழுது அச்சரீரத்தில் தானே லயித்துப்போகின்றன. கர்மத் துக்கு வசப்பட்ட அந்த இந்த பூதக்கூட்டம் பகற்காலத்தி லுண்டாகியுண்டா கி இராக்காலத்தில் லயமடைந்து மறுபடியும் பகல்வந்தால் உண்டாகின்றது. [அப்படி நூறுவருஷமானுல் கடைசியான ஆயிரயுகத்தில் பிரம்மலோகத்தள வானலோகங்களும் பிரம்மாவும் ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே தேஜஸி என்கிறக் கிரமமாய் அவ்யக்தம் அக்ஷரம் தமஸ்ஸு என்கிறவ ளையில் நம்மிடத்தில் தானே லயிக்கின்றன. இப்படி நம்மை யொழிந்த வெ ல்லாவற்றுக்குங் காலவியவஸ்த்தையின்படி நம்மிடத்தில் உற்பத்தியும் நம்மி டத்தில்தானே லயமுமாகையால் உற்பத்திவிநாசங்கள் ஒன்றுனு மொழிக்கப் போகாது. ஆகையால் ஐசுவரியகதியைப் பெற்றவருக்கு மீண்டுந் திரும்புதல் வந்தேதீரும்; நம்மை யடைவோருக்கோ அந்த வார்த்தையே கிடையாது.]

(அ-கை.) இனி கைவல்லிய மடைந்தவருக்கும் திரும்புத லில்லையெ ன்கிறுர்.

http://acharya.org

𑌪𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌭𑌾𑌵𑍋𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌸𑌨𑌾𑌤𑌨𑌃|
𑌯𑌃 𑌸 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌨𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁 𑌨 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿||௨௰||

𑌅𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌽𑌕𑍍𑌷𑌰 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌮𑌾𑌹𑍁𑌃 𑌪𑌰𑌮𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍|
𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌤𑌦𑍍 § 𑌧𑌾𑌮 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌮||௨௧||

(௨௰-௨௧) அவ்யக்தமென்கிற அசேதநப் பிரகிருதியைக் காட்டிலும் (புருஷார்த்தமாயிருக்கையால்) உத்க்ருஷ்டமாயிருக்கிற மற்றொரு ஜீவனென்றும் ஸாவபதார்த்தமானது, ஞாநமே வடிவாயிருக்கையால் அந்த அசேதநத்தைக் காட்டிலும் வேறு ஜாதியாய் கண்முதலிய பிரமாணங்களாலே கண்டறியக்கூடாமல் தன்னாலேயே தானறியப்பட்டு உற்பத்தி நாசங்களற்று நித்தியமாய், ஆகாசம் முதலிய பூதங்கள் தங்காரியங்களோடுங் காரணங்களோடும் நசித்தாலும் (அவைகளிலிருக்கிற) தான் நசியாமலிருக்கிறது. இது தான் 𑌯𑍇 𑌤𑍍𑌵𑌕𑍍𑌷𑌰𑌮𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 என்றும், 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑍋𑌽𑌕𑍍𑌷𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 என்றும் இத்யாதிகளில் அவ்யக்தமென்றும் அக்ஷரமென்றும் சொல்லப்பட்டது. இதைத்தான் வேதவித்துக்கள் பரமகதியென்பர்கள். (𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌤𑌿𑌦𑍍𑌰𑌜𑌨𑍁𑌷𑍇𑌹𑌂 என்கிற விடத்திலும் பரமகதி சப்தத்தாலே குறிக்கப்பட்ட அக்ஷரமென்பதும் இதுதான்.) இப்படிப்பட்ட ஸ்வரூபத்தோடு இருக்கும் இதை அடைந்தவர்கள் மறுபடியுந் திரும்புவதில்லை. (இதுதான் கைவல்யமாவது) இதுதான் நம்முடைய ‡ நியமநஸ்தாநங்களில் மேலானது [என்றால் அசேதநமான பிரகிருதி ஒரு நியமநஸ்தாநம். அத்தோடு கலந்திருக்கிற ஜீவனென்றும் பிரகிருதியானது இரண்டாவது நியமநஸ்தாநம். அவ்வசேதநத்தை விட்டுப்பிரிந்த முக்தஸ்வரூபமான ஜீவன் மேலான நியமஸ்தாநமென்றபடி.]

(அ-கை.) ஞாநிக்குக்கிடைக்கும்பேறு அதைகாட்டிலும் வேறுபட்டிருக்குமென்கிறார்.

𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸 𑌪𑌰𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾|
𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍||௨௨||

(௨௨) (𑌮𑌤𑍍𑌤𑌃 𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌸𑍍𑌤𑌿 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 | 𑌮𑌯𑌿 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌤𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌮𑌣𑌿𑌗𑌣𑌾 𑌇𑌵|| என்றும், 𑌮𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 என்றும் கீழே சொல்லப்பட்டபடி) எந்த பரமபுருஷனிடத்தில் ஸகலபூதங்களும் இருக்கின்றனவோ, எந்தபகவானாலே இவையாவும் வியாபிக்கப்பட்டு

---

§ 𑌧𑌾𑌮 சப்தம் பிரகாசத்தைச் சொல்லுவதானால், பிரகாசமென்றால் இங்கே ஞாநமென்று கொள்ளத்தக்கது; அப்பொழுது 𑌪𑌰𑌮𑌂𑌧𑌾𑌮 என்றால் பிரகிருதியோடுகலந்து மிதஞாநமான ஜீவஸ்வரூபத்தைக்காட்டிலும் அபாரஞாநமான முக்தஸ்வரூபம் அர்த்தமாகிறது.

‡ நியமநஸ்தாநம் - ஆளுகைக்குட்பட்டது.

http://acharya.org

ளவோ அந்த பரமபுருஷனை (பக்த்யா த்வநந்யயா என்று கீழ்ச் சொன்னபடி) மாருதபக்தியுண்டானுல்தான் அடையக்கூடும்.

(அ-கை.) அநந்தரம் ஆத்மஞாநிக்கும் பிரம்மஞாநிக்குமுண்டான ¶ அர்ச்சிராதிமார்க்கத்தை உபதேசிக்கிருர்.

யத்ர காலே த்வநாவ்ருத்திம் ஆவ்ருத்திம் சைவ யோகிந: |
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப ||௨௩||

(௨௩) மோக்ஷார்த்திகளான யோகிகள எந்த § மார்க்கமாய்ச் சென்றுதிரும்பாமலிருக்கிருர்களோ; ஐசுவர்யத்தைக்கோரிய புண்ணியவான்கள்

¶ மீட்சியில்லாத அர்ச்சிராதிமார்க்கம் இருவருக்கு முண்டென்று வேதம் சொல்லுகிறது. எங்ஙனேயென்னில்:—பஞ்சாக்கினி வித்தையில தத்ய இத்தம் விது: யே சேமே அரண்யே ஶ்ரத்தா தப இத்யுபாஸதே தே அர்சிஷமபிஸம்பவந்தி என்று இருவருக்கும் அர்ச்சிராதிமார்க்க முண்டென்றும், அப்படி அர்ச்சிராதியால் போனவனுக்கு ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி ஏஷ தேவபதோ ப்ரஹ்மபத: ஏதேந ப்ரதிபத்யமாநா இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே என்று பரப்பிரம்மப் பிராப்தியும் மீட்சியில்லாமையும் சொல்லப்படிருக்கிறது. ஆனுல் தத்ய இத்தம் விது: என்கிற ஶ்ருதியானது பிரஜாபதி வாக்கியத்தில் ஓதபபட்டுள்ள பரவித்தைக்கு அங்கமான ஆத்மப்பிராப்தியைப்பறுறிச் சொல்லுகிறது என்ருல் அது கூடாது: ஏனெனில - அப்படியாகும்பக்ஷத்தில் யே சேமே அரண்யே ஶ்ரத்தா தப இத்யுபாஸதே என்றுபரவித்தையைத் தனியேபிரித்து ஓதியது வியர்த்தமாம். பஞ்சாக்நிவித்தையிலே ஜதிதாவஜ்ஞாத்வாஸாஹதாவாவஹவ ராஷவவ வொஸவந்தி என்றும், ரமணீயசரணா: கபூயசரணா: என்றும் புண்ணிய பாவங்களா லுண்டாகும் மானிடத்தன்மை முதலியவை பூதங்களோடு சேர்ந்த ஜலத்துக்கேயல்லது ஆத்மாவுக்கல்ல; ஆதமாவோ இவைகளோடு கலந்து மாத்திரமிருக்கிறது. என்று சித்தையும் அசித்தையும் பிரித்துச்சொல்லி, தத்ய இத்தம் விது:......தே அர்சிஷமபிஸம்பவந்தி இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே என்று (பிரித்துச்சொலப்பட்ட) சித்தையும் அசித்தையும் முறையே பற்றவேண்டியதாயும் விடவேண்டியதாயும் எவர்கள் அறிவார்களோ அவர்கள் அர்ச்சிராதியாலே போவார்கள், மறுபடி திரும்புகிறதில்லையென்று சொன்னதாய்க் காணப்படுகிறது. (ஆத்மஞாநிக்கும் பிரம்மஞாநிக்கும் ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி என்று பிம்மப் பிராப்தியுண்டாயிருப்பதாகச் சொல்லுகையாலே இங்கே அசித்தினின்று பிரிந்திருக்கும் ஆத்மவஸ்துவானது பிரமமத்துக்குச் சரீரமாயிருககையாலே பிரம்மத்துக்கே சேஷப்பட்டிருககிறதென் றெண்ணத்தக்கது. தத்க்ரது நியாயத்தாலும் அப்படியே ஏர்ப்படுகிறது.) பிரம்மத்துக்கே சேஷப்பட்டிருக்குமென்கிற விஷயமோ ய ஆத்மநி திஷ்டந்......யஸ்யாத்மா ஶரீரம் இத்தியாதி ஶ்ருதியில் பிரஸித்தம்.

§ மார்க்கமானது பகல்தொடங்கி ஸம்வத்ஸரம் வரையிலுள்ள காலாபிமாநி தேவதைகளால் நிறைந்திருக்கையால, மார்க்கத்தை யிங்கே காலசப்தத்தாலே காட்டுகிறதென்றறியவும்.

http://acharya.org

எந்த மார்க்கமாய்ச்சென்று திரும்பிவிடுகிறார்களோ, அதைச் சொல்லுகிறே ன்கேள்.

அக்நிர்ஜ்யோதிரஹஶ்ஶுக்லஷ்ஷண்மாஸா உத்தராயணம்|
தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா: ||௨௪||

(௨௪) அக்நிதேஜஸ்ஸை பகல் சுக்லபக்ஷம் ஷண்மாஸம் உத்தராய ணம் ஸம்வத்ஸரம் முதலாகச் சொல்லப்படும் அர்ச்சிராதி மார்க்கமாய்ச்செ ன்ற பிரம்மஞாநிகள் பரப்ரம்மத்தை யடைகிறார்கள்.

தூமோ ராத்ரிஸ்ததா க்ருஷ்ணஷ்ஷண்மாஸா தக்ஷிணாயநம்|
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்யோகீ ப்ராப்ய நிவர்த்ததே ||௨௫||

(௨௫) தூமம் இரவு கிருஷ்ணபக்ஷம் ஷண்மாஸம் தக்ஷிணாயநம் முத லாகச்சொல்லப்படும் தூமாதிமார்க்கமாய்ச் செல்லுகின்ற புண்ணியகர்மஞ் செய்தவன் சந்திரஸம்பந்தமான காந்தியையடைந்திருந்து மீண்டும் திரும்பி விடுகிறான்.

ஶுக்லக்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகதஶ்ஶாஶ்வதே மதே|
ஏகயா யாத்யநாவ்ருத்திமந்யயாவர்த்ததே புந: ||௨௬||

(௨௬) சுக்ல கதியென்கிற அர்ச்சிராதிமார்க்கமும் கிருஷ்ணகதியென் கிற தூமாதிமார்க்கமும் உலகத்திற்குச் சாசுவதமாய் ஏற்பட்டவைகள். இவ ற்றுள்சுக்லகதியாற்சென்றவன் திரும்புகிறதில்லை; கிருஷ்ணகதியாற்செல்லு மவன் திரும்பிவிடுகிறான். [இதனால் இருவகையான ஞாநிகளுக்கும் சுக்லகதி யும் புண்ணியகர்மஞ் செய்தவருக்குகிருஷ்ணகதியுமென்று * சுருதியில் சொ ல்லுகிறதென்றதாயிற்று.]

நைதே ஸ்ருதீ பார்த்த ஜாநந் யோகீ முஹ்யதி கஶ்சந|
தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ பவார்ஜுந ||௨௭||

(௨௭) இவ்விருவகையான மார்க்கத்தையுமறிந்த யோகியானவன் பிரயாணகாலத்தில் ஒருவனும் மோஹத்தையடையமாட்டான்; மற்றப்படி தனக்கென்று வகுத்த அர்ச்சிராதி மார்க்கத்தாலேயே போவான். ஆகை யால் பார்த்த! தினந்தோறும் அர்ச்சிராதி மார்க்கத்தைச் சிந்தித்திருக்கை யென்கிற யோகத்தோடுகூடியிரு.

(அ-கை.) இனி இவ்விரண்டு அத்தியாயங்களிலுஞ் சொல்லப்பட்ட சாஸ்திரார்த்தங்களை - யறிந்தவருக்குப் பிரயோஜநம் சொல்லுகிறது.

---

* தத்ய இத்தம் விதுர்யே சேமே(அ)ரண்யே ஶ்ரத்தா தப இத்யு பாஸதே தே(அ)ர்சிஷமபிஸம்பவந்தி அத ய இமே க்ராம இஷ்டாபூ ர்த்தே தத்தமித்யுபாஸதே தே தூமமபிஸம்பவந்தி என்று சுருதி.

http://acharya.org

வேதேஷு யஜ்ஞேஷு தப:ஸு சைவ தாநேஷு யத்புண்யபலம் ப்ரதிஷ்டம் | அத்யேதி தத்ஸர்வமிதம் விதித்வா யோகீ பரம் ஸ்தாநமுபைதி சாத்யம் ||௨அ||

(௨அ) வேதம் யாகம் தவம் தானம் முதலிய புண்ணியங்களுக்கு எந்தப்பிரயோஜநம் சொல்லப்பட்டிருக்கிறதோ அதை, இவ்விரண்டு அத்தியாயங்களிலும் சொல்லப்பட்ட பகவான்மகிமையை யறிந்தவன் உல்லங்கநஞ்செய்வான். [அதாவது-இதிலுண்டான ஆநந்தாதிசயத்தால் அவை யெல்லாவற்றையும் அற்பமாகநினைப்பான.] மறறப்படி பிரம்மஞாநியாய் ஞாநிகளுக்கிடமான மேலான முதல்வீட்டைச்சேருவான்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

எட்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஒன்பதாவது அத்யாயம்.

அவதாரிகை.

உபாஸிப்பவர்களின் வேறுபாட்டுக்குக் காரணமான விசேஷங்கள் சொல்லப்பட்டன. இப்பொழுது உபாஸிக்கவேண்டும் பரமபுருஷன் மஹிமையையும் ஞாநிகளுக்குண்டான விசேஷத்தையும் விசாரித்து, பக்திரூபமான உபாஸநத்தின் ஸ்வரூபம் சொல்லப்படுகிறது.

ஸ்ரீபகவாநுவாச || இதம் து தே குஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே | ஜ்ஞாநம் விஜ்ஞாநஸஹிதம் யஜ்ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேऽஶுபாத் ||க||

(க) அர்ச்சுந! § அசூயைகொள்ளாமலிருக்கிற உனக்கு மிகவும் இரஹஸ்யார்த்தமான பக்தியென்னும் உபாஸநஞாநத்தை, அந்தஞாநத்தின் கதிவிசேஷத்தோடுகூட இப்பொழுது சொல்லுகிறோம். இதையறிந்து அநுஷ்டித்தாயாகில் நம்மைச் சேரவொட்டாமல் தடுக்கிற ஸகல பாவங்களினின்றும் விடுபடுவாய்.

ராஜவித்யா ராஜகுஹ்யம் பவித்ரமிதமுத்தமம் |
ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸுஸுகம் கர்துமவ்யயம் ||௨||

(௨) அர்ச்சுந! நாம் சொல்லப்போகிறஇந்தபக்தியானது,வித்தைகளுக்கெல்லாம் இராஜாவாகையாலே இதறகு ராஜவித்தையென்றும், ரஹஸ்ய

---

§ அசூயை=ஸகல பதார்த்தங்களிலும் வேறுபட்டிருக்கிற அபாரமான எம்பெருமான் மஹிமையைக் கேட்டால், இது இப்படியெல்லா மிருக்குமா! என்று அதில நம்பிக்கை கொள்ளாமை.

http://acharya.org

ங்களுக்கெல்லாம் மேலாயிருக்கையாலே இராஜரஹஸ்யமென்றும் பெயர். நம்மோடு சேரவொட்டாமற்றடைசெய்கின்ற ஸகல பாபங்களையும் போக்கும்படி மிகவும் பரிசுத்தமானது; அறியவேண்டும் பொருளான நம்மைப் பிரத்யக்ஷமாய்க் காட்டக்கூடியது; அப்படி யிருக்கச்செய்தேயும் தர்மத்தினின்று நீங்காதது. [என்றால் தர்மமாவது மொக்ஷத்தைச் சாதிக்குமது; இந்தபக்தியானதுதானே மிகவும் இனியதாய்க்கொண்டு அப்பொழுதே எம்பெருமானை பிரத்தியக்ஷமாய்க் காட்டுகின்றமையால் தானே மோக்ஷஸுகத்தைக்கொடுத்தாலும் அதுவேதனக்குப்பயனாய் அத்தோடு நில்லாமல் உத்தமமோக்ஷமான நம்மையு மடைவிக்குமென்றபடி.] இப்படி இனியதா யிருக்கையாலே செய்வதற்கும் எளிதாயிருக்கும். மற்றஸாதநங்களைப்போலே பலனை யளித்தபோதே யழிந்துபோகாமல் மோக்ஷத்தைக் கொடுத்த பின்பும் அழியாமலிருக்கும். [என்றால் இப்படிப்பட்டபக்திரூபமான உபாஸநத்தைச் செய்பவனுக்கு நம்மைத் தந்தபின்பும் நாம் என்செய்தோமென்று எண்ணும்படியாயிருக்குமென்றபடி.]

அஶ்ரத்ததாநா: புருஷா தர்மஸ்யாஸ்ய பரந்தப।
அப்ராப்ய மாம் நிவர்தந்தே ம்ருத்யுஸம்ஸாரவர்த்மநி ॥ ௩ ॥

(௩) இப்படி மிகவும் இனியதான நம்விஷயத்தில் பண்ணும் பக்தியானது இனியதாயும் நம்மையடைவிப்பதாயும் அழிவற்றதாயுமிருக்க, இதைக் கைப்பற்றும்படியான நல்ல நிலையிலிருந்தும் விரைவில் ஆதரத்தோடு கைப்பற்றாதவர்கள் நம்மை யடையாமற்போவதோடு யமனுள்ள ஸம்ஸாரத்தில் தானே அழுந்திப்போகிறார்கள். [ஐயோ! இதென்ன ஆச்சரியமென்றபடி]

(அ-கை.) அடையவேண்டும் பயனும் சிந்தைக் கெட்டாததாயுமிருக்கிற நம்மஹிமையைச் சொல்லுகிறேன்கேள்.

மயா ததமிதம் ஸர்வம் ஜகதவ்யக்தமூர்த்திநா।
மத்ஸ்தாநி ஸர்வபூதாநி நசாஹம் தேஷ்வவஸ்தித: ॥ ௪ ॥
நச மத்ஸ்தாநி பூதாநி பஶ்ய மே யோகமைஶ்வரம்।
பூதப்ருந்நச பூதஸ்தோ மமாத்மா பூதபாவந: ॥ ௫ ॥

(௪-௫) சேதனம் அசேதனம் என்றிருவகையாயுள்ள இவ்வுலகங்கள் யாவும் எங்கும் மறைந்துரைகின்ற * அந்தரியாமியான நம்மால் வியாபிக்கப்பட்டிருக்கின்றன. [என்றால்-இவைகளைத் தரிப்பதற்காகவும் ஆள்வதற்காகவும் பதியாயிருந்து வியாபித்திருக்கிறோமென்றபடி.] ஆகையால் ஸகல பூத

---

* அந்தரியாமிப் பிராம்மணத்தில் ய: ப்ருதிவ்யாம் திஷ்டந்... ... யம் ப்ருதிவீ நவேத ॥ ய ஆத்மநி திஷ்டந்... ...யமாத்மா நவேத என்று ஒன்றாலும் பார்க்கப்படாத அந்தரியமியால் எங்கும் வியாபிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப்பட்டுளது.

http://acharya.org

ஙகளுமே¶ அந்தர்யாமியான நம்மிடத்திலிருக்கின்றன. நாமோ அவைகளிலிருப்பதில்லை [அதாவது நம்நிலைமையைப்பற்றி அவைகளால் சிறிதும் உபகாரமில்லையென்றபடி] நாம் (அவைகளைத் தரிக்கும்பொழுது ஜலமுதலியவற்றைத்தரிக்கிற குடமுதலியவைகளைப்போல) ஆதாரமாக நிற்கிறோமென்பதல்ல, மற்றபடி கேவலம் நமது ஸங்கல்பமென்கிற இச்சையினாலே தரிக்கிறோம் பார்த்தாயோ ஸர்வேச்வரனான நம்முடைய யோகமஹிமையை? நம்மைத்தவிர யாருக்காகிலும் எங்காகிலும் இப்படிப்பட்ட சக்தியுண்டா? ஸகலபூதங்களையும் தரிப்பவனாகிய நாம் அவைகளால் சிறிதும் ஸஹாயத்தைப்பெறாமல் கேவலம் ஸங்கல்பமாத்திரத்தால் அவைகளைத் தரித்தும் ஆண்டு பரிபாலித்தும் வருகிறோமே இதுதான் நம்முடைய யோகமாவது.

யதாகாசஸ்திதோ நித்யம் வாயுஸ்ஸர்வத்ரகோ மஹாந்|
ததா ஸர்வாணி பூதாநி மத்ஸ்தாநீத்யுபதாரய||௬||

(௬) நிராதாரமான ஆகாசத்தில் பெரியதான வாயுவானது இருந்துகொண்டு எங்கும் வீசுகிறதைப் பார்த்தால் அந்தவாயுவின் நிலைமை நம்மாதீனம் என்று அவசியம் ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருக்கிறதல்லவா? அதுபோல எல்லாப்பூதங்களும் (அவைகளால் காணப்படாத) நம்மிடத்தில் நிலைபெற்றிருக்கும். இப்படியே * வைதிகர்களுஞ் சொன்னார்கள். $ சுருதியுமிப்படியே சொல்லுகிறது.

(அ-கை) பூதங்களின் ஸ்திதியும் ப்ரவிருத்தியும் இதரநிரபேக்ஷமான பகவத்ஸங்கல்பாதீனமென்றார் கீழ், இப்பொழுது அவைகளின் உத்பத்திவிநாசங்களும் அவன் ஸங்கல்பாதீனமென்கிறார்

ஸர்வபூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்|
கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம்||௭||

(௭) தாவரமாயும் ஜங்கமமாயுமுள்ள எல்லாப்பூதங்களும், நாமரூபங்களைக்கொண்டு பிரிக்கப்போகாமல் கேவலம் தமஸ்ஸு என்று சொல்லப்பட்ட (நம்சரீரமான) பிரகிருதியில், நான்முகனுக்கு முடிவுநாளான கல்பக்ஷயத்தில் நம்ஸங்கல்பத்தால் லயிக்கின்றன, மறுபடியும் கல்பாதியில் அவை

¶ அந்தர்யாமிப்பிராமணத்தில், யஸ்ய ப்ருதிவீ சரீரம் யஃப்ருதிவீமந்தரோ யமயதி யஸ்யாத்மா சரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி என்று சித்தும் அசித்தும் பகவானுக்குச்சரீரமாயிருப்பதாகச்சொல்லுகையால் ஸ்திதியும் ப்ரவிருத்தியும் பகவதாதீனமென்றதாயிற்று

* ஏவொஷ்யஸ்யாமாஸ்த்ருப்ரவ்ருத்திர்நித்யா விஹாயஸ்யஸம்ஸ்ரிதாநி வாயோ꞉ | விஷ்ணோர்மஹிம்நா ப்ரதிஷ்டேஷு ப்ரேஷ்யோ விஷ்ணோர்விபூதீர்வ்யூஹவத்யோ꞉ ||

$ ச்ருதி꞉ || ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத꞉ || பீஷாஸ்மாத்வாத꞉ பவதே பீஷோதேதி ஸூர்ய꞉ பீஷாஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச இத்யாதிகள்.

http://acharya.org

களை நாம்படைக்கிறோம். இப்படியே † மநுசொல்லுகிறார். ‡ சுருதியும் இப்படியே.

ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந:|
பூதக்ராமமிமம் க்ருத்ஸ்நமவஶம் ப்ரக்ருதேர்வஶாத்||அ||

(அ) விசித்திரமாய் விகாரப்படும் நம் பிரகிருதியை எட்டு வகையாக விகாரப்படுத்தி, தெவர் திரியக்கு மனிதர் தாவரம் என்கிற நால்வகைப் பூதங்களையும் குணமயமான அந்தப் பிரகிருதியினின்றும் அந்தந்தகாலத்தில் சிருஷ்டிக்கிறோம்.

(அ-கை.) இப்படியாகில் வித்தியாசமாய்ப் படைப்பதனால் பகவானுக்குக் கருணையில்லையென்றும் மற்றும் தோஷங்களு முண்டாய் அவனை அக்கர்மங்கள் கட்டுப்படுத்தாவோவென்றால் அருளிச்செய்கிறார்.

ந ச மாம் தாநி கர்மாணி நிபத்நந்தி தநஞ்ஜய|
உதாஸீநவதாஸீநமஸக்தம் தேஷு கர்மஸு||கூ||

(கூ) அர்ச்சுந! வித்தியாஸமாய் ஸ்ருஷ்டிமுதலிய தொழில்களைச் செய்வதனால் நமக்குக் கருணையின்மை முதலிய குற்றங்கள் வரமாட்டா; ஏனென்றால்-தேவனும் மனிதனும் பிராணிகள் வித்தியாஸமா யுண்டாவதற்குக் காரணம் ஜீவர்கள்செய்த பூர்வகர்மம். நாமோ அந்த வித்தியாஸ விஷயத்தில் தட்டாமலிருக்கிறோம். [இப்படியே * ஸூத்திரகாரரும் சொன்னார்.]

மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்|
ஹேதுநாநேந கௌந்தேய ஜகத்விபரிவர்ததே||கo||

(கo) ஆகையால் ஜீவர்களின் கர்மத்துக்குத்தக்கபடி நம் பிரகிருதியானது ஸத்திய ஸங்கல்பனாகிய நம்மால் கடாக்ஷிக்கப்பட்டதாய் சராசரமாயுள்ள இஜ்ஜகத்தை யுண்டாக்குகின்றது. இப்படி கர்மாநுகுணமாக நாம்ஸங்கல்பிக்கிறோ மென்கிற இந்த ஹேதுவினால்தான் உலகம் வித்தியாஸமாயிருக்கின்றது. [ஆகவிதனால் நாம் ஸ்வாமியாயும் ஸத்திய ஸங்கல்பனாயும் கருணையின்மைமுதலிய தோஷமில்லாதவனாயும் இன்னு மிப்படி பல்படியாயுமிருக்கிறோமென்கிற இந்த நம்முடைய யோகத்தைப்பார் என்றதாயிற்று. இப்ப

---

† மநு: | அப ஏவ ஸஸர்ஜாதௌ என்றும் ஸோऽபித்யாய ஶரீராத்ஸ்வாத் என்றுஞ்சொன்னார்.

‡ ஶ்ருதி: || யஸ்யாவ்யக்தம் ஶரீரம் என்பது முதல் அவ்யக்தமக்ஷரே லீயதே அக்ஷரம் தமஸி லீயதே என்றும், தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் என்றுஞ் சொல்லுகிறது.

* வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் என்றும் ந கர்மாவிபாகாதிதி சேந்நாநாதித்வாத் என்றும் ஸூத்திரகாரர் சொன்னார்.

http://acharya.org

டியே சுருதியும் 𑌅𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌾𑌯𑍀 𑌸𑍃𑌜𑌤𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍇𑌤𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍋 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌸𑌨𑍍𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌃 ॥ என்றும் 𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌯𑌿𑌨𑌨𑍍𑌤𑍁 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 என்றும் சொல்லுகிறது.]

𑌅𑌵𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌮𑍂𑌢𑌾 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌨𑍍𑌤𑌨𑍁𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌮𑌮 𑌭𑍂𑌤𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥ கக ।

(கக) இப்படிப் பூதங்களுக்கெல்லாம் மஹேசுவரனுய் ஸர்வக்ஞனுய் ஸத்திய ஸங்கல்பனுய் ஸகல ஜகத்துக்கும் முக்கிய காரணனுயிருக்கும் நாம் மிகவும் தயாளுவாகையாலே யாவரும் நம்மைப்பற்றிச் கடைத்தேறட்டுமென்று மனுஷ்யனுய் அவதரித்திருக்கிறேம். இதை (தீவினையால் மதிகெட்ட) இநதப் பிராணிகள் அறியமாட்டாமல் கேவலம் உலகத்திலுள்ள மனிதரில் இவனுமொருவன் என்று ஸாதாரணமாய் நினைத்து விடுகின்றன. [என்றால்:—பூதங்களுக்கிறைவனுகிய நாம் கருணையாலும் ஔதாரியத்தாலும் அன்பினுலும் இப்படி மனிதனுய்த தோன்றினேமென்கிற இம்மேன்மையைச் சிறிது மோராமல், கேவலம் மனிதனுப் பிறந்தவனுலேயே நம்மை இகழ்கிறுர்கள என்றபடி.]

𑌮𑍋𑌘𑌾𑌶𑌾 𑌮𑍋𑌘𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍋 𑌮𑍋𑌘𑌜𑍍𑌞𑌾𑌨𑌾 𑌵𑌿𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌮𑌾𑌸𑍁𑌰𑍀𑌂 𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌮𑍋𑌹𑌿𑌨𑍀𑌂 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ॥ கஉ ॥

(கஉ) தயைமுதலிய நம் மேன்மைக்கீடாக நாம் மனிதனுய் அவதரித்திருக்கிறே மென்பதை யறிய வொட்டாமல் மறைக்கின்றதாய், அரக்கர் தன்மையும் அசுரர்தன்மையும் பொருந்தியதாயுள்ள இப்பிரகிருதிக்குள் ளகப்பட்ட இந்தப்பிராணிகள், தாங்கோரிய கோரிக்கை யொன்றும் நிறைவேறுமலும், எடுத்தகாரியமெதுவும் தலைக்கட்டாமலும், நினைத்ததெல்லாம் பழுதாய் (சராசரமாயுள்ள பதார்த்தங்களில் ஒன்றையும் உள்ளபடியே அறியமாட்டாமையால்)எல்லாம் வியர்த்தமாயிருப்பதாக நினைத்துக் கெட்டுப்போகிறுர்கள். [என்றல்-ஸர்வேசுவரனுன நம்மைப் பிறருக்குச் சமமாக வெண்ணுமவன் நம்விஷயத்தில் எந்தகாரியத்தைச் செய்தபோதிலும் பயன்படமாட்டாதென்று திருவுள்ளம்.]

𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌦𑍈𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌭𑌜𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌯𑌮𑌨𑌸𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ கங ॥

(கங) எவர்களானுல் தாம் செய்த புண்ணியவசத்தால் நம்மைச் சரணமடைந்து ஸகலபாவங்களையு மொழிதது தேயவீகமான ஸ்வபாவத்தை யடைந்திருக்கிறுர்களோ அநதமஹாத்மாக்கள், (வாக்குக்கும மனதுக்குமெட்டாத நாமகாம ஸ்வரூபஙகளோடுகூடிய)நாம் மிகவும் கருணையாலே ஸாதுக்களைக் காப்பதற்காக மனுஷியனுப் அவதரித்திருக்கிறே மென்பதையறிந்து இடைவிடாத சிந்தையோடு நம்மை ஸேவிக்கிறுர்கள். [என்றல் நம்மை விரும்பியவர்களாகையால நம்மை ஸேவிததாலல்லது தம்மனமும் ஆத்மாவும் மற்றுங்

http://acharya.org

கரணங்களும் தாளாமையாலே நம்மை ஸேவிப்பதே பெரும்பயனுகவிருக்கி ருர்களென்றபடி.]

ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஶ்ச த்ருடவ்ரதா:|
நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே ||௧௪||

(௧௪) மிகவும் (நம்மையே விரும்பியவராகையால்) நம்மைக் கீர்த்தனஞ் செய்தல் நம்மை யடைவதற்காக யத்தநஞ்செய்தல் நம்மடிகளில் முடிசாய்த்தல் முதலிய செயல்களைச் செய்யாதபோது ஒருக்ஷணமுந் தரிக்கமாட்டாதவர்களாய், (என்ருல்- நங்குணங்களைப் பிரகாசப்படுத்தும் நந்திருநாமங்களை நினைத்துச் சரீரம் புளகித்து, ஸந்தோஷாதிசயத்தால் கத்கதஸ்வரத்தோடு நாராயணா! கிருஷ்ணா! வாஸுதேவ! என்றிப்படி சொல்லிக்கொண்டும், அப்படியே அர்ச்சனை முதலிய நமது ஆராதநத்திலும் அதற்கனுகூலமாகத் திருக்கோயில் திருநந்தநவனம் முதலிய திருப்பணிகள் செய்வதிலும் திடமான உத்தேசத்தோடு யத்தநஞ் செய்துகொண்டும், பக்தியின் மிகுதியால் * அஷ்டாங்கமும் படியும்படி பூமியில் தூம்பு சேறு மணல் என்று ஒன்றையும் பாராமல் நம்மைக்கண்ட உடனே தடிபோல் விழுந்து தண்டன் ஸமர்ப்பிப்பவர்களாய்) எப்போதும் நம் ஸன்னிதியி லிருக்கவேண்டுமென்று அதற்காகத் தாமுள்ள நாளெல்லாம் நமக்கடிமை செய்வதே தொழிலாயிருப்பர்கள்.

ஜ்ஞாநயஜ்ஞேந சாப்யந்யே யஜந்தோ மாமுபாஸதே|
ஏகத்வேந ப்ருதக்த்வேந பஹுதா விஶ்வதோமுகம்||௧௫||

(௧௫) பின்னும் சில மஹாத்மாக்கள் முன்சொன்ன கீர்த்தநாதிகளோடுகூட ஞாநமென்கிற யக்ஞத்தாலும் உபாஸிக்கிருர்கள். எப்படி? அனேகவிதமாகவும் தனித்தனியாகவும் ஜகதாகாரமாகவும் ஸமஸ்தப் பிரகாரமாகவும் நாமிருப்பதாக நம்மை உபாஸிப்பர்கள். [அதாவது - எம்பெருமான் ஸ்ருஷ்டிக்குமுன்பு சூக்ஷ்மமாய் நாமரூபங்களில்லாமலிருந்த சேதநாசேதநங்களைச் சரீரமாய்த் தரித்திருந்து, ஒருகாலவிசேஷத்தில் "அனேகவிதமான நாமரூபங்களோடுகூடிய ஸ்தூலமான சேதநாசேதனங்களைச் சரீரமாய்த் தரிக்கக்கடவேன்" என்று ஸங்கல்பித்து, தானொருவனே தேவர் திர்யக்கு மனிதர் தாவரம் என்றுவிசித்திரமாயுள்ள உலகத்தையெல்லாம் சரீரமாகத்தரித்திருக்கிருனென்று நினைத்தவர்களாய் நம்மை உபாஸிக்கிருர்களென்றுதாத்பரியம்.]

(அ-கை.) மேற்சொல்லியபடி விசுவரூபமாகத் தாமே யிருப்பதாக வருளிச் செய்கிருர்.

அஹம் க்ரதுரஹம் யஜ்ஞ: ஸ்வதாஹமஹமௌஷதம்|
மந்த்ரோஹமஹமேவாஜ்யம் அஹமக்நிரஹம் ஹுதம்||௧௬||

---

* அஷ்டாங்கம்-புத்தி, அபிமாநம், கைகளிரண்டு, கால்களிரண்டு சிரஸ் ஸுஆகிய இவ்வெட்டும்.

http://acharya.org

(௧௬) அர்ச்சுந! ஜ்யோதிஷ்டோமம் முதலிய யக்ஞமும் மஹாயக்ஞமும் நாமே! பித்ருக்களை வளரச்செய்யும் 'ஸ்வதை' என்கிற அன்னமும் நாமே; தேவர்களுக்குப் பிரீதிகரமான ஹவிஸ்ஸும் நாமே; மந்திரமும் நாமே; வேள்விக்குரிய நெய்முதலிய திரவியங்களும் நாமே; ஆஹவநீயம் முதலான அக்கினியும் நாமே; ஹோமமும் நாமே.

𑌪𑌿𑌤𑌾𑌹𑌮𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍋 𑌮𑌾𑌤𑌾 𑌧𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃।
𑌵𑍇𑌦𑍍𑌯𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌮𑍋𑌂𑌕𑌾𑌰 𑌋𑌕𑍍𑌸𑌾𑌮𑌯𑌜𑍁𑌰𑍇𑌵 𑌚॥௧௭॥

(௧௭) சராசரரூபமான இவ்வுலகுக்கெல்லாம் தாயுந்தந்தையும் மற்றும் $ தாதாவும் பாட்டனும் நாமே. அனறியும் வேதங்களா லறியவேண்டியதான பரிசுத்தவஸ்து எதுவோ அதுவும் நாமே; வேதத்துக்கு முதற்காரணமான ஓங்காரமும் அதினின்றுமுண்டான இருக்கு யஜுஸ்ஸு ஸாமம் என்கிற வேதங்களும் எல்லாம் நாமே.

𑌗𑌤𑌿𑌰𑍍𑌭𑌰𑍍𑌤𑌾 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌨𑌿𑌵𑌾𑌸𑌃 𑌶𑌰𑌣𑌂 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍।
𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 𑌪𑍍𑌰𑌲𑌯𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌨𑌿𑌧𑌾𑌨𑌂 𑌬𑍀𑌜𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍॥௧௮॥

(௧௮) ஆங்காங்கு அடையப்படும் இடமான ஸ்வர்காதிகளும் நாமே; தரிப்பவனும் ஆள்பவனும் பிரத்யக்ஷமாய்ப் பார்ப்பவனும் உறைவிடமும் இஷ்டத்தைத்தந்து அநிஷ்டத்தை யொழிக்கும்புகலிடமும் இதஞ்செய்யுந் தோழனும் வஸ்துக்களின் உத்பத்தி லயஸ்தாநமும் உண்டாவதும் அழிவதும் அழிவற்றமுதற்காரணமும் நாமே?

𑌤𑌪𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑌹𑌂 𑌵𑌰𑍍𑌷𑌂 𑌨𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌮𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑌾𑌮𑌿 𑌚।
𑌅𑌮𑍃𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌶𑍍𑌚 𑌸𑌦𑌸𑌚𑍍𑌚𑌾𑌹𑌮𑌰𑍍𑌜𑍁𑌨॥௧௯॥

(௧௯) அக்கினியென்றும் சூரியனென்றும் நாமே தபிக்கிறோம்; கோடைமுதலிய காலங்களில் நாமே நீரை வரட்டுகிறோம்; அப்படியே மழை காலத்தில் மழையைப் பொழிகிறோம்; பிராணிகள் எதினால் மறிக்குமோ அதுவும், எதினால் பிழைக்குமோ அதுவும் நாமே; பலபேச்சென்ன? ¶ ஸத்தும் நாமே * அஸத்தும் நாமே. [என்றால் முக்காலத்திலுமுள்ள சேதநாசேதநங்களைச் சரீரமாயுடையனாய் அவ்வோ ரூபங்களாயிருப்பவன் நானேயென்றபடி.]

(அ-கை.) இவ்வாறு எம்பெருமானை அநுபவிப்பதே போகமென்றிருக்கும் ஞானிகளான மஹாத்மாக்களின் செயல்களைச் சொல்லி, அவர்கள் பெருமையையே பின்னும் பெருக்குவதற்காக இங்கே அஞ்ஞானிகளான காமியார்த்திகளின் செயலை யருளிச்செய்கிறார்.

$ தாதாவென்றால் இங்கே தாய்தந்தையரைத்தவிற மற்றப்படி உத்பத்திக்கு ஒத்தாசையானவர்களைச் சொல்லுகிறது.

¶ ஸத் - தத்காலத்திலுள்ளது. * அஸத் - இறந்தகாலத்திலிருந்ததும் இனி உண்டாகப்போகிறதும்.

http://acharya.org

த்ரைவித்யா மாம் ஸோமபா: பூதபாபா யஜ்ஞைரிஷ்ட்வா ஸ்வர்கதிம் ப்ரார்த்தயந்தே। தே புண்யமாஸாத்ய ஸுரேந்த்ரலோகமச்நந்தி திவ்யாந்திவி தேவபோகாந்॥ ௨௦॥

தே தம் புக்த்வா ஸ்வர்கலோகம் விசாலம் க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி। ஏவம் த்ரயீதர்மமநுப்ரபந்நா கதாகதம் காமகாமா லபந்தே॥ ௨௧॥

(௨௦-௨௧) கீழ்ச்சொன்னவர்களைப்போல வேதாந்தநிஷ்டையில் இல்லாமல் கேவலம் ருக்கு முதலிய மூன்றுவேதங்களில்மாத்திரம் நிஷ்டையுடையோருக்கு திரைவித்தியர்களென்று பெயர். அவர்கள் வேதத்தில் சொல்லப்படும் கேவலம் இந்திராதிகளை நோக்கிச்செய்யும் யாகங்களில் மிச்சமான * ஸோமக்கொடி ரஸத்தைக் குடித்து அதனால் ஸ்வர்க்கத்துக்கு விரோதமான ஸகல பாவங்களையுமொழித்து, கேவலம் இந்திராதிகளைமாத்திரம் உத்தேசித்துச்செய்த யக்ஞங்களைச் செய்துமுடித்து சுவர்க்கத்தைக்கோருகிறார்கள். பிறகு அப்படியே துயர் தீர்ந்த சுகமாயுள்ள அந்த சுவர்க்கலோகத்தையடைந்து, அங்குண்டான திவ்ய போகங்களை நுகர்ந்து, பிறகு அந்த நுகர்ச்சிக்கு ஹேதுவான புண்ணியங்கள் அழிந்தவாறே மறுபடியும் இம்மானிடலோகத்தில்வந்து சேருகிறார்கள். இப்படி இவர்கள் வேதாந்தத்தில் தேறின ஞானத்தையடையாமல் கேவலம் வேதத்தில்மாத்திரஞ் சொன்ன தருமங்களையநுட்டிப்பதனால் சுவர்க்காதிகளான அற்பபலன்களையடைந்து அடிக்கடி போக்கும் வரத்துமாயிருக்கிறார்கள்.

(அ-கை.) மஹாத்மாக்களோ ஒப்பில்லா வின்பமான நம் சிந்தையைச் செய்து ஈறிலின்பக்கடலான நம்மையடைந்து மறுபடி திரும்பாமலிருக்கிறார்களென்று அவர்களுக்கு விசேஷங்காட்டுகிறார்.

அநந்யாச்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே।
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்॥ ௨௨॥

(௨௨) யாதொரு பயனையும் நாடாமல், (நம்மை நினையாமற்போனால் தரிக்கமாட்டாமையால்) எந்தவேளையும் கேவலம் நம்மையே சிந்தித்திருக்கும் மஹாத்மாக்களோ, ஸமஸ்த கல்யாணகுணஸ்வரூபனாய் ஸகல ஐசுவரிய ஸம்பந்நனுமுள்ள நம்மைப் பலபடியாலும் பரவுகின்றார்கள். அப்படி நம்மோடு நித்தியமான நிலை தங்களுக்கு வேண்டுமென்று கோரின அவர்களுக்கு, நாம் (நம்முடன் சேர்க்கையாகிற) யோகத்தையும் (மீண்டுந் திரும்பாமையாகிற) க்ஷேமத்தையும் தருகிறோம்.

யேऽப்யந்யதேவதாபக்தா யஜந்தே ச்ரத்தயாந்விதா:।
தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம்॥ ௨௩॥

(௨௩) இந்திராதிகளான இதரதேவதைகளிடத்தில் பக்திபண்ணி அவர்களை யாராதிப்பவர்களும் (வாஸ்தவத்தில் அத்தேவர்கள் நமக்குச்சரீரமாகை

* ஸோமக்கொடி - ஆட்டாங்கொடி.

http://acharya.org

யால்) நம்மையே ஆராதிக்கிறார்கள், ஆனால் முறைதப்பி ஆராதிக்கிறார்கள் அதாவது-இந்திராதிதேவர்களைக் கர்மத்தாலாராதிக்கவேண்டிய முறை * வேதாந்தத்தில் எப்படிச் சொல்லப்படுகிறதோ அப்படி யாராதிப்பதில்லையென்றபடி.]

(அ-கை) ஆகையால் த்ரைவித்யர்கள் "கர்மங்களெல்லாம் இந்திராதிகளுக்கு அந்தராத்மாவான பரமபுருஷனுக்கு ஆராதனரூபங்கள், ஆராதிக்கத்தக்கவனும் அவனே" என்று அறிகிறதில்லை அதனால் அவர்கள் மிதமான பயன்களைப்பெற்றவர்களாய் நழுவிப்போகிற ஸ்வபாவமுள்ளவர்களாகிறார்கள் என்கிறார்.

அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச|
ந து மாமபிஜாநந்தி தத்த்வேநாதச்ச்யவந்தி தே||௨௪||

(௨௪) ஸகலமான யக்ஞங்களையும் புஜிப்பவன் நானேதான், அதற்குத்தக்கபடி பலன் கொடுப்பவனும் நானே, நம்மை யிப்படி யறியாமையால் இவர்கள் மறுபடி மறுபடி திரும்புதலை யடைகிறார்கள்.

(அ-கை) அஹோ! இதென்ன ஆச்சரியம் எல்லாரும் கர்மத்தைச்செய்யாநிற்க, அதில் நினைவு வேறுபாட்டால் சிலர் அற்பபலன்களையடைந்து தவறிப்போவதும், சிலர் நித்யாநந்தபதமான மோக்ஷத்தைப்பெற்று மீட்சியில்லாமற்போவதும் ஆயிருக்கிறார்களே என்கிறார்

யாந்தி தேவவ்ரதா தேவாந் பித்ரூந் யாந்தி பித்ருவ்ரதா:|
பூதாநி யாந்தி பூதேஜ்யா யாந்தி மத்யாஜிநோऽபி மாம்|| ௨௫||

(௨௫) இந்திராதிகளைக்குறித்துச் செய்கிறேனென்கிற ஸங்கல்பத்தோடு யக்ஞமுதலிய கர்மங்களைச் செய்யுமவர்கள் இந்திராதிகளை யடைகிறார்கள், பிதருக்களைக் கோரிச்செய்யுமவர்கள் பித்ருக்களை யடைகிறார்கள், யக்ஷராக்ஷஸ பிசாசாதிகளைக் குறித்துச் செய்யுமவர்கள் அந்தப் பூதங்களையே யடைகிறார்கள். எவர்கள் அந்த யக்ஞங்களையே "அந்த தேவபிதருபூதங்களுக்கு அந்தராத்மாவாயுள்ள பரமாத்மாவை யாராதிக்கக்கடவோம்" என்கிற ஸங்கல்பத்தோடு நம்மை ஆராதிக்கிறார்களோ அவர்கள் நம்மையே யடைகிறார்கள். [என்றால் —தேவர்களைப் பூஜிப்பவர்கள் அவர்களை யடைந்து அவர்களோடு இன்பத்தை யநுபவித்து அவர்கள் அழியும்போது தாமும் அழிகிறார்கள் நம்மைப் பூஜிப்பவரோ ஆதியந்தமில்லாமல் ஸர்வஜ்ஞனுடைய ஸத்திய ஸங்கல்பனுடைய எல்லையில் சீரான அநந்தகல்யாணகுணங்களுக்குப் பெ

---

* சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை: இத்யாதியாக விதிக்கிறவேதாந்த வாக்கியங்களில் அக்நிஹோத்திரம் முதலியகர்மங்கள் இந்திராதிகளுக்கு அந்தராத்மாவான பரமாத்மாவை உத்தேசித்துச் செய்யப்பட்டாலதான் அந்த இந்திராதிகளைக் குறித்துச் செய்ததாகுமென்று சொல்லப்படுகின்றன.

http://acharya.org

ருங்கடலாயுள்ள ஈறிலின்பமான நம்மை யடைந்து மீண்டுந் திரும்பாமலிருக்கிறார்களென்றபடி.]

𑌪𑌤𑍍𑌰𑌂 𑌪𑍁𑌷𑍍𑌪𑌂 𑌫𑌲𑌂 𑌤𑍋𑌯𑌂 𑌯𑍋 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 |
𑌤𑌦𑌹𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌹𑍃𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌮𑌿 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 || ௨௬ ||

(௨௬) எளிதில் ஸம்பாதிக்கக்கூடிய திருத்துழாய் முதலிய பத்திரத்தையோ புஷ்பத்தையோ பழத்தையோ தண்ணீரையோ எதையாகிலும் எவனாகிலும் பக்தியோடு நமக்கு ஸமர்ப்பித்தானாகில், (அப்படி ஸமர்ப்பிக்கிறதே புருஷார்த்தமென்கிற பரிசுத்தநினைவோடும் பக்தியோடுங்கூடி ஸமர்ப்பித்த) அதை, நாம் (ஸர்வேசுவரனாய் ஸகலலோகத்தையும் படைத்துக்காத்து அழித்து விளையாடுமவனாய் ஆசைப்பட்டதெல்லாம் அடைந்தவனாய் நினைத்ததைச்செய்து முடிக்கவல்லனாய் எல்லையில்லாத பெருமையும் எண்ணிக்கையுமற்ற கல்யாணகுணங்களுடையனாய் தனக்குத்தானே ஈறிலின்பமான ஸ்வஸ்வரூபத்தில் இன்புற்றவனாயிருந்தோமாகிலும்) கிடையாதது கிடைத்தாற்போல் மிகவும் ஆதரவோடு அங்கீகரிக்கிறோம். [இப்படியே மோக்ஷதர்மத்தில் 𑌯𑌾𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌰𑍇𑌕𑌾𑌨𑍍𑌤𑌗𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑌿𑌃 | 𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌦𑍇𑌵𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌵𑍈 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 || என்று சொல்லப்பட்டது.]

(அ-கை.) ஞானிகளான மஹாத்மாக்களின் பெருமை இவ்வண்ணமிருக்கையாலே அர்ச்சுந! நீயும் ஞானியாய் முன்சொன்னபக்தியின் மிகுதியாலே மிகவும் வணக்கத்தையடைந்து நம்மைப்பாடுதல் நமக்குப் பணிசெய்தல் நம்மை அர்ச்சித்தல் நம்மை வணங்குதல் முதலியவைகளை யெப்போதுஞ் செய்துவந்து லௌகிகமாயும் வைதிகமாயுமுள்ள நித்திய நைமித்திகமான ஸகல கர்மங்களையும் இந்தவிதஞ் செய்யென்கிறார்.

𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌯𑌤𑍍 |
𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 || ௨௭ ||

(௨௭) சரீரஸ்திதிக்காகச்செய்யும் லௌகிக கர்மமென்ன புசிக்கும் புசிப்பென்ன இவைகளையும், ஹோமம் தானம் தவம் முதலிய (நித்திய நைமித்திக) வைதிககர்மங்களையும் இவையெல்லாவற்றையும் நம்மிடத்தில் ஸமர்ப்பித்துவிடு. [என்றால்.—யாகம் தானம் முதலியவைகளால் ஆராதிக்கப்படுந் தேவர்களும் அந்த ஆராதனத்தைச்செய்து அதின் பலத்தைப் புசிக்கும் நீயும் நமக்கு ஆதீனமாயிருக்கையாலே யாவருக்கும் மேலான பதியாய் முதல் சாஸ்தாவாயுள்ள நம்மிடத்தில் (ஆராதித்துப்பயன் பெறுகின்ற) உன்னையும் (நீயாராதிக்குந்) தேவர்களையும் ஸமர்ப்பித்துவிடு [நீயும் அத்தேவர்களும் நமக்கடிமைசெய்யத தக்கவர்களென்பதை மிகவும் பிரீதியோடு நினைத்திருவென்றபடி.]

𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌫𑌲𑍈𑌰𑍇𑌵𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 𑌕𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌨𑍈𑌃 |
𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍋 𑌮𑌾𑌮𑍁𑌪𑍈𑌷𑍍𑌯𑌸𑌿 || ௨௮ ||

http://acharya.org

(௨௮) இப்படி ஸந்நியாஸ யோகத்தோடு கூடி அதாவது - உன்னை நமக்காளாகவும் கர்மத்தை நமக்கு ஆராதநமாகவும் நினைத்து, லௌகிக வைதிககர்மங்களைச் செய்துவந்தாயாகில் நல்வினைப்பயனும் தீவினைப்பயனுமான பழையகர்மமென்னுங் கட்டினின்று விடுபட்டு நம்மையே யடைந்து வாழ்வாய்.

(அ-கை.) நமக்கு லோகோத்திரமாய் இன்னமொரு ஸ்வபாவமுண்டு; அதைக் கேளென்கிறார்.

ஸமோऽஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோऽஸ்தி ந ப்ரிய:।
யே பஜந்தி து மாம் பக்த்யா மயி தே தேஷு சாப்யஹம்॥ ௨௯॥

(௨௯) தேவர் திரியக்கு மனிதர் தாவரம் என்று (சாதியாலும் உருவத்தாலும் ஸ்வபாவத்தாலும் அறிவினாலும்) மிகவும் ஈனமாயும் ஏற்றமாயுமுள்ள ஸகல பூதங்களிலும் யாரேயாகிலுமாம், நம்மை ஆஶ்ரயிக்கும் விஷயத்தில் "இன்னான் உயர்ந்தவ னின்னான் தாழ்ந்தவன்" என்று நமக்கில்லை; எல்லோருக்கும் நாம்ஸமமாயிருக்கிறோம். ஜாதிமுதலான காரணத்தைக்கொண்டு ஒருவனைப் பகைக்கவும் மாட்டோம்; ஒருவனை விரும்பவும்மாட்டோம். மற்றப்படி நம்பிரிவில் தரிக்கமாட்டாமல் நாமே கதியென்று எவர் நம்மைச் சேவிக்கிறார்களோ அவர்களை ஜாதி ஒழுக்கம் முதலியவைகளால் உயர்ந்தாலுந் தாழ்ந்தாலும் நமக்கு ஸமமான குணமுள்ளவர்போல நம்மிடத்திலேயே யிருத்துகிறோம். நாமும் அப்படியே நமக்கு மேற்பட்டவர்கள்போல் அவர்களிடத்தில் தானே யிருக்கிறோம்.

அபி சேத்ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக்।
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்வ்யவஸிதோ ஹி ஸ:॥ ௩௦॥

(௩௦) அதிலும் அந்தந்த ஜாதியில் பிறந்தவர்களுக்கு எதைச்செய்யும்படியாயும் எதை நீக்கும்படியாயும் சொல்லப்பட்டிருக்கிறதோ அதைக் கடந்தாலும், யாவனொருவன் முன்சொன்னபடி நம்மைச் சேவிப்பதே பயனாயிருக்கிறானோ அவன், ஸ்ரீவைஷ்ணவசிகாமணியாக நினைத்து வெகுமதிக்கத்தக்கவனே. [என்றால் முன்சொன்னவர்களுக்குச் சமமானவனென்றபடி.] அதெப்படியென்றால் - அவன் செய்யும் வியவசாய மப்படிப்பட்டது. [அதாவது- "ஸகல ஜகத்துக்குங் காரணமாய் பரப்பிரம்மமான ஸ்ரீமந்நாராயணனே சராசரங்களுக்கு மிறைவன், எனக்குத் தெய்வம், என்னுசான், என்தோழன், எனக்கினியன்" என்றிப்படி ஒருவராலும் அடையப்படாத விவசாயத்தை யடைந்து அதற்கேற்றபடி யாதொரு பயனையும் விரும்பாமல் நம்மையே கதியாய் அடைந்திருக்கிறான்.] [ஆகையால் இப்படிப்பட்ட விவசாயமும் அதற்கேற்ற செயலுமாயிருக்குமவன், அறப ஆசாரத்தைக் கைவிட்டானென்று அதற்காக அவனை ஆதரிக்காமலிருக்கப்போகாது; மற்றப்படி வெகுமதிக்கத்தக்கதென்று திருவுள்ளம்]

http://acharya.org

(அ-௧௧.) நல்லது 𑌨𑌾𑌵𑌿𑌰𑌤𑍋 𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑌾𑌨𑍍𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑍋 𑌨𑌾𑌸
𑌮𑌾𑌹𑌿𑌤𑌃| 𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍋 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍈𑌨𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍||
என்று சுருதி சொல்லுகிறபடி ஆசாரத்தில்தவறினால் மென்மேலும்இவன்எம்பெருமானைச் சேவிப்பதற்குத் தடையாகுமே யென்றால் அருளிச்செய்கிறார்.

𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌶𑍍𑌵𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑌿𑌂 𑌨𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿|
𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 𑌨 𑌮𑍇 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌤𑌿||௩௧||

(௩௧) நம்மிடத்தில் பிரீதியால் நம்மை யடைந்தவன் பாவத்தை யொழிக்கின்றமையால் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் வேரோடுகளைந்து *தர்மாத்மாவாய் விடுகிறான். [என்றால் யாதொருவிரோதமுமின்றி நம்மை யடையவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு அதனால் நம்மை யடைவதற்கு விரோதமான துராசாரத்தினின்று நீங்குகிறான்.] ஓ! குந்திபுத்திர! இவ்விஷயத்தில் நீயே பிரதிக்ஞை செய்யலாம். நம்பக்தியிலிழிந்தவன விரோதமான நடவடிக்கையைச்செய்துவந்த போதிலும் கெடுதியடையமாட்டான். மற்றப்படி பக்தியின் மஹிமையால் ஸகலமான விரோதிகளையும் போக்கடித்து எந்நாளும் துராசாரத்தினின்று விலகினவனாய் விரைவில் பரிபூர்ணபக்தியை யடைவான்.

𑌮𑌾𑌂 𑌹𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌯𑍇𑌽𑌪𑌿 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌪𑌾𑌪𑌯𑍋𑌨𑌯𑌃|
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍||
𑌕𑌿𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾 𑌭𑌕𑍍𑌤𑌾 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌯𑌸𑍍𑌤𑌥𑌾|
𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌸𑍁𑌖𑌂 𑌲𑍋𑌕𑌮𑌿𑌮𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌭𑌜𑌸𑍍𑌵 𑌮𑌾𑌮𑍍||௩௩||

(௩௨-௩௩) ஸ்திரீகள் வைசியர் சூத்திரர் இன்னுமிப்படி பாவஜன்மமெடுத்தவர் யாரேயாகிலும் நம்மை ஆச்ரயித்தாராகில் உத்தமமானகதியை யடைவார்கள். அப்படியிருக்க பிராம்மணரும் ராஜரிஷிகளுமான புண்ணியஜன்மாக்கள் பக்திபண்ணுவார்களாகில் கேட்கவேண்டுமோ? ஆகையால் ராஜரிஷியான நீ, அர்ச்சுந! அசாசுவதமாய் தாபத்திரயத்தால் மூடப்பட்டுச் சிறிதும் இன்பமற்றதாயிருக்கு மிவ்வுலகத்தி லிருந்தபடியே நம்மை ஸேவிக்கப்பாராய்.

(அ-கை.) பக்தியின் ஸ்வரூபத்தை யருளிச்செய்கிறார்.

𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀 𑌮𑌾𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁|
𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑍈𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌯𑌣𑌃||௩௪||

(௩௪) அர்ச்சுந! எப்பொழுதும் நம்மிடத்தில் தானே மனதைவை. அதாவது:—ஸர்வேசுவரனாய், ஸகல தோஷங்களுக்கு மெதிரான கல்யாணமே ஸ்வரூபமாய், ஸர்வக்ஞனாய், ஸத்தியஸங்கல்பனாய் ஸகலஜகத்துக்கும்

---

* இதைத்தான் 𑌯𑌤𑍋𑌽𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑌨𑌿𑌃𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸 𑌧𑌰𑍍𑌮𑌃 என்று ஆரம்பத்தில் தர்மசப்தத்தாலருளிச்செய்தார்.

http://acharya.org

முக்கியகாரணனாய், பரப்பிரம்மமாய், புருஷோத்தமனாய், தாமரையிதழ் போல் அமலங்களான திருக்கண்களுடையனாய், தெளிந்த நீருண்டமேகம் போன்றவனாய், ஆயிரம் சூரியர்கள் ஒரேதடவையாய்த் தோன்றினாற்போல் ஒளிர்கின்றவனாய்,லாவண்ணிய மென்னும் அமுதவெள்ளத்துக்குக் கடலாய் நீண்டு பருத்துள்ள நான்கு திருத்தோள்களுடையனாய்,மிகவும் பிரகாசமான பீதாம்பரமுடுத்தவனாய்,அதி நிர்மலமான கிரீடம், மகரகுண்டலம், ஹாரம், தோள்வளை, கடகம் முதலிய ஆபரணங்களா லலங்கரிக்கப்பட்டுள்ளவனாய், அபாரமான கருணை,தண்ணளி,அழகு,இனிமை, அடக்கம், வண்மை முதலிய குணங்களுக்குப்பெருங்கடலாய்,பிராணிகளிடத்தில் யாதொருவிசேஷமுமில் லாமலிருக்கச்செய்தேஅவையாவைக்கும் புகலிடமாய்,ஸர்வஸ்வாமியாய்இரு க்கும் நம்மிடத்தில் தைலத்தாரைபோலஇடைவிடாதசிந்தையைச்செய். அச் சிந்தையும் நம்மிடத்தில் மிகுந்தபிரீதியுடன் கூடியிருக்கட்டும்;அப்படி நம்மை அநுபவித்து, ஈறிலின்பமான அவ்வநுபவத்தால் நம்மை * ஆராதிப்பதே தொழிலாயிரு. [இதனால் நம்மை யநுபவிப்பதிலுண்டான பிரீதிக்குப்போக் குவீடாக நமது கைங்கரியமே தொழிலாகும்படி நம்மிடத்தில் மனம்வையெ ன்றதாயிற்று.] இப்படி நமக்கு எல்லாவடிமைகளும் செய்வதோடு அந்தரா த்மாவான நம்மிடத்தில் மிகுதியும் வணக்கத்தோடு கூடியிரு; அதுவுமின்றி நம்மைப்பிரிந்தால் தரிக்கமாட்டாதபடி நாமே கதியாயிரு; இப்படி எல்லையி லின்பப் பெருக்கான நம் அநுபவத்திற்கு யோக்கியமாம்படி மனதைத்திருத் தினாயாகில் பிறகு நம்மையேயடைவாய். [என்றால்-இப்படிப்பட்ட மனதைக் கொண்டு நம்மைத்தியாநஞ்செய்து நம்மை அநுபவித்து நம்மை யாராதித்து வணங்கி நாமே கதியா யிருந்தாயாகில் நம்மையே யடைவாயென்று தாத்ப ரியம்.]

[ஆகவிப்படி (சரீரத்தைக் காப்பதற்காகச்செய்யும்) லௌகிகக் கரும ங்களும், (நித்திய நைமித்திகங்களான) வைதிகக்கர்மங்களும் நம்பிரீதிக்காக (நமக்கடிமையாயிருக்கிற) உன்னைக்கொண்டுநம்மால்செய்விக்கப்பட்டனவெ ன்று நினைத்துச் செய்தவனாய், எப்போதும் நம்விஷயத்தில் கீர்த்தநம்முதலிய வைகளைச் செய்துகொண்டு, நம்மாலாளப்படு மிவ்வுலகுக்கெல்லாம் நமக்கா ட்பட்டிருக்கையே ஸ்வரூபமென்று நினைப்பதோடு மிகவும் இனியவைகளா னநங்குணங்களையும் சிந்தித்துக்கொண்டு நாடோறும் கீழ்ச்சொன்னபடி இவ் வுபாஸநத்தைச்செய்து வந்தாயாகில் நம்மையே யடைவாய் என்றருளிச் செ ய்தாராயிற்று.]

ஸ்ரீபகவத்ராமநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

---

* ஆராதநமாவது - பரிபூர்ணமான அடிமைத்தொழில். அதாவது ஔபசாரிகம், (அர்க்கியம், பாத்தியம்) ஸாம்ஸ்பர்சிகம், (திருமாலை முதலியன) ஆப்யவஹாரிகம், (அன்னம் தண்ணீர்முதலியன) இவைமுதலிய வெல்லாப்போகங்களையுங் கொடுத்தல்.

http://acharya.org

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பத்தாவது அத்யாயம்.

அவதாரிகை.

பக்தியோகம் ஸாங்கமாக விதிக்கப்பட்டது. இப்பொழுது பக்திஉண்டாவதற்காகவும் அது வளருவதற்காகவும்,எம்பெருமானுடைய நிகரற்ற ஐசுவரியம்முதலிய கல்யாண குணத்தொகையின் முடிவின்மையும், ஜகமெல்லாம் அவனுக்குச் சரீரமாயிருக்கையாலே அவனுருவாய் அவன் ஏவச்செல்லும்படியா யிருக்கின்றமையும் விஸ்தரிதகுச் சொல்லப்படுகின்றன.

ஶ்ரீபகவாநுவாச॥ பூய ஏவ மஹாபாஹோ ஶ்ருணு மே பரமம் வச: । யத்தேऽஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா ॥ க ॥

(க) பார்த்த ! நம் மஹிமையைக்கேட்டு ஸந்தோஷிக்கின்ற உனக்கு நம்விஷயத்தில் பக்திபிறந்து வளரும்படி உனக்கு இதஞ்செய்யவேண்டி மறுபடியும் நம்மஹிமையையே விளக்குவதான சிறந்ததொரு வார்த்தை சொல்லுகிறோம். இதைக் கவலையில்லாத மனதோடு கேள்.

ந மே விது: ஸுரகணா: ப்ரபவம் ந மஹர்ஷய: ।
அஹமாதிர்ஹி தேவாநாம் மஹர்ஷீணாம் ச ஸர்வஶ: ॥ உ ॥

(உ) தேவகணங்களும் மஹரிஷிகளும் புலன்களுக்கெட்டாத விஷயங்களைப் பார்க்கக் கூடியவராய் மிகுந்த அறிவுடையரா யிருந்தாராகிலும் நம்முடைய நாமம் கருமம் ஸ்வரூபம் ஸ்வபாவம் முதலியவைகளை அறியமாட்டார்கள். ஏனென்றால்:—அத்தேவாதிகளுக்கெல்லாம் நாம் ஸகலவிதத்திலும் ஆதியாயிருக்கிறோம் [என்றால:—நாம்ஆதியாகையால்அவாளுடைய தேவத்தன்மைக்கும் ரிஷித்தன்மைக்குங் காரணமான புண்ணியத்துக்குத் தக்கபடி அவாளுக்கு நாம் கொடுத்திருக்கு மறிவு கொஞ்சம்; அதைக்கொண்டு அவர்கள் நமது அளவற்ற ஸ்வரூபாதிகளை யுள்ளபடியே யெப்படி யறியக் கூடும்?என்றபடி]

(அ-கை.) இப்படி தேவாதிகளாலு மறியப்போகாத நம்மைஉள்ளபடி யறிந்தால் அது பக்தியுண்டாவதற்கு விரோதியான பாவத்தைபோக்குமென்கிறார்.

யோ மாமஜமநாதிம் ச வேத்தி லோகமஹேஶ்வரம் ।
அஸம்மூட: ஸ மர்த்யேஷு ஸர்வபாபை: ப்ரமுச்யதே ॥ ங ॥

(ங) நாம் பிறப்பிலியென்றும்(அதாவது:—விகாரப்படுகின்றஅசேதநமென்ன, அத்தோடு கலந்திருக்கையாகிற பிறப்புடன்கூடிய ஸம்ஸாரி சேதநங்களென்னஇவர்களைக்காட்டிலும்வேறுபட்டவனென்றும்) அநாதியென்றும் (அதாவது:—ஹேயமானப் பிரகிருதியோடு முற்காலத்தில் கலந்திருந்த மூக்

http://acharya.org

தாத்மாக்களைக் காட்டிலும் * வேறுபட்டவனென்றும்) லோகேசுவரர்களானப் பிரம்மாதிகளுக்குமீசுவரனென்றும் இப்படி $மூடத்தன்மையற்றுமனிதருக்குள் எவனொருவன் அறிகிறானோ அவன் நம் பக்திக்கு விரோதமான ஸகலபாவங்களினின்றும் விடுபடுவான்.

[என்றால்—'உலகத்தில் அரசன் மற்றமனிதர்களிலொருவனா யிருக்கச்செய்தே சில கர்மவிசேஷத்தால் அம்மனிதருக்கிறைவனாகிறான்; அப்படி தான் தேவேந்திரனும், அண்டாதிபதியும், அணிமைமுதலிய ஐசுவரியத்தையடைந்த மற்றவரும். ஆனால் இந்த லோகமஹேசுவரனோ' காரியம் காரணமென்றிரண்டு நிலைபொருந்திய அசேதநமென்ன, ஸம்ஸாரிகள் முக்தர்களெனகிற சேதநர்களென்ன, இவர்களெல்லாரையுங்காட்டில் அளவிறந்த கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாய் ஆள்வதே ஸ்வபாவனாய்வேறுபட்டிருக்கிறான்' என்றிப்படிஎவன் நம்மை யறிகிறானோ அவன் ஸகல பாவங்களினின்றும் விடுபடுகிறா னென்றபடி.]

(அ-கை.) இப்படி தம் ஸ்வபாவத்தைச் சிந்தை செய்வதனால் (பக்தியுண்டாகாமலிருக்கும்படி விரோதிக்கின்ற) பாவங்கள் நசிக்குமென்றும், விரோதமொழிந்ததாகில் தன்னடையே பக்தியுண்டாமென்றும் அருளிச்செய்து, தமது ஐசுவரியத்தையும் கல்யாண குணங்களின் விஸ்தாரத்தையும் சிந்திப்பதால் அந்தபக்தி விருத்தியடையுமென்பதை யருளுகிறார்.

> புத்திர்ஜ்ஞாநமஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் தம: சம:|
> ஸுகம் து:கம் பவோ(அ)பாவோ பயம் சாபயமேவ ச || ௪ ||
> அஹிம்ஸா ஸமதா துஷ்டிஸ்தபோ தாநம் யசோ(அ)யச: |
> பவந்தி பாவா பூதாநாம் மத்த ஏவ ப்ருதக்விதா: || ௫ ||

(௪-௫). புத்தி (நிரூபிக்கும்படி மனதுக்குண்டான திறமை) ஞானம் (சித்து அசித்துவிஷயமாய உண்டாகும் நிச்சயம்) அஸம்மோஹம் (சிப்பியைக்கண்டு இது வெள்ளியைச் சேர்ந்ததென்று பிரமித்தவன், பிறகுஇது வெள்ளியைச் சேர்ந்ததல்லவென்று அந்நினைவையொழிக்கை) பொறுமை (மனதிற்கு விகாரமுண்டாகும்படியான தருணத்தில் விகாரமடையாமலிருக்கை ஸத்தியம் (தான்கண்டது கண்டபடியே பிராணிகளுக்கு ¶ இதமாகப் பேசுதல்) தமம் புறக்கரணங்களை அநர்த்தங்களிற் செல்லவொட்டாமல் தகைவது) சமம் (அந்தக்கரணத்தை யப்படித்தகைவது) சுகம் (தனக்கு இஷ்டமாய் அநுபவிப்பது) துக்கம் (தனக்கு அநிஷ்டமாய் அநுபவிப்பது) பவம் (விருத்தி; அதாவது:—இஷ்டத்தை அநுபவிப்பதால் மனதுக்குண்டாகும கிளர்ச்சி) அபாவம் (அநிஷ்டத்தை யநுபவிப்பதால் மனதுக்குண்டாகும் இரக்கம்) பயம் (துக்கமுண்டாவதற்குக் காரணத்தைக் காண்பதால் வரும் துக்கம்) அபயம் (அந்த பயமில்லாமை) அஹிம்ஸை (பிறனுடைய துயரத்துக்கு ஆளாக்காமை) ஸமதை

---

* நிரவத்யம் என்று ஓதுகிறபடியேசுவரனுக்கு ஒருக்காலும் தோஷஸம்பந்தமில்லாமையாலே முக்தஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறுபாடுசொல்லுகிறது.

$ மூடத்தன்மை-எம்பெருமானை மற்றவர்களிலொருவனாக நினைக்கை.

¶ இங்கே மனதின் செயலைச்சொல்லுகிற விடமாதலால் இதவசனத்துக்குத் தகுந்த நினைவைச் சொல்லுகிறது.

http://acharya.org

(தான், தனது இஷ்டன், தன் விரோதி, யாவரிடத்திலும் நன்மைதீமைகளில் ஒரு மனதாயிருக்கை) துஷ்டி (ஆத்மாக்களையெல்லாங்கண்டு ஸந்தோஷித்தல) தவம் (சாஸ்திரத்தில் சொன்னபடி போகத்தைச் சுருக்குகையாகிற காயக்கிலேசம்) தானம் (தான் புசிப்பதைப் பிறருக்களித்தல்) கீர்த்தி (குணமுடையவனென்கிற பிரஸித்தி) அபகீர்த்தி (குணஹீநனென்கிற சொல்) இவைமுதலிய மனோவியாபாரங்களெல்லாம் பிராணிகளுக்கு நம் ஸங்கல்பத்தாலேயே உண்டாகின்றன.

(அ-கை.) பிராணிகளின் ஸிருஷ்டி ஸ்திதிகளுக்குப்பிரவர்த்தகர்களாயிருப்பவர்களின் பிரவர்த்தியும் நமது ஸங்கல்பாதீனந்தானென்கிறார்.

𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 𑌸𑌪𑍍𑌤 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍋 𑌮𑌨𑌵𑌸𑍍𑌤𑌥𑌾 |
𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌾 𑌮𑌾𑌨𑌸𑌾 𑌜𑌾𑌤𑌾 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍋𑌕 𑌇𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 || ௬ ||

(௬) அர்ச்சுந! சென்ற மனுவந்தரத்தில் பிருகுமுதலான ஸப்தரிஷிகள் நித்திய ஸிருஷ்டிக்காகப் பிரமனுடைய மனதிலுண்டானார்களே அவர்களும், நித்திய ஸ்திதியைப் பிரவிருத்திப்பிக்கைக்காக ஏற்பட்ட ஸாவர்ணிகரென்கிற நான்குமநுக்களும், நம்முடைய நினைவின்படி யிருப்பவர்கள். அப்படிப்பட்ட அவர்களுடைய ஸந்தாநமயமாயுள்ள இவ்வுலகத்திலிருக்கும் பிரஜைகள்யாவும் பிரளயம் உண்டாகிறவரையில் க்ஷணந்தோறும் ஸந்தாநத்தையுண்டுபண்ணி வளர்த்து வருகின்றன.

𑌏𑌤𑌾𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌂 𑌯𑍋𑌗𑌂 𑌚 𑌮𑌮 𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑌃 |
𑌸𑍋𑌽𑌵𑌿𑌕𑌮𑍍𑌪𑍇𑌨 𑌯𑍋𑌗𑍇𑌨 𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌸𑌂𑌶𑌯𑌃 || ௭ ||

(௭) இப்படி யெல்லாருடைய உத்பத்தியும் ஸ்திதியும் பிரவர்த்தியும் நமது ஸங்கல்பாதீநமென்கிற இந்த நம் ஐசுவரியத்தையும் நம்முடையகல்லியாணகுணங்களுடைமையையும் எவன் உள்ளபடியறிகிறானோ அவன் சலியாத பக்தியையடைந்து வாழ்வான். இதில்ஸம்சயமில்லை. [என்றால் - நமது ஐசுவரியத்தையும் கல்லியாண குணத்தையும் அறிந்தால் அது பக்தியோகத்தை வளர்க்குமென்கிற விஷயத்தை நீயே பார்க்கப்போகிறாயென்று திருவுள்ளம்.]

(அ-கை.) ஐசுவரியத்தை யறிந்தபின் பக்தியானது பக்குவமாகும்படியை யருளிச்செய்கிறார்.

𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 |
𑌇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌭𑌜𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌂 𑌬𑍁𑌧𑌾 𑌭𑌾𑌵𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 || ௮ ||

(௮) சித்தும் அசித்துமாய் விசித்திரமாயுள்ள இவ்வுலகத்துக்கெல்லாம் நானே உத்பத்தி காரணமென்றும் இவை நம்மாலேயே பிரவர்த்திக்கின்றனவென்று மானபின்பு நிகரற்ற ஐசுவரியமும், ஸௌந்தரியம் முதலிய கல்லியாண குணத்தொகையும், நமக்கு ஸஹஜந்தானென்று நினைத்து ஞானிகளாயிருப்பார் நலமான தாத்பரியத்தோடுகூடி ஸகல கல்லியாண குணநிதியான நம்மை ஸேவிக்கிறார்கள்.

(அ-கை.) ஸேவிக்கும்படியை யருளிச்செய்கிறார்.

𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾 𑌮𑌦𑍍𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍 |
𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌰𑌮𑌨𑍍𑌤𑌿 𑌚 || ௯ ||

(௯) சித்தத்தை நமக்கென்றே பறிகொடுத்து, அப்படியே நம்மைப் பிரிந்தால் தரிக்கமாட்டாமல் பிராணனையும் நம்மாதீநம்செய்து, தாந்தாம

http://acharya.org

அநுபவித்த நம்முடைய குணங்களையெடுத்து ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு அப்படியே நாம் செய்த திவ்விய சேஷ்டிதங்களையு மெடுத்துப் பேசிக்கொண்டு ஸந்தோஷித்து ஆநந்திக்கிறார்கள். [சொல்லும்போது இனியதாய் அதுவே ப்ரயோஜநமாயிருக்கையாலே சொல்லுமவர்களும், கேட்டபோது செவிக்கினியதாயிருக்கையாலே கேட்பவர்களும், ஸந்தோஷிக்கிறார்களென்றபடி.]

தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம் |
ததாமி புத்தியோகம் தம் யேந மாமுபயாந்தி தே || ௧௦ ||

(௧௦) அப்படிப்பட்ட அவர்கள் நம்மோடு எப்போதுஞ் சேர்ந்திருக்கவேண்டுமென்று நம்மைச் சேவிக்கிறபடியால அவர்களுக்கு அப்படிப்பட்ட புத்தி விசேஷத்தை (அதாவது பக்திரூபமாய் பக்குவமான ஞாந விசேஷத்தை) நாம் பிரீதியுடன் கொடுக்கிறோம். அதைக்கொண்டு அவர்கள் நம்மையடைகிறார்கள்.

தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தம: |
நாசயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா || ௧௧ ||

(௧௧) மேலும் அவர்களை அநுக்கிரஹிப்பதற்காகவே நாம் அவர்களுள்ளத்திலிருந்து நம்முடைய கல்லியாணகுணங்களைப் பிரகாசப்படுத்திக்கொண்டு, அவர்கள் நம்மை யறிவதென்கிற பிரகாசமான தீபத்தாலே (அக்ஞாநத்தாலுண்டானதாய் நம்மை யொழிந்த மற்ற விஷயங்களைக்கண்டால் விடமாட்டாததாய் முன்பழகியதாயுள்ள) கலக்கத்தைப் போக்கடிக்கிறோம்.

(அ-கை.) இப்படி ஸகல வஸ்துக்களிலும் வேறுபட்டு எம்பெருமானுக்கே உரியனவாய் கேட்பவர்களின் செவிக்கு மிகவு மினியவையாயுள்ள திருக்கல்லியாணகுணங்களையும் அவனுடைய ஐசுவரியச்சிறப்பையுங் கேட்டு அர்ச்சுநன் அதை விஸ்தாரமாய்க் கேட்கவேண்டுமென்கிற அவாவினால் பிரசினம் பண்ணுகிறான்.

அர்ஜுந உவாச || பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவாந் ||

(௧௨) அஹோ ஸ்வாமி! * பரம்ப்ரஹ்ம என்றும், † பரம்தாம எ

---

*பரம்ப்ரஹ்ம என்கிற சுருதிகள் — யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம || ப்ரஹ்மவிதாப்நோதி பரம் || ஸ யோ ஹ வை தத்பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி || இத்யாதிகள்.

† பரம்தாம (அதாவது பரஞ்ஜ்யோதிஸ்) என்கிற சுருதிகளோ! அத யதத: பரோ திவோ ஜ்யோதிர்தீப்யதே || பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே || தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி: || இத்யாதிகள்.

http://acharya.org

ன்றும், § பாவநம் பவித்ரம் என்றும் சுருதிகள் யாரைச் சொல்லுகின்றனவோ அந்த பகவான் தேவரீரன்றோ?

புருஷம் ஶாஶ்வதம் திவ்யம் ஆதிதேவமஜம் விபும்||௧௨||
ஆஹுஸ்த்வாம்ருஷயஸ்ஸர்வே தேவர்ஷிர்நாரதஸ்ததா|
அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயம் சைவ ப்ரவீஷி மே|| ௧௩||

(௧௨-௧௩) பரமான தத்துவம் இதென்றும் அவரமான தத்துவம் இதென்றும் உள்ளபடியே யறியவல்லரானவெல்லாரிஷிகளும், தேவரீரைத் திவ்ய புருஷனென்றும் ஆதிதேவனென்றும் பிறப்பில்லாதவனென்றும் விபுவாய் எங்கும் பரந்தவனென்றுஞ் சொல்லுகிறார்கள். அப்படியே தேவரிஷியான நாரதரும் அஸிதரும் தேவலரும் வியாஸரும் ¶ சொன்னார்கள். தேவரீரும் அப்படியே § அருளிச்செய்தது.

---

§ பாவநம் பவித்ரம் (அதாவது நினைப்பவர்களின் பாவத்தைக் கிட்டவொட்டாமற் போக்கடிப்பது.) இப்படி சொல்லுகிறசுருதிகளோ! யதா புஷ்கரபலாஶ ஆபோ ந ஶ்லிஷ்யந்த ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே|| தத்யதேஷீகாதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேதைவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே இத்தியாதிகள். நாராயணபரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர:

¶ ஏஷ நாராயண: ஶ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந: | நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்|| புண்யா த்வாரவதீ தத்ர யத்ராஸ்தே மதுஸூதந:| ஸாக்ஷாத்தேவ: புராணோऽஸௌ ஸ ஹி தர்ம: ஸநாதந: || யே ச வேதவிதோ விப்ரா யே சாத்யாத்மவிதோ ஜநா:| தே வதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்|| பவித்ராணாம் ஹி கோவிந்த: பவித்ரம் பரமுச்யதே| புண்யாநாமபி புண்யோऽஸௌ மங்கலாநாம் ச மங்கலம்|| த்ரைலோக்யம் புண்டரீகாக்ஷோ தேவதேவ: ஸநாதந:| ஆஸ்தே ஹரிரசிந்த்யாத்மா தத்ரைவ மதுஸூதந:| என்றும், அப்படியே யத்ர நாராயணோ தேவ: பரமாத்மா ஸநாதந:| தத்ர க்ருத்ஸ்நம் ஜகத்பார்த தீர்த்தாந்யாயதநாநி ச|| தத்புண்யம் தத்பரம் ப்ரஹ்ம தத்தீர்த்தம் தத்தபோவநம்| தத்ர தேவர்ஷயஸ்ஸித்தாஸ்ஸர்வே சைவ தபோதநா:|| ஆதிதேவோ மஹாயோகீ யத்ராஸ்தே மதுஸூதந:| புண்யாநாமபி தத்புண்யம் அத்ர தே ஸம்ஶயோ மாபூத்|| க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய: | க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூதமிதம் விஶ்வம் சராசரம் என்றும் ருஷிகள் சொன்னார்கள்.

§ பூமிராபோऽநலோ வாயு: கம் மநோ புத்திரேவ ச| அஹங்காரஇதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா| என்று தொடங்கி அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்ததே என்றுமளவாகக் கண்ணனுமருளிச்செய்தார்.

http://acharya.org

𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌤𑌦𑍃𑌤𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌯𑌨𑍍𑌮𑌾𑌂 𑌵𑌦𑌸𑌿 𑌕𑍇𑌶𑌵 |
𑌨 𑌹𑌿 𑌤𑍇 𑌭𑌗𑌵𑌨𑍍𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌦𑍇𑌵𑌾 𑌨 𑌦𑌾𑌨𑌵𑌾𑌃 ||கச||

(கச) இப்பொழுது அடியேனைக்குறித்து அருளிச்செய்த தேவரீருடைய கல்யாணகுணங்களும் ஐசுவரியங்களும் மற்றுமெல்லாம் வாஸ்தவமே (யல்லது புகழுக்காகச் சொன்னதல்ல)என்றுநினைக்கிறேன்; ஆகையால், ஞாநம் சக்தி பலம் ஐசுவரியம் வீரியம் தேஜஸ்ஸு இவைகளுக்கெல்லாம் நிதியாகிய ஓ பகவானே! தேவரீருடைய வியக்தியை (அதாவது வைபவப் பிரகாரத்தை) தேவர்களோ ராக்ஷஸர்களோ ஒருவருமறியார்கள்; [என்றால்-அவர்களுடைய ஞாநம் இவ்வளவென்கிற எல்லைக்குள்ளகப்பட்டமையால் அறியார்களென்றபடி.]

𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑍇𑌤𑍍𑌥 𑌤𑍍𑌵𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 |
𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌨 𑌭𑍂𑌤𑍇𑌶 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑍇 || கரு ||

(கரு) ஹே புருஷோத்தம! ஸகலப்ராணிகளையு முண்டுபண்ணுகிற காரணப்பொருளே! ஸகல பூதங்களையும் ஆள்பவனே! தேவர்களுக்கெல்லாம் தேவனே! (அதாவது ஸௌந்தரியம் முதலிய கல்யாணகுணங்களில் தேவர்கள், மனுஷிய மிருக பக்ஷியாதிகளை விஞ்சியிருப்பதுபோல் அத்தேவர்களையெல்லாம் அந்தந்த குணங்களாலே விஞ்சியிருப்பவனே) ஓ ஜகதீச! தேவரீருடைய பெருமையைத் தேவரீர் அறியவேண்டுமேயல்லது மற்றவராலாகாது.

𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑍍𑌯𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌭𑍂𑌤𑌯𑌃 |
𑌯𑌾𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌭𑌿𑌰𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌤𑌿𑌷𑍍𑌠𑌸𑌿 || கசு

(கசு) ஆகையால் திவ்யங்களாய் தேவரீருக்கே உரியவைகளாயுள்ள விபூதிகளைத் தேவரீரே யருளிச்செய்யவேண்டும்: அதாவது அநந்தமாயுள்ள எவ்வித ஆளுகைகளுடன்கூடி இவ்வுலகங்களை வியாபித்துக்கொண்டு ஆளுகிறீரோ அவைகளை யருளிச்செய்யவேண்டும்.

𑌕𑌥𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑌹𑌂 𑌯𑍋𑌗𑌿𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌰𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 |
𑌕𑍇𑌷𑍁 𑌕𑍇𑌷𑍁 𑌚 𑌭𑌾𑌵𑍇𑌷𑍁 𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌽𑌸𑌿 𑌭𑌗𑌵𑌨𑍍𑌮𑌯𑌾 ||கஎ||

(கஎ) ஓ பகவானே! அடியேன் பக்தியோக நிஷ்டனாயிருந்து எப்போதும் சிந்திக்க யத்தனித்தேனாகில் தேவரீரை ஸகல கல்யாணகுண பரிபூர்ணராக எப்படி யறிவேன். முன்சொன்ன புத்தி ஞாநம் முதலிய பாவங்களைக் காட்டிலும் இன்னு மெந்தெந்த பாவங்களிலிருப்பவராகத் தேவரீரைச்சிந்திக்கலாம்.

𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌯𑍋𑌗𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌂 𑌚 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 |
𑌭𑍂𑌯𑌃 𑌕𑌥𑌯 𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌹𑌿 𑌶𑍃𑌣𑍍𑌵𑌤𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌮𑍇𑌽𑌮𑍃𑌤𑌮𑍍 ||கஅ||

(கஅ) 𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 என்று சுருக்கமாயருளிச்செய்த சிருஷ்டிக்குந்திறமை முதலிய யோகத்தையும் விபூதியென்கிற ஆளுகையையும் மறுபடி விஸ்தரித்து அருளிச்செய்யவேண்டும். தேவரீர் அருளிச்செய்கின்ற தேவர் மஹிமையைக் கேட்கின்ற அடியே

http://acharya.org

னுக்குத் திருப்தி யுண்டாகவில்லையன்றோ! [என்றால் அடியேனுக்குண்டான திருப்தி தேவரீருக்கே தெரியுமென்று அபிப்பிராயம்.]

(அ-கை.) இப்படி சொன்ன அர்ச்சுநன் வார்த்தையைக்கேட்டு பகவானருளிச்செய்கிறார்.

ஸ்ரீபகவாநுவாச || ஹந்த தே கதயிஷ்யாமி திவ்யா ஹ்யாத்மவிபூதய꞉ | ப்ராதாந்யத꞉ குருஶ்ரேஷ்ட நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே ||

(க௯) நல்லதப்பா குருசிகாமணியே! அப்படியே சுபமாயுள்ள நம் § விபூதிகளில் சிறப்புற்றவைகளைச் சொல்லுகிறோம். விஸ்தரித்துச் சொல்வதென்றால் அளவில்லாமையாலே சொல்வதுங் கேட்பதும் ஸாத்தியமன்று.

(அ-கை.) அதில் ஸகல ப்ராணிகளையும் பிரவர்த்திப்பிக்கிறதென்கிற இந்த ஆளுகையை ஈசுவரன் ஆத்மாவாய் நின்று செய்கிறானென்கிற இவ்வர்த்தந்தான், யோகசப்தத்தால் சொல்லப்பட்ட படைக்குந்தன்மை காக்குந்தன்மை அழிக்குந்தன்மையென்று மூவகையென்று தெளிவாய் அருளிச்செய்கிறார்.

அஹமாத்மா குடாகேஶ ஸர்வபூதாஶயஸ்தித꞉ |
அஹமாதிஶ்ச மத்யம் ச பூதாநாமந்த ஏவ ச ||உ௦||

(உ௦) ஓ அர்ச்சுந! நான் எனக்குச் சரீரமாயுள்ள ஸகலப்பிராணிகளினுள்ளத்திலும் * ஆத்மாவாயிருக்கிறேன். இப்படிப்பட்ட நானே அவைகளுக்கு ஆதியும் மத்தியமும் அந்தமும் - [அஃதாவது உத்பத்தி ஸ்திதி லயங்களுக்கு நானே காரணமென்றபடி.]

---

§ விபூதியாவது ஆளப்படுவது. எப்படியெனில்-பிராணிகளின் புத்தி முதல் தனித்தனியாயுள்ள பாவங்களெல்லாம் தம்மிடத்தினின்றுமேயுண்டாகின்றனவென்று சொல்லி, பிறகு இந்த என்விபூதியையும் யோகத்தையும் உள்ளபடியே எவன் அறிகிறானோ என்று சொல்லுகையாலே. அப்படியேயங்கு யோகசப்தத்தால் சொன்னது சிருஷ்டிக்குந்தன்மை முதலியனவென்றும் விபூதிசப்தத்தால் சொன்னது அவனால் ஏவப்படுந்தன்மையென்றும் மறுபடி அஹம் ஸர்வஸ்ய இத்யாதியாற் சொல்லப்பட்டது.

* ஆத்மாவாவது - சரீரத்தை ஸகல விதத்தாலுந் தரிப்பதாய் ஆளுவதாய் சரீரத்துக்குப் பதியாயிருக்குமது. இப்படியே மேலே ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட꞉ மத்த꞉ ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச என்றும், ஈஶ்வர꞉ ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶே(அ)ர்ஜுந திஷ்டதி | ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா என்றும் சொல்லப்போகிறார். ஶ்ருதியிலும் யஸ்ஸர்வேஷு பூதேஷு திஷ்டந் ஸர்வேப்யோ பூதேப்யோ(அ)ந்தர꞉ யம் ஸர்வாணி பூதாநி ந விது꞉ யஸ்ய ஸர்வாணி பூதாநி ஶரீரம் ய꞉ ஸர்வாணி பூதாந்யந்தரோ யமயதி ஏஷ த ஆத்மாந்தர்யாம்யம்ருத꞉ என்றும் ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோ(அ)ந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத꞉ என்றுஞ் சொல்லப்படுகின்றது.

http://acharya.org

(அ-கை.) இப்படி எம்பெருமான் தம்முடைய ஆஜ்ஞைக்குட்பட்ட எல்லாவற்றுள்ளுந் தாம் ஆத்மாவா யிருக்கிறதாகச் சொல்லி அதனால் அந்தந்த வஸ்துக்களின்பெயரான சொற்களாலே தம்மைச் சொல்லலாமென்பதற்கு * காரணங்காட்டி இனி தம்மாலாளப்பட்ட அவ்வவைகளோடு தம்மைக் கூட்டி அந்தந்த சொற்களாலே சொல்லத் தொடங்குகிறார்.

ஆதித்யாநாமஹம் விஷ்ணுர் ஜ்யோதிஷாம் ரவிரம்ஶுமாந்|
மரீசிர்மருதாமஸ்மி நக்ஷத்ராணாமஹம் ஶஶீ ||௨௧||

(௨௧) ஆதித்தியர்கள் பன்னிருவரில் பன்னிரண்டாவதாகச் சொல்லப்பட்ட விஷ்ணுவென்பவர் நான். லோகத்தில் சோதியுள்ளவைகளில் (ஆதித்தியகணத்தைச் சேர்ந்த) இரவி நான். நக்ஷத்திரங்களில் அவைகளை யாள்கின்றசந்திரன் நான்.

வேதாநாம் ஸாமவேதோ஽ஸ்மி தேவாநாமஸ்மி வாஸவ꞉|
இந்த்ரியாணாம் மநஶ்சாஸ்மி பூ⁴தாநாமஸ்மி சேதநா ||௨௨||

(௨௨) இருக்கு யஜுஸ் ஸாமம் அதர்வணமென்கிற வேதங்களுள் சிறந்ததான ஸாமவேதம் நான். தேவர்களுக்குள் இந்திரன் நான். பதினொரு இந்திரியங்களுக்குள் சிறந்ததான மனது நான். பூதங்களெல்லாவற்றிற்கும் அறிவு நான்.

ருத்³ராணாம் ஶங்கரஶ்சாஸ்மி வித்தேஶோ யக்ஷரக்ஷஸாம்|
வஸூநாம் பாவகஶ்சாஸ்மி மேரு꞉ ஶிக²ரிணாமஹம் ||௨௩||

(௨௩) உருத்திரர்கள் பதினொருவரில் சங்கரன் நான். யக்ஷராக்ஷஸருக்குள் குபேரன் நான். அஷ்டவஸுக்களுக்குள் பாவகன் நான். கொடிமுடிகள் கூடிய பர்வதங்களுக்குள் மேருபர்வதம் நான்.

புரோத⁴ஸாம் ச முக்²யம் மாம் வித்³தி⁴ பார்த² ப்³ருஹஸ்பதிம்|
ஸேநாநீநாமஹம் ஸ்கந்த³꞉ ஸரஸாமஸ்மி ஸாக³ர꞉ ||௨௪||

---

* பகவான் ஸர்வபூதங்களுக்கும் ஆத்மாவா யிருந்தால்மாத்திரந்தான் ஸகல சப்தங்களும் அவனையே பொருளாகக்கொண்டு முடியும். எதுபோலெனில்-மனுஷியன் பக்ஷி விருக்ஷம் முதலிய வெல்லாச்சொற்களும் சரீரங்களைச்சொல்லாநிற்கச்செய்தே அந்தந்த ஆத்மாவைக்கொண்டு முடிகின்றனவல்லவா? அதுபோல் ஈசுவரன் ஆத்மாவா யிருக்கையானது எல்லாச்சொல்லுக்கும்பொருளாவதற்குக் காரணமென்றறிக. இவ்விஷயம் ந தத³ஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூ⁴தம் சராசரம் என்று தம்மையின்றி யொன்றுமில்லையென்று மேலே சொல்லுகையாலுந் தெரியவருகிறது. தம்மையின்றி யொன்றுமில்லையென்றால் எல்லாந் தம்மாலாளப்பட்டிருக்கை. இவ்விஷயம் அஹமாத்மா கு³டா³கேஶ ஸர்வபூ⁴தாஶயஸ்தி²த꞉ என்று தொடங்கும்போது சொல்லப்பட்டது.

http://acharya.org

𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌭𑍃𑌗𑍁𑌰𑌹𑌂 𑌗𑌿𑌰𑌾𑌮𑌸𑍍𑌮𑍍𑌯𑍇𑌕𑌮𑌕𑍍𑌷𑌰𑌮𑍍 |
𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌜𑌪𑌯𑌜𑍍𑌞𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑌿𑌮𑌾𑌲𑌯𑌃 || ௨௫ ||

(௨௪-௨௫) புரோஹிதருக்குள் முக்கியரான பிருஹஸ்பதி நான். ஸேநாபதிகளுக்குள் கந்தன் யான். குளங்களுக்குள் கடல் யான். மரீசிமுதலான மஹாரிஷிகளுக்குள் பிருகுமஹாரிஷி யான். பொருளைக் குறிக்குஞ் சொற்களுள் பிரணவமென்னு மொற்றையெழுத்து நான். யக்ஞங்களுக்குள் சிறந்த ஜபயக்ஞம் நான். பருப்பதமாயுள்ளவைகளில் இமயமலை நான்.

𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍃𑌕𑍍𑌷𑌾𑌣𑌾𑌂 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌚 𑌨𑌾𑌰𑌦𑌃 |
𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌰𑌥𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌕𑌪𑌿𑌲𑍋 𑌮𑍁𑌨𑌿𑌃 || ௨௬ ||
𑌉𑌚𑍍𑌚𑍈𑌃𑌶𑍍𑌰𑌵𑌸𑌮𑌶𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑌾𑌮𑌮𑍃𑌤𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 |
𑌐𑌰𑌾𑌵𑌤𑌂 𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌨𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪𑌮𑍍 || ௨௭ ||

(௨௬-௨௭) விருக்ஷங்களுக்குள் பூஜ்யமான அரசமரம் நான். தேவரிஷிகளுக்குள் நாரதன் நான். கந்தர்வர்களுக்குள் சித்திரரதன் யான். ஸித்தர்களுக்குள் கபிலமுனியான், குதிரைகளுக்குள் பாற்கடலிற்பிறந்த உச்சைச்சிரவமென்னு மிந்திரன் குதிரை நான். திக்கஜங்களுள் ஐராவதம் நான். மனிதருக்குள் அரசன் யான்.

𑌆𑌯𑍁𑌧𑌾𑌨𑌾𑌮𑌹𑌂 𑌵𑌜𑍍𑌰𑌂 𑌧𑍇𑌨𑍂𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌕𑌾𑌮𑌧𑍁𑌕𑍍 |
𑌪𑍍𑌰𑌜𑌨𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌃 𑌸𑌰𑍍𑌪𑌾𑌣𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌵𑌾𑌸𑍁𑌕𑌿𑌃 || ௨௮ ||
𑌅𑌨𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌨𑌾𑌗𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍁𑌣𑍋 𑌯𑌾𑌦𑌸𑌾𑌮𑌹𑌮𑍍 |
𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌮𑌰𑍍𑌯𑌮𑌾 𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌯𑌮𑌃 𑌸𑌂𑌯𑌮𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 || ௨௯ ||

(௨௮-௨௯) ஸாதாரணமான ஆயுதங்களுக்குள் யான் வஜ்ராயுதம். சுறக்கும் பசுக்களுக்குள் காமதேநுவென்னும் பசு யான். பிறப்புக்குக் காரணனான மன்மதனும் நான். ஒருதலைப்பாம்புகளுக்குள் வாசுகி நான். பலதலைப்பாம்புகளுள் யான் ஆதிசேஷன். ஜலசரங்களில் நான் வருணன். பித்ருக்களுக்குள் அரியமாவென்பவர் நான். தண்டிப்பவருள் வைவஸ்வதனென்னும் யமன் நான்.

𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌦𑍈𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌕𑌾𑌲𑌃 𑌕𑌲𑌯𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 |
𑌮𑍃𑌗𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌮𑍃𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌽𑌹𑌂 𑌵𑍈𑌨𑌤𑍇𑌯𑌶𑍍𑌚 𑌪𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍍 || ௩0 ||
𑌪𑌵𑌨𑌃 𑌪𑌵𑌤𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌰𑌾𑌮𑌃 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌭𑍃𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 |
𑌝𑌷𑌾𑌣𑌾𑌂 𑌮𑌕𑌰𑌶𑍍𑌚𑌾𑌸𑍍𑌮𑌿 𑌸𑍍𑌰𑍋𑌤𑌸𑌾𑌮𑌸𑍍𑌮𑌿 𑌜𑌾𑌹𑍍𑌨𑌵𑍀 || ௩௧ ||

(௩0-௩௧) தைத்தியருக்குள் யான் பிரஹ்லாதன். அநர்த்தந்தேடுமவர்களுள் மிருத்யுநான், மிருகங்களுக்குள் யான் ஸிம்மம்; பக்ஷிகளுக்குள் யான் கருடன்; செல்கையே ஸ்வபாவமானவைகளுக்குள் யான் வாயு. அஸ்திரசஸ்திரங்களில் தேர்ந்தவர்களுக்குள் யான் இராமன். மத்ஸ்யங்களுக்குள் யான் முதலை. நதிகளுக்குள் யான் கங்கை.

http://acharya.org

ஸர்காணாமாதிரந்தஶ்ச மத்யம் சைவாஹமர்ஜுந |
அத்யாத்மவித்யா வித்யாநாம் வாத: ப்ரவததாமஹம் ||௩௨||
அக்ஷராணாமகாரோஸ்மி த்வந்த்வ: ஸாமாஸிகஸ்ய ச |
அஹமேவாக்ஷய: காலோ தாதாஹம் விஶ்வதோமுக: ||௩௩||

(௩௨-௩௩) அர்ச்சுந! சிருஷ்டிக்கப்படும் பதார்த்தங்களின் ஆதியும் மத்தியமும் அந்தமும் யானே. [அதாவது ஸகலப்பிராணிகளையும் ஆங்காங்கு சிருஷ்டிக்குமவர்களும் அப்படியே ஆங்காங்கு பரிபாலிக்குமவர்களும் நாசம் செய்யுமவர்களும் யானே என்றபடி.] வித்தைகளுக்குள் யான் வேதாந்தவித்தை; ஜல்பம் விதண்டை முதலிய வாதம் செய்வோர்களில் தத்வநிர்ணயம் செய்யத்தொடங்கிய வாதம் நான்; அக்ஷரங்களின் நடுவே அகாரோவை ஸர்வாவாக் என்று சுருதியிற் சொன்னபடி எல்லாவெழுத்துகளுக்கும் முதற்காரணமான அகாரம் யான். ஸமாஸங்களுக்குள் யான் த்வந்த்வ ஸமாஸம். கலைமுகூர்த்தம் முதலாயுள்ள அழிவற்ற காலமும் யானே. ஸகலப்பிராணிகளையும் சிருஷ்டிக்கும் நான்முகனும் யானே.

ம்ருத்யு: ஸர்வஹரஶ்சாஹமுத்பவஶ்ச பவிஷ்யதாம் |
கீர்த்தி: ஶ்ரீர்வாக்ச நாரீணாம் ஸ்ம்ருதிர்மேதா த்ருதி: க்ஷமா ||௩௪||
ப்ருஹத்ஸாம ததா ஸாம்நாம் காயத்ரீ சந்தஸாமஹம் |
மாஸாநாம் மார்கஶீர்ஷோஹம் ருதூநாம் குஸுமாகர: ||௩௫||

(௩௪-௩௫) ஸகலப்பிராணிகளையும் ஸம்ஹரிக்கின்ற இயமனும் யானே. இனி உண்டாகும் பதார்த்தங்களுக்கெல்லாம் உற்பத்தியும் யானே; பெண்களுக்குள் இலக்குமியும் கீர்த்தியும் வாக்கும் ஸ்மிருதியும் புத்தியும் திருதியும் (தைரியமும்) க்ஷமையும் யானே. [இவைகளெல்லாம் எம்பெருமானுக்கே அஸாதாரணமான சக்திகள் என்றறிக.] ஸாமங்களுக்குள் யான் பெரிய ஸாமம்; சந்தஸுக்களுக்குள் யான் காயத்திரி; மாசங்களுக்குள் யான் மார்கழி; ருதுக்களுக்குள் பூக்கும் காலமான வஸந்தருது யான்.

த்யூதம் சலயதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம் |
ஜயோஸ்மி வ்யவஸாயோஸ்மி ஸத்த்வம் ஸத்த்வவதாமஹம் ||௩௬||
வ்ருஷ்ணீநாம் வாஸுதேவோஸ்மி பாண்டவாநாம் தநஞ்ஜய: |
முநீநாமப்யஹம் வ்யாஸ: கவீநாமுஶநா கவி: ||௩௭||
தண்டோ தமயதாமஸ்மி நீதிரஸ்மி ஜிகீஷதாம் |
மௌநம் சைவாஸ்மி குஹ்யாநாம் ஜ்ஞாநம் ஜ்ஞாநவதாமஹம் ||௩௮||

(௩௬-௩௭-௩௮) வஞ்சனையாக ஆடும் விளையாட்டுகளில்யான் சொக்கட்டான் முதலிய லக்ஷணங்கள் பொருந்திய சூதாக இருக்கிறேன். பலமுள்ளவைகளுக்குப் பலமாயும், ஜயிப்பவர்களுக்கு ஜயமாயும் உழைப்பவர்களுக்கு உழைப்பாயும் ஸாத்விகர்களுக்குப் பெரியமனதாயும் இருக்கிறேன்; விருஷ்ணி வம்சத்தாருக்குள் யான் வசுதேவன் மைந்தன்; பாண்டவர்களுக்குள் யா

http://acharya.org

ன் அர்ச்சுனன்; சிந்தைசெய்வதினாலே விஷயங்களை உள்ளபடி அறியவல்ல ரான ருஷிகளுக்குள் யான் வியாஸர். வித்வான்களுக்குள் யான் சுக்கிரன்; கட்டளையைத் தவிர்ந்தபேர்களைத் தண்டிக்கும் விஷயத்தில் யான் தண்டனை. ஜயம் கோருமவர்களுக்குள் ஜயிப்பதற்கு உபாயமான நீதியாகிறேன். மறைக்கவேண்டிய விஷயங்களில் யான் மௌனமா யிருக்கிறேன். அப்படியே ஞானவான்களுக்கு ஞானமாகவும் இருக்கிறேன்.

𑌯𑌚𑍍𑌚𑌾𑌪𑌿𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌬𑍀𑌜𑌂𑌤𑌦𑌹𑌮𑌰𑍍𑌜𑍁𑌨|
𑌨𑌤𑌦𑌸𑍍𑌤𑌿𑌵𑌿𑌨𑌾𑌯𑌤𑍍𑌸𑍍𑌯𑌾 𑌨𑍍𑌮𑌯𑌾𑌭𑍂𑌤𑌂𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍||௩௯||

(௩௯) சகல பூதங்களுக்கும் எது பீஜமோ அதாவது காணப்படுவதும் காணப்படாததுமாய் இரண்டுவிதமாயுள்ள உற்பத்திகாரணம் எதுவோ அது யான்; பூதங்களுக்குள் ஒன்றாகிலும் அந்தராத்மாவாகிய என்னையொழியத் தரித்திருப்பது கிடையாது. எல்லாவஸ்துக்களும் எல்லாநிலைகளிலும் அந்தராத்மாவாயுள்ள என்னோடுகூடியேயிருக்கும் [இதனால் எல்லாப்பொருள்களும் பகவத்ஸ்வரூபங்கள் என்று சொன்னதற்குக் காரணம், அவன் ஆத்மாவாயிருக்கைதானென்று வெளியிடப்பட்டது.]

𑌨𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌸𑍍𑌤𑌿𑌮𑌮𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌭𑍂𑌤𑍀𑌨𑌾𑌂𑌪𑌰𑌨𑍍𑌤𑌪|
𑌏𑌷𑌤𑍂𑌦𑍍𑌦𑍇𑌶𑌤𑌃𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋 𑌵𑌿𑌭𑍂𑌤𑍇𑌰𑍍𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍋𑌮𑌯𑌾||௪௦||

(௪௦) எனது திவ்யங்களான இந்த விபூதிகளுக்கு முடிவுகிடையாது; அப்படி யிருக்க இப்பொழுது விவரித்ததோ வென்றால் சில உத்தேசங்களைக் கொண்டு சிறிது மாத்திரம் சுருக்கிச் சொல்லப்பட்டது.

𑌯𑌦𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍂𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍇𑌵𑌵𑌾|
𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑌾𑌵𑌗𑌚𑍍𑌛𑌤𑍍𑌵𑌂 𑌮𑌮𑌤𑍇𑌜𑍋𑌂𑌶𑌸𑌂𑌭𑌵𑌮𑍍||௪௧||

(௪௧) ஆளப்படும் தன்மையோடு கூடியதும் செல்வத்தோடுகூடியதும் நன்மைக்கிடமானதுமாய் எதெதுஉண்டோ அந்தப் பூதங்கள்யாவும் நமது ஆணைகை என்கிற சக்திவிசேஷத்தின் அற்பபாகத்தால் உண்டானவைகளென்றறி.

𑌅𑌥𑌵𑌾𑌬𑌹𑍁𑌨𑍈𑌤𑍇𑌨 𑌕𑌿𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑍇𑌨𑌤𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨|
𑌵𑌿𑌷𑍍𑌟𑌭𑍍𑌯𑌾𑌹𑌮𑌿𑌦𑌂𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨 𑌮𑍇𑌕𑌾𑌂𑌶𑍇𑌨𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌜𑌗𑌤𑍍||௪௨||

(௪௨) வாராய் அர்ச்சுனா! இவ்வளவுதூரம் சொல்வதென்ன! ஒருசொல்லாய்ச் சொல்லுகிறோம்; இவ்வுலகெல்லாம் காரணமான நிலையிலும் காரியமானநிலையிலும் ஸ்தூலமாயும் ஸூக்ஷ்மமாயும் இருப்பதிலும் தரிப்பதிலும் பிரவிர்த்திப்பதிலும் எப்படியானால் நமது இச்சையைக் கடக்கமாட்டாதோ அப்படி, நமது மகிமையின் பதினாயிரப்பங்கின் பதினாயிரம்பங்கி லொருபங்கினால் இதைத் தரித்துக்கொண்டிருக்கிறோம் [இப்படியே பராசரபகவானும் 𑌯𑌸𑍍𑌯𑌾𑌯𑍁𑌤𑌾𑌯𑍁𑌤𑌾𑌂𑌶𑌾𑌂𑌶𑍇𑌵𑌿𑌶𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌯𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 என்று அருளிச் செய்தார்.]

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

பத்தாவது அத்யாயம் முற்றிற்று.

---

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பதினோராவது அத்யாயம்.

அவதாரிகை.

இப்படி பக்தியோகம் நிலைப்பதற்காகவும் அது வளருவதற்காகவும் ஸகல வஸ்துக்களிலும் வேறுபட்டபகவான் தன்னுடைய அஸாதாரணமான கல்யாணகுணங்களோடுகூட ஸர்வவஸ்துக்களுக்கும் ஆத்மாவாயிருக்குந் தன்மையும், ஆனதுபற்றியே அவனைத்தவிர மற்றவையெல்லாம் அவனுக்குச் சரீரமாய் அவனிட்ட வழக்காயிருக்குந்தன்மையும் சொல்லப்பட்டன. இவற்றை எல்லாம் நேரே எம்பெருமானிடத்திற்கேட்டு இப்படிதானென்று நிச்சயித்து இப்படிப்பட்ட விலக்ஷண ஸ்வபாவத்தோடுகூடிய வெம்பெருமானைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டு அநுபவிக்க வேண்டுமென்கிற வாசையோடு அர்ச்சுனன் கேட்கிறான்.

𑌮𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌯 𑌪𑌰𑌮𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌮𑍍| 𑌯𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑍋𑌕𑍍𑌤𑌂𑌵𑌚𑌸𑍍𑌤𑍇𑌨 𑌮𑍋𑌹𑍋𑌽𑌯𑌂𑌵𑌿𑌗𑌤𑍋𑌮𑌮||௧||

(௧) தேஹமே ஆத்மாவென்று பிரமித்திருந்த அடியேன் விஷயத்தில் கிருபைசெய்வதற்காகவே ஆத்மஸ்வரூபத்தைப்பற்றி யறியவேண்டும் பரமரஹஸ்யார்த்தத்தையு மருளிச்செய்தது;அதைக்கேட்டதினால் அடியேனுக்கு ஆத்மாவின்விஷயத்தில் உண்டாயிருந்த கலக்கங்களெல்லாமொழிந்தன.

𑌭𑌵𑌾𑌪𑍍𑌯𑌯𑍌𑌹𑌿𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍌𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌶𑍋𑌮𑌯𑌾|
𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌃𑌕𑌮𑌲𑌪𑌤𑍍𑌰𑌾𑌕𑍍𑌷 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌪𑌿𑌚𑌾𑌵𑍍𑌯𑌯𑌮𑍍||௨||

(௨) அஹோ கமலபத்திராக்ஷ! ஏழாவது அத்தியாயந்தொடங்கி பத்தாவதுஅத்தியாயம் வரையில் தேவரீரைத்தவிர மற்றப்பிராணிகளெல்லாம் பரமாத்துமாவான தேவரீரிடத்து நின்றுமே உண்டாய் லயிக்கின்றன வென்கிறவிஷயம் விஸ்தாரமாய்க் கேட்டேனன்றோ? தேவரீர் எந்நாளும் சேதநாசேதநரூபமான ஸகலவஸ்துக்களுக்கும் ஆதாரமாயிருக்குந்தன்மையையும் ஞானம் பலம் முதலிய ஸகல கல்யாணகுணங்களாலும் தேவரீரே மேலாயிருக்குந்தன்மையையும் ஸகலவஸ்துக்களுக்கும் ஆதாரமாயிருக்குந்தன்மையையும் இமைகொட்டுகிற தென்கிற அற்பப்பிரயத்தநமும் தேவரீருடைய ஆதீனமென்கிற தேவரீருடைய மஹாத்மியத்தின்றன்மையையும் அப்படியே கேட்டேன்.

𑌏𑌵𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌥𑌾𑌤𑍍𑌥 𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰|
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿𑌤𑍇𑌰𑍂𑌪 𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮||௩||

(௩) ஹேபரமேசுவர! தேவரீரைப்பற்றி அருளிச்செய்ததெல்லாம் அறிந்துகொண்டேன். ஆஸ்ரிதாளிடத்திலுண்டான வன்புக்குக்கடலாய் விளங்குகின்ற ஹேபுருஷோத்தம! யாவரையும் ஆளுந்தன்மையிலும் பரிபாலிக்

http://acharya.org

குந்தன்மையிலும் படைக்குந்தன்மையிலும் அழிக்குந்தன்மையிலும் தரிக்குந்தன்மையிலும் கல்யாணகுணங்களுக்கு இருப்பிடமாயிருக்குந் தன்மையிலும் மேன்மையிலும் எல்லாவற்றிலும் வேறுபட்டிருக்குந்தன்மையிலும் தேவரீர் எழுந்தருளியிருக்கும்படியைக் கண்ணாற்காணவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

மந்யஸே யதி தச்சக்யம் மயா த்ரஷ்டுமிதி ப்ரபோ|
யோகேஶ்வர ததோ மே த்வம் தர்ஶயாத்மாநமவ்யயம்||௪||

(௪) இப்படி எல்லாவற்றையும் படைத்தும் ஆண்டும் தரித்துமிருக்கின்ற தேவரீருடைய ரூபத்தை ஸேவிக்கும்படி அடியேனால் கூடுமென்று தேவரீருக்குத் திருவுள்ளமானால் ஓ யோகேசுவர! மற்றொருவருக்குங் கிடைக்க மாட்டாத ஞானம் பலம் ஐசுவரியம் வீரியம் சக்தி தேஜஸ்ஸு இவைகளுக்கு நிதியானவரே! தேவரீரை முழுதும் அடியேன் கண்டனுபவிக்கும்படி ஸேவை ஸாதித்தருளவேண்டும்.

(அ-கை.) இப்படி குதூஹலத்தோடுகூடினவனாய் ஸந்தோஷத்தால் தொண்டையில் வார்த்தை யெழாமற்றடுக்கும்படி அர்ச்சுநன் பிரார்த்திக்கப் பகவான் அருளிச்செய்கிறார்.

ஶ்ரீபகவாநுவாச|| பஶ்ய மே பார்த ரூபாணி ஶதஶோऽத
ஸஹஸ்ரஶ:| நாநாவிதாநி திவ்யாநி நாநாவர்ணாக்ருதீநி ச||௫||

(௫) அஹோ பார்த்த! எல்லாவற்றிற்கும் ஆதாரமான என்ரூபங்களைக் காட்டுகிறேன்பார்; நூறு ஆயிரங்கணக்காய் பலவிதவர்ணங்களோடும் பலவித உருவங்களோடுமிருக்கிற திவ்யங்களான என்ரூபங்களை நன்றாய்ப்பார்.

பஶ்யாதித்யாந் வஸூந் ருத்ராநஶ்விநௌ மருதஸ்ததா|
பஹூந்யத்ருஷ்டபூர்வாணி பஶ்யாஶ்சர்யாணி பாரத||௬||

(௬) என்னுடைய ஒருரூபத்தில் பனிரண்டு ஆதித்தியர்களையும் அஷ்டவசுக்களையும் பதினொரு உருத்திரர்களையும் இரண்டு அசுவனீதேவர்களையும் வாயுக்களையும் இப்படியே லோகத்தில் பிரத்தியக்ஷமாய்க் காணக்கூடியவைகளையும் சாஸ்திரத்தால் அறியக் கூடியவைகளையும் எங்கெந்த லோகத்தில் எங்கெந்த ஆச்சரியமுண்டோ அவையெல்லாவற்றையும் பார்.

இஹைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்நம் பஶ்யாத்ய ஸசராசரம்|
மம தேஹே குடாகேஶ யச்சாந்யத்த்ரஷ்டுமிச்சஸி||௭||

(௭) இந்த என்னுடைய ஒருசரீரத்தில் அதிலும் ஓரிடத்தில், சேதநாசேதநரூபமான உலகத்தை யெல்லாம் நன்றாய்ப்பார். இன்னும் ஏதாகிலும் பார்க்க வேண்டுமானால் அதையும் இந்தசரீரத்தின் ஏகதேசத்தில்தானேபார்.

ந து மாம் ஶக்யஸே த்ரஷ்டுமநேநைவ ஸ்வசக்ஷுஷா|
திவ்யம் ததாமி தே சக்ஷு: பஶ்ய மே யோகமைஶ்வரம்||௮||

http://acharya.org

(அ) நான் என்னுடைய சரீரத்தில் ஓரிடத்தில உலகத்தையெல்லாங் காட்டுகிறேன். நீயோ, சிறியதாய் அளவுள்ள வஸ்துக்களைக் காணவல்ல இந்த மாம்ஸ நேத்திரங்களைக்கொண்டு ஸகல வஸ்துக்களிலும் வேறுபட்டு அளவில லாமலிருக்கும் விஷயத்தைக் காணமாட்டாய். ஆகையால் உனக்குத் திவ்யமான கண்களைக் கொடுக்கிறேன். என்னுடைய அளவற்ற ஞானம் விபூதி தொடக்கமானவைகளெல்லாவற்றையும் பார்.

ஸஞ்ஜய உவாச। ஏவமுக்த்வா ததோ ராஜந் மஹாயோகேஸ்வரோ ஹரி:। தர்ஸயாமாஸ பார்த்தாய பரமம் ரூபமைஸ்வரம்॥ ௯॥

(௯) இவ்வாறு சொல்லி, தேரோட்டுவதிலிருந்த அர்ச்சுநனுக்கு மாமன் மகனான அந்தக்கண்ணன், மஹாயோகங்களுக்கெல்லாம் ஈசவரனாய் பரபரமமான நாராயணனாகையாலே தம்முடைய பரமேசுவரத் தன்மைக் கேற்ற ரூபத்தை அத்தை மகனான பார்த்தனுக்குக் காண்பித்தருளினார். அது நானாவிதமாய் விசித்திரமாய் ஸகல லோகத்துக்கு மிடமாய் எல்லாவற்றையுமாளுமதாயுள்ளது.

அநேகவக்த்ரநயநம் அநேகாத்புததர்ஸநம்।
அநேகதிவ்யாபரணம் திவ்யாநேகோத்யதாயுதம்॥ ௧௦॥
திவ்யமால்யாம்பரதரம் திவ்யகந்தாநுலேபநம்।
ஸர்வாஸ்சர்யமயம் தேவம் அநந்தம் விஸ்வதோமுகம்॥ ௧௧॥

(௧௦-௧௧) அதாவது அனேக முகங்களுங் கண்களுமுடையதும் அனேக அற்புதங்களைக்காட்டுவதும் அனேகம் திவ்யாபரணங்களுடையதும் திவ்யங்களான அனேகம் ஆயுதங்களுடையதும் திவ்யமாலைகளும் வஸ்திரங்களுமணிந்ததும் திவ்யகந்தம் பூசியதும் ஸகல ஆச்சரியமானதும் பிரகாசமானதும் முக்காலத்திலுமுள்ள ஸகலஜகத்துக்கு மிடமாயிருக்கையாலே தேசத்தாலாவது காலத்தாலாவது அளவிடப்போகாததும் எந்தத்திக்கிலும் முகங்களோடு கூடியது மாயிருந்தது.

திவி ஸூர்யஸஹஸ்ரஸ்ய பவேத் யுகபதுத்திதா।
யதி பா: ஸத்ருஸீ ஸா ஸ்யாத் பாஸஸ்தஸ்ய மஹாத்மந:॥ ௧௨॥

(௧௨) ஆகாயத்தில ஆயிரம் சூரியர்கள் ஏககாலத்தில் உதித்தார்களாகில் அந்தமஹாத்மாவின் திருமேனிகாந்திக்கு ஒப்புச்சொல்லலாம். [என்றால் அஸதூயமான தேஜஸ்வரூபமாயிருந்த தென்றபடி.]

தத்ரைகஸ்தம் ஜகத் க்ருத்ஸ்நம் ப்ரவிபக்தமநேகதா।
அபஸ்யத் தேவதேவஸ்ய ஸரீரே பாண்டவஸ்ததா॥ ௧௩॥

(௧௩) (அளவில்லாதஅகலமும் நீளமுமுள்ளதாய் அநந்தமான திருத்தோள் திருவயிறு திருமுகம் திருக்கண்களுடையதாய் அளவற்ற ஒளியோடு கூடியதாய் அளவற்ற திவ்யாயுதங்களணிந்ததாய் தனக்குத்தக்கபடி அபரிமிதமான திவ்யாபரணஙகளுடையதாய், திவ்யங்களான திருமாலைகளும் திருப்பீதாம்பரஙகளும் அணிநததாய் திவ்யமான சந்தனம் பூசியதாய் அநந்த ஆச்

http://acharya.org

சரியமயமாயுள்ள) அத்தேவ தேவனுடைய திவ்யத் திருமேனியில், (நானுவி தங்களாய்ப் பிரிக்கப்பட்டு, பிரமன்தொடங்கி அனேகவிசித்திரங்களான தேவர் திரியக்கு மனுஷியர் தாவரங்களென்கிற புசிப்பவரின் தொகையாகவும், பூமி ஆகாயம் சுவர்க்கம் பாதாளம் அதலம் விதலம் ஸுதலம் முதலிய போகஸ்த்தாநங்களாகவும் புசிக்கும் பண்டங்களாகவும் புசிப்பதற்கு வேண்டுங்கருவிகளாகவும்) பலவாருகப் பிரிக்கப்பட்டுப் பிரகிருதி புருஷரூபமாயுள்ள ஸகல லோகத்தையும் எங்கேயோ ஓரிடத்திலிருப்பதாக அர்ச்சுநன் பகவத்கடாக்ஷத்தாலடைந்த திவ்யநேத்திரங்களாலே கண்டுஸேவித்தான்.

தத: ஸ விஸ்மயாவிஷ்டோ ஹ்ருஷ்டரோமா தநஞ்ஜய:|
ப்ரணம்ய ஸிரஸா தேவம் க்ருதாஞ்ஜலிரபாஷத||௧௪||

(௧௪) அநந்தரம் தநஞ்சயனென்பவன், (மஹாச்சரியமாயுள்ள ஸகல லோகத்தையும் தம்திருமேனியில் ஓரிடத்தில் வைத்து அவைகளை யேவுகின்றவராய் அதிக ஆச்சரியமான அளவிறந்த ஞானம் முதலிய கல்லியாணகுணங்களுக்கிடமாயுள்ள பகவானைப்பார்த்து ஆச்சரியத்தோடு கூடியவனாய் தேஹத்தில் மயிர்க்கூச்சறையும்படி தடிபோல் விழுந்து ஸேவித்துக் கைகளைக்கூப்பிக்கொண்டு இந்தவிதம் விண்ணப்பம் செய்கிருன்.

அர்ஜுந உவாச| பஸ்யாமி தேவாம்ஸ்தவ தேவ தேஹே ஸர்வாம்ஸ்ததா பூதவிஸேஷஸங்காந்| ப்ரஹ்மாணமீஸம் கமலாஸநஸ்தம் ருஷீம்ஸ்ச ஸர்வாநுரகாம்ஸ்ச திவ்யாந்||௧௫||

(௧௫) ஹேஸ்வாமிந்! தேவரீருடைய திருமேனியில் ஸகலமானதேவர்களையும் மற்றுமுண்டானப்பிராணிகளின் கூட்டங்களையும் அண்டாதிபதியான சதுர்முகப் பிரம்மாவையும் அப்படியே அவருடைய இச்சாநுவர்த்தியான சிவனையும் தேவரிஷிகள் தொடக்கமான வெல்லாருஷிகளையும் வாஸுகி தக்ஷகன் முதலான அனேகம் ஸர்ப்பங்களையுங்காண்கிறேன்.

அநேகபாஹூதரவக்த்ரநேத்ரம் பஸ்யாமி த்வாம் ஸர்வதோऽநந்தரூபம்| நாந்தம் ந மத்யம் ந புநஸ்தவாதிம் பஸ்யாமி விஸ்வேஸ்வர விஸ்வரூப||௧௬||

(௧௬) அனேகம் கைகால் முதலியகரணங்களுடன் கூடி அநந்த ரூபனாயுள்ள தேவரீரை யெங்கும் பார்க்கிறேன். ஹே விச்வேசுவர! விசுவசரீரனாயிருக்கிற தேவரீருக்கு ஆதி இதுவென்றும் மத்தியமிது வென்றும் அந்தமிது வென்றும் தேவரீரளித்த இந்தத் திவ்யநேத்திரங்களைக்கொண்டும் பார்க்கச் சக்தியற்றவனாயிருக்கிறேன்.

கிரீடிநம் கதிநம் சக்ரிணம் ச தேஜோராஸிம் ஸர்வதோ தீப்திமந்தம்| பஸ்யாமி த்வாம் துர்நிரீக்ஷ்யம் ஸமந்தாத் தீப்தாநலார்கத்யுதிமப்ரமேயம்||௧௭||

(௧௭) தேஜோராசியாய் எங்கும் ஒளிவிடுகின்றவராய் எந்தப்புறத்திலும் பார்ப்பதற்குக்கூடாதவராய் ஜொலிக்கின்ற சூரியன் அக்கினி இவர்களுடை

http://acharya.org

யகாந்தியோடு கூடியவராய் அளவிட்டறியப்போகாதவரா யிருக்கும் தேவரீரை, கிரீடம் கதை சக்கிரம் இவைகளைத்தரித்தவராகச் சேவிக்கிறேன்.

𑌤𑍍𑌵𑌮𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍। 𑌤𑍍𑌵𑌮𑌵𑍍𑌯𑌯𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌧𑌰𑍍𑌮𑌗𑍋𑌪𑍍𑌤𑌾 𑌸𑌨𑌾𑌤𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌮𑌤𑍋 𑌮𑍇॥

(௧௮) 𑌦𑍍𑌵𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑍇 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑍇 இத்யாதியான உபநிஷத்துக்களில் அறியவேண்டியதாகச் சொல்லப்பட்ட பரமமானஅக்ஷரம் தேவரீரே! இஜ்ஜகத்துக்குமுக்கியமான ஆதாரமும் தேவரீரே? தேவரீர் எந்தஸ்வருபத்தோடும் எவ்விதகுணங்களோடும் எவ்வித விபவத்தோடும் இருக்கின்றதோ அப்படியே எந்நாளுமிருக்கின்றது. நித்தியமான வைதிகத்தருமங்களை யெல்லாம் தேவரீரோ இப்படி அவதாராதிகளைச்செய்து காப்பாற்றுகின்றது. 𑌵𑍇𑌦𑌾𑌹𑌮𑍇𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌂 என்றும் 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 என்றும் இப்படி சொல்லப்படும் ஸநாதநபுருஷன் தேவரீரே யென்று அறிந்து கொண்டேன். [என்றால் இதுவரையில் யதுகுலதிலகமாக நினைக்கப்பட்ட தேவரீரை இப்பொழுது நான் இப்படிப்பட்டவரென் றறிந்துகொண்டேனென்றபடி.]

𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑌨𑍍𑌤𑌵𑍀𑌰𑍍𑌯𑌮𑌨𑌨𑍍𑌤𑌬𑌾𑌹𑍁𑌂 𑌶𑌶𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍। 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑌹𑍁𑌤𑌾𑌶𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌵𑌤𑍇𑌜𑌸𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌪𑌨𑍍𑌤𑌮𑍍॥

(௧௯) ஆதி மத்தியம் அந்தம் அற்றவராய் அளவற்ற ஞானம் பலம் வீரியம் முதலிய குணங்கள் பொருந்தியவராய் * கணக்கில்லாத கை கால் கண்முதலிய அவயவங்களோடுகூடியவராய் சந்திரனைப்போல் (அடுத்தவரைக்) குளிரநோக்கி சூரியனைப்போல் (கடுத்தவரைக்) கடுக்கின்ற திருக்கண்களுடையவராய் பற்றியெரியும் காலாக்கினிபோல் ஸம்ஹாரத்துக்கேற்ற முகங்களோடு கூடியவராய தேஜஸ்ஸாலே உலகத்தையெல்லாம் தபிக்கின்ற தேவரீரைப் பார்க்கின்றேன். [என்றால்—இப்படி ஸர்வத்துக்கும் கர்த்தாவாயும் ஸர்வாதாரராயும் ஸர்வத்தையும் ஆள்பவராயும் ஸர்வத்தையும் அழிப்பவராயும் ஞானம் முதலிய அபாரமான குணங்களுக்குக் கடலாயும் ஆதிமத்தியாந்தரஹிதராயுமிருக்கிற தேவரீரை இப்படிப்பட்ட திருமேனியோடு கூடியிருப்பவராகத் தேவரீர் உபதேசித்தபடி ஸாக்ஷாத்கரிக்கிறேன் என்றபடி.]

(அ-கை.) இப்படியிருக்குந் தேவரீரைப்பார்த்து தேவாதிகளும் அடியேனும் மிகவும் பயப்படுகிறோமென்கிறான்.

𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑍋𑌰𑌿𑌦𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌹𑌿 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌯𑍈𑌕𑍇𑌨 𑌦𑌿𑌶𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃। 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 𑌰𑍂𑌪𑌮𑍁𑌗𑍍𑌰𑌂 𑌤𑌵𑍇𑌦𑌂 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿𑌤𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍍॥௨௦॥

(௨௦) மேலுள்ள ஆகாசம், கீழே பூமி, இதற்கிடையிலுள்ள வெளிகள் இவைகளில், நிலைத்திருக்கின்ற எல்லா உலகங்களையும் தேவரீர் வியாபித்துக்

---

* ஒரு திருமேனியில் கணக்கில்லாத வயிறு முதலியவை யெப்படி கூடுமென்னில், ஒரு இடுப்பிலிருந்து மேலே அனேகம் வயிறு முதலியவைகளும் கீழே அனேகம் பாதம் முதலியவைகளும் கூடுமன்றோ?

http://acharya.org

கொண்டிருக்கிறபடியால் இப்படி அதிகவிசாலமும் உயரமும் நிகளமும் பொருந்திப் பயங்கரமாயிருக்கும் தேவரீருடைய திருமேனியைப்பார்த்து, ஓமஹாத்மாவே! பிரம்மா முதலிய தெய்வக்குழாங்கள் பித்ருக்கணங்கள் ஸித்தாள் கந்தர்வாள் யக்ஷாள் ராக்ஷஸாள் இவாளில் பிரதிகூலராயும் அநுகூலராயும் மத்தியஸ்த்தராயுமிருக்கும் இம்மூவுலகத்தவரும் $ நடுநடுங்கிப்போகிறார்கள்.

அமீ ஹி த்வாம் ஸுரஸங்கா விஶந்தி கேசித்பீதா: ப்ராஞ்ஜலயோ க்ருணந்தி । ஸ்வஸ்தீத்யுக்த்வா மஹர்ஷிஸித்தஸங்கா: ஸ்துவந்தி த்வாம் ஸ்துதிபி: புஷ்கலாபி: ॥ உக ॥

(உக) இதோ உத்கிருஷ்டராளாகிய சிலதேவகணங்கள் விசுவரூபனாகிய தேவரீரைக்கண்டு ஸந்தோஷித்து ஸமீபத்தில் நெருங்குகிறார்கள்; பின்னுஞ் சிலர் தேவரீருடைய பயங்கரமான ஆகாரத்தைப்பார்த்துப் பயந்தவர்களாய் அஞ்சலி பண்ணிக்கொண்டு தங்கள் ஞானத்துக்குத் தக்கபடி ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள்; பின்னுஞ்சில மஹாரிஷிக்கணங்களும் ஸித்தகணங்களும், பரதத்துவத்தையும் அவரதத்துவத்தையு நன்கறிந்தவராதல்பற்றி "ஸ்வஸ்தி" என்று சொல்லி வெகுசாய் ஸ்தோத்திரம் செய்கிறார்கள்.

ருத்ராதித்யா வஸவோ யே ச ஸாத்யா விஶ்வேऽஶ்விநௌ மருதஶ்சோஷ்மபாஶ்ச । கந்தர்வயக்ஷாஸுரஸித்தஸங்கா வீக்ஷந்தே த்வாம் விஸ்மிதாஶ்சைவ ஸர்வே ॥ உஉ ॥

(உஉ) உருத்திரர் ஆதித்தியர் வசுக்கள் ஸாத்தியர் விசுவேதேவர்கள் அச்சுவனீதேவர்கள் மறுத்துக்கள் பித்ருக்கள் கந்தருவர் யக்ஷர் அசுரர் சித்தக்கணங்கள் எல்லாம் பரமாச்சரியத்தோடுகூடி ஸேவிக்கின்றார்கள்.

ரூபம் மஹத்தே பஹுவக்த்ரநேத்ரம் மஹாபாஹோ பஹுபாஹூருபாதம் । பஹூதரம் பஹுதம்ஷ்ட்ராகராலம் த்ருஷ்ட்வா லோகா: ப்ரவ்யதிதாஸ்ததாஹம் ॥ உங ॥

(உங) அனேகம் கோரமான பற்களோடு கூடிய தேவரீருடைய ஆகாரத்தைக்கண்டு முன்சொன்னவர்களும் அடியேனும் பயந்தது இவ்வளவவ்வளவல்ல; மிகவும் பயந்திருக்கிறோம்.

நப:ஸ்ப்ருஶம் தீப்தமநேகவர்ணம் வ்யாத்தாநநம் தீப்தவிஶாலநேத்ரம் । த்ருஷ்ட்வா ஹி த்வாம் ப்ரவ்யதிதாந்தராத்மா த்ருதிம் ந விந்தாமி ஶமம் ச விஷ்ணோ ॥ உச ॥

(உச) நப:ஸ்பர்ஶமென்றும், தீப்தவர்ணம் ... ஶப்தங்கள் என்றும் க்ஷயத்தை ப்ரஜைகளுக்கு ... என்றும், யோ

$ அர்ச்சுநனுக்குத்தான் விசுவரூபத்தைக் காணும்படி திவ்ய நேத்திரங்களைத்தந்தார். பிரும்மாதிகளுங் கண்டபடி யென்னென்றால் - தனது ஐசுவரியத்தை முழுவதும் அர்ச்சுனனுக்குக் காட்டவேண்டுமென்று, அவர்களுக்குந் தந்தாரென்றறிக.

http://acharya.org

க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே என்றும், இப்படி சுருதியில் சொல்லப்பட்டுள்ள பரமபதமென்கிற பரமாகாசம்வரையில் வியாபித்து மஹாப்பிரகாசமாய் அனேகவர்ணங்களுடன்கூடித் திறந்த வாய்களோடும் விசாலமான நேத்திரங்களோடுங்கூடிப் பயங்கரமாயிருக்கிற ஓ விஷ்ணுவே! தேவரீரைப் பார்த்து அடியேன் கொஞ்சமும் தரிக்ககில்லேன்; மனம் பதறுகிறது; புலன்கள் கலங்குகின்றன.

தம்ஷ்ட்ராகராலாநி ச தே முகாநி த்ருஷ்ட்வைவ காலாநலஸந்நிபாநி| திஶோ ந ஜாநே ந லபே ச ஶர்ம ப்ரஸீத தேவேஶ ஜகந்நிவாஸ||

(உரு) பிரளயகால அக்கினிபோல் எல்லாவற்றையும் நாசஞ்செய்யும்படி கோரமாயிருக்கின்ற உம் திருமுகங்களைப்பார்த்து அடியேனுக்குத் திக்குத் தெரியவில்லை; சுகம்சிறிதும் அடையகில்லேன்; உலகத்துக்கெல்லாம் இருப்பிடமாய் பிரம்மாதி தேவர்களுக்கெல்லாம் ஈசனாகிய ஓ பகவானே! அடியேனிடத்தில் கிருபைபண்ணியருளவேண்டும் [என்றால், அடியேன் தரிக்கும்படி கடாக்ஷிக்க வேண்டுமென்றபடி.]

(அ-கை.) பிராணிகளின் இருப்புத்தரிப்புமுதலியவெல்லாம் தம் ஆதீனமென்று காட்டுவதற்காக எம்பெருமான், துரியோதனன் படையில் ராஜவேஷம்பூண்ட அசுரப்படைகளையெல்லாமொழித்துப் பூமியின்பாரத்தைத் தாமே தீர்க்கப்போகிறதெனகிற தம்முடைய திருவுள்ளத்தை யாச்சுநனுக்குக் காட்டியருளினார்; அவனும் எமபெருமானுடைய படைக்குந்தன்மை முதலிய ஈசுவரத்தன்மையெல்லாம் பார்த்து (அந்தப் பகவானிடத்தில்தானே இனி யழியப்போகிற) துரியோதனாதிகள் மடியும்படியையுங் கண்டவனாய்ச் சொல்லுகிறான்.

அமீ ச த்வாம் த்ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா: ஸர்வே ஸஹைவாவநிபாலஸங்கை:| பீஷ்மோ த்ரோண: ஸூதபுத்ரஸ்ததாஸௌ ஸஹாஸ்மதீயைரபி யோதமுக்யை:|| உசு

வக்த்ராணி தே த்வரமாணா விஶந்தி தம்ஷ்ட்ராகராலாநி பயாநகாநி| கேசித்விலக்நா தஶநாந்தரேஷு ஸந்த்ருஶ்யந்தே சூர்ணிதைருத்தமாங்கை:||உஎ

(உசு-உஎ) இதோ திருதராஷ்டிர குமாரர்களும் பீஷ்மரும் துரோணரும் கர்ணனும்,அந்தப் பக்ஷத்தைச்சேர்ந்த ராஜாக்களுடனும் நம்மவர்களைச் சேர்ந்த சிலவீரர்களுடனும் அதிவேகமாய் கோரப்பற்கள் நிறைந்த தேவரீருடைய திருவாயில் அழிவார்களாகப் புகுகிறார்களே, அதிற்சிலர் மண்டைசிதறிப் பல்லிடுக்குகளிலகப்பட்டுத் தொங்குகிறார்கள்.

யதா நதீநாம் பஹவோ(அ)ம்புவேகா: ஸமுத்ரமேவாபிமுகா த்ரவந்தி| ததா தவாமீ நரலோகவீரா விஶந்தி வக்த்ராண்யபிவிஜ்வலந்தி||உஅ||

யதா ப்ரதீப்தம் ஜ்வலநம் பதங்கா விஶந்தி நாஶாய ஸம்ருத்தவேகா:| ததைவ நாஶாய விஶந்தி லோகாஸ்தவாபி வக்த்ராணி ஸம்ருத்தவேகா:

(உஅ-உகூ) இந்தராஜாக்களெல்லாம் ஆற்றுவெள்ளம் கடலிற்புகுவதுபோலும் விட்டில்பூச்சி பெருநதியிற் புகுவதுபோலும் தேவரீருடைய வாயில் தாமாய்அழிந்து போவதற்காக வெகுவேகமாய்வந்துவிழுகிறார்கள்.

http://acharya.org

𑌲𑍇𑌲𑌿𑌹𑍍𑌯𑌸𑍇 𑌗𑍍𑌰𑌸𑌮𑌾𑌨𑌃 𑌸𑌮𑌨𑍍𑌤𑌾𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌸𑌮𑌗𑍍𑌰𑌾𑌨𑍍𑌵𑌦𑌨𑍈𑌰𑍍𑌜𑍍𑌵𑌲𑌦𑍍𑌭𑌿𑌃। 𑌤𑍇𑌜𑍋𑌭𑌿𑌰𑌾𑌪𑍂𑌰𑍍𑌯 𑌜𑌗𑌤𑍍𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌭𑌾𑌸𑌸𑍍𑌤𑌵𑍋𑌗𑍍𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌪𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋॥௩௦॥

(௩௦) அப்படிப்பட்ட அவ்வரக்கர்கூட்டங்களையெல்லாம் ஜ்வலிக்கின்ற திருவாயில் விழுங்கும்பொழுது அதிக கோபத்தோடுகூட மேலுதட்டையும் கீழுதட்டையும் அடிக்கடி நக்குகின்றீர். தேவரீருடைய அதிபயங்கரமான கிரணங்கள் தம் பிரகாசங்களாலே உலகங்களெல்லாம் பரவ, அதனால் பிராணிகள் தவிக்கின்றன.

𑌆𑌖𑍍𑌯𑌾𑌹𑌿 𑌮𑍇 𑌕𑍋 𑌭𑌵𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌰𑍂𑌪𑍋 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌦𑍇𑌵𑌵𑌰 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦। 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌮𑌾𑌦𑍍𑌯𑌂 𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌮𑌿 𑌤𑌵 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑍍॥௩௧॥

(௩௧) ஸ்வாமி! தேவரீருடைய நிரங்குசமான ஈசுவரஸ்வரூபத்தைக் காட்டவேண்டுமென்று அடியேன் வேண்டிக்கொண்டபடி அப்படியே ஸேவைஸாதித்தவர், மறுபடி இந்தக்கோரமான ரூபத்தைத் தரித்தீரே ஈதெதற்காகவோ இதை அடியேனுக்குத் தெரியச்சொல்வதோடு சாந்தமான வடிவத்தையும் அங்கீகரித்தருளவேண்டும்.

(அ-கை) அடியேனிடத்தில் பிரீதியாலே விசுவைசுவரியத்தைக் காட்டினவர் கோரரூபத்தையெடுப்பதற்கு என்ன காரணமென்று கேட்டதற்குப் பகவான் அர்ச்சுனனைப்பார்த்துத் தம் * திருவுள்ளத்தை யருளிச்செய்கிறார்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚॥ 𑌕𑌾𑌲𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌲𑍋𑌕𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑍋 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌸𑌮𑌾𑌹𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌹 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃। 𑌋𑌤𑍇𑌽𑌪𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌨 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌯𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑍇𑌷𑍁 𑌯𑍋𑌧𑌾𑌃॥௩௨॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍁𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌯𑌶𑍋 𑌲𑌭𑌸𑍍𑌵 𑌜𑌿𑌤𑍍𑌵𑌾 𑌶𑌤𑍍𑌰𑍂𑌨𑍍𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌵 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌮𑍍। 𑌮𑌯𑍈𑌵𑍈𑌤𑍇 𑌨𑌿𑌹𑌤𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌭𑌵 𑌸𑌵𑍍𑌯𑌸𑌾𑌚𑌿𑌨𑍍॥௩௩॥

(௩௨-௩௩) அர்ச்சுந! துரியோதனன் முதலிய ஸகல ராஜாக்களுடையவும் வாழ்நாளின் இறுதியை நாம் கண்டிருக்கையாலே அவர்களையெல்லாம் நாசஞ்செய்வதற்காகக் கோரமான உருவத்தோடுவளர்ந்து அவர்களை அழிப்பதேபயனாக இப்பொழுது ஆரம்பித்திருக்கிறோம். உன்னுடைய முயர்ச்சியில்லாமலே இந்தத் துரியோதனாதிகளும் மற்றும் உனக்கு எதிரிகளாய் நின்ற இவ்வீரர்கள் யாவரும் நம்முடைய ஸங்கல்பமாத்திரத்தால் நாசமடையப் போகிறார்கள். ஆகையால் அவர்களை யெதிர்ப்பதற்காக நீ எழுந்திரு; சத்துருக்களான அவர்களைஜயித்து கீர்த்தியைப்பெற்று தர்மமாய்க்கிடைத்த விராஜ்யத்தை அனுபவிக்கப்பார். இந்த துஷ்டர்கள் முன்னமே நம்மால் கொல்லப்பட்டபடியால், இரண்டுகைகளாலும் போர்புரியவல்ல நீ அதற்குக்கொஞ்சம் நிமித்தமாய்மாத்திரம் ஆகவேண்டும். [அதாவது நம்மால் போடப்பட்ட ஆயுதம்போலவிருந்து யுத்தம் புரியவேண்டும் என்றபடி]

* அர்ச்சுநனில்லாமலும் இந்தத்துஷ்டர்களை நாம் அழிக்கவே போகிறோமென்கிற தம் திருவுள்ளத்தை அர்ச்சுநனுக்குக்காட்டினால் அவன் யுத்தஞ்செய்யத் துணிவனென்பது எம்பெருமானுக்குத் திருவுள்ளம்.

http://acharya.org

द्रोणं च भीष्मं च जयद्रथं च कर्णं तथान्यानपि योधवीरान्। मया हतांस्त्वं जहि मा व्यथिष्ठा युध्यस्व जेतासि रणे सपत्नान्॥ ௩௪ ॥

(௩௪) துரோணர், பீஷ்மர், கர்ணன் முதலானோர்களும் அபராதிகளாகையாலே நம்மாலேயே கொல்லப்படுவார்கள்; ஆகையால் அவர்களைப்பந்துக்களென்றும், ஆசிரியர்களென்றும், போகத்தில் பற்றுடையவர்களென்றும்நினைத்து இவர்களை நான் எப்படி வதைப்பேனென்று மனதிற்சிறிதும் வருத்தமின்றி ஜயிக்கப்பார். இவர்களைக் கொல்வதில் உனக்குச் சிறிதும் தயையென்பதேவேண்டாம். மேலும் யுத்தத்தில் ஜயமும் உனக்கே கிடைக்கும் என்றிவ்வாறருளிச்செய்தார்.

सञ्जय उवाच। एतच्छ्रुत्वा वचनं केशवस्य कृताञ्जलिर्वेपमानः किरीटी। नमस्कृत्वा भूय एवाह कृष्णं सगद्गदं भीतभीतः प्रणम्य॥ ௩௫ ॥

(௩௫) ஆஶ்ரிதவாத்ஸல்ய ஸாகரமான வெம்பெருமானிப்படியருளிச்செய்யக்கேட்டு அர்ச்சுனன் அவனைத்தெண்டன் ஸமர்ப்பித்து மிகவும் பயத்தாலே நடுநடுங்கி மறுபடியும் தெண்டன் ஸமர்ப்பித்து விழுவதெழுவதாய்க் கைகளைக் கூப்பிக்கொண்டு எடுத்த சொல்லை முடிக்கமாட்டாதபடி இந்தவிதம் விண்ணப்பம் செய்தான்.

स्थाने हृषीकेश तव प्रकीर्त्या जगत्प्रहृष्यत्यनुरज्यते च। रक्षांसि भीतानि दिशो द्रवन्ति सर्वे नमस्यन्ति च सिद्धसङ्घाः॥ ௩௬ ॥

(௩௬) வாரீர் இருடீகேச! இந்த யுத்தத்தைக் காண்பதற்காகவந்த தேவர், கெந்தருவர், சித்தர், இயக்கர், வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர் முதலானருள்ளிட்ட ஸகலலோகமும் தேவரீருடைய அநுக்கிரஹத்தாலே ஸர்வேசுவரனான தேவரீரைச்சேவித்துத் தேவரீருடைய கீர்த்தியைக்கண்டுஸந்தோஷிக்கின்றது. தேவரீரைக்கண்டு பயந்தவைகளான இவ்வரக்கர்குழாங்களும் மூலைக்குமூலைப் பத்துத் திக்குகளிலும் பயந்தோடுகின்றன. ஆனால் தேவரீருடைய பெருமைக்கு இவையெல்லாந் தகுந்தவைகளே.

कस्माच्च ते न नमेरन्महात्मन् गरीयसे ब्रह्मणोऽप्यादिकर्त्रे।

(௩௬ ௨) பிரமன் முதலானோருக்கும் பெரியனாய் ஆதிகர்த்தாவாயிருக்கும் தேவரீரை அந்தப்பிரம்மாதிகள் ஏன் வணங்கமாட்டார்கள்?

अनन्त देवेश जगन्निवास त्वमक्षरं सदसत्तत्परं यत्॥ ௩௭ ॥

त्वमादिदेवः पुरुषः पुराणस्त्वमस्य विश्वस्य परं निधानम्।

(௩௭-௩௭ ௨) ஹே அநந்த! தேவேச! ஜகந்நிவாஸ! नजायते म्रियते வா விபஶ்சித் இத்தியாதியாகச்சுருதியிற் சொன்னபடி அழிவற்ற ஜீவஸ்வரூபமும் தேவரீரே; ஸத்தும் அஸத்தும் தேவரீரே; அதாவது நாமரூபங்களாலேபிரித்தறியப்படுகையாலே காரியமான நிலையில் 'ஸத்' என்றும் அப்படி நாமரூபங்களாலே பிரித்தறியப்போகாமையாலே காரணமானநிலையில் 'அஸத்'

http://acharya.org

என்றுஞ்சொல்லப்படுகிற ப்ரக்ருதியும் தேவரீரே. இப்படிப்பட்ட ப்ரக்ருதி தத்துவமென்ன இந்தப்பிரக்ருதியோடுகலந்த ஜீவதத்துவமென்ன இவ்விரண்டையுங்கடந்த முக்தஸ்வரூபமான தத்துவமெதுவோ அதுவுந் தேவரீரே. ஆகையால் தேவரீரே ஆதிதேவனும், புருஷனும், புராணனும், இவ்வுலகுக்கெல்லாம் ஆத்மாவாய்நின்று தரிக்கின்ற ஆதாரப்பொருளும்.

வேத்தாஸி வேத்யம் ச பரம் ச தாம த்வயா ததம் விஶ்வமநந்தரூப ||௩௮||

(௩௮) உலகத்தில் அறியுமவைகளாயும் அறியப்படுமவைகளாயுமிருக்கின்றவெல்லாம்தேவரீரே. இப்படி ஸர்வஸ்வரூபனாயிருக்கையாலே யாவராலும் அடையப்படும் ஸ்தானமும் தேவரீரே. சேதநாசேதநரூபமான இவ்வுலகங்களெல்லாம் ஆத்மாவான தேவராலே வியாபிக்கப்பட்டிருக்கின்றன.

(அ-கை.) ஆகையால் வாயுமுதலிய சொற்களுக்குப் பொருளுந் தேவரீரே யெனகிறான்.

வாயுர்யமோऽக்நிர்வருண: ஶஶாங்க: ப்ரஜாபதிஸ்த்வம் ப்ரபிதாமஹஶ்ச |

(௩௯) வாயு யமன், அக்கினி, வருணன், சந்திரன் எல்லாம் தேவரீரே. (ஸகலமானப்ரஜைகளுக்கும் பிதாக்களான ப்ரஜாபதிகளுக்கும் பிரமனும் பிதாவாகையாலே அவர் ஸகலப்பிரஜைகளுக்கும் பிதாமஹன்;) அத்தகைத்த அவருக்கும் தேவரீர் பிதாவாகையாலே எல்லாருக்குந் தேவரீர் பிரபிதாமகன்.

நமோ நமஸ்தேऽஸ்து ஸஹஸ்ரக்ருத்வ: புநஶ்ச பூயோऽபி நமோ நமஸ்தே ||௩௯||

நம: புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே நமோऽஸ்து தே ஸர்வத ஏவ ஸர்வ |

(௩௯-௪௦) தேவரீரை ஆயிரந்தடவையாய்த் தண்டன் ஸமர்ப்பிக்கிறேன். மறுபடியும் பலதடவையாய் தேவரீரை நமஸ்கரிக்கிறேன். ஹே ஸர்வஸ்வரூப ! தேவரீருக்கு முன்னும் பின்னும் பக்கங்களிலும் எங்கும் எல்லாப்படிகளாலும் நமஸ்காரம் உண்டாகுக.

அநந்தவீர்யாமிதவிக்ரமஸ்த்வம் ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வ: ||௪௦||

(௪௦) ஓ அளவற்ற வீரியமுள்ளவனே ! உமது விக்கிரமத்தை யிவ்வளவென்றளவிடுவரால் வரையறுக்கப்படுமோ ? ஸகல வஸ்துக்களையும் (ஆத்மாவாய்) வியாபித்திருக்கிறீராகையால் ஸர்வமும் நீரே.

ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம் ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி |
அஜாநதா மஹிமாநம் தவேதம் மயா ப்ரமாதாத் ப்ரணயேந வாபி ||௪௧||

யச்சாவஹாஸார்த்தமஸத்க்ருதோऽஸி விஹாரஶய்யாஸநபோஜநேஷு |
ஏகோऽதவாப்யச்யுத தத்ஸமக்ஷம் தத்க்ஷாமயே த்வாமஹமப்ரமேயம் ||௪௨||

(௪௧-௪௨) ஓ அச்யுத! அளவற்ற வீரியமும் அப்படிப்பட்ட பராக்கிரமமும் ஸகலப்பிராணிகளுக்கும் ஆத்மாவாயிருப்பதும் இவையும் இப்படிப் பட்ட

http://acharya.org

டியாகவுமிருக்கின்ற தேவரீருடைய மஹிமைதெரியாமல் அடியேன் அஜ்ஞா நத்தாலும் அதிகபரிசயத்தாலும் தேவரீரைத் தோழனென்று நினைத்து, அடா கிருஷ்ணா! அடாதோழா! அடா யாதவா! என்று சிறிதும் விநயமில்லாமல் அழைத்து வந்தேனே! என்னையனே! ஸர்வவிதத்திலும் ஸத்கரிக்கவேண்டிய தேவரீரை இப்படி யிழித்துப்பேசினேனே! இன்னும் படுக்கும்பொழுதும் கூடியிருக்கும்பொழுதும் ஸஞ்சரிக்கும்பொழுதும் போஜநஞ் செய்யும்பொழுதும் அடியேன் செய்தபிழை கணக்கில்லை; ஆகையால் அவைகளையெல்லாம் கிருபையாய்ப்பொறுத்தருளவேண்டும் என்னப்பனே!

𑌪𑌿𑌤𑌾𑌸𑌿 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌚𑌰𑌾𑌚𑌰𑌸𑍍𑌯 𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯 𑌪𑍂𑌜𑍍𑌯𑌶𑍍𑌚 𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌗
𑌰𑍀𑌯𑌾𑌨𑍍 | 𑌨 𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌮𑍋𑌸𑍍𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑍋 𑌕𑍁𑌤𑍋𑌨𑍍𑌯𑍋 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰
𑌯𑍇𑌪𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌪𑍍𑌰𑌭𑌾𑌵 || ௪௩ ||

(௪௩) ஒப்பில்லாதப் பிரபாவந்தங்கிய ஓபகவானே! சராசரரூபமான ஸகல லோகத்துக்கும் தேவரீரோ பிதாவாயும் குருவாயும் இருக்கையால் எல்லாராலும் பூஜிக்கத்தகுந்திருக்கிறது. ஆகையால் இம்மூவுலகத்திலும் கருணை முதலிய எவ்விதக்குணங்களாலும்தேவரீருக்குஸமமானமானவாள்கிடையாது; அப்படியிருக்க அதிகனாய் ஒருவனிருப்பனோவென்கிற ஸந்தேஹத்துக்கு இடந்தானுண்டோ?

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌯 𑌕𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌮𑍀𑌶𑌮𑍀
𑌡𑍍𑌯𑌮𑍍 | 𑌪𑌿𑌤𑍇𑌵 𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌸𑌖𑍇𑌵 𑌸𑌖𑍍𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌯𑌾𑌰𑍍𑌹𑌸𑌿
𑌦𑍇𑌵 𑌸𑍋𑌢𑍁𑌮𑍍 || ௪௪ ||

(௪௪) யாவர்க்கும் பிதாவாய் யாவராலும் பூஜிக்கப்படும் குருவாய் கருணைமுதலிய குணங்களால் ஸர்வாதிகனாயிருக்கையாலே ஸர்வேசுவரனான தேவரீரைத் தண்டன்ஸமர்ப்பித்துக் கெஞ்சுகின்றேன். குற்றஞ்செய்தவனாயினும்,புத்திரன் பிதாவைவணங்கினானாகில் அந்தப்பிதாவும்,அப்படியே இஷ்டமானவன் அவன்தோழனைத் தண்டனிட்டு வேண்டிக்கொண்டானாகில் அந்தத் தோழனும், இரங்குவதுபோல் அடியேனிடத்தில் விசேஷகடாக்ஷமுள்ளவரானதேவரீர் பிரியனான அடியேனுக்காக வெல்லாவற்றையும் பொறுத்தருளவேண்டும்.

𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌹𑍃𑌷𑌿𑌤𑍋𑌸𑍍𑌮𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌭𑌯𑍇𑌨 𑌚 𑌪𑍍𑌰𑌵𑍍𑌯𑌥𑌿
𑌤𑌂 𑌮𑌨𑍋 𑌮𑍇 | 𑌤𑌦𑍇𑌵 𑌮𑍇 𑌦𑌰𑍍𑌶𑌯 𑌦𑍇𑌵 𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦 𑌦𑍇𑌵𑍇𑌶 𑌜
𑌗𑌨𑍍𑌨𑌿𑌵𑌾𑌸 || ௪௫ ||

(௪௫) ஒருநாளுங்கண்டிராத தேவரீருடைய உக்கிரமான விசுவரூபத்தைக்கண்டு அடியேனுள்ளங் களிகூர்ந்தது. மறுபடியும் பயத்தால் நடுங்கிப்போகிறது. ஆகையால் ஸகலலோகத்துக்கு மிருப்பிடமாய் பிரம்மாதிகளான ஸகலதேவர்களுக்கும் ஈசனான எனதாண்டவனே! அடியேனுக்கு முன்போலவே தேவரீர் ஸுப்ரஸந்நமான திருமேனியோடு ஸேவைஸாதித்தருளவேண்டும்.

𑌕𑌿𑌰𑍀𑌟𑌿𑌨𑌂 𑌗𑌦𑌿𑌨𑌂 𑌚𑌕𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌹𑌂 𑌤𑌥𑍈𑌵 |
𑌤𑍇𑌨𑍈𑌵 𑌰𑍂𑌪𑍇𑌣 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑍇𑌨 𑌸𑌹𑌸𑍍𑌰𑌬𑌾𑌹𑍋 𑌭𑌵 𑌵𑌿
𑌶𑍍𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑍇 || ௪௬ ||

http://acharya.org

(௪௬) ஓ ஸ்வாமி! முன்போலவே கிரீடமும் கதையும் திருச்சக்கரமுமாகத் தேவரீரை ஸேவிக்க விரும்புகிறேனாகையால் ஆயிரந்திருக்கைகளுள்ள இந்த விசுவரூபத்தைமாற்றிச் சதுர்ப்புஜனாயிருந்த † முன் ஸேவையையே ஸாதித்தருளவேண்டும்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚॥ 𑌮𑌯𑌾 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍇𑌨 𑌤𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑍇𑌦𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌪𑌰𑌂 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌮𑌾𑌤𑍍𑌮𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 । 𑌤𑍇𑌜𑍋𑌮𑌯𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌨𑌨𑍍𑌤𑌮𑌾𑌦𑍍𑌯𑌂 𑌯𑌨𑍍𑌮𑍇 𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑍇𑌨 𑌨 𑌦𑍃𑌷𑍍𑌟𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 ॥ ௪௭ ॥

(௪௭) அதற்கு எம்பெருமானருளிச்செய்வது:—அர்ச்சுந! தேஜோமயமாய் விசுவரூபமாய் ஆதிமத்தியாந்தரஹிதமாய் ஸகலபதார்த்தங்களுக்குமாதியாயிருக்கிற இந்த நம்முடையரூபத்தை உன்னைத்தவிர மற்றொருவருக்கும் நாம் காட்டினதில்லை; கேவலம்நம்மிடத்தில் பக்தியுள்ளவனாயிருக்கிறாயென்று நமது ஸத்திய ஸங்கல்ப யோகத்தாலே உனக்கு நாம் இந்த துர்லபமான ஸேவையைத்தந்தோம்.

(அ-கை.) பக்தியைத்தவிர மற்றொன்றாலும் தம்மை உள்ளபடி யறிவதரிதென்கிறார்.

𑌨 𑌵𑍇𑌦𑌯𑌜𑍍𑌞𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑍈𑌰𑍍𑌨 𑌦𑌾𑌨𑍈𑌰𑍍𑌨 𑌚 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌭𑌿𑌰𑍍𑌨 𑌤𑌪𑍋𑌭𑌿𑌰𑍁𑌗𑍍𑌰𑍈𑌃 । 𑌏𑌵𑌂𑌰𑍂𑌪𑌃 𑌶𑌕𑍍𑌯 𑌅𑌹𑌂 𑌨𑍃𑌲𑍋𑌕𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌤𑍍𑌵𑌦𑌨𑍍𑌯𑍇𑌨 𑌕𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌵𑍀𑌰 ॥ ௪௮ ॥

(௪௮) அர்ச்சுந! இப்படிப்பட்ட நம்முடைய உண்மையானநிலையை நம்மிடத்தில் பக்திமானான உன்னைத்தவிர மற்றவர்களால் நிரதிசயமான பக்தியுண்டானால் மாத்திரம் அறியலாமேயல்லது மற்றப்படி யக்ஞத்தாலாவது தானத்தாலாவது மற்றுங் கிரியைகளாலாவது உக்கிரமான தவத்தாலாவது எத்தாலும் அறியப்போகாது.

𑌮𑌾 𑌤𑍇 𑌵𑍍𑌯𑌥𑌾 𑌮𑌾 𑌚 𑌵𑌿𑌮𑍂𑌢𑌭𑌾𑌵𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌰𑍂𑌪𑌂 𑌘𑍋𑌰𑌮𑍀𑌦𑍃𑌙𑍍𑌮𑌮𑍇𑌦𑌮𑍍 । 𑌵𑍍𑌯𑌪𑍇𑌤𑌭𑍀𑌃 𑌪𑍍𑌰𑍀𑌤𑌮𑌨𑌾𑌃 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌤𑌦𑍇𑌵 𑌮𑍇 𑌰𑍂𑌪𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯 ॥ ௪௯ ॥

(௪௯) இப்படிப்பட்ட கோரரூபத்தைக் காண்பதனால் நீ தொந்திரவுபட்டு மயங்கிப்போகாதே; உனக்குப் பழக்கமான முந்திய ஸௌம்மியரூபத்தையே காட்டுகிறேன் அதையேகண்டு ஸேவி.

(அ-கை.) ஸஞ்சயன்சொல்வது.

𑌸𑌞𑍍𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚 ॥ 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌜𑍁𑌨𑌂 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌤𑌥𑍋𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌕𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑌾𑌮𑌾𑌸 𑌭𑍂𑌯𑌃 । 𑌆𑌶𑍍𑌵𑌾𑌸𑌯𑌾𑌮𑌾𑌸 𑌚 𑌭𑍀𑌤𑌮𑍇𑌨𑌂 𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 𑌸𑍌𑌮𑍍𑌯𑌵𑌪𑍁𑌰𑍍𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ ௫௦ ॥

---

† ஸர்வேசுவரனானஇந்த பரமபுருஷன் லோகோபகாரார்த்தமாகப்பூமியில் மனுஷ்யனாயவதரித்தபோது சதுர்ப்புஜனாகவே அவதரித்தார்; உடனே தேவகீ வஸுதேவர்களிருவரும் வேண்டிக்கொண்டதின்பேரில் கம்ஸனைக் கொல்லுகிறவனாயில் இரண்டுதிருத்தோள்களுடனிருந்து பின்னிட்டு நான்கு திருத்தோள்களுடனே யெழுந்தருளியிருந்தார். சத்துருவான சிசுபாலனும் 𑌉𑌦𑌾𑌰𑌵𑍀𑌰 𑌤𑌨𑍂𑌸𑍍𑌤𑌾𑌵𑍋𑌨𑍁𑌹𑌾𑌂𑌸𑍍𑌪𑍃𑌹𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑌦𑌾𑌯𑌾𑌰𑍍 என்று ச

http://acharya.org

(௫௦) இப்படி பாண்டுகுமாரனைப்பார்த்து பகவான் அருளிச்செய்து மறுபடியும் தம்முடைய சதுர்ப்புஜமான திருமேனியோடுகூடி ஸேவைஸாதித்தார்; அதுவுமின்றி பழக்கமில்லாத ஸ்வரூபத்தைக்கண்டுபயந்த இவனைப் பழக்கமான திருமேனியோடு கூடியவராயிருந்து ஸமாதாநமுஞ்செய்தார்.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚॥ 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑍇𑌦𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌤𑌵 𑌸𑍌𑌮𑍍𑌯𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨।
𑌇𑌦𑌾𑌨𑍀𑌮𑌸𑍍𑌮𑌿 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌸𑌚𑍇𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌗𑌤𑌃॥ ௫௧॥

(௫௧) அர்ச்சுநன் சொல்லுகிறான் - ஓ ஜநார்த்தந! அளவில்லாத அதிசயம்பொருந்திய லாவண்யம் ஸௌந்தரியம் ஸௌகுமாரியம் முதலானவைகளோடு கூடியதாய் தேவரீருக்கே உரியதாய் மிகவும் ஸௌம்யமாயுள்ள மனுஷ்யாகாரமான இத்திருமேனியை ஸேவித்தபின்புதான் அடியேனுக்குப் பிராணனும் நிலைத்துப் பிரக்ஞையும் வந்தது.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚॥ 𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌦𑌰𑍍𑌶𑌮𑌿𑌦𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌯𑌨𑍍𑌮𑌮।
𑌦𑍇𑌵𑌾 𑌅𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌃॥ ௫௨॥

(௫௨) அதற்கு எம்பெருமானருளிச்செய்வது. அர்ச்சுந! இப்பொழுது உனக்குக்காட்டின இந்த நம்முடைய (யாவரையுமாளும்படியான) ரூபத்தைக்காண்பதற்கு ஒருவராலும் முடியாது. இதை ஸேவிக்கவேண்டுமென்று தேவர்களெல்லாம் எத்தனையோகாலமாய் எதிர்பார்த்திருக்கிறார்களே யல்லது ஒருவராவது ஸேவித்ததில்லை.

(அ-கை.) அதெதினாலென்றால்.—

𑌨𑌾𑌹𑌂 𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌨 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌨 𑌚𑍇𑌜𑍍𑌯𑌯𑌾।
𑌶𑌕𑍍𑌯 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍋 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌵𑌾𑌨𑌸𑌿 𑌮𑌾𑌂 𑌯𑌥𑌾॥ ௫௩॥
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯 𑌅𑌹𑌮𑍇𑌵𑌂𑌵𑌿𑌧𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌪𑌰𑌂𑌤𑌪॥ ௫௪॥

(௫௩-௫௪) வேதங்களை ஓதுவது ஓதுவிப்பது முதலியவைகளாலாவது யாகத்தாலாவது ஹோமத்தாலாவது தவத்தாலாவது,பக்தியில்லாமல் மற்றெவ்விதத்தாலும் நம்மை உள்ளபடியே காண்பதரிது; மற்றப்படி நம்மையே நாடியபக்தியுண்டானால் மாத்திரந்தான் சாஸ்திரத்தைக்கொண்டு நம்மை உள்ளபடியறியவாவது பிரத்தியக்ஷமாய் ஸேவிக்கவாவது அடையவாவது கூடும். இப்படியேசுருதியும் 𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨। 𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌤𑌨𑍂𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍॥ என்று சொல்லுகிறது.

𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌨𑍍𑌮𑌤𑍍𑌪𑌰𑌮𑍋 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌸𑌙𑍍𑌗𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃।
𑌨𑌿𑌰𑍍𑌵𑍈𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌯𑌃 𑌸 𑌮𑌾𑌮𑍇𑌤𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵॥ ௫௫॥

(௫௫) வேதமோதல் முதலான ஸகலகர்மங்களும் நம்முடைய ஆராதநரூபமென்று செய்பவனும், எந்ததொழிலைச்செய்தாலும் எல்லாம் கிருஷ்

துர்ப்புஜனாகவே எந்தவேளையும் நினைத்திருந்தான்; ஆகையினால் அர்ச்சுநன் சதுர்ப்புஜனாகவே முன்பு ஸேவித்ததாகச் சொல்லபபடுகிறது.

http://acharya.org

ணுக்கென்று செய்பவனும், நம்மிடத்தில் மிகுந்தபக்தியாலே நம்மைப்பாடியும் சிந்தித்தும் அர்ச்சித்தும் பணிந்தும் பொழுதுபோக்குமவனும், இன்னுமிப்படி நம்விஷயமாகவே காலத்தைக்கழிக்காவிடில் தரிக்கமாட்டாமலிருபவனும், நம்மையேபற்றியிருக்கையாலே மற்றவைகளிற் பொருந்தாதவனும் ஒருப்பிராணியையும் பகைக்காதவனும் (அதாவது:—நம்மைப்பிரிந்தால் துயரமும் நம்மைக் கூடினால்கொண்டாட்டமுமா யிருப்பவனாகையால் தனக்கு ஏதேனும் துயரம் நேரிட்டால் அது தான்செய்தபிழையின் பயனென்று நினைப்பதனாலும் ஸகலபூதங்களும் பகவானுடைய நமக்கு ஆட்பட்டதென்று நினைப்பதனாலும் ஒரு பூதத்தையும் பகைப்பதற்குக் காரணமில்லாமையாலே பகைக்காதவனும்) எவனோ, அவன் தோஷங்கள் யாவையுமொழிந்து எப்போதும் நம்மையே அநுபவிப்பவனாவான்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பனிரண்டாவது அத்யாயம்.

அவதாரிகை.

பக்தியோக நிஷ்டர்களுக்குப்பயனாய் பரப்பிரம்மமாய் பரமபுருஷனாயிருக்கிற ஸ்ரீமந்நாராயணனுடைய தடையற்ற ஐசுவரியத்தைக் காணவாசைப்பட்டவர்ச்சுநனுக்கு, அளவில்லா வதிசயம் பொருந்திய கருணை, தண்ணளி, வண்மைமுதலிய கல்யாண குணங்களுக்குக் கடலாய் விளங்குகின்ற ஸத்தியஸங்கல்பனான ஸ்ரீகிருஷ்ணபகவானால், தம்முடைய ஈசுவரத்தன்மையானது உள்ளபடியே காண்பிக்கப்பட்டதென்றும், அப்படியே எம்பெருமானை உள்ளபடியே சாஸ்திரமுகத்தாலறிவதும் பிரத்தியக்ஷமாய்க் காண்பதும் மறறப்படி எப்போதும் அவன் ஸந்நிதியிலிருப்பதும் எல்லாம் அவனைவிட்டு நீங்காத பக்தியுண்டாகில்தான் கிடைக்குமென்றுஞ் சொல்லப்பட்டது. இப்பொழுது அந்தமப்பிராப்திக்குச் சாதநமான ஆத்மோபாஸநத்தைக்காட்டிலும் பக்திரூபமான பகவத் உபாஸநம் (பலனை வருத்தமின்றி விரைவில்அளிக்குமாகையால்) § சிறந்ததென்றும், எம்பெருமானை உபாஸிக்கவேண்டுமுபாயமின்னவிதமென்றும், அதைச்செய்யச் சக்தியற்றவன் அக்ஷரமென்கிறமுக்தஸ்வரூபநிஷ்டையி லிருக்கவேண்டுமென்றும் மற்றும்அவனுக்கு வேண்டும் விஷயங்களிவையென்றுஞ் சொல்லப்படுகின்றது.

§ சிறந்த தென்கிற விஷயம் தேஷாமஹம் ஸமுத்தர்த்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் ... என்கிற விடத்தில் சொல்லப்பட்டது.

http://acharya.org

अर्जुन उवाच ॥ एवं सततयुक्ता ये भक्तास्त्वां पर्युपासते। ये चाप्यक्षरमव्यक्तं तेषां के योगवित्तमाः ॥ ௧ ॥

(௧) அர்ச்சுநன் சொல்வது:—ஓ பகவானே! தேவரீர் கீழே அருளிச்செய்தபடி தேவரீரையே யெப்பொழுதும் பெரும்பயனாக நினைத்த பக்தர்களாய், தேவரீரை (ஸகல ஐசுவரியத்தோடு கூடியிருப்பவராகவும், அளவிலாவதிசயம் பொருந்திய ஸௌந்தரியம் ஸௌசீல்யம் ஸர்வஜ்ஞத்வம் ஸத்யஸங்கல்பத்வம் முதலிய வெண்ணிறந்த குணங்களுக்குக்கடலாயிருப்பதாகவும்) எவர்கள் உபாஸிக்கிறார்களோ அவர்களும், எவர்களானால் அக்ஷரமென்கிற பிரத்யகாத்ம ஸ்வரூபத்தை (அதாவது முக்தஸ்வரூபமான ஜீவனை) கண்முதலிய புலன்களாலறியப்படாதென்பதாக உபாஸிக்கிறார்களோ அவர்களுமான இவ்விருதிறத்தாரில் தாங்கோரிய பயனை விரைவில் கிடைக்கப்பெறுவார் யாவர்? அதை யருளிச்செய்யவேண்டும்.

श्रीभगवानुवाच ॥ मय्यावेश्य मनो ये मां नित्ययुक्ता उपासते। श्रद्धया परयोपेतास्ते मे युक्ततमा मताः ॥ ௨ ॥

(௨) எம்பெருமானருளிச்செய்வது:—மிகவும் நம்மிடத்தில் பிரீதியாலே மனத்தை நம்மிடத்தில் வைத்து மிகுந்த சிரத்தையோடு கூடி நித்தியமாய் நம் ஸன்னிதியிலிருப்பையாசைப்பட்டு யாவர்கள் நம்மை உபாஸிக்கிறார்களோ அவர்கள்தான் மிகவும் யுக்தர்கள்; [அதாவது தாங்கோரிய பயனாயிருக்கிற நம்மை விரைவில் வருத்தமின்றி யடையுமவர்களென்றபடி.]

ये त्वक्षरमनिर्देश्यमव्यक्तं पर्युपासते।
सर्वत्रगमचिन्त्यं च कूटस्थमचलं ध्रुवम् ॥ ௩ ॥
सन्नियम्येन्द्रियग्रामं सर्वत्र समबुद्धयः।
ते प्राप्नुवन्ति मामेव सर्वभूतहिते रताः ॥ ௪ ॥
क्लेशोऽधिकतरस्तेषामव्यक्तासक्तचेतसाम्।
अव्यक्ता हि गतिर्दुःखं देहवद्भिरवाप्यते ॥ ௫ ॥

(௩-௪-௫) எவர்கள் பிரத்யகாத்மஸ்வரூபத்தை (அதாவது ஜீவனை) தேவனென்றாவது மனிதனென்றாவது மற்றும் எந்தவிதமாகவாவது குறிக்கத்தகாததாகவும், அதுபற்றியே கண்முதலிய புலன்களுக்குப் புலப்படாததாகவும், தேவர்முதலிய சரீரங்களிலெல்லாமிருக்கச்செய்தே அவ்வவ்விதமாக நினைக்கத்தகாததாகவும், ஆனதினாலே அந்தந்த தேவாதிகளுக்கடுத்த உருவங்களில் கட்டுப்படாததாகவும், விகாரமற்றதாகையாலே தன்வடிவத்தினின்று மாறுபடாததாகவும், அதுபற்றியே நித்தியமானதாகவு மிப்படியெல்லாமிருப்பதாக உபாஸிக்கிறார்களோ, அதுவுமின்றி உபாஸிக்கும்போது கண்முதலிய புலன்களையெல்லாம் தந்தம் வியாபாரங்களினின்றுமடக்கி ஸமபுத்திகளாய், (அதாவது ஆத்மாவானது ஞானமேவடிவமாய் எங்கும் ஒரே ரீதியாயி

http://acharya.org

ருக்கிறதென்று நினைத்தவர்களாய்) அதனால் ஸகல பூதங்களிடத்தும் பிரீதியை யொழித்தவரா யிருக்கிறார்களோ; அவர்கள் ஸம்ஸாரத்தினின்றும் விடுபட்டு நமக்கு ஸமமாய் விளங்குகின்ற * முக்தஸ்வரூபத்தை யடைகின்றார்கள்.

(அ-கை.) எம்பெருமானை உபாஸிப்பவர்கள்தான் யுக்ததமரென்கிற விஷயத்தைத் தெளிவாயருளிச்செய்கிறார்.

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸந்ந்யஸ்ய மத்பரா:|
அநந்யேநைவ யோகேந மாம் த்⁴யாயந்த உபாஸதே||௬||
தேஷாமஹம் ஸமுத்³த⁴ர்தா ம்ருத்யுஸம்ஸாரஸாக³ராத்|
ப⁴வாமி ந சிராத்பார்த² மய்யாவேஶிதசேதஸாம்||௭||

(௬-௭) எவர்களானால் தேஹத்தைத் தரிப்பதற்காகச் செய்யவேண்டுஞ் சில (லௌகிக) கர்மங்களையும், யாகம், தானம், தவம், ஹோமம் முதலிய வைதிககர்மங்களையும், அவற்றின் காரணங்களோடும் உத்தேசத்தோடும் நம்மிடத்தில் ஸமர்ப்பித்து நம்மையே பெரும்பயனாயெண்ணி வேறுயாதொன்றையும் விரும்பாமல் நம்மைத்தியாநஞ்செய்து உபாஸிக்கிறார்களோ (அதாவது- தியாநம் அர்ச்சநம் பிரணமம் ஸ்துதி கீர்த்தநம் முதலியவைகளை ஸ்வயம் போக்கியமாயும் பரமப்பிராப்பியத்துக்கு ஸமமாயுஞ் செய்து வருகிறார்களோ) அவர்களை, நம்மோடு சேரவொட்டாமல் விரோதிக்கின்ற யமனை ஸம்ஸாரத்தினின்றும் வெகு சீக்கிரத்தில் விடுவிக்கிறோம்.

மய்யேவ மந ஆத⁴த்ஸ்வ மயி பு³த்³தி⁴ம் நிவேஶய|
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்⁴வம் ந ஸம்ஶய:||௮||

(௮) ஆகையால் எளிதில் விரைவில் கிடைக்கின்ற ஈடில்லாத பெரும்பயனாயிருக்கிற நம்மிடத்தில்தானே மனதைவைத்து நாமேதான் அடையவேண்டும் பேறென்கிற வெண்ணங்கொள். இப்படியானால்தான் அதற்குமேல் நம்மிடத்தில் தானே நித்தியமா யிருந்துவாழ்வாய். இதில் சிறிதும் ஸந்தேஹமில்லை.

அத² சித்தம் ஸமாதா⁴தும் ந ஶக்நோஷி மயி ஸ்தி²ரம்|
அப்⁴யாஸயோகே³ந ததோ மாமிச்சா²ப்தும் த⁴நஞ்ஜய||௯||

(௯) அர்ச்சுந! விரைவில் நம்மிடத்தில் சலியாமல் மனம் வைக்க உன்னால் ஆகாதபக்ஷத்தில் அப்பியாஸயோகத்தாலே நம்மை யடையவிரும்பு; [அதாவது - ஸ்வபாவமாகவே எல்லையில்லாத அதிசயம்பொருந்திய ஸௌ

---

* முக்தஸ்வரூபம் எம்பெருமானுக்கு ஸமமாய் விளங்குகிறதென்கிற விஷயம், ஸாத⁴ர்ம்யமாக³தா: என்று மேலே அருளிச்செய்யப்போகிறானன்றோ? சுருதியும் நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி என்று சொல்லுகிறது. அப்படியே அக்ஷரசப்தத்தால்சொன்ன முக்தஸ்வரூபத்தைக்காட்டிலும் பரப்பிரம்மம் வேறுபட்டிருக்கிறதென்கிற விஷயமும் கூடஸ்தோऽக்ஷர உச்யதே உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதா³ஹ்ருத: என்று மேலே சொல்லப்படுகிறது.

http://acharya.org

ந்தரியம் ஸௌகுமாரியம் ஸௌஹார்த்தம் வாத்ஸல்யம் காருண்ணியம் மாதுரியம் காம்பீரியம் ஔதாரியம் சௌரியம் வீரியம் பராக்கிரமம் ஸர்வக்ஞத்வம் † ஸத்யகாமத்வம் $ ஸத்யஸங்கல்பத்வம் ஸர்வேசுவரத்வம் ஸகலகாரணத்வம் முதலிய கல்யாண குணங்களுக்கெல்லாம் ஸாகரமாய், ஸகலஹேயங்களுக்குமெதிர்த்தட்டாயிருக்கும் நம்மிடத்தில் எல்லையில்லாதப் பிரீதியையுட்கொண்ட ஸ்மிருதி ரூபமான அப்பியாஸயோகத்தாலே மனதை ஸ்திரமாகநிறுத்தி நம்மை யடையப்பாரென்றபடி.]

𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑍇𑌽𑌪𑍍𑌯𑌸𑌮𑌰𑍍𑌥𑍋𑌽𑌸𑌿 𑌮𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌪𑌰𑌮𑍋 𑌭𑌵।
𑌮𑌦𑌰𑍍𑌥𑌮𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 ॥ ௧௦ ॥

(௧௦) இனி யிப்படிப்பட்ட அப்பியாஸஞ்செய்வதிலும் உனக்கு ஸாமர்த்தியமில்லாத பக்ஷத்தில் நம்முடைய கைங்கரியங்களைச்செய்; [அதாவது-திருக்கோயில் சமைப்பது, திருநந்தவனம் வளர்ப்பது, திருவிளக்கு ஸமர்ப்பிப்பது, திருவிலகு சேர்ப்பது, திருநீர்தெளிப்பது, திருமாலைதொடுப்பது, திருவாராதநஞ் செய்வது, திருநாமஸங்கீர்த்தனம் செய்வது, திருப்பிரதக்ஷிணஞ்செய்வது, திருப்பல்லாண்டு பாடுவது, தண்டன்ஸமர்ப்பிப்பது முதலான நம் கைங்கரியங்களை மிகவும் பிரீதியோடு செய்] மிகவும் பிரீதியோடு நம் கைங்கரியங்களைச் செய்துவந்தால் வெகு சீக்கிரத்தில் அப்பியாஸயோகத்தை யடைந்து அதனால் நம்மிடத்தில் நிலைபெற்ற மனதுடன்கூடிப் பிறகு (நம்மை யடைவதென்கிற) ஸித்தியைப்பெறுவாய்.

𑌅𑌥𑍈𑌤𑌦𑌪𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑍋𑌽𑌸𑌿 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌮𑌦𑍍𑌯𑍋𑌗𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃।
𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑌂 𑌤𑌤𑌃 𑌕𑍁𑌰𑍁 𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ॥ ௧௧ ॥

(௧௧) அப்படி நங்குணங்களைச் சிந்தித்தபடியேயிருந்து நமக்கே பிரியமான பக்தியோகத்தையடைந்து அந்த பக்தியின் ஆரம்பதசையான கீழ்ச்சொன்ன நங்கைங்கரியத்தைச் செய்வதற்கும் உன்னாலாகாத பக்ஷத்தில், பரபக்திக்கு ஹேதுவாய் முதல் ஆறு அத்தியாயங்களில் சொல்லப்பட்ட (ஆத்மஸ்வபாவ அநுஸந்தாநரூபமான) அக்ஷரயோகத்தைக் கைப்பற்றி அதற்கு உபாயமாக ஸகலகர்மபலங்களிலும் பற்றை விட்டிரு.

[அப்படி பலாபேக்ஷையின்றி நம்முடைய ஆராதநரூபமாய் அநுஷ்டிக்கப்பட்ட கர்மத்தால் ஸித்தித்த ஆத்மத்தியாநத்தாலே அவித்தைமுதலியவெல்லாமறைவுகளும் நீங்கி, பிறகு நமக்கு ஆளாயிருக்கையேஸ்வரூபமான ஜீவாத்மஸாக்ஷாத்காரம்பிறந்து பிறகு தன்னடையே நம்மிடத்தில் சிறந்தபக்தியுண்டாகுமென்று திருவுள்ளம்.[இப்படியே§மேலேஅருளிச்செய்யப்போகிறார்.]

† ஆசைப்பட்டதை யடையுந்திறமை

$ நினைத்ததைச்செய்து முடிக்குந்திறமை.

§ 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃 என்று தொடங்கி 𑌵𑌿𑌮𑍁𑌚𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌯𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌭𑍂𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌮𑌾 𑌨 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌨 𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑌿। 𑌸𑌮𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌪𑌰𑌾𑌮𑍍 என்று மளவாக வருளிச்செய்யப்போகிறார்.

http://acharya.org

𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌭𑍍𑌯𑌾𑌸𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌯𑌤𑍇|
𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍍||கஉ||

(கஉ) கனத்தபக்தியில்லாமல் (எம்பெருமானை ஸ்மரிப்பதென்கிற) அப்பியாஸயோகம் செய்வது கடினமாகையால் அதைக்காட்டிலும் (ஆத்மாவின் உண்மையைச் சிந்தித்திருந்து அதனால்) அக்ஷரமென்னும் ஆத்மஸ்வரூப ஸாக்ஷாத்காரஞ் செய்வதே (ஆத்மாவுக்கு இதஞ்செய்வதில்) சிறந்தது. (ஸித்தியாகாத) ஆத்மஸ்வரூப ஸாக்ஷாத்கார ஞானத்தைப்பார்க்க (அதற்கு உபாயமான) ஆத்மஸ்வரூபத்தியானமே (ஆத்மாவுக்கு நன்மை செய்வதில்) சிறந்தது. (ஸித்தியாகாத) அந்த ஆத்மஸ்வரூபத்தியானத்தைக் காட்டிலும் (அதற்குபாயமான) பலாபேக்ஷையற்ற கர்மாநுஷ்டானமே சிறந்தது. இப்படி பலாபேக்ஷையின்றிக் கர்மத்தை யநுஷ்டித்தால் உடனே பாவம் நசிக்கையாலே மனதுக்கு சாந்தி பிறக்கும். [அப்படி மனது சாந்தியடைந்தால் ஆத்மத்தியானம் கைபுகுதும். அந்தத் தியானத்தால் ஆத்மப்பிரத்தியக்ஷம் பிறக்கும்; ஆத்மப்பிரத்தியக்ஷ ஞானத்தால் பரபக்தியுண்டாகுமென்று திருவுள்ளம்.]

[இதனால் பக்தியோகஞ்செய்யச் சக்தியற்றவனுக்கு ஆத்மநிஷ்டையே சிறந்தது; அந்த ஆத்மநிஷ்டையும் மனது சாந்தமாகாத பக்ஷத்தில் நிலைக்கமாட்டாதாகையால் அதைக்காட்டிலும் அது நிலைப்பதற்காக ஆத்மஞானத்தையுட் கொண்டு பலாபேக்ஷையின்றிச் செய்யும் கர்மநிஷ்டையே மேலானது என்றதாயிற்று.]

(அ-கை.) பலாபேக்ஷையின்றிக் கர்மயோகஞ் செய்பவனுக்கு வேண்டுங்குணங்கள் சொல்லப்படுகின்றன.

𑌅𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌾 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑍈𑌤𑍍𑌰𑌃 𑌕𑌰𑍁𑌣 𑌏𑌵 𑌚|
𑌨𑌿𑌰𑍍𑌮𑌮𑍋 𑌨𑌿𑌰𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 𑌸𑌮𑌦𑍁𑌃𑌖𑌸𑍁𑌖𑌃 𑌕𑍍𑌷𑌮𑍀 ||கங||

𑌸𑌨𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌯𑍋𑌗𑍀 𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌦𑍃𑌢𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃|
𑌮𑌯𑍍𑌯𑌰𑍍𑌪𑌿𑌤𑌮𑌨𑍋𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑍋 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌃 𑌸 𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃 ||கச||

(கங-கச) (தன்னைப்பகைத்தாலும் தன விஷயத்தில் உபகாரஞ்செய்ததாலும்) ஒருப்பிராணியையும் பகைக்காமல் "என்னுடைய பிழைக்குத்தக்கபடி எம்பெருமானாலேவப்பட்ட வினைகளை விரோதிக்கின்றன"வென்றும், அப்படியே "இவைகள் உபகாரஞ்செய்கின்றன" என்றும நினைத்தவனாய், (தன்னைப பகைப்பதோ தனக்கு உபகாரஞ்செய்வதோ) எந்தப்பிராணியிடத்திலும் ஸ்நேஹபுத்தியைச்செய்து வந்து, (அவைகளுக்குத் துயர் நேரிட்டால் அவைகளிடத்தில) கருணைபுரியுமவனாய், (சரீரம் இந்திரியம் மற்றும் அவைகளைச் சேர்ந்தவை இவையெல்லாவற்றிலும்) எனதென்கிற அபிமானமில்லாமல் (தேஹமே ஆத்மாவென்கிறப்) பிராந்தியற்றவனாய், இன்பதுன்பங்களை (முறையே விரும்பாமலும் வெறுக்காமலும்) ஸமமாகவெண்ணியவனாய், (அப்படி யிவ னெண்ணினாலும் இவற்றை ஒழிக்கப்போகாமல் வருகின்ற சீதோஷ்ணாதி

http://acharya.org

களைப்)பொறுத்தவனாய், தன்னடையே கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷித்தவனாய், எப்போதும் (பிரகிருதிக்குப்புறம்பான ஆத்மஸ்வரூபத்தையே) சிந்தித்திருப்பவனாய், மனதைக்(கண்டபடியோடவொட்டாமல்) அடக்கி,(அத்தியாத்மசாஸ்திரத்தில் சொன்னவர்த்தங்களில்) திடமானநிச்சயத்தோடு, "பகவானான வாசுதேவனே பலாபேக்ஷயின்றி யநுஷ்டிக்கப்படுங் கர்மத்தால் ஆராதிக்கப்பட்டவனாய் எனக்கு ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை யுண்டுபண்ணிக் கொடுக்கப்போகிறானென்று" மனதையும் புத்தியையும் நம்மிடத்தில் வைத்தவனாயெவனிருக்கிறானோ அந்த பக்தன் நமக்கு இஷ்டன்.

யஸ்மாந்நோத்விஜதே லோகோ லோகாந்நோத்விஜதே ச ய꞉|
ஹர்ஷாமர்ஷபயோத்வேகைர்முக்தோ ய꞉ ஸ ச மே ப்ரிய꞉||கரு||

(கரு) கர்மநிஷ்டனான யாவனொருவன் லோகத்திற்குப் பிரதிகூலமாயிருக்கும்படிசிறிதுஞ் செய்யமாட்டானோ,எவனைக்குறித்து ஒருப்பிராணியும் விரோதஞ்செய்யமாட்டாதோ,[என்றால் இவன்ஒன்றையும் விரோதமாகநினைப்பவனல்ல னென்றபடி] இப்படியிருக்கையாலே ஒருவஸ்துவினிடத்திலும் ஸந்தோஷமாவது கோபமாவது பயமாவது பயங்கரமான செயலாவது செய்யாதவனாயிருக்கின்ற அப்படிப்பட்ட இவனும் நமக்கு இஷ்டன்.

அநபேக்ஷ꞉ ஶுசிர்தக்ஷ உதாஸீநோ கதவ்யத꞉|
ஸர்வாரம்பபரித்யாகீ யோ மத்பக்த꞉ ஸ மே ப்ரிய꞉ ||கசு||

(கசு) ஆத்மாவைத்தவிர மற்றொன்றிலும் அபேக்ஷயில்லாமல் சாஸ்திரத்தில் சொல்லிய திரவியங்களைக்கொண்டு சரீரத்தை வளர்த்தவனாய், சாஸ்திரோக்த வியாபாரங்களைத் தேர்ந்தநுஷ்டிப்பதில் ஸமர்த்தனாய், மற்றவைகளில் தட்டாதவனாய்,சாஸ்திரோக்தமான காரியங்களைச் செய்யும்பொழுது இவனால் ஒழிக்கப்போகாதபடி வருகின்ற சீதம் உஷ்ணம் முதலிவைகளில் துயரப்படாதவனாய் சாஸ்திரத்தில் சொன்னதைத்தவிர மற்றெந்தகருமத்தையுங் கைவிட்டவனாய், இப்படி யெவனிருக்கிறானோ அந்த பக்தன் எனக்கிஷ்டன்.

யோ ந ஹ்ருஷ்யதி ந த்வேஷ்டி ந ஶோசதி ந காங்க்ஷதி|
ஶுபாஶுபபரித்யாகீ பக்திமாந்ய꞉ ஸ மே ப்ரிய꞉ ||கஎ||

(கஎ) யாவனொருவன் லோகத்திலுள்ள மனுஷியாளுக்கு ஸந்தோஷ ஹேதுவாயிருப்பதைக்கொண்டு தான் ஸந்தோஷியாமலும், த்வேஷஹேதுவாயிருப்பதைக்கொண்டு த்வேஷப்படாமலும்,துயரத்துக்குக்காரணமான பெண்டுபிள்ளை வகைறுக்களின் நாசத்தைக்கண்டு துயரப்படாமலும், அப்படி ஒன்றும் நேராதபக்ஷத்தில் அதை வரட்டுமென்று கோரர்மலும், பாவம்போல் புண்ணியமும் ஸம்ஸாரஹேதுவாகையால் இரண்டையும் விட்டவனாய் எவன் என்னிடத்தில் மாத்திரம் பக்தியோடிருக்கிறானோ அவன் எனக்கு இஷ்டன்.

http://acharya.org

ஸம: ஶத்ரௌ ச மித்ரே ச ததா மாநாவமாநயோ:|
ஶீதோஷ்ணஸுகது:கேஷு ஸம: ஸங்கவிவர்ஜித: ||௧௮||
துல்யநிந்தாஸ்துதிர்மௌநீ ஸந்துஷ்டோ யேந கேநசித்|
அநிகேத: ஸ்திரமதிர்பக்திமாந்மே ப்ரியோ நர: ||௧௯||

(௧௮-௧௯) * சத்துரு மித்திரன் மானம் அவமானம் சீதம் உஷ்ணம் சுகம் துக்கம் இவைகளில் ஸமனாய், ஒன்றிலும் பற்றின்றி ஆத்மாவிடத்தில் சலியாத மனம்பொருந்தியிருக்கையாலே வீடு முதலியவைகளிற் பொருந்தாமல் என்னிடத்தில் பக்தியோடு கூடியவன் எனக்கு இஷ்டன்.

(அ-கை) ஆகையால் ஆத்மநிஷ்டனைப்பார்க்க பக்திநிஷ்டன் சிறந்தவனென்பதையருளிச்செய்யா நின்றுகொண்டு, தொடங்கின விஷயத்தைத் தலைக்கட்டுகிறார்.

யே து தர்ம்யாம்ருதமிதம் யதோக்தம் பர்யுபாஸதே|
ஶ்ரத்ததாநா மத்பரமா பக்தாஸ்தேऽதீவ மே ப்ரியா: ||௨௦||

(௨௦) தர்மத்தைவிட்டு நீங்காமல் அமிருதமயமாயிருக்கின்ற (அதாவது பலனுக்கேற்ற உபாயமாயிருக்கின்ற) இந்த பக்தியோகத்தை எவர்களானால் சொன்னபடி உபாஸிக்கிறார்களோ அவர்கள் நமக்கு மிகுதியும் இஷ்டர்கள்.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
பனிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பதின்மூன்றாவது அத்யாயம்.

:o.

அவதாரிகை.

முதல் ஆறு அத்தியாயங்களில், பரம பலமாய்ப்பரப்பிரம்மமாயிருக்கிறபகவானாகிய வாஸுதேவனை யடைவிக்கும் உபாயமானபக்தியென்கிற பகவத்உபாஸநத்துக்கங்கமாயிருக்கிறஆத்மவிஷயமானவாஸ்தவக்ஞானமானது, ஞானயோக கர்மயோகங்களென்கிற இரண்டு நிஷ்டைகளாலும் ஸாதிக்கப்படுமென்று சொல்லப்பட்டது. நடுவில் ஆறு அத்தியாயங்களிலோ பரமபலமா

---

* 13-முதலிய ச்லோகங்களில் சத்துருமித்திராதிகளிடத்தில் பகைமை முதலியவைகளைப் பாராட்டாமை சொல்லப்பட்டது. இங்கே அந்த சத்துரு முதலியவர்கள் நெருங்கி வந்தாலும் மனங்கலங்காமை சொல்லப்படுகிறதென்று விசேஷங் கண்டுகொள்க.

http://acharya.org

னவெம்பெருமானுடைய உண்மையான தன்மையையும் அவன் மஹிமைகளையும் அறிந்து அவனுக்கே அற்றுத்தீருவதென்கிற பக்தியோகத்தின்நிலை சொல்லப்பட்டது. மிகுந்த ஐசுவரியத்தைக் கோரியவர்களுக்கும், கைவல்லியத்தைமாத்திரம் கோரியவர்களுக்கும் பக்தியோகமானது அவர்கள் கோரிக்கையைச் சாதிக்குமென்றும் கூறப்பட்டது. இப்பொழுது இந்த மேல் ஆறு அத்தியாயங்களிலும் முன்னீராறு அத்தியாயங்களிற் சொல்லப்பட்டவைகளானப் பிரகிருதி புருஷர்களின் சேர்க்கையான பிரபஞ்சத்தினுடையவும் ஈசுவரனுடையவும் உண்மையும், கர்மம் ஞாநம் பக்தி இவைகளின் ஸ்வரூபமும், இவைகளை யநுட்டிக்கும்படியும், இவையெல்லாமே சோதிக்கப்படுகின்றன. அதில் இந்த பதின்மூன்றுவது அத்தியாயத்தில் தேஹாத்மாக்களின் ஸ்வரூபமும், தேஹத்தின் உண்மையை விசாரிப்பதும், தேஹத்தைக் காட்டிலும் வேறான ஆத்மாவையடையு முபாயமும், (பிரித்தறியப்பட்ட)அவ்வாத்மஸ்வரூபசோதநமும், அப்படிப்பட்ட ஆத்மாவுக்கு அசேதநத்தோடு சேர்க்கையுண்டாவதற்குக் காரணமும் அதைப் பிரித்தறியும்விதமும் சொல்லப்படுகின்றன.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ॥ 𑌇𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 । 𑌏𑌤𑌦𑍍𑌯𑍋 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞 𑌇𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃 ॥க॥

(க) எம்பெருமானருளிச்செய்கிறார். அர்ச்சுந ! இந்த சரீரம் (அதாவது:—நான் தேவன், நான் மனிதன், நான் பருத்தவன், நான் இளைத்தவன் என்று போக்தாவான ஆத்மாவோடுகூட ஒன்று பட்டுத் தோற்றுகிற இந்த சரீரம்) 'இதைக்காட்டிலும் வேறுபட்டு போக்தாவாயிருக்கிற ஆத்மாவின் போகத்துக்காக ஏர்ப்பட்டது க்ஷேத்திரம்' என்று சரீரத்தின் உண்மை யறிந்தவரால் சொல்லப்படுகிறது. இதைப் பிரித்துப்பிரித்தும் மொத்தமொத்தமாயும் 'இதை நான் அறிகிறேன்,'என்று எது அறிகிறதோ அது (அறியப்படுகின்ற) இந்த சரீரத்தைக்காட்டிலும் (அறிவதான) * வேறு பொருளென்று ஆத்மாவின் உண்மையறிந்தபேர்கள் சொல்லுகிறார்கள். [ஆனால் அறிகிறவஸ்துவான இதின் ஸ்வரூபத்தை யோகத்தால் திருந்தியிருக்கிற மனதினாலறியலாமேயல்லது கண் முதலியவைகளாலறியப்போகாதாகையாலே மூடர்கள்(பிரகிருதிவி

* குடம் முதலியவைகளை யறியும்போது 'தேவனாகிய நான் அல்லது மனிதனாகிய நான் குடத்தையறிகிறேன்' என்று தேஹத்தையும் ஆத்மாவையும் ஒன்றுபடுத்தி நினைத்தாலும், தேகத்தையறியும்போது இதை நான் அறிகிறேனென்று அறியப்படுவதாய் பிரித்தறிகையாலே, சரீரங்கூட குடம்முதலியவைகளைப்போல் ஆத்மாவைக் காட்டிலும் வேறுபட்டதே. ஆனால் தேஹமும் அதுவும் ஒன்றாய்த் தோன்றுவானேனென்றால் உண்மையில் பசுவும் பசுத்தன்மையும்போல் ஆத்மாவைவிட்டுப் பிரிந்தால் நிலைக்கமாட்டாமல் சரீரம் சேர்ந்திருக்கையாலே ஒன்றெனத் தோன்றக்கூடும்.

http://acharya.org

காரமான) சரீரத்தையே ஆத்மாவென்று நினைத்துவிடுகிறார்கள். இப்படியே மேலே $ அருளிச்செய்கிறார்.

க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர்ஜ்ஞாநம் யத்தஜ்ஜ்ஞாநம் மதம் மம॥ ௨॥

(௨) அர்ச்சுந! தேவர் மனிதர் முதலான எல்லாச்சரீரங்களிலும் அறிவதே வடிவாயுள்ளவஸ்துஎதுவோ அதுவும் (அதாவது ¶ க்ஷேத்திரக்ஞனென்கிறஜீவனும்)நாந்தானென்றறி. [என்றால்-சரீரமானது ஆத்மாவோடு சேர்ந்திருப்பதே ஸ்வபாவமாய் தனித்து நில்லாமைகொண்டு அதை ஆத்மாவோடு ஒன்றுபடுத்தியே குறிப்பிடுவதுபோல், ஆத்மாவும் பகவானோடு சேர்ந்திருப்பதே ஸ்வபாவமாய் தனித்திராமையாலே பகவானோடு ஒன்றுபடுத்தியே குறிக்கத்தக்கது என்றபடி.]

[மண்முதலியவைகளின் தொகையான சரீரமும் அதற்குப் புறம்பான ஆத்மாவும், (பகவானுக்கு சரீரமாயிருப்பதே ஸ்வரூபமாயும் ஸ்வபாவமாயுமிருக்கிறபடியால்) பகவத்ரூபங்களென்று சுருதிகள் சொல்லுகின்றன. எங்ஙனே யென்னில்:—யஃ ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா அந்தரோ யம் ப்ருதிவீ ந வேத யஸ்ய ப்ருதிவீ சரீரம் யஃ ப்ருதிவீமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருதஃ என்று தொடங்கி ய ஆத்மநி திஷ்டந்நாத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா சரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருதஃ இத்தியாதிகள். இப்படி எம்பெருமான் ஆத்மாக்களுக்கு அந்தரியாமியாயிருக்கைதான் அவனை அவைகளோடொன்றுபடுத்திச் சொல்லுவதற்குக்காரணம் என்று அஹமாத்மா குடாகேச ஸர்வபூதாசயஸ்திதஃ என்றும் ந ததஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூதம் சராசரம் என்றும் விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நமேகாம்சேந ஸ்திதோ ஜகத் என்றும் மேலுங் கீழும் அருளிச்செய்து, நடுவில் ஆதித்யாநாமஹம் விஷ்ணுஃ இத்தியாதியில் ஒன்று படுத்தி யருளிச்செய்தார்.]

தத்க்ஷேத்ரம் யச்ச யாத்ருக்ச யத்விகாரி யதச்ச யத்।

(௨௭) இப்படி சரீரத்தையும் ஆத்மாவையும் பிரித்தறிவதோடு அவையிரண்டும் நமக்குச் சரீரமாயிருக்கையாலே நமது ஸ்வரூபங்கள் என்று அறிவதுதான் ஞானமென்று நம்முடைய ஸித்தாந்தம்.

இங்கே சிலர் சொல்லுவது:—'க்ஷேத்திரக்ஞனும் நானே யென்றறி' என்கையாலே ஜீவனுக்கும் பிரம்மத்துக்கும் ஐக்கியம் (அதாவது ஒருமை) தோ

$ உத்க்ராமந்தம் ஸ்திதம் வாபி புஞ்ஜாநம் வா குணாந்விதம்। விமூடா நாநுபச்யந்தி பச்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷஃ॥ என்று மேலே அருளிச்செய்கிறார்.

¶ 'க்ஷேத்திரக்ஞனென்கிற ஜீவனும்' என்கிற உம்மையாலே க்ஷேத்திரமென்கிற சரீரமும் நாந்தானென்று சொன்னதாய்த் தெரிகிறது.

http://acharya.org

ன்றுகிறது; ஆகையால் ஈசுவரனுயிருக்கச்செய்தே பரப்பிரம்மத்துக்கு ஜீவத்தன்மையும் வருகிறதென்று ஒப்புக்கொள்ளவேண்டும்; அந்த ஜீவத்தன்மையொழிவதற்காகத்தான் இப்படி ஒன்று படுத்தி உபதேசிக்கிருர்; இப்படி ஆப்தரான பகவானுடைய உபதேசத்தாலே, (இதுபாம்பல்ல பழுதை என்கிற ஆப்தனுடைய உபதேசத்தால் பாம்பென்கிறப்பிராந்தியொழிவதுபோல) ஜீவனென்கிறப் பிராந்தியொழிந்துபோம் என்று சொல்லுகிருர்கள்.

அவர்களைக் கேட்கிறேம். இங்கே உபதேசிக்கின்ற பகவானுகிய பரமேசுவரனுக்கு ஆத்மஸ்வரூபக்ஞானம் பிறந்து அதனுல் அக்ஞானம் ஒழிந்ததா? இல்லையா? ஒழிந்தபக்ஷத்தில் - யாதொரு விசேஷமுமில்லாமல் ஞானமாத்திரமாய் தனியே விளங்குகிற ஆத்மாவில் அதற்குவிரோதமான நினைவுபிறக்க இடமில்லாமையாலே குந்திபுத்திரனை வேருகப்பார்ப்பதும் உபதேசிப்பதும் மற்றுங்கூடாது. இனி ஆத்மஸாக்ஷாத்கார மில்லாமையாலே அக்ஞானம் ஒழியவில்லையென்னும்பக்ஷத்தில் அக்ஞானியாயிருந்து உபதேசிப்பதென்பது சிறிதுங்கூடாது; மேலும் பகவானே "அர்ச்சுந! உனக்கு தத்துவந் தெரிந்தவர்கள் ஞானத்தை யுபதேசிப்பர்கள்" என்று அருளிச்செய்திருக்கிருர். ஆகையால் இப்படிப்பட்ட வாதங்களெல்லாம், ஶ்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம், நியாயம் இவைகளுக்கும் தங்கள் வார்த்தைக்கும் விரோதமாய் லோகத்தை மருளச்செய்வதற்காகச்செய்யும் அக்ஞானிகளின் வாதங்களாகையால் இவைகளை ஆதரிக்கலாகாது.

ஆனுல் உண்மையேதென்ருல் சொல்லுகிறேம்:—அசித்தும், சித்தும், பிரம்மமும் முறையே போக்கியமும் போக்தாவும் ஈசனுமென்று அவைகளின் ஸ்வரூபத்தைப்பிரித்துச் சில சுருதிகள் சொல்லுகின்றன. அவையாவன:—

அஸ்மாந்மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத் தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்த:॥ மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநம் து மஹேஶ்வரம்॥ க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:॥ ஸ காரணம் கரணாதிபாதிபோ ந சாஸ்ய கஶ்சிஜ்ஜநிதா ந சாதிப:॥ ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஶ:॥ பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம் ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்॥ ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ॥ நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந்॥ போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா॥ ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி॥ தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி॥ அஜாமேகாம் லோஹித ஶுக்லக்ருஷ்ணாம் பஹ்வீம் ப்ரஜாம் ஜநயந்தீம் ஸரூபாம்। அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோऽநுஶேதே ஜஹாத்யேநாம் புக்தபோகாமஜோऽந்ய:॥ கௌரநாத்யந்தவதீ ஸா ஜநித்ரீ பூதபாவிநீ॥ ஸிதாஸிதா ச ரக்தா ச ஸர்வகாமதுகா விபோ: ... ஜ்யேஷ்டம் ... இத்யாதிகள்.

http://acharya.org

அப்படியே இங்கும் அஹங்கார இதீயம் மே பிந்நா ப்ரக்ருதிரஷ்டதா| அபரேயமிதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்| ஜீவபூதாம்|| ஸர்வபூதாநி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்|| கல்பக்ஷயே புநஸ்தாநி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம்|| ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந:| பூதக்ராமமிமம் க்ருத்ஸ்நமவஶம் ப்ரக்ருதேர்வஶாத்| மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்| ஹேதுநாநேந கௌந்தேய ஜகத்விபரிவர்த்ததே || ப்ரக்ருதிம் புருஷம் சைவ வித்த்யநாதீ உபாவபி || மம யோநிர்மஹத்ப்ரஹ்ம தஸ்மிந் கர்ப்பம் ததாம்யஹம்| ஸம்பவஸ்ஸர்வபூதாநாம் ததோ பவதி பாரத என்று சொல்லப்படுகின்றது.

இப்படி போக்தாவாகவும் போக்கியமாகவுமிருக்கிற சித்தும் அசித்தும் எந்த நிலையிலும் பரமபுருஷனுக்குச்சரீரமாய் அவனால் ஏவப்படுமதாயிருக்கையாலே அவனை விட்டுப்பிரிந்து நிலைக்கமாட்டாதென்றும், பரமபுருஷன் அவைகளுக்கு ஆத்மாவாயிருக்கிறானென்றும் சில சுருதிகள் சொல்லுகின்றன. எங்ஙனேயென்னில்:— ய: ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா அந்தரோ யம் ப்ருதிவீ ந வேத யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் ய: ப்ருதிவீமந்தரோ யமயதி என்று தொடங்கி ய ஆத்மநி திஷ்டந்நாத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத: என்றும்: அப்படியே ய: ப்ருதிவீமந்தரே ஸஞ்சரந் யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் யம் ப்ருதிவீ ந வேத என்று தொடங்கி யோऽக்ஷரமந்தரே ஸஞ்சரந் யஸ்யாக்ஷரம் ஶரீரம் யமக்ஷரம் ந வேத யோ ம்ருத்யுமந்தரே ஸஞ்சரந் யஸ்ய ம்ருத்யு: ஶரீரம் யம் ம்ருத்யுர் ந வேத ஏஷ ஸர்வபூதாந்தராத்மாऽபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: என்றும் அந்த:ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா என்றும் சொல்லுகின்றன.

இப்படி எந்த நிலையிலும் சேதநாசேதநங்களைச் சரீரமாயுடையனாய் அவைகளைப்பிரகாரமாகக்கொண்ட பரமபுருஷனே, காரியமான நிலையிலும் காரணமான நிலையிலும் ஜகத்ரூபமாயிருக்கிறானென்று இவ்வர்த்தத்தை யறிவிப்பதற்காகச்சில சுருதிகள் (காரியநிலையிலும்காரணநிலையிலுமுள்ள ஜகமாவது அந்த பகவானே என்று) சொல்லுகின்றன. எங்ஙனேயென்னில்:— ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம்| ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி தத்தேஜோऽஸ்ருஜத என்று தொடங்கி ஸந்மூலாஸ்ஸோம்யேமாஸ்ஸர்வா: ப்ரஜாஸ்ஸதாயதநாஸ்ஸத்ப்ரதிஷ்டா ஐததாத்ம்யமிதம் ஸர்வம் தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்த்வமஸி ஶ்வேதகேதோ என்றும் அப்படியே ஸோऽகாமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி ஸ தபோऽதப்யத ஸ தபஸ்தப்த்வா இதம் ஸர்வமஸ்ருஜத என்று

http://acharya.org

தொடங்கி ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத் என்றும் ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி। தத் ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் ததநுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத்......விஜ்ஞாநஞ்சாவிஜ்ஞாநஞ்ச ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத் என்றும் சொல்லுகின்றன.

ஆகையால் காரியமான நிலையுடன் கூடியவனும் காரணமான நிலையுடன் கூடியவனும், ஸ்தூலமாயும் ஸூக்ஷ்மமாயுமுள்ள சேதநாசேதனங்களைச் சரீரமாகவுடைய பரமபுருஷனே. ஆகையால் காரணத்தைக்காட்டிலும் காரியம் வேறல்லாமையாலே, காரணத்தை அறிந்தமாத்திரத்தில் காரியத்தையும் அறிந்ததாகக்கூடுமாகையால், ஒன்றை (அதாவது பிரம்மத்தை) அறிவதால் ஸர்வத்தையும் (அதாவது பிரபஞ்சத்தை) அறிவதாகுமென்கிற சுருதிப்பொருள் மிகவுஞ்சேரும்.

ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி என்கிற விடத்தில் திஸ்ரோ தேவதாः என்று ஸகலமான அசித்துவஸ்துக்களையுஞ் சொல்லி அவற்றுள் பரமாத்ம சரீரமான ஜீவனுடைய உட்பிரவேசத்தாலே நாமரூபங்களை யேர்ப்படுத்துவதாகச் சொல்லுகையாலே ஸகலமான வாசகங்களும் அசித்து சித்துக்களுடன் கூடிய பரமாத்மாவையே குறிக்கின்றன. ஆகையால் காரணவஸ்தையிலுள்ள பரமாத்மவாசகமான சப்தத்தைக்கொண்டு காரியவாசக சப்தத்தோடு ஒன்றுபடுத்தி முக்கியமாய்ச் சொல்லக்கூடும்.

ஆகையால் ஸ்தூலமும் ஸூக்ஷ்மமுமான சித்து அசித்துக்களைப் பிரகாரமாயுடைய பிரம்மமே காரியமும் காரணமுமாகையால் ஜகத்துக்குப்பிரம்மந்தான் *உபாதாநகாரணம். ஸூக்ஷ்மமான சித்தையும் அசித்தையுஞ் சரீரமாகக்கொண்டே பிரம்மம் காரணமாகின்றமையால் ஜகத்துக்குப் பிரம்மம் உபாதாந காரணமானாலும் மொத்தமாய்க்கொண்டு காரணமாகின்றமையால் சித்து அசித்துக்களுக்கும் பிரம்மத்துக்கும் ஸ்வபாவத்தில் கலப்பில்லாமை மிருதியுஞ் சேரும்.

சித்திர வஸ்திரமானது, வெளுப்பு கறுப்பு செகப்பு நூல்களின் சேர்க்கையிலிருந்துண்டான போதிலும், வெண்மைமுதலிய நிறங்கள் அந்தந்த நூலுள்ள விடங்களில் மாத்திரம் ஸம்பந்தித்திருக்குமேயல்லது காரியமான நிலையிலும் வஸ்திரமுழுதும் ஒருவருணத்துக்குங் கலப்புக்கிடையாதன்றோ? அதுபோல் ஜகமானது சித்து அசித்துக்களின் சேர்க்கையிலுண்டானதேயாகிலும், காரியமான நிலையிலும் புசிக்குந்தன்மை புசிக்கப்படுந்தன்மை ஆளுந்தன்மை முதலியவைகளுக்குக் கலப்பில்லை.

ஆனால் அங்கே தனியேயிருக்கும்படியான சக்தியோடுகூடிய நூல்களே ஒருகால விசேஷத்தில் புருஷஇச்சையால் ஒன்று சேர்க்கப்பட்டு காரியமாயுங் காரணமாயுமிருக்கின்றது, இங்கோ! சித்தும் அசித்தும் எந்தநிலையிலும்

* பானைக்கு மண்ணையும், துணிக்கு நூலையும் உபாதாநகாரணமென்றறிக.

http://acharya.org

பரமபுருஷனுக்குச்சரீரமாய்க்கொண்டே அவனுக்குப்பிரகாரமாய் ஓரேபதார்த்தமாயிருக்கையாலே அவைகளைப் பிரகாரமாகக்கொண்ட பரமபுருஷந் தான்காரியமுங் காரணமுமாய் ஸகலசப்தத்துக்கும் பொருளாகிறான். இது தான் விசேஷம். ஸ்வபாவபேதமும் அதின் கலப்பின்மையும் அங்கு மிங்கும் ஸமமே.

இப்படியானபின்பு பரப்பிரம்மம் காரியத்திற் பிரவேசித்தபோதிலும் ஸ்வரூபத்தில் மாறுபாடு இல்லாமையாலே விகாரமில்லாமை மிகவும் சேரும். ஸ்தூலமாய்க்கொண்டு நாமரூபங்களாலே பிரிக்கப்பட்டுள்ள சித்துக்கும் அசித்துக்கும் ஆத்மாவாயிருக்கையாலே காரியத்தன்மையுங் கூடும். காரியத்தன்மை யாவதென்ன? ஒரு நிலையிலிருந்தது மற்றொரு நிலைக்கு வருவது தானே?

குணமில்லையென்கிற வாதமோ பரப்பிரம்மத்துக்கு ஹேயகுண ஸம்பந்த மில்லாமையாலே கூடும். அதெப்படியெனில் அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: என்று ஹேயகுணங்களை விலக்கி ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப: என்று கல்யாணகுணங்களை விதிக்கின்ற சுருதியே, மற்றொருவிடத்தில் ஸாமான்னியமாய் குணமில்லையென்கிற நிஷேதம் ஹேயகுணவிஷயம் என்று வியவஸ்த்தை பண்ணிக் கொடுக்கிறது.

ஞானஸ்வரூபம் பிரம்மம் என்கிறவார்த்தையோ! ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாய் நிகிலஹேயங்களுக்கு மெதிரான கல்யாணகுணங்களுக்கிடமாயிருக்கும் பிரம்மஸ்வரூபம் ஞானத்தைக்கொண்டே நிரூபிக்கத்தக்கதென்றும் தனக்குத்தானே பிரகாசிக்கையாலே ஞானஸ்வரூபமென்றும் ஒப்புக்கொண்டமையாலே சேரும். யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித் பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞானபலக்ரியா ச ‖ விஜ்ஞாதாரமரே கேந விஜாநீயாத் இத்தியாதிகளோ ஞாதாவென்பதைக் காட்டுகின்றன. ஸத்யம் ஜ்ஞாநம் இத்யாதிகளோ ஞானத்தைக்கொண்டே நிரூபிக்கவேண்டியதாயும் தனக்குத்தானே பிரகாசிப்பதாயுமிருக்கும் ஞானஸ்வரூபத்தன்மையைக் காட்டுகின்றன.

ஸோகாமயத பஹு ஸ்யாம் ததைக்ஷத பஹு ஸ்யாம் தந்நாமரூபாப்யாம் வ்யாக்ரியத ‖ ஆத்மநி கல்வரே த்ருஷ்டே ஶ்ருதே மதே விஜ்ஞாதே இதம் ஸர்வம் விதிதம் பவதி ‖ ஸர்வம் தம் பராதாத் யோऽந்யத்ராத்மந: ஸர்வம் வேத தஸ்ய ஹவா ஏதஸ்ய மஹதோ பூதஸ்ய நிஶ்வஸிதமேதத் ருக்வேத: என்று பிரம்மமே தன் ஸங்கல்பத்தால் விசித்திரஸ்திரசரரூப பதார்த்த ஸ்வரூபமாயும் நாநாவிதமாயு மிருக்கிறபடியால் அதற்கெதிராகப் பிரம்மத்தையொழிந்தவேறொருவஸ்து நாநாவிதமா யிருப்பதென்பது தத்துவ மல்லவென்று நிஷேதிக்கப்படுகிறது. எங்ஙனே! ம்ருத்யோஸ் ஸ ம்ருத்யுமாப்நோதிய

http://acharya.org

இஹ நாநேவ பஶ்யதி | நேஹ நாநாஸ்தி கிஞ்சந || யத்ர ஹி த்வைதமிவ பவதி ததிதர இதரம் பஶ்யதி | யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் தத் கேந கம் பஶ்யேத் இத்யாதியாலே நிஷேதிக்கப்படுகிறது.

அதுவே யல்லது பஹு ஸ்யாம் ப்ரஜாயேய இத்தியாதிசுருதியில் ஸித்தமாய் தன்ஸங்கல்பத்தால் பண்ணப்பட்டதாய் நாமரூபங்களை யடைவதால் பிரம்மத்திற்குவரும்பலவாறு யிருக்குந்தன்மையை நிஷேதிக்கவில்லை. யத்ர த்வஸ்ய ஸர்வமாத்மைவாபூத் என்றுநிஷேதிப்பதற்குஆரம்பிக்கும்பொழுதே இவ்விஷயம் ஸர்வம் தம் பராதாத் யோऽந்யத்ராத்மந: ஸர்வம் வேத || தஸ்ய ஹவா ஏதஸ்ய மஹதோ பூதஸ்ய நிஶ்வஸிதமேதத் யத்ருக்வேத: இத்தியாதியாலே ஸ்தாபிக்கப்பட்டது.

இப்படி சித்துக்கும் அசித்துக்கும் ஈசுவரனுக்கும் ஸ்வரூபபேதத்தையும் ஸ்வபாவபேதத்தையுங் கூறுகின்றனவும், காரியகாரண பாவத்தையும் காரியத்தைக்காட்டிலும் காரணம் வேறென்பதையும் கூறுகின்றனவுமான ஸகல ஶ்ருதிகளுக்கும் விரோதமில்லையென்று சுருதிகளாலேயே அறியப்படுகிறபடியால், பிரம்ம அக்ஞானவாதமும் ஔபாதிகப்பிரம்ம பேதவாதமும் மற்றும் வாதங்களும் அந்நியாய மூலங்களாயும் ஸகல ஶ்ருதிவிருத்தங்களாயு மிருக்கையாலே அவைகளுக்குச் சிறிதும் இடங்கிடைக்கமாட்டாதாகையால் அவ்விஷயத்தில் அதிகமாய் விரித்துரைத்ததுபோதும்.

ஸ ச யோ யத்ப்ரபாவஶ்ச தத்ஸமாஸேந மே ஶ்ருணு ||௩||

(௩) அந்த க்ஷேத்திரமென்பது என்னத் திரவியமோ எவைகளுக்கு ஆதாரமானதோ அதற்கு விகார மெப்படிப்பட்டதோ எந்தப்பிரயோஜநத்துக்காக அது உண்டாயிற்றோ அது எதின் ஸ்வரூபமோ அதையும்; அந்த க்ஷேத்திரக்ஞன் எப்படிப்பட்டவனோ எப்படிப்பட்டப் பிரபாவத்தோடு கூடியவனோ அவைகளையும் அர்ச்சுநா! சுருக்கமாய்ச் சொல்லுகிறோம் கேள்.

ருஷிபிர்பஹுதா கீதம் சந்தோபிர்விவிதை: ப்ருதக் |

ப்ரஹ்மஸூத்ரபதைஶ்சைவ ஹேதுமத்பிர்விநிஶ்சிதை: ||௪||

(௪) இந்த க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞருடைய உண்மையானது பராசரர் முதலான ருஷிகளாலே அனேகவிதமாய்ச் * சொல்லப்பட்டது. இருக்

* அஹம் த்வம் ச ததாந்யே ச பூதைருஹ்யாம பார்திவ | குணப்ரவாஹபதிதோ பூதவர்கோऽபி யாத்யயம் | கர்மவஶ்யா குணா ஹ்யேதே ஸத்த்வாத்யா: ப்ருதிவீபதே | அவித்யாஸஞ்சிதம் கர்ம தச்சாஶேஷேஷு ஜந்துஷு | ஆத்மா ஶுத்தோऽக்ஷர: ஶாந்தோ நிர்குண: ப்ரக்ருதே: பர: | என்றும் பிண்ட: ப்ருதக் யத: பும்ஸ: ஶிர:பாண்யாதிலக்ஷண: | ததோऽஹமிதி குத்ரைதாம் ஸம்ஜ்ஞாம் ராஜந் கரோம்யஹம் என்றும் கிம் த்வமேதச்சிர: கிந்நு உரஸ்தவ ததோதரம் | கிமு பாதாதிகம் த்வம் வை தவைதத் கிம் மஹீபதே | ஸமஸ்தாவயவேப்யஸ்த்வம் ப்ருதக்பூய வ்யவஸ்தித: | கோऽஹமித்யேவ நிபுணோ பூத்வா சிந்தய பார்திவ என்று சொல்லப்பட்டது. இப்படி பிரிக்கப்பட்ட சரீரமும் ஆத்மாவும் இந்த்ரியாணி மநோபுத்திஸ்ஸத்வந்தே

http://acharya.org

கு யஜுஸ்ஸு ஸாமம் அதர்வமென்கிற ‡ வேதங்களாலே தேகத்தினுடையவும் ஆத்மாவினுடையவும் ஸ்வரூபமும் பிரித்தோதப்பட்டது. பிரம்மத்தைப் பிரதிபாதிக்கும் $ ஸூத்திரமென்னும் பதங்களாலும் தக்கஹேதுக்களைக்கொண்டு நிர்ணயிக்கப்பட்டது. [இப்படி வெகுவாய்ச் சொல்லப்பட்ட க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞாளுடைய உண்மையை நான் சுருக்கமாயுந்தெளிவாயுஞ் சொல்லுகிறேன் கேள் என்று தாத்பரியம்.]

மஹாபூதாந்யஹங்காரோ புத்திரவ்யக்தமேவ ச|
இந்த்ரியாணி தசைகம் ச பஞ்ச சேந்த்ரியகோசரா:||௫||
இச்சா த்வேஷ: ஸுகம் து:கம் ஸங்காதஶ்சேதநா த்ருதி:|
ஏதத் க்ஷேத்ரம் ஸமாஸேந ஸவிகாரமுதாஹ்ருதம்||௬||

(௫-௬) க்ஷேத்திரத்தையுண்டாக்குந் திரவியங்களான பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்கிற மஹாபூதங்களும், பூதங்களுக்கு ஆதியான அஹங்காரமும், புத்தியென்கிற மஹானும், அவ்வியக்தமென்கிற பிரகிருதியும், இவையெல்லாம் க்ஷேத்திரமென்கிற சரீரத்தைப்பற்றிக்கிடக்கும். (வாய் கை கால் ஆஸநம் உபஸ்த்தம் என்னும் ஐந்துகர்மேந்திரியங்கள்; செவி உடல் கண் நாவு மூக்கு என்னும் ஐந்து ஞானேந்திரியங்கள்; மனம் ஒன்று; ஆக) பதினொரு இந்திரியங்களும், இந்திரிய விஷயங்களான சத்தம் பரிசம் உருவம் ரஸம் கந்தம் இவைகளும், இச்சை துவேஷம் சுகம் துக்கம் என்கிற * க்ஷேத்திரவி

ஜோ பலம் த்ருதி: வாஸுதேவாத்மகாந்யாஹு: க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞ ஏவ ச என்று வாசுதேவரூபங்களென்றும் சொல்லப்பட்டது.

‡ தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத: ஆகாஶாத்வாயு: வாயோரக்நி: அக்நேராப: அத்ப்ய: ப்ருதிவீ ப்ருதிவ்யா ஓஷதய: ஓஷதீப்யோऽந்நம் அந்நாத்புருஷ: ஸ வா ஏஷ புருஷோऽந்நரஸமய: என்று சரீரஸ்வரூபத்தைச் சொல்லி அதற்குள்ளாகப்பிராணமயத்தையும் அதற்குள்ளாக மநோமயத்தையும்சொல்லி, தஸ்மாத்வா ஏதஸ்மாந் மநோமயாத் அந்யோऽந்தர ஆத்மா விஜ்ஞாநமய: என்றுக்ஷேத்திரக்ஞனென்கிற ஜீவஸ்வரூபத்தைச்சொல்லி தஸ்மாத்வா ஏதஸ்மாத்விஜ்ஞாநமயாத் அந்யோऽந்தர ஆத்மாऽऽநந்தமய: என்று க்ஷேத்திரக்ஞனுக்குக்கூட அந்தராத்மாவாக ஆநந்தமயனான பரமாத்மாஇருக்கிறானென்றுவேதங்கள் அறைகின்றன.

$ பிரம்மஸூத்திரங்களாலும் நவியதஶ்ருதே: என்று தொடங்கி க்ஷேத்திரத்தின்படிசொல்லி, நாத்மாஶ்ருதேர்நித்யத்வாச்ச தாப்ய: என்றுதொடங்கி ஜ்ஞோऽத ஏவ இத்யாதிகளாலே க்ஷேத்திரக்ஞனுடையஉண்மையான நிலை நிச்சயிக்கப்பட்டு அத:பராத்து தச்ச்ருதே: என்று பகவானால் பிரவர்த்திக்கப்படுமெதாகையாலே பகவத்ஸ்வரூபமென்றுமிடமுஞ் சொல்லப்பட்டது.

* இச்சை முதலியவைகள்ஆத்மாவின் தர்மமாயினும்ஆத்மாவுக்குக்ஷேத்திரத்தோடு ஸம்பந்தப்படுவதாலுண்டாகின்றமையால் க்ஷேத்திரகாரியமென்று அதின்விகாரமாகச்சொல்லுகிறது.அவை ஆத்மதருமமென்றுமிடமோ புருஷ: ஸுகது:காநாம் போக்த்ருத்வே ஹேதுருச்யதே என்று மேலே சொல்லப்போகிறார்.

http://acharya.org

காரங்களும் கூடி, சுகதுக்கங்களைப் புசித்து போகமோக்ஷங்களைச் சாதிக்கும் ஜீவனுக்கு ஆதாரமாய் ஏற்பட்டிருக்கின்றன. [என்றால்:—பிரகிருதிமுதல் பிருதிவி வரையிலுள்ள திரவியங்களாலுண்டாய், இந்திரியங்களுக்கு ஆதாரமாய், இச்சை த்வேஷம் சுகம் துக்கம் என்று விகாரப்பட்டு பூதங்களின் தொகையாய், சேதனனுடைய சுகதுக்க போகத்துக்கு ஆதாரமாயிருக்கையே பயனுயுள்ளதுதான் க்ஷேத்திரமென்னப்படுமென்றபடி.] இப்படி க்ஷேத்திரஸ்வரூபத்தை அதின் காரியத்துடன்சேர்த்துச் சுருக்கமாய்ச்சொன்னோம்.

(அ-கை.) இனி க்ஷேத்திரத்தின் காரியங்களில் ஆத்மஞானத்துக்கு வேண்டிய குணங்கள் விளம்பப்படும்.

அமானித்வமதம்பித்வ மஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம்|
ஆசார்யோபாஸநம் சௌசம் ஸ்தைர்யமாத்மவிநிக்ரஹ꞉|| எ||
இந்த்ரியார்த்தேஷு வைராக்ய மநஹங்கார ஏவ ச|
ஜந்மம்ருத்யுஜராவ்யாதி து꞉கதோஷாநுதர்சநம்|| அ||

(எ-அ) உயர்ந்த ஜனங்களைத்திரஸ்காரஞ் செய்யாமை, தார்மிகனென்னுங் கீர்த்தியடையவேண்டுமென்கிற எண்ணத்தோடு தர்மாநுஷ்டானம் பண்ணுமை, மநோவாக்காயங்களால் பிறருக்குப்பீடை செய்யாமை, பிறரால் தான் பீடிக்கப்பட்டாலும் சித்தவிகாரமடையாமை, பிறர் விஷயத்தில் முக்கரணங்களும் ஸரியாய் நடக்கை, ஆத்மக்ஞானத்தையுபதேசித்த ஆசாரியனிடத்தில் பணிந்து பிரசிநம்பண்ணி ஸேவித்தல் முதலியவை, ஆத்மக்ஞானத்துக்கும் தத்ஸாதநத்துக்கும் வேண்டியதாய் சாஸ்திரத்தில் சொன்னபடி மனோவாக்காயங்களுக்குண்டான யோக்கியதை, அத்தியாத்மசாஸ்திரத்தில் சொன்ன வர்த்தத்தில் திடனுடைமை, ஆத்மஸ்வரூபத்தை யொழிந்த மற்ற விஷயங்களினின்று மனதை நிவர்த்திசெய்கை, ஆத்மாவை யொழிந்த மற்றவைகளில் தோஷபுத்தியாலே வெறுப்புடைமை, தேஹமே ஆத்மாவென்கிற அபிமானமில்லாமை, அப்படியே தனதல்லாத ஸகலபதார்த்தங்களிலும் தனதென்கிற அபிமானமில்லாமை, சரீரம் உள்ளவரையில் பிறப்புஇறப்பு கிழத்தனம் நோய் துயரம் என்கிற தோஷங்கள் ஒழிக்கப்போகாதென்கிற நினைவு.—

அஸக்திரநபிஷ்வங்க꞉ புத்ரதாரக்ருஹாதிஷு|
நித்யம்சஸமசித்தத்வ மிஷ்டாநிஷ்டோபபத்திஷு|| கூ||
மயி சாநந்யயோகேந பக்திரவ்யபிசாரிணீ|
விவிக்ததேசஸேவித்வ மரதிர்ஜநஸம்ஸதி|| கO||
அத்யாத்மஜ்ஞாநநித்யத்வம் தத்த்வஜ்ஞாநார்த்ததர்சநம்|
ஏதஜ்ஜ்ஞாநமிதி ப்ரோக்த மஜ்ஞாநம் யததோऽந்யதா||கக||

(அஉ-கூ-கO-கக) ஆத்மாவை யொழிந்தவைகளிற் பற்றின்மை, பிள்ளை பெண்டீர் வீடுமுதலியவைகளில் சாஸ்திரோக்தமாய் வேண்டுமெவ்வளவு தவிர அதிகப்பிடிப்பில்லாமை, ஸங்கல்பத்தால் வரும் இஷ்டாநிஷ்டங்களில் ஸங்

http://acharya.org

தோஷமும் வெறுப்புமில்லாமை,ஸர்வேச்வரனிடத்தில் சலியாதபத்தியுடைமை,ஜநமில்லாத தேசத்தில் வாஸம்பண்ணுகை, ஜநங்களுள்ளவிடத்தில் விருப்பமின்மை,ஆத்மஜ்ஞாநத்தில் நிஷ்டை,தத்துவஜ்ஞாநத்தைத்தருமபடி சிந்திக்கை,இவைகள்தான் ஜ்ஞாநம். இவையொழிந்த மற்றவையெல்லாம்அஜ்ஞாநம். [என்றால் க்ஷேத்திரத்தோடு ஸம்பந்தப்பட்ட புருஷனுக்கு இவைகள்தான் ஆத்மஜ்ஞாந ஸாதநங்கள். மற்றவைகளெல்லாம் ஆத்மஜ்ஞாநத்துக்கு விரோதியாகையாலே அஜ்ஞாநகரங்களென்றபடி.]

(அ-கை.) இனி ஸாதநேஷ்வேதத்ஸாத்யதயா ப்ராப்யம் என்று அறிபவனுக்கு கூறப்படும் க்ஷேத்திரஜ்ஞனுடைய ஸ்வரூபம் சோதிக்கப்படுகின்றது.

ஜ்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி யஜ்ஜ்ஞாத்வாம்ருதமஶ்நுதே|
அநாதிமத்பரம் ப்ரஹ்ம ந ஸத்தந்நாஸதுச்யதே||௧௨||

(௧௨) அமாநித்வம் தொடக்கமான ஸாதநங்களால் அடையவேண்டுமதானப் பிரத்தியகாத்மாவின் ஸ்வரூபத்தை (அதாவது ஜீவஸ்வரூபத்தைச்) சொல்லுகிறேன்கேள். அதையறிந்தால் பிறப்பு இறப்பு மூப்பு முதலியப் பிரகிருதி தருமத்தைக்கடந்த அம்ருதமெனகிற ஆத்மாவையடையலாகும். இந்தப் பிரத்தியக் ஆத்மாவுக்கோ * ஆதியுமில்லை அந்தமுமில்லை இது ¶ எனக்காட்பட்டது. பெரிதென்கிற குணத்தோடுகூடியது; அதாவது சரீரத்தைகாட்டிலும் வேறுபட்டதாய் † சரீராதிகளால் அளவிடப்போகாததாயிருக்குமது. காரி

---

* இவ்வர்த்தம், நஜாயதே ம்ரியதே வா விபஶ்சித் என்றுசுருதியிலு மோதப்படும். ¶ ஜ[illegible] ப்ரப்ருத்யகு க்ஷிம் விஸிஷ்டவாஞ் ஜீவஸ்ய நாஶ என்றன்றோ இதுசும் [illegible]? ஆகையால் எம்பெருமானுக்குச் சரீரமாயிருக்கையாலே ஆ[illegible] எம்பெருமானுக்கு சேஷப்பட்டது. இப்படியேசுருதியும்சொல்லுகிறது எங்ஙனே! யஸ்யாத்மா ஶரீரம் யஆத்மாநமந்தரோ யமயதி என்றும் அப்படியே ஸகாரணம் கரணாதிபாதிபோ நசாஸ்யகஶ்சிஜ்ஜநிதா நசாதிப: ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஶ: என்றுமிவைதொடக்கமாக.

† சரீராதிகளால் அளவிடப்போகாததென்று எப்படி சொல்லக்கூடுமெனின்: ஸசாநந்த்யாய கல்பதே என்று அவன் அளவிலியாகிறானென்றன்றோசுருதியில் ஓதுகிறது? ஆனால் சரீரத்தால் அளவிடப்பட்டிருப்பதேனென்றால் —இதுகருமத்தால்வந்தது. கருமப்பிணையினின்று விடுபட்டவனுக்குத்தான் அளவின்மை கூறப்படுகிறது.

மூலத்தில் ப்ரஹ்ம சப்தத்தாலே ஆத்மாவைக்குறிக்கக்கூடுமோவெனில் கூடும். அப்படி ஆத்மாவினிடத்தில பிரம்மசப்தப்பிரயோகம் பண்ணவிடமுண்டோ வெனின் உண்டு. எங்ஙனே? ஸகுணாந் ஸமதீத்யைதாந் ப்ரஹ்மபூயாய கல்பதே|ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹம்ம்ருதஸ்யாவ்யயஸ்ய ச|ப்ரஹ்மபூதஃ ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி|ஸர்வஸ்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம் என்று பலவிடங்களில பிரயோகிக்கப்பட்டுளது.

http://acharya.org

யம் காரணம் என்கிற இரண்டு நிலையுமில்லாமையாலே இதின் ஸ்வரூபத்தை ஸத் என்றாவது அஸத் என்றாவது சொல்லப்போகாது. [காரியமான நிலையில் தேவன்முதலிய நாமமும் ரூபமுமுடைத்தாயிருக்கையாலே ஸத்என்று சொல்லப்படுகிறது; அதற்கு யோக்கியதையில்லாமையாலே காரணமான நிலையில் அஸத்என்றும்சொல்லப்படுகிறது; ஆகையால்ஸத்என்றாவது அஸத்என்றாவது சொல்லப்போகாது. இப்படியே சுருதி ‡ असद्वा इदमग्र आसीत् ततो वै सदजायत॥ என்றும் तद्धेदं तर्ह्यव्याकृतमासीत् तन्नामरूपाभ्यां व्याक्रियत என்றுஞ் சொல்லுகிறது. காரியம் காரணம் என்கிற இவ்விரண்டு நிலையும்ஆத்மாவுக்குக் கருமத்தால்வந்ததே யல்லது ஸ்வரூபத்தால் வந்ததல்லாமையாலே ஸத்என்றாவதுஅஸத் என்றாவது சொல்லப்போகாதென்றபடி.]

सर्वतः पाणिपादं तत् सर्वतोक्षिशिरोमुखम्।
सर्वतः श्रुतिमल्लोके सर्वमावृत्य तिष्ठति॥ கங॥

(கங) பரிசுத்த ஆத்மஸ்வரூபமானது எப்புறத்திலும் கைகால்களுடையது (அதாவது; கைகால்களால் செய்யும் வியாபாரத்தைச் செய்யுமது) அப்படியே எப்புறத்திலும் கண் தலை முகம் செவி இவைகளுடையது. [अपाणिपादो जवनो ग्रहीता पश्यत्यचक्षुः स शृणोत्यकर्णः என்று பரப்பிரம்மம் கைகால்களில்லாததாயிருந்தாலும் எந்தப்பக்கத்தாலும் கைகால்களின் வியாபாரங்களைச் செய்யுமென்று சுருதியில் ஓதப்படுகையாலே பரிசுத்தஸ்வபாவமான பிரத்தியக்- ஆத்மாவும் பரப்பிரம்மத்துக்கு ✠ ஸமமாகையாலே இதுவும் கைகால்களின் வியாபாரங்களை யெப்புறத்தாலும் செய்யுமென்பதும்ப்ரஸித்தம்.] மேலுமிது லோகத்திலுள்ளஸகலபதார்த்தங்களையும் வியாபித்துக்கொண்டிருக்கிறது.

सर्वेन्द्रियगुणाभासं सर्वेन्द्रियविवर्जितम्।
असक्तं सर्वभृच्चैव निर्गुणं गुणभोक्तृ च॥ கச॥

---

‡ असद्वा இத்தியாதி வாக்கியம் காரண நிலையிலுள்ள பரப்பிரம்மத்தைச்சொல்வதேயானாலும், காரணநிலையிலுள்ள பிரம்மம், நாமரூபங்கள்கொண்டுபிரிக்கப்போகாதபடி சூக்ஷ்மமாயிருக்கிற சித்தையும் அசித்தையும் சரீரமாயுடைத்தாயிருக்கையால், காரணாவஸ்த்தையில் க்ஷேத்திரமும் க்ஷேத்திரக்ஞனும் அஸத்சப்தத்தால் கூறப்படும். அப்படிப்பட்ட அவஸ்த்தை க்ஷேத்திரக்ஞனுக்குக் கருமத்தால் வந்ததாகையால் அதில்லாத பரிசுத்த ஸ்பாவமானது ஸத் என்றாவது அஸத் என்றாவது சொல்லத்தக்கதன்று.

✠ பிரத்யக் ஆத்மா பிரம்மத்துக்கு ஸமமாகிற தென்கிற விஷயம், तदा विद्वान् पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति என்கிற சுருதிசொல்லுகிறது. इदं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः என்று மேலும்சொல்லப்போகிறார்.

http://acharya.org

(உ௦) காரியமான சரீரமென்ன, காரணமான ஞானேந்திரியகர்மேந்திரிய மனஸ்ஸுக்களென்ன இவைகள், வியாபாரம் செய்யும் விஷயத்தில் பிரகிருதிதான் காரணம். * [என்றால்:—போகத்துக்குச் சாதநங்களான கிரியைகளெல்லாம் புருஷனுலிருக்கப்பெற்ற சரீராகாரமாய் விகாரப்பட்டிருக்கிறப்பிரகிருதியைப் பற்றிக்கிடக்கின்றன வென்றபடி] பிரகிருதியுடன் கலந்த புருஷன் இன்பதுன்பங்களை யநுபவிப்பதில் ஹேதுவாகிறான். [என்றால் சுகதுக்காநுபவத்துக்கு இடமாயிருக்கிறானென்றபடி.]

(அ-கை.) இப்படி ஒன்றோடொன்று கலந்த பிரகிருதியுடையவும் புருஷனுடையவும் காரியபேதங்கள் சொல்லப்பட்டன. இப்பொழுது தன்னைத்தான் அநுபவிப்பதே சுகமாயிருந்தானுகிலும் புருஷன், சப்தாதி விஷயங்களால் வரும் சுகதுக்கங்களை யநுபவிப்பதற்குக் காரணமாகிறானென்கிறார்.

புருஷ: ப்ரக்ருதிஸ்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜாந் குணாந்|

(உ௦௧) தன்னைத்தான் அனுபவிப்பதேசுகமாயிருக்கும் புருஷன், பிரகிருதியோடு கலந்தவனாய் அத்தால் வரும் ஸத்துவாதி குணகாரியங்களான சுகதுக்காதிகளை யநுபவிக்கிறான்.

(அ-கை.) பிரகிருதியுடன் கலப்பதற்குக் காரணங்கூறுகின்றார்.

காரணம் குணஸங்கோऽஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு ||உ௧||

(உ௧) பூர்வபூர்வமான பிரகிருதியின் விகாரங்களான தேவமனுஷியாதி யோநிவிசேஷங்களில் இருந்த விப்புருஷன், அந்தந்த யோனிகளால் வரும் ஸத்துவாதி குணமயமான இன்பமுதலியவற்றில் பற்றியவனாய், அதற்குச் சாதகங்களான புண்ணிய பாபரூப கர்மங்களில் பிரவர்த்திக்கிறான். அநந்தரம் அந்த புண்ணியபாபங்களின் பயனைப் புசிப்பதற்காக நல்லதுங் கெட்டதுமான யோனிகளில் பிறக்கிறான். 'அநந்தரம் மறுபடி கர்மத்தைச் செய்யத்தொடங்கி யதனால் பின்னும் பலவித யோனிகளில் பிறக்கிறான். [இப்படி அமாநித்துவம் முதலிய ஆத்மப்பிராப்திக் குறுப்பான குணங்களை யடைகிறவரையில் பிறந்தும் இறந்தும் ஸம்ஸரித்துப்போருகிறான்.]

உபத்ரஷ்டாநுமந்தா ச பர்தா போக்தா மஹேச்வர:|
பரமாத்மேதி சாப்யுக்தோ தேஹேऽஸ்மிந்புருஷ: பர:|| ||

(உஉ) இந்த தேஹத்திலிருக்கு மிப்புருஷன் தேஹத்தின் பிரவர்த்திக்கேற்றவைக்ளான கோரிக்கைகளைக் கொண்டு தேஹத்துக்கு ० உபத்திருஷ்

---

* புருஷனே அச்சரீரத்தை அதிஷ்டித்து மாத்திரமிருக்கிறான். அத்தைப்பற்றிதான் கர்த்ருத்வே ஹேது: இத்தியாதியாகச் சொல்லப்பட்டது. புருஷனைக் கர்த்தாவென்பதெல்லாம் சரீரத்தை அதிஷ்டிப்பதற்கு வேண்டும் பிரயத்தினத்துக்கு ஹேதுவாதல்பற்றி.

० உபத்திரஷ்டா - கூடிப்பார்ப்பவன்.

http://acharya.org

டாவாகவும் § அநுமந்தாவாகவுமிருக்கிறான். அப்படியே தேஹத்தைப் பரிக்கவும் பரிக்கிறான். அப்படியே தேஹப்பிரவர்த்தியாலுண்டாகு மின்பதுன் பங்களை யனுபவிப்பவனுமாகிறான். இப்படி தேஹத்தைத் தரித்தும் ஆண்டும் அதற்குப் பதியாயிருந்தும் போருகையாலே, தேகம் இந்திரியம் மனம் இவைகளைக்குறித்து ¶ மஹேசுவரனென்றுஞ் சொல்லப்படுகிறான். அதுவுமின்றி இத்தேஹத்தில் தேஹம் இந்திரியம் மனம் இவைகளைக்குரித்து பரமாத்துமாவென்றும் சொல்லப்படுகிறான். $

[அநாதிமத்பரம் இத்தியாதியால் சொல்லப்பட்ட அளவற்ற ஞானசக்திகளுடன்கூடிய விப்புருஷன், பிரகிருதி ஸம்பந்தத்தால் வரும் குணஸம்பந்தத்தால் இந்த தேஹத்திற்குமாத்திரம் மஹேசுவரனும் பரமாத்மாவாயுமாகிறனென்றபடி.]

ய ஏவம் வேத்தி புருஷம் ப்ரக்ருதிம் ச குணைஸ்ஸஹ|
ஸர்வதா வர்த்தமாநோऽபி ந ஸ பூயோऽபிஜாயதே||௨௩||

(௨௩) இப்படி கிழ்ச்சொன்ன ஸ்வபாவத்தோடு கூடிய புருஷனையும் கிழ்ச்சொன்ன ஸ்வபாவத்துடன் கூடிய பிரகிருதியையும் இனி சொல்லப்போகிற ஸ்வபாவத்தோடு கூடிய ஸத்துவம் தொடக்கமான குணங்களையும் எவன் உள்ளபடியே பிரித்துஅறிகிறானோ அவன் தேவமனுஷ்யாதி தேஹங்களையடைந்து அதிகவருத்தப்பட்டுக்கொண்டிருந்தபோதிலும் மறுபடிப்பிரகிருதியால் கட்டுப்படான்.

[என்றால்:—அளவில்லாத ஞானமே வடிவமாய் பாவத்தை யொழித்திருக்கிற ஆத்மாவை அந்த தேஹம் கழிந்தவுடனே யடைகிறனென்று தாத்பரியம்.]

த்யாநேநாத்மநி பஶ்யந்தி கேசிதாத்மாநமாத்மநா|
அந்யே ஸாங்க்யேந யோகேந கர்மயோகேந சாபரே||௨௪||

(௨௪) யோகம் ஸித்தித்தவர்களான சிலர், தம் சரீரத்தில் ஆத்மாவைத் தியாநயோக யுக்தமான மனதைக்கொண்டு பார்க்கிறார்கள். யோகஸித்தியாகாத சிலர், ஸாங்கியயோகத்தாலே மனதை யோகத்துக்கு யோக்கியமாம்படி பண்ணி ஆத்மாவைக் காண்கிறார்கள். பின்னும் சிலர் ஞாநயோகஞ் செய்யத்தகுந்தவர்களானாலும் தகாதவர்களானாலும் தாம் சுலபமான உபாயத்தைக்கைப்பற்றிப் பெயர் பெற்றவர்களாய், ஞாநத்தையுட்கொண்ட கர்மாநுஷ்டாநத்தைப்பண்ணி மனதைக்கொண்டு யொகத்துக்கு வேண்டும் யோக்கியதையைச் சம்பாதித்து பிறகு ஆத்மாவைப்பார்க்கிறார்கள்.

---

§ அநுமந்தா - செய்யச்சம்மதிப்பவன்.

¶ ஆத்மாவை மஹேசுவரனென்று ஶரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர:| க்ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தாநிவாஶயாத் என்பதனால்சொல்லப்போகிறார்.

$ இப்படியே ஆத்மசப்தமும்,தேஹத்திலும் மனதிலும் அநந்தரம்பிரயோகிக்கப்படுகிறது, த்யாநேநாத்மநி பஶ்யந்தி கேசிதாத்மாநமாத்மநா என்று.

http://acharya.org

அந்யே த்வேவமஜாநந்த: ஶ்ருத்வாந்யேப்ய உபாஸதே।
தேऽபி சாதிதரந்த்யேவ ம்ருத்யும் ஶ்ருதிபராயணா:॥ உரு॥

(உரு) ஆத்மஸாக்ஷாத்காரத்துக்கு ஸாதநங்களான கர்மயோகாதிகளை அநுஷ்டிக்க அதிகாரமில்லாத பின்னுஞ் சிலர், தத்துவந்தெரிந்த ஞாநிகளிடத்தில் கர்மயோகாதிகளைக்கேட்டு அநுஷ்டித்து ஆத்மாவையுபாஸிக்கிறார்கள். அவர்களும் ஆத்மாவையடைந்து மரணத்தை யொழிக்கிறார்கள். எவர்களாலும் கேட்பதில்நிஷ்டராயிருக்கிறார்களோ அவர்களும் மெள்ளமெள்ள கர்மயோகாதிகளைச்செய்யத் தொடங்கி மரணாதிகளை யொழிக்கிறார்கள்.

(அ-கை.) அநந்தரம் பிரகிருதியோடு கலந்த ஆத்மாவைப் பிரித்தறியும் வகை சொல்லவேண்டி, தாவரமும் ஜங்கமமுமான ஸகலப் பிராணியும் சேதநாசேதநங்களின் சேர்க்கையால் உண்டாகிறதென்கிறார்.

யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித் ஸத்த்வம் ஸ்தாவரஜங்கமம்।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞஸம்யோகாத் தத்வித்தி பரதர்ஷப॥ உசு॥

(உசு) ஒ பரதகுலமன்னா! தாவரமோ ஜங்கமமோ, எந்தப்பிராணியும் க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞர்களின் சேர்க்கையினால் உண்டாகிறது. [சேர்ந்தால்மாத்திரம் உண்டாகுமேயல்லது பிரிந்திருந்தால் உண்டாகமாட்டாதென்று தாத்பரியம்.]

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஶ்வரம்।
விநஶ்யத்ஸ்வவிநஶ்யந்தம் ய: பஶ்யதி ஸ பஶ்யதி॥ உஎ॥

(உஎ) இப்படி ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிற ஸகலப்பிராணிகளிலும், தேவாதிவிகாரங்களடையாமல் தனித்து ஆங்காங்கு அந்தந்த தேஹம் இந்திரியம் மனம் இவைகளைக்குறித்துப்பரமேசுவரனாய்விளங்கும் ஆத்மாவானது, (ஞாதாவாய்க்கொண்டு)எங்கும் ஸமமாய் அந்த சரீராதிகள் நாசமடைந்தாலும் தான் நாசமடையாததாயிருக்கிறதென்று எவன் அறிகிறானோ, அவன் ஆத்மாவை உள்ளபடியே யறிவான்.

[எவனாலும் தேவாதிகளைப்போல் ஆத்மாவும் விகாரப்பட்டிருக்குமென்றும் பிறப்பிறப்போடு கூடியதென்றும் நினைக்கிறானோ அவன் நித்தியஸம்ஸாரியாவானென்று திருவுள்ளம்.]

ஸமம் பஶ்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்திதமீஶ்வரம்।
ந ஹிநஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராம் கதிம்॥ உஅ॥

(உஅ) தேவர்முதலிய ஸகல சரீரங்களிலும் அததற்குப்பதியாயும் ஆதாரமாயும் ஆள்பவனாயுமிருக்கும் சரீரேசுவரனான ஆத்மாவை, தேவாதிகள் போல் விகாரப்படாமல் ஞாநமேவடிவாய் ஒரேமாதிரியாயிருப்பதாக எவன் அறிகிறானோஅவன், அப்படிப்பட்ட தன்மனதைக்கொண்டே தன் ஆத்மாவை ஸம்ஸாரத்தினின்றுங் கடைத்தேற்றுகிறான். இப்படி எங்கும் ஞாதாவாய் ஏக

http://acharya.org

ரூபனாயிருக்கிறதாகப் பார்ப்பதனால் பரமகதியை யடைகிறான். [அதாவது உண்மையான ஆத்மஸ்வரூபத்தை யடைகிறானென்றபடி.]

[தேவர் முதலான ஆகாரங்களோடு கூடி எங்கும் ஆத்மா வித்தியாஸ ரூபனாகவே யிருக்கிறானென்று அறியுமவன் ஸம்ஸாரஸாகரத்தின் நடுவில் தன் ஆத்மாவைத் தள்ளிவிடுவானென்பது திருவுள்ளம்.]

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணாநி ஸர்வஶ꞉ |
ய꞉ பஶ்யதி ததாத்மாநம் அகர்தாரம் ஸ பஶ்யதி || ௨௯ ||

(௨௯) ஸர்வகர்மங்களும் (முன்சொன்ன நியாயமாய்) பிரகிருதியாலே செய்யப்படுகின்றனவென்றும், அப்படியே ஆத்மாவானது ஞாநாகாரமாய் அகர்த்தாவாயிருக்கிறதென்றும், அப்படியே இந்த ஆத்மாவுக்குப்பிரகிருதியோடு சேர்க்கையும், சரீரத்தை அதிஷ்டித்திருக்கையும், அத்தால் சுகதுக்கானுபவமும், கர்மரூபமான அக்ஞாநகாரியமென்றும் எவன் அறிகிறானோ அவன் ஆத்மாவை உள்ளபடியே பார்க்கிறான்.

யதா பூதப்ருதக்பாவம் ஏகஸ்தம் அநுபஶ்யதி |
தத ஏவ ச விஸ்தாரம் ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா || ௩0 ||

(௩0) பிரகிருதியென்றும் புருஷனென்றும் இரண்டு தத்துவங்களாயுள்ள தேவர் முதலான ஸகல பூதங்களிலும் தேவத்தன்மை, மானிடத்தன்மை, குறுகியிருத்தல், நீண்டிருத்தல் முதலியவேறுபாடானது, அந்தப்பிரகிருதிபுருஷர்களில் பிரகிருதியென்னும் ஒருதத்துவத்தில்மாத்திரம் இருக்கிறதென்றும், அப்படியே அந்தப் பிரகிருதியினின்றுமே புத்திரன் பவுத்திரன் முலிய விஸ்தாரமும் உண்டாகிறதென்றும் எப்பொழுது பார்க்கிறானோ அப்பொழுதுதான் (அளவற்ற ஞாநமே வடிவமான) ஆத்மாவை யடைவான்.

அநாதித்வாந்நிர்குணத்வாத் பரமாத்மாயமவ்யய꞉ |
ஶரீரஸ்தோ(அ)பி கௌந்தேய ந கரோதி ந லிப்யதே || ௩௧ ||

(௩௧) சரீரத்தைக்காட்டிலும் வேறான ஸ்வபாவமான இந்த ஆத்மாவென்னும் * பரமாத்மா, சரீரத்திலிருந்தபோதிலும் ஆதியற்றதாகையாலே நாசமற்றது. ஸத்துவம் முதலிய குணங்களற்றதாகையால் செய்யுந்திறத்ததும் தேஹஸ்வபாவத்தால் கட்டுண்பதுமன்று.

(அ-கை.) நல்லது! குணமில்லாததாகையாலே செய்யுந்திறத்ததன்றென்பது யுக்தம். சரீரத்தோடு நித்தியமாய்க் கூடியிருக்கச்செய்தே சரீரஸ்வபாவங்களால் கட்டுப்படாதென்பதெப்படி? என்றால் அருளிச்செய்கிறார்.

யதா ஸர்வகதம் ஸௌக்ஷ்ம்யாத் ஆகாஶம் நோபலிப்யதே |
ஸர்வத்ராவஸ்திதோ தேஹே ததாத்மா நோபலிப்யதே || ௩௨ ||

* பரமாத்மசப்தம் ஆத்மாவினிடத்திலும் பிரயோகிப்பதுண்டென்று முன்பு அருளிச்செய்திருப்பதை இங்கே அநுஸந்திப்பது.

http://acharya.org

(௩௨) ஆகாசமானது எங்கும் பரந்து எல்லாவஸ்துக்களோடுங் கூடியிருக்கச்செய்தேயும் ஸூக்ஷ்மமாகையாலே எந்த வஸ்துவின் ஸ்வபாவத்தோடுஞ் சேராமலிருப்பதுபோல், ஆத்மாவானது ஸூக்ஷ்மமாகையால் தேவர்முதலிய ஸகலசரீரங்களிலும் இருந்தபோதிலும் அவைகளின் ஸ்வபாவத்தோடு ஒட்டமாட்டாது.

𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌤𑍍𑌯𑍇𑌕𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌲𑍋𑌕𑌮𑌿𑌮𑌂 𑌰𑌵𑌿𑌃।
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍀 𑌤𑌥𑌾 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤॥௩௩॥

(௩௩) ஒரே ஸூரியன் தன் காந்தியால் இவ்வுலகங்களெல்லாவற்றையும் பிரகாசப்படுத்துவதுபோல் க்ஷேத்திரியான ஜீவனும் க்ஷேத்திரத்தை "இது என்க்ஷேத்திரம் இது இப்படிப்பட்டது" என்று உள்ளும் புறம்பும் எங்கும் கால்முதல் தலைவரையில் தன் ஞானத்தாலே பிரகாசிப்பிக்கிறான். [ஆகையால் பிரகாசிக்கின்ற ஸகல லோகங்களையுங்காட்டிலும் பிரகாசிப்பிக்கும் ஆதித்தன் மிகவும் விலக்ஷணனாயிருத்தல்போல, அறியப்படும் க்ஷேத்திரத்தைக்காட்டிலும் அறிகின்ற ஆத்மா மிகவும் விலக்ஷணனென்று தாத்பரியம்.]

𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌯𑍋𑌰𑍇𑌵 𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾।
𑌭𑍂𑌤𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌚 𑌯𑍇 𑌵𑌿𑌦𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 𑌪𑌰𑌮𑍍॥௩௪॥

(௩௪) கீழ்ச் சொன்னபடி க்ஷேத்திரத்தினுடையவும் க்ஷேத்திரஜ்ஞனுடையவும் விசேஷத்தையும், க்ஷேத்திரக்ஞன் பிரகிருதியினின்றும் விடுபடுகையையும், விவேகஞானமென்னுங் கண்ணினால் எவர்கள் அறிவார்களோ அவர்கள் கட்டினின்றும் விடுபட்ட ஆத்மஸ்வரூபத்தை யடைவார்கள்.

[என்றால்—க்ஷேத்திரத்தையும் க்ஷேத்திரக்ஞனையும் பகுத்தறியும் ஞானத்தால் அவைகளைப் பகுத்தறிந்து, தேவமனுஷ்யாதிரூபமாய் விகாரப்பட்டிருக்கும் பிரகிருதியினின்றும் விடுபடுமுபாயமான அமானித்வாதிகளையும் அறிந்து நடப்பவர்கள், கட்டினின்று விடுபட்டவர்களாய் தானான தன்மையிலிருந்து ஞானமே வடிவாயிருக்கும் ஆத்மாவை யடைவார்கள் என்று தாத்பரியம்.]

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
பதின்மூன்றாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:.
ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பதிநான்காவது அத்யாயம்.

:0:

அவதாரிகை.

பதின்மூன்றாம் அத்தியாயத்தில் - ஒன்றோடொன்று கலந்த பிரகிருதியினுடையவும் புருஷனுடையவும் ஸ்வரூபத்தின் உண்மையை யறிந்து, எம்

http://acharya.org

பெருமானிடத்தில் பக்தியுடன்கூடி' அமானித்வாதிகளாலே பந்தத்தினின்று விடுபடுகிறானென்று சொல்லப்பட்டது. அதில் பந்தத்துக்குக் காரணம், பூர்வீகமான ஸத்துவமுதலிய குணவிகாரமான சுகதுக்காதிகளிலுண்டான பற்றென்று சொல்லப்பட்டது. இப்பொழுது குணங்கள் பந்தத்துக்குறுப்பாகுந் தன்மையும், அக்குணங்களை நிவர்த்திபண்ணும் பிரகாரமும் கூறப்படுகின்றன.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 — 𑌪𑌰𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑌰𑌾𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌿𑌤𑍋 𑌗𑌤𑌾𑌃 ॥ ௧ ॥

(௧) பகவானருளிச்செய்கிறார் - அர்ச்சுந! பிரகிருதிக்கும் புருஷனுக்கும் உட்பட்டதாய் ஸத்துவம்முதலிய குணவிஷயமாயுள்ளதாய் முன்சொன்னதைக் காட்டிலும் வேறாயிருக்கிற மற்றொரு ஞானத்தை உனக்கு மறுபடியும் சொல்லுகிறோம்! இந்த ஞானமோ பிரகிருதி புருஷவிஷயமாய் அறிந்தவெல்லா ஞானத்துக்கும் மேலானது. இந்த ஞானத்தையறிந்த வெல்லா முனிகளும் இந்த ஸம்ஸாரமண்டலத்திற்குப் புறம்பான ஸித்தியை யடைந்தார்கள்.

(அ-கை) மறுபடியும் அந்த ஞானத்தைப் பலனோடுகொண்டு கூட்டுகிறார்.

𑌇𑌦𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌮𑌮 𑌸𑌾𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑌾𑌗𑌤𑌾𑌃 ।
𑌸𑌰𑍍𑌗𑍇𑌽𑌪𑌿 𑌨𑍋𑌪𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌲𑌯𑍇 𑌨 𑌵𑍍𑌯𑌥𑌨𑍍𑌤𑌿 𑌚 ॥ ௨ ॥

(௨) இப்பொழுது நாம் சொல்லப்போகிற இந்த ஞானத்தை யடைந்து என்னோடு ஸமமானவர்கள், சிருஷ்டியிலும் ஸம்ஹாரத்திலும் அகப்படமாட்டார்கள்.

(அ-கை.) அநந்தரம் பிரகிருதியின் குணங்கள் பந்தத்துக்குக் காரணமாகும்படியையருளிச்செய்வாராய் ஸகலமான பூதங்களும் பிரகிருதிபுருஷாளின் சேர்க்கையா லுண்டாகின்றமையும் பகவானை தம்மாலேயே செய்யப்பட்டது என்கிறார்.

𑌮𑌮 𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌮𑌹𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌗𑌰𑍍𑌭𑌂 𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।
𑌸𑌂𑌭𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ॥ ௩ ॥

(௩) ஸகல ஜகத்துக்கும் பிறப்பிடமாய் § மஹத்பிரம்மமென்று சொல்லப்பட்ட எனது பிரகிருதியினிடத்து ஜீவனென்னும் ✻ கர்ப்பத்தைத் தரிப்பி

---

§ [illegible] ॥ என்று சொல்லப்பட்ட அசேதநப் பிரகிருதியானது, மஹத் அஹங்காரம் முதலியவிகாரங்களுக்கெல்லாம் காரணமாயிருக்கையாலே 𑌮𑌹𑌤𑍍 என்னப்படும். சுருதியிலும் சிலவிடத்துப்பிருகிருதியைப் பிரம்மசப்தத்தாலே சொல்லுகிறது. எங்கே? 𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌂 𑌤𑌪𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌮𑌨𑍍𑌨𑌞𑍍𑌚 𑌜𑌾𑌯𑌤𑍇 என்று சொல்லுகிறதன்றோ?

✻ 𑌇𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌮𑍇 𑌪𑌰𑌾𑌮𑍍 𑌜𑍀𑌵𑌭𑍂𑌤𑌾𑌮𑍍 என்று குறிக்கப்பட்டசேதநத்தொகையென்னும் மேலானப் பிரகிருதியானது, ஸகலப்பிராணிகளுக்கும் விதைமுதலாயிருக்கையாலே கர்ப்பமென்று சொல்லப்படுகிறது.

http://acharya.org

க்கிறேன். [என்றால்:—போகஸ்தாநமான அசேதநப் பிரகிருதியோடு போக்தாக்களின் தொகையான சேதநப்பிரகிருதியைக் கூட்டுகிறேனென்றபடி] இப்படி என் ஸங்கல்பத்தால் ஒன்றோடொன்று சேர்ந்த விரண்டுப் பிரகிருதிகளினின்றும் பிரமன் முதல் புல்லளவாயுள்ள ஸகல பூதங்களு முண்டாகின்றன.

(அ-கை.) காரியமான நிலையிலுள்ள சேதநாசேதநங்களின் சேர்க்கையும் தம்மாலேயே செய்யப்பட்டதென்கிறார்.

𑌸𑌰𑍍𑌵𑌯𑍋𑌨𑌿𑌷𑍁 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃 𑌸𑌂𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑌾𑌃 |
𑌤𑌾𑌸𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌮𑌹𑌦𑍍𑌯𑍋𑌨𑌿𑌰𑌹𑌂 𑌬𑍀𑌜𑌪𑍍𑌰𑌦𑌃 𑌪𑌿𑌤𑌾 || ௪ ||

(௪) தேவர், கந்தருவர், யக்ஷர், இராக்ஷஸர், மனிதர், பசு, மிருகம், பக்ஷி, பாம்பு முதலிய யோனிகளில் உண்டாகின்ற அந்தந்த சரீரங்களுக்கும் பிரம்மமென்கிற பிரகிருதிதான் காரணம். [என்றால்:—என்றால் சேர்க்கப்பட்ட சேதநவர்க்கங்களோடுகூடி மஹத்துமுதல் விசேஷத்தளவான நிலையிலுள்ள பிரகிருதிதான் காரணமென்றபடி.] மேலும் அவைகளுக்கு வித்திடும் பிதாவும் நானே. [என்றால்:—ஆங்காங்கும் அந்தந்த கருமத்துக்குத்தக்கப்படி சேதநவர்க்கங்களைச் சேர்ப்பவனும் நானே யென்றபடி.]

(அ-கை.) இப்படி சிருஷ்டியின் ஆரம்பத்தில் பழைய கர்மமடியாக அசேதநத்தோடு கலந்து தேவர்முதலிய யோநிகளில் உண்டாகின்றப் பிராணிகளுக்கு,மறுபடியும் மறுபடியும் தேவாதிரூபமாய் பிறப்புண்டாவதற்குக் காரணஞ் சொல்லுகிறது.

𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌰𑌜𑌸𑍍𑌤𑌮 𑌇𑌤𑌿 𑌗𑍁𑌣𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑌂𑌭𑌵𑌾𑌃 |
𑌨𑌿𑌬𑌧𑍍𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌦𑍇𑌹𑍇 𑌦𑍇𑌹𑌿𑌨𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 || ௫ ||

(௫) ஸத்துவம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்கிற முக்குணங்களும் பிரகிருதியை விட்டுப்பிரியாத ஸ்வபாவ விசேஷங்கள். (பிரகிருதியான நிலையில் தோன்றாமலும், பிரகிருதியின் விகாரமான நிலையில் (அதாவது மஹத்து முதலிய நிலையில்) தோன்றியுமிருக்கின்ற இக்குணங்கள் (மஹத்துமுதல் விசேஷத்தளவாயுள்ள விகாரங்களாலுண்டுபண்ணப்பட்ட தேவர்முதலிய) சரீரங்களில் ஸம்பந்தப்பட்டிருக்கு மிந்தஅழிவற்ற ஆன்மாவைச் சரீரத்தில்தானே நிலைக்கும்படி செய்கின்றன. [என்றால்:—சரீரத்தில் ஸம்பந்தப்பட்டதே பற்றாசாகக் கட்டுப்படுத்துகின்றனவென்றபடி.]

(அ-கை.) ஸத்துவம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு இவைகளின் ஆகாரமும், அவை கட்டுப்படுத்தும்படியும் சொல்லப்படுகின்றன.

𑌤𑌤𑍍𑌰 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌮𑌨𑌾𑌮𑌯𑌮𑍍 |
𑌸𑍁𑌖𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌬𑌧𑍍𑌨𑌾𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌚𑌾𑌨𑌘 || ௬ ||

(௬) ஸத்துவம் ரஜஸ்ஸு தமஸ்ஸு இவற்றுள் ஸத்துவத்தின் ஸ்வரூபம் * நிர்மலமாயிருக்கையால் பிரகாசிப்பிக்குமது. [என்றால்—ஸுகத்தை

* நிர்மலம்-பிரகாசத்தையும் சுகத்தையும் மறைக்குந்தன்மையற்றது.

http://acharya.org

யும் † பிரகாசத்தையும் உண்டுபண்ணுவதே ஸ்வபாவமாயிருப்பதென்றபடி.] நோயென்னுங் காரியத்தை யுண்டுபண்ணாதது; இந்த ஸத்துவகுணமானது சரீரத்தைப்பற்றிய விவ்வாத்துமாவைச் சுகத்திலும் ஞாநத்திலும் பற்றையுண்டாக்கிக் கட்டுப்படுத்துகிறது. [என்றால்:—ஞாநத்திலும் சுகத்திலும் பற்றுண்டானால் அதன் சாதனங்களான லௌகிக வைதிககாரியங்களில் பிரவர்த்திக்கிறான். அதன்பின்பு அதன் பயனை யநுபவிப்பதற்கு ஸாதகமான யோனிகளில் பிறக்கிறான். ஆகையால் ஸத்துவமானது ஸுகத்திலும் ஞாநத்திலும் பற்றை யுண்டுபண்ணி அவ்வழியே கட்டுப்படுத்துகிறதென்றபடி.]

[இதனால் ஞாநசுகங்களைத்தருவதும் மறுபடி அவற்றோடு சேர்ப்பதும் ஸத்துவமென்றதாயிற்று.]

ரஜோ ராகாத்மகம் வித்தி த்ருஷ்ணாஸங்கஸமுத்பவம்।
தந்நிபத்நாதி கௌந்தேய கர்மஸங்கேந தேஹிநம்॥ எ॥

(எ) ரஜோகுணமானது $ ராகத்துக்கும் ¶திருஷ்ணைக்கும் § ஸங்கத்துக்கும் உத்பத்திஸ்தாநமாயிருக்கும். அப்படியே சரீரத்தை யெடுத்திருக்கும்புருஷனைக் கிரியைகளில் ஆசையையுண்டுபண்ணுவித்து அவ்வழியே கட்டுப்படுத்தும். [என்றால்: ஆசையோடுகூடி எந்தெந்த கிரியைகளைச்செய்ய வாரம்பிக்கிறானோ அவைகள்,புண்ணியமல்லது பாபரூபமாயிருக்குமாகையாலே அவற்றின் பலனை யநுபவிப்பதற்கென்று ஏர்ப்பட்ட யோனிகளில் பிறப்பதற்குக் காரணமாகின்றன; ஆகையால் ரஜோகுணமானது கர்மத்தில் பற்றை யுண்டுபண்ணி ஆத்மாவைக் கட்டுப்படுத்துமென்றபடி.]

[ஆகவிதனால் ரஜஸ்ஸானது ராகத்துக்கும் திருஷ்ணைக்கும் ஸங்கத்துக்கும் காரணமாவதோடு கர்மத்தில் பற்றையு முண்டாக்குமென்றதாயிற்று.]

தமஸ்த்வஜ்ஞாநஜம் வித்தி மோஹநம் ஸர்வதேஹிநாம்।
ப்ரமாதாலஸ்யநித்ராபிஸ் தந்நிபத்நாதி பாரத॥ அ॥

(அ) தமோகுணமோ (ஒருபடியாயிருக்கும் வஸ்துவை அதற்கு விரோதமானபடியா யறிவதென்கிற) அக்ஞாநத்தாலுண்டானதாகையால் ஸகலப்பிராணிகளுக்கும் வித்தியாஸமான ஞாநத்தையுண்டு பண்ணும். இது, ☼ பிரமாதம், ♀ ஆலஸ்யம், ⊕ நித்திரை இவைகளுக்குக் காரணமாய்க்கொண்டு சரீரமெடுத்த ஜீவனைக் கட்டுப்படுத்துகிறது.

---

† பிரகாசம் - வஸ்துவை உள்ளபடியறிகை.

$ ராகம் - ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றுக்கொன்றுண்டான ஆசை.

¶ திருஷ்ணை-சப்தாதிவிஷயங்களெல்லாவற்றிலு முண்டான வாசை.

§ ஸங்கம்-புத்திரமித்திராதிகளைக் கட்டியணைக்கவேண்டுமென்னுமாசை.

☼ பிரமாதம் -செய்யவேண்டியதைத்தவிர மற்றொன்றைச்செய்வது

♀ ஆலஸ்யம் - கர்மத்தை யாரம்பஞ் செய்யாமலிருக்கை.

⊕ நித்திரை - இந்திரியங்களைப் பிரவர்த்திக்கச்செய்கின்ற புருஷன் அடங்கிப்போவதனால் ஸகல இந்திரியங்களும் அடங்கிப்போகை. அதில் புறம்புண்டான இந்திரியங்கள்மாத்திரம் அடங்கினால் அது ஸ்வப்நம். மனதும் அடங்கினால் அது சுழுத்தி. (அதாவது நல்ல தூக்கம்.)

http://acharya.org

(அ-கை) ஸத்த்வாதி குணங்கள் புருஷனைக்கட்டும்பொழுது எவைகளைக்கொண்டு கட்டுகின்றனவோ அவைகளில் பிரதாநங்களைச் சொல்லுகிறார்.

ஸத்த்வம் ஸுகே ஸஞ்ஜயதி ரஜ: கர்மணி பாரத|
ஜ்ஞாநமாவ்ருத்ய து தம: ப்ரமாதே ஸஞ்ஜயத்யுத ||௯||

(௯) ஸத்த்வத்துக்குப் பிரதாநம் சுகத்தோடு சேர்ப்பிக்கை. ரஜோகுணத்துக்குப் பிரதாநம் கருமத்தோடு சேர்ப்பிக்கை. தமோகுணத்துக்குப் பிரதாநம் வஸ்துவையுள்ளபடியே யறியவொட்டாமல் தடுத்து விபரீத ஞாநத்தை விளைவித்துச் செய்யவேண்டியதைவிட்டு விபரீதத்தோடு சேர்ப்பிக்கை.

(அ-கை.) சரீராகாரமாய் விகாரப்படும் பிரகிருதியைச் சேர்ந்தவைகளான ஸத்த்வம் முதலிய குணங்கள் எப்போதும் பிரகிருதியைவிட்டு நீங்காமலிருக்குமவைகளாகையாலே ஒன்றுக்கொன்று விரோதமான காரியத்தையெப்படி உண்டாக்கு மென்னில் அருளிச்செய்கிறார்.

ரஜஸ்தமஶ்சாபிபூய ஸத்த்வம் பவதி பாரத|
ரஜ: ஸத்த்வம் தமஶ்சைவ தம: ஸத்த்வம் ரஜஸ்ததா ||௧௦||

(௧௦) [ஸத்த்வம் முதலிய குணங்கள் பிரகிருதியோடு கலந்த ஆத்மஸ்வரூபத்தைச் சேர்ந்தவைகளாய் எப்பொழுது மிருந்ததேயாயினும் தொல்லைவினையின்படியும் சரீரத்தை வளர்க்கும் உணவின் வித்தியாஸத்தின்படியும் ஒன்று அடங்கியும் ஒன்று தலையெடுத்தும் இப்படி வித்தியாஸப்படுகின்றன.] ரஜஸ்ஸும் தமஸ்ஸும் ஒருககால் அடங்கி ஸத்த்வம் தலையெடுத்திருக்கும். அப்படியே தமஸ்ஸும் ஸத்த்வமும் அடங்கி ஒருக்கால் ரஜோகுணந் தலையெடுத்திருக்கும். அப்படியே ரஜஸ்ஸும் ஸத்த்வமும் அடங்கி ஒருக்கால் தமஸ்ஸு தலையெடுத்திருக்கும்.

(அ-கை.) ஆனால் அதைக் காரியத்தைக்கண்டுதான் ஊஹிக்கவேண்டுமென்கிறார்.

ஸர்வத்வாரேஷு தேஹே஽ஸ்மிந் ப்ரகாஶ உபஜாயதே|
ஜ்ஞாநம் யதா ததா வித்யாத் விவ்ருத்தம் ஸத்த்வமித்யுத ||௧௧||

(௧௧) கண்முதலிய ஸகலமான ஞாநமார்க்கங்களிலும் வஸ்துவை யுள்ளபடியே பிரகாசிப்பித்துக்கொண்டு எப்பொழுது ஞாநமுண்டாகிறதோ அப்பொழுது சரீரத்தில் ஸத்த்வம் தலையெடுத் திருக்கிறதென் றறியத்தக்கது.

லோப: ப்ரவ்ருத்திராரம்ப: கர்மணாமஶம: ஸ்ப்ருஹா|
ரஜஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்தே பரதர்ஷப ||௧௨||

(௧௨) தன் பொருளைக் கொடுப்பதென்றால் கூடாதென்கிற ஸ்வபாவமும், யாதொரு பயனுமில்லாமலே சலிக்கும் ஸ்வபாவமும், பல ஸாதநமான கருமத்தைச் செய்யத்தொடங்குவதும், இந்திரியங்கள் அடங்காமையும்

http://acharya.org

விஷயத்தில் ஆசையும், இவையெல்லாம் ரஜோகுணந் தலையெடுத்தபோது உண்டாகின்றன. [லோபம் முதலிய ஸ்வபாவங்களிருக்கும்போழுது ரஜோ குணம் விருத்தியாயிருக்கிறதென்று அறியத்தக்கதென்று பொருள்.]

அப்ரகாஶோऽப்ரவ்ருத்திஶ்ச ப்ரமாதோ மோஹ ஏவ ச|
தமஸ்யேதாநி ஜாயந்தே விவ்ருத்தே குருநந்தந||கங||

(கங) ஞானம் உண்டாகாமையும், பிரவ்ருத்தியுண்டாகாமையும் (காரிய மில்லாத காரியத்தில் பிரவ்ருத்திப்பதென்கிற) அநவதாநமும், விபரீதஞ்ஞா நமும் இவை யாவும் தமோகுணம் விருத்தியாகும்பொழுது உண்டாகின்றன. [இவைகளைக்கொண்டு தமஸ்ஸு விருத்தியாயிற்றென்றறிக.]

யதா ஸத்த்வே ப்ரவ்ருத்தே து ப்ரலயம் யாதி தேஹப்ருத்|
ததோத்தமவிதாம் லோகாநமலாந் ப்ரதிபத்யதே||கச||

(கச) ஸத்துவகுணம் விருத்தியானகாலத்தில் மரணமடையுமவன், ஆத்மாவின் உண்மையையறிந்து அக்ஞானங் கழிந்தவர்களின் கூட்டத்திற் போய்ச்சேருகிறான். [என்றால் ஸத்துவம் தலையெடுத்தபொழுது இறந்தவன் ஆத்மக்ஞானிகளின் குலத்தில் பிறந்து, ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை யறியவேண்டும் ஸாதநங்களான புண்ணிய கருமங்களி லிழிகின்றானென் றபடி.]

ரஜஸி ப்ரலயம் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே|

(கசஉ) ரஜோகுணம் தலையெடுத்தபொழுது மறித்தவன் பலனைக்குறித்துக் கருமஞ்செய்யுமவர்களின் குலத்தில் பிறக்கிறான். [என்றால் பிறந்து ஸ்வர்க்கம் முதலிய பலன்களைச் சாதிக்குங் கருமங்களைச் செய்கிறானென்றபடி.]

ததா ப்ரலீநஸ்தமஸி மூடயோநிஷு ஜாயதே||கரு||

(கரு) தமோகுணந் தலையெடுத்தபொழுது இறந்தவன், நாய்பன்றி முதலிய மூடயோநிகளில் பிறக்கிறான். [என்றால் - ஒருபயனைக்குறித்தும் ஆரம்பிக்கத்தகாதபடியாய்ப் பிறக்கிறானென்றபடி.]

கர்மண: ஸுக்ருதஸ்யாஹு: ஸாத்த்விகம் நிர்மலம் பலம்|
ரஜஸஸ்து பலம் து:கமஜ்ஞாநம் தமஸ: பலம்||கசு||

(கசு) இப்படி ஸத்துவம் விருத்தியாயிருக்கையில் மரணமடைந்து ஆத்மக்ஞானிகளின் குலத்திற்பிறந்தவன், பலனில் அபேக்ஷையின்றி நம்முடைய ஆராதநரூபமாகக் கர்மஞ்செய்துவந்து மறுபடியும் அதைக்காட்டிலும் அதிகமான ஸத்துவத்தாலுண்டானதாய் நிர்மலமானதாய் துக்கலேசமுமற்றதாயிருக்கும் பலனையடைகிறானென்று ஸத்துவகுணத்தின் பரிணாமத்தையறிந்தவர்கள் சொல்லுவார்கள். அந்திமகாலத்தில்விருத்தியான ரஜோகுணத்துக்குப்பலன், பலஸாதநங்களான கர்மத்தில்பற்றுடையவர்களின்குடியிற்பிறப்பும், பலாபேக்ஷையுடன் கூடியகர்மத்தைச் செய்கையும் அதன்பலனை யநுபவிப்

http://acharya.org

பதற்காக மறுபிறப்பும், ரஜோகுணவிருத்தியும், மறுபடி பலாபேக்ஷையுடன் கருமத்தில் பிரவிருத்தியும் என்றிப்படி ஸம்ஸாரதுக்கபரம்பரையா யிருக்குமென்று ரஜோகுணத்தின் உண்மையறிந்தவர் சொல்லுகிறார்கள். இப்படியேதான் அந்திமகாலத்தில் விருத்தியடைந்த தமஸ்ஸிற்குப்பயனும் அதிக அஞ்ஞாநபரம்பரையா யிருக்குமென்பார்கள்.

(அ-கை.) முந்திய தசையைக்காட்டிலும் அதிகப்பட்ட ஸத்துவாதி குணங்களுக்கு நிர்மலத்வம் முதலிய பலன்கள் உண்டாவதாக வருளிச் செய்ததே அவைவெவையென்ன வருளிச்செய்கிறார்.

ஸத்வாத்ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் ரஜஸோ லோப ஏவ ச|
ப்ரமாதமோஹௌ தமஸோ பவதோ(அ)ஜ்ஞாநமேவ ச||கஎ||

(கஎ) இப்படி பரம்பரையாய் அதிகமாயுண்டான ஸத்துவகுணத்தால் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம் பிரத்தியக்ஷமாய் விளங்கும். அப்படி யுண்டாகும் ரஜோகுணத்தால் சுவர்க்காதிபலங்களில் ஆசை உண்டாகும். அப்படியுண்டான தமோகுணத்தால் பிரமாதமும், அதற்கடியான அஸத்வியாபாரத்தில் பிரவ்ருத்தியும், அதனால் விபரீதக்ஞாநமும், அதனால் மிகுந்த தமோகுணமும், அதனால் அக்ஞாநமுமுண்டாகும்.

ஊர்த்வம் கச்சந்தி ஸத்வஸ்தா மத்யே திஷ்டந்தி ராஜஸா:|
ஜகந்யகுணவ்ருத்திஸ்தா அதோ கச்சந்தி தாமஸா:||கஅ||

(கஅ) கீழ்ச்சொன்னபடியே ஸத்துவகுணத்திலிருப்பவர்கள் வரவர மேலே போகிறார்கள். அதாவது ஸம்ஸாரத்தினின்றும் மோக்ஷத்தையடைகிறார்கள். (ரஜோகுணம், சுவர்க்கம்முதலிய பலன்களில் ஆசையையுண்டுபண்ணுமதாகையாலே) அக்குணத்திலிருப்பவர்கள் (பலத்துக்குச் சாதநமான கர்மத்தையநுஷ்டித்து அதன்பலனை யநுபவித்து மறுபடியும் பிறந்து அதேகருமத்தை யநுஷ்டிக்கிறார்கள்.) ஆகையால் அவர்கள் மத்தியிலிருக்கிறார்கள். [திரும்புதலோடு கூடியதாகையாலே இது துக்கப்பிராயம்] தாமஸர்களோவென்மேலும் இழிவான விருத்தியைச்செய்து வந்து கீழேபோகிறார்கள். [அதாவது-சண்டாளனுய்ப்பிறத்தல் அதன்பின் விலங்காய்ப்பிறத்தல் அதனை பிறகு பூச்சிப்புழுகாய்ப்பிறத்தல், தாவரமாயிருத்தல், அதற்குப்பிறகுகொடியும் புதறுமாயிருத்தல், அதற்குப்பின் கல் கட்டை மண்ணுங்கட்டி முதலானவைகளாய்ப்பிறத்தல் முதலிய அதோகதியை யடைகிறார்கள் என்றபடி.]

(அ-கை.) ஆஹாரவிசேஷங்களாலும் பலாபேக்ஷையற்ற சுகிருதவிசேஷங்களாலும் பரம்பரையாய் மிகவும் விருத்தியடைந்த ஸத்துவகுணநிஷ்டர்களுக்கு குணத்திரயநாசம் பிறந்து அவ்வழியே ஊர்த்துவகதியுண்டாகும்படி சொல்லுகிறது.

நாந்யம் குணேப்ய: கர்தாரம் யதா த்ரஷ்டாநுபஶ்யதி|
குணேப்யஶ்ச பரம் வேத்தி மத்பாவம் ஸோ(அ)திகச்சதி||கக||

http://acharya.org

(கக) இப்படி ஸாத்விகமான ஆஹாரத்தை ஸேவிப்பதாலும் பலாபேக்ஷயற்று எம்பெருமானுடைய ஆராதநரூபமாகக் கர்மாநுஷ்ட்டாநம் பண்ணுவதாலும் ரஜஸ்ஸையும் தமஸ்ஸையும் சுத்தமாய் அடக்கி உத்க்ருஷ்டமான ஸத்துவத்திலிருந்து ஆத்மஸ்வரூபத்தைப்பார்க்கின்றஇவன், குணங்கள்தான் அவற்றுக்குஅநுகுணமானப் பிரவ்ருத்திகளைச்செய்கின்றனவென்றும்அப்படியே குணங்களுக்குப்பரனான ஆத்மா கர்த்தாவல்லனென்றும் எப்பொழுது பார்க்கிறானோ அப்பொழுது அவன் நம்முடைய ஸ்வபாவத்தை யடைவான்.

[என்றால்:—ஸ்வபாவத்தில் பரிசுத்தமான ஆத்மா கர்த்தாவாயிருப்பதெல்லாம் பூர்வகர்மமடியாகவரும் குணஸங்கத்தால் வந்தது; ஆத்மாவோ ஸ்வபாவத்தில் கர்த்தாவல்லன்; அளவற்ற ஞாநமே வடிவாயிருப்பவன்; என்று எப்பொழுது அறிகிறானோ அப்பொழுது அவன் நமக்கு ஸமமாகிறானென்றபடி.]

(அ-கை) கர்த்தாவான குணங்களைக்காட்டிலும் வேறாய் கர்த்தாவல்லாத ஆத்மாவைக்கண்டவன் ஈசுவரத்தன்மையை யடைகிறானென்றுசொல்லப்பட்டதே, அந்தஈசுவரத்தன்மையாவது எப்படிப்பட்டது? என்னில் அருளிச்செய்கிறார்.

गुणानेतानतीत्य त्रीन्देही देहसमुद्भवान् ।
जन्ममृत्युजरादुःखैर्विमुक्तोऽमृतमश्नुते ॥ ௨௰ ॥

(௨௰) சரீரமெடுத்திருக்கும்பொழுதே, சரீராகாரமாய் விகாரப்பட்டிருக்கும் பிரகிருதியினின்று முண்டான இந்தஸத்துவம் முதலிய குணங்கள் மூன்றையும் கடந்து, அவைகளைக்காட்டிலும் வேறாய் ஞாநமேவடிவான ஆத்மாவைக்கண்டவன், பிறப்பு இறப்பு மூப்புகளாலுண்டான துயரங்களினின்றுவிடுபட்டவனாய் பிறகு அமிருதமான ஆத்மஸ்வரூபத்தையநுபவிப்பான். [இது தான் ஈசுவரனாகிய தம்ஸ்வபாவத்தையடைகையாவது என்றபடி.]

(அ-கை) இனி குணங்களைக்கடந்ததான ஆத்மவஸ்துவின் ஸ்வரூபத்தை யறிந்தவனிவனென்று காட்டும்படியான ஆசாரத்தின் தன்மையையும் குணங்கள் அழிவதற்குக் காரணங்களையும் கேளாநின்றுகொண்டு அர்ச்சுநன் பிரச்சினம்பண்ணுகிறான்.

अर्जुन उवाच ॥ कैर्लिङ्गैस्त्रीन्गुणानेतानतीतो भवति प्रभो ।
किमाचारः कथं चैतांस्त्रीन्गुणानतिवर्तते ॥ ௨௧ ॥

(௨௧) ஸத்துவம் முதலிய இக்குணங்களைக் கடந்தவன் எவ்வித லக்ஷணங்களுடன் கூடி யிருப்பவன்? எவ்வித ஆசாரத்தோடு கூடியவன்? இந்த ஸத்வம் முதலிய குணங்களை அவன் எவ்வித உபாயத்தாலே கடக்கிறான்?

श्रीभगवानुवाच ॥ प्रकाशं च प्रवृत्तिं च मोहमेव च पाण्डव ।
न द्वेष्टि सम्प्रवृत्तानि न निवृत्तानि काङ्क्षति ॥ ௨௨ ॥

http://acharya.org

(௨௨) அதற்குக் கண்ணனருளிச்செய்கிறார். ஆத்மாவையொழிந்த மற்றவைகளுள்அநிஷ்டவஸ்துக்களில் பிரவ்ருத்தியுண்டாகுமாகில் 'இவை பிரகாசம், பிரவ்ருத்தி, மோஹம், என்கிற ஸத்துவாதிகுணகாரியங்கள்,என்று நினைத்து அவன் அவைகளைப் பகைக்கமாட்டான். அப்படியே இஷ்டவஸ்துக்களில் நிவ்ருத்தியுண்டாமாகில் அவைகளே நிவ்ருத்தங்களாய் விட்டனவென்று நினைத்தவனாகையாலே அவைகளைக் கோரவுமாட்டான்.

உதாஸீநவதாஸீநோ குணைர்யோ ந விசால்யதே।
குணா வர்த்தந்த இத்யேவ யோவதிஷ்டதி நேங்கதே॥ ௨௩॥

(௨௩) குணாதீதமான ஆத்மவஸ்துவைக் காண்பதிலுண்டான திருப்தியால் இதரவிஷயங்களில் தட்டாமலிருப்பவனாகையால் குணங்களைக்கண்டு விரும்பவாவது வெறுக்கவாவது மாட்டான். குணங்கள், தங்காரியங்களான பிரகாசம் முதலியவைகளைச் செய்கின்றனவென்று நினைத்தவனாய், எவன் வெறுமனே யிருக்கிறானோ அவன், குணங்களின் காரியத்துக்குத் தக்கபடி அவை யிழுத்தவழி செல்லவுமாட்டான்.

ஸமது:கஸுக: ஸ்வஸ்த: ஸமலோஷ்டாஶ்மகாஞ்சந:।
துல்யப்ரியாப்ரியோ தீரஸ்துல்யநிந்தாத்மஸம்ஸ்துதி:॥ ௨௪॥
மாநாவமாநயோஸ்துல்யஸ்துல்யோ மித்ராரிபக்ஷயோ:।
ஸர்வாரம்பபரித்யாகீ குணாதீத: ஸ உச்யதே॥ ௨௫॥

(௨௪-௨௫) இன்பதுன்பங்களில் ஸமசித்தனாய், தன்னுள் தானிருப்பவனாய், அதாவது ஆத்மாவே பிரியமாயிருக்கையாலே அதையொழிந்த புத்திராதிகளின் பிறப்பு இறப்பு முதலிய சுகதுக்கங்களில் ஸமசித்தனாய், அதைப் பற்றியே மண்ணாங்கட்டி, கல், பொன் எல்லாம் ஸமமாக நினைத்தவனாய், அதேகாரணத்தாலே பிரியமும் அப்பிரியமும் துல்யமாயிருப்பவனாய், பிரகிருதியையும் ஆத்மாவையும் பிரித்தறிவதில் நிபுணனாய், தன்னிடத்திலுண்டான மானிடத்தன்மை முதலிய வபிமானத்தால் வருங் குணகுணங்களைப்பற்றி நிந்தித்தாலும் துதித்தாலும், தனக்கு அக்குணகுணங்களில் ஸம்பந்தமில்லையென்கிற வெண்ணத்தால் இரண்டையும் ஸமமாக நினைப்பவனாய், அந்த ஸ்துதிநிந்தைகளால்வரும் மானாவமானங்களிலும் அவற்றால்வரும் சத்ருமித்திர பக்ஷங்களிலும் தனக்கு ஸம்பந்தமில்லையென்கிற அந்த வெண்ணத்தைக்கொண்டே அவைகளை ஸமமாய்நினைப்பவனாய், அப்படியே தான் சரீரத்தை யெடுத்திருப்பதால் வரும் எந்தவியாபாரங்களையுஞ் செய்யத்தொடங்காமலிருப்பவனாயிருக்குமவன் யாவன் அவனே குணங்களைக்கடந்தவனாவான்.

(அ-கை.) அநந்தரம் இப்படிப்பட்ட குணங்கள் நீங்குமிடத்துப் பிரதானகாரண மின்னதென்கிறார்.

மாம் ச யோऽவ்யபிசாரேண பக்தியோகேந ஸேவதே।
ஸ குணாந்ஸமதீத்யைதாந் ப்ரஹ்மபூயாய கல்பதே॥ ௨௬॥

http://acharya.org

(உசு) நாந்யம் குணேப்ய: கர்த்தாரம் இத்தியாதியாகச் சொல்லப்பட்டபடி, பிரகிருதியையும் ஆத்மாவையும் பிரித்தறிவதால்மாத்திரம் குணநாசம் பிறக்கமாட்டாது. ஏனென்றால்-அது அநாதிகாலமாய் தொடர்ந்த விபரீதவாஸனையால் பாதிக்கப்படுமன்றோ? மற்றப்படிஸத்தியஸங்கல்பனாய் பரமகாருணிகனாய் ஆஸ்ரிதவாத்ஸல்ய ஸாகரமாயிருக்கும் நம்மை ஏகாந்தமான பக்தியோகத்தால் எவன் இடைவிடாமல் ஸேவிக்கிறானோ அவன், ஒருவராலும் ஒழிக்கப்போகாத இந்த ஸத்துவாதி குணங்களைக்கடந்து பிரம்ம பாவத்தையடையும்படியான நிலைக்கு வருவான். [அதாவது அமிருதமான ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை யடைவானென்றபடி.]

ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹ மம்ருதஸ்யாவ்யயஸ்ய ச|
ஸாஸ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யைகாந்திகஸ்ய ச||உஎ||

(உஎ) ஏனெனில், நம்மைவிட்டு நீங்காத பக்தியோகத்தால் நாம் ஸேவிக்கப்பட்டால் அமிருதமாய் அவ்யயமாயிருக்கும் ஆத்மஸ்வரூபத்தை நிலைப்பிக்கிறோம்; அப்படியே அதிசயமான நித்திய ஐசுவரியத்தையும் வாஸுதேவஸ்ஸர்வம் என்றிருக்குமவன்பேறான ஏகாந்தவின்பத்தையும் அளிக்கிறோம்.

[ஆக இதனால் - தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா| மாமேவ யே ப்ரபத்யந்தே என்று தொடங்கி, குணநாசம் பிறப்பதற்கும் அதன் மூலமாய்அக்ஷரம்ஐசுவரியம்பகவத்பிராப்தி இவைகள் கிடைப்பதற்கும் அவன் திருவடிகளில் பண்ணும் பிரபத்தியே உபாயமாகக் கடவதென்று சொல்லுகையாலே, குணநாசமும் அதடியாய் வரும் பகவத்பாவமும்ஏகாந்தமானபகவத்பிரபத்தியால்தா னுண்டாகுமென்றதாயிற்று.]

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

பதிநான்காவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பதினைந்தாவது அத்யாயம்.

———:0:———

அவதாரிகை.

க்ஷேத்திர அத்தியாயத்தில் க்ஷேத்திரமென்றும் க்ஷேத்திரக்ஞனென்றுஞ் சொல்லப்பட்ட பிரகிருதிபுருஷர்களின் ஸ்வரூபத்தைச் சோதித்து, பரிசுத்தமாய் அளவற்ற ஞானமே வடிவாயுள்ள ஆத்மாவுக்கு (குணஸம்பந்தப் பிரவாஹமடியாய் தேவாதிரூபமாய் விகாரப்படுகிற)பிரகிருதிஸம்பந்தமானது, அநாதியென்று சொல்லப்பட்டது. அதற்கடுத்த அத்தியாயத்தில் புருஷனுக்

http://acharya.org

ருக் காரியம்காரணம் என்கிற இரண்டு நிலைகளிலும் குணஸங்கத்தால்வரும்பிரகிருதிஸம்பந்தமானது பகவானாலேயே செய்யப்பட்டதென்று சொல்லி, குணஸங்கத்தின்படியை ஸவிஸ்தாரமாகஉபபாதித்து, குணஸம்பந்தமற்று ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை யடைவதும் எம்பெருமான் திருவடிகளில்பண்ணும் பக்தியால் வரத்தக்கதென்றும் அருளப்பட்டது. இப்பொழுது பஜநீயனாகிய பகவானுடைய 'க்ஷரம் அக்ஷரம்' என்கிற(பத்தமுக்தாளாகிற) ஐசுவரியத்தையும்,ஐசுவரியபூதர்களான அந்த க்ஷரம்அக்ஷரம் என்கிறஇருவகைப்புருஷர்களைக்காட்டிலும்,ஸகல ஹேயங்களுக்கு மெதிராய் கல்யாணமே ஸ்வரூபமாய் மிகவும் சிறந்ததாய் லோகோத்தரமாயிருக்கும் தத்துவந்தான்புருஷோத்தமதத்துவமென்பதையும் அருளிச்செய்யத்தொடங்குகிறார்.

அதில் இப்பொழுது அஸங்கமென்னும் வாளைக்கொண்டு பந்தத்தைச் சிதைத்த அக்ஷரமென்னும் ஐசுவரியத்தை யருளிச்செய்வதற்காக, (அறுக்கப்படுமதான பந்தமென்னும்) அசேதநத்தின் விகாரவிசேஷத்தை ஒரு விருக்ஷாகாரமாய்க் கற்பித்துக்கொண்டு கண்ணன் அருளிச்செய்கிறார்.

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚॥ 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍂𑌲𑌮𑌧𑌃𑌶𑌾𑌖𑌮𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌰𑌵𑍍𑌯𑌯𑌮𑍍। 𑌛𑌨𑍍𑌦𑌾𑌂𑌸𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑍍𑌣𑌾𑌨𑌿 𑌯𑌸𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦 𑌸 𑌵𑍇𑌦𑌵𑌿𑌤𑍍॥ க॥

(க) அர்ச்சுந! எந்த ஸம்ஸாரமென்னும் அரசமரத்தைச் * சுருதிகள், மேற்புறத்தில் வேரும் கீழ்ப்புறத்தில் கிளையுமாயிருப்பதாகச் சொல்லுகின்றனவோ, பற்றறுகைக்குக் காரணமான நல்லறிவு உண்டாகிறவரையில் எதுவாலும் அழியமாட்டாதோ, எதற்காறல் $ சுருதிகளை யிலைகளாகச் சொல்லுகிறார்களோ, அப்படிப்பட்ட இந்த விருக்ஷத்தை எவன் அறிகிறானோ அவன் வேதவித்து என்னப்படுவான். [என்றால் - வேதமோ ஸம்ஸாரமென்னும் விருக்ஷத்தைச் சேதிக்கும் வழி சொல்லுகிறது; சேதிக்கவேண்டும் விருக்ஷத்தின் ஸ்வரூபத்தை யறிவதோ சேதிப்பதற்கு உபயோகமானது; ஆகையால் இந்த விருக்ஷத்தை யறிந்தவனை வேதவித்தென்கிறது என்றபடி.]

ஸப்தலோகத்திற்கும் மேலாயிருக்கும் சதுர்முகனை ஆதியாயுடையதாகையால் இந்த விருக்ஷத்தின் வேர் மேலே யிருக்கிறதென்றும், பூமியில் வஸிக்கும் ஸகலமான மனிதர் பசு மிருகம் பூச்சி புழு பக்ஷி தாவரம் இவைகளை முடிவா யுடைத்தா யிருக்கையாலே கிளை கீழே யிருக்கிறதென்றும் சொல்லுகிறது.

𑌅𑌧𑌶𑍍𑌚𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌸𑍃𑌤𑌾𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌶𑌾𑌖𑌾 𑌗𑍁𑌣𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑌾 𑌵𑌿𑌷𑌯𑌪𑍍𑌰𑌵𑌾𑌲𑌾𑌃।

---

* 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍂𑌲𑍋𑌽𑌵𑌾𑌕𑍍𑌶𑌾𑌖 𑌏𑌷𑍋𑌽𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌃॥ 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍂𑌲𑌮𑌵𑌾𑌕𑍍𑌶𑌾𑌖𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌯𑍋 𑌵𑍇𑌦 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿 இத்தியாதி சுருதிகள் சொல்லுகின்றன.

$ 𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤𑌮𑌾𑌲𑌭𑍇𑌤 𑌭𑍂𑌤𑌿𑌕𑌾𑌮𑌃। 𑌐𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌗𑍍𑌨𑌮𑍇𑌕𑌾𑌦𑌶𑌕𑌪𑌾𑌲𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌪𑍇𑌦𑍍𑌗𑍍𑌰𑌾𑌮𑌕𑌾𑌮𑌃 இத்தியாதியாகச் சுருதிகளிற்சொல்லப்பட்ட காம்மியகர்மங்களால் விருத்தியடைகின்றமையால் இம்மரத்துக்குச்சுருதிகளை இலையென்கிறது.

http://acharya.org

(கஉ) இப்படி கீழ்ப்புறத்தில் (மனுஷ்யர்முதலானோரைக்) கிளையாகவுடைய அம்மரத்திற்கு அவரவர் கர்மமடியாக அனேகம் கீழ்க்கிளைகள்உண்டாய் மீண்டும் மனுஷ்யாதிரூபமாய்ப் பரவுகின்றன. அப்படியே மேலும் கந்தர்வர், யக்ஷர் என்று இப்படி வெகுசாய்ப் பரவுகின்றன. அவைகளோ ஸத்துவம் முதலிய குணங்களால் மென்மேலும் சப்தம் முதலிய விஷயங்களைத் தளிராகக்கொண்டு வளருகின்றன.

(அ-கை.) எப்படியென்றால் அருளிச்செய்கிறார்.

அதஶ்ச மூலாந்யநுஸந்ததாநி கர்மாநுபந்தீநி மநுஷ்யலோகே ||உ||

(உ) பிரம்மலோகத்தில் வேரிட்டு மனிதனை நுனியாயுடைய இம்மரத்திற்கு, இந்த மனுஷியலோகத்திலும் கீழே வேர் ஓடுகின்றன. இவைகளும் கர்மமடியானவைகள். [என்றால் - மனிதராயிருக்கும்பொழுது செய்த கர்மங்களால்தான் கீழே மனுஷ்யாதிகளும் மேலே கெந்தர்வாதிகளும் உண்டாகிறார்களென்றபடி.]

ந ரூபமஸ்யேஹ ததோபலப்யதே நாந்தோ ந சாதிர்ந ச ஸம்ப்ரதிஷ்டா|

(உஉ) இதின் ஸ்வரூபமும் ஆதியும் அந்தமும் இதின் இருப்பும் இவ்வுலகத்தில் தெரிகிறதில்லை. [என்றால் - "இந்த விருக்ஷம் நான்முகன் தொடங்கியதாகையால் இதற்கு வேர் மேலுலகத்தில்; அவன் ஸந்தானபரம்பரையான மனிதனை நுனியாயுடையதாகையால் இதன் நுனி கீழுலகத்தில்; மனிதனாயிருக்கையில் செய்த கர்மங்களையே வேராகக்கொண்டு மறுபடி கீழும் மேலும் கிளைகளால் பரந்திருக்கிறது" என்றிப்படி இவ்வுலகத்திலுள்ள ஸம்ஸாரிகள் அறிகிறதில்லை. மற்றப்படி "நான் மனுஷியன்; நான் தேவதத்தனுக்குப் புத்திரன்; யக்ஞதத்தனுக்குப் பிதா; எனக்கேற்ற பாரியை முதலானோரையுடையவன்" என்று இவ்வளவுமாத்திரம் தெரிந்துகொள்ளுகிறார்கள். இந்த விருக்ஷமானது குணமயமான போகங்களில் பற்றையொழித்தால் நசித்துப்போமென்றும் குணஸம்பந்தந்தான் இதற்கு ஹேதுவென்றும் அறிகிறதில்லை. அப்படியே இது நிலைத்திருப்பதும் (சரீரத்தையே ஆத்மாவாக நினைக்கின்ற) அக்ஞானத்தால் தானென்றும் அறிவாரில்லை யென்றபடி.]

அஶ்வத்தமேநம் ஸுவிரூடமூலம் அஸங்கஶஸ்த்ரேண த்ருடேந சித்த்வா ||

ததஃ பதம் தத்பரிமார்கிதவ்யம் யஸ்மிந்கதா ந நிவர்தந்தி பூயஃ|

(ங-ஙஉ) இந்தப்பிரகாரம் நாலுபக்கமும் நன்றாய் வேர் ஊன்றிய இவ்வரசமரத்தை, நல்லறிவினா லுண்டான பற்றின்மையென்னும் திடமான கத்தியைக்கொண்டு களைந்தெறிந்து, அதனால் எந்த ஸ்தானத்துக்குச் சென்றவர்கள்மீண்டுந் திரும்பார்களோ அந்த ஸ்தானத்தைத் தேடவேண்டும்.

(அ-கை.) அதெப்படி அநாதிகாலமாய்த் தொடர்ந்த குணமயமான போகத்தில் பற்றும், அதடியாகவரும் விபரீதக்ஞானமும் நிவர்த்திக்குமென்னில் அருளிச்செய்கிறார்.

http://acharya.org

தமேவ சாத்யம் புருஷம் † ப்ரபத்யே யத: ப்ரவ்ருத்தி: ப்ரஸ்ருதா புராணீ ||ச||

(ச) அக்ஞாநாதிகள் நிவர்த்திக்கவேண்டுமானால் அந்த ஆதிபுருஷனை (அதாவது - யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை | தம் ஹ தேவமாத்மபுத்திப்ரகாஶம் முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே | இத்தியாதிகளிற் சொன்ன ஆதிபுருஷனைச்) சரணமடையவேண்டும். ஏனெனில் - இந்த குணவிகாரமான போகத்திலுண்டாகும் பிரவர்த்தியானது ஸர்வ ஸ்ருஷ்டிகர்த்தாவான அவனிடத்தினின்று * முண்டானமையால் அவனைக்கொண்டே தான்நிவர்த்திபண்ணிக்கொள்ளவேண்டும்.

நிர்மாநமோஹா ஜிதஸங்கதோஷா அத்யாத்மநித்யா விநிவ்ருத்தகாமா: | த்வந்த்வைர்விமுக்தா: ஸுகது:கஸம்ஜ்ஞைர்கச்சந்த்யமூடா: பதமவ்யயம் தத் ||ரு||

(ரு) இப்படி நம்மைச் சரணடைந்தவர்கள் தேஹமே ஆத்மாவென்கிற வபிமாநத்தையும் குணமயமான போகத்தில் பற்றையுமொழித்து ஆத்மஞானத்தில் ஊன்றியவர்களாய் ஸமஸ்தகாமங்களையு மொழித்து இன்பம் துன்பம் என்னு மிரண்டினின்றும் விடுபட்டவர்களாய் அளவற்ற ஞானமே வடிவான ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியே யடைகின்றார்கள். [என்றால் - நம்மைச் சரணடைந்தோருக்கு நம்மருளாலேயே இந்த ஸகலப்பிரவ்ருத்திகளும் ஸித்திபரியந்தம் தலைக்கூடுமென்றபடி.]

ந தத்பாஸயதே ஸூர்யோ ந ஶஶாங்கோ ந பாவக: |
யத்கத்வா ந நிவர்த்தந்தே தத்தாம பரமம் மம ||சா||

(சா) அந்த ஜோதிரூபமான ஆத்மஸ்வரூபத்தை ஸூரியன் சந்திரன் அக்கினி ஒன்றும் பிரகாசப்படுத்துவதில்லை. அதையடைந்தவர்கள் மறுபடியுந் திரும்புவதில்லை. அது நம்முடைய மேலானசோதி. [என்றால் - நம்முடைய அம்சமான நம்மைசுவரியமென்றபடி.]

மமைவாம்ஶோ ஜீவலோகே ஜீவபூத: ஸநாதந: |
மந:ஷஷ்டாநீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாநி கர்ஷதி ||எ||

(எ) இப்படிப்பட்ட ஸ்வரூபத்தோடுகூடி எங்களுமுள்ளவனாய் நமது அம்சமாய் விளங்குகிற ஒருவன் அநாதிகர்மமென்னும் அக்ஞாநத்தால்

---

† ப்ரபத்யேயத: ப்ரவ்ருத்தி: என்னும் பாடம். அப்பொழுது ப்ரபத்யே இயத: என்றுபதச்சேதமாய், அந்த ஆதிபுருஷனைச் சரணடைந்து இவ்வக்ஞாநநிவ்ருத்தி தொடக்கமான வெல்லாவற்றையும் சாதிப்பதற்காகப் பிரவர்த்திப்பதென்பது தோன்றுகிறது. [அதாவது பூர்விக முமுக்ஷுக்களால் அநுஷ்டித்த உபாயம். என்றால் - பூர்விகமோக்ஷார்த்திகள் நம்மையேசரணடைந்து பந்தத்தினின்றும் விடுபட்டார்கள் என்றபடி] என்று பொருள்.

* அவனிடத்தினின்று முண்டாயிற்றென்கிற விஷயம் - தேவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா | ஸா சைவ ப்ரவ்ருத்திஹேதுர்யா ஸ்தானாதிகே என்று சொல்லப்பட்டது.

http://acharya.org

மூடப்பட்டவனாய் ஜீவலோகத்தில் ஜீவனாயிருந்து கொண்டு (தேவர் மனிதர் முதலிய பிரகிருதியின் விகாரமான சரீரங்களிலுள்ள) மனதுடன் சேர்ந்த ஆறு இந்திரியங்களையும் இழுத்துத்திரிகிறான்,

[என்றால்-ஒருவன் முன் சொன்னக் கிரமமாய் அவித்தையினின்று விடுபட்டு ஸ்வஸ்வரூபமாத்திரனாயிருக்கிறான். மற்றொருவன் ஜீவனாய்க் கொண்டு ஞானமும் ஐசுவரியமும் மிகவும் குறைந்து, தர்மத்தால் கிடைத்த சரீரத்திலுள்ள மனமுதலிய ஆறு இந்திரியங்களுக்கும் ஈசுவரனாய் அவைகளை யங்குமிங்கு மிழுத்துத் திரிகிறான் என்றபடி.]

𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯𑌦𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌯𑌚𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑍀𑌶𑍍𑌵𑌰𑌃।
𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑍈𑌤𑌾𑌨𑌿 𑌸𑌂𑌯𑌾𑌤𑌿 𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑌿𑌵𑌾𑌶𑌯𑌾𑌤𑍍॥௮॥

(௮) எந்த சரீரத்தை யிவன் அடைகிறானோ எதினின்றும் மேலே கிளம்புகிறானோ அந்த சரீரத்திலுள்ள இந்திரியங்களுக்கெல்லாம் இவன் ஈசுவரனாகையாலே அவைகளைப் பூதஸூக்ஷ்மங்களோடு கூடக் கிரஹித்துக்கொண்டுபோகிறான். எப்படி? காற்றானது பூமாலை, சந்தனம், கஸ்தூரி முதலியவைகளிலிருந்து அவைகளின் கெந்தங்களைச் சிறிய அவயவங்களாக வெடுத்துக்கொண்டு போவது போல.

(௮-கை) அவ்விந்திரியங்கள் யாவை யெனின் அருளிச்செய்கிறார்.

𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌂 𑌚 𑌰𑌸𑌨𑌂 𑌘𑍍𑌰𑌾𑌣𑌮𑍇𑌵 𑌚।
𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌮𑌨𑌶𑍍𑌚𑌾𑌯𑌂 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍁𑌪𑌸𑍇𑌵𑌤𑍇॥௯॥

(௯) செவி, வாய், கண், மூக்கு, உடல், மனம் என்கிற ஆறு இந்திரியங்களையும் தந்தம் விஷயங்களுக்குத் தக்கபடி செய்து கொண்டு சப்தம் முதலிய விஷயங்களை நுகர்கின்றான்.

𑌉𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌮𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌂 𑌵𑌾 𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍।
𑌵𑌿𑌮𑍂𑌢𑌾 𑌨𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌃॥௧௦॥

(௧௦) ஸத்துவம் முதலிய குணமயமானப் பிரகிருதியினது விகாரமாய் மனுஷ்யாகாரமாயுள்ள பிண்டத்தோடு கலந்திருக்கின்ற இவ்வாத்மாவானது அதினின்றுவெளிப்படும்பொழுதாவது, அப்படிப்பட்ட மற்றொருபிண்டத்திலிருக்கும் பொழுதாவது, குணமயமானவிஷயங்களைப் புசிக்கும்பொழுதாவது, ஒரு காலத்திலும் இம் * மூடர்கள், 'இது ஞானமே வடிவாயுள்ளது; தேவத்வமநுஷ்யத்வாதிகளெல்லாம் சரீரத்தைச் சேர்ந்தது' என்று அறிகிறதில்லை. † ஞானிகளோ இவ்வாத்மவஸ்துவை எந்த நிலையிலும் சரீராதிகளைக்காட்டிலும்வேறாயிருப்பதாகப் பிரித்தறிகின்றார்கள்.

---

* மூடர்கள்-தேஹமே ஆத்மாவென்று பிரமித்தவர்கள்.

† ஞானிகள்-சரீரத்தையும் ஆத்மாவையும் நன்கறிந்தவர்கள்.

http://acharya.org

யதந்தோ யோகிநஶ்சைநம் பஶ்யந்த்யாத்மந்யவஸ்திதம்।
யதந்தோऽப்யக்ருதாத்மாநோ நைநம் பஶ்யந்த்யசேதஸ:॥

(௧௧) நம்மிடத்தில் பிரபத்திபண்ணி கர்மயோகம் முதலானவைகளில் யத்தநஞ் செய்யுமவர்கள், அவைகளால் உள்ளத்தின் மாசையறுத்து யோகமென்னுங் கண்ணினால் ஆத்மா சரீரத்திலிருக்கும்பொழுதே அதைச் சரீரத்தைக்காட்டிலும் வேறாயிருப்பதாகப்பிரித்துப் பார்ப்பர்கள். அப்படி கர்மயோகாதிகளில் யத்தநஞ் செய்யுமவர்களேநம்மிடத்தில் பிரபத்தி பண்ணாதபக்ஷத்தில் மனந்தெளியாமல் ஆத்மாவைக் காணும்படியான ஞாநமில்லாதவர்களாய் அதைக் காணமாட்டாமற்போகிறார்கள்.

(அ-கை) இப்படி இந்திரிய ஸம்பந்தத்துக்கு விரோதியான விருளைப் போக்குகின்ற சூரிய சந்திர அக்கினிகளுக்குக் கூடப் பிரகாசத்தைத் தருகின்ற ஞாநச்சோதியான ஆத்மாவானது, முக்தனென்றும் ஜீவனென்றும் சொல்லப்படுகிற இரண்டு நிலையிலும் பகவானுடைய ஐசுவரியமாயிருக்கிறதென்றுசொல்லப்பட்டது. இப்பொழுது அசித்தின் விகாரமாயிருக்கச் செய்தே சோதியோடுகூடிவிளங்கும் சூரியன் முதலானவர்களின் சோதியும் பகவானுடைய ஐசுவரியந்தானென்கிறார்.

யதாதித்யகதம் தேஜோ ஜகத்பாஸயதேऽகிலம்।
யச்சந்த்ரமஸி யச்சாக்நௌ தத்தேஜோ வித்தி மாமகம்॥ ௧௨॥

(௧௨) ஸகல லோகத்தையும் பிரகாசப்படுத்துகின்ற சூரியன் சந்திரன் அக்கினி இவர்களின் தேஜஸ்ஸும் நம்முடையதுதான். [என்றால் அவர்களால் ஆராதிக்கப்பட்ட நாம் அவர்களுக்குத் தந்தோமென்றபடி.]

(அகை) பிராணிகளைத் தரிக்கும் பூமியினது தரிக்கும் படியான சக்தியும் நம்முடையதுதானென்கிறார்.

காமாவிஶ்ய ச பூதாநி தாரயாம்யஹமோஜஸா।

(௧௩) நாம் பூமியில் ஆவேசித்து ஸகலப் பிராணிகளையும் தடையற்ற நம்ஸாமர்த்தியத்தாலே தரிக்கிறோம்.

புஷ்ணாமி சௌஷதீ: ஸர்வா: ஸோமோ பூத்வா ரஸாத்மக:॥ ௧௩॥

(௧௫) அப்படியே அமிருதரஸமயனான சந்திரனைக்கொண்டு ஸகலமான ஓஷதிகளையும் வளர்க்கிறோம்.

அஹம் வைஶ்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹமாஶ்ரித:।
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்விதம்॥ ௧௪॥

(௧௪) நாமே வைச்சுவாநரமென்னும் ஜாடராக்கினியாய்க்கொண்டு ஸகலப்பிராணி சரீரங்களையும் அடைந்து அவர்கள் புசித்த நால்வகை யன்னத்தையும் பிராணம் அபாநம் என்னு மிரண்டு விருத்திகளுடன் கூடிப் பக்குவஞ் செய்கிறோம்.

http://acharya.org

(அகை) இங்கே பரம புருஷன் தம்முடைய ஐசுவரிய பூதரான சந்தி, ராக்கினிகளை ("நான் சூரியனுய்க் கொண்டு நான் சந்திரனுய்க்கொண்டு" என்று) தம்மோடு ஒன்றுபடுத்தியருளிச்செய்தார். இப்பொழுது, அவர்களு ட்படஸகல பூதங்களையும் தம்மோடொன்று படுத்திச் சொல்வதற்குக்காரண மருளிச்செய்கின்றார்.

सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्तः स्मृतिर्ज्ञानमपोहनं च । वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदान्तकृद्वेदविदेव चाहम् ॥ १५ ॥

(௧௫) அர்ச்சுந! அந்த சந்திராக்கினிகளுக்கும் மற்றப் பிராணிகள் யாவர்க்கும் இருதய கமலத்தில் (அதாவது ஸகலமான பிரவ்ருத்தி நிவ்ருத்தி களுக்குங் காரணமான ஞானமுண்டாவதற் கிடமான இருதயத்தில்) எல்லா வற்றையும் நம்ஸங்கல்பத்தாலேநியமித்துக்கொண்டு நாம் ஆத்மாவாயிருக்கி ரேம். இப்படியே § சுருதிகளும் ஸ்மிருதிகளும்சொல்லுகின்றன. ஆகையா ல்யாவர்க்கும் நம்மிடத்திலிருந்து தான் ¶ ஸ்மிருதியும், ஞானமும், அபோஹ நமும்உண்டாகின்றன. ஆகவிப்படிஅக்கினி சூரியன் வாயு சந்திரன் இந்திர ன் முதலானோருக்கும் நாம் அந்தரியாமியாயிருப்பதுபற்றி அவர்கள் நம் ஸ்வருபமாகையால் அவர்கள் விஷயமாய்ச்சொல்லும்வேதங்களுக்கும்நாமேவி ஷயம்.[என்றால்-தேவன் மனிதன் என்னுஞ் சொற்கள் அந்த தேவாதி சரீரங் களிலுள்ள ஜீவாத்மாவைச் சொல்வதுபோல இதரதேவதா விஷயமான வே தங்களும் நம்மையே சொல்லுகின்றன வென்றபடி.]மேலும்வேதத்தில் சொல் லும்பலன்களைக்கொடுப்பவனும் † நாமே; அப்படியே நம்மைச் சொல்லும்வே தத்தையும்நாமேயறிவோம். [என்றால்-இப்படி தாம் அருளிச்செய்தபடிசொ

§ சுருதிகள்-अन्तःप्रविष्टः शास्ता जनानां सर्वात्मा ॥ य आत्मनि तिष्ठन्.....यश्च तन्निष्णातो नानुप्रविशति ॥ पद्मकोशप्रतीकाशं हृदयं चाप्यधोमुखम् ॥ अथ यदिदमस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म இத்தியாதிகள். ஸ்மிருதிகள். शास्ता विष्णुरशेषस्य जगतो यो हृदि स्थितः। प्रशासितारं सर्वेषामणीयांसमणीयसाम् ॥ यमो वैवस्वतो राजा यस्तवैष हृदि स्थितः இத்தியாதிகள்.

¶ ஸ்மிருதியாவது - முன் அநுபவித்த வஸ்து விஷயமாய் அநுபவ ஜந்யமான ஸம்ஸ்காரத்தினுல் மாத்திரம் பிறப்பதொன்று. ஞாநமாவது-இந்தி ரியம் லிங்கம் ஆகமம் யோகம் இவைகளால் உண்டாகும் வஸ்துநிச்சயம். அ போஹநமாவது-ஞாநநிவ்ருத்தி; அல்லதுஊஹம். ஊஹமாவதுஇந்தப் பிரமா ணம் இப்படிப் பிரவர்த்திக்கத்தக்கதென்று பிரமாணப்பிரவர்த்தி யோக்கிய தையின் விஷயமாய் ஸாமக்கிரீ முதலானவைகளை நிரூபிப்பதினுலுண்டான பிரமாண ஸஹகாரிஞாநம்.

† यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति।என் று தொடங்கி लभते च ततः कामान्मयैव विहितान् हि तान् என்றும் अहं हि सर्वयज्ञानां भोक्ता च प्रभुरेव च என்றும் முன்னமே இவ்விஷயஞ் சொல்லப்பட்டது

http://acharya.org

லலாமல் எவன் வேதார்த்தத்தை வேறுவிதமாகச் சொல்லுகிறானோ அவன் வேதத்தை யறிந்தவனாகமாட்டானென்று திருவுள்ளம்.]

(அகை) ஆகையால் ஸகல வேதங்களுக்கும் ஸாரமான வர்த்தம் சொல்லுகிறோம் அதை நம்மிடத்தில் தானே கேள் என்கிறார்.

𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌮𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑍌 𑌲𑍋𑌕𑍇 𑌕𑍍𑌷𑌰𑌶𑍍𑌚𑌾𑌕𑍍𑌷𑌰 𑌏𑌵 𑌚 |
𑌕𑍍𑌷𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑍋𑌽𑌕𑍍𑌷𑌰 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 || ௧௬ ||

(௧௬) க்ஷரனென்றும் அக்ஷரனென்றும் சொல்லப்படும் இவ்விரண்டு புருஷர்களும்உலகத்தில் பிரசித்தமானவர்கள். அதில் க்ஷர சப்தத்தால் சொல்லப்பட்ட புருஷன் * யாரெனில் - ஜீவசப்தத்தாலே சொல்லப்படுமவைகளாய் பிரமன்முதல் புல்லளவாய் விகாரப்படுவதே ஸ்வபாவமாயுள்ள அசித்தோடுகலந்திருக்கின்ற பிராணிஸமுதாயம். அக்ஷர சப்தத்தால் சொல்லப்பட்ட புருஷன்யாரெனில் - அசித்தின் ஸம்பந்தத்தை விட்டு நீங்கி தானான தன்மையாயிருக்கும் † முக்தஸ்வரூபன்.

𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 |
𑌯𑍋 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌯𑌵𑍍𑌯𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 || ௧௭ ||

(௧௭) உத்தம புருஷனோ முன் சொன்ன பத்தர் முக்தர் என்கிறக்ஷராக்ஷர புருஷர்களைக் காட்டிலும் வேறுபட்டவன். ஸகலமானசுருதிகளிலும் அவன் பரமாத்மாவென்று சொல்லப்படுவான். இப்படி பரமாத்மாவென்று சொல்லப்படுகையாலன்றோ உத்தம புருஷன் பத்த முக்தபுருஷர்களைக் காட்டிலும் வேறு பட்டவனென்றறியப்படுகிறது? எப்படியெனில்- அசேதநம், அத்தோடு கலந்தஜீவன், அதினின்று விடுபட்ட முக்தன் என்று பிரமாணங்களாலறியப்படும் மூன்று லோகத்தையும் ஆத்மாவாய் பிரவேசித்துத் தரிக்கின்றான் எவன், அவன் தரிக்கப்படுமவைகளைக் காட்டிலும் வேறுபட்டவன். [இதுதான் பரமாத்மாவென்பதற்குப் பொருள்] அதுவுமின்றி அவன் வேறென்பதற்கு இதுவுமொரு காரணம். எது? அவன் அவ்யயனாய்ஈசுவரனாயிருக்கை. அவ்யயனா யிருக்கையாவது-அழிவதே ஸ்வபாவமான அசேதநமென்ன, அதன் ஸம்பந்தத்தாலே அதைப் பின்தொடருகின்ற சேதநமென்ன அப்படியே முன்பு அதன் ஸம்பந்தத்துக்குயோக்யமாயிருந்த முக்தஸ்வரூபமென்ன இம்மூன்றையுங் காட்டிலும்வேறுபட்டிருக்கை. ஈசுவரனாயிருக்கையாவது - தன்னாலாளப்படுமவைகளைக் காட்டிலும் தான்வேறுபட்டிருக்கை.

---

* இங்கே அசித்ஸம்பந்தம் என்கிற உபாதி ஒன்றா யிருக்கையாலே புருஷனென்று ஒருமையாயிருக்கிறது.

†இங்கும் அசித்தைவிட்டு நீங்குகையென்கிற உபாதி ஒன்றாயிருக்கையாலேமுக்தஸ்வரூபனென்று ஒருமையாயிருக்கிறது. ஏனெனில் - இதற்குமுன்பு அநாதியானகாலத்தில் முக்தன்ஒருவனன்றோ? 𑌬𑌹𑌵𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑌪𑌸𑌾 𑌪𑍂𑌤𑌾 𑌮𑌦𑍍𑌭𑌾𑌵𑌮𑌾𑌗𑌤𑌾𑌃 | 𑌸𑌰𑍍𑌗𑍇𑌽𑌪𑌿 𑌨𑍋𑌪𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌳𑌯𑍇 𑌨 𑌵𑍍𑌯𑌥𑌨𑍍𑌤𑌿 𑌚 என்றன்றோ சொல்லப்பட்டது?

http://acharya.org

யஸ்மாத் க்ஷரமதீதோ(அ)ஹமக்ஷராதபி சோத்தம: |
அதோ(அ)ஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: || கஅ ||

(கஅ) கீழ்ச்சொன்ன ஸ்வபாவங்களாலே க்ஷரமென்னும் ஜீவனைக் கடந்திருக்கும் நான், கீழ்ச்சொன்ன ஹேதுக்களாலே முக்தபுருஷனையுங் காட்டில் மிகவும் சிறந்திருக்கிறபடியால் ¶ லோகத்திலும் § வேதத்திலும் நான் புருஷோத்தமனென்று பிரஸித்தனாயிருக்கிறேன்.

யோ மாமேவமஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம் |
ஸ ஸர்வவித்பஜதி மாம் ஸர்வபாவேந பாரத || க௯ ||

(க௯) ஓ பாரத ! யாவனொருவன் கீழ்ச்சொன்னப் பிரகாரம் புருஷோத்தமனை வென்னை க்ஷர அக்ஷரபுருஷர்களைக்காட்டிலும்வேறுபட்டவனென்று அறிகிறானோ அவன்,நம்மையடைவதற்காக அறியவேண்டுமெல்லாவற்றையு மறிந்தவன். நம்மையடைவதற்குபாயமாய் நம்மை ஸேவிக்கவேண்டும் பிரகாரங்களெல்லாவற்றாலும் நம்மைஸேவித்தவனாகிறான். [என்றால்- நம்விஷயத்தைமுற்றும் அறிவதாலும் நம்மை எல்லாவிதத்தாலும் ஸேவிப்பதாலும் நமக்கு எவ்விதப்பிரீதியுண்டாகுமோ அவ்விதப்பிரீதியானது நம்மையிப்படியறியுமவன் விஷயத்தில் நமக்குண்டாகுமென்று திருவுள்ளம்.]

(அ-கை.) இப்படி தம்மைப் புருஷோத்தமனென்றறியும் விஷயத்தை ப்பூஜிக்கிறார்.

இதி குஹ்யதமம் ஶாஸ்த்ரமிதமுக்தம் மயாநக |
ஏதத்புத்த்வா புத்திமாந் ஸ்யாத் க்ருதக்ருத்யஶ்ச பாரத || உ0 ||

(உ0) இப்படிநம்முடைய புருஷோத்தமத்வத்தைச் சொல்லுமதாய் எல்லாரஹஸ்யங்களுக்கும் தலையான ரஹஸ்யமாயிருக்கின்றஇந்த சாஸ்திரத்தை நீ குற்றமற்று மிகவும் யோக்கியனாயிருக்கிறாயென்று உனக்குச் சொன்னோம்.இதையறிந்தவன்புத்திமானாயும் கிருதகிருத்தியனாயுமாவான். [என்றால் நம்மையடையக்கோரியவனுக்குவேண்டும் புத்தியெல்லாம்அவனுக்குண்டாய் அவன்செய்யவேண்டுங் கிரியைகள் யாவையுஞ் செய்தவனாவானென்றபடி.]

[இந்த சுலோகத்தால், முன்சொன்ன புருஷோத்தமக்ஞாநம் சாஸ்திரத்தால் உண்டானாலே இவைகளை யெல்லாம் செய்யுமென்று சொல்லப்பட்டதாகிறது.]

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
பதினைந்தாவது அத்யாயம் முற்றிற்று.

¶ லோகமென்றால் இங்கேமந்வாதிஸ்மிருதிகளைச் சொல்லுகிறது. அதில் ஸம்ஸாரதாரம் புருஷோத்தமஸ்ய ஹ்யநாதிமத்யாந்தமஜஸ்ய விஷ்ணோ: இத்தியாதியில்பிரஸித்தம்.

§ வேதத்தில் பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே, ஸ உத்தம: புருஷ: என்று பிரஸித்தம்.

http://acharya.org

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பதினாறுவது அத்யாயம்.

அவதாரிகை.

கீழ்மூன்று அத்தியாயங்களால், சேர்ந்தும் பிரிந்துமிருக்கின்ற பிரகிருதிபுருஷர்களின் உண்மையும், அவைகளுக்குச்சேர்க்கையுண்டாவதும் நீங்குவதும் முறையே குணஸம்பந்தத்தாலும் அதனின்மையாலு முண்டாகுமென்கிற விஷயமும், எந்தநிலையிலிருந்தாலும் பிரகிருதியும் புருஷனும் எம்பெருமானுடைய ஐசுவரியமாயேயிருக்குமென்பதும், அப்படிப்பட்ட ஐசுவரியவானான பகவான், ஐசுவரியங்களான அசித்வஸ்துவென்ன பத்தமுக்தரூபமான சேதநவஸ்துவென்ன இவ்விரண்டையுங்காட்டில் (அவ்வயனாய் வியாபகனாய் தரிப்பவனாய் பதியாயிருந்து) வேறுபட்டிருக்கையாலே புருஷோத்தமனாயிருக்கிறானென்கிறயதார்த்தமும் வருணிக்கப்பட்டது.

இப்பொழுது கீழ்ச்சொன்ன அவ்விஷயங்களெல்லாம் திடப்படுவதற்காக, புருஷன் சாஸ்திரத்துக்கு வசப்பட்டவன் என்று சொல்லத்தொடங்கி, சாஸ்திரத்துக்கு வசப்பட்டும் வசப்படாமலு மிருக்கும் தேவாசுரர்களின் சிருஷ்டியை யருளிச்செய்கிறார்.

ஸ்ரீபகவாநுவாச ॥ அபயம் ஸத்த்வஸம்ஶுத்திர் ஜ்ஞாநயோகவ்யவஸ்திதி:। தாநம் தமஶ்ச யஜ்ஞஶ்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம் ॥ ௧ ॥

அஹிம்ஸா ஸத்யமக்ரோதஸ்த்யாக: ஶாந்திரபைஶுநம்।
தயா பூதேஷ்வலோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம் ॥ ௨ ॥

தேஜ: க்ஷமா த்ருதி: ஶௌசமத்ரோஹோ நாதிமாநிதா।
பவந்தி ஸம்பதம் தைவீமபிஜாதஸ்ய பாரத ॥ ௩ ॥

கீழ்மூன்று அத்தியாயங்களால், சேர்ந்தும் பிரிந்துமிருக்கின்ற பிரகிருதிபுருஷர்களின் உண்மையும், அவைகளுக்குச்சேர்க்கையுண்டாவதும் நீங்குவதும் முறையே குணஸம்பந்தத்தாலும் அதனின்மையாலு முண்டாகுமென்கிற விஷயமும், எந்தநிலையிலிருந்தாலும் பிரகிருதியும் புருஷனும் எம்பெருமானுடைய ஐசுவரியமாயேயிருக்குமென்பதும், அப்படிப்பட்ட ஐசுவரியவானான பகவான், ஐசுவரியங்களான அசித்வஸ்துவென்ன பத்தமுக்தரூபமான சேதநவஸ்துவென்ன இவ்விரண்டையுங்காட்டில் (அவ்வயனாய் வியாபகனாய் தரிப்பவனாய் பதியாயிருந்து) வேறுபட்டிருக்கையாலே புருஷோத்தமனாயிருக்கிறானென்கிறயதார்த்தமும் வருணிக்கப்பட்டது.

‡ த்வாதசிஉபவாஸமாவது - துவாதசி ஸமாராதநார்த்தமான ஏகாதசிஉபவாஸம்.

http://acharya.org

டைசெய்ய வேண்டுமென்கிற மனோவிகாரமற்றிருக்கை, ஆத்மாவுக்கு இதமல்லாதவைகளைக் கைவிடுகை, இந்திரியங்களை விஷயங்களில் மண்டவொட்டாமல் தடைசெய்வதில முயலுகை, பிறருக்கு அநர்த்தத்தைத்தரும் வார்த்தையையொருவருக்குச் சொல்லாமை, ஒருபூதமும் துக்கப்படச்சகியாமை, விஷயங்களில் ஆசையற்றிருக்கை, ஸாதுஜநங்கள் கூடும்படி மிருதுவாயிருக்கை, செய்யாததைச்செய்தால் வெட்கம், ஆசைப்படும்படியானவஸ்துநெருங்கியிருக்குமானால் அதில் மனஞ்சலியாமை, துர்ஜ்ஜனர்களால் திரஸ்கரிக்கப்படாமை, பிறரால் தான் பீடையனுபவித்தாலும் அதனால் அவர்களிடத்தில் மனங்கன்றாமை,மஹத்தான ஆபத்திலும் செய்யவேண்டியதைச் செய்தேதீரவேண்டுமென்கிற உறுதி,அந்தஃகரண பஹிஃகரணங்களுக்கு சாஸ்திரத்திற்சொன்னபடி செய்யவேண்டியதைச் செய்யத்தக்க யோக்கியதை, பிறனாயதேஷ்டமாயிருக்கவொட்டாமல் தடைசெய்கிறகுண மற்றிருக்கை, இடமில்லாதவிடத்தில் கெருவப்படாமை, ஆகிய விக்குணங்களெல்லாம் (எம்பெருமானுடைய ஆக்ஞையைப் பின்செல்லும் ஸ்வபாவர்களான) பெரியோரின் செல்வம்; இவைகளெல்லாம் பகவத் ஆக்ஞையைச் செய்யத்தோன்றிய புருஷனுக்குஉண்டாகின்றன.

தம்போதர்போऽபிமானஸ்ச க்ரோத: பாருஷ்யமேவ ச।
அஜ்ஞாநஞ்சாபிஜாதஸ்ய பார்த்த ஸம்பதமாஸுரீம் ॥ ச॥

(ச) தார்மிகனென்று தன்னைச் சொல்லவேண்டுமென்று அதற்காகத் தர்மத்தை யநுஷ்டிப்பது, விஷயங்களை யநுபவிப்பதால் (கிருத்தியா கிருத்தியங்களில் அவிவேகத்தையுண்டாக்கும்) ஸந்தோஷம், தன்னுடைய வித்தைகற்குடிப்பிறவி இவைகளுக்குத் தகாத அபிமானம், பிறருக்குப் பீடைசெய்யும்படியான மனோவிகாரம், சாதுக்களுக்கு மனவருத்த முண்டாக்குந்தன்மை, பராவரதத்துவங்களென்ன கிருத்தியா கிருத்தியங்களென்ன இவைகளில் அவிவேகம், இந்த ஸ்வபாவங்களெல்லாம் அசுரச்செல்வத்தை யநுபவிக்கத்தோன்றியவர்களுக்கு உண்டாகின்றன. [அசுரரென்றால் - பகவான் ஆக்ஞையைக்கடப்பவர்கள்.]

தைவீ ஸம்பத்விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா।

(சஅ) நம் ஆக்ஞையைப் பின்செல்வதென்கிற தெய்வச் செல்வமோமோக்ஷத்தைத்தரும். [என்றால் கிரமமாய் நம்மை யடைவிக்குமென்று தாத்பரியம்.] நம் ஆக்ஞையைக் கடப்பதென்கிற அசுரச்செல்வமோ அதோகதியையுண்டாக்கும்.

மா ஸுச: ஸம்பதம் தைவீமபிஜாதோऽஸி பாண்டவ ॥

(ரு) அர்ச்சுந! நீ விசனப்படாதே. ஏனெனில்-நீ தெய்வச்செல்வத்துக்காகவே பிறந்திருக்கிறாய். தார்மிகர்தலைவனான பாண்டுவுக்குப் புதல்வனன்றோ நீ?

http://acharya.org

𑌦𑍍𑌵𑍌 𑌭𑍂𑌤𑌸𑌰𑍍𑌗𑍌 𑌲𑍋𑌕𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍈𑌵 𑌆𑌸𑍁𑌰 𑌏𑌵 𑌚 ।
𑌦𑍈𑌵𑍋 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌶𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤 𑌆𑌸𑍁𑌰𑌂 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌮𑍇 𑌶𑍃𑌣𑍁 ॥ ௬ ॥

(௬) இந்த கர்மலோகத்தில் கர்மஞ்செய்யும் பிராணிகளின் சிருஷ்டியானது, தெய்வஸ்ருஷ்டியென்றும் அசுரஸ்ருஷ்டியென்றும் இரண்டு விதம். [என்றால் பழையபுண்ணிய பாபங்களென்னும் கர்மவசத்தால் பிராணிகள் பகவானுடைய ஆக்ஞையைச்செய்யவும் கடக்கவுமாகப் பிறக்கும்பொழுது இரண்டுவிதமாய்ப்பிரிந்துண்டாகின்றன வென்றபடி.] அதில் தெய்வஸ்ருஷ்டியானது விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டது. [என்றால்-நமது ஆக்ஞைப்பின்செல்வதே ஸ்வபாவமானவர்களின் உத்பத்தியானது எவ்வித ஆசாரத்தையனுட்டிப்பதற்காகவோ அவ்வித ஆசாரமானது கர்மயோகமென்றும் ஞாநயோகமென்றும் பக்தியோகமென்றும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டதென்றபடி.] அசுரர்களின்உத்பத்தி எந்த ஆசாரத்தை யநுட்டிப்பதற்காகவோ அவ்வித ஆசாரத்தைச்சொல்லுகிறேம் அதைக் கேள்.

𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌜𑌨𑌾 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌰𑌾𑌸𑍁𑌰𑌾𑌃 ।
𑌨 𑌶𑍌𑌚𑌂 𑌨𑌾𑌪𑌿 𑌚𑌾𑌚𑌾𑌰𑍋 𑌨 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௭ ॥

(௭) அசுரப்பிறவியாய்ப் பிறந்தவர்களுக்கு * பிரவ்ருத்தி இதுவென்றும் நிவ்ருத்தியிதுவென்றும் தெரியமாட்டாது. சாஸ்திரத்திற்சொன்ன வைதிகக் கருமாநுட்டானத்துக்கு வேண்டும் யோக்கியதை அவாளிடத்தில் உள்ளுங்கிடையாது புறம்புங்கிடையாது. அந்த யோக்கியதை யுண்டாவதற்குக் காரணமான † ஸந்தியாவந்தநம்முதலிய ஆசாரமுங்கிடையாது. தாம்அறிந்தபடியே பூதங்களுக்கிதமாகப் பேசுவதென்கிற ஸத்தியமுங்கிடையாது.

𑌅𑌸𑌤𑍍𑌯𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌂 𑌤𑍇 𑌜𑌗𑌦𑌾𑌹𑍁𑌰𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌅𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌕𑌿𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌾𑌮𑌹𑍈𑌤𑍁𑌕𑌮𑍍 ॥ ௮ ॥

(௮) ஸத்தியமானப் பிரம்மத்தினின்று முண்டாய், பிரம்மஸ்வரூபமாயிருக்கிறவிப்பிரபஞ்சத்தை அஸத்தியமென்பார்கள். பிரம்மமென்கிற ஆதிசேஷனிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறஇஞ்ஜகத்தை § அப்படிப்பட்டதல்லவென்பார்கள். ஸத்தியஸங்கல்பனாய் ஸர்வேசுவரனாயிருக்கிற பரப்பிரம்மமான நம்மாலாளப்படுகின்றவிதற்கு ஈசுவரனேயில்லையென்பார்கள். மனிதன் பசு ப

* பிரவ்ருத்தியாவது-சுவர்க்கம் புத்திரன் பசுமுதலிய அப்பியுதயத்துக்குச்சாதநமான வைதிகத்தருமம். நிவ்ருத்தியாவது- மோக்ஷஸாதநமான வைதிகத்தருமம்.

† இவ்வர்த்தம் 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍋𑌽𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌨𑌰𑍍𑌹𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 என்றுசொல்லப்பட்டது.

§ பிரம்மமென்கிறஆதிசேஷனால் தரிக்கப்படவெயன்றோ பூமி ஸகலலோகத்தையும் பரிக்கின்றது. இப்படியே 𑌤𑍇𑌨𑍇𑌯𑌂 𑌨𑌾𑌗𑌵𑌰𑍍𑌯𑍇𑌣 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌵𑌿𑌧𑍃𑌤𑌾 𑌮𑌹𑍀 । 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌮𑌾𑌲𑌾𑌂 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌸𑌦𑍇𑌵𑌾𑌸𑍁𑌰𑌮𑌾𑌨𑍁𑌷𑌾𑌮𑍍 என்று சொல்லப்பட்டது.

http://acharya.org

க்ஷிமுதலியவெல்லாம் ஸ்திரீபுருஷர்கள் ஒருவரோடொருவர் ஸம்பந்தப்படுவதால் உண்டாவதாய்க்காணப்படுகிறதேயல்லது மற்றப்படி ஒன்றுங்காணமையாலே எல்லாம் காமத்தாலுண்டாகிறதென்பர்கள்.

ஏதாம் த்ருஷ்டிமவஷ்டப்ய நஷ்டாத்மாநோऽல்பபுத்தய:|
ப்ரபவந்த்யுக்ரகர்மாண: க்ஷயாய ஜகதோऽஹிதா:|| கூ||

(கூ) இந்த எண்ணத்தைப் பற்றிக்கொண்டு, இவர்கள்தேஹத்தைக் காட்டிலும்வேறாயிருக்கிற ஆத்மாவைக்காணமாட்டாத அல்பபுத்திகளாய்[அதாவது குடம்முதலியவைகளைப்போல் தெம்படுகின்ற சரீரத்தில் தேஹத்தைக்காட்டிலும்வேறாய் ஆத்மாயிருக்கிறதென்று பகுத்தறியத்தக்க சக்தியற்றவர்களாய்] ஸகலப்பிராணிகளுக்கும் ஹிம்ஸையைச் செய்துகொண்டு உலகத்தையழிக்கப்புகுகிறார்கள்.

காமமாச்ரித்ய துஷ்பூரம் தம்பமாநமதாந்விதா:|
மோஹாத்க்ருஹீத்வாऽஸத்க்ராஹாந் ப்ரவர்த்தந்தேऽசுசிவ்ரதா:||

(கo) எட்டாத விஷயங்களிலும் ஆசைகொண்டு அவைகளைச்சம்பாதிக்கவேண்டி அவிவேகத்தால் அந்நியாயார்ஜிதமான பொருளைக்கொண்டு சாஸ்திரத்திற் சொல்லாத விரதங்களையெல்லா மேறிட்டுக் கொண்டவர்களாய் டம்பம், மானம், மதம் இவைகளுடன் கூடி அவைகளைச்சாதிக்கயத்தநஞ்செய்கிறார்கள்.

சிந்தாமபரிமேயாஞ்ச ப்ரளயாந்தாமுபாச்ரிதா:|
காமோபபோகபரமா ஏதாவதிதி நிச்சிதா:||கக||

(கக) இன்றைக்கோ நாளைக்கோ யிறக்கப்போகிற இவர்கள் பிராகிருதப்பிரளயம் வரையில் ஸாதித்தாலும் ஸாதித்துமுடியாத விஷயத்தில் அளவற்றவாசைகொண்டு காமப்போகமே பெரும்பயனென்று நினைத்தவர்களாய் இதற்குமேலும் ஒருபுருஷார்த்தமுண்டோவென்று நிச்சயித்து விடுகிறார்கள்.

ஆசாபாசசதைர்பத்தா: காமக்ரோதபராயணா:|
ஈஹந்தே காமபோகார்த்தமந்யாயேநார்த்தஸஞ்சயாந்||கஉ||

(கஉ) ஆசையென்னும் அனேகபாசங்களால் கட்டுண்டவிவர்கள் காமக்குரோதங்களுக் கிருப்பிடமாய்க்கொண்டு, காமப்போகத்துக்காக அக்கிரமமாய்ப் பொருள்தேட முயல்கின்றார்கள்.

இதமத்ய மயா லப்தமிமம் ப்ராப்ஸ்யே மநோரதம்|

(கங) பெண்டுபிள்ளை முதலியவெல்லாம் என்திறமையால் ஸம்பாதிக்கப்பட்டதே யல்லது அதுவிஷயத்தில் அதிருஷ்டம் முதலிய யாதொருகாரணமுமில்லையாது; இப்படியே நான் இன்னம் கோரியிருக்கிற விஷயத்தையும் நானேஸம்பாதிக்கப்போகிறேனேயல்லது மற்றப்படி அதிருஷ்டாதிகளுடன்கூடி அடையப்போகிறேனென்பதில்லையென்று நினைத்து விடுகிறார்கள்.

http://acharya.org

இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புநர்தநம் ||கங||

(கங) என்திறமையால் ஸம்பாதித்த திரவியம் இதோ யிருக்கின்றது; இன்னுமிப்படியே என் ஸாமர்த்தியத்தால் இதைச் சம்பாதிக்கப் போகிறேன்.

அஸௌ மயா ஹதஶ்ஶத்ரு: ஹநிஷ்யே சாபராநபி|

(கசஉ) இந்த சத்துருவை மஹாபலசாலியான நான் கொன்றேன்; இன்னுமிப்படி வெகுபேரை நானேகொல்லப் போகிறேன்; அதுவேயல்லது அதிருஷ்டமென்றும் அதென்றும் இதென்றும் சொல்லுவதெல்லாம் அசட்டுத்தனம் என்கிறார்கள்.

ஈஶ்வரோஹமஹம் போகீ ஸித்தோஹம் பலவாந் ஸுகீ ||கச||

(கச) நான்ஈசுவரன், அதாவது-ஒருவனுக்கு ஆட்பட்டவனல்லன்; பின்னும் யான்பலபெயர்களை யாளுமவன்; போகங்களும் அப்படியே என்னால் மாத்திர மடையப் படுகின்றனவேயல்லது மற்றப்படி அதிருஷ்டம் முதலியவைகளா லுண்டாகின்றன வென்பதில்லை; யான் ஸ்வதஸ்ஸித்தமாயிருப்பவன்;அப்படியே ஸ்வயம் பெலவானும் சுகியாயுமிருப்பவன் என்கிறார்கள்.

ஆட்யோபிஜநவாநஸ்மி கோந்யோஸ்தி ஸத்ருஶோ மயா|

(கருஉ) நான் ஸ்வயம் பரிபூர்ணன்; உத்தமமான வம்சத்தில் பிறந்தவன்; இவ்வுலகத்தில் எனக்கு ஸமமாய் தன் ஸாமர்த்தியத்தால் எல்லாப்பெருமைகளையும் படைத்தவன் வேறொருவனு மில்லையென்கிறார்கள்.

யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்யஜ்ஞாநவிமோஹிதா: ||கரு||

(கரு) நான்தானாகவே யாகஞ்செய்ய மாட்டுவேன், தானமுமளிப்பேன், அத்தால் ஸந்தோஷிப்பேன் என்று இப்படிக்கெல்லாம் அஞ்ஞானத்தால் மயங்கி ஈசுவரானுக்கிரஹமின்றி எல்லாந் தங்களாலேயே யாய்விடுவதாக நினைக்கின்றார்கள்.

அநேகசித்தவிப்ராந்தா மோஹஜாலஸமாவ்ருதா:|
ப்ரஸக்தா: காமபோகேஷு பதந்தி நரகேஶுசௌ ||கசா||

(கசா) அதிருஷ்டம் ஈசுவரன் முதலிய ஸஹகாரமில்லாமல் தம்மாலேயே எல்லாஞ்செய்யக்கூடுமென்று நினைத்து 'இப்படிச்செய்வேன் இதையுஞ்செய்வேன் அதையுஞ்செய்வேன்' என்று அனேகவிதமாய் மனக்கவலைகொண்டவர்களாய் இந்த மோஹமென்னும் வலையுளகப்பட்டு காமப்போகத்தில் மிகவும் பற்றுடையராயிருந்து இடையில்மறித்து அசுத்தமான நரகத்தில் விழுகின்றார்கள்.

ஆத்மஸம்பாவிதா: ஸ்தப்தா தநமாநமதாந்விதா:|

(கஎஉ) தங்களைத் தாங்களே புகழ்ந்துகொண்டு செல்வம் கல்வி குடிப்பிறப்பு இவைகளால் தம்மைக் குறைவற்றவராக நினைத்து யாதொருவியாபாரமுஞ் செய்யாமலிருந்து விடுகிறார்கள்.

http://acharya.org

யஜஂதெ நாஉயஜெஜெஂ்ஷ ஊஂஹெநாவியிவூஃவ-கஂ ||கஎ||

(கஎ) யக்ஞம் செய்தோமென்கிற பெயர் வரவேண்டுமென்று டம்பத்துக்காசைப்பட்டு சாஸ்திரத்தில் சொன்னதொன்றும் தாம்செய்வதொன்றுமாகயக்ஞஞ்செய்கிறார்கள்.

(அ-கை.) இவர்கள் யாகஞ்செய்யும்பொழுது இருக்குமிருப்பு சொல்லுகிறது.

அஹஂகாரஂ வஉஂ ஊவஂ காஉஂ கெூயஂ வஸஂஶிதாஃ|
உாஉாதவாரெஊெஹஷூ வுஷிஷெந்தொ ஹூவஸூயகாஃ ||கஅ||

(கஅ) ஒருவருடைய அபேக்ஷையில்லாமல் நானே ஸர்வமும் செய்கிறேனென்றிப்படி அஹங்காரப் பட்டுக்கொண்டும், எதையுஞ் செய்யவல்லேனென்று தன் பலத்தைத்தானே புகழ்ந்துகொண்டும், இப்படி யெல்லாமிருக்கிற எனக்குச் சமமாய் ஒருவனு மில்லை யென்று கொழுப்படைந்தும், எனக்கு எல்லாம் நினைத்தமாத்திரத்தில் கிடைக்குமென்று மகிழ்ந்தும், எனக்குயாராகிலும் தீங்கு நினைப்பார்களாகில் அவர்களை அதஞ்செய்வேனென்றுகோபித்தும், இப்படி தம்தேகத்திலும் பிறருடைய தேகத்திலு மிருந்துகொண்டு ஸகலமுஞ்செய்விக்கின்ற ஈசனுகிய நம்மைப் பகைத்தும், குயுக்திகளைக்கொண்டு நாமிருக்கிறோமென்கிற விஷயத்தில் தோஷத்தை யேறிட்டும் இப்படிக்கெல்லாம் அஹங்கரித்துக்கொண்டு யாகஞ்செய்கிறார்கள்.

தாநஹஂ்ஷிஷதஃகூூராநு ஸஂஸாரெஷூநராயஉாநு|
க்ஷிவாஉஜஸூஉஶூஹா நாஸூரீஷெ்ஷவயொநிஷூ ||கக||

(கக) இப்படி நம்மைப் பகைப்பவர்களாய் குரூரர்களாய் அசுபர்களான அந்த நராதமர்களை நாம் (பிறப்பு இறப்பு மூப்பு என்று பிரண்டுகொண்டேயிருக்கிற) ஸம்ஸாரத்தில், நம்மை விரோதிக்கின்ற அசுரயோநிகளில்தானே எப்பொழுதும் பிறக்கும்படி தள்ளிவிக்கிறோம். [என்றால் அந்தந்த பிறப்புகிடைக்கும்படியான காரியத்தைச் செய்யும்படி அவர்களுக்கு நாமே புத்தியைத்தருகிறோ மென்றபடி.]

ஆஸூரீஂயொநிஉாவநா உஃூஜநநிஜநநி|
உாஉவாரெவெ ூவகஎெஞய தஉொயாஸூயஉாஜதிஂ ||உ௦||

(உ௦) நமக்கு அநுகூலமல்லாத பிறவியில்தோன்றிய அசுரப்பிரகிருதிகள், ஜன்மந்தோறும் மென்மேலும்அக்ஞாநம் விருத்தியடைந்து விபரீதமாய் வாசுதேவனென்கிறபகவான் ஒருவனிருக்கிறானென்கிற நினைவேயில்லாமல் அதோ கதியாய்ப்போவர்கள்.

(அ - கை.) ஆத்ம நாசத்தையுண்டுபண்ணும் இந்த அசுரஸ்வபாவமுண்டாவதற்குக் காரணங்கூறுகின்றார்.

http://acharya.org

𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌨𑌰𑌕𑌸𑍍𑌯𑍇𑌦𑌂 𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌨𑌾𑌶𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌕𑌾𑌮𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌸𑍍𑌤𑌥𑌾 𑌲𑍋𑌭𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍॥௨௧॥

(௨௧) அசுரஸ்வபாவமென்னுமிந்நரகத்துக்கு இம்மூன்றும்வழி. அதாவது:—காமமும் குரோதமும் லோபமும். இவை ஆத்மாவை நாசம்செய்கின்றன. இப்படி கோரமான நரகத்தை விளைவிக்கிறபடியால் அர்ச்சுந! நீ இவைகளைத்தூரமாய்விட்டுவிடு.

𑌏𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌮𑍋𑌦𑍍𑌵𑌾𑌰𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑌰𑌃।
𑌆𑌚𑌰𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍍𑌤𑌤𑍋 𑌯𑌾𑌤𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍॥௨௨॥

(௨௨) குந்தீபுத்திர! காமக்குரோதலோபங்களென்கிற இந்த விபரீதக்ஞாநமார்க்கத்தினின்றும் விடுபட்ட புருஷன், ஆத்மாவுக்கு நன்மையைச்செய்கிறான். [என்றால்-நம்மையறிந்து நமக்கனுகூலமான யத்னங்களைச்செய்து பிறகு நம்மையே பரமகதியாக வடைகிறான் என்றபடி.]

(அ - கை.) சாஸ்திரத்தை உபேக்ஷிப்பது இந்நரகத்திற்குப் பிரதானகாரணம் என்கிறார்.

𑌯𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌕𑌾𑌮𑌕𑌾𑌰𑌤𑌃।
𑌨 𑌸 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨 𑌸𑍁𑌖𑌂 𑌨 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍॥௨௩॥

(௨௩) வேதமென்னும் நம்மாணையைத்தவிர்ந்து தனக்குத்தோன்றிய வழியில் எவனிருக்கிறானோ அவன் ஒருவிதஸித்தியையும் அடையமாட்டான் அவனுக்கு இஹத்தில் சுகமும் கிடையாது. ஆனபின்பு பரகதியடைகிறவிஷயத்தைக்கேட்கவேண்டுமோ?

𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌤𑍇 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌।
𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌾𑌨𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌹𑌾𑌰𑍍𑌹𑌸𑌿॥௨௪॥

(௨௪) ஆகையால் 'இதைச்செய்யத்தகும் இதைச்செய்யத் தகாதென்று' அறியும் விஷயத்தில் உனக்கு வேதந்தான் பிரமாணம். தர்மசாஸ்திரம் இதிஹாஸம் புராணம் முதலியவைகளால் விவரிக்கப்படுகின்ற அவ்வேதமானது எந்தபுருஷோத்தம தத்துவத்தைப் பரமென்று விதிக்கிறதோ அந்த தத்துவத்தையே சிறிதும் ஏத்தக்குறைச்சலின்றியறிந்து, அவனுக்குப்பிரீதிகரமாயும் அவனையடையவேண்டு முபாயமாயு மெந்தகர்மத்தை விதிக்கின்றதோ அக்கருமத்தையே குறைவறச்செய்யக்கடவாய் [என்று அருளிச்செய்தார்.]

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

பதினாறுவது அத்யாயம் முற்றிற்று.

---

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பதினேழாவது அத்யாயம்.

அவதாரிகை.

தெய்வப்பிறவியையும் அசுரப்பிறவியையும் பிரித்து அருளிச்செய்யா நின்றுகொண்டு உண்மையான பேற்றையும் அதை யடைவிக்கு முபாயத்தையும் வேதத்தைக்கொண்டே யறியவேண்டுமென்று அருளிச்செய்தார்.

இப்பொழுது சாஸ்திரத்தில் சொல்லாதவைகளெல்லாம் அசுரஸம்பந்தமாகையால் பயனுகமாட்டாதென்றும், சாஸ்திரத்திற்சொன்னவைகள் மூன்று வகையென்றும், அவற்றின் லக்ஷணம் இன்னதென்றும் சொலலப்படுகின்றது. அதில்சாஸ்திரத்தில் சொல்லாதவைகள் நிஷ்பலங்களென்பதையறியாது அர்ச்சுநன், அவைசிரத்தையோடு செய்யப்பட்டால் அவைகளுக்கு ஸத்வம் முதலியகுணங்களுக்குத்தக்கபடி பயனில் வேறுபாடுண்டாவென்பதை யறியவேண்டுமென்று பிரச்நம் பண்ணுகிறான்.

அர்ஜுந உவாச ॥ யே ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய யஜந்தே ஶ்ரத்தயாந்விதா: । தேஷாம் நிஷ்டா து கா க்ருஷ்ண ஸத்த்வமாஹோ ரஜஸ்தம: ॥ க ॥

(க) ஸ்வாமி! சாஸ்திரத்திற்சொல்லிய முறைதப்பினும் சிரத்தையோடுகூடி எவர்கள் யாகஞ்செய்கிறார்களோ அவர்களின்நிஷ்டையென்ன? ஸத்துவமா ரஜஸ்ஸா தமஸ்ஸா? [என்றால் அவர்களுடைய ஸ்திதியென்ன ஸத்துவத்திலா ரஜஸ்ஸிலா தமஸ்ஸிலா? வென்றபடி]

(அ - கை.) இவ்வாறு கேட்கப்பட்ட பகவான், சாஸ்திரத்தில் சொல்லாத சிரத்தையும் அத்தோடுகூடியயாகமும் நிஷ்ப்பலமென்பதைத் திருவுள்ளத்திற் கொண்டு சாஸ்திரோக்தமான் யாகாதிகர்மமே மூன்றுவிதமென்பதை யறிவிக்கைக்காக முன்னே சாஸ்திரோக்தமான சிரத்தையே மூன்று விதமென்கிறார்.

ஸ்ரீபகவாநுவாச ॥ த்ரிவிதா பவதி ஶ்ரத்தா தேஹிநாம் ஸா ஸ்வபாவஜா । ஸாத்த்விகீ ராஜஸீ சைவ தாமஸீ சேதி தாம் ஶ்ருணு ॥ உ ॥

* ஸ்வபாவமாவது தனக்கே அஸாதாரணமான தன்மை. அதாவது பழைய வாஸனையின்படி அந்தந்த வஸ்துக்களிலுண்டான ருசி. எதில் ருசியோ அதில் சிரத்தையுண்டாகின்றது. சிரத்தையாவது இது என் இஷ்டத்தைக்கைப்படுத்துமென்கிற விசுவாஸத்துடன்கூடி ஸாதநத்திலுண்டாகும் தொளை. வாஸனை ருசி சிரத்தை இம்மூன்றும் குணங்களின் ஸம்பந்தத்தாலுண்டாகும் ஆத்மதருமங்கள். அவைகளை யுண்டாக்குமவைகளோ தேஹம் இந்திரியம் மனம் பிராணன் முதலியவைகளின் தருமங்களான குணங்கள். அவைகளால் இந்த ஸாத்விக முதலிய சிரத்தையுண்டாகும்.

http://acharya.org

(௨) அர்ச்சுந! புருஷர்களுக்கெல்லாம்சிரத்தை * ஸ்வபாவத்தாலுண்டானது. அது ஸாத்விகியென்றும் ராஜஸையென்றும் தாமஸையென்றும் மூன்றுவகை. அதின் ஸ்வபாவத்தைச்சொல்லுகிறேம் கேள்.

𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 |
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌮𑌯𑍋𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌯𑍋 𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑌦𑍍𑌧𑌃 𑌸𑌏𑌵𑌸𑌃 || ௩ ||

(௩) உலகத்தில் புருஷர்கள் யாவர்க்கும் அவரவர் உள்ளத்துக்குத் தக்கபடி சிரத்தையுண்டாகின்றது. [அதாவது-அந்தஃகரணம் எவ்விதகுணத்தோடுகூடியிருக்குமோ அந்தகுண விஷயமாகவே சிரத்தையுண்டாகுமென்றபடி.] இந்த புருஷன் முழுவதும் சிரத்தையின் விகாரமாக விருக்கிறான். எந்தபுருஷன் எவ்விதமான சிரத்தையுடன் கூடியிருக்கிறானோ அவன் அச்சிரத்தையின் விகாரமென்றே சொல்லப்படுவான்.

[புண்ணியகர்மத்தில் சிரத்தைபண்ணினானாகில் அந்த புண்ணிய கர்மப்பயனை அடைவான். ஆகையால் பலனுண்டாவதற்கு சிரத்தையே பிரதானமென்றதாயிற்று.]

(அ - கை.) இதையே விவரிக்கிறார்.

𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌯𑌕𑍍𑌷𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿 𑌰𑌾𑌜𑌸𑌾𑌃 |
𑌪𑍍𑌰𑍇𑌤𑌾𑌨𑍍 𑌭𑍂𑌤𑌗𑌣𑌾𑌂𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌯𑌜𑌨𑍍𑌤𑍇 𑌤𑌾𑌮𑌸𑌾 𑌜𑌨𑌾𑌃 || ௪ ||

(௪) ஸத்துவகுணம் விஞ்சியிருப்பவர்கள் ஸாத்துவிகமான சிரத்தையுடன்கூடித் தேவர்களை ஆராதிப்பார்கள் [இதனால் துஃகம் கலசாமல் சிறந்த சுகத்திற்குஹேதுவான தேவதாராதனத்தில் பண்ணும் சிரத்தை ஸாத்துவிகம் என்றதாயிற்று.] ராஜஸர்கள் இயக்கரையும் அரக்கரையும் ஆராதிப்பார்கள். தாமஸ ஜனங்கள் பிரேதங்களையும் பூதக்கணங்களையும் பூசிப்பார்கள்]. [இதனால் துஃகத்தோடுகூடி அற்பசுகத்துக்கு ஹேதுவானது ராஜஸமான சிரத்தையென்றும்; துஃகமே மிகுதியாய் மிகவும் அற்பமான சுகத்தைத் தருவது, தாமஸச்சிரத்தையென்றும் சொன்னதாயிற்று].

(அ - கை.) இப்படி சாஸ்திரோக்தமான யாகாதிகள் சிரத்தையோடு கூடியிருக்குமாகில் அவற்றின் குணத்துக்குத்தக்கபடி பலவிசேஷங்களுண்டென்றும், சாஸ்திரத்திற் சொல்லாததவம் தாகம் முதலியவைகள் ஈசுவராக்ஞைக்கு மாறானதையால் அவற்றிற்குச்சிறிதும் சுகமில்லையென்றும் மற்றப்படி அநர்த்தமேவிளையுமென்றும் தமக்குத் திருவுள்ளமென்கிற விஷயத்தை அறிவிப்பாராக அருளிச்செய்கிறார்.

𑌅𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌘𑍋𑌰𑌂 𑌤𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑍇 𑌤𑌪𑍋 𑌜𑌨𑌾𑌃 |
𑌦𑌮𑍍𑌭𑌾𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌾𑌮𑌰𑌾𑌗𑌬𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 || ௫ ||
𑌕𑌰𑍍𑌶𑌯𑌨𑍍𑌤𑌃 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌂 𑌭𑍂𑌤𑌗𑍍𑌰𑌾𑌮𑌮𑌚𑍇𑌤𑌸𑌃 |
𑌮𑌾𑌂 𑌚𑍈𑌵𑌾𑌨𑍍𑌤𑌃𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌥𑌂 𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌸𑍁𑌰𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌨𑍍 || ௬ ||

(௫-௬) சாஸ்திரத்தில்சொல்லாத தவம் யாகம் முதலியவைகள் மிகவும் கோரமாயும் அதிகவருத்தத்தாலே ஸாதிக்கவேண்டியவைகளாயும் இருந்

http://acharya.org

ததேயாகிலும் அவைகளை டம்பம் அஹங்காரம் காமம் ராகம் பலம் இவைமுத லியவற்ருேடுகூடி சரீரத்திலுள்ள ப்ருதிவிமுதலிய பூதஸமூகத்தையும் என தம்சமான ஜீவனையும் வருத்திக்கொண்டு செய்கின்றவர்கள் அசுரநிச்சயமுள் ளவர்களென்றறி. (அதாவது-நமது ஆக்ஞையைமீறி நடக்கும் அசுரத்தன்மை பொருந்திய அவர்களுக்குச் சிறிதின்பமும் கிடையாது; மற்றப்படி அநர்த்த மான நரகமேயுண்டாகும் என்று முன்னமேசொல்லப்பட்டதென்றபடி.]

(அ-கை) அநந்தரம் பிரகிருதவிஷயம்:—சாஸ்திரீயமான யாகாதிகளு க்குக் குணத்தால்வரும் விசேஷத்தை விஸ்தாரமாயருளிச்செய்கிறார். அதில் ஸத்துவம் முதலியவைகள் விருத்தியடைவதற்கு ஆஹாரம் மூலமாகையாலே ஆஹாரத்துக்குண்டான மூன்றுவிதங்களையுமருளிச்செய்கிறார். 𑌅𑌨𑍍𑌨𑌮𑌯𑌂 𑌹𑌿 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌮𑌨𑌃॥ 𑌆𑌹𑌾𑌰𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 என்றன்ருே ஓதப்படுகிறது?

𑌆𑌹𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃।
𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑌪𑌸𑍍𑌤𑌥𑌾 𑌦𑌾𑌨𑌂 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌭𑍇𑌦𑌮𑌿𑌮𑌂 𑌶𑍃𑌣𑍁 ॥௭॥

(௭) ஸகலப்பிராணிகளுக்கும் ஸத்துவம் முதலிய முக்குணங்களின்சே ர்க்கைக்குத்தக்கபடி ஆஹாரமும்மூன்றுவிதமாய்ப்பிரீதியைச்செய்யும். அப்ப டியேயக்ஞங்களும் மூன்றுவகை. அப்படியேதவமும், தாநமும். இவைகளின் பேதத்தைச்சொல்லுகிறேும் கேள். [ஆஹாரம் யக்ஞம் தவம் தாநம் இவை களுக்கு ஸத்துவமுதலியகுணங்களின் ஸம்பந்தத்துக்குத்தக்கபடி யுண்டாகு ம்பேதத்தைச் சொல்லுகிறேும் கேளென்றபடி.]

𑌆𑌯𑍁𑌃𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌬𑌲𑌾𑌰𑍋𑌗𑍍𑌯𑌸𑍁𑌖𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌃।
𑌰𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌾𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾 𑌹𑍃𑌦𑍍𑌯𑌾 𑌆𑌹𑌾𑌰𑌾𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌃॥௮॥

(அ) ஆயுஸ்ஸையும் ஞாநத்தையும் பெலத்தையும் ஆரோக்கியத்தையும் சுகத்தையும் பகவத்பிரீதியையும் விருத்திசெய்யுமவைகளாய், மதுரரஸத்தோ டும் எண்ணெயோடும் கூடியவையாய், ஒரோவிகாரமுடையவைகளாய் மனதி ற்கினியவையாயிருக்கும் ஸத்துவமயமான ஆஹாரங்கள் ஸாத்துவிக புருஷ னுக்கு இஷ்டமாகின்றன.

𑌕𑌟𑍍𑌵𑌮𑍍𑌲𑌲𑌵𑌣𑌾𑌤𑍍𑌯𑍁𑌷𑍍𑌣𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌰𑍂𑌕𑍍𑌷𑌵𑌿𑌦𑌾𑌹𑌿𑌨𑌃।
𑌆𑌹𑌾𑌰𑌾 𑌰𑌾𑌜𑌸𑌸𑍍𑌯𑍇𑌷𑍍𑌟𑌾 𑌦𑍁𑌃𑌖𑌶𑍋𑌕𑌾𑌮𑌯𑌪𑍍𑌰𑌦𑌾𑌃॥௯॥

(௯) காரமாயும் புளிப்பாயும் உப்பு அதிகமாயும் அதிகஉஷ்ணமாயும் அதிதீக்ஷ்ணமாயும் உபயோகிக்கக்கூடாத சைத்தியாதிகளுடன்கூடியதாயும் சோஷிப்பிக்குமதாயும் தாபத்தையுண்டுபண்ணுமதாயுமிருக்கும் ஆஹாரம் ராஜஸனுக்கு இஷ்டம். இவ்வித ஆஹாரம் துக்கம் சோகம் வியாதி ரஜோ குணம் இவைகளை விருத்திபண்ணும்.

𑌯𑌾𑌤𑌯𑌾𑌮𑌂 𑌗𑌤𑌰𑌸𑌂 𑌪𑍂𑌤𑌿 𑌪𑌰𑍍𑌯𑍁𑌷𑌿𑌤𑌂 𑌚 𑌯𑌤𑍍।
𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌮𑌪𑌿 𑌚𑌾𑌮𑍇𑌧𑍍𑌯𑌂 𑌭𑍋𑌜𑌨𑌂 𑌤𑌾𑌮𑌸𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍॥௰॥

http://acharya.org

(௧௦) காள்ப்பட்டதாய், அதனால்தன்ஸ்வபாவமான ரஸத்தையிழந்து கெட்டநாற்றமுடையதாய், பழகிப்போனதாய், பெரியவாளைத்தவிர மற்றவர்களால் புசித்துமீத்தப்பட்டதாய், யாகத்தில் சேஷப்படாததாயிருக்கும் போஜநமானது தாமஸர்களுக்குப்பிரியமாயிருக்கும். இதுவோ! தமோகுணத்தை மென்மேலும் விருத்திபண்ணும்[ஆகையால் ஹிதத்தைக்கோரியவர்கள்ஸாத்துவிகமான ஆஹாரத்தைத்தான்புசிக்கவேண்டுமென்றபடி.]

𑌅𑌫𑌲𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌜𑍍𑌞𑍋 𑌵𑌿𑌧𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑍋𑌯𑌇𑌜𑍍𑌯𑌤𑍇|
𑌯𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 𑌮𑌨𑌃 𑌸𑌮𑌾𑌧𑌾𑌯𑌸𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌃||௧௧||

(௧௧) பலாபேக்ஷையற்றவர்களால் சாஸ்திரத்திற் சொன்னபடியே மந்திரம் திரவியம் கிரியைமுதலானவைகளுடன்கூடி, இது எம்பெருமானுடைய ஆராதநரூபம் என்று ஸ்வயம் பலனாய்ச்செய்யப்படும்யாகம் ஸாத்துவிகயாகம்.

𑌅𑌭𑌿𑌸𑌨𑍍𑌧𑌾𑌯 𑌤𑍁 𑌫𑌲𑌂 𑌦𑌮𑍍𑌭𑌾𑌰𑍍𑌥𑌮𑌪𑌿𑌚𑍈𑌵𑌯𑌤𑍍|
𑌇𑌜𑍍𑌯𑌤𑍇 𑌭𑌰𑌤𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌤𑌂𑌯𑌜𑍍𑌞𑌂𑌵𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑌾𑌜𑌸𑌮𑍍||௧௨||

(௧௨) பலாபேக்ஷையுடன் கூடியவர்களால் டம்பத்தையுட்கொண்டு கீர்த்தியே பயனாய்ச்செய்யப்படும் யாகமானது இராஜஸயாகமென்றறி.

𑌵𑌿𑌧𑌿𑌹𑍀𑌨𑌮𑌸𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌨𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌹𑍀𑌨𑌮𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍍|
𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌵𑌿𑌰𑌹𑌿𑌤𑌂𑌯𑌜𑍍𑌞𑌂 𑌤𑌾𑌮𑌸𑌂𑌪𑌰𑌿𑌚𑌕𑍍𑌷𑌤𑍇||௧௩||

(௧௩) ஸதாசாரஸம்பந்நாளாய் வித்துவான்களானப் பிராம்மணாளாலே விதிக்கப்படாததாய் அன்னதானம் முதலியவைசெயப்படாததாய் மந்திரஹீநமாய் தக்ஷிணையற்றதாய் சிரத்தையில்லாததாயிருக்கும் யாகம் தாமஸமென்னப்படும்.

(அ - கை.) இப்பொழுது குணத்துக்குத்தக்கபடி தவமும் மூன்றுவிதமென்பதை யருளிச்செய்வாராய் அது மனோவாக்காயங்களாலுண்டாகவேண்டுகையால் அவற்றால்வரும் ஸ்வரூபபேதத்தை யருளிச்செய்கிறார்.

𑌦𑍇𑌵𑌦𑍍𑌵𑌿𑌜𑌗𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞 𑌪𑍂𑌜𑌨𑌂𑌶𑍌𑌚𑌮𑌾𑌰𑍍𑌜𑌵𑌮𑍍|
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑌹𑌿𑌂𑌸𑌾𑌚 𑌶𑌾𑌰𑍀𑌰𑌂𑌤𑌪𑌉𑌚𑍍𑌯𑌤𑍇||௧௪||

(௧௪) தேவர், பிராம்மணர், குருக்கள், பண்டிதாள் இவாளைப்பூசித்தல், தீர்த்தஸ்நாநம் முதலியவைகளைச் செய்தல், உள்ளத்திலுள்ளபடி நடக்கை, ஸ்திரீகளைப்பார்க்கும்பொழுது இவர்கள் அநுபவத்துக்கேற்றவர்களென்கிற புத்தியோடு பாராமை, பிராணிகளுக்குப்பீடை செய்யாமை, இதெல்லாம சரீரத்தவமென்று சொல்லப்படும்.

𑌅𑌨𑍁𑌦𑍍𑌵𑍇𑌗𑌕𑌰𑌂𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑌹𑌿𑌤𑌂𑌚𑌯𑌤𑍍|
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌭𑍍𑌯𑌸𑌨𑌂𑌚𑍈𑌵 𑌵𑌾𑌙𑍍𑌮𑌯𑌂𑌤𑌪𑌉𑌚𑍍𑌯𑌤𑍇||௧௫||

http://acharya.org

(௧௫) பிறருக்கு மனவருத்த முண்டாக்காமல் ஸத்யமாய் பிரியமாயிருக்கச்செய்தே இதமாய்ப்பேசும் வார்த்தையும், வேதாத்தியயநமும் வாக்குத்தவமென்று சொல்லப்படும்.

𑌮𑌨𑌃𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌃 𑌸𑍌𑌮𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌮𑍌𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃।
𑌭𑌾𑌵𑌸𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌤𑌪𑍋 𑌮𑌾𑌨𑌸𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇॥௧௬॥

(௧௬) மனதில் சினமுதலியவையற்றிருக்கை, பிறருக்கு க்ஷேமமுண்டாக்குவதில் ஆசைகொண்டிருக்கை, வாக்கைப் பேசவொட்டாமல் அடக்குகை, மனோவியாபாரத்தை தியானிக்கப்படும் விஷயத்தில்தானே நிறுத்துகை, ஆத்மாவையொழிந்தமற்றவைகளில் சிந்தையற்றிருக்கை இதெல்லாம் மனத்தவமென்றறி.

𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌪𑌰𑌯𑌾 𑌤𑌪𑍍𑌤𑌂 𑌤𑌪𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌨𑌰𑍈𑌃।
𑌅𑌫𑌲𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍈𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂 𑌪𑌰𑌿𑌚𑌕𑍍𑌷𑌤𑍇॥௧௭॥

(௧௭) பலாபேக்ஷையற்று இது பகவானுக்கு ஆராதநமென்கிற சிந்தையோடு கூடியிருப்பவர்களாலே மிகவும் சிரத்தையுடன் கூடி எந்தத்தவமானது செய்யப்படுமோ (முற்கூறியபடி மூன்றுவிதமாயிருக்கிற) அந்த தவமானது ஸாத்துவிகமென்று சொல்லப்படும்.

𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑌮𑌾𑌨𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑌪𑍋 𑌦𑌮𑍍𑌭𑍇𑌨 𑌚𑍈𑌵 𑌯𑌤𑍍।
𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌤𑌦𑌿𑌹 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌚𑌲𑌮𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍॥௧௮॥

(௧௮) பலத்தில் அபேக்ஷையுடன்கூடி, தன்னைக்கண்டு பிறர் ஸந்தோஷித்துக்கொண்டாடி நமஸ்காராதிகள் பண்ணவேண்டுமென்று டம்பத்தைக் கோரியவர்களால் எந்த தவம் செய்யப்படுமோ; அது ராஜஸத்தவம். மேலும் அது அசாசுவதமான சுவர்க்காதிகளைப் பயனாய்க்கொண்டதாகையால் சாசுவதமல்லாமல் சலிப்புற்று அழிந்துபோகும்.

𑌮𑍂𑌢𑌗𑍍𑌰𑌾𑌹𑍇𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌯𑌤𑍍𑌪𑍀𑌡𑌯𑌾 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌤𑌪𑌃।
𑌪𑌰𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌸𑌾𑌦𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑌾 𑌤𑌤𑍍𑌤𑌾𑌮𑌸𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍॥௧௯॥

(௧௯) மூடத்தனமாய் தனது வருத்தமும் தெரியாமல் பிடிவாதமாய் செய்யப்படுவதும் பிறருக்குப்பீடையுண்டாக்குவதுமான தவம் தாமஸத்தவமென்னப்படும்.

𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌯𑌦𑍍𑌦𑌾𑌨𑌂 𑌦𑍀𑌯𑌤𑍇𑌽𑌨𑍁𑌪𑌕𑌾𑌰𑌿𑌣𑍇।
𑌦𑍇𑌶𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌚 𑌪𑌾𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌤𑌦𑍍𑌦𑌾𑌨𑌂 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍॥௨௰॥

(௨௰) பலனைக்கோராமல் கொடுக்கவேண்டுமென்கிற வெண்ணத்தோடு தகுந்ததேசத்தில் தகுந்தகாலத்தில் தகுந்தபாத்திரத்தில் உபகாரஞ்செய்யச்சக்தியற்றவன் விஷயத்தில் செய்யப்படும் தாநம் ஸாத்துவிகதாநமென்னப்படும்.

http://acharya.org

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌪𑌕𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 𑌫𑌲𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃।
𑌦𑍀𑌯𑌤𑍇 𑌚 𑌪𑌰𑌿𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌂 𑌤𑌦𑍍𑌦𑌾𑌨𑌂 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥௨௧॥

(௨௧) பிரதியுபகாரத்தையும் பலனையும் உத்தேசித்து கெட்டதிரவியத்தைக்கொண்டு செய்யப்படும் தானம் ராஜஸதானமென்னப்படும்.

𑌅𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑍇 𑌯𑌦𑍍𑌦𑌾𑌨𑌮𑌪𑌾𑌤𑍍𑌰𑍇𑌭𑍍𑌯𑌶𑍍𑌚 𑌦𑍀𑌯𑌤𑍇।
𑌅𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑌵𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌤𑌤𑍍𑌤𑌾𑌮𑌸𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥௨௨॥

(௨௨) தகாததேசத்தில் தகாதகாலத்தில் தகாதபேர்களிடத்தில் செய்யப்படுமதாய் கால்கழுவுதல் முதலிய கௌரவமானஉபசாரமில்லாமல் அவமரியாதையாய்ச்செய்யப்படுந்தானம் தாமஸதானமென்னப்படும்.

(அ-கை.) இப்படி வைதிகங்களான யக்ஞதபோதானங்கள் ஸத்வமுதலிய குணங்களுக்குத்தக்கபடி மூன்றுவகையாமென்கிற விஷயஞ் சொல்லப்பட்டது. இப்பொழுது அந்தவைதிகயக்ஞாதிகளேபிரணவத்தோடுகூடிய 'தத்ஸத்' சப்தங்களாலே கூறப்படுமென்று அவற்றின் லக்ஷணஞ்சொல்லப்படுகின்றது.

𑍐 𑌤𑌤𑍍𑌸𑌦𑌿𑌤𑌿 𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌸𑍍𑌤𑍇𑌨 𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌚 𑌯𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌚 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌃 𑌪𑍁𑌰𑌾 ॥௨௩॥

(௨௩) ஓம் தத் ஸத் என்கிற இம்மூன்று சொற்களும் பிரம்மத்தோடு சேருகின்றன. [பிரம்மமாவது இங்கேவேதம்; வேதசப்தத்தாலே வைதிககருமம் சொல்லப்படுகின்றது; ஆக இதனால் வைதிகமான யக்ஞாதிகருமம் * ஓம் தத் ஸத்என்கிற சொற்களோடுகூடியிருக்குமென்றதாயிற்று] இம்மூன்று சொற்களுடன் கூடியே வேதாதிகாரிகளான திரைவர்ணிகரும் வேதங்களும் யக்ஞங்களும் முன்னே நம்மால் நிருமிக்கப்பட்டன.

(அ-கை.) ஓம் தத் ஸத் என்கிற மூன்றுசொற்களும் அன்வயிக்கும்படி சொல்லத்தொடங்கி முதலில் ஓம் என்னும் சொல் அன்வயிக்கும்படி சொல்லுகிறார்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍋𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑌦𑌾𑌨𑌤𑌪𑌃𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃।
𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌵𑌿𑌧𑌾𑌨𑍋𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑌿𑌨𑌾𑌮𑍍 ॥௨௪॥

(௨௪) ஆகையால் வேதவாதிகளான திரைவர்ணிகர்கள் யக்ஞம் தானம் தவம் இவைகளை வேதத்தில் சொன்னபடிசெய்யும்பொழுது ஆதியில் 'ஓம்' என்று சொல்லி எப்போதும் ஆரம்பிக்கிறார்கள். வேதங்களும் அப்படியே ஓம் என்று சொல்லி ஆரம்பிக்கப்படுகின்றன.

* ஓம் என்கிற சப்தம் வைதிகக்கருமத்துக்குஅங்கமாகப்பிரயோகாதிகளில் பிரயோகிக்கப்படுகிறது. தத்ஸத் என்கிற சப்தங்கள் பூஜ்யவாசகமாகப் பிரயோகிக்கப்படுகின்றனவென்றறிக.

http://acharya.org

[இப்படி வேதங்களுக்கும் வைதிகங்களான யக்ஞாதிகளுக்கும் ஓம் என்னும் சப்தத்தோடு அன்வயம் சொல்லப்பட்டது. இதனால் ஓம் என்கிற சொல்லோடுகூடிய வேதத்தைத்தரிப்பதாலும் அப்படிப்பட்டயக்ஞாதிகர்மங்களைச் செய்கையாலும் பிராம்மணசப்தத்தாலே குறிக்கப்பட்ட திரைவர்ணிகருக்கும் ஓம் என்னும்சொல்லோடு அன்வயம் வருணிக்கப்பட்டதாகிறது.

(அ-கை.) இப்பொழுது இவைகளுக்கெல்லாம் தத் என்னுஞ் சொல்லோடு அன்வயங் கூறப்படுகின்றது.

ததித்யநபிஸந்தாய ஃபலம் யஜ்ஞதப:க்ரியா:|
தாநக்ரியாஶ்ச விவிதா: க்ரியந்தே மோக்ஷகாங்க்ஷிபி:|| ௨௫||

(௨௫) பலனைக்கோராமல் வேதாப்பியாஸம் யக்ஞம் தவம் தானம் முதலிய கிரியைகள் எவைகளானால் மோக்ஷாபேக்ஷிகளான திரைவர்ணிகர்களாலே செய்யப்படுமோ அவைகள் பிரம்மப்பிராப்திக்கு உபாயமாகும்படி பிரம்மவாசகமான † தத்சப்தத்தாலே குறிக்கத்தக்கவைகள்.

(அ - கை.) இப்படி வேதாத்தியயநம் யக்ஞம் முதலியவைகள் மோக்ஷத்துக்கு ஸாதநமாகும்பொழுது தத் என்னுஞ்சொல்லாலே கூறப்படுமென்று தத் என்னுஞ் சொல்லுக்கு அன்வயம் சொல்லப்பட்டது. திரைவர்ணிகரும் அப்படிப்பட்ட வேதாத்திய யநாதிகளை யநுஷ்டிக்கின்றமையால் அவர்களுக்கும் தத்சப்தத்தோடு அன்வயமுண்டென்றுஏர்ப்பட்டது. இப்பொழுது இவைகளுக்கெல்லாம் ஸத்சப்தத்தோடு அன்வயம் சொல்வதற்காக, உலகத்தில் ஸத்என்னுஞ்சொல்லுக்குப்பொருள்வழங்கும்படி யருளிச்செய்கிறார்.

ஸத்பாவே ஸாதுபாவே ச ஸதித்யேதத் ப்ரயுஜ்யதே|
ப்ரஶஸ்தே கர்மணி ததா ஸச்சப்த: பார்த்த யுஜ்யதே||௨௬||

(௨௬) அஹோபார்த்த! 'ஸத்' என்னும்சொல் லோகத்திலாகட்டும் வேதத்திலாகட்டும் இருக்குந்தன்மையிலும் ஸாதுத்தன்மையிலும் பிரயோகிக்கப்படுகின்றது. அப்படியே ஒரு புருஷனால் அநுஷ்டிக்கப்பட்ட லௌகிகமான நல்லகாரியங்களிலும் 'இது ஸத்கர்மம்' என்றுபிரயோகிக்கப்படுகிறது.

யஜ்ஞே தபஸி தாநே ச ஸ்திதி: ஸதிதி சோச்யதே|
கர்ம சைவ ததர்தீயம் ஸதித்யேவாபிதீயதே||௨௭||

(௨௭) ஆகையால் வைதிகர்களான திரைவர்ணிகர்கள் யக்ஞதானதவங்களில் இருப்பார்களில் அவ்விருப்பு நன்றாகையாலே ஸத் என்னப்படும்; அப்படிப்பட்ட திரைவர்ணிகர்களுக்காகச் செய்யப்படும் யக்ஞாதிகருமங்களும் ஸத் என்றேசொல்லப்படும். [ஆகையால் வேதங்களும் வேதிகக்கருமங்களும்

† ஸவ: க: கிம் யத்தத்பதமநுத்தமம் என்று தத் சப்தம் பிரம்மவாசகமென்றுமிடம் ஸஹஸ்ரநாமாதிகளில் பிரஸித்தம்.

http://acharya.org

பிராம்மணசப்தத்தாலே குறிக்கப்பட்ட த்ரைவர்ணிகரும், ஓம் தத் ஸத்என்கிற சப்தத்தோடு கூடியிருக்கையென்கிறலக்ஷணம் பொருந்தியிருக்கையால் அவைகளும் அவர்களும் அவேதங்களையும் அவைதிகர்களையுங் காட்டில்வேறுபட்டிருப்பவர்க ளென்றறியத்தக்கது.]

𑌅𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌹𑍁𑌤𑌂 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌤𑌪𑌸𑍍𑌤𑌪𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌚 𑌯𑌤𑍍।
𑌅𑌸𑌦𑌿𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌨 𑌚 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌨𑍋 𑌇𑌹 ௨௮॥

(௨௮) சிரத்தையின்றிச்செய்யப்படும் ஹோமம் முதலிய கருமம் சாஸ்திரோக்தமே யாகிலும் அஸத் என்னப்படும். ஏன்? அது மோக்ஷத்துக்கு மாகாது; ஸம்ஸாரத்துக்கு வேண்டும் பயனையுந்தாராது. [ஆகையால் அஸத் என்றபடி.]

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,
பதினேழாவது அத்யாயம் முற்றிற்று.

ஸ்ரீ:.
ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

பதினெட்டாவது அத்யாயம்.

அவதாரிகை.

ஈரிரண்டு அத்தியாயங்களாலும் § அப்பியுதயத்தையும் மோக்ஷத்தையும் அளிப்பது வைதிகமான யக்ஞம் தானம் தவம் முதலியவைகளேயல்லாமற்றல்லவென்றும், வைதிகக்கருமத்துக்கு ஸாமான்யலக்ஷணம் பிரணவத்தோடு ஸம்பந்தமென்றும், அதில் மோக்ஷஸாதநத்துக்கு ஸாம்ஸாரிகஸேக்ஷமஸாதநத்தைக்காட்டிலும் பேதம் தத் ஸத் என்னுஞ் சொற்களைக்கொண்டுகுறிப்பிடுகையென்றும், மோக்ஷஸாதகமான கர்மம் பலாபேக்ஷையற்ற யக்ஞாதிகளென்றும், அவைகளை யாரம்பிக்கும்படியோ ஸத்துவகுணத்தின் மிகுதியால் வருமென்றும், ஸத்துவகுணத்தின் விருத்தியோ ஸாத்விகமான ஆகாரஸேவையாலுண்டாக வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. இப்பொழுது மோக்ஷஸாதநமாகச் சொல்லப்பட்ட தியாகத்துக்கும் ஸன்னியாஸத்துக்கும் ஐக்கியமும், தியாகத்தின் ஸ்வரூபமும், எந்தகருமமும் பகவானால் செய்யப்படுகிறதென்று கர்திருத்வத்தை ஸர்வேசுவரனிடத்தில் அநுஸந்திக்கையும், ஸத்துவரஜஸ்தமஸ்ஸுக்களின்காரியத்தைவர்ணித்து அதனால் ஸத்துவகுணத்தை அவசியம் கைப்பற்றவேண்டுமென்கிற விஷயமும், பகவதாராதநரூபமாகச் செய்யப்படும் தனதுவர்ணத்துக்கேற்ற கர்மங்கள் பரமபுருஷனையடைவிக்கு மென்கிறவிஷயமும், கீதாசாஸ்திரம் முழுதனுக்கும் ஸாரமான அர்த்தம்பக்தியோகமென்கிற விஷயமும், இவையாவும் சொல்லப்படுகின்றன.

---

§ அப்பியுதயம் - மோக்ஷத்தை யொழிந்தமற்ற புருஷார்த்தங்கள்.

http://acharya.org

அதில் தியாகமென்பதும் ஸன்னியாஸமென்பதும் ஒன்றா வேறா! என்று நிச்சயிக்கும் பொருட்டும், அதின் ஸ்வரூபத்தை நிச்சயிக்கும்பொருட்டும் அர்ச்சுநன் கேட்கிறான்.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚 ‖ 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌵𑍇𑌦𑌿𑌤𑍁𑌮𑍍 । 𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌯 𑌚 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶 𑌪𑍃𑌥𑌕𑍍𑌕𑍇𑌶𑌿𑌨𑌿𑌷𑍂𑌦𑌨 ‖௧‖

(௧) ஓ பகவானே! 𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌜𑌯𑌾 𑌧𑌨𑍇𑌨 𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨𑍈𑌕𑍇 𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑌾𑌨𑌶𑍁𑌃...... 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌯𑌤𑌯𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌃 । 𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇 𑌤𑍁 𑌪𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌪𑌰𑌾𑌮𑍃𑌤𑌾𑌃 𑌪𑌰𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 இத்தியாதிகளில் தியாகமும்ஸந்நியாஸமும் மோக்ஷஸாதநங்களென்று ஓதப்படுகின்றனவன்றோ? அந்த ஸந்நியாஸத்தினுடையவும் தியாகத்தினுடையவும் உண்மையைத் தனியேஅறியவாசைப்படுகிறேன். [என்றால் இது அபிப்பிராயம்:—ஸந்நியாஸம் தியாகம்என்கிறஇரண்டு சொற்களுக்கும் பொருள் தனித்தனியுண்டா! இல்லையென்று ஒரேபொருளா! தனிப்பொருளுண்டானால் அப்பொழுது அவைகளின் ஸ்வரூபத்தைத் தனித்தனியேயருளிச்செய்யவேண்டும்; இரண்டும் ஒன்றாயிருந்தாலும் அப்படியே யருளிச்செய்யவேண்டும் என்று அபிப்பிராயம்.]

(அ-கை.) அநந்தரம் "இவ்விரண்டுக்கும் ஸ்வரூபம்ஒன்றுதான்; அதாவது-இப்படிப்பட்டது" என்று நிச்சயிப்பதற்காக அதுவிஷயத்தில் வாதிகள் செய்யும் ஆக்ஷேபத்தைக் காட்டா நின்றுகொண்டு பகவான் அருளிச்செய்கிறார்

𑌶𑍍𑌰𑍀𑌭𑌗𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 ‖ 𑌕𑌾𑌮𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌂 𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌕𑌵𑌯𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃 । 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌤𑍍𑌯𑌾𑌗𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑌂 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌾𑌃 ‖௨‖

(௨) சில வித்துவான்கள் காமியகருமத்தைச் சுத்தமாய்விட்டுவிடுவதுதான் ஸந்நியாஸமென்பார்கள். சில ஸமர்த்தர்கள் நித்தியம் நைமித்திகம் காமியம் என்கிறவெல்லாக் கர்மங்களிலும் பலத்தையபேக்ஷிக்காமலிருக்கையேதான் மோக்ஷசாஸ்திரங்களில் சொல்லுகிற * த்யாக சப்தத்துக்குப் பொருள் என்று விளம்புவர்கள்.

---

* இங்கே சாஸ்திரோக்தமான த்யாகம், காம்ய கர்மங்களைச் சுத்தமாய்விடுகையென்றும் ஸர்வகர்மங்களிலும் பலாபெக்ஷையற்றிருக்கையென்றும் விவாதத்தைக்காட்டத் தொடங்கினவர்,ஓரிடத்தில் ஸந்நியாஸசப்தத்தையும் மற்றோரிடத்தில் த்யாகசப்தத்தையும் பிரயோகித்தார். இதனால் த்யாகஸந்நியாஸ சப்தங்களுக்குப் பொருள் ஒன்றேயென்று அங்கீகரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அப்படியே 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌂 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌤𑍍𑌯𑌾𑌗𑍇 𑌭𑌰𑌤𑌸𑌤𑍍𑌤𑌮 என்று த்யாகசப்தத்தைக்கொண்டே நிச்சயஞ்சொல்லுகையாலும் 𑌨𑌿𑌯𑌤𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 । 𑌮𑍋𑌹𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑌾𑌮𑌸𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ‖ 𑌅𑌨𑌿𑌷𑍍𑌟𑌮𑌿𑌷𑍍𑌟𑌂 𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌫𑌲𑌮𑍍 । 𑌭𑌵𑌤𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌗𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌨 𑌤𑍁 𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌾𑌂 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 என்று ஒருசொல்லுக்கு ஒரு சொல்லைப்பதிலாகச் சொல்லக்கண்கையாலும் அவ்விரண்டுக்கும்பொருள் ஒன்றெனத் தோற்றுகிறதென்று நிச்சயிக்கப்படுகிறது.

http://acharya.org

த்யாஜ்யம் தோஷவதித்யேகே கர்ம ப்ராஹுர்மநீஷிண:|

(உ-உ) கபிலமதஸ்தர்களும் அம்மதத்தையநுஸரித்த சில வைதிகர்களும், யக்ஞம் முதலியகருமங்கள் ராகம்முதலிய தோஷங்களைப்போல் பந்தஹேது வாகையால் அவைகளையெல்லாம் மோக்ஷார்த்தியானவன் முதலே விடவே வேண்டுமென்று சொல்வர்கள். [பந்தஹேது - கட்டுக்குடல்.]

யஜ்ஞதாநதப:கர்ம ந த்யாஜ்யமிதி சாபரே ||ங||

(ங) இப்படியிருக்க சில பண்டிதர்கள் யக்ஞாதிகர்மங்களைவிட லாகாதென்பர்கள்.

நிச்சயம் ச்ருணு மே தத்ர த்யாகே பரதஸத்தம|

(ஙஉ) இப்படி வாதிகளால் ஸந்தேஹிக்கப்பட்ட தியாகவிஷயத்திலுண்டான நிச்சயத்தைச் சொல்லுகிறோம் கேள்.

த்யாகோ ஹி புருஷவ்யாக்ர த்ரிவிதஸ்ஸம்ப்ரகீர்த்தித:||ச||

(ச) வைதிகக்கர்மங்களைச் செய்யும்பொழுது பலத்தின் விஷயமாயும் கர்மத்தின்விஷயமாயும் கர்த்தாவின் விஷயமாயும் தியாகம் மூன்றுவிதம் என்று § முன்னமே நம்மால் சொல்லப்பட்டதன்றோ?

யஜ்ஞதாநதப:கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத்|

(சஉ) யக்ஞம் தானம் தவம்முதலிய வைதிகக்கருமத்தை மோக்ஷார்த்தியானவன் ஒருக்காலும் விடக்கடவனல்லன்; மற்றப்படி இவன் பிரயாணமா மளவும் நாடோறுஞ் செய்தேதீரவேண்டும்.

(அ-கை.) ஏனெனில்?

யஜ்ஞோ தாநம் தபச்சைவ பாவநாநி மநீஷிணாம்||ரு||

(ரு) யக்ஞம் தானம் தவம்முதலிய வர்ணாச்சிரமத்தைச்சேர்ந்த கர்மங்களெல்லாம் மநநசீலருக்குப் பரிசுத்திகரங்கள். [என்றால்:—வாழ்நாளுள்ளளவும் உபாஸநஞ்செய்கின்ற மோக்ஷார்த்திகளுக்கு உபாஸநத்தைக் கைபுகுந்தவொட்டாமல் விரோதிக்கின்ற பழையகர்மங்களைப் போக்கடிக்குமவைகளென்றபடி.]

ஏதாந்யபி து கர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலாநி ச|
கர்தவ்யாநீதி மே பார்த்த நிச்சிதம் மதமுத்தமம்||சா||

§ மயி ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்யாத்யாத்மசேதஸா | நிராசீர்நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர: என்றுகர்மத்தால்வரும் சுவர்க்கம் முதலியபலம் எனக்குவேண்டாமென்பது பலத்தியாகம்; என்பயனுக்காக இந்தகர்மம் என்னால் செய்யப்பட்டது என்கிற அபிமானத்தை யொழிக்கை கர்மத்தியாகம்; ஸர்வேசுவரனேகர்த்தாவென்று மதையோர்ந்து தான் கர்த்தாவல்லனென்று மதிக்கைகர்த்தாத்தியாகம்; என்று முன்னம் சொல்லப்பட்டதென்றறிக.

http://acharya.org

(௬) இப்படி உபாஸகர்களுக்கு யக்ஞாதிகர்மங்கள் பரிசுத்திகரங்களாகையாலே உபாஸநம்போலே இந்த யக்ஞாதிகர்மங்களும் நம்முடைய ஆராதநரூபங்களென்று நினைத்து கர்மத்தில் பற்றையும் அதன் பலனையும்விட்டு நாள்தோறும் பிரயாணமாமளவும் உபாஸநம் தலைக்கட்டுவதற்காக மோக்ஷகாமன் செய்யவே வேண்டுமென்பது நம்முடைய முடிவான ஸித்தாந்தம்.

𑌨𑌿𑌯𑌤𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋 𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇।
𑌮𑍋𑌹𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌸𑍍𑌤𑌾𑌮𑌸𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃॥௭॥

(௭) நித்திய நைமித்திகங்களான மஹாயக்ஞாதிகளை விடுவதென்பது † கூடாது. ஞாநத்தைவிருத்திபண்ணித் தருகின்றகர்மங்களை (இவை கட்டுப்படுத்துமவைகளென்று) அக்ஞாநத்தால் விட்டுவிடுவது ‡ தாமஸத்தியாகமென்னப்படும்.

𑌦𑍁𑌃𑌖𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 𑌯𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌯𑌕𑍍𑌲𑍇𑌶𑌭𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍।
𑌸 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌤𑍍𑌯𑌾𑌗𑌂 𑌨𑍈𑌵 𑌤𑍍𑌯𑌾𑌗𑌫𑌲𑌂 𑌲𑌭𑍇𑌤𑍍॥௮॥

(௮) 'கர்மமானது பரம்பரையாக மோக்ஷத்தைச் சாதிக்குமேயாகிலும் துக்கரூபமான திரவிய ஸம்பாதநத்தாலே ஸாதிக்கவேண்டிய தாகையாலும், மிகவும் ஆயாஸரூபமான காயக்கிலேசத்தையுண்டுபண்ணுகையாலும் மன

† ஏனெனில்:—𑌶𑌰𑍀𑌰𑌯𑌾𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌚 𑌤𑍇 𑌨 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑍇𑌦𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 என்று சரீரதாரணம் ஸித்திக்கமாட்டாதாகையாலே விடக்கூடாது. சரீரத்தை யக்ஞசேஷத்தாலே வளர்த்துவந்தால் அது நல்ல ஞாநத்தையுண்டாக்கும்; அப்படியக்ஞசேஷமல்லாதவைகளாலே சரீரத்தைத்தரித்து மனதை வளர்த்து வந்தால் 𑌤𑍇 𑌤𑍍𑌵𑌘𑌂 𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑍇 𑌪𑌾𑌪𑌾 𑌯𑍇 𑌪𑌚𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 என்று விபரீதக்ஞாநத்தை யுண்டுபண்ணுவிக்கும். 𑌅𑌨𑍍𑌨𑌮𑌯𑌂 𑌹𑌿 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌮𑌨𑌃 என்று மனது அன்னத்தாலன்றோ வளருகிறது? 𑌆𑌹𑌾𑌰𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃। 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌲𑌮𑍍𑌭𑍇 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑌃॥ என்று பிரம்மஸாக்ஷாத்காரரூபமான ஞாநம் ஆஹாரசுத்தியைப்பொறுத்ததென்று ஓதப்படுகிறது. ஆகையால் மஹாயக்ஞம்முதலிய நித்தியநைமித்திககர்மம் பிரயாணமாமளவும் பிரம்மக்ஞாநத்துக்காக வேண்டியிருக்கின்றபடியால் அதை விடலாகாது.

‡ தமோகுணத்தால்வரும் தியாகத்தைத் தாமஸமென்கிறது. தியாகம் தமஸின்காரியமான அக்ஞாநத்தால்வருமதாகையால் தமோகுணத்தால்வருமதென்கிறது. தமஸ்ஸு அக்ஞாநத்துக்குமூலமென்கிறவிஷயம் 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌮𑍋𑌹𑍌 𑌤𑌮𑌸𑍋 𑌭𑌵𑌤𑍋𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍇𑌵 𑌚 என்கிறவிடத்தில் சொல்லப்பட்டது. அக்ஞாநமாவது ஞாநத்துக்கு விரோதியான விபரீதஞ்ஞாநம். இப்படியே 𑌅𑌧𑌰𑍍𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑌮𑌿𑌤𑌿 𑌯𑌾 𑌮𑌨𑍍𑌯𑌤𑍇 𑌤𑌮𑌸𑌾𑌵𑍃𑌤𑌾। 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌂𑌶𑍍𑌚 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌾 𑌪𑌾𑌰𑍍𑌥 𑌤𑌾𑌮𑌸𑍀 என்று மேலே சொல்லப்படுகிறது. ஆகையால் நித்தியநைமித்திகாதி கர்மத்தை விடுவது விபரீதக் ஞாநத்தால்தானென்று தாத்பரியம்.

http://acharya.org

திற்கு வருத்தத்தையுண்டாக்கும்' என்று பயந்தவனாய்'யோகஸித்திக்காக ஞாநாப்யாஸந்தான் செய்யத்தக்கது'என்று யாவனொருவன் மஹாயஜ்ஞந்தொடக்கமான ஆச்ரமகர்மத்தை விட்டுவிடுகிறானோ அவன் ரஜோகுணத்தால் வந்தத்தியாகத்தைச் செய்தவனாகிறான். அந்தத்தியாகம் § உண்மையான சாஸ்திரார்த்தமல்லாமையாலே அவன் தியாகத்துக்குப் பயனான ஞாநோத்பத்தியையடையமாட்டான். [கர்மமானது திருஷ்டத்வாரமாய் மனதுக்குத்தெளிவையுண்டாக்குமதன்று; மற்றப்படி எம்பெருமானுடைய முகோல்லாஸத்தைப் பிறப்பித்து அவ்வழியாலே என்றறிவது.]

கார்யமித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதேऽர்ஜுந|
ஸங்கம் த்யக்த்வா பலஞ்சைவ ஸ த்யாகஸ் ஸாத்த்விகோ மத꞉ ||௯||

(௯) நித்யநைமித்திகமான மஹாயஜ்ஞம்முதலிய வர்ணாச்ரமகர்மம் எம்பெருமானுடைய ஆராதநரூபமாகையாலே அதைச் செய்வதே பயனென்றுமதித்து கர்மத்தில் எனதென்கிற எண்ணத்தையும் கர்மப்பயனையுங் கைவிட்டு கர்மத்தைச்செய்வது, ஸாத்விகத்தியாகமெனப்படும். [அதாவது:—¶ ஸத்வமடியாகப்பிறக்கும் உண்மையான சாஸ்திரார்த்த ஞானத்தால் வந்தத்தியாகமென்றபடி.]

ந த்வேஷ்ட்யகுசலம் கர்ம குசலே நாநுஷஜ்ஜதே|
த்யாகீ ஸத்த்வஸமாவிஷ்டோ மேதாவீ சிந்நஸம்சய꞉ ||௧0||

(௧0) இப்படி ஸத்வத்தையடைந்து வஸ்துவை உள்ளபடியே யறிந்து அதனால் ஸகல ஸம்சயங்களுமற்று கர்மத்தில் பற்றையும் கர்மபலத்தையும் தான் கர்த்தாவென்கிற எண்ணத்தையும் விட்டவன் * தீயகருமத்தை வெறுக்கவும் நல்ல சருமத்தில் பொருந்தவும்மாட்டான்.

---

§ உண்மையான சாஸ்திரார்த்தமல்லவென்கிற விஷயம் அயதாவத் ப்ரஜாநாதி புத்திஸ்ஸா பார்த்த ராஜஸீ என்று மேலே அருளிச்செய்யப் போகிறார்.

¶ ஸத்துவந்தான் உண்மையான சாஸ்திரார்த்தஞானத்தைப் பிறப்பிக்குமென்பதிடம் ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் என்று முன்னும் சொல்லப்பட்டது. ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச கார்யாகார்யே பயாபயே| பந்தம் மோக்ஷஞ்ச யா வேத்தி புத்திஸ்ஸா பார்த்த ஸாத்த்விகீ என்று மேலும் சொல்லப்படும்.

* தீயகர்மமாவது - அநிஷ்ட பலத்தைத்தருங் கர்மம். நல்ல கர்மமாவது இஷ்டமாயிருக்கிற சுவர்க்கம் புத்திரன் பசு அன்னம் முதலிய பலத்தைத்தருமது. எந்த கர்மத்திலும் எனதென்கிற அபிமானமில்லாமையாலும் பிரமத்தையொழிந்த மற்ற பலங்களைக் கைவிட்டமையாலும், நான் செய்தேன் என்கிற கர்திருத்வத்தை விட்டமையாலும் அவைகளைச் செய்யுமிடத்தில் பிரீதித்துவேஷங்களிரண்டுஞ் செய்யமாட்டான். இங்கே அநிஷ்டபலத்

http://acharya.org

(அ-கை.) இதையே அருளிச்செய்கிறார்.

ந ஹி தேஹப்ருதா ஶக்யம் த்யக்தும் கர்மாண்யஶேஷத: |
யஸ்து கர்மபலத்யாகீ ஸ த்யாகீத்யபிதீயதே ||௧௧||

(௧௧) சரீரத்தைத் தரித்திருக்கிறவனாயில் கர்மங்களை முழுவதும் விடுவதென்றால் ஸாத்தியமான விஷயமன்று. [ஏன்? தேஹத்தைத் தரிப்பதற்காகப் புசித்தல் பானம்செய்தல் முதலிய கர்மங்களும் மற்றும் அதைச்சேர்ந்த கர்மங்களும் ஒழிக்கப்போகாமையாலே அதற்காக மஹாயக்ஞம் முதலிய அநுஷ்டானமும் ஒழிக்கப்போகாது.] ஆகையால் எவனாவல் அந்த மஹாயக்ஞம் முதலியவற்றில் பலனைக்கைவிடுகிறானோ அவனே த்யாகேனைகே அம்ருதத்வமானஶு: இத்தியாதி சாஸ்திரங்களில் தியாகியென்னப்படுவான்.

(அ-கை.) நல்லது, அக்நிஹோத்திரம் தரிசம் பூர்ணமாஸம் ஜியோதிஷ்டோமம் முதலியவைகளும் மஹாயக்ஞாதிகளும் சுவர்க்கம் முதலிய பலன்களோடு ஸம்பந்தித்திருப்பதாக சாஸ்திரங்களால் விதிக்கப்படுகின்றன; நித்திய நைமித்திகங்களுங்கூட ப்ராஜாபத்யம் க்ருஹஸ்தாநாம் இத்தியாதியாகப் பலனோடு ஸம்பந்தப்பட்டிருப்பதாகவேவிதிக்கப்படுகின்றன; ஆகையால் அந்தபலனைச் சாதிப்பதே ஸ்வபாவமானஅக்கர்மங்களையநுஷ்டிக்கும்பக்ஷத்தில்இவன் பலத்தைக் கோராமற்போனாலும்(விதைவிதைத்தாற்போல்)அவை இஷ்டாநிஷ்டரூபமான பலன்களைத்தந்தல்லதுமீளாவன்றே? ஆகையால்மோக்ஷவிரோதிகளான பலன்களைத் தருகின்ற கருமத்தை மோக்ஷார்த்தி யநுஷ்டிக்கக்கடவனல்லன்; என்றுவரும் சங்கைக்கு உத்தரம் அருளிச்செய்கிறார்.

அநிஷ்டமிஷ்டம் மிஶ்ரம் ச த்ரிவிதம் கர்மண: பலம் |
பவத்யத்யாகினாம் ப்ரேத்ய ந து ஸந்ந்யாஸினாம் க்வசித் ||௧௨||

(௧௨) அநிஷ்டமான நரகாதிகளென்றும், இஷ்டமான சுவர்க்காதிகளென்றும், அனிஷ்டத்தோடு கலந்த புத்திரன் பசுமுதலியவைகளென்றும் கர்மத்துக்குப் பயன் மூன்றுவிதம். இந்தப்பயன் கர்த்ருத்வத்தையும் எனதென்கிற வபிமானத்தையும் கருமப்பயனையும் கைவிடாதவர்களுக்கு,கர்மாநுஷ்டானம் செய்தவுடனே பலிக்கின்றது. கர்த்ருத்வாதிகளைவிட்டவருக்கோ ஒருக்காலும்(மோக்ஷவிரோதியான)இப்பயனுண்டாகமாட்டாது.

[இப்படி கர்மங்களைச் செய்துகொண்டு கர்திருத்வாதிகளை விடுவதுதான் சாஸ்திரஸித்தமான ஸந்நியாஸம், இதுதான் தியாகம்என்று சொல்லப்பட்டது.]

தைத்தரும் கர்மமாவது, தன்னாலும் அறியாமல் செய்யப்பட்ட பாபகர்மம். அதொழியாதபோது - நாவிரதோ துஶ்சரிதாந்நாஶாந்தோ நாஸமாஹித: | நாஶாந்தமானஸோ வாபி ப்ரஜ்ஞானேனைநமாப்னுயாத் என்கிறபடியே ஞானோத்பத்திக்கு விரோதமுண்டாம். ஆகையால் கர்மத்தில் கர்திருத்வாதித்தியாகம் சாஸ்திரீயத்தியாகமேயல்லது ஸ்வரூபத்தியாகமல்ல.

http://acharya.org

(அ-கை.) இப்பொழுது புருஷோத்தமனாய் அந்தரியாமியான பகவானே கர்த்தாவென்று நினைத்து தன்னைக் கர்த்தாவல்லனென்று நினைக்கும்படியை யருளிச்செய்கிறார். [இப்படிநினைத்தபோதே பலத்திலும் கர்மத்திலும் எனதென்கிற அபிமானம் ஒழிந்துபோகிறபடியால் பரமபுருஷனே தனது ஜீவனைக்கொண்டு தனது கரணகளேபரப் பிராணங்களாலே தனது லீலையென்னும் பயனுக்காகக் கர்மங்களை யாரம்பிக்கிறானாகையால் ஜீவனைச்சேர்ந்த (பசிதீருகைமுதலிய) பயனும் அதன் ஸாதநமான கர்மமும் பரமபுருஷாதீநமென்பது தத்த்வம்.]

பஞ்சைதாநி மஹாபாஹோ காரணாநி நிபோத மே।
ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தாநி ஸித்தயே ஸர்வகர்மணாம்॥ கங ॥

(கங) வஸ்துவை உள்ளபடியே அறிவதான வைதிகபுத்தியால் ஏற்பட்ட ஸித்தாந்தத்தில், ஸர்வகர்மங்களையும் உண்டுபண்ணுமவைகளாகச் சொல்லப்பட்ட இந்த ஐந்துகாரணங்களும் * நம்மிடத்தினின்றும் வந்ததாக நிர்ணயிக்கப்பட்டனவென்று நினை.

(அ-கை.) அவ்வைந்துமெவையென்ன அருளிச்செய்கிறார்.

அதிஷ்டாநம் ததா கர்த்தா கரணம் ச ப்ருதக்விதம்।
விவிதாஶ்ச ப்ருதக் சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம்॥ கச ॥
ஶரீரவாங்மநோபிர்யத் கர்ம ப்ராரபதே நர:।
ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ:॥ கரு ॥

(கச-கரு) சாஸ்திரத்தில் ஸித்தமானதும் நிஷித்தமானதுமாய், சரீரம் வாக்கு மனது என்கிற முக்கரணங்களாலுஞ் செய்யப்படுமவையாயுள்ள ஸகல கர்மத்துக்கும் இவ்வைந்தும் ஹேதுக்கள். எவையெனில் - (மஹாபூதங்களின் தொகையான) சரீரம், கர்த்தாவென்கிற § ஜீவாத்மா, பலவித வியாபாரங்களைச்செய்யும் (வாக்கு † முதலிய) கரணம், நாநாவிதவிருத்தியையும்செய்கின்ற (பிராணம் அபாநம் வியாநம் உதாநம் ஸமாநம் என்று ஐந்துவிதமான) வாயு ஆகிய விந்நான்கும், அந்தரியாமியான பரமாத்மாவும் ஆக இவ்வை

---

* ய ஆத்மநி திஷ்டந்நாத்மநோऽந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா ஶரீரம் ய ஆத்மாநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:॥ அந்த:ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா இத்தியாதிவாக்கியங்களால் பிறக்கும் வைதிகபுத்தியானது, சரீரம் இந்திரியம் பிராணன் ஜீவாத்மா என்னுமிவைகளை உபகரணமாகக்கொண்ட பரமாத்துமாவேதான் கர்த்தாவென்று நிர்ணயிக்கின்றது.

§ ஜீவாத்மா கர்த்தாவென்கிற விஷயம் - ஜ்ஞோऽத ஏவ கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத் என்கிற ஸூத்திரங்களில் உபபாதிக்கப்பட்டுளது.

† வாக்கு கைகள் கால்கள் ஆஸநம் உபஸ்தம் மனது என்று ஆறுவிதமானகரணமுமென்றபடி.

http://acharya.org

ந்தும், கர்மம் ஸித்திக்கும் விஷயத்தில் காரணமாகின்றன. [என்றால் - சரீராதி கரணஸஹிதனைக்கொண்டு பரமாத்மா கர்த்தா § வாகிறானென்றபடி.]

𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌂𑌸𑌤𑌿 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌕𑍇𑌵𑌲𑌂𑌤𑍁𑌯𑌃|
𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌕𑍃𑌤𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨 𑌸𑌪𑌶𑍍𑌯𑌤𑌿𑌦𑍁𑌰𑍍𑌮𑌤𑌿𑌃||௧௬||

(௧௬) இப்படி ஜீவாத்மாவுக்கு கர்திருத்வமானது, உண்மையில் பரமாத்மாவின் அனுமதியை முன்னிட்டிருக்கிறதென்று ஏர்ப்பட்டபின்பு, அந்தந்த கர்மத்துக்கும் கேவலம் ஜீவாத்மாவே கர்த்தாவாகிறானென்று எவன் நினைக்கிறானோ அவன் துர்ப்புத்தி. ஆனதினால் அவன் வஸ்துவை உள்ளபடியறிந்தவனல்லன்.

𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌹𑌙𑍍𑌕𑍃𑌤𑍋 𑌭𑌾𑌵𑍋 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇|
𑌹𑌤𑍍𑌵𑌾𑌪𑌿𑌸𑌇𑌮𑌾𑌁𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌨𑌹𑌨𑍍𑌤𑌿𑌨𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇||௧௭||

(௧௭) பரமபுருஷன் கர்த்தாவென்கிற நினைவினால் யாவனொருவன் "நான் செய்கிறேனென்று" தன்னைக் கர்த்தாவாக நினைக்கமாட்டானோ, எவனுக்கானால் "இந்தகர்மமும் இதின் பயனும் என்னைச்சேர்ந்ததல்ல" என்று கர்மத்திலும் அதின் பலத்திலும் பற்றிருக்கமாட்டானோ, அவன் போர்க்களத்தில் இந்த பீஷ்மாதிகளைப்போல் வரும்ஸகலமானபெயர்களையுங் கொன்று

§ கர்திருத்வம் பரமாத்மாதீனமென்கிற விஷயம் 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚𑌾𑌹𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑍋𑌹𑌨𑌞𑍍𑌚 என்று கீழே சொல்லப்பட்டது. 𑌅𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 [illegible]| [illegible] என்றுமேலும்சொல்லப்படும். ஜீவாத்மாவின் கர்திருத்வமும் பரமாத்மாதீனமென்கிற விஷயம் 𑌪𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍇𑌃 என்கிற ஸூத்திரத்தில்உபபாதிக்கப்பட்டது. ஜீவாத்மாவின் கர்திருத்வம் பரமாத்மாதீனமென்றால்-ஜீவாத்மாவுக்குக் கர்மஞ்செய்வதில் பற்றில்லாமையாலே விதியும் விலக்குமான சாஸ்திரம் வியர்த்தமாகாதோவென்றால்-இந்த ஆக்ஷேபத்தை 𑌕𑍃𑌤𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌹𑌿𑌤𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑌿𑌦𑍍𑌧𑌾𑌵𑍈𑌯𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑌃 என்று ஸூத்திரகாரரேபரிஹரித்தார். அதனால் என்ன ஏர்ப்பட்டது? பகவானாலளிக்கப்பட்டு அவனை ஆதாரமாகக்கொண்டு அவனாலளிக்கப்பட்ட சக்தியுடன்கூடிய கரணகளேபராதிகளைக்கொண்டு அவனை ஆதாரமாகக்கொண்ட ஜீவாத்மாவானவன், அவனாலளிக்கப்பட்ட சக்தியுடன்கூடி தன் இச்சையினால் கரணாதிகளையும்அதிஷ்டித்துப் பிரயத்தனத்தையும் செய்கிறான்; அவனுக்குள்ளிருக்கின்ற பரமாத்மாவோ கேவலம் அநுமதிமாத்திரங் கொடுத்துக்கொண்டு பிரவர்த்திப்பிக்கிறான்; ஆகையால் பெரியதொரு கற்பாறை மரம்முதலியவைகளை, பத்துபெயர்கள் சேர்ந்து புரட்டினால் அதில்ஒவ்வொருத்தரும்ஹேதுவாய்க்கொண்டுவிதியையும்விலக்கையும்அடைவதுபோல் ஜீவாத்மாவும் தன் புத்தியைக்கொண்டுப் பிரவ்ருத்திக்கு ஹேதுவாகின்றமையால் அவன்விஷயத்தில் சாஸ்திரம்பயன்படுமென்பதாம்.

http://acharya.org

லும் அவன் கொல்பவனுமல்ல; அந்தகர்மத்தால் அவன் கட்டுப்படவுமாட்டான். [என்றால் அதன்பயனை யநுபவிக்கமாட்டானென்றபடி.]

(அ-கை.) இப்படி தனக்குக்கர்த்ருத்வாதிகளில்லையென்கிற நினைவெல்லாம் ஸத்துவகுணம் விருத்தியானால் மாத்திரந்தான் பிறக்கும்; ஆகையால் ஸத்துவகுணத்தைப் பற்றவேண்டும், என்று அறிவிக்கைக்காகக் கர்மத்தில் ஸத்துவம் முதலிய குணங்களால் வரும் விசேஷத்தை விஸ்தரிப்பதாகத் திருவுள்ளம்பற்றி கர்மவிதியின் விதத்தை யருளிச்செய்கிறார்.

ஜ்ஞாநம் ஜ்ஞேயம் பரிஜ்ஞாதா த்ரிவிதா கர்மசோதநா।
கரணம் கர்ம கர்த்தேதி த்ரிவித: கர்மஸங்க்ரஹ: ॥ கஅ ॥

(கஅ) செய்யவேண்டுங் கர்மத்தை யறியும் ஞானம், செய்யவேண்டுங் கர்மம், அதை யறியுமவன் என்று கர்மவிதியானது மூன்றுவிதம்; [என்றால் - அறிவு, அறியப்படுமது, அறியுமது என்று இம்மூன்றுடன் கூடியது ஜோதிஷ்டோமம் முதலிய கர்மங்களின் விதி என்றபடி.] அதில் அறியவேண்டுங் கர்மம், * கரணமென்றும் கர்மமென்றும் கர்த்தாவென்றும் மூன்றுவிதமாய் ஸங்கிரஹம் பண்ணப்பட்டிருக்கிறது.

ஜ்ஞாநம் கர்ம ச கர்த்தா ச த்ரிதைவ குணபேதத:।
ப்ரோச்யதே குணஸங்க்யாநே யதாவச்ச்ருணு தாந்யபி ॥ ககூ ॥

(ககூ) செய்யவேண்டுங் கர்மத்தையறியும் ஞானம், செய்யப்படுங்கர்மம், அதை அநுஷ்டிப்பவன் ஆக இம்மூன்றும் ஸத்துவாதிகுணங்களுக்குத்தக்கபடி ஒவ்வொன்றும் மூன்றுபடியாயிருக்கிறதென்று குணகாரியங்களைக்கணக்கிடும் முறையில் சொல்லப்படுகிறது; அவைகளையும் உள்ளபடியே சொல்லுகிறோம் கேள்.

ஸர்வபூதேஷு யேநைகம் பாவமவ்யயமீக்ஷதே।
அவிபக்தம் விபக்தேஷு தஜ்ஜ்ஞாநம் வித்தி ஸாத்த்விகம் ॥ உ0 ॥

(உ0) பிராம்மணனென்றும் க்ஷத்திரியனென்றும், பிரம்மசாரியென்றும் கிரஹஸ்த்தனென்றும் இப்படி நாலுவிதமாய்ப் பிரிக்கப்பட்டு கர்மாதிகாரிகளாயிருக்கின்ற ஸகலபூதங்களிலும் 'ஆத்மாவென்னும் பாவபதார்த்தம், பிராம்மணாதி பேதங்களுக்குத்தக்கபடி பிரிக்கப்படாமல் ஞானமே வடிவாயும் அழிவற்றதாயும் பலனைப்பெறுவதற்குத் தகாததாயும் இருக்கிறதென்று, எந்த ஞானமானால் கர்மஞ்செய்யும்பொழுதே யறியுமோ அது ஸாத்துவிகஞானமெனப்படும்.

ப்ருதக்த்வேந து யஜ்ஜ்ஞாநம் நாநாபாவாந் ப்ருதக்விதாந்।
வேத்தி ஸர்வேஷு பூதேஷு தஜ்ஜ்ஞாநம் வித்தி ராஜஸம் ॥ உக ॥

---

* கரணம்-ஸாதகமான திரவ்யம் முதலியன. கர்மம்-யோக முதலியன. கர்த்தா - அநுஷ்டிப்பவன்.

http://acharya.org

(உக) பிராம்மணன் முதலான ஸகல பூதங்களும் பிராம்மணாதிபேதங்களாலே பிரிக்கப்பட்டிருப்பதுபோல அவற்றிலுள்ள ஆத்மாக்களும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டு பலனை யநுபவிப்பதற்கு யோக்கியங்களாக விருக்கின்றனவென்று எந்த ஞானமானால் கருமாநுஷ்டானவேளையில் அறியுமோ அந்தஞ்ஞானம் ராஜஸஞ்ஞானமென்னப்படும்.

யத்து க்ருத்ஸ்நவதேகஸ்மிந் கார்யே ஸக்தமஹைதுகம்|
அதத்த்வார்த்தவதல்பஞ்ச தத்தாமஸமுதாஹ்ருதம்||உஉ||

(உஉ) எந்த ஞானமானால் மிகவும் அற்பபலன்களைத்தரவல்ல பிரேதம் பூதம் முதலியவைகளை யாராதிப்பதற்காகச் செய்யுங் கருமத்தை நம்பிக்கொண்டு இதுவே ஸகல பலன்களையுங் கொடுக்குமென்று பற்றிக்கிடக்குமோ, அந்த பொய்யறிவைத் தாமஸஞ்ஞானமென்பர்கள் பெரியோர்.

(அ-கை.) இவ்வாறு செய்யவேண்டுங் கருமத்தை யறியும் ஞானமானது கர்மாதிகாரியின் அம்சத்துக்குத்தக்கபடி மூவகையென்று அருளிச்செய்து, செய்யப்படுங் கருமமும் குணத்துக்குத்தக்கபடி மூன்றுவிதமென்பதை யருளிச்செய்கிறார்.

நியதம் ஸங்கரஹிதம் அராகத்வேஷத: க்ருதம்|
அபலப்ரேப்ஸுநா கர்ம யத்தத்ஸாத்த்விகமுச்யதே||உ௩||

(உ௩) தன் வருணாச்சிரமங்களுக்குத்தக்கபடி நான் செய்தேனென்கிற அபிமானமில்லாமலும், (தனக்குக் கீர்த்தியுண்டாகவேண்டுமென்கிற) ஆசையாலாவது (பிறருக்குண்டான கீர்த்தியில்) த்வேஷத்தாலாவது செய்யப்படாமலும், இது பலாபேக்ஷையின்றிச் செய்யவேண்டுவதென்றே செய்யப்படுங் கருமம் ஸாத்துவிகமென்னப்படும்.

யத்து காமேப்ஸுநா கர்ம ஸாஹங்காரேண வா புந:|
க்ரியதே பஹுலாயாஸம் தத்ராஜஸமுதாஹ்ருதம்||உ௪||

(உ௪) எந்த கருமமானால் பலத்தை யடையவேண்டுமென்று அஹங்காரத்தோடுகூடி நான் செய்கிறேனென்கிற அபிமானத்தோடு வெகுசாய் சிரமப்பட்டுச் செய்யப்படுமோ அது ராஜஸம். [என்றால்,வெகு கஷ்டமாயிருக்கிற இந்த வேலை யென்னால் செய்யப்படுகிறது என்கிற அபிமானத்தோடு செய்யப்படுங் கர்மம் ராஜஸமென்னப்படுமென்றபடி.]

அநுபந்தம் க்ஷயம் ஹிம்ஸாம் அநவேக்ஷ்ய ச பௌருஷம்|
மோஹாதாரப்யதே கர்ம யத்தத்தாமஸமுச்யதே||உ௫||

(உ௫) கர்மஞ்செய்யும்பொழுது உண்டாகும் துயரத்தையும் பணச்சிலவையும் பிராணி ஹிம்ஸையையும் கருமத்தை முடிக்கும்படியான ஸாமர்த்தியத்தையும் ஒன்றையும் பாராமல், பரமபுருஷன் செய்கிறானென்கிற ஞானமுமில்லாமல் எந்த கருமம் ஆரம்பிக்கப்படுமோ அது தாமஸமென்னப்படும்.

http://acharya.org

[இப்படி வேதங்களுக்கும் வைதிகங்களான யக்ஞாதிகளுக்கும் ஓம் என்னும் சப்தத்தோடு அந்வயம் சொல்லப்பட்டது. இதனால் ஓம் என்கிற சொல்லோடுகூடிய வேதத்தைத்தரிப்பதாலும் அப்படிப்பட்டயக்ஞாதிகர்மங்களைச் செய்கையாலும் பிராம்மணசப்தத்தாலே குறிக்கப்பட்ட திரைவர்ணிகருக்கும் ஓம் என்னும்சொல்லோடு அந்வயம் வருணிக்கப்பட்டதாகிறது.

(அ-கை.) இப்பொழுது இவைகளுக்கெல்லாம் தத் என்னுஞ் சொல்லோடு அந்வயங் கூறப்படுகின்றது.

தஹித்யநபிஸந்தாய ஃபலம் யஜ்ஞதப꞉க்ரியா꞉।
தாநக்ரியாஶ்ச விவிதா꞉ க்ரியந்தே மோக்ஷகாங்க்ஷிபி꞉॥ உரு॥

(உரு) பலனைக்கோராமல் வேதாப்பியாஸம் யக்ஞம் தவம் தானம் முதலிய கிரியைகள் எவைகளானால் மோக்ஷாபேக்ஷிகளான திரைவர்ணிகர்களாலே செய்யப்படுமோ அவைகள் பிரம்மப்பிராப்திக்கு உபாயமாகும்படி பிரம்மவாசகமான † தத்சப்தத்தாலே குறிக்கத்தக்கவைகள்.

(அ - கை.) இப்படி வேதாத்தியயநம் யக்ஞம் முதலியவைகள் மோக்ஷத்துக்கு ஸாதநமாகும்பொழுது தத் என்னுஞ் சொல்லாலே கூறப்படுமென்று தத் என்னுஞ் சொல்லுக்கு அந்வயம் சொல்லப்பட்டது. திரைவர்ணிகரும் அப்படிப்பட்ட வேதாத்திய யநாதிகளை யநுஷ்டிக்கின்றமையால் அவர்களுக்கும் தத்சப்தத்தோடு அந்வயமுண்டென்றுஏற்பட்டது. இப்பொழுது இவைகளுக்கெல்லாம் ஸத்சப்தத்தோடு அந்வயம் சொல்வதற்காக, உலகத்தில் ஸத்என்னுஞ்சொல்லுக்குப்பொருள்வழங்கும்படி யருளிச்செய்கிறார்.

ஸத்பாவே ஸாதுபாவே ச ஸதித்யேதத் ப்ரயுஜ்யதே।
ப்ரஶஸ்தே கர்மணி ததா ஸச்சப்த꞉ பார்த² யுஜ்யதே॥ உசு॥

(உசு) அஹோபார்த்த! 'ஸத்' என்னும்சொல் லோகத்திலாகட்டும் வேதத்திலாகட்டும் இருக்குந்தன்மையிலும் ஸாதுத்தன்மையிலும் பிரயோகிக்கப்படுகின்றது. அப்படியே ஒரு புருஷனால் அநுஷ்டிக்கப்பட்ட லௌகிகமான நல்லகாரியங்களிலும் 'இது ஸத்கர்மம்' என்றுபிரயோகிக்கப்படுகிறது.

யஜ்ஞே தபஸி தாநே ச ஸ்தி²தி꞉ ஸதிதி சோச்யதே।
கர்ம சைவ ததர்தீ²யம் ஸதித்யேவாபி⁴தீ⁴யதே॥ உஎ॥

(உஎ) ஆகையால் வைதிகர்களான திரைவர்ணிகர்கள் யக்ஞதானதவங்களில் இருப்பார்களில் அவ்விருப்பு நன்றாகையாலே ஸத் என்னப்படும்; அப்படிப்பட்ட திரைவர்ணிகர்களுக்காகச் செய்யப்படும் யக்ஞாதிகருமங்களும் ஸத் என்றேசொல்லப்படும். [ஆகையால் வேதங்களும் வேதிகக்கருமங்களும்

---

† ஸர்வேஶ்வரஸ் ததாத்மேந்த³ என்று தத் சப்தம் பிரம்மவாசகமென்றுமிடம் ஸஹஸ்ரநாமாதிகளிற் பிரஸித்தம்.

http://acharya.org

(௨௯) (பகுத்தறிவோடுகூடிய நிச்சயஞானமான) புத்திக்கும் (ஆரம்பித்த வேலையை விக்கினம் நேரிட்டாலும் கைவிடாமலிருப்பதென்கிற) தைரியத்துக்கும் (ஸத்துவம் முதலிய குணங்களுக்குத்தக்கபடி) உண்டான மூன்று பேதத்தையும் தனித்தனியே உள்ளபடியே சொல்லுகிறோம் கேள்.

ப்ரவ்ருத்திஞ்ச நிவ்ருத்திஞ்ச கார்யாகார்யே பயாபயே।
பந்தம் மோக்ஷஞ்ச யா வேத்தி புத்தி: ஸா பார்த ஸாத்த்விகீ ॥௩௦॥

(௩௦) (க்ஷேமத்துக்குஸாதகமான) பிரவ்ருத்தியையும், (மோக்ஷத்துக்கு ஸாதகமான) நிவ்ருத்தியையும் எந்த புத்தியாலறியுமோ, (பிரவிருத்தி தர்மமோ நிவ்ருத்திதர்மமோ இவ்விரண்டிலொன்றைக் கைப்பற்றி யநுஷ்டிக்குமவர்களான) ஸர்வவருணத்தாரும்காலதேசவர்த்தமானங்களுக்குத் தக்கபடி இதைச்செய்யத்தகும் இதைச் செய்யத்தகாது என்று எந்தபுத்தியாலறியுமோ, (சாஸ்திரத்தைக்கடந்தால்) பயமென்பதையும் (சாஸ்திரத்தைப் பின்சென்றால்) அபயமென்பதையும் ஸம்ஸாரத்தின் உண்மையையும் அதையொழிக்குமதான மோக்ஷத்தின் உண்மையையும் எந்த புத்தியாலறியுமோ, அது ஸாத்துவிக புத்தியென்னப்படும்.

யயா தர்மமதர்மஞ்ச கார்யஞ்சாகார்யமேவ ச।
அயதாவத் ப்ரஜாநாதி புத்தி: ஸா பார்த ராஜஸீ ॥௩௧॥

(௩௧) முன் சொன்ன இருவகைத்தருமத்தையும் அதின் விபரீதத்தையும் அதில் நிஷ்டையுடையவர்கள் தேசகாலங்களுக்குத்தக்கபடி செய்யவேண்டுங் காரியத்தையும் ஒழிக்கவேண்டுங் காரியத்தையும் உள்ளபடியே யறியமாட்டாத புத்தியை ராஜஸபுத்தியென்கிறது.

அதர்மம் தர்மமிதி யா மந்யதே தமஸாவ்ருதா।
ஸர்வார்தாந் விபரீதாம்ஶ்ச புத்தி: ஸா பார்த தாமஸீ ॥ ௩௨॥

(௩௨) தாமஸபுத்தியோ தமோகுணத்தால் சூழப்பட்டதாய் எல்லாப் பொருளையும் விபரீதமாய்க் காண்பதாம். [என்றால் தருமத்தை அதருமமாயும், அதருமத்தைத் தருமமாயும், ஸத்தை அஸத்தாயும், அஸத்தை ஸத்தாயும், பரமான தத்துவத்தை அவரமாயும், அவரமான தத்துவத்தைப் பரமாயும் இப்படி எல்லாவற்றையும் வித்தியாஸமாகவே பார்க்குமென்றபடி.]

த்ருத்யா யயா தாரயதே மந:ப்ராணேந்த்ரியக்ரியா:।
யோகேநாவ்யபிசாரிண்யா த்ருதி: ஸா பார்த ஸாத்த்விகீ ॥௩௩॥

(௩௩) மோக்ஷோபாயமாக எம்பெருமானை உபாஸிப்பதென்கிற யோகத்தை உத்தேசித்துப் பிரவர்த்தித்த மனம், பிராணன், இந்திரியம் முதலியவைகளின் வியாபாரங்களையெல்லாம் எந்ததைரியமாலுல் சலிக்காமல் நிலைப்பிக்குமோ அது ஸாத்துவிகத்தைரிய மென்னப்படும்.

http://acharya.org

யயா து தர்மகாமார்த்தாந் த்ருத்யா தாரயதேऽர்ஜுந |
ப்ரஸங்கேந பலாகாங்க்ஷீ த்ருதி: ஸா பார்த்த ராஜஸீ ||௩௰௪||

(௩௰௪) தருமம் காமம் அர்த்தம் இவைகளை யபேக்ஷித்துச்செய்யும் மனம் முதலியவைகளின் செயல்களை யெந்த தைரியமானால் தரிக்குமோ அது ராஜஸத்தைரியமென்னப்படும்.

யயா ஸ்வப்நம் பயம் சோகம் விஷாதம் மதமேவ ச |
ந விமுஞ்சதி துர்மேதா த்ருதி: ஸா பார்த்த தாமஸீ ||௩௰௫||

(௩௰௫) நித்திரையையும் விஷயங்களை யநுபவிப்பதாலுண்டாகும் மதத்தையும் உத்தேசித்துவரும் பயம், சோகம், துக்கம் இவைகளைத்தரும்படியான மனமுதலியவைகளின் செயல்களைக்கெடுமதியானவன் எந்ததைரியத்தைக்கொண்டு தரிக்கிறானோ அது தாமஸத்தைரிய மென்னப்படும்.

ஸுகம் த்விதாநீம் த்ரிவிதம் ச்ருணு மே பரதர்ஷப |

(௩௫௨) முன்சொன்ன ஞானம், கருமம், கர்த்தா முதலிய வெல்லாம் எந்தசுகத்துச்கு சேஷப்பட்டிருக்குமோ அந்தசுகமும் குணத்துக்குத்தக்கபடி மூன்றுவிதமென்கிற விஷயத்தை யிப்பொழுது சொல்லுகிறோம்கேள்.

அப்யாஸாத் ரமதே யத்ர து:காந்தம் ச நிகச்சதி ||௩௰௬||
யத்ததக்ரே விஷமிவ பரிணாமேऽம்ருதோபமம் |
தத்ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தமாத்மபுத்திப்ரஸாதஜம் ||௩௰௭||

(௩௰௬-௩௰௭) எந்த சுகத்தையானால் வெகுகாலம் அப்பியஸித்து வந்து மெள்ளமெள்ள ஈடில்லாதசுகத்தை யநுபவித்து ஸம்ஸாரத்தால் வருந்துயரங்களையெல்லாம் மனமுமில்லாமல் ஒழிக்கிறானோ, எந்தச்சுகமானால் (யோகஞ்செய்யத்துடங்கும்பொழுது மிகவும் வருத்தப்பட்டு ஸாதிக்கவேண்டுகையாலும் தனியான ஆத்மஸ்வரூபம் முன்னேபழகாமையாலும்) முதலில் துக்கம்போலவிருந்து, பிறகு (அப்பியாஸத்தின் வலிமையாலே ஏகாந்தமான ஸ்வரூபத்தையடைவதால்) அமுதத்துக்குச்சமமாயிருக்குமோ, (இதர விஷயங்களை யொழித்து ஏகாந்தமான ஆத்மாவை மாத்திரம் அநுபவிப்பதாலுண்டாகின்ற) அந்த சுகமானது ஸாத்விகச்சுகமென்னப்படும்.

விஷயேந்த்ரியஸம்யோகாத் யத்ததக்ரேऽம்ருதோபமம் |
பரிணாமே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம் ||௩௰௮||

(௩௰௮) எந்தச்சுகமானால் அநுபவிக்கும்பொழுது இந்திரியத்துக்கும் விஷயத்துக்குமுண்டான சேர்க்கையினால் அமுதம்போலவிருந்து, அதற்கு ஹேதுவான பசிமுதலியவை தணிந்த பிறகு (அது நரகத்துக்குக் காரணமாகின்றமைகொண்டு) விஷபானம் பண்ணினாற்போலிருக்குமோ அந்தசுகம் ராஜஸமென்னப்படும்.

http://acharya.org

𑌯𑌦𑌗𑍍𑌰𑍇 𑌚𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑍇 𑌚 𑌸𑍁𑌖𑌂 𑌮𑍋𑌹𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌲𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍋𑌤𑍍𑌥𑌂 𑌤𑌤𑍍𑌤𑌾𑌮𑌸𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍॥௩௯॥

(௩௯) எந்த சுகமானது (* நித்திரை § ஆலஸ்யம் † பிரமாதம் இவைகளாலுண்டாய்) அநுபவிக்கும்பொழுதும் பக்குவமாகும் பொழுதும் ஆத்மஸ்வரூபத்தை யறியவொட்டாமல் மோஹத்தைவிளைவிக்குமோ அந்தசுகம் தாமஸமென்னப்படும்.

[ஆகையால் மோக்ஷகாமன் ரஜஸ்ஸையும் தமஸ்ஸையும் தலையடக்கி ஸத்துவத்தையே கைப்பற்றக்கடவனென்றதாயிற்று.]

𑌨 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌦𑌿𑌵𑌿 𑌦𑍇𑌵𑍇𑌷𑍁 𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃।
𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑍈𑌰𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌂 𑌯𑌦𑍇𑌭𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃॥

(௪௦) பூமியில் மநுஷ்யாளிலாவது ஆகாசத்தில் தேவர்களிலாவது (பிரகிருதியுடன்கலந்து பிரமன்முதல் தாவரமீருயுள்ள) ஸகலப்பிராணிகளிலும் இந்தப்பிரகிருதியினது முக்குணங்களையுங் கடந்தப்பிராணி ஒன்ருகிலுங் கிடையாது.

(அ-கை.) ஆகவிப்படி 𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨𑍈𑌕𑍇 𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑌾𑌨𑌶𑍁𑌃 இத்தியாதிகளில் மோக்ஷத்துக்கு ஸாதகமாகச்சொல்லப்பட்ட த்யாகமானது ஸந்ந்யாஸ சப்தத்தின் பொருளைக்காட்டிலும் வேறுபட்டதல்லவென்றும், அதுவும் கருமஞ்செய்யும்பொழுது 'நான் கர்த்தாவல்லே' னென்கிற கர்திருத்வத்தியாகாநுஸந்தாநத்தால் வருமதென்றும், பலத்தியாகமும் கருமத்தியாகமும் கர்திருத்வத்தியாகமும் பரமபுரஷனேகர்த்தாவென்கிற நினைவினுல் வருமதென்றும் அருளிச்செய்யப்பட்டு, இதெல்லாம் ஸத்துவகுணம் விருத்தியடைவதால் வரத்தக்கதாகையாலே ஸத்துவகுணத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பதை யறிவிக்கைக்காக ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களின் காரியவித்தியாஸங்கள் இவையென்று பரக்கவருளிச்செய்யப்பட்டன.

இப்பொழுது மோக்ஷஸாதநமாகச்செய்யப்படு மிக்கருமம் பரமபுருஷனுடைய ஆராதந ரூபமென்கிற விஷயத்தையும், அப்படி யநுஷ்டிக்கப் படுங்கருமத்துக்கு அவனை யடைவதுதான் பலனென்கிற விஷயத்தையும் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, பிராம்மணுதி அதிகாரிகளுக்கு அவரவர் ஸ்வபாவத்தைச்சேர்ந்த ஸத்துவம் முதலிய குணபேதங்களுக்குத்தக்க

---

* நித்திரையானது, அநுபவிக்கிறகாலத்தில்கூட விஷயத்தைத் தெளிவாய் அறியவொட்டாமல் செய்கிறதென்கிற அதின் மோஹநஸாமர்த்தியம் யாவராலும் நன்கு அறியப்படும்.

§ ஆலஸ்யமாவது-இந்திரியங்கள் செயல்தீர்ந்திருக்கை; இந்திரியங்கள் செயல் தீர்ந்தால் ஞாநம் மந்தப்படவேபடும்.

† பிரமாதமாவது - செய்யவேண்டியதில் கவனமில்லாமை இதற்கும் அப்படி அக்ஞாநத்தை யுண்டாக்கும்படியான ஸ்வபாவமுண்டு.

http://acharya.org

படி பிரிக்கப்பட்டு அவரவர் விருத்தியோடு சேர்த்துச் செய்யவேண்டியதா யிருக்கிற கர்மஸ்வரூபத்தை யருளிச்செய்கிறார். [விருத்தியாவது ஜீவனத் தொழில்.]

ப்ராஹ்மணக்ஷத்ரியவிஶாம் ஶூத்ராணாஞ்ச பரந்தப|
கர்மாணி ப்ரவிபக்தாநி ஸ்வபாவப்ரபவைர்குணை:||௪௧||

(௪௧) அஹோ பரந்தப! பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் நால் வருக்கும் தங்கள் தங்கள் பழையவினையின்படி ‡ ஸ்வபாவமாயுண்டான ஸத் துவம் முதலிய குணங்களுக்குத்தக்கபடி செய்யவேண்டுங் கருமங்களும்விரு த்திகளும் இவை இவையென்று சாஸ்த்திரங்கள் பிரித்தோதுகின்றன.

ஶமோ தமஸ்தப: ஶௌசம் க்ஷாந்திரார்ஜவமேவ ச|
ஜ்ஞாநம் விஜ்ஞாநமாஸ்திக்யம் ப்ரஹ்மகர்ம ஸ்வபாவஜம்||௪௨||

(௪௨) (புறத்தேயிந்திரியங்களையடக்குவதென்கிற) சமம், (அந்தக்கரணங் களையடக்குவதென்கிற) தமம், (போகத்தையடக்கும்படி சாஸ்த்திரத்திலேற் பட்டகாயக்கிலேசமென்பவை) தவம், (சாஸ்திரோக்தமான கருமத்தைச்செய் யும்படியான யோக்கியதையென்கிற) சௌசம், (பிறரால் தான் பீடிக்கப்பட் டாலும் சித்தவிகாரமடையாமலிருக்கையென்கிற) க்ஷாந்தி, (பிறர்விஷயத்தில் மனதிலிருப்பதுபோலவே வெளியிலும் நடக்கையென்கிற) ஆர்ஜவம், (பரதத்துவ த்தையும் அவரதத்துவத்தையும் பகுத்தறியுமறிவான) ஞானம், (பரதத்துவத்தி ற்கே உரியவையான விஷயங்களை யறிவதென்கிற) விஞ்ஞானம், (வேதத்தில் சொன்ன அர்த்தமெல்லாம் ஸத்தியமென்கிற உத்தம நிச்சயமான) * ஆஸ்திக்கி யம், இதெல்லாம் பிராம்மணனுக்கு ஸ்வபாவமாயுண்டான கருமங்கள்.

---

‡ பிராம்மணனுக்கு ஸ்வபாவத்தாலுண்டானது, ரஜஸ்ஸையும் தமஸ் ஸையுமடக்கித் தலையெடுத்திருக்கும் ஸத்துவகுணம். க்ஷத்திரியனுக்கு ஸ்வ பாவத்தாலுண்டானது, தமஸ்ஸையும் ஸத்துவத்தையுமடக்கித் தலையெடுத்தி ருக்கும் ரஜோகுணம். வைசியனுக்கு ஸ்வபாவத்தாலுண்டானது, ஸத்துவத் தையும் ரஜஸ்ஸையுமடக்கிக்கொஞ்சந்தலையெடுத்திருக்கும் தமோகுணம். சூத் திரனுக்கு ஸ்வபாவத்தாலுண்டானது, ரஜஸ்ஸையும் ஸத்துவத்தையுமடக்கி மிகவும் தலையெடுத்திருக்கும் தமோகுணம் என்றறிக.

* ஆஸ்திக்யமாவது-புருஷோத்தமனாயிருக்கிற பகவானான வாசுதேவ னே, பரப்பிரம்மமென்னுஞ் சொல்லுக்குப் பொருளாய், ஸகலதோஷங்களுமற்று ஸ்வபாவஸித்தங்களாய் எல்லையில்லாவதிசயம்பொருந்தியவைகளாயுள்ள ஞானம் சக்தி முதலிய வெண்ணிறந்த கல்யாணகுணத்தொகையுடையனாய், ஸகலவேதாந்தங்களாலு மறியப்படுமவனாயெழுந்தருளியிருக்கிறான்; அவனே ஸகல ஜகத்துக்கும் முக்கியகாரணம்; ஸகல ஜகத்துக்கும் ஆதாரம்; ஸகலத் தையும் அவனே ஏவுகிறான்; வைதிகமான ஸகலகருமமும் அவனுடைய ஆரா தனம். அவனே அந்த கருமங்களால் ஆராதிக்கப்பட்டவனாய்க்கொண்டு தரு

http://acharya.org

𑌶𑍌𑌰𑍍𑌯𑌂 𑌤𑍇𑌜𑍋 𑌧𑍃𑌤𑌿𑌰𑍍𑌦𑌾𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌚𑌾𑌪𑍍𑌯𑌪𑌲𑌾𑌯𑌨𑌮𑍍।
𑌦𑌾𑌨𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌭𑌾𑌵𑌶𑍍𑌚 𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍॥ சங॥

(சங) யுத்தத்தில் நிர்ப்பயமாய்ப் பிரவேசிக்கும்படியான ஸாமர்த்தியம், சத்துருக்களால் வெல்லப்போகாமை, எடுத்தகாரியத்தைத்தடைநேரிட்டபோதிலுந்தலைக்கட்டுவிக்கும் திறமை, எந்தவேலையாறுலும் செய்யும்படியான ஸாமர்த்தியம், யுத்தத்தில் தனக்கு மரணம் நேரிடுமென்கிற நிச்சயமுண்டாறுலுந்திரும்பாமை, தன் ஸொத்தைப்பிறர்ஸொத்தாகும்படி கொடுப்பது, தன்னையொழிந்த மற்றஜனங்களையெல்லாம் ஆளும்படியான ஸாமர்த்தியம், இதெல்லாம் க்ஷத்திரியனுக்கு ஸ்வபாவத்தாலுண்டான கருமம்.

𑌕𑍃𑌷𑌿𑌗𑍌𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌵𑌾𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌕𑌰𑍍𑌮 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍।

(சஙஉ) பயிர்த்தொழில், பசுக்களைக்காத்தல், பொருள் சேர்ப்பதற்குக் காரணமான விற்பனைவகைருத்தொழில், இது வைசியனுக்கு ஸ்பாவத்தாலுண்டானகருமம்.

𑌪𑌰𑌿𑌚𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌜𑌮𑍍॥ சச॥

(சச) முற்கூறிய மூன்றுவருணத்தாருக்கும் ஊழியஞ்செய்வது சூத்திரனுக்கு ஸ்வபாவமாயுண்டானகருமம்.

[இப்படிச்சொன்னதனுல் நான்குவருணத்தாருக்கும் ஜீவனத்தொழிலும் செய்யவேண்டுங்கர்மங்களும் சொல்லப்பட்டனவென்றறியவும் இதில் முதல் மூன்றுவருணத்தாருக்கும் யக்ஞம் முதலியகருமங்கள்பொதுவானவை சமம்முதலிய குணங்களோ மோக்ஷார்த்திகளான மூன்று வருணத்தாருக்கும் ஸாதாரணம். பிராம்மணனுக்கு ஸத்துவம் விஞ்சியிருக்கை ஸ்வபாவமாகையாலே சமதமாதிகுணங்கள் வருத்தமின்றிவரக்கூடுமென்று அவைகளை யவனுக்கு ஸ்வபாவத்தாலுண்டான தருமங்களென்றது. க்ஷத்திரியனுக்கும் வைசியனுக்கும் ரஜஸ்ஸும் தமஸ்ஸும் பிரதானமாகையாலே சமதமாதிகள் உண்டாவது வருத்தமென்று அவைகளை அவர்களுக்குக் கருமமாகச்சொல்லவில்லை. பிராம்மணனுக்கு யாகஞ்செய்வித்தல் ஓதுவித்தல், தானம்வாங்கல் இவை ஜீவனத்தொழில். க்ஷத்திரியனுக்கோ ஜனங்களைக்காப்பது. வைசியனுக்

மம் அர்த்தம் காமம் மோக்ஷமென்கிற பலன்களை யளிக்கிறுன்; என்கிற இவ்விஷயம் ஸத்தியம் என்கிற நிச்சயந்தான். 𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌹𑌮𑍇𑌵 𑌵𑍇𑌦𑍍𑌯𑌃॥ 𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇। 𑌇𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑍍॥ 𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌜𑍍𑌞𑌤𑌪𑌸𑌾𑌮𑍍...... 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌸𑍍𑌤𑌿 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯 ॥ 𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍। 𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃 ॥ 𑌯𑍋𑌗𑌿𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌲𑍋𑌕𑌮𑍇𑌹 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 என்றன்றோ சொல்லப்படுகிறது?

கோ முன்சொன்னபடி பயிர் செய்வது. சூத்திரனுக்கோ செய்யவேண்டுங் கருமமும் ஜீவனத்தொழிலும் இரண்டும் ஊழியஞ்செய்வதுதான்.]

𑌸𑍍𑌵𑍇 𑌸𑍍𑌵𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌰𑌤𑌃 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌨𑌰𑌃|
𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌰𑌤𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌯𑌥𑌾 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌤𑌚𑍍𑌛𑍃𑌣𑍁 || ௪௫ ||

(௪௫) புருஷன் தான்தன்கருமத்தில் விடாமல் ஊன்றியிருக்குமாகில் பரமபதத்தைப்பெறுவான். எப்படியெனில்-சொல்லுகிறோம் கேள்.

𑌯𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌤𑌤𑌮𑍍|
𑌸𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌤𑌮𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌮𑌾𑌨𑌵𑌃 || ௪௬ ||

(௪௬) பிராணிகளின் உத்பத்தி முதலியப்பிரவ்ருத்திகள் யாரிடத்தினின்று முண்டாகின்றனவோ, இவை யாவையும் எவனால் வியாபிக்கப்பட்டுளவோ, இந்திராதிதேவதைகளுக்கு அந்தராத்மாவாய் பரம புருஷனாயிருக்கு மந்தநம்மை யாராதித்து, மனிதன் நமது அநுக்கிரஹத்தால் நம்மை யடைவதென்கிற ஸித்தியைப்பெறுவான்.

[நம்மிடத்தினின்றுந்தான் ஸமஸ்தமுமுண்டாகின்றது, நம்மாலே வியாபிக்கப்பட்டிருக்கிறது என்கிற விஷயம் முன்னமே சொல்லப்பட்டது. எங்கே? 𑌅𑌹𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌃 𑌪𑍍𑌰𑌲𑌯𑌸𑍍𑌤𑌥𑌾| 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌪𑌰𑌤𑌰𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌸𑍍𑌤𑌿 𑌧𑌨𑌞𑍍𑌜𑌯|| 𑌮𑌯𑌾 𑌤𑌤𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌗𑌦𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌨𑌾 | 𑌮𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌣 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌸𑍂𑌯𑌤𑍇 𑌸𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑍍|| 𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑌤𑍇 இத்யாதிகளில் சொல்லவில்லையா?]

𑌶𑍍𑌰𑍇𑌯𑌾𑌨𑍍𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌿𑌗𑍁𑌣𑌃 𑌪𑌰𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌤𑍍|

(௪௬௨) பிரகிருதியோடு கலந்த புருஷனுக்கு இந்திரிய வியாபாரரூபமான கர்மயோகமென்னுந் தருமத்தைச்செய்வது சுலபம்; ஆகையால் தன் தருமமான கருமயோகம் குணமற்றதேயானாலும், இந்திரியஜயம் பண்ணவல்ல புருஷனுடைய தருமமான ஞாநயோகத்தைத் தானேறிட்டுக் கொண்டு அதை நன்கு அநுட்டிப்பதைக்காட்டிலும் இது சிறந்தது. [ஏனெனில், ஞாநயோகத்தை ஒருக்கால் குறைவற வநுஷ்டித்தாலும் ஸுசலமான இந்திரியங்களையுமடக்கவேண்டுகையாலே ஒருகால மில்லாவிடில் ஒருகாலத்தில் அது இவனுக்குப் பிரமாதத்தை விளைவிக்குமென்று திருவுள்ளம்.]

(அ-கை.) அதையே உபபாதிக்கிறார்.

𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌨𑌿𑌯𑌤𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍||௪௭||

(௪௭) பிரகிருதியைச்சேர்ந்த புருஷனுக்குக் கருமயோகம் இந்திரிய வியாபாரரூபமாயிருக்கையாலே ஸ்வபாவமாயிருக்கிறது. ஆகையால்அதைச்செய்வதா லிவனுக்கு யாதொரு கெடுதியும் நேரிடமாட்டாது, ஞாநயோ

http://acharya.org

கமோ இந்திரியங்களை யடக்கிச் சாதிக்கவேண்டுகையாலே அந்த நிஷ்டையுள்ளவனுக்குப் பிரமாதமாய் பாவம் நேரிடவே நேரிடும்.

(அ - கை.) ஆகையால் கருமநிஷ்டையேசிறந்ததென்று மூன்றும் அத்தியாயத்தில் அருளிச்செய்தவிஷயத்தை இங்கேநினைப்பூட்டுகிறார்.

सहजं कर्म कौन्तेय सदोषमपि न त्यजेत्।
सर्वारम्भा हि दोषेण धूमेनाग्निरिवावृताः॥சஅ॥

(சஅ) ஸஹஜமாய் வருத்தமின்றி செய்யக்கூடியகருமம் துக்கத்தோடுகூடியிருந்ததேயாகிலும் அதைக்கைவிடலாகாது. [என்றால், ஞானயோகத்துக்குத்தக்கவனாயினும் கருமயோகத்தையே செய்யென்றபடி] ஏனெனில்-கருமயோகமோ ஞானயோகமோ எதைச்செய்யத்தொடங்கினாலும் எல்லாம் புகையால் சூழப்பட்ட நெருப்புபோல துக்கத்தோடுகூடியே யிருக்கின்றன. [ஆனால் அவ்விரண்டுக்கும் இதுதான் விசேஷம். எது ? கருமயோகம் சுலபமாய் செய்யக்கூடியதாயும் பிரமாதத்தை யுண்டுபண்ணாததாயுமிருக்குமென்பதும் ஞானயோகம் அதற்கெதிராயிருக்கும் என்பதுமாம்]

असक्तबुद्धिः सर्वत्र जितात्मा विगतस्पृहः।
नैष्कर्म्यसिद्धिं परमां संन्यासेनाधिगच्छति॥சகூ॥

(சகூ) பலன்முதலியவைகளில் ஆசைவையாமல் மனதை ஜயித்து பரமபுருஷனே கர்த்தாவென்பதைச்சிந்திப்பதால் தான் கர்த்தாவென்கிற நினைவைமாற்றி இப்படிப்பட்ட ஸந்நியாஸத்தோடு கூடியிருப்பவன், கருமத்தையநுட்டித்துவந்தேஞானயோகத்தின்பயனானத்தியாநநிஷ்டையையடைவான்.

[என்றால் ஸகல இந்திரியங்களும் சாந்தமாய்ச்செய்ய வேண்டியதான தியாநயோகத்தை யடைவானென்றபடி.]

सिद्धिं प्राप्तो यथा ब्रह्म तथाप्नोति निबोध मे।
समासेनैव कौन्तेय निष्ठा ज्ञानस्य या परा॥ருo॥

(ருo) பிரயாண மாமளவும் நாடோறும் அநுட்டிக்கப்படுங்கருமயோகத்தால் ஒத்தாசைபண்ணபட்ட ஞானயோகம் ஸித்திக்கப்பெற்றவன், எந்தப் பிரகாரமிருந்து (தியாநயோகத்துக்குப்பயனான) பிரம்மத்தை யடைகிறானோ அதைச்சுருக்கமாய்ச்சொல்லுகிறேன்கேள்.

बुद्ध्या विशुद्धया युक्तो धृत्यात्मानं नियम्य च।
शब्दादीन्विषयांस्त्यक्त्वा रागद्वेषौ व्युदस्य च॥ருக॥
विविक्तसेवी लघ्वाशी यतवाक्कायमानसः।
ध्यानयोगपरो नित्यं वैराग्यं समुपाश्रितः॥ ॥
अहङ्कारं बलं दर्पं कामं क्रोधं परिग्रहम्।
विमुच्य निर्ममः शान्तो ब्रह्मभूयाय कल्पते॥ருங॥

http://acharya.org

(௫௧-௫௨-௫௩) ஆத்மாவை யுள்ளபடியே யறிகின்ற புத்தியுடன்கூடி யிருந்து விஷயங்களினின்று மனதைத்திருப்பி யோகத்துக்கு யோக்கியமாம் படிபண்ணி, சப்தாதி விஷயங்களைக்கிட்டவொட்டாமல்துறந்து, அவற்றிற்குக்காரணமான ராகத்தையும் த்வேஷத்தையும் போக்கடித்து, தியானத்துக்கு விரோதமானவைக ளொன்று மில்லாத விடத்திலிருந்து, அதிகமாய் புசியாமல், புசியாமலுமிராமல், தியானத்துக்கு வழிப்படும்படி மனோவாக்காயங்களின் செயலைத்திருத்திக்கொண்டு, இப்படியெல்லாமிருந்து தினந்தோறும் தியானயோகத்தினின்றவன், தான் தியானம்பண்ணுகிற தத்துவத்தைத்தவிர மற்றவைகளில் தோஷத்தை நிரூபித்து அவைகளில் வைராக்கியத்தை வளர்த்துக்கொண்டு, தேஹமே ஆத்மாவென்கிற வபிமானத்தையும் அதுவளருவதற்குக்காரணமான வாஸனையின் பலத்தையும் அதற்கு நிமித்தமான கொழுப்பையும் காமத்தையும் கோபத்தையும் பிடிப்பையும்விட்டு, தனதல்லாத வெல்லாவற்றிலும் தனதென்கிற வெண்ணத்தைமாற்றி, ஆத்மானுபவமே சுகமென்றிருந்தவனாய் ஸகல பந்தத்தினும் விடுபட்டு ஆத்மாவைஉள்ளது உள்ளபடியே அநுபவிப்பான்.

ப்ரஹ்மபூத: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி|
ஸம: ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம்|| ௫௪ ||

(௫௪) அளவற்ற ஞானமே வடிவாய் நமக்கொப்பட்டிருப்பதே ஸ்வபாவமாயிருக்கிற ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபம் பிரகாசிக்கப்பெற்றவன், இலேசமான கருமாதிகளால் கலங்கவாவது நம்மை யொழிந்த மற்றொன்றையும் நினைத்து சோகப்படவாவது அது தனக்கு வேண்டுமென்று கோரவாவது மாட்டான்; மற்றப்படி நம்மைத்தவிர மற்றெல்லாப்பிராணிகளையும் ஒரேமாதிரியாய் திருணம்போலெண்ணி, ஸர்வேசுவரனையும் ஸகல ஜகத்துக்கும் உத்பத்தி ஸ்திதிலயங்களை லீலையாய்ச்செய்பவனையும் யாதொரு தோஷமும்மணமாத்திரமுமில்லாமலிருப்பவனையும் எல்லையில்லாவதிசயம்பொருந்தி எண்ணிக்கையற்ற கல்யாணகுணங்களுக்கு முக்கியஸ்தானமாயும், லாவண்ணியமென்னும் அமுதத்துக்குக்கடலாயும் ஸ்ரீமானையும் புண்டரீகாக்ஷனையும் தனக்குநாதனையுமிருக்கிற நம்மிடத்தில்தானே மிகுந்த பக்தியுண்டாகப்பெறுவான்.

(அ - கை.) அதற்குப்பயன் அருளிச்செய்கிறார்.

பக்த்யா மாமபிஜாநாதி யாவாந்யஶ்சாஸ்மி தத்த்வத:|
ததோ மாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா விஶதே தத³நந்தரம்|| ௫௫ ||

(௫௫) ஸ்வரூபத்தாலும் ஸ்வபாவத்தாலும் நம்மை இன்னதொன்றும், குணத்தாலும் விபூதியாலும் நாம் இவ்வளவென்றும் கீழ்ச்சொன்ன பக்தியைக்கொண்டுதான் நம்மை உள்ளபடியே அறியவேண்டும். அப்படி யறிந்தால் பின்பு பக்தி விருத்தியடைந்து அதனால் நம்மையறியக்கூடும் [என்றால்- 'பக்த்யா த்வநந்யயா ஶக்ய:' என்று கீழ்ச்சொன்னபடி. எம்பெருமானை உள்ளபடியே யறிகைக்கு பக்திதான் காரணமென்று திருவுள்ளம்.]

http://acharya.org

(அ - கை.) இவ்வாறு வருணாச்சிரமங்களுக்கு உசிதமான நித்திய நைமித்திககருமங்களைப் பலாபேக்ஷையின்றி பகவத் ஆராதநரூபமாய்ப் பண்ணுமிடத்து அவைகள் பக்குவமாகும்படி சொல்லிற்று. இப்பொழுது காம்மியகருமங்களும் கீழ்ச்சொல்லியபடி யநுஷ்டிக்கப்படுமாகில் அப்படியே பலிக்குமென்கிறது.

𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑍍𑌯𑌪𑌿 𑌸𑌦𑌾 𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑍋 𑌮𑌦𑍍𑌵𑍍𑌯𑌪𑌾𑌶𑍍𑌰𑌯𑌃।
𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌦𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌂 𑌪𑌦𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍॥ ௫௬ ॥

(௫௬) அர்ச்சுந! நித்திய நைமித்திககருமங்களை மாத்திரமல்ல; காம்மியங்களான மற்ற கருமங்களையும் நமது ஆராதனரூபமாகச் செய்துவந்தானகில் நமது அநுக்கிரஹத்தாலே சாசுவதமான பதத்தைச் சிறிதுங்குறையின்றி யடைவான். [அதாவது நம்மை யடைவனென்றபடி.]

𑌚𑍇𑌤𑌸𑌾 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌮𑌯𑌿 𑌸𑌂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌤𑍍𑌪𑌰𑌃।
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌮𑍁𑌪𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌭𑌵॥ ௫௭ ॥

(௫௭) ஆகையாலே அர்ச்சுந! உன்னை நம்முடையவனென்றும் நம்மாலாளப்படுமவனென்றும் அறிகின்ற மனதைக்கொண்டு ஸகல கர்மங்களையும் (அந்தந்த கருமத்தா லாராதிக்கப்படுந் தேவதைகளோடுசேர்த்து) நம்மிடத்தில் ஸமர்ப்பித்து, நம்மையே பேறாக வநுஸந்தித்துக்கருமங்களைச் செய்துகொண்டு, இவ்வித புத்தியோடுகூடி எப்பொழுதும் நம்மையே சிந்தித்திரு.

𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌣𑌿 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍𑌤𑌰𑌿𑌷𑍍𑌯𑌸𑌿।

(௫௭௨) இப்படி நம்மைச் சிந்தித்தபடியே ஸகல கருமங்களையுஞ் செய்துவந்தாயாகில் ஸம்ஸாரத்தால் வரும் ஸகல பாபங்களையும் நம்முடைய அநுக்கிரஹத்தாலேயே தாண்டிவிடுவாய்.

𑌅𑌥 𑌚𑍇𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌨 𑌶𑍍𑌰𑍋𑌷𑍍𑌯𑌸𑌿 𑌵𑌿𑌨𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿॥ ௫௮ ॥

(௫௮) அப்படியின்றி நீ அஹங்காரத்தால் நானே கிருத்தியாகிருத்தியங்களெல்லாவற்றையும் அறியவல்லேனென்கிற வெண்ணத்தால் நாம் சொன்னதைக் கேளாயாகில் அழிந்துபோவாய். [ஏனெனில், தம்மைத்தவிர எவனும் பிராணிகளின் கிருத்தியாகிருத்தியங்களை அறிபவனுவது அவைகளை ஆள்பவனுவது கிடையாதென்று திருவுள்ளம்.]

𑌯𑌦𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌨 𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯 𑌇𑌤𑌿 𑌮𑌨𑍍𑌯𑌸𑍇।
𑌮𑌿𑌥𑍍𑌯𑍈𑌷 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌸𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌨𑌿𑌯𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿॥ ௫௯ ॥

(௫௯) அர்ச்சுந! உன்னுடைய நன்மை தீமைகளைப்பற்றி உனக்கே அறிந்து கொள்ளும்படியான ஸாமர்த்தியமிருப்பதாக அஹங்கரித்துக்கொண்டு இதுவரையில் நாம் சொன்ன விஷயங்களைக் கைநெகிழவிட்டு 'யுத்தம் செய்யாமலிருப்போ'மென்றிருந்தாயாகில், அப்பொழுது நீ கொண்டிருக்கிற அந்த சுதந்திரநிச்சயம் பொய்யே முடியும். ஏன்? நமது சுதந்திரத்தைப்

http://acharya.org

பொறுக்கமாட்டாது அக்ஞாநியான உன்னைப் பிரகிருதியானது யுத்தஞ் செய்யும்படி ஏவப்போகிறது?

(அ-கை.) அதையே உபபாதிக்கிறார்.

ஸ்வபாவஜேந கௌந்தேய நிபத்த: ஸ்வேந கர்மணா|
கர்தும் நேச்சஸி யந்மோஹாத் கரிஷ்யஸ்யவஶோபி தத்|| ௬௦||

(௬௦) இப்பொழுது அக்ஞாநத்தால் நீசெய்யமாட்டேனென்கிறஇந்த யுத்தத்தையே, உனது க்ஷத்திரியஜாதிக்கேற்ற சௌரியத்தால் கட்டுப்பட்டவனாய்க்கொண்டு பிறர் செய்யும் உபத்திரவத்துக் காற்றாதவனாய் நீயே உன்னையு மறியாமல் செய்யப்போகிறாய்.

(அ-கை.) ஏனெனில், ஸகலப் பிராணிஸமூஹமும் ஸர்வேசுவரனால் நம்மால் பூர்வகருமத்துக்குத்தக்கபடி பிரகிருதியைப் பின் செல்லும்படி நியமிக்கப்பட்டிருக்கிறது; அதைச் சொல்லுகிறோம் கேள்.

ஈஶ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி|
ப்ராமயந்ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா|| ௬௧||

(௬௧) ஸகலப்பிராணிகளையும் ஆள்வதே ஸ்வபாவனான வாசுதேவன், (பிரவிருத்தி நிவிருத்திகளெல்லாவற்றிற்கும் காரணமான ஞாநமுண்டாவதற்கு இடமான) ஹிருதயப்பிரதேசத்தில் இருக்கிறான். எப்படி? என்ன செய்துக்கொண்டிருக்கிறான்? தன்னால் நியமிக்கப்பட்டு (தேஹமாயும் இந்திரியமாயும் விகாரப்பட்டிருக்கின்ற)ப் பிரகிருதியென்னும் யந்திரத்திலேறி யிருக்கின்ற ஸகல பூதங்களையும் குணமயமான தன் மாயையைக்கொண்டு அந்தந்த குணத்துக்குத்தக்கபடிப் பிரவ்ருத்திப்பித்துக்கொண்டிருக்கிறான்.

[இவ்வர்த்தம் ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச| என்றும் அந்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே என்றுஞ் சொல்லப்பட்டது. ய ஆத்மநி திஷ்டந் இத்தியாதி சுருதியுமுண்டு.

(அ-கை.) இந்த மாயை நிவர்த்திப்பதற்குக் காரணங் கூறுகின்றார்.

தமேவ ஶரணம் கச்ச ஸர்வபாவேந பாரத|
தத்ப்ரஸாதாத்பராம் ஶாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வதம்|| ௬௨||

(௬௨) ஆகையாலே பாரத! ஸகலப்பிராணிகளையும் ஆள்பவனாய் ஆஸ்ரிதனிடத்திலுண்டான வன்பினால் உன்னுடைய தேர்த்தட்டில் ஸாரத்தியம் பண்ணுவானாயிருந்து இப்படி செய்யென்று நியமிக்கின்றான் யாவன், அவனையே ஸர்வவிதத்தாலும் சரணமாகப்பற்று. [என்றால்-அவன் நியமனத்தை நீ மேற்கொள்ளாமற்போனாலும் அவனுடைய மாயையாலேவப்பட்டவனாய்க் கொண்டு நீ யுத்தஞ்செய்யவே போகிறாய்; அப்பொழுது அழிந்துபோவாய்; ஆகையால் அவன் சொன்னபடியே யுத்தம் முதலியவைகளைச் செய்யென்றபடி

http://acharya.org

டி.] அப்படிச்செய்தாயாகில் அவனுடைய அநுக்கிரகத்தால் ஸர்வகர்மங்களு மற்று உத்தமஸ்தாநமான * பரமபதத்தையடைவாய்.

𑌇𑌤𑌿 𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌰𑌂 𑌮𑌯𑌾।
𑌵𑌿𑌮𑍃𑌶𑍍𑌯𑍈𑌤𑌦𑌶𑍇𑌷𑍇𑌣 𑌯𑌥𑍇𑌚𑍍𑌛𑌸𑌿 𑌤𑌥𑌾 𑌕𑍁𑌰𑍁॥௬௩॥

(௬௩) இந்தப்பிரகாரம் மோக்ஷார்த்திகளுக்கு வேண்டுமதாய், கர்மயோகவிஷயமாயும் ஞாநயோகவிஷயமாயும் பக்தியோகவிஷயமாயு மறிய வேண்டியதாய், ரஹஸ்யார்த்தங்க ளெல்லாவற்றிற்கும் மேலாயிருக்கின்ற வெல்லா ஞாநங்களையும் உனக்கு உபதேசித்தேன். இவை யெல்லாவற்றையும் ஆலோசித்து உன் அதிகாரத்துக்குத்தக்கபடி இவற்றுள் எதை விரும்புகிறுயோ அதைச்செய்.

𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌭𑍂𑌯𑌃 𑌶𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌪𑌰𑌮𑌂 𑌵𑌚𑌃।
𑌇𑌷𑍍𑌟𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 𑌦𑍃𑌢𑌮𑌿𑌤𑌿 𑌤𑌤𑍋 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌹𑌿𑌤𑌮𑍍॥௬௪॥

(௬௪) இந்த ரஹஸ்யார்த்தங்களெல்லாவற்றுள்ளும் பக்தியோகம் அத்தியந்தம் சிரேஷ்டமென்று $ முன்பே சொல்லப்பட்டது; மறுபடியும் அவ்விஷயமாகவே சிறந்ததொருவார்த்தை சொல்லுகிறேன் கேள். நீ மிகவும் இஷ்டனுகையாலே உனக்கு இதம் சொல்லுகிறேன்.

𑌮𑌨𑍍𑌮𑌨𑌾 𑌭𑌵 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍋 𑌮𑌦𑍍𑌯𑌾𑌜𑍀 𑌮𑌾𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍁𑌰𑍁।
𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇॥ ॥

(௬௫) நம்மிடத்தில் மிகவும் பிரீதிமானுய்க்கொண்டு, மிகவும்பிரீதிரூபமாயிருக்கிற § ஸ்மிருதி பரம்பரையைச்செய்; அப்படியே மிகவும் பிரியமான நம் † ஆராதநமே பொழுதுபோக்காயிரு; நம்மையே மிகவும் பிரீதியோடு வண

---

* 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌂 𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍂𑌰𑌯𑌃 𑌤𑍇 𑌹 𑌨𑌾𑌕𑌂 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌃 𑌸𑌚𑌨𑍍𑌤𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵𑌾𑌃 என்றும், 𑌯𑌤𑍍𑌰𑌰𑍍𑌷𑌯𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌜𑌾 𑌯𑍇 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌃। என்றும், 𑌪𑌰𑍇𑌣 𑌨𑌾𑌕𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌂 𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌮𑍍 என்றும், 𑌯𑍋 𑌅𑌸𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑍍 என்றும், 𑌕𑍍𑌷𑌯𑌨𑍍𑌤𑌮𑌸𑍍𑌯 𑌰𑌜𑌸𑌃 𑌪𑌰𑌾𑌕𑍇 என்றும், 𑌸𑍋𑌽𑌧𑍍𑌵𑌨𑌃 𑌪𑌾𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑌦𑌮𑍍 என்றும், இத்தியாதிகளிலோதப்பட்ட பரமபதத்தையென்றபடி.

$ முன்பே — 𑌇𑌦𑌂 𑌤𑍁 𑌤𑍇 𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌨𑌸𑍂𑌯𑌵𑍇 என்கிற விடத்தில்.

§ 𑌵𑍇𑌦𑌾𑌹𑌮𑍇𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌮𑍍 என்றும் 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇𑌽𑌯𑌨𑌾𑌯 என்றும் இத்தியாதிகளிற் சொல்லப்பட்ட வேதநம் த்யாநம், உபாஸநம் முதலிய சொற்களுக்குப் பொருளாய், தரிசநத்துக்குஸமானமாயிருக்கும் மிகுந்த பிரீதிரூபமாயிருக்கிற ஸ்மிருதிபரம்பரையைச் சொல்லுகிறது.

† ஆராதநமாவது - பரிபூர்ணசேஷவிருத்தி.

http://acharya.org

ங்கு; இப்படியிருக்கும் நீ நம்மையே அடைவாய்; இவை யெல்லாவிஷயத்தி லும் நாம் உனக்குப் பிரதிக்ஞை பண்ணிக்கொடுக்கிறோம். [ஸாதாரணமாய் ஏதோ உனக்கு இஷ்டமாயிருக்கும்படி சிலவற்றைச் சொல்வதாக நினையாதே கொள்.] ஏனெனில் நீ நமக்குப்பிரியனன்றோ? [எவனுக்கு நம்மிடத்தில் மிகுந்தப் பிரீதியிருக்குமோ நமக்கும் அவனிடத்தில் மிகுந்தப்பிரீதி யுண்டாகுமாகையால் நாம் அவனைப் பிரியமாட்டாமல் அவனை நம்மோடு சேர்த்துக்கொள்ளுகிறோம்] ஆகையால் நம்மையே யடைவாய் என்கிற பிரதிக்ஞை ஸத்தியம்.

ஸர்வத⁴ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ|
அஹம் த்வா ஸர்வபாபேப்⁴யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:|| ௬௬ ||

(௬௬) கர்மயோகம் ஞானயோகம் பக்தியோகம் என்கிற மோக்ஷஸாதநங்களான வெல்லாத்தருமங்களையும் நம்முடைய ஆராதநரூபமாக மிகுந்தப் பிரீதியோடு உன் அதிகாரத்துக்குத்தக்கபடி செய்துகொண்டே, கீழ்ச்சொன்னபடி பலனையும் கர்மத்தையும் கர்த்திருத்வத்தையும் * விட்டு ஆராத்ய ஸ்வரூபனான நம்மையே பலனாகவும் உபாயமாகவும் நினைக்கக் கடவாய். இப்படி யிருக்கின்ற உன்னை நம்மையடைதற்கு விரோதிகளாய் அநாதிகாலமாய் ஸம்பாதிக்கப்பட்டவைகளாய் (செய்யத்தகாததைச் செய்கையும் செய்யத்தக்கதைச்செய்யாமையுமான) ஸகலபாபங்களினின்றும் விடுவிக்கிறோம். ஆகையால் சோகியாதே கொள்.

இந்த சுலோகத்துக்கு மற்றொருபடி வியாக்கியாநம்.

[அ-கை.] ஸகலபாபங்களினின்றும் விடுபட்டு எம்பெருமானுக்கு மிகவுமினியனாயிருக்கிற புருஷனுக்கே பக்தியுண்டாகுமாகையாலே அந்த பக்தியை யாரம்பிக்கவொட்டாமல் விரோதிக்கின்ற பாபம் அளவற்றிருக்கையாலே, அவைகளை யொழிக்கும் பிராயச்சித்தங்களான தருமங்களை யெத்தனைகாலம் அநுஷ்டித்தாலும் ஒழிப்பதரிதாகையாலே, அர்ச்சுநன் தனக்கு பக்தியோகத்தை யாரம்பிக்கும்படியான யோக்கியதை யில்லையென்று நினைத்துச் சோகிக்க, அந்த சோகத்தைப் போக்குவாராக வருளிச்செய்கிறார்.

பக்தியோகத்தை யாரம்பிக்கவொட்டாமல் விரோதிக்குமவைகளாய் அநாதிகாலமாய் ஸம்பாதிக்கப்பட்டவைகளாய் நாநாவிதங்களாய் அநந்தங்களாயுள்ள பாபங்களுக்குத் தக்கப்பிராயச்சித்தருபங்களாயும், கிருச்சிரம், சாந்திராயணம், கூச்மாண்டம், வைச்வாநரம், வ்ராதபதிஸ்திரேஷ்டி, த்ரிவ்ரு

* ஸர்வதருமங்களையும் சாஸ்திரோக்தமாய் விடுவதென்பது இது தானென்று "நிஶ்சயம் ஶ்ருணு மே தத்ர த்யாகே³ ப⁴ரதஸத்தம| த்யாகோ³ ஹி புருஷவ்யாக்⁴ர த்ரிவித⁴: ஸம்ப்ரகீர்த்தித:" என்று தொடங்கி, "ஸங்க³ம் த்யக்த்வா ப²லம் சைவ ஸ த்யாக³: ஸாத்த்விகோ மத: | ந ஹி தே³ஹப்⁴ருதா ஶக்யம் த்யக்தும் கர்மாண்யஶேஷத:| யஸ்து கர்மப²லத்யாகீ³ ஸ த்யாகீ³த்யபி⁴தீ⁴யதே" என்று அத்தியாயத்தின் ஆரம்பத்தில் மிகவும் திடமாய் உபபாதிக்கப்பட்டது.

http://acharya.org

தக்நிஷ்டோமம் தொடங்கி நாநாவிதங்களாயும், அநந்தங்களாயும், எத்தனை காலம் ஜீவித்திருந்து அநுஷ்டித்தாலும் அநுஷ்டிக்கவரியவைகளாயுமிருக்கின்ற ஸர்வதருமங்களையும் விட்டு, பக்தியோகாரம்பம் ஸித்திப்பதற்காக, பரமகாருணிகனாய் பிராணிகளிடத்தில் ஒருவிசேஷத்தையும் ஆலோசியாமல் அவைகளுக்கெல்லாம்சரணியனாய் ஆச்சிரிதாளிடத்திலுண்டான வாத்ஸல்லியத்துக்குக் கடலாயிருக்கின்ற நம்மையே சரணமாகப்பற்று. நாம் உன்னைக் கீழ்ச்சொன்ன பக்தியோகாரம்பத்துக்குவிரோதிகளான பாபங்களினின்றும் விடுவிக்கிறோம். நீ அதற்காகச்சோகிக்கவேண்டாம்.]

𑌇𑌦𑌂 𑌤𑍇 𑌨𑌾𑌤𑌪𑌸𑍍𑌕𑌾𑌯 𑌨𑌾𑌭𑌕𑍍𑌤𑌾𑌯 𑌕𑌦𑌾𑌚𑌨 ।
𑌨 𑌚𑌾𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌵𑍇 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂 𑌨 𑌚 𑌮𑌾𑌂 𑌯𑍋𑌽𑌭𑍍𑌯𑌸𑍂𑌯𑌤𑌿 ॥ ௬௭ ॥

(௬௭) இப்பொழுது உனக்கு நாம் சொன்ன பரமரஹஸ்யமான இவ்வர்த்தத்தை தவம் புரியாதவனுக்காவது, தவம்புரிந்தாலும் பக்தியில்லாதவனுக்காவது, பக்தியுண்டானாலும் சிரவணத்தில் இச்சையில்லாதவனுக்காவது நீ சொல்லக்கூடாது. அதிலும் நம் ஸ்வரூபத்தையும் நம் ஐசுவரியத்தையும் நம் குணங்களையும் சொல்லக்கேட்டு யாவனொருவன் அவைகளில் தோஷத்தையேறிடுகிறான் அவனுக்குச்சொல்வதென்பது சிறிதுங்கூடாது.

[மற்றப்படி அவனைக்கிட்டவும் சேரவொட்டாமலிருக்கவேண்டுமென்று திருவுள்ளம்].

𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌭𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 ।
𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌮𑌯𑌿 𑌪𑌰𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌤𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ ௬௮ ॥

(௬௮) மிகவும் ரஹஸ்யமான இவ்வர்த்தத்தை யாவனொருவன் நம் பக்தர்களிடத்தில் வியாக்கியானிக்கிறானோ அவன் நம்மிடத்தில் மிகுந்த பக்தியைச்செய்து நம்மையே யடைவான். இதில் ஸம்சயமில்லை.

𑌨 𑌚 𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌷𑍁 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑍇 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑍃𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌭𑌵𑌿𑌤𑌾 𑌨 𑌚 𑌮𑍇 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌰𑍋 𑌭𑍁𑌵𑌿 ॥ ௬௯ ॥

(௬௯) மனுஷ்யகோடியில் இதுவரையில் அவனைப்போல் நமக்குப் பிரியஞ் செய்பவனொருவனுண்டாகவுமில்லை; இனியுண்டாகப்போகிறதுமில்லை.

[அயோக்கியர்களை முந்தி நிஷேதித்தது, இவ்வர்த்தத்தையோக்கியாளுக்கு சொல்லாமலிருப்பதைப்பார்க்க அவர்களுக்குச் சொல்வது மிகவும் அனிஷ்டமென்கைக்காக.]

𑌅𑌧𑍍𑌯𑍇𑌷𑍍𑌯𑌤𑍇 𑌚 𑌯 𑌇𑌮𑌂 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌂 𑌸𑌂𑌵𑌾𑌦𑌮𑌾𑌵𑌯𑍋𑌃 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌤𑍇𑌨𑌾𑌹𑌮𑌿𑌷𑍍𑌟𑌃 𑌸𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌤𑌿𑌃 ॥ ௭௦ ॥

http://acharya.org

(எ0) யாவனொருவன் நம்மிருவருக்கும் நடந்த பரமதர்மமான இந்த ஸம்வாதத்தை அத்தியயநம்பண்ணுகிறானோ, அவனால் இதில் சொன்ன ஞாநயோகத்தின்படி நாம் ஆராதிக்கப்பட்டோமாகிறோம்.

ச்ரத்தாவாநநஸூயஶ்ச ச்ருணுயாதபி யோ நர: |
ஸோऽபி முக்த: ஶுபாம்ல்லோகாந் ப்ராப்நுயாத் புண்யகர்மணாம் || எக ||

(எக) சிரத்தையோடுகூடி அஸூயையின்றி யாவனொருவன் கேட்கிறானோ அவனும் அப்படி கேட்டமாத்திரத்திலேயே பக்தி விரோதிபாபங்களினின்றும் விடுபட்டு புண்ணியகர்மாக்களான நம் பக்தஜநஸமூஹத்தில் வந்து சேருவான்.

கச்சிதேதச்ச்ருதம் பார்த்த த்வயைகாக்ரேண சேதஸா |
கச்சிதஜ்ஞாநஸம்மோஹ: ப்ரணஷ்டஸ்தே தநஞ்ஜய || எஉ ||

(எஉ) அஹோ பார்த்த! நாம் சொன்னதையெல்லாம் ஸாவதாநமாய்க் கேட்டாயே! இப்பொழுதாகிலும் யுத்தம் செய்யமாட்டேனென்று சொன்ன உனக்கு அந்த அஜ்ஞாநம் ஒழிந்ததா?

நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா த்வத்ப்ரஸாதாந்மயாச்யுத |
ஸ்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ || எங ||

(எங) அதற்கு அர்ஜுநன் விண்ணப்பஞ்செய்கிறான்—ஸ்வாமி! தேவரீருடைய கிருபையால் விபரீதஜ்ஞாநம் ஒழிந்தது. யதார்த்தமான ஞாநமும் பிறந்தது. [என்றால்-தேஹாதிகளை ஆத்மாவென்கிற அபிமானமும், சேதநாசேதநரூபமான ஸகலப்பிரபஞ்சமும் பரமபுருஷனுக்குச் சரீரமென்கிற விஷயந்தெரியாமல் மாறாக நினைத்திருந்த அபிமானமும், நித்தியநைமித்திகமான கர்மம் பரமபுருஷனுடைய ஆராதநரூபமாக அநுஷ்டிக்கப்படுமாகில் அவனையடைவதற்கு உபாயமாகுமென்கிற விஷயந்தெரியாமல் அதைக்கட்டுக்குடோராக நினைத்திருந்த அஜ்ஞாநமும் தொலைந்தன. ஆத்மா பிரகிருதிக்கு வேறாய் பிரகிருதியின் ஸ்வபாவமின்றி அறிவேஸ்வபாவமாய் பரமபுருஷனுக்கு சேஷப்பட்டு அவனாலாளப்படுகிற ஸ்வரூபமாயிருக்கிறதென்கிற ஞாநமும், ஸகலஜகத்திற்கும் உத்பத்திஸ்திதி லயங்களை லீலையாய்ச்செய்பவனாய் ஸகலதோஷங்களுக்கு எதிரான கல்யாணமேஸ்வரூபனாய் (ஸ்வபாவஸித்தங்களும் அளவற்ற அதிசயம்பொருந்தியவைகளுமான) ஞாநம் பலம் ஐசுவரியம் வீரியம் சக்தி தேஜஸ்ஸு முதலிய ஸமஸ்த கல்யாணகுணங்களுக்கும் பெருங்கடலாய் பரப்பிரம்மமென்னுஞ் சொல்லுக்குப்பொருளாயிருக்கிற பரமபுருஷனுடைய உண்மையை அறியும்படியான ஞாநமும், இப்படி பரமார்த்தங்களை யுள்ளபடியே யறிந்து பிறகு அதை அப்பியஸித்துவந்து பரமபுருஷனுக்கு நாளுக்குநாள் பிரீதியை வளர்ப்பதேபயனாக நித்திய நைமித்திககர்மங்களை யநுஷ்டிப்பதாலும் நிஷித்தங்களை ஒழிப்பதாலும் சமம் தமம் முதலிய ஆத்மகுணங்களாலும் பெறவேண்டியதான பக்தியோகமாய்ப் பரிண

http://acharya.org

யித்திருக்கிற) பரமபுருஷோபாஸநத்தால் மாத்திரம் அடையப்படும் பொரு ளும் வேதாந்த விழுப்பொருளும் பரமபுருஷனுமான வாசுதேவன் தேவரீரே யென்கிற ஞானமும் அடியேனுக்குண்டாயிற்றென்றபடி.]

இப்படி ஞானம்பிறந்தபின்பு பந்துக்களிடத்தில் ஸ்நேகத்தாலும் கரு ணையாலும் மென்மேலும் விருத்தியடைந்த விபரீதஞானமடியாகவரும் ஸகல துக்கங்களினின்றும் விடுபட்டவனாய் ஸந்தேஹமற்று ஸ்வஸ்த்தனாயிருக்கி றேன். இனி யுத்தஞ்செய்யும்படியாகத் தேவரீர்அருளிச்செய்த திவ்யஸூக் தியை யப்படியே செய்கிறேன்; என்று விண்ணப்பம் செய்தான்.

(அ-கை.) தன்புத்திரர்களும் பாண்டவர்களும் யுத்தத்தில் என்ன செய்கின்றார்களென்று கேட்ட திருதராஷ்டிரனைப்பார்த்து ஸஞ்சயன்சொ ல்லுகிறான்.

ஸஞ்ஜய உவாச ॥ இத்யஹம் வாஸுதேவஸ்ய பார்த்தஸ்ய ச மஹாத்மந: ।
ஸம்வாதமிமமச்ரௌஷமத்புதம் ரோமஹர்ஷணம் ॥ எச ॥

(எச) அஹோராஜந்! இந்தப்பிரகாரம் வசுதேவன் மைந்தனான கண் ணனுக்கும் அவர் அத்தைமகனாய் மகாபுத்திசாலியாய் அவர் திருவடிகளை யா ஸ்ரயித்த அர்ச்சுநனுக்கும் நடந்த அற்புதமான ஸம்வாதத்தை மயிர்க்கூச்செ றியும்படியாகக் கீழ்ச்சொன்ன வண்ணமெல்லாங் கேட்டேன்.

வ்யாஸப்ரஸாதாச்ச்ருதவாநேதத்குஹ்யமஹம் பரம் ।
யோகம் யோகேச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயத: ஸ்வயம் ॥ எரு ॥

(எரு) வியாஸமஹரிஷியின் அநுக்கிரஹத்தால் திவ்யமான கண் ணும் காதும் பெற்றவனானகையாலே இந்த யோகமென்னும் மேலானரஹஸ்ய த்தை ஞானபலாதிகளுக்கெல்லாம் நிதியான ஸ்ரீ கிருஷ்ணபகவான் தாமே யருளிச்செய்யக்கேட்டேன்.

ராஜந் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாதமிமமத்புதம் ।
கேசவார்ஜுநயோ: புண்யம் ஹ்ருஷ்யாமி ச முஹுர்முஹு: ॥

(எசு) கேசவனுக்கும் அர்ச்சுநனுக்கும் நடந்த புண்ணியமான இவ்வ ற்புத ஸம்வாதத்தை நான் நேரே கேட்கவே, அது முதற்கொண்டு எனக்கு நி னைக்கநினைக்க ஸந்தோஷமுள்ளடங்காமல்வருகின்றது.

தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே: ।
விஸ்மயோ மே மஹாந்ராஜந் ஹ்ருஷ்யாமி ச புந: புந: ॥ எஎ ॥

(எஎ) அதுவுமின்றி அர்ச்சுநனுக்குப் பிரகாசிப்பித்தருளின ஸ்ரீமந்நா ராயணனுடைய அத்புதமான ரூபத்தையும் பிரத்தியக்ஷமாய்க்கண்டனுபவித் தேன். அதை அப்படியே நினைத்து நினைத்து ஸந்தோஷிக்கின்ற வென க்கு மிகவும் ஆச்சரியமுண்டாகின்றது.

http://acharya.org

(அ-கை.) இவ்விஷயத்தில் ஆயிரம் வார்த்தையென்ன?

𑌯𑌤𑍍𑌰 𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌪𑌾𑌰𑍍𑌥𑍋 𑌧𑌨𑍁𑌰𑍍𑌧𑌰𑌃 ।
𑌤𑌤𑍍𑌰 𑌶𑍍𑌰𑍀𑌰𑍍𑌵𑌿𑌜𑌯𑍋 𑌭𑍂𑌤𑌿𑌰𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌾 𑌨𑍀𑌤𑌿𑌰𑍍𑌮𑌤𑌿𑌰𑍍𑌮𑌮 ॥ ௭௮ ॥

(௭௮) உயர்வும் தாழ்வுமாயிருக்கிற சேதநாசேதநங்களெல்லாவற்றிற்கும் எந்தெந்த ஸ்வபாவங்களுண்டோ அவைகளுக்கெல்லாம் நியாமகனாய், தம்மையொழிந்த வெல்லாவஸ்துக்களுக்கும் ஸ்வரூபம் ஸ்திதி பிரவிருத்தி முதலிய வெல்லாம் தம்ஸங்கல்பாதீனமா யிருக்கும்படி விளங்குகின்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளியிருக்கிற விடத்திலும், அவன் திருவடிகளையே நம்பியிருக்கின்ற கையும்வில்லுமான வர்ச்சுநன் எங்கே விளங்குகிறானோ அவ்விடத்துந்தான் லக்ஷ்மியும் விஜயமும் செல்வமும் சாசுவதமாயிருக்குமென்பது என்னுடைய ஸித்தாந்தம்.

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑍇
𑌶𑌤𑌸𑌾𑌹𑌸𑍍𑌰𑌿𑌕𑌾𑌯𑌾𑌂 𑌸𑌂𑌹𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑍈𑌯𑌾𑌸𑌿𑌕𑍍𑌯𑌾𑌂
𑌶𑍍𑌰𑍀𑌭𑍀𑌷𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿
𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌂𑌨𑍍𑌯𑌾
𑌸𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑍋
𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃.

𑌜𑌯𑌤𑌿 𑌸𑌕𑌲𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌹𑌿𑌨𑍀𑌜𑌨𑍍𑌮𑌶𑍈𑌲𑍋 𑌜𑌨𑌿𑌪𑌥𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤
𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌣𑌶𑌾𑌲𑍀 । 𑌨𑌿𑌖𑌿𑌲𑌕𑍁𑌮𑌤𑌿𑌮𑌾𑌯𑌾𑌶𑌰𑍍𑌵𑌰𑍀𑌬𑌾𑌲𑌸𑍂
𑌰𑍍𑌯𑍋 𑌨𑌿𑌗𑌮𑌜𑌲𑌧𑌿𑌵𑍇𑌲𑌾𑌪𑍂𑌰𑍍𑌣𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசித ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தில்,

பதினெட்டாவது அத்தியாயம் - முற்றிற்று.

எம்பெருமானார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீபகவத்கீதாசாஸ்திரம்

21-8-1928

http://acharya.org